
திருவாரூர்

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்



திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

4—4—88

அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

திருவாரூர் -:- தஞ்சை மாவட்டம்

திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்

நாள் : 4—4—1988



சு. ஸ்ரீதரன், B.A.
நிர்வாக அதிகாரி
செயலர் & பொருளர்

ஜெயராமன், B.A.
தக்கார் & உதவி ஆணையர்
சிலைகள் பாதுகாப்பு மையம்

சு. தென்கோவன்
திருப்பணிக்குழு &
மலர்க்குழுத் தலைவர்

விலை ரூ. 35-00


அச்சிட்டோர் :-

போன் : 2659


சர்மாஸ் ஸானடோரியம் ப்ரஸ்
கணேஷ்நகர், புதுக்கோட்டை-622 001



அருள்மிகு தியாகராஜ சுவாமி



அருள்மிகு கமலாம்பாள்




ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள் தருமபுரம் ஆதீனம்




ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சன்னிதி
(வேளாக்குறிச்சி ஆதீன கர்த்தர்)




இந்திய குடியரசு தலைவர்
மேதகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள்



பாரத பிரதமர்
மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள்




தமிழக ஆளுநர்
மேதகு டாக்டர். பி. சி. அலெக்ஸாண்டர் அவர்கள்



மாண்புமிகு. ஆ பத்மனாபன். இ. ஆ. ப.

(மேதகு ஆளுநரின் ஆலோசகர்)



திருமிகு கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப.
ஆணையர் வணிக வரித்துறை, அரசுச் செயலர்
இந்து சமய அறநிலையத்துறை



திருமிகு தி. இராசகல்யாணசுந்தரம், இ. ஆ. ப.
ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை



'திருப்பணிச் செம்மல்'

மாண்புமிகு இராம. வீரப்பன்


முன்னாள் அறநிலையத்துறை அமைச்சர்



திருமிகு. மா. இராமு, இ. ஆ. ப.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்.



திருமிகு சு. தென்கோவன்
தலைவர், திருப்பணிக்குழு & மலர்க்குழு



திருமிகு ம. சூரியராஜ், பி.ஏ. பி.எல்.


இணை ஆணையர் | இந்து சமய அறநிலையத்துறை



திருமிகு இரா. தண்டபாணி, B.Sc.B.L.
இணை ஆணையர் || இந்து சமய அறநிலையத்துறை



திருமிகு. சி. வி. ராஜாரரம், B.A., B.L.,
துணை ஆணையர், இந்துசமய அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.



திருமிகு தி. ஜெயராமன், B.A.B.L.
உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை
நாகப்பட்டினம்



திருமிகு ஜெயராமன், B.A.
உதவி ஆணையர் சி தக்கார், சிலைகள் பாதுகாப்பு மையம்
திருவாரூர்



திருமிகு ஆ. சுப்பிரமணியன், இ. கா. ப,
காவல்துறைக் கண்காணிப்பாளர், கீழத்தஞ்சை மாவட்டம்




திரு. **V.** வீரபத்ரன், B Sc ,
தலைமைத் தணிக்கை அதிகாரி, அறநிலையத்துறை.



திரு. **T. P.** பீமராஜா, B. E.,
கோட்டப் பொறியாளர்.




திரு. R. தில்லைநாயகம், B. E.,
கண்காணிப்பு பொறியாளர்



திரு. A. பாஸ்கரன், B. Sc.,
மண்டல தணிக்கை அதிகாரி,
மயிலாடுதுறை.



திருமிகு. **S. பழனி** அவர்கள்
உதவி கோட்டப்பொறியாளர் அறநிலையத்துறை,
தஞ்சாவூர்.



திருமிகு சு, ஸ்ரீதரன், B.A.
நிர்வாக அதிகாரி, செயலாளர் & பொருளாளர்
திருப்பணிக்குழு, மலர்க்குழு

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின் திருப்பணிக்குழு உறுப்பினர்கள்




திரு V. V. P. துரைசாமி செட்டியார்
விஜயபுரம்




திரு R.M.P.R. சிங்காரவேலு முதலியார்
விஜயபுரம்



திரு. M.R. ரகுபதி
மு. ரா. சன்ஸ், விஜயபுரம்




திரு K. காளிமுத்து, M.A.B.L.
நாகப்பட்டினம்




திரு A.D. ஜெயவீரபாண்டிய நாடார்
நாகப்பட்டினம்

P. இராமசாமி
திருவாரூர்



திரு R.M. கண்ணப்பச் செட்டியார்
சக்கந்தி



திரு M.S. தியாகராஜன்
திருவாரூர்



திரு K. கல்யாணசுந்தர பத்தர்
திருவாரூர்



திரு M.S. வாசன்
திருவாரூர்



திரு T.R. கனகரெத்தினம் பிள்ளை
திருவாரூர்



திரு பொன். குமரேசன்
திருவாரூர்



திரு V. நடேசன்
எழுவேலி



திரு R. கோவிந்தபிச்சை ஐயர்
திருவாரூர்



திரு G. பாலசுப்பிரமணியன்
திருவாரூர்



திரு R. M. சோமசுந்தரம் செட்டியார்,
தேவகோட்டை



திரு சி. பாலகிருஷ்ணன்
திருத்துறைப்பூண்டி



திரு A. கோவிந்தராசன்
திருவாரூர்

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின்
திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்க்குழு உறுப்பினர்கள்




சு. தென்கோவன்
தலைவர்




சு. ஸ்ரீதரன், பி. ஏ.,
செயலாளர் & பொருளாளர்



டாக்டர். இரா. செல்வகணபதி
எம்.ஏ., பி.எட்., பி.எச்டி.,



குடவாயில் பாலசுப்ரமணியன், எம்.ஏ.,




டாக்டர். அ. அறிவொளி, எம்.ஏ.,



த. நாகராஜன், பி.எஸ்ஸி.,
சென்னை-4.

டாக்டர். ச. தண்டபாணி தேசிகர்

மா. சுந்தரமூர்த்தி, எம் ஏ.,
தொல்பொருள் ஆய்வுத்துறை பதிவு அலுவலர்,
சிதம்பரம்.



திருப்பணிக்குழுத் தலைவர் நிர்வாக அதிகாரி, ஆய்வர்,
இளநிலைப் பொறியாளர் மற்றும் திருக்கோயில் ஊழியர்கள்

குருபாதம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26–ஆவது குருமகா சந்நிதானம்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609001

ஆசியுரை

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

தமிழகத்துச் சைவத் திருக்கோயில்களுள் சாலப் பழமையும், சாலப் பெருமையும் கொண்டு விளங்குவது திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் 'கோயில்' என்பது தில்லையையும் 'பெரிய கோயில்' என்பது திருவாரூரையும் குறித்து வழங்கும். சப்தவிடங்கத் தலங்களுள் தலையாயதாய், பஞ்சபூதத் தலங்களுள் பிருதுவி (மனர்)த் தலமாய், முக்தித் தலங்கள் ஐந்தனும் 'பிறக்க முக்தி' தரும் பெருமை பெற்றது திருவாரூர் சங்ககாலச் சோழ மன்னர்களின் தலைநகராகவும் பிற்காலச் சோழமன்னர்கள் முடி சூட்டிக் கொள்ளும் எழில் நகராகவும் விளங்கிய திருவாரூர், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறந்து விளங்குவது. மனுநீதிச் சோழனின் அருள்வரலாறு நிகழ்ந்தேறிய திருவாரூர், மூவர் முதல்வர்களாலும் பாடப்பெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகளின் அருள் வாழ்வு மலர்ந்த திருவாரூரில் தான் பெரியபுராண ஆக்கத்திற்கு முதன்மையான 'திருத் தொண்ட தொகை பிறந்தது.

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, செங்கழுநீர் ஓடை ஐந்து வேலியாகச் சிறந்து விளங்கும் திருவாரூர்த் திருக்கோயில், தமிழகக்கலை வரலாற்றிலும், இசை வரலாற்றிலும் பெரும் பங்கு வகிப்பது. அறநெறி, சித்தீச்சரம், போன்ற பல சிவாலயங் களையும், நாற்பதுக்கு மேற்பட்ட சுற்றுக்கோயில்களையும் கொண்டு விளங்கும் இப் பெரிய கோயிலின் குடமுழுக்குப் பெருவிழா 130 ஆண்டுகளுக்குப் பின் திருப்பணி செய்து தற்போது நடைபெற்றுள்ளது இடையில் 40 ஆண்டுகளுக்கு முன் முக்கியமான சந்நிதிகட்கு மட்டும் அஷ்டபந்தனம் சார்த்தி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்திற்கும் திருவாரூர் ஊர்க்கும் இடையே நிலவும் உறவும் தொடர்பும் பெரிது. நமது ஆதீனக்குரு முதல்வரின் ஞானாசிரியர் கமலை ஞானப்பிரகாசர் அருள் வாழ்வு அமைந்ததலம் இது. தருமை ஆதீனம் திருவாரூர் இராஜன் கட்டளைச் சார்பில் தியாகேசர் கோயில் நித்தியநைமித்துப் பூசை முறைகள் சிறப்புறப் பரிபாலிக்கப்பெற்று வருகின்றது. தருமை ஆதீனத் திருக்காட்டத்து அடியவர் களுள் திருவாரூர் புராணம் அருளிய சம்பந்த முனிவரும் கமலாம்பிகைப்பிள்ளைத் தமிழ்

பாடிய சிதம்பர முனிவரும், திருவாரூர்த் திருக்கோயில் தெற்கு இராஜகோபுரத்தை கி.பி. 1897 இல் திருப்பணி செய்து நிறைவித்த அருணாசலத் தம்பிரானும், பல ஆண்டுகளாக ஓடாதிருந்த திருவாரூர்த்தேரை தருமையாதீன 12வது குரு மூர்த்திகள் காலத்தில் வாழ்ந்து இருந்து ஓடச்செய்த முத்துக்குமார சுவாமித் தம்பிரானும் குறிப்பிடத்தக்க அரும்பணி ஆற்றியவர்கள்.

திருவாரூர் தியாகேசப்பெருமான் திருக்கோவில் குடமுழுக்கு விழா தியாகேசன் திருவருளால் இனிதே நிறைவேறியது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது. இவ் விழாவில் பங்குபெறும் அனைத்து பெருமக்களும், திருப்பணிக்குழுத் தலைவர் திரு. சு. தென்கோவன், நிர்வாக அதிகாரி திரு. சு. ஸ்ரீதரன் அவர்களும் ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் அருள்மிகு தியாகேசப் பெருமான், அருள்மிகு கமலாம்பாள் திருவருளால் நீடூழி இனிதே வாழவும் இந்த குடமுழுக்கு விழா மலர் இனிதே வெளிவந்து மக்கள் அனைவருக்கும் நற்பயனும் நல்க செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரை

ஸ்ரீ-ல-ஸ்ரீ

சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமகாசந்நிதானம்

திருவாவடுதுறை ஆதீனம்

திருவாவடுதுறை-609 805

(தஞ்சாவூர் மாவட்டம்)

நாள் 3—3—1988

ஆசியுரை

'சித்தந் தெளிவீர்கள், அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே'.

நிலமகட்கு அழகார் திருநீள் நுதல் திலகமாய், மலர்மகட்கு வண்டாமரை மலர் போல் மலர்ந்து விளங்குவது அலசில் சீர்த் திருவாரூர். சமயாசாரியர்கள் நால்வராலும் போற்றிப் புகழப்பெற்ற திருத்தலம். ஆழித்தேர் வித்தகன் அமரர், நாடாளாதே பூங்கோயிலுள் எழுந்தருளும் தொன்மையின் மிக்கது. பார் இடந்த ஏலத்தினாலும் அன்னத்தினாலும் தேடப்பெறுபவராகிய பெருமான், தாமே வலியச் சென்று ஆளாய்க் கொண்ட நம்பி ஆரூரர்க்காகத் தூதுபோய் நடந்துவந்த திருவடிமலர்கள் மணங்கமழும் திருவிதியாற் பொலிவது.

இன்னவண்ணம், சிறப்புகள் பலவற்றாலும் தலங்களுள் தலைமையுடையதாய்த் திகழும் ஆரூரினை ஆளும் செல்வத் தியாகேசப் பெருமான் திருக்கோயில் திருப்பணிகள் முழுமையாக நிறைவெய்தி அண்மையில் திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளமை யறியப் பெரிதும் மகிழ்கிறோம். குடமுழுக்கு விழா நினைவு என்றும் நிலைத்து நலம் பயக்க விழாமலர் வெளிவருதலும் பாராட்டுதற்குரியது.

திருக்குடமுழுக்கு விழா இனிது நிகழவும், விழா மலர் தெய்வ மணங்கமழ மலர்ந்து இன்பம் பயக்கவும் திருப்பணிகளிலும் திருக்குடமுழுக்கிலும் பங்குகொள்ளும் அன்பர்கள் எல்லா நலன்களும் எளிதின் எய்தி மேன்மை பெறவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானமா நடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்திருக்கின்றோம்.

உ

சிவ சிவ

கயிலைமா முனிவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
**காசிவாசி முத்துக்குமாரசுவாமித்
தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
அதிபர், ஸ்ரீ காசிமடம்

திருப்பனந்தாள்—612 504
(தஞ்சை மாவட்டம்)

தேதி 1—3—1988

ஆசியுரை

வையம் முழுதும் உழுதுண்ண
வல்லாற் களித்து நவநிதியும்
கையில் ஒருவற்களித்து எமக்கே
கதிவீ டளித்துமோர் கன்னிகைக்கு
மெய்யில் ஒருகூறு அளித்தனரால்
விமலர் கமலைத் ''தியாகர்'' என்பது
ஐயர் இவர்க்கே தகும்; முகமன்
அன்று; புகழும் அன்றாமே.

—ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்

திருவாரூர் தியாகேசர் உலகமுழுமையும் திருமாலுக்குக் கொடுத்தார். நவநிதியான செல்வத்தைக் குபேரனுக்கு கொடுத்தார். கதிமோட்சமான வீட்டை எனக்குக் கொடுத்தார். உமாதேவிக்குத் தனது உடம்பில் ஒரு பாதியைக் கொடுத்தார். இங்ஙனம் தனக்குரிய நிலம், செல்வம், வீடு, உடம்பு ஆகியயாவற்றையும் பிறர்க்கென வழங்கியபடியால் இவர்தான் உண்மையான தியாகியாவார் என்று குமரகுருபரசுவாமிகளாலே விளக்கம் தரப்பெற்ற ஆரூர் தியாகராசப் பெருமான் திருக்கோயில் குடமுழுக்கின், நினைவாகச் சமய இலக்கிய மலர் ஒன்று வெளிவருகிறது.

அரியபல ஆய்வுரைகளைத் தாங்கிப் பத்திமணம் பரப்பிவரும் இம்மலர் அன்பர்கட்கு நல்விருந்தாக அமைந்திருக்கிறது. இம்மலரை உருவாக்கிய அனைவர்க்கும்மலரின் மணத்தை நுகர்வோர்க்கும் எல்லா நலனும் வாய்க்கச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

சிவசிவ

சுபம்

உ
சிவமயம்

திருக்கைலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீன மடம்,
(கல்லிடைக்குறிச்சி)

ஸ்ரீ-ல-ஸ்ரீ அஜபா நடேஸ்வர
பண்டார சந்நிதிகள்
ஆதீனகர்த்தர், பரம்பரை தர்ம
கர்த்தா, திருப்புகலூர், திருச்செங்
காட்டங்குடி, திருமீயச்சூர் தேவஸ்
தானங்கள் & அபிஷேக, அன்ன
தானக் கட்டளை, ஸ்ரீ தியாகராஜ
ஸ்வாமி தேவஸ்தானம், திருவாரூர்.

வேளாக்குறிச்சி மடம்
திருப்புகலூர் P.O., 609 704
தஞ்சை மாவட்டம்.

முகாம்: திருப்புகலூர்.

தேதி: 12—3—88

ஆசியுரை

உயர் தனிச்சமயமாகிய சைவ சமயத்தை வளர்த்த விளக்கம் தந்த முதல் அரசர்கள் இருவர். ஒருவர் சிதாகாச பெருவெளி வரையில் ஞானச்செங்கோல் செலுத்துகிற சிவகாம சுந்தரி சமேத நடராஜபெருமான். சைவம் தழைக்க அவர் தந்த முதல் ''உலகெலாம்'' என்ற முதல் இவர் வானுக்கு அரசர் மற்றவர் மண்ணுக்கு அரசர். திருவாரூரையே ''பிரதிவி க்ஷேத்திரம்'' என்பதுதானே சமய மரபு. ஆதலால் அவர் ''தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'' என்ற முதலை தந்தார். நம்பியாண்டார் நம்பி ஒரு நூறு பாடல்களுக்குள் இவ்வளவு பெரிய சமயத்தை சமய நிலையங்களாகிய திருக் கோயில்களின் பெருமையை உலகம் தோன்றிய நாள் முதல் இன்றுவரையுள்ள வரலாற்றுச் சான்றுகளை காத்து கொடுக்க அந்தாதியை அருளிச்செய்தார். சாத்திரங்கள் தோத்திரங்கள் தந்ததோடல்லாமல் வரலாற்றையும் வகுத்தளித்தார். வரலாறுகள் மூலமாக எத்தனையோ மன்னர்கள் திருப்பணிசெய்து உயர்ந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டில் திருவருளே செய்து கொண்டமையைக்கண்டு உய்யும்பேறு நமக்கு கிடைத்திருக்கிறது.

இறைவனே பெருஞ்சாந்தி கண்டு மட்டற்ற கருணையை மழையாகவும் பெய்து ஆறுகளைப் பெருக்கி உலகைக் காக்க திருவுளம் கொண்டுள்ளார். ''சோழ வளநாடு சோறுடைத்து' என்ற பழமொழி தொடர்மொழியாக இருக்குமா? என்று எண்ணியது உண்டு அதற்கேற்ற அடையாளம் தான் குடியாட்சி காலத்திலேயே கும்பாபிஷேகம்— திருவருளால் நிகழுகிறது. இதனைக்கண்டு உய்யும் அளவாவது அபிஷேகப் பிரியராகிய சிவபெருமான் உள்ளம் மகிழும் அபிஷேக கட்டளைக்கும் நடமாடும் கோயில்களாகிய அடியவர்கள் உள்ளத்தில் ஒளி செய்ய அன்னதான கட்டளைக்கும் வழிவழி தொண்டராகிய எம்மையும் ஆட்கொண்டு பணி கொள்ளுகின்ற திருவுளத்துடன் பெருமான் கருணைபாலித்துள்ளார்.

இறைவன் கருணை எல்லையற்றது., தடையற்றது ஆதலால் கண்டு உய்யும் புண்ணியத்தை எமக்கு அருளியிருக்கிறது.

கமலாம்பிகையுடன் எழுந்தருளும் தியாகேசப் பெருமான் நமது செந்தமிழ் நாட்டை சோழ வளநாடு சோறுடைத்து'' என்ற பழஞ்சொல்லைப் புதுக்கி என்றென்றும் காத்து அருள்வாராக.

உ
சிவ சிவ

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623 206
இராமநாதபுரம் மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி 27.
நாள் : 13—3—88

வாழ்த்துரை

இந்த வாழ்க்கை குறிக்கோள் நோக்குடையது. அந்தக் குறிக்கோள் தான் எது? ஆன்மா நிறைநலம் பெறுதல். இந்த நலத்தின் இயல்பு இன்ப அன்பாகும். இந்த இன்ப அன்பைத்தான் சமய உலகு 'வீடு' என்று கூறுகிறது. இந்த இன்ப அன்பு விலைக்கு வாங்கக் கூடியதன்று! அந்த இன்ப அன்பு, அன்பினாலேயே கிடைக்கக் கூடியது. 'ஐயன் ஐயாறனார்க்கு அன்பலால் பொருளில்லை' என்பது அப்பரடிகள் வாக்கு. ஐயன் ஐயாறனார்க்கு அன்பு பொருளாக இருந்தால் உயிர்க்கு என்ன ஊதியம்? தொண்டே உயிர்க்கு ஊதியம். 'தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை' என்பது அப்பரடிகள் அருள் வாக்கு. அன்பும் தொண்டும் இணைந்தால் உருவாவது தியாகம் தியாகமாவது, தன்னல மறுப்பு; பிறர் நலம் பேணல். தனக்கென முயலாது பிறர்க்கென முயலும் பண்பே தியாகப் பண்பு. இதுவே நோன்பு, தவம். இத்தகு பண்பில் சார்ந்த வாழ்க்கையை மக்கள் ஏற்க வேண்டும் என்ற படிப்பினையைத் தந்தது திருவாரூர் தியாகேசனின் திருவிளையாடல். நற்றமிழ் நம்பி ஆரூரருக்குத் தூதுவனாகவும் நடந்தார்; நெல் வழங்கினார். நற்றமிழ் ஆரூரன் ஏசினாலும் புகழ்ந்து பாடினாலும் ஏற்றருள் செய்தார். இத்தகு தியாக சீலம் நம்மிடையே மலர திருவாரூர் திருக்கோயில் வழிகாட்டு கிறது; வழி நடத்துகிறது.

திருவாரூர்த் திருக்கோயில் 'எல்லாரும் ஓர்குலம்' என்ற தத்துவத்திற்கு உருக் கொடுத்த திருத்தலம். இத்திருத்தலத்தில் உள்ள திருக்கோயில் பெருஞ் சாந்தி விழாக் கொள்வது சிறப்பு. இந்த இனிய திருப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நமது பாராட்டுக்கள்! வாழ்த்துக்கள்!

பெருஞ்சாந்தி விழா இனிதே நிறைவெய்த திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின் றோம்! மலர்க அன்புள்ளம்! வளர்க திருத்தொண்டு! வாழ்க தியாகப் பண்பு!

இன்ப அன்பு,

அடிகள்



தவத்திரு சுந்தர சுவாமிகள்,
ஆதீனகர்த்தர்,
கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி அஞ்சல்,
கோவை-614 006.
தொலைபேசி எண் : 85025, 85070

திருக்குட நீராட்டுவிழா வாழ்த்துப்பாடல்கள்

பாரூர்எல் லாம்போற்றும் பண்டைச் சிறப்பமைந்த
ஆரூர், தியாகேசர் ஆண்டருளும்–சீரூராம்
பூங்கோயில் கும்பப் புனலாட்டும் நல்விழாத்
தாங்காணல் மேலாம் தவம்

மூவர்கள்தம் பாடலுடன் முன்னுதொண்டர் தம்தொகைநூல்
மேவும்சீர் பெற்றருளும் மேலாமூர்த் தேவாகும்
வீதிவிடங் கப்பெருமான் வீற்றருள்கோ யிற்பணியை
நீதியுடன் செய்தார் நினைத்து

ஆதி மனுச்சோழன் ஆண்டதுவும், விண்பரவும்
வீதிவிடங் கப்பெருமான் வீற்றினிதே–நீதியுடன்
ஆண்டருளும் ஆரூர் அணிக்கோயில் நற்பணிகள்
காண்டவர்கள் வாழ்க களித்து.

நங்கை பரவையார் நன்மனையின் பால்நடந்த
செங்கமலப் பாதத் திருமணக்கும்–மங்கலமார்
ஆரூர்பூங் கோயில் அணிப்பணிகள் செய்தஅன்பர்
சீராக வாழ்வார் செழித்து.

கும்பாபி டேகவிழாக்கோலா கலமுறச்செய்
தெம்பாளர், நல்லுதவி செய்தவர்கள்–நம்பன்
திருமுன்பு சேவிப்போர் செல்வநலம் பெற்று
வருநலமாய் வாழ்க மகிழ்ந்து.

சுந்தரசுவாமிகள்

-xiii-

உ

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

'கயிலை முனிவர்' தவத்திரு
சாந்தலிங்க இராமசாமி அடிகளார்,
பேரூராதீனம்.

பேரூர், கோவை-10.

ஆசியுரை

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீதிலாத் திருத்தொண்டத்தொகை, தம்பிரான் தோழராகிய ஆளுடைய நம்பிகளால் அருளப்பெற்ற திருத்தலம் திருவாரூர். மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர்மொழியாம் ஞானத் தமிழ் அரசு வீற்றிருந்த பெருமைக் குரியது. மாநிலங்காவலன் மன்னுயிர்களைக் காக்கும் பாங்கும் அறநெறியும் நீதியும் நிலைத்திருந்த தெய்வத் தலம்.

இத்திருத்தலத்தின் விழாக்கள் காலங்காலமாகப் போற்றப் பெற்றன. தளிர் தருவை நாடி வரும் உயிரினங்கள் போல நல்லவர்கள் காதலாகிக் கசிந்து வழிபடுவார்கள். மருத்துவமனையை நாடும் நோயாளி போல தீவினைவழிப்பட்டவர்கள் துன்பம் துடைக்க வேண்டும் என்று முறையிடுவார்கள். தீராநோய் தீர்த்தருள வேண்டும் என்று அழுது தம்பித்துச் சூழ்ந்து வருவார்கள். கூற்றுதைத்த குரைகழலைப் போற்றுவார்கள். செல்வம் வேண்டுவோர் மாமணியை வணங்கி இம்மைச் செல்வமும் பொன்னும் மெய்ப் பொருளும் பொருந்த வேண்டும் என்று மயங்குவார்கள், மக்கட் பேற்றை விரும்புவோர் தம்பொருள் தம் மக்களாதலின் பண்புடை மக்கள் வேண்டுமென்று குழைந்து மயலுறு வர். உலக வாழ்வில் இனிமையும் இன்பமும் தரும் கணவனை வேண்டும் கன்னியர்கள் அன்பு நாரால் மலர் தொடுத்து ஆடிப்பாடிக் காமுற்று ஏத்துவர். இறைவன் இவர்கட்கு எளிவந்தருளுவார். இது திருவாரூர் திரு ஆதிரை நாள் விழாவிற்காணும் காட்சி என்று நாவரசராகிய அப்பரடிகள் ஆளுடைபிள்ளையாகிய திருஞானசம்பந்தருக்கு அறிமுகப் படுத்திய பெருமையை,

''நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்கு
அணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்''

என்று தேவாரப் பாடல் விளக்கும்.

இத்தகைய திருத்தலம் தமிழர்களது பண்புக்கும், கலைக்கும் உறைவிடமானதாகும். இத்தலம் தமிழகத்தின் பண்பாட்டுச் சின்னமாக அரசினால் போற்றப்படவேண்டும்; திருத்தலம் பொலிவுற வேண்டும் என்று கருதுவதும் அதனை செயலாற்ற முனைவதும் நமது தலையாய கடமையாகும். அவ்வகையில் திருக்குட நீராட்டு விழா பொலிவுபெற திருஅம்பலவாணர் அடிகள் நினைந்து வாழ்த்துகிறோம், புகழ்மிக்க பழம் பெருங் கோயிலாகிய இதனைத் திருப்பணி செய்து புதுக்கும் உணர்வுடையோர் அனைவருக்கும் நமது பாராட்டுக்கள். திருக்குட நீராட்டு விழாவினை சிறப்பாக நடத்தும் விழாக் குழுவினர் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம்

-xv-

A. PADMANABAN I. A. S.
Adviser to the Governor of Tamil nadu

Fort St George MADRAS-600 009.
Date: 28-3-1988

வாழ்த்துரை

வானளாவிய கோபுரங்கள், மனிதனின் எண்ணங்களையும், செயல்களையும் உன்னத நிலைக்கு உயர்த்தும் வழிகாட்டிகளாக தொன்று தொட்டு தமிழ் நாட்டில் கருதப்பட்டு வருகின்றன. அன்பையும், பண்பையும் வளர்த்து சமுதாயத்துக்குத் தொண்டு செய்து ஒவ்வொரு தனி மனிதனும் தன்னையும் உயர்த்திக் கொண்டு சமுதாயத்தையும் உயர்த்த, ஆலயங்கள் பெரிதும் உதவுகின்றன.

கோவிலைச் சார்ந்த குடிகள் - குடிகளைச் சார்ந்த கோவில் என்ற நாகரீகத்திற்கும், பாரம்பரியத்திற்கும், நாம் பழக்கப்பட்டவர்கள். ஆன்மீகப் பெரியோர்கள் பெருமளவில் தோன்றி மக்கள் நன்னெறியில் வாழ வழி வகுத்தனர். இங்ஙனம் ஆன்மீகத்திலும், இறையுணர்விலும் அழுந்தித்திளைத்த பெருமக்களால் திருவாரூர் திருத்தலம் போற்றி பாடப்பெற்றுள்ளது.

தொன்மையும், மேன்மையும் மிக்க இத்திருத்தலத்திற்குத் திருப்பணிகள் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுத் திருக்குட நன்னீராட்டு விழா 4-4-1988 அன்று நடைபெற இருப்பது சமயப்பற்று கொண்ட அனைவருக்கும் மிகுந்த மகிழ்வினைத் தரக் கூடிய நிகழ்ச்சியாகும்.

இத்திருப்பணியில் பங்குகொண்ட சான்றோர்கள், திருக்கோயில் அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. பத்மநாபன்

கு. ஆளுடையபிள்ளை,
இ. ஆ. ப.,
ஆணையர் அரசு செயலாளர்,
வணிகவரி அறநிலையத்துறை.

புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.

நாள் : 22-3-1988

வாழ்த்துரை

சமயம் என்ற சொல்லுக்குப் பக்குவப்படுத்துவது என்பது பொருள். மனிதனைப் பக்குவப்படுத்தி, பக்தி நெறியில் செலுத்துவன சமயங்களே.

'பக்தியால் யானுனைப் பலகாலும்' என்று வாக்கிற்கு அருணகிரியும், 'பயனுண்டு பக்தியினாலே' என்று பாரதியும் பாடியுள்ளனர். அன்பின் முதிர்ச்சியான இந்த பக்தியை வழிபாட்டின் மூலம் தான் அடையமுடியும்.

மக்கள் வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்திட இறைவழிபாடு இன்றியமையாதது.

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருளுக்கு ஆலய வழிபாடெதற்கு என்று நினைக்கலாம். பசுவின் உடலெங்கும் பால் இருப்பினும் வெளிப்படுவது மடியில்தான்! அதுபோல ஞானமும், அறிவு முதிர்ச்சியுமற்ற சாதாரண மக்களுக்கு ஆலயமும், ஆலய வழிபாடும், மூர்த்தி, தீர்த்தம், தலம் போன்றவைகளும் முக்கியமானவை.

'கோயில்' என்று சைவப் பெருமக்களால் கொண்டேத்தப்படும் தில்லைத் திருக்கோயிலுக்கும் காலத்தால் முற்பட்டது திருவாரூர்க் கோயில்.

மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ
அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே'

என்று ஆரூர்க் கோயிலின் தொன்மைச் சிறப்பை வியந்து பாராட்டுகின்றார் நாவுக்கரசர்.

இவ்வூரின் தெய்வீகப் பெருமையை உணர்ந்த சேக்கிழார் பன்னிரு திருமுறைகளில் ஒன்றாக வைத்துக் கொண்டாடப்படும் திருத்தொண்டர் புராணத்தில் திருமலைச் சிறப்பாகக் கயிலை மலையின் சிறப்பும், திருநாட்டின் சிறப்பாகச் சோழ வள நாட்டின் சிறப்பும் கூறி, திருநகரச் சிறப்பாகத் திருவாரூரின் சிறப்பைக் கூறியுள்ளார். சோழ நாட்டில் உள்ள வேறெந்தத் திருநகரத்தையும் கூறாமல், ஆரூர் கூறப்பட்டுள்ளமை அவ்வூரின் பெருமையைப் புலப்படுத்தும்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார், கழற் சிங்கர், விறன்மிண்ட நாயனார், செருத்துணையார், நமிநந்தியடிகள், தண்டியடிகள், சோமாசிமாறர், சேரமான் பெருமாள், தேவாரம் பாடிய மூவர் அனைவரும் இவ்வூருடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள்.

ஆரூர் கோயிலில் உள்ள தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளியிருந்து அடிய வர்களைத் தொழுதபின்பே சுந்தரர் திருத்தொண்டத்தொகை பாடியருளினார். 'திருவார் பெருமை திகழ்கின்ற தேவாசிரியனிடைப் பொலிந்து மருவா நின்ற சிவனடியார்' என்று சேக்கிழார் குறிப்பிடுவார். பக்திச்சுவை நனி சொட்டும்படி சேக்கிழார் பெரிய புராணம் பாட மூல நூலான திருத்தொண்டத் தொகை இத்தலத்தில் பாடப்பட்டது.

கன்றை இழந்த பசுவின் துயர் தீர்க்கத் தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்த மனுநீதிச் சோழன் ஆண்ட ஊர் ஆரூர்.

சப்த விடங்கத் தலங்களில் ஒன்றான ஆரூரில் தியாகராசப் பெருமானின் அஜபா நடனம் காணக் கண்கோடி வேண்டும்!

ஆரூர்க் கோயிலில் உள்ள ஓவியங்களும், இங்கு இசைக்கப்படும் குடமுழவம் (பஞ்சமுக வாத்தியம்) சுத்த மத்தளம் போன்றவைகளும், தமிழர்தம் கலையுணர்வு, நாகரீகம், பண்பாடு போன்றவற்றைப் புலப்படுத்துவனவாகும்.

திருக்குட நீராட்டு விழாக்கள் தமிழகத்தின் ஆன்மீக மறுமலர்ச்சியை நமக்குக் காட்டுகின்றன. பன்னிரு ஆண்டுகட்கு ஒருமுறை ஆலயங்களுக்குத் திருப்பணி செய்ய வேண்டுமென்று ஆகமங்கள் கூறுகின்றன. 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்ற முறையில் இந்நன்னீராட்டு விழாக்களைச் செய்வதும், செய்விப்பதும், இறைவனை வழிபடுவதும், 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' எனும் வகையில் மிகச் சிறந்த புண்ணியம் வாய்த்தவர்க்கே கிட்டுவதாகும்.

இத்திருக்குட நீராட்டு விழாவினையொட்டி வெளிவர இருக்கும் மலரில் பக்தி மணம் கமழவும், 'திருவிழாக்காட்சி காணவும் இச்சைகாண் எந்தாய்' என்ற வள்ளற் பெருமான் வாக்கிற்கிணங்க, இறையன்பர்கள் விழாக்கண்டு இன்புறும் வகையில் விழா சிறப்புடன் நடைபெறவும் ஆரூர்ப் பெருமான் அருள்வாராக!

கு. ஆளுடைய பிள்ளை

தி, இராச. கல்யாணசுந்தரம்
ஐ. ஏ. எஸ்.,
COMMISSIONER
Hindu Religious and Charitable
Endowments Administration
Department

MADRAS-600 034

வாழ்த்துரை

சிவபெருமானின் ஆறு ஆதாரத் தலங்களில் மூலாதரத் தலமாகத் திகழ்வது திருவாரூர். பஞ்சபூதத் தலங்களில் மண்ணுக்குரிய தலமாகத் திகழ்வதும் திருவாரூர். சப்த விடங்கத் தலங்களுள் முதன்மை பெற்றுத் திகழ்வதும் திருவாரூர். முத்தித் தலங்கள் நான்கினுள் பிறக்க முத்தி தரும் திருத்தலமும் திருவாரூரே ஆகும்.

''திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று பாடிய சுந்தரர் பெருமான் தியாகேசர் அடியெடுத்துக் கொடுக்கவே திருத்தொண்டத் தொகை இயற்றியருளினார் வன்பது நினைந்து நினைந்து போற்றத்தக்கது. திருத்தொண்டத் தொகை சுந்தரர் பாடியிராவிட்டால், திருத்தொண்டர் திருவந்தாதியை நம்பியாண்டார் நம்பியும் திருத்தொண்டர் புராணத்தைச் சேக்கிழார் பெருமானும் பாடியிருக்க முடியாது. அவ்வகையில் சைவம் தழைககவும், சைவம் தழைக்கத் தோன்றிய 63 நாயன்மார்களின் புகழ் நிலைக்கவும் காரணமானது இத்திருவாரூர் திருத்தலமே ஆகும்.

திருஞானசம்பந்தர் ஐந்து திருப்பதிகங்களும். திருநாவுக்கரசர் இருபத்தியொரு திருப்பதிகங்களும், சுந்தரமூர்த்தி நாயனார் எட்டு திருப்பதிகங்களும் இத்தலத்தைப் போற்றிப் பாடியுள்ளனர். மாணிக்கவாசகர் தாம் அருளிய திருவாசகம், திருக்கோவையார், நூல்களிலில் திருவாரூரைப் போற்றியுள்ளார். சேரமான் பெருமாள் நாயனார் இத்தலத்தைப் போற்றி மும்மணிக்கோவை செய்துள்ளார். கழற்சிங்க நாயனார், செருத்துணை நாயனார், சோமாசிமாற நாயனார், தண்டியடிகள் நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறல்மிண்ட நாயனார் ஆகியோர் தியாகேசரைப் போற்றி வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

திருவாரூர்த் திருத்தலம் என்றைக்குத் தோன்றியது என்று எவராலும் கூறமுடியாத மிகப் பழமையான திருத்தலம் என்பதைத் திருநாவுக்கரசர்,

மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணிதிகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ
அணி ஆரூர் கோயிலாக் கொண்டநாளே''

என்று பாடியிருப்பதால் அறிகிறோம். தேவர்கள் புற்றுவடிவில் மூலவரை அமைத்து மிகத்தொன்மையான காலத்தில் வழிபட்டுள்ளனர். அவரே புற்றிடங்கொண்டான்

எனவும், புன்மீக நாதர் எனவும் அழைக்கப்படுகிறார். ஆவின் கன்றினுக்காய் தன் ஒரே மகன் வீதி விடங்கனை மனுநீதிச் சோழன் தேர்க்காலில் ஏற்றி தண்டனை வழங்க முற்பட்டபோது தடுத்தாட்கொண்ட பெருமான் வன்மீக நாதரே ஆவார். இந்நாட்டை ஆண்ட முசுகுந்த சோழன் தேவேந்திரனுக்காக வலன் என்ற அரக்கனுடன் போரிட்டு அவனை வென்றதற்காக தான் வணங்கி வழிபட்ட தியாகப் பெருமானை முசுகுந்தனுக்கு தேவேந்திரன் வழங்கினான். அத்தியாகப் பெருமானும் இத்திருவாரூரில் தனிச் சந்நிதியில் கோயில் கொண்டிருக்கிறார். இத்தியாகருடன் வந்த இன்னும் ஆறு மூர்த்திகளே திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காராயில் திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய தலங்களில் கோயில் கொண்டிருப்பதால், திருவாரூரையும் சேர்த்து இவ்வேழு தலங்களும் சப்தவிடங்கத் தலங்களாகப் போற்றப்படுகின்றன. வன்மீக நாதருடன் தியாகேசரும் இவ்வாரூரில் கோயில் கொண்டிருப்பதைப் போலவே நீலோத்பலாம்பிகை, கமலாம்பிகை எனத் தேவியர் இருவரும்கூட இவ்வாலயத்தில் தனித்தனியே கோயில் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள தேர்களில் எல்லாம் பெரியதும் அழகியதுமான தேர் திருவாரூர்த் தேர், என்பதனாலேயே ''திருவாரூர் தேர் அழகு'' என்ற பழமொழியும் வழங்குகிறது. கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, செங்கழுநீர் ஓடை ஐந்துவேலி எனத் திருவாரூர் எல்லாவற்றிலும் சிறப்பும் முதன்மையும் பெற்றுத் திகழ்கின்றது.

சுந்தரர் பரவை நாச்சியாரை மணந்து வாழ்ந்து இத்திருவாரூரிலேயே விந்தைகள் பலவற்றைப் புரிந்திருக்கிறார். விருத்தாசலம் மணிமுத்தாற்றில் பொன்னை இட்டு அப்பொன்னைத் திருவாரூர் கமலாலயக் குளத்தில் சுந்தரர் எடுத்துக் கொண்டுள்ளார். சங்கிலி நாச்சியாரை மணந்த சுந்தரர்பால் பரவை நாச்சியார் கொண்ட ஊடலை தீர்ப்பதற்காகச் சுந்தரர்வேண்ட திருவாரூர் இறைவனே பரவையாரிடம் தூது நடந்திருக்கிறார் அன்பர்களுக்கு மிக எளிதில் அருள்புரியும் ஆரூரன் திருவருளினை வியந்தே சுந்தரர்,

''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை,
போகமும் திருவும் புணர்ப்பானை,
பின்னை என்பிழையைப் பொறுப்பானை,
பிழைஎலாம் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறியவொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத் தணி
ஆரூரானை மறக்கலும் ஆமோ''

என்று போற்றுகிறார்.

இவ்வாறு தொன்று தொட்டு இன்றுவரை மங்காப் புகழுடன் தமிழர்தம் உயரிய பெருமைக்குச் சான்றாகத் திகழும் திருத்தலம் திருவாரூரே ஆகும். சங்கீத மும்மணிகளாம் தியாகராஜர், சியாமாசாஸ்திரிகள், முத்துசாமிதீட்சிதர் ஆகியோரும் இத்திருவாரூரிலேயே தோன்றிய பெருமை பெற்றவர்கள். பக்தியுடன் பண்பாடும் முத்தமிழும் சிறந்தோங்கும் இத்திருவாரூர்த் திருக்கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா 4-4-88 அன்று நடைபெற இருப்பது அறிந்து எல்லையற்ற பேரானந்தப் பெருமகிழ்வினை அடைகிறேன். இத்திருப்பணியில் பங்குகொண்ட ஊர்ப்பெருமக்கள், சான்றோர்கள், ஆலயப் பணியாளர்கள், அனைவரும் வன்மீகநாதர் மற்றும் தியாகேசர் திருவருளால் எல்லா வளங்களும் நலன்களும் எய்திச்சிறப்புற்று வாழ அன்போடு வாழ்த்துகிறேன்.

தி. இராச. கல்யாணசுந்தரம்

SUKAVANESHVAR, I. A. S.
Chairman,
Tamil Nadu Ware Housing Corporation.

MADRAS-600 017.

Date: 15-3-88

வாழ்த்துரை

பல ஆண்டுகளுக்குப் பிறகு அருள்மிகு தியாகராஜர் திருக்கோயிலுக்கு ரூ. 24 இலட்சம் செலவில் திருப்பணி முடித்து திருக்குடமுழுக்கு விழா நடைபெற இருப்பது குறித்தும், அதன் நினைவாக சமய இலக்கிய மலர் ஒன்று வெளியிடப்பட உள்ளது என்பதைக் குறித்தும் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இத்திருத்தலம் சைவம், சாக்தம், காணாபத்யம் ஆகிய இந்துமதப் பிரிவுகளின் மூன்றிற்கும் சிறப்பு உடையதாகும். சமயக் குரவர் நால்வரும் பாடித்துதித்து பெரும்பேறு கண்ட இத்தலம் சிவசக்தி ஐக்கியத்தின் தத்துவத்தை விளக்குவதாக அமைவதாகும். அதாவது திருச்செங்கோடு, சிதம்பரம் போலவே இதுவும் சிவசக்தி ஐக்கியத்தின் தன்மையை வெளிப்படுத்துவதாகும். தியாகேசரும் நடனமூர்த்தி தான்.

'தை தை தை சப்த தத்பராய நம:'

என்று தியாகராஜ ஸஹஸ்ரநாமாவளி இந்த அடல் வல்லானை குறிப்பிடுகிறது. வைகுண்டத்தில் திருமால் தன் மார்பில் வைத்து தியாகேசப் பெருமானை பூஜிப்பதானது, ஜீவ-பிரம்ம அத்வைத உறவைக் குறிக்கும் அஜபா வித்யையையும் ஹம்ஸ நடனத்தையும் உணர்த்துவதாகும். திருமாலின் பிராண நாடியாக தியாகராஜப்பெருமான் எழுந்தருளியுள்ளார் என்று கூறினால் அது பொருத்தமாக இருக்கும். சிதம்பரம் சிதாகாசத்தையும், காஞ்சீபுரம் பிலாகாசத்தையும் குறிப்பது போல், திருவாரூர் அக்ஷராகாசத்தைக் குறிப்பதாகும். தியாகராஜரின் திருவடிவத்தை பொதுவாக 'சோமாஸ்கந்த மூர்த்தி' என்று கொண்டாலும், இத்திருவடிவத்தை 'ஐயைந்தின் அப்புறத்தானும்' என்று நாவுக்கரசர் கூறியது போல், தற்போது பழக்கத்தில் இருந்து வரும் இருபத்தைந்து வகை மகேஸ்வர வடிவங்களுக்கும் அப்பாற்பட்ட ஒரு வடிவழகர் இவர் என்றே உணரலாம்.

'த்ரிலோக ஸம்ரக்ஷணார்த்தாய ராஜவேஷதராய நம:'

என முசுகுந்த ஸஹஸ்ரநாமாவளி விவரிப்பது போல் உலகைக் காத்து உய்விப்பதற்காக சிவபெருமான் ராஜராஜேசுவர உருவம் எடுத்தார் என்பது புலனாகும். ரத்னஸிம்ஹாஸனத்தில் இருபுறமும் வீரவாளுடன் கம்பீரமாகத் தோற்றமளிக்கும் சிவராஜமூர்த்தியின் திருமுகத்தையும் அன்னையின் திருமுகத்தையுமே பக்தர்கள் எப்போதும் காணக்கூடும். திருக்கரத்தின் ஒரு பகுதியை அபிஷேக காலங்களில் காணலாம். பாதங்களில், மார்கழித் திருவாதிரையில் இடப்பாதத்தையும், பங்குனி உத்திரத்தில் வலப்பாதத்தையும் காண வேண்டும். மற்ற திரு அங்கங்கள் மிகுந்த இரகசியமானவை. சிவசக்தியின் ஐக்கியத்தை திரஸ்கரணீ என்ற தேவதையின் வடிவம் மறைத்து ஒரு சில அம்சங்களை மட்டும் நாம் உணரமுடிகிறதோ, அதுபோலவே தான் தியாகேச மூர்த்தியும் சிவசக்தியின் சேர்க்கையையும் அதன் இரகசியத் தன்மையையும் காட்டுவதாகும். சிவமூர்த்தங்களான கல்யாண சுந்தரமூர்த்தி, அர்த்தநாரீசுவரமூர்த்தி ஆகிய இரண்டின் நடுவாக அமைந்ததாக சிவராஜமூர்த்தி உள்ளது.

இத்திருத்தலம் ஸ்ரீபுரம் என அழைக்கப்படுகிறது. 'காமகலை' என்று சொல்லையுடைய ஸ்ரீவித்யையின் தத்துவத்தையும் விளக்குவதாக, விசேட யோக நிலையில் இருந்து கொண்டு கருணை பொழியும் அருள்மிகு கமலாம்பிகையின் சன்னதி அமைந்துள்ளது.

'ஸ்ரீவித்யாத்மக ரூபாய நம:'
'ஸ்ரீவித்யாயாஸ் த்ரிகண்டாத்ம ஸோமாஸ்கந்த ஸ்வரூபவதே நம:'
'ஸ்ரீவித்யாமோக வைபவ ய நம:'
'ஸ்ரீஹாதிவித்யா ஸ்வரூபிணே நம:'

போன்ற பெயர்களால் முசுகுந்த ஸஹஸ்ரநாமத்தில் அர்ச்சிக்கப்படும் பெருமையை உடைய தியாகேசர் மற்றும் கமலாம்பிகை ஸ்ரீவித்யா என்று சொல்லக் கூடிய சாக்தத்தின் விளக்கமாக அமைவதாகும் சிவகாமேசுவரர் – காமேசுவரிகளின் ஸாமரஸ்ய ஆந்ந்தோல்லாஸமே 'காமகலை' என்பது ஸ்ரீவித்யையின் சித்தாந்தமாகும். பொதுவாக இப்போது வழக்கத்தில் இருந்துவரும் லலிதா ஸஹஸ்ரநாமம் ஸ்ரீவித்யையின் பெருமையை எடுத்துரைப்பது போல், ஸ்ரீதியாகராஜ முசுகுந்த ஸஹஸ்ரநாமாவளி சைவத்தின் கண்ணோட்டத்தில் ஸ்ரீவித்யையின் தத்துவங்களையும் மந்த்ர சாஸ்த்ர யோக சாஸ்த்ர உண்மைகளையும், சைவத்தின் பெருமையையும் எடுத்துரைப்பதாகும். 'ஸ்ரீமாதா, ஸ்ரீமஹாராக்ஞீ, ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேசுவரீ' என்று தொடங்கி லலிதா ஸஹஸ்ர நாமம் அன்னையின் பெருமையை எடுத்துரைப்பதுபோல்,

'ஸ்ரீமத் த்யாகராஜாய நம:'
'ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேசுவராய நம:'
'ஸ்ரீராஜராஜாய நம:'

என முசுகுந்த ஸஹஸ்ரநாமம் ஆரம்பித்து, அம்மையப்பனின் பெருமையை விளக்குகிறது.

இது மூலாதார க்ஷேத்திரமாகும். அந்த அடிப்படையில் வல்லப கணபதி, மூலாதார கணபதி, உச்சிஷ்ட கணபதி என்ற மூர்த்தங்கள் ஒருங்கே அமையப்பெற்ற விசேஷத் தலமாகும். இது மட்டுமின்றி ஒரு காலத்தில் இங்கு நூற்றுக் கணக்கான விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்ததாகக் கூறுவர். அதனைக் குறிக்கும் வகையில் 'ஐநூற்றோரு பிள்ளையார்' என்று ஒரு பிள்ளையாருக்கு பெயர் உண்டு.

சுந்தரமூர்த்தி நாயனாருடன் பின்னிப் பிணைந்ததாகவும், பிறக்க முக்தியளிப்பதாகவும், பிருத்வீத்தலமாகவும், திருவாரூர்த் தேரழகு என்று உலகப்பிரஸித்தி பெற்றதாகவும், மனுநீதிச் சோழன் செங்கோல் ஆட்சிக் காலத்தில் தலைநகரமாகவும், சங்கீத மும்மூர்த்திகளின் பிறப்புத் தலமாகவும், மற்றும் பல்வேறு சிறப்புக்களைப் பெற்றிருக்கும் இத்திருக்கோயிலில் தற்போது சிலைப் பாதுகாப்பு மையம் (Icon Complex) அமைந்துள்ளது.

இது போன்று அனைத்துப் பெருமையுடைய இத்திருத்தலத்தில் உள்ள கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது அருள்மிகு தியாகராஜப்பெருமானின் திருவருளினால்தான் என்றால் அது மிகையாகாது. இந்த திருக்குடமுழுக்கு நடைபெறுவதானது கீழத்தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்து மேன்மேலும் பற்பல திருக்கோயில்களுக்கு திருக்குட முழுக்கு விழாக்கள் நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வணங்குகிறேன்.

சுகவனேஸ்வர்

மா. இராமு, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்.

தஞ்சாவூர்.

வாழ்த்துரை

சிறப்புகள் பல பெற்ற சோழமண்டலத்திற்கு மணிமகுடம் சூட்டி மகிழ்வன எண்ணற்ற திருக்கோயில்கள், கோவிலில்லா ஊர், நீரில்லா குளத்தையும், நிலவில்லா வானத்தையும் போன்றதாகும். ஊருக்குப் பெருமை கோவில். கோவிலுக்குப் பெருமை ஊர்நலம். இவ்வகையில், திருவாரூர் வீற்றிருந்து திருவனைத்தும் வழங்கும் பெருமானாகி, மக்களின் வாழ்வோடும் வளத்தோடும் கலந்து, கலை வளர்த்து நலம் வழங்கும் தியாகேசன் அருள் பெருகும் இத்தலத்தின் பெருமைக்கு ஈடுயிணை உண்டோ? தொன்மைத் தன்மையும் பெருமையும் கமழும் இத்திருக்கோயிலைக் காண்போர் நலம் பெறுவர். கோவிலுறை தியாகேசனை வணங்குவோர் வாழ்வு பெறுவர். இந்நன்னாளின் நினைவாக மண்டலாபிஷேகத்தின் போது வெளிவரும் நன்நீராட்டுப் பெருவிழா மலர் சிறக்க வாழ்த்துகிறேன்.

-XXV-

ம. சூரியராஜ், பி. ஏ., பி. எல்.,
இணை ஆணையர்-1,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

சென்னை-34.

நாள்: 28-3-88

வாழ்த்துரை

அன்புடையீர்,

வரலாற்று சிறப்புமிக்க மிகப்பெரிய திருக்கோயிலான அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் சிறப்பாக திருப்பணி முடிக்கப்பட்டு திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. சுமார் 45 ஆண்டுகளுக்குப்பின் இத்தகைய ஒரு சிறப்புமிக்க விழாவை ஏற்பாடு செய்துள்ளது கண்டு தமிழ் நாட்டின் சைவ உலகம் பெருமை அடைகிறது. இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ள தலைவர் மற்றும் அத்தனை திருப்பணிக் குழுவினரும் கடந்த சில ஆண்டுகளாக இதே முயற்சியாக இருந்து அதை சிறப்பாக செய்து முடித்துள்ளதற்கும் அதற்கு உறுதுணையாக இருந்து பொருள் கொடுத்தும் உடலுழைப்பு தந்தும் தங்கள் ஆதரவைத் தந்த அத்துணை பெருமக்களும் இறை அருளுக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள் ஆகும். மிகச்சிறந்த திருக்கோயில் முழுவதுமாக திருப்பணி செய்து முடிப்பது என்பது ஒரு சிறந்த சாதனையே.

இத்தகைய நல் விழாவில் பல பெரியோர்கள் ஆழ்ந்த கருத்துக்கள், தத்துவங்களுடன் பல வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சிகளையும் தொகுத்து மலராக அளிக்க இருப்பது சிறப்புடையதாக ஆகும்.

குடமுழுக்கு நினைவாக வெளியிட இருக்கும் மலர் என்றும் வாடா மலராக தமிழ் மணம், சமய மணம் பரப்பி மக்களுடைய நல்ல சமய உணர்வுகளைத் தூண்டுவதாக அமைந்து பயன்தரும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய சீரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கும் குழுத் தலைவர் அவர்களுக்கும் என் பாராட்டுதல்களை தெரிவிப்பதுடன் இந்த நல்ல முயற்சி வெற்றிபெற இறை அருள் வேண்டி என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

ம. சூரியராஜ்

-XXVII-

இரா. தண்டபாணி,
பி. எஸ்சி., பி. எல்.,
இணை ஆணையாளர்-2
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
சென்னை-600 034.

வாழ்த்துரை

''சித்தம் தெளிவீர்காள்
அத்தன் ஆரூரைப்
பத்திமலர் தூவ
முத்தியாகுமே''

என்று திருஞான சம்பந்தர் முத்திபெற விழையும் அடியார்கள் எல்லாம் திருவாரூரைத் தொழ வேண்டும் என்று பாடியிருக்கிறார். ஆகவே பிறக்க முத்தித்தரும் தலம் திருவாரூர் என்பதும் மெய்யே. அதேபோல் வணங்கினாலும் திருவாரூர் வணங்கினார்க்கு முத்தித் தரும் என்பதும் உண்மையே ஆகும்.

திருநாவுக்கரசர் தீவினைகள் தீரவும் முத்திபெறவும் விழைவார் திருவாரூரானை உருகி உருகித் தொழவேண்டும் என்பதை

''பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சாவண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லாமல் ஒரு தெய்வம் உள்கேன் என்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா என்றும்
பொழில் ஆரூரா என்றே போற்றா நில்லே''

எனப்பாடியிருப்பதும் நினைந்து மகிழத்தக்கது.

சுந்தரர் பரவை நாச்சியாரை மணந்து பலகாலம் திருவாரூரிலேயே வாழ்ந்திருக்கும் பேறு பெற்றவர். பிறதலங்களுக்குச் சென்றபோதும் கூட திருவாரூரனை மறக்க இயலாமல் நினைந்து நினைந்து உருகியவர்.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒண்கண் பரவையைத் தந்தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே''

என்ற பாடல் சுந்தரர் திருவாரூர் இறைவர்மேல் கொண்டிருந்த உருக்கத்திற்கும் நெருக்கத்திற்கும் சான்று பகர்கின்றது.

இவ்வாறு மூவர் முதலான சான்றோர்களால் பாடப்பட்டும், தொன்று தொட்டு இன்றுவரை ஆன்மீகத்தின் நிலைக்களனாயும் திகழும் திருவாரூர், முத்தித் தலங்களுள் ஒன்றாகவும், பஞ்சபூதத் தலங்களில் ஒன்றாகவும், சப்தவிடங்கத் தலங்களில்ஒன்றாகவும் விளங்குவது இத்திருத்தலத்தின் மேன்மையை நமக்குக் காட்டுவதாகும்.

''ஆரூரன் சந்நிதி போல்
ஆரூரன் ஆலயம் போல்
ஆரூரன் பாதத்து
அழகுபோல்-ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர்
வாவிபோல் நெஞ்சே
ஒரு இடத்தில் உண்டோ உரை''

என்ற பாவிற்கிணங்க ஈடு இணையற்றுச் சிறந்து விளங்கும் திருவாரூர் தியாகராஜசுவாமித் திருக்கோயில் திருக்குட நீராட்டுவிழா சீரோடும் சிறப்போடும் நடைபெற என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பணியில் பங்கு கொண்ட அனைவரையும் வாழ்த்துகிறேன்.

இரா. தண்டபாணி

சி. வி. ராஜாராம், பி. ஏ. பி. எல்.
துணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்.

வாழ்த்துரை

பாடல்பெற்ற சிவத்தலங்களிலேயே மிக அதிகமான பாடல்களைப் பெற்று சைவ சமயத்தின் தலைமையிடமாக விளங்கும் சிறப்பினைப் பெற்றது. திருவாரூர் பஞ்சபூதத் தலங்களுக்கும், மூலாதாரமாக விளங்கும். மூலாதாரத்தலம் திருவாரூர் முத்தித் தலங்களுள் பிறக்க முத்தியளிப்பது சத்திபீடங்களுக்குள் சிறந்து விளங்கி, நவ சக்திகளும் நிறைந்து, கமலாம்பிகை தவக்கோலத்தில் இருந்து அருள் வழங்கும் சிறப்பினை உடையது. திருமால் பூசித்த தியாகேசரை, இந்திரன் பெற்று வந்தான், அவனிடமிருந்து, முசுகுந்த சக்ரவர்த்தி நிலவுலகில் கொண்டுவந்து பிரதிட்டை செய்தார், இதனை அப்பரடிகள்,

> " அயிராவணமேறி அமரர் நாடாளாதே
> ஆனேரேறி ஆரூராண்டஅரசே "

என்கிறார் ஐராவதமென்கிற, ஆயிரம் தந்தங்களுடன் கூடிய மிகச்சிறந்த வெள்ளை யானையின் மீது ஏறி, தேவர்களின உலகை ஆளும் சிறப்பையும் விரும்பாமல், காளையின் மீது ஏறி திருவாரூரை விரும்பி ஆளவந்தார் தியாகவினோதர், என்று கூறுகிறார்.

திருவாரூரில் தேவார, திருமுறைகள் எப்போதும் ஒலித்துக்கொண்டே இருப்பதால் அவற்றைக் கேட்டுக்கேட்டு நந்தவனங்களில் உள்ள கிளிகளெல்லாம், தேவாரங்களை பாடுகின்றன; அவற்றைக் கேட்டு மகிழ்கின்றன குயில்கள். இப்படி ஒரு காட்சியைப் பெரியபுராணத்தில், திருவாரூர் நகரச் சிறப்புப் படலத்தில் படம் பிடித்துக் காட்டுகிறார் சேக்கிழார்.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த திருவாரூர்ப் பூங்கோயிலின் திருப்பணிகள் செம்மையாக நிறைவேறி, குடமுழுக்கு நடைபெறுவது கண்டு பெருமகிழ்ச்சி யடைகிறேன் பங்குகொண்ட பெருமக்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்குகிறேன். குறிப்பாக வணிகவரி அறநிலையத்துறை ஆணையர் மற்றும் அரசுச்செயலர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை இ. ஆ. ப. அவர்களையும், அறநிலையத்துறை ஆணையர் திருமிகு தி. இராச. கல்யாணசுந்தரம் இ. ஆ. ப., அவர்களையும், இவ் வேலைகளைச் செவ்வனே நடத்திக் கொடுத்ததற்கு வாழ்த்தி வணங்குகிறேன். இணை ஆணையர்கள், திருமிகு ம. சூரியராஜ். பி. ஏ., பி. எல். அவர்களையும், திருமிகு இரா. தண்டபாணி பி. எஸ். சி. பி. எல்., அவர்களையும் பாராட்டி வணங்குகிறேன்.

- XXXL

S. மகாராஜன், B.A., B.T.,

துணை ஆணையர்/
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்;

சென்னை—34,
1—4—88.

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், காலம் காலமாக சைவத் துறை மிகச்சிறந்து விளங்கவும், சைவநெறி தழைத்தோங்கவும் நிலைக்களனாய் அமைந்து விளங்கும் ஓர் தெய்வீகப் பொய்கையாகும். சைவ சமயத்திற்கு இதனைத் தலைநகராம் என்றே கூறலாம். சமயத் துறையில் மட்டுமல்லாது, சமயம் சார்ந்த இலக்கியம், ஆடல், பாடல், இசை, ஓவியம் போன்ற அனைத்து நுண் கலைகளும் இத்திருக்கோவிலின்கண் வளர்ந்து, மலர்ந்து தெய்வீக மணத்தை உலகெங்கும் பரப்புகின்றன

''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்ற புறநானூற்று வரிக்கிணங்க இவ்வூரில் வாழ்ந்து உய்ந்த உயர்ந்தோர் பலர். சுந்தரமூர்த்தி நாயனார் போன்ற நாயன்மார்கள் பலர், கமலை ஞானப்பிரகாசர், திருஞான சம்பந்தர், வள்ளலாலருக்கு அருள்வழங்கிய குரு தெட்சிணாமூர்த்தி சுவாமிகள், சங்கீதமும்மணிகள் இப்படியாக வாழையடி வாழையாய் வந்த சைவத் திருக்கூட்ட மரபினர் பலரும் வாழ்ந்து சிறந்தது இவ்வூர். தேவாரப் பாடல் பெற்ற தலங்களிலேயே மிக அதிகமான தேவாரப் பாடல்களைப் பெற்றது திருவாரூர் தான். பன்னிருதுறைகளிலும் பாடல் பெற்றதும் திருவாரூரே. பின்னரும் எண்ணிறந்த சிற்றிலக்கியங்களும் இவ்வூரைப் பற்றிப் பாடப் பெற்றன. திருநாவுக்கரசர் இவ்வூரில் இறைவனைப் பலவிதங்களில் அனுபவித்துப் பாடுகின்றார்.

''உயிராவாணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியின் உருவெழுதி உணரப் படுவாரோடு ஒட்டி வாழ்தி'' என்று தியானத்திற்கு இலக்கணம் வகுக்கின்றார்; ஆரூர் இறைவனை அகங்குளிரக் கண்டு அசந்து போகிறார்; இதனையே ''ஆரூரில் கண்டடியேன் அயர்ந்தவாறு'' என்ற திருத்தாண்டகத்தில் கூறுகின்றார். தியாகேசப்பெருமான், சிவனின் வடிவமாக ஆகம சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் இருபத்தைந்து மகேஸ்வர பேதங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்பதை ''ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே'' என்று பாடுகின்றார்.

மதுரைச் சொக்கருக்கு அறுபத்திநான்கு திருவிளையாடல் போன்று தியாகேசப் பெருமான் 365 திருவிளையாடல் புரிந்ததாகப் புராண வரலாறு பேசும். அந்தத் திருவிளையாடல்களில் ஒன்றுதான் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கொண்டு அடியவர் பெருமையை விளக்கும் திருத்தொண்டத் தொகை பாடச் செய்தது.

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த திருவாரூர் திருக்கோவில் சுமார் 140 ஆண்டுகளுக்குப் பின்னர் முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெறுவது தமிழக ஆன்மீக வரலாற்றில், குறிப்பாகச் சைவ சமய வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க குடமுழுக்கு விழாவின் நினைவாக மலர் ஒன்று வெளியிடுவது சாலவும் பொருத்தமான பாராட்டப்படவேண்டிய ஒரு செயல். இந்த வேளையில் திருப்பணி மற்றும் குடமுழுக்கில் பங்கேற்ற பெருமக்கள் அனைவரையும் பாராட்டி மகிழ்வதோடு, விழாமலரின் மணம் சமயத்துறையிலும், இதர துறைகளிலும் பரவி வீசிச் சிறப்பளிக்க தியாகேசப்பெருமானை வேண்டி வழிபடுகின்றேன்.

S. மகாராஜன்

வி. வாசகப்பெருமாள்
துணை ஆணையர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

மயிலாடுதுறை

நாள்: 14-3-88.

வாழ்த்துச்செய்தி

தஞ்சை வளம் கொழிக்கும் தஞ்சைத் தரணியில், சைவ சமயத்தின் தலைமைப் பீடமாக விளங்கி, தில்லையிலும் சிறப்புமிக்கதாகத் திகழும் ஆரூர் தியாகராஜர் திருக்கோயில், முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பட்டு, அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய சமயக்குரவர்களால் பாடப்பெற்று, தமிழகத்தில் தனிப்பெருமை பெற்று விளங்குவதை அனைவரும் அறிவர். அத்திருக்கோயிலின் முழுத்திருப்பணி, பன்னெடுங் காலத்திற்குப் பின்னர், ஆன்றோர்களின் ஆதரவினாலும், அறநிலையத்துறையின் அரிய முயற்சியாலும் காஞ்சி பரமாச்சாரியாள் போன்ற பெரியார்களின் ஆசியுடனும் பூர்த்தியடைந்து, 4-4-1988 அன்று தியாகராஜப் பெருமானுக்கு வெகு சிறப்புடன் குட முழுக்கு விழா நடைபெறுவதை எண்ணும்போது பெரும் உவகை அடைகிறேன். எல்லாம் வல்ல கமலவசந்த தியாகேசன் திருவருளால், நாட்டுமக்கள் அனைவரும், எல்லா நலனும்பெற்று, வாழ்வாங்கு வாழ இறைவனைவேண்டி, வாழ்த்தி வணங்குகிறேன்.

வி, வாசகப்பெருமாள்

-XXXV-

வே. முனியசாமி, எம். ஏ., பி.எல்.,
துணை ஆணையர்/செயல் அலுவலர்
ஸ்ரீரங்கநாதசுவாமி வகையறு
தேவஸ்தானம்

ஸ்ரீரங்கம்-திருச்சி 620 006.

நாள்: 9-3-88.

வாழ்த்துச் செய்தி

சைவ சமயக்குரவர் நால்வராலும், பட்டினத்தார், அருணகிரியார், சேரமான் பெருமாள், சேக்கிழார் பெருமான் ஆகியோராலும் வழிமுறையாக வரப்பெற்ற சைவத் திருக்கூட்ட மரபினர் அனைவராலும் பாடப்பெற்றுள்ள திருவாரூர் திருக்கோயில் இறைவன் வீற்றிருந்து அருள்பொழியும் புனித சைவத் தலங்களுள் தலையானதாக கருதப்படுகிறது. வைணவத்திற்கு ஓர் திருவரங்கம் போல், சைவ சமயத்தோற்கு திருவாரூர் ஓர் ஒப்பற்ற திருத்தலமாக விளங்குகிறது.

தியாகேசப் பெருமானாலேயே அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று, சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடல் பெற்ற ''திருத்தொண்டத் தொகை'' உயிர்பெற்று அதன் வழியே ''பெரியபுராணம்'' எனும் ஒப்பில்லா காவியம் எழக் காரணமாய் இருந்த திருவாரூர் திருக் கோயிலின் பெருமையினை எடுத்தியம்ப இப்பூவுலகில் வார்த்தைகள் இல்லை.

''கண்ணினால் திருக்கயிலையிலிருந்த நின்கோலம் நண்ணி நான் தொழ நயந்து அருள்புரி''யும் ஆரூரான் திருக்கோயில் குடமுழுக்கு விழா இனிது நிறைவெய்தவும் விழா மலர் செம்மையாக அமையவும் இப்புண்ணிய திருப்பணிக்கும், திருக்குட முழுக்கு விழாவிற்கும் விழா மலருக்கும் சீரிய முயற்சி எடுத்த அனைத்துச் சான்றோர்களுக்கும் அனைத்து நலம் கிடைக்க, எல்லாம் வல்ல தியாகேசப் பெருமானை வணங்கி, எனது வாழ்த்தினை சமர்ப்பிக்கிறேன்.

வே. முனியசாமி,
ஸ்ரீரங்கம்

ஆ. மலையாண்டி, பி. ஏ., பி.எல்.
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்
பழனி

வாழ்த்துச் செய்தி

சைவசமயக் குரவர்களால் பாடப்பெற்ற திருத்தலமாம் திருவாரூரில் திகழும் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் திருக்குடமுழுக்கு நாளது 4—4—88 அன்று நடைபெறவுள்ளது என்ற செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. இப்பெருவிழாவினையொட்டிச் சமய இலக்கியக் கருவூலம் எனப் பாராட்டத்தக்க வகையில் மலர் ஒன்று வெளியிடப் பெறுவதறிந்து பேருவகையடைகிறேன்.

''பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்;
போகமும் திருவும் புணர்ப்பானைப்;
பின்னையென்பிழையைப் பொறுப்பானைப்;
பிழையெலாம் தவிரப் பணிப்பானை;
இன்னதன்மைய னென்றறிய வொண்ணா;
எம்மானை எளிவந்த பிரானை...
அன்னம் வைகும் யற்பழனத்து;
அணியாரூரானை மறக்கலுமாமோ''

என்று தன் நெஞ்சுருகப் பாடுகிறார் சுந்தரர் பெருமான்.

சுந்தரர் வேண்டுகோளை ஏற்றுப் பரவையாரிடம் சிவபெருமானும் தூதுசென்ற நிகழ்வினைச் சேக்கிழார் தமது பெரியபுராணத்தில் குறிக்கும் பொழுது தென்றல் தவழும் தென்திருவாரூரின் ஏற்றத்தை இயம்புகின்றார். சிவபெருமான் திருவடியின் மணம் கமழும் நற்பதியாகத் திருவாரூரைப் புகழ்கின்றார். திருவாரூர்ப் பூங்கோயில் தேவாசிரியப் பெருமன்றில் இருந்த அடியார் கூட்டத்தின் பெருமையை இறைவனால் அறிந்த சுந்தரர் திருத்தொண்டத் தொகையைப் பாடினார்-சைவ சமய அடியார்களின் வரலாற்றைச் காப்பியமாகப் படைத்தளித்த சேக்கிழாருக்கு மூலநூலாக அமைந்தது இத்திருத்தொண்ட தொகையன்றோ? இப்பதியின் பெருமைக்கு எல்லையில்லை புற்றிடங் கொண்டாராக வீற்றிருக்கும் தியாகராஜப் பெருமான் திருவருளால் திருக்குடமுழுக்கு விழாமலர் சிறப்புறுவதாக.

ஆ. மலையாண்டி

—xxxiv

உ
ஓம் சக்தி

K. S. SOMASUNDARAM
B. A., B. L.,
Deputy Commissioner,
H. R & C. E. Admn, Department.

Executive Officer,
Arulthiru Devi Karumariamman Thirukkoil,
Thiruverkadu, MADRAS-600 077.

Date: 10-3-88

வாழ்த்துரை

எந்தையிருப்பது மாரூரவரெம்மையுமாள்வரோ வென்று
சிந்தை செயுந்திறம் வல்லான்றிரு மருவுந்திரபோளன்
மந்தமுழவமியம்பும் வளவயலு வலாரூரன்
சந்தமிசையொடும் வல்லார் தாம்புகழ் எய்துவர்தாமே.

(ஸ்ரீசுந்தரர் தேவாரம்)

திருவாரூர் என்றவுடன் நினைவுக்கு வருவது தியாகராஜர் சன்னதியும் பெரிய தேரும் பஞ்சபூத தலங்களுள் பிருதிவி தலமென்று கருதப்படுவது. இங்கு பிறக்க முக்தி தரும். சப்தவிடங்கத் தலங்களில் முதன்மையானது. சைவ சமய குரவர்கள் மூவராலும் பாடல் பெற்றதாகும். பன்னிரு திருமுறைகளில் பன்னிரெண்டாம் திருமுறை யான சேக்கிழாரின் பெரியபுராணத்தின் மூல நூலான 'திருத்தொண்டத்தொகையை' இறைவனால் அடி எடுத்துக்கொடுத்து 'தில்லை வாழ் அந்தணர்' என்று சுந்தரர் அருளிய சிறப்புமிக்க தலமாகும் நீதியும், நேர்மையும் வழுவாமல் ஆட்சி செய்த மனுநீதிச் சோழன் அரசாண்ட வரலாறு படைத்தபதி மேலும், சங்கீத மும்மூர்த்திகளான–ஸ்ரீதியாகையர், ஸ்ரீமுத்துசாமி தீட்சிதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரி மூவரும் அவதரித்த தல மாகும்.

இப்படி சிறப்புமிக்க வரலாறு படைத்த அருள்மிகு தியாகராஜசுவாமி திருக் கோயிலின் திருப்பணி பன்னெடுங்காலத்திற்குப் பின்னர், முழுமைபெற்று எதிர்வரும் 4-4-88 அன்று திருக்குடமுழுக்குப் பெருவிழா நடைபெறவிருப்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. இதே நாளில் விழா மலர் வெளியிடயிருப்பதும் பாராட்டுக்குரியது.

திருக்குடமுழுக்குப் பெருவிழா சிறப்பாக நடக்கவும், விழா மலர் தெய்வீகத் தன்மையோடும், பக்தி மணம் பரப்பிச் சிறக்கவும், பங்குபெறும் மெய்யன்பர்கள் சகல செல்வங்களும் பெற்று வாழவும் எல்லாம்வல்ல அன்னை கருமாரியை வேண்டி வாழ்த்து கிறேன்.

தி. ஜெயராமன், பி. ஏ., பி. எல்.,
உதவி ஆணையர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை.

நாகப்பட்டினம்.

வாழ்த்துச் செய்தி

சைவ சமயத்தின் தலைமைப் பீடம் திருவாரூர். கோயில்களிலெல்லாம், பெரிய கோயிலாக விளங்குவது திருவாரூர். படைப்புக் கடவுள் பிரம்மனின் உடலுக்கு மூலாதாரமாகவும், நிலமகளின் இதயகமலம் போன்றும் விளங்கி அணி செய்கின்றது. பிறக்க முத்தியளிக்கிறது. சமயக்குரவர் நால்வராலும் பாடப்பெற்றது. பெரியபுராணத்தின் காப்பிய நகரமாய்ச் சேக்கிழாரால் சிறப்புச்செய்யப்பெற்ற சிவராஜதானியான இவ்வூரில் அமைந்துள்ள கமலவசந்த தியாகேசப் பெருமானின் பூங்கோயிலும், கமலாலயம் திருக்குளமும் திருப்பணிகள் முழுமையாகச் செய்து முடிக்கப்பெற்று, குடமுழுக்கு நடைபெற்றது மட்டிலா மகிழ்ச்சியை அளிக்கிறது.

வரலாறு காணாத வகையில் ஏற்றமிகு இந்த குடமுழுக்கு நடைபெற்றது. 85, வேதிகைகளும், 20 யாக குண்டங்களுமாக 6 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான யாகசாலை அமைக்கப்பெற்றிருந்தது 300 சிவாச்சாரியார்கள் பங்கேற்றனர். யாகசாலை பூஜை 12 காலங்கள் நடைபெற்றன. யாகசாலை வழிபாடு நடந்த ஏழு நாட்களும் தினசரி இரவு பகல் இடையறாதுதிருமுறைப் பாராயணம் நடைபெற்றது. திருமுறைக் கருத்தரங்கம் சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள், நாட்டிய நாடகங்கள் நடைபெற்றன. பெரிய கோயில் என்றழைக்கப்படும் இந்தக்கோயிலின் பெயருக்கேற்ப குடமுழுக்கும் மிகப் பெரிய குடமுழுக்காகவே நடைபெற்றது.

இந்த குடமுழுக்கிற்கு முன்னோடியாகவே இத்தனை பெரிய குடமுழுக்கை நடத்த பயிற்சி பெறுவது போன்று, பலகுடமுழுக்குகளை திருப்பணிக்குழுவினரும் அதன் தலைவரும் செயல் அலுவலரும் ஊழியர்களும் கடந்த மூன்றாண்டுகளில் நடத்தி முடித்தனர். அதன் பயனாகவே இந்த குடமுழுக்கினை அனைவரும் பாராட்டும் வகையிலும், கண்டோரும் கேட்டோரும் வியக்கும் வண்ணமும் மிகச் சிறப்பாகச் செய்யமுடிந்ததென்று கருதுகிறேன். கடந்த மூன்றாண்டுகளாக அடிக்கடி இந்த திருக்கோயிலுக்கு வருகை புரிந்தபோதெல்லாம் அது எந்த நேரமாயினும் இரவானாலும் பகலானாலும் ஊழியர்களும் செயல் அலுவலரும் பணியாற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்து மனத்துள் பாராட்டிக் கொள்வேன். அப்படி இடையறாது உழைத்ததன் விளைவே இவ்வளவு பெரிய திருப்பணி இவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவேறியது.

இந்தத் திருப்பணியுடன் சேர்ந்து சிலைகள் பாதுகாப்பு மையமொன்றும் ரூபாய் 13 இலட்சம் செலவில் அரசு மானியத்தைக் கொண்டு கட்டி முடிக்கப்பெற்றுள்ளது. வரலாற்றில் இடம் பெறும் இந்தப் பெரிய நிகழ்ச்சி 130 ஆண்டுகளுக்குப்பின் நான் இந்தச் சரகத்தில் உதவி ஆணையராகப் பணிபுரிந்த காலத்தில் நடைபெற்றதை எண்ணிப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இந்த குடமுழுக்கின் தனி அதிகாரியாகப் பணியாற்றும் பேறு கிடைக்கப்பெற்றதும் என் வாழ்நாளில் மறக்க இயலாத ஒன்று.

இந்தப்பெரும் பூங்கோயிலின் திருப்பணி நிறைவேற உதவிகளை நல்கிய அறநிலயைதுறை ஆணையர் & செயலாளர், ஆணையர், இணை ஆணையர்கள், துணை ஆணையர் ஆகியோருக்கும் இதர பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

திருப்பணிக்குழுத் தலைவருக்குப் பாராட்டு



கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றதைப் பாராட்டி
திருப்பணிக்குழுத் தலைவர் திரு. **சு. தென்கோவன்** அவர்களை
அறநிலையத்துறை ஆணையர்
திரு. **இராசகல்யாணசுந்தரம்**, இ. ஆ. ப. அவர்கள்
பொன்னாடை போர்த்தி பாராட்டுகிறார்.



சு. தென்கோவன்
திருப்பணிக்குழுத் தலைவர்,
திருவாரூர்.

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் முழுமையான திருப்பணி நடந்து குடமுழுக்கும் 4-4-88 அன்று மிகச் சிறப்பாக எந்தக் குறையுமின்றி ஆன்மீகவாதிகள், அரசியல்வாதிகள், ஆன்றோர் சான்றோர் அதிகாரிகள் அத்தனைபேரும் பாராட்டும் வகையில் நடந்தேறியது. மூன்றாண்டு காலத்தில் நான் திருப்பணிக் குழுவினர் ஒத்துழைப்புடன் கோயில் ஊழியர்களின் சலியாத ஒத்துழைப்புடன் இவ்வரிய சாதனையை சாதித்தேன், சாதித்தோம். திருப்பணி ஆரம்பித்த முதல் குடமுழுக்கு 4-4-88 வரை நான் பெற்ற துன்பங்கள் இடையூறுகள் அவச் சொற்கள், அநியாயப் புகார்கள் விமர்சனங்கள் அத்தனையும் என் இதயத்தில் இன்றும் இருக்கிறது. இடையில் பல முறை இந்த இறைபணியை விட்டு விடலாமா என்று யோசித்ததுண்டு ஆனால் அறநிலையத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் எனக்கு இந்தப் டணியை இட்டதாலே முடியவில்லை. அலுத்து, சலித்து அவரிடம் சொன்னேன் இந்த பணியால் நான் பலவாறு விமர்சிக்கப்படுகிறேன். ஏன் இந்த வேலை என்றேன். அதற்கு அவர்கள் இது கிடைத்தற்கரிய பணி. வாழ்க்கையில் மற்றதெல்லாம் நிலைக்காது. இதுமட்டும் என்றும் நிலைக்கும் தளராமல் செயல்படுங்கள் என்றார்கள். அவர்களுடைய அறிவுரையாலே நின்றேன் பணி முடியும் வரை நிலைத்தேன். பணியும் முடித்து பலராலும் பாராட்டும் பெற்றேன்.

இந்த திருப்பணிக்கு சிலர் நேரடியாக சில வேலைகளை செய்தும் சிலர் பொருளுதவி செய்தும் சிலர் உழைப்பை தந்தும் இப்படியாக இந்த வேலை முடிந்தது. முடித்ததற்கு பின்னால்தான் இது எப்படி நம்மாலே முடிந்தது என்று எண்ணி எண்ணி வியந்தேன். இந்த மாபெரும் சக்தி எனக்கேது எல்லாம் தியாகராசனே முடித்துக்கொண்டார் என்பதுதான் உண்மை. எவ்வளவு பேர் இருந்தும் என்னை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டார். அந்த பாக்கியம் பெற்றதை நினைத்து நினைத்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

பல கோயில்களில் திருப்பணி வேலைகள் துரிதமாகவும் குறித்த நேரத்திலும் நடைபெறாமல் தடைபட்டு உள்ளதை நானும் பலரும் கண்டு இருக்கிறோம். அதற்குக் காரணம் திருப்பணிக்குழுவினர்களிடையே ஒற்றுமையில்லாமை. அதிகாரிகளுக்கும், திருப்பணிக் குழுவினர்

களுக்கும் உறவு சரியில்லாமை, இது போன்றவையாகும்.என்னைப் பொருத்த வரையில் கீழேயுள்ள சிப்பந்தியிலிருந்தும் மேலே உள்ள அதிகாரிகள் வரை அவர்கள் குணத்திற்கேற்றவாறு என்னைப் பக்குவப்படுத்தி பணிந்து நடந்ததால் தான் இந்த திருப்பணி செம்மையாக நடந்தது. என்னுடைய பணிவை சிலர் பலவீனமாகக்கூட நினைத்தார்கள். சிலர் விவரம் தெரியாமல் குறைசொன்னார்கள் அன்றாடம் வேலை செய்யும் ஸ்தபதி, தொழிலாளர்கள், இவர்களை கண் காணிக்கும் சிப்பந்திகள், இதற்குமேல் உள்ள நிர்வாக அதிகாரி அவருக்கு மேல் உள்ள துணை ஆணையர் இவர்களுக்கு இடையே அடிக்கடி ஏற்பட்ட மனக்கசப்புகள்,வருத்தங்கள் சர்ச்சைகள் இவைகள் சிலவற்றைக் கண்டும், சிலவற்றைக் கேட்டும் சிலவற்றை பேசித்தீர்த்தும், சிலவற்றைப் பாராமலும் இருந்து பணியை தடைபடாமல் பார்த்துக்கொண்டேன். மாபெரும் வேலை முடித்தாக வேண்டும் என்ற ஒரேநோக்கத்தில் செயல்பட்டேன் தவிர, எனக்கிருந்த வெறுப்பு விருப்பை கொஞ்சம்கூட காட்டவில்லை.

எல்லாம் சிறப்பாக திருப்பணியை பொறுத்தவரையில் முடிந்துவிட்டது குடமுழுக்கு தேதி 4-4-88 நெருங்குகிறது. ஆட்சி இல்லை. ஆணையர் வந்து கோயிலை சுற்றி பார்க்கிறார் குட முழுக்கு குறித்த தேதியில் நடந்துவிடுமா, இன்னும் வேலை பாக்கி இருக்கிறதே என்றார்கள். குறித்த நாளில் அதே நேரத்தில் நடந்துவிடும் என்றேன். பணத்துக்கு என்ன செய்வீர்கள் என்றார்கள். எல்லாம் தியாகேசனை நம்பி தான் இருக்கிறேன் என்றேன். சிரித்துக் கொண்டார்கள். நீங்கள் சமாளித்து கொள்வீர்கள் என்று சொல்லிவிட்டு போய் விட்டார்கள். அந்த நேரத்தில் குடமுழுக்கு கணக்கில் ஒரு பைசா கூட இல்லை. நாளோ இருபது நாள்தான் இருக்கிறது. நிர்வாக அதிகாரி என்னைப் பார்த்து எப்படி சமாளிக்கப் போகிறோமோ என்று கேட்டார். ஒன்றும் கவலை வேண்டாம் எல்லாம் நடக்கும். இருவரும் செயலில் இறங்கினோம். 4-4-88 அன்று பிரமிக்க தக்கவகையில் குடமுழுக்கு நடக்கிறது. இதற்கிடையில் பணத்திற்கு பட்டபாடும் அது வந்து சேர்ந்த அழகும் எழுத ஏடு பத்தாது. மூன்றரை ஆண்டு காலம் இப்பணியில் ஈடுபட்ட எனக்கு சஞ்சலங்களும், சங்கடங்களும் வந்து வந்து மறைந்தது. இக் குடமுழுக்கு மாபெரும் வெற்றி பெற என்னுடைய சகிப்பு தன்மையேதான் காரணம். இக்கோயிலின் தக்காராகவும், திருப்பணிக் குழு தலைவராகவும் பொறுப்பேற்று இருந்தாலும் என் சொந்த கௌரவத்தையோ மரியாதையையோ நான் பொருட்படுத்தியது கிடையாது. விளம்பரம் செய்வதிலிருந்து அழைப்பிதழ் அனுப்புவதிலிருந்து உள்ளே வர அனுமதி சீட்டு வழங்குவதுவரை நான் சிலரிடம் அதிருப்திக்கு உள்ளானேன். அவர்களுக்கு ஒரு உண்மை தெரிந்தால் அதிருப்தி அடைய மாட்டார்கள். என் குடும்பத்தாரே எங்கேயோ நின்றுதான் குடமுழுக்கு தரிசனம் செய்தார்கள். பாஸ் என் குடும்பத்தார்க்கே கிடையாது. இன்றும் எவ்வளவோ என் இதயத்தில் இருக்கிறது. எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு சுமைதாங்கியாக என்னை நான் ஆக்கிக் கொண்டதால்தான் இத் திருப்பணியையும் குடமுழுக்கு சர்ச்சையின்றி, தடையின்றி நடந்தேறியது. இது சிறப்புற நடந்ததற்கு காரணமாக உள்ள திருப்பணிக் குழு உறுப்பினர்கள் பொருளுதவி செய்தவர்கள் உபயமாக கோபுர விமானங்கள் செய்து கொடுத்தவர்கள், இந்து சமய ஆட்சித் துறை செயலர், ஆணையர், இணை ஆணையர்கள் ஆலய ஊழியர்கள், ஆலய நிர்வாக அதிகாரி, திரு. ஸ்ரீதரன் அத்துணைபேருக்கும் என் மனமார்ந்த நன்றியை திருப்பணிக் குழு சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இத் திருப்

பணிக்கு வித்திட்டவரும் கமலாலய வடிகாலை செம்மைப்படுத்த 3.50 இலட்சம் அறநிலையத்துறையிலிருந்து தந்தவருமான முன்னாள் அமைச்சர் இராம. வீரப்பன் அவர்களுக்கு எவ்வளவு நன்றியை சொன்னாலும் தகும். ஆரம்பக் காலத்தில் இருந்தே தேவையான உதவிகளை கூட இருந்து குடமுழுக்கு வரை செய்து தந்த சென்னை அட்வகேட் வி.ஆர். கோபாலன் அவர்களுக்கும், அவரது துணைவியாருக்கும் நான் என்றென்றும் கடமைப்பட்டவனாவேன். மாவட்ட ஆட்சியர் திரு. இராமு அவர்களுடைய முழு ஒத்துழைப்பும் அறிவுரையும் குடமுழுக்கு விழாவை சிறப்புறச் செய்தது. சட்டம் ஒழுங்கு பராமரிப்பை ஏற்ற கீழ தஞ்சை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சேவையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பிரம்மாண்டமான யாகசாலை நிர்மாணத்திற்கும் 12 காலங்களுக்கு தேவையான சாமான்கள் கொடுத்தவர்கள் 360 சிவாச்சாரியார்கள் சம்பாவனை சாப்பாடு முதலியவைகளை ஏற்றுக் கொண்ட மறைந்த உயர்திரு வி.எஸ்.டி. குடும்பத்தார்க்கும் 60 ஓதுவார்கள் சம்பாவனை, சாப்பாடு முதலியவைகளை ஏற்றுக் கொண்ட முத்துப் பழனியப்ப செட்டியார் அவர்களுக்கும் 35 சாஸ்திரிகள் சம்பாவனை முதலியவற்றை ஏற்றுக் கொண்ட ஜெயராமய்யர் அவர்கட்கும் யாகசாலை கோபுரங்கள் மின் அலங்காரம் உபயமாக சிறப்பாக செய்திருந்த அங்கு விலாஸ் புகையிலை கம்பெனி உரிமையாளர் அவர்களுக்கும் என் உளமார நன்றியை செலுத்திக் கொள்கிறேன். அத்தனைக்கும் சிகரம் வைத்தது போல் ஆரூர் மக்கள் அளித்த பேராதரவினை என்றும் மறக்க முடியாது. அவர்களுக்கும் என் நன்றி.

பூத நிருத்தம்

திருவாரூர் திருக்கோவிலில் மத்தளத்தை தலைக்கு மேல் வைத்துக் கொண்டு சுவாமி புறப்பாட்டின் போது வாசிப்பது பூத நிருத்தம் எனக் கூறப்படுகிறது. இது இத்திருக்கோவிலுக்கே உரிய தனி மரபாகும். இதுபோன்றே இத்திருக்கோவிலில் பாரி நாயனம் மட்டுமே இசைக்கப் படுகிறது. தியாகேசப்பெருமானுக்கு 18 வாத்யங்கள் உள்ளன. இவற்றை வாசிப்பவர்கள் சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருந்து வருகிறார்கள். இதைப் போலவே கோவில் பணிகளை செய்வதற்கும், மானந்தியார், விழுப்பிரமர், நாயனார், பரமராயர், பாடுவார், அலறிப்பாடுவார், கட்டியக்காரர், யானை ஏறுவார், பாரசைவர், பதியிலார், முட்டுக்காரர், கிடுகிட்டி, இப்படி பல குடும்பத்தினர் இருந்திருக்கின்றார்கள்; இருந்து வருகிறார்கள்.

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அதிகாரி



ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளாய்

சு. ஸ்ரீதரன், பி. ஏ.,
நிர்வாக அதிகாரி

முன்றாண்டுகளுக்கு முன் முதன் முதல் மேலகோபுரம் சாரம் கட்ட கால் ஊன்றிய நாளிலிருந்து கடந்து வந்த பாதையை எண்ணிப்பார்க்கிறேன். மிகக் கடுமையான பயணம். அத்தனை கோபுரங்களும் விமானங்களும் சாரம் ஒரே நேரத்தில் கட்டியாயிற்று. ஒரே நேரத்தில் தைரியமாக எல்லா வேலைகளையும் நடத்துகிறார்களே நடக்குமா, என்றே பலரும் ஐயுற்றுப் பேசினர். தியாகேசப் பெருமானருளால் அனைத்தும் நலமாக, சிறப்பாக நடந்தேறின. இதனுடன் இக்கோயிலின் உபகோயில்களும் திருப்பணி செய்யப்பட்டன.

அருள்மிகு பிடாரியம்மன் கோயில் குட முழுக்குச் செய்யாமல் பெரியகோயிலுக்கு குடமுழுக்குச் செய்தால் தெய்வக் குற்றமாகி இடைஞ்சல் ஏற்படுமென்று பெரியவர்கள் கூறினர். அதனை ஏற்று அருள்மிகு பிடாரியம்மன் கோயிலுக்கு திருப்பணி செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டபோது, பிடாரியம் கோயில் மதில் சுவர்கள் மண்டபங்கள், விமானம் மிகவும் ஜீரணித்துப் போயிருந்தன. மலைப்பாக இருந்தது. ஆரம்பித்து ஆறே மாதங்களில் அக்கோயிலைச் செப்பனிட்டு முடித்து மிகச்சிறப்பாக குடமுழுக்கும் 12—2—86 அன்று நடந்தேறியது.

திருப்பள்ளி முக்கூடல் கிராமத்தில் உள்ள அருள்மிகு திரிநேத்திர நாத சுவாமி கோயில் மிகப்புராதனமான ஒர் ஆலயம் இத்திருக்கோயிலின் உபகோயிலாக உள்ளது இத்திருக்கோயிலுடன் இணைந்த அபிஷேகக் கட்டளை பராமரிப்பில் உள்ளது. பாடல் பெற்ற சிவன் கோயில்

பள்ளியின் முக்கூடலானைப் பயிலாதே
பாழேநானுழன் வாறே' என நாவுக்கரசரும்
''மொக்கணியருளிய முழுத்தழல் மேனி,
சொக்கதாகக்காட்டிய தொன்மையும்''

என கீர்த்தித்திரு அகவலின் மணிவாசகப் பெருந்தகையும் இக்கோயில் கொண்ட இறைவனைப் போற்றிப் பரவுகின்றனர். இக்கோயிலும் குடமுழுக்கு கண்டு நூறாண்டுகளுக்கு மேலாகியிருந்தது. அப்போதைய அறநிலையத்துறை ஆணையர் திருமிகு கு. ஆளுடையபிள்ளை, இ.ஆ.ப. அவர்கள் திருவாரூரில் முகாமிட்டிருந்த அன்று இக்கோயிலுக்கு வருகை தந்த அப்போதைய துணை ஆணையர், திருமிகு நா. சீனிவாசன், பி.ஏ.பி.எல். அவர்கள், உடனடியாக இக்கோயிலைத் திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்துமாறு பணித்தார்கள். மதீப்பிடுகளும் அங்கீகரித்தார்கள். திருவாரூரிலிருந்து 6 கீ.மீ. தொலைவிலுள்ள இவ்வூருக்கு போக சரியான போக்குவரத்து வசதியில்லை.

திருப்பணிக்கான பொருள்களையும் கொண்டு சேர்க்கவும், தினசரி காலையும் மாலையும் சைக்கிளில் சென்று வரவும் ஆரூரனே அருள்புரிந்தான். திருப்பெருந்திரு தருமையாதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் மற்றும் அஜபா நடேஸ்வர பண்டார சந்நிதி ஆகியோர் முன்னிலையில் 2—6 86 அன்று குடமுழுக்கு சிறப்பாக நடந்து முடிந்தது.

திருவாரூர்ப் பூங்கோயில் தெற்கு சந்நிதியில் பரவையார் திருமாளிகை எனப் படும், சுந்தரர் வாழ்ந்த இல்லம் சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலாக இருந்தது. கோயிலெங்கே, நடுவில் நாயனாருறையும் கருவறை தவிர இதர இடங்களெல்லாம் ஒரே இடிபாடுதான். முன் எப்போது திருப்பணி நடந்து குடமுழுக்கு நடத்தப்பெற்றது என்பதே தெரியவில்லை. நிச்சயமாகக் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகளாக இல்லை. நம்பியாரூரரின் அருள்வாழ்க்கையின் மிகச்சிறந்த பகுதியைக் கழித்த இடம், இவ்வாறு இடிபாடாய்க் கிடப்பது பற்றிப் பெருங்குறையாகப் பலர் முறையிட, திருப்பணிக் குழுவினர் பெரியகோவிலின் உபகோயிலான இத்திருக்கோயிலையும் திருப்பணி செய்வ தென்று தீர்மானித்தபடியே இக்கோயிலும் அனைவரும் பாராட்டும்வண்ணம் திருப்பணி, செய்யப்பட்டு 8—2–87 அன்று அப்போதைய அறநிலையத்துறைச் செயலர் திருமிகு சுகவனேஸ்வர், இ. ஆ ப. அவர்கள் பொறுப்பு ஆணையர் திருமிகு ரா. பார்த்தசராதி M L. அவர்கள் புதுவை வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு. வி. கோவிந்த ராசன் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமை, பனசை, வேளாக்குறிச்சி ஆதீனங்கள் அருளாசிவழங்க, ஏழு ஜோடி மணமக்களுக்கு இலவசத் திருமணத்துடன் மிகச்சிறப்பாக நடந்தேறியது.

இதன் பின்னர் முசுக்குளம் சக்திமாரியம்மன் கோயில் என்கிற உபகோயில் குடமுழுக்கு நடைபெற்றது. பெரியகோயில் குடமுழுக்கிற்குப் பின்னரும் காகிதக்காரத் தெரு அருள்மிகு விசுவநாதசுவாமி கோயில் குடமுழுக்கு 1—5—88 அன்று நடைபெற்றது எல்லா வேலைகளும் முடியும் தருவாயை நெருங்குகையில் குடமுழுக்கு நாள் 4—4—88 என்று நிர்ணயிக்கப்பட்டது. இன்னும் மூன்று மாதங்களே உள்ளன குடமுழுக்கிற்கு ரூ 10 லட்சம் பணம் தேவைப்படும், முடியுமா என்று மலைத்தோம். எல்லாவற்றையும் தியாகேசப் பெருமானிடம் ஒப்புவித்துவிட்டு, வேலைகளை இரவுபகலாகப் பார்த்தோம்

யாகசாலைக்கு எல்லா மூர்த்திகளையும் உள்ளடக்கி ஒரே இடத்தில் நடை பெறும் வகையில் வடக்கு மூன்றாம் பிரகாரத்தில் தான் இடம் இருந்தது. அங்குதான் அமரர் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது முதல் உலகத்தமிழ் மாநாடு நடைபெற்றது அந்த இடத்தில் 500அடி நீளம், 75 அடி அகலம் கொண்ட ஒரே கொட்டகை போடவும். அனைத்து மூர்த்திகளுக்கும் ஏற்ற வகையில் வேதிகைகளும் யாக குண்டங்களும் அமைக்கவும் வரைப்படம் மூன்று நாட்கள் திரும்பத் திரும்ப அந்த இடத்தை அளந்து இரவு பகலாக அமர்ந்து நானே தயாரித்தேன். சர்வசாதகம் முதலிய சிவாச்சாரியார்கள் பார்த்து வியந்து பாராட்டினர். மாவட்ட ஆட்சியார் திருமிகு மா. இராமு, இ ஆ ப. மாவட்ட அதிகாரிகளைக் கூட்டிச் சிறந்த முறையில் திட்டமிட்டு அறிவுரைகள் வழங்கினார் முழுஒத்துழைப்பும் அனைத்து அதிகாரிகளும் நல்கினர். யாகசாலை அமைக்கப்பட்டது. ஆணையர் திருமிகு தி. இராச. கல்யாணசுந்தரம் இ ஆ.ப. அவர்கள் வருகைதந்து ஏற்பாடுகளைப் பார்வையிட்டார்கள் மீதியிருந்த வேலைகளை முடிக்கவும், யாகசாலை கொட்டகை பற்றியும் அறிவுரைகள் வழங்கினார் கள். எவ்வளவு விரைவாகவும் அதே நேரத்தில் அவ்வளவு சிறப்பாகவும் முடிவெடுத்து எவ்வளவு சுறுசுறுப்பாகச் செயலாற்றுகிறார்கள் என்று வியந்தேன் மகிழ்ந்தேன்.

இலக்கிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வதில்தான் எவ்வளவு குழப்பங்கள்! நிகழ்ச்சிகளும், தேதிகளும், நபர்களும் கடைசிவரை மாறிக்கொண்டே யிருந்தன. தந்திகளும், தபால்களும் வந்துகொண்டே இருந்தன. இறுதி வடிவம் கொடுத்து அழைப்பிதழ்கள் அச்சேறின. சுமார் 150 பேச்சாளர்களும்; கலைஞர்களும் கலந்து கொண்டனர். அழைப்பிதழுடன் காஞ்சி முனிவரைப் பார்த்தபோது அழைப்பிதழின் வடிவம், வாசகம் பற்றி மிகவும் பாராட்டினார்கள்; ஆசிகள் வழங்கினார்கள்.

யாக சாலை தொடங்கியது. மருந்து இடித்து அனைத்து மூர்த்திகளுக்கும், சாற்றும் பணியும் தொடங்கியது. ஒரு வாரம் இரவுபகாலக இந்தப் பணி நடை பெற்றது. நகைகள் சரிபார்க்கும் அலுவலர் திரு. சண்முகம் அவர்களும் அவருடைய அலுவலகத்தினரும் மிகவும் ஒத்துழைத்தனர்.

திருமுறைக் கருத்தரங்கைத் தொடங்கி வைத்த தருமையாதீனம் குருமகா சந்நிதானம் அவர்கள் தேவேந்திரனும், முசுகுந்தச் சக்ரவர்த்தியும் எப்படி வழிபட்டிருப்பார்களென இந்த யாகசாலையைப் பார்த்து அறிந்துகொள்வதாகக் கூறினார்கள். அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் இந்தத் திருப்பணிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கியவர்கள். அவர்களின் பொன்னார் திருவடிக்கமலங்களைப் பற்றிப் போற்றி வணங்குகிறேன்.

திருப்பணிக் குழுப் புரவலர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் தமது விரிவுரையில், தாம் இதுவரை செய்த நூற்றுக்கணக்கான குடமுழுக்குகள் அனைத்தையும் சேர்த்தாலும் இந்த குடமுழுக்கிற்கு ஈடாகாது, என்று கூறி மகிழ்ந்தார்கள். அவர்களின் பாதகமலங்களையும் வணங்குகின்றேன்.

இந்தத் திருக்கோயிலின் திருப்பணி தொடக்க காலத்தில் ஆணையராக இருந்து, குடமுழுக்கின்போது இத் துறையின் அரசுச் செயலர் அவர்களாக இருக்கும் திருமிகு ஆளுடையபிள்ளை இ. ஆ. ப. அவர்கள், திருப்பணி தொடங்கியபோது மதிப்பீடுகள் அங்கீகாரம் செய்தார்கள். வேலைகளும் விரைவில் முடிவடைந்தன, அவர்களைப் போற்றி வணங்குகிறேன். அதன் பின்னர் அரசுச் செயலராக வந்த திருமிகு சுகவனேஷ்வர் இ. ஆ. ப. அவர்கள், இத் திருக்கோயிலின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர்கள். பலமுறை கோயிலுக்கு வருகை தந்து வேலைகளைப் பார்வையிட்டு அறிவுரைகளும் உத்தரவுகளும் வழங்கினார்கள். அவர்களையும் போற்றி வணங்கு கிறேன். ஆணையர் திருமிகு தி. இராச. கல்யாணசுந்தரம் அவர்களின் பேருதவி, அறிவுரைகள் உத்தரவுகள் ஆகியவற்றால்தான் அனைத்தும் வெற்றிகரமாக நிறை வேறின என்றால் மிகையாகாது. அவர்களையும் போற்றி வணங்குகிறேன், குடமுழுக்கிற்கு ஒருவாரம் முன்பாக இங்கு முகாமிட்டு, அனைத்துப் பணிகளையும் நேரடிக் கண்காணிப்பில், செய்து முடித்துத் தந்த இணை ஆணையர் திருமிகு ம. சூரியராஜ் பி. ஏ. பி. எல் அவர்கள், இணை ஆணையர் திருமிகு இரா. தண்டபாணி பி. எஸ்சி. பி. எல். அவர்கள், துணை ஆணையர் திருமிகு. கே. என். அழகப்பன் பி. எஸ்சி. பி டி. பி. எல். அவர்கள் உதவி ஆணையர் திருமிகு தி. ஜெயராமன் பி. ஏ. பி. எல். அவர்கள் தக்கார் உதவி ஆணையர் திருமிகு ஏ. ஜெயராமன் பி. ஏ. அவர்கள் அனைவரையும் போற்றி வணங்கி மகிழ்கின்றேன்.

மூன்றாண்டுகளாக என்னோடு தோளோடு தோள்நின்று, இவர் இன்னவேலை என்று கணக்கின்றி, அனைவரும் அனைத்துப் பணிகளிலும் கலந்து உழைத்தத் திருக்கோயில் ஊழியர்கள் அனைவருமே வணங்கத்தக்கவர்கள். திருப்பணிக்குழுத் தலைவர், திருமிகு சு. தென்கோவன் அவர்களால் தான் இந்தத் திருப்பணி வேலைகளும், குடமுழுக்கும் செம்மையாக நடைபெற்றது என்றால் மிகையாகாது. அவர்களையும் வணங்குவதில் மகிழ்வடைகிறேன்.

ஆரூர் பொதுமக்கள் அனைவருமே புண்ணிய சீலர்கள். கேட்டபோதெல்லாம் கேட்டதையெல்லாம் கொடுத்தார்கள்; தயங்காமல் கொடுத்தார்கள்: மகிழ்ந்து முக மலர்ச்சியுடன் கொடுத்தார்கள். அவர்கள் ஒத்துழைப்பினாலும் வேலைகள் விரைவில் முடிவடைந்தன. அதனால் தானே, அந்நாளிலேயே சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஆரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று போற்றினார்.

இறுதியாக மிகச் சிறியவனாகிய என்னையும், தனது எல்லையில்லாத கருணையினால், எப்படி, எக் காலத்தில் இந்த வேலை நடக்கவேண்டுமென்று முன்பே வகுத்திருந்தாரோ அப்படியே நடத்திக்கொள்ளும் வேளையில், அதற்கு ஓர் கருவியாகப் பயன்படுத்திக்கொண்ட, தியாகேசன் திருவடிகளை வீழ்ந்து வணங்குகிறேன்.



சிலைகள் பாதுகாப்பு மைய கட்டிடத் திறப்பு விழாவில் அப்போதைய அறநிலையத் துறை ஆணையர் க. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப. அவர்கள், செயலாளர் திரு. சுகவனேஸ்வர், இ.ஆ.ப. அவர்கள், அப்போதைய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு ஆர். எம். வீரப்பன் அவர்கள், திருப்பணிக் குழுத் தலைவர் திரு. சு. தென்கோவன் அவர்கள், நிர்வாக அதிகாரி திரு. சு. ஸ்ரீதரன் அவர்கள்.

உலோகத்திருமேனிகள் பாதுகாப்பு மையம்

சு. தென்கோவன், திருப்பணிக்குழுத் தலைவர்.

தமிழ்நாடு அரசு, நமது கோயில்களின் உலோகச் சிலைகள் களவு போவதைத் தடுக்க சிலைகள் பாதுகாப்பு மையம் ஒன்று அமைக்க விரும்பியபோது, நான் அதனை திருவாரூரில் வைக்க வற்புறுத்தினேன். பாமினி சுல்தான்கள் படையெடுப்பின்போது சிதம்பரம் நடராஜர் திருமேனியும் வேறொரு சமயம் காஞ்சி காமாட்சி அம்மன் திருமேனியும் திருவாரூரில்தான் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று கருத்துக் கூறிய அன்றைய அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் என் கோரிக்கையை ஏற்று மையத்தை திருவாரூரில் வைக்க ஆணையிட்டார்கள்.

இம்மையத்தின் சுவர்கள், தளம், மேற்கூரை அனைத்தும் கான்கிரீட்டாலானவை. 24 மணி நேரமும் காவல் உண்டு. தஞ்சை மாவட்டத்தில் உள்ள பாதுகாப்பற்ற மற்றும் பூஜையிலில்லாத உலோகத் திருமேனிகள் இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திருவாரூர்த் தலச் செய்திகள்

டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர்

திருவாருரென்பது சோழ நாட்டுத் தேவாரம் பெற்ற சிவஸ்தலங்களில் ஒன்று; காவிரியின் தென்பாலுள்ளது. இதற்குரிய தேவாரப் பதிகங்கள்: 34 (திருஞா. பதிகம், 5 திருநா. 22; சுந்தர. 8) திருவாசகம் முதலிய பலவற்றிலும் இத் தலம் மிகவும் பாராட்டப்பெற்றுள்ளது.

பதினோராந் திருமுறையில் உள்ள சேரமான்பெருமாள் நாயனார் இயற்றிய திருவாரூர் மும்மணிக்கோவையும், பெரிய புராணத்திலுள்ள திருவாரூர்ச் சிறப்பும் இத்தலப் பெருமையை நன்கு விளக்கும்.

திருவாரூர் அரநெறி, பரவையண் மண்டளியென்பனவாகிய பாடல் பெற்ற வேறு இரண்டு ஸ்தலங்கள் இதனிடத்தே உள்ளன.

இத்தல சம்பந்தமாக உள்ள பிற தமிழ் நூல்கள் வருமாறு:-

1. கமலாலயச் சிறப்பு: இது வட மொழியிலுள்ள கமலாலய மஹாத்மிய மென்பதன் மொழிபெயர்ப்பு; சிதம்பரம் ஸ்ரீ மறைஞான சம்பந்தரென்பவரால் கி.பி. 1547-ஆம் வரு. (சக வரு கருகச) இயற்றப்பெற்றது;

2. திருவாரூர்ப் புராணம்: நிரம்ப வழகிய தேசிகருடைய மாணாக்கராகிய அளகைச்சம்பந்தரென்பவரால் நாகர கண்டமென்னும் வடமொழி நூலின் மொழி பெயர்ப்பாகச் செய்யப்பெற்றது; இந்நூல் கி பி. 1592–ஆம் வரு (சக வரு கருகசு) அரங்கேற்றப் பெற்றது;

3, தேரூர்ந்தசோழ புராணம்: மனு நீதிச் சோழன் தன் மகனைத் தேர்க்காலி லிட்டு ஊர்ந்த வரலாற்றைக் கூறுவது;

4. தியாகராச லீலை: திரிசிரபுரம் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களால் கி.பி. 1845-ஆம் வரு. இயற்றப்பெற்றது; தியாகராசப் பெருமான் இயற்றிய 360 லீலைகளுள் முதல் 13 லீலைகளையும் 14-வது லீலை யின் முற்பகுதியையும் உடையது;

5. திருவாரூர் நான்மணிமாலை: ஸ்ரீ குமரகுருபர ஸ்வாமிகள் இயற்றியது;

6. தியாகராசர் பள்ளு: 16-ஆம் நூற்றாண்டில் கமலை ஞானப் பிரகாசர் இயற்றியது;

7. தியாகராசர் குறவஞ்சி: பதினே ழாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது.

8. திருவாரூர்ப் பன்மணிமாலை: இலக்கண விளக்கம் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் பாடியது;

9. திருவாரூர் ஒருதுறைக்கோவை: வெறிவிலக்கென்னும் துறையில் அமைந்த நானூறு செய்யுட்களையுடை யது; கீழ்வேளூர்க் குருசாமி தேசிகரென் பவர் இயற்றியது.

10. கமலாம்பிகை பிள்ளைத் தமிழ்;

11. திருவாரூர் மாலை;

12. கமலாம்பிகை மாலை;

13. தியாகராசர் கழிநெடில்;

14. தியாக வசந்தக் கலிப்பா;

15. திருவாரூர் உலா; அந்தகக்கவி வீரராகவ முதலியார் இயற்றியது.

இவற்றையன்றிப் பல தனிப்பாடல்களும் வடமொழி தென்மொழிக் கீர்த்தனங் களும் உண்டு.

வடமொழியில் இத்தல வரலாறுரைக் கும் நூல்கள்:

1) அஜபா ரஹஸ்யம்,
2) ஆடகேச்வர மஹாத்மியம்,
3) கமலாலய மஹாத்மியம்
4) நாகர கண்டம்,
5) தியாகராஜ லீலை,
6) சமத்காரபுர மஹாத்மியம்,
7) தியாகராஜ மஹாத்மியம்,
8) தேவயாகபுர மஹாத்மியம்,
9) தேவாச்ரய மஹாத்மியம்,
10) முசுகுந்தபுர மாஹாத்மியம்,
11) ராமகயா மஹாத்மியம்,
12) ஸ்ரீ புர மஹாத்மியம்,
13) ஸ்கந்தபுர மஹாத்மியம்,
14) சேஷத்திரவர மஹாத்மியம் என்பன

இத்தலத்துக்குரிய ஆகமம் காமிகம்.

விராட்புருஷனுடைய மூலாதாரமென வும், பூமிதேவியின் இதய கமலமென வும் பஞ்ச பூதத் தலங்களுள் பிருதிவித் தலமெனவும், தேவர்கள் கறையான் வடிவு கொண்டியற்றிய புற்றை இட மாகக் கொண்டு இறைவன் சிவலிங்கப் பெருமானாக எழுந்தருளினமையின் வன் மீகபுரமெனவும், தன்பாற் பிறந்தவர் களுக்கு முத்தி கொடுத்தலால் பிறக்க முத்தி தருவதெனவும், தன்னிடமுள்ள உயிர்களெல்லாம் சிவகணங்களாதலின் ஸ்பரிச தோஷம் முதலியன இல்லாத தெனவும், நன்றிகொன்ற பாவத்தையும் தீர்க்கும் பெருமை வாய்ந்ததெனவும், ஸ்ரீகாசிக்கும் தில்லைக்கும் மேலானதென வும், 1 ஸப்த விடங்கத் தலங்களுள் முதலாவதெனவும், அம்பிகை தவஞ் செய்தமையின் பராசக்தித் தலமெனவும், திருமகள் வழிபட்டுப் பேறு பெற்றமை யால் கமலாலயம் ஸ்ரீபுரம் எனவும், வீதி விடங்கராகிய தியாகேசர் எழுந்தருளி யிருத்தலின் வீதி விடங்கமெனவும் இத் தலம் கூறப்படும்.

சோழ அரசர்கள் முடிகவித்தற் குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாக இருந்ததன்றி அவர்களுடைய இராச தானியாக உள்ளதும், சங்கர சேவக னென்னும் சோழ மன்னனது வேண்டு கோளின்படி ஸ்ரீ தியாகேசர் அரச வடி வந்தாங்கிப் பல வருடங்கள் அரசாட்சி செய்ததும், மனுநீதிச் சோழர் ஒரு பசுவின் குறையைத் தீர்த்தற்பொருட்டுத் தம் செல்வப் புதல்வன்மீது தேரைச் செலுத் தித் திருவருளை வெளிப்படுத்தியது ஸ்ரீ தியாகேசர் 'பாதம் சிவக்கப் பசுந்தமிழ் வேண்டிப் பரவைதன்பால் தூதன்று' சென்றது, ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையை அருளிச் செய்தது ஆகிய நிகழ்ச்சிகளுக்கு இடமாக உள்ளதும் இத்தலமே.

கழற்சிங்க நாயனார், செருந்துணை நாயனார், சோமாசிமாறர், தண்டியடிகள் நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமநந்தியடிகள், விறன்மிண்ட நாயனா ரென்பவர்கள் இங்கே வழிபட்டுப் பேறு பெற்றனர்.

ஸ்தலவிநாயகர்:- வாதாவி விநாயகர், மாற்றுரைத்த விநாயகர் முதலியோர்.

ஸ்வாமியின் திருநாமங்கள்: புற்றி டம்கொண்டார்; வன்மீகநாதர் முதலின.

அம்பிகைகள் இருவர்:-

1) கமலாம்பிகை,
2) அல்லியங்கோதை,

ஸ்தலத்தின் மற்றைத் திருநாமங்கள்:- ஆடகேச்வரம், கவிசெலாநகரம், சத்திபுரம், சமற்காரபுரம், தேவயாகபுரம், தேவாசிரயம், முசுகுந்தபுரம், மூலாதார நகரம், ஸ்ரீ நகரம், ஸ்கந்தபுரம் முதலியன.

தீர்த்தங்கள்:- உருத்திர கோடி, கயை, சங்கதீர்த்தம், சர்வதீர்த்தம், சூரிய புட்கரிணி, தேவதீர்த்தம், வாயு தீர்த்தம், விசுவாமித்திர தீர்த்தம் முதலியன. இவற்றுள் தேவதீர்த்தமென்பது கமலாலய மென்றும் கூறப்படும். இதன் நாற்புறத்தும் கூசு-கட்டங்கள் உள்ளன. பண்டைக் காலத்தில் இதில் ஒரு யாகம் நடந்தபொழுது நடுவநாயனாரென்னும் சிவலிங்கப் பெருமான் பரிவாரங்களுடன் இதன் இடையே பிரதிஷ்டிக்கப் பெற்றாரென்று திருவாரூர் மாலையால் தெரிகின்றது.

வழிபட்டுப் பேறு பெற்றோர்:- அகத்தியர், அசன், அரிச்சந்திரன், இடையனொருவன், இந்திரன், இராமன், கருணாகரத் தொண்டைமான், குலிச ராசன், கேமசருமன், கோகரணர், கோடி முனிவர், சங்க முனிவர், சண்டதருமன், சமற்காரவரசன், சனகாதிநால்வர், சித்த ரொருவர், சித்தீசனென்னுமரசன், தசரதர், தசார்ணவதேசத்தரசன், திரிசங்கு, திருடனொருவன், திருமகள், திருமால், துருவாசர், நளன், பசுவொன்று, பட்டின சாமி என்னும் வணிகன், பதஞ்சலி, பிரமர், மனுநீதிச் சோழர், முசுகுந்த சக்கரவர்த்தி, முன்றரைக்கோடி புண்ணிய தீர்த்தங்கள், மன்மதன், மேனகை, வாணாசுரன் விசுவாமித்திர முனிவரென்பவர்கள்.

ஸ்ரீ வன்மீகநாதர் எழுந்தருளியிருக்கும் கர்ப்பக்கிருகம் திருமூலட்டானமென்றும் பூங்கோயிலென்றும் கூறப்படும்.

ஸ்ரீ தியாகராசர்:- இவர் முதலில் திருப்பாற்கடலில் திருமாலால் வழிபடப் பெற்றுப் பின்பு அவரால் இந்திரனுக்கும் பின்பு அவனால் முசுகுந்த சக்கரவர்த்திக்கும் அளிக்கப்பெற்று அப்பால் அவ்வரசனால் இத்தலத்திற்கு எழுந்தருளியவர், இவர் அராக்கச்சையையும், ஆடரவக் கிண்கிணிக்காலையும், தியாகவிநோத மென்னும் பரிவட்டத்தையும் உடைவாளையும் உதர பந்தனத்தையும், வீர கண்டயமென்னும் வாளையும் தலைச் சீராவையும் உடையவர். மேற்கூறிய பரிவட்டம் ஐந்து கோடுகளையுடைய தாய்த் தியாகவன்னமெனவும் இக்காலத்தில் வழங்கும்.

இவருடைய திருநாமங்கள்:- அசைந்தாடிய பெருமான், அடிக்காயிரம் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியும் ஆடுவார், அருமைப் பெருமாள், இரத்தின சிங்காதனாதிபதி, இருந்தாடழகர், கம்பிக் காதழகர், கருணாகரத் தொண்டைமான், சனகத்தியாகேசர், கிண்கிணிக் காலழகர், செங்கழுநீர்த்தாமர், செம்பொற் சிங்கா தனாதிபதி, செல்வந்தத்தித் தோட்டழகர், தியாக சிந்தாமணி, தியாகப் பெருமான், திருவந்திக் காப்பழகர், மணித்தண்டிலசைந்தாடிய பெருமான், முன்னினும் பின்னழகர், வள்ளல், வீதிவிடங்கப் பெருமானென்பனவும் இவற்றின் பரியாயப் பெயர்களுமாம்.

திருவிழா:- மாதந்தோறும் இதில் நடைபெறுமாயினும் மார்கழி மாதத்திலும் பங்குனி மாதத்திலும் நடைபெறும் திருவிழாக்களே மிக்க விசேடமுடையன; ''முத்து விதானம்'' என்னும் தேவாரப் பதிகத்தால் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின் பெருமை நன்கு புலப்படும்.

பாத தரிசனம்:- மார்கழித் திருவாதிரையும் பங்குனியுத்தரமும் ஸ்ரீ தியாகேசருடைய பாத தரிசனத்திற்குரிய விசேட காலங்கள்.

நடனம்:- ஹம்ஸ நடனம், அஜபா நடனம் நாதாந்த நடனம், புயங்க நட

னம் என்று இவர் நடனம் பாராட்டப் பெறும்.

தேவ சபை:- இது தியாகேசர் எழுந்தருளியிருக்குமிடம்.

திருச்சாலகம்:- இது தென்றல் தவழ்ந்து வருவதற்கு ஸ்ரீ தியாகேசருக்கு நேரே தென்பாற் சுவரில் அமைக்கப் பெற்றுள்ள கற்பல்கணி.

வாத்தியங்கள்:- சுத்த மத்தளம், பனாசவாத்தியங்கள், பஞ்சானை முரசு முதலியன.

மாணிக்கத்தண்டு:- இஃது இவரை எழுந்தருளிப் பண்ணும் பிள்ளைத் தண்டு அல்லது திருவாடுதண்டிற்கு உரிய பெயராக அமைந்துள்ளது.

பச்சைக்கருப்பூரம்:- மற்றைத் தலங்களில் ஸ்வாமி திருத்தேருக்கு எழுந்தருளும் தினத்தின் முதல்நாளில் கிருஷ்ண கந்தம் சாத்தப்படுவதுபோல் இவருக்கு அத்தினத்திற் பச்சைக் கருப்பூரம் சாத்துதல் மரபு.

தியாகக் கொடி:- இவருடைய துவசம் இப்பெயரால் வழங்கும்.

ஆழித்தேர்:- இஃது இவருடைய திருத்தேரின் திருநாமம்; ''ஆழித்தேர் வித்தகனை யான்கண்ட தாரூரே'' என்பது தேவாரம்.

இடபதேவர்:- இவர் தியாகேசருடைய சந்நிதியிலுள்ள திருநந்தி தேவர். நின்ற திருக்கோலமாகவே உள்ளார்.

திருவந்திக்காப்பு:- இவருடைய ஆராதனைக் காலங்களுள் திருவந்திக்காப்பு மிக்க விசேடமுடைய தென்பர்.

தேவாசிரயம்:- தரிசனத்திற்கு வரும் தேவர்கள் முதலியோர் சமயம் பார்த்துக் கொண்டு தங்கியிருத்தற்கு, முன்பு இடமாக இருந்ததென்றும், அந்த இடத்தில் இப்பொழுது ஆயிரக்கால் மண்டபமுள்ள தென்றும் சொல்லுவர்.

திருவீதிகள்:- (க) அடிமுடி தேடிய திருவீதி, (உ) செந்தாமரை நாறிய திருவீதி. (ந) பொன்பரப்பிய திருவீதி, (ச) புகழா பரணத் திருவீதி என்று சில திருவீதிகளின் பெயர்கள் இத்தலத்தில் வழங்கும்.

ஐந்துவேலி:- இத்தலத்திற் கோயில், குளம், செங்கழு நீரோடை என்பவற்றுள் ஒவ்வொன்றும் ஐயைந்து வேலியாக உள்ளதென்பர்.

இத்தலத்திற் பல பெரிய வடமொழி தென்மொழி வித்துவான்களும், சைவ சமயநூல் வல்லவர்களும், சைவப் பெரியார்களும், சங்கீத வித்துவான்களும், தொண்டர்களும் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தனர். இதில் அவதரித்த பல பெரியார்கள் தமிழ், வடமொழி, சங்கீதம், சமயம் முதலிய துறைகளில் தம்முடைய அறிவுத்திறனை வெளியிட்டிருக்கிறார்கள்

திருவாரூர் சிறப்பு

யாழ்ப்பாணத்து நல்லூர். தவத்திரு. ஆறுமுக நாவலர்

தக்ஷிண தேசமாகிய தமிழ்நாடு, சிதம்பரம் காஞ்சீபுரம் முதலிய எண்ணில்லாத சிவதலங்களை உடைமையால், மற்றை எத்தேசங்களினுஞ் சிறப்புற்றது. அதனுள்ளும் சோழமண்டலம் மிகச் சிறப்புற்றது. அது அகத்திய மகாமுனிவருடைய கமண்டலத்தை விநாயகக் கடவுள் காகவடிவாய்ச் சென்று கவிழ்ப்ப, அதனாலே பொழியப்பட்டுச் சையகிரியினின்றுந் தோன்றிப் பெருகுந் திவ்விய தீர்த்தமாகிய காவேரிநதியை யுடையது.

அச்சோழ மண்டலத்திலே சூரிய குலத்தவர்களாகிய சோழ ராஜாக்களுக்குரிய இராசதானிகள் ஐந்துனுள் ஒன்றாகியும், காவற் கடவுளாகிய விட்டுணுவினுடைய மனைவியாகிய இலக்குமியினாலேயே பூசிக்கப்பட்டதாகியும், பிரமாவின் சரீரமாகிய பிரமாண்டத்துக்கு மூலாதார ஸ்தலமாகியும் உள்ளது திருவாரூர். அத்திருவாரூரின் கண் இருந்து அரசியற்றிய சோழ ராஜாக்களுள்ளே மனுநீதி கண்ட சோழரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் உயிர்களுக்கெல்லாம் கண்ணும் உயிரும் போன்றவர். வன்மீகநாதராகிய சிவபெருமானுக்கு நிபந்தம் அமைத்து, பூசை முதலியவைகளைச் சிவாகம விதிப்படி வழுவாது சிரத்தையோடு நடத்துவிப்பவர்.

அவர் செங்கோனடாத்தி அரசியற்று நாளிலே, அவர் செய்த சிவபுண்ணிய மிகுதியினாலே அவருக்கு ஒரு புத்திரன் அவதரித்தான். அவன் பலகலைகளையுங் கசடறக்கற்று வல்லவனாகி, அறிவொழுக்கங்களிற் சிறந்து, இளவரசாதற்குத் தக்க பருவத்தை யுடையவனாய் வாழுநாளிலே ஒருநாள் இராசமாளிகையினின்றும் புறப்பட்டு, இராசகுமாரர்களுஞ் சேனைகளுஞ் சூழத் தேரிலேறி வீதியிற் சென்றான். செல்லும்பொழுது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக்கொண்டுபோய், அத்தேர்க்காலினடியில் அகப்பட்டிறந்தது. அது கண்ட தாய்ப்பசுச் சுழன்று ஓடிவந்து, அலறிச்சோர்ந்து நடுங்கி விழுந்தது. சோழபுத்திரன் அதுகண்டு 'அபாயம் வந்ததே. என்று தடுமாறி, மனத்துயரங் கொண்டு, அறிவழிந்து, தேரினின்றும் வீழ்ந்தான். அலறுகின்ற தாய்ப்பசுவைப் பார்த்து உயிர் பதைத்துச் சோர்வான்; இறந்துகிடக்கின்ற கன்றைப்பார்த்து பெருமூச்செறிந்து இரங்குவான்; "நானொருவன் பிறந்தது என்னுடைய தந்தையாருக்கு இப்பழி வந்தெய்துதற்கோ" என்பான். "எனக்கு அபுத்திபூர்வமாக வந்த இப் பாவத்திற்குப் பிராயச்சித்தம் உளதாயின் என்னுடைய தந்தையார் அறியுமுன்னமே பிராமணர் விதிக்கும்பிரகாரஞ் செய்துகொள்ளவேண்டும்" என்று சிந்தித்துப் பிராமண ரிடத்தே சென்றான்.

தன் கன்றையிழந்த பசு அத்துயரத்தைச் சகிக்கமாட்டாது பெருமூச்செறிந்து, கண்ணீர்வாரச் சென்று, இராசமாளிகை வாயிலிற்கட்டிய ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் அடித்தது அதுகேட்ட மனுநீதிகண்ட சோழர் சிங்காசனத்தினின்றும் இறங்கி, விரைந்துபோந்து, வாயிலையடைய, வாயிற் காவலாளர்கள் எதிர்வர்து வணங்கி, "மகாராஜாவே, இங்கே ஒருபசு வந்துஆராய்ச்சிமணியைத் தன் கொம்பினால் அடித்தது" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். மனுநீதி

கண்ட சோழர் அதுகேட்டு வருத்தமுறு கின்ற பசுவைப் பார்த்து, இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்தது'' என்று மந்திரி களைக் கோபித்துப்பார்க்க, அம்மந்திரி களுள் ஒருவன் வணங்கிநின்று, ''மகா ராஜாவே உம்முடைய மகன் தேர்மேலேறி வீதியிற்போம்பொழுது, ஒரு பசுக்கன்று தேர்க்காலில் அகப்பட்டிறந்தது. அதன் தாயாகிய இப்பசு இங்குவந்து ஆராய்ச்சி மணியைஅடித்தது,' என்று விண்ணப்பஞ் செய்தான். அதுகேட்ட மனுநீதிகண்ட சோழன் பெருந்துயங்கொண்டு இரங்கி ஏங்கி, ''என் செங்கோன் முறைமை நன்று நன்று'' என்பார்; ''இது யாதுசெய் தாற்றீரும்'' என்பார். கன்றையிழந்த தாய்ப் பசுவின் முகத்தைப் பார்த்துச் சோர்வார். மந்திரிகள் அதுகண்டு அச் சோழருடைய பாதங்களை வணங்கி நின்று, ''மகாராஜாவே, மனந்தளர்ந்தருளு வது இதற்கு பரிகாரமாகாது. உம்முடைய புத்திரனைக் கொண்டு கோவதைக்குத் தரும நூல்களில் விதிக்கப்பட்ட பிராய்ச்சி தத்தைச் செய்விப்பதே தருமம்'' என்றார் கள். அதற்கு மனுநீதிகண்ட சோழன் ''நீங்கள் கூறும் பிரயாச்சித்தம் கன்றை யிழந்தறும் இப்பசுவினது நோய்க்கு மருந்தாகுமா? நான் ஏகபுத்திரனை இழக் கின்றேன் என்று கருதி நீங்கள் எல்லீருஞ் சொல்லிய இவ்வார்த்தைக்கு நான் இசைந்தேனாயின் நடுவுநிலைமை தவ றாதா? உயிர்களுக்குத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பகைவராலும், கள்வ ராலும், உயிர்களாலும் எய்தற் பாலன வாகிய ஐந்து பயத்தையும் நீக்கி அவை களைக் காப்பவனன்றோ அரசனெனப் படுவான். நான் என் புத்திரன் செய்த பாவத்தின் பொருட்டு அவனைக் கொல் லேனாயின் ஆதிகாலத்திருந்த மனுவி னாலே செய்யப்பட்ட தருமநூல் விதி இப்பொழுது மனு வென்னும் ஒரு சோழ னால் நீக்கப்பட்டது என்னும் பழமொழி உலகத்திலே நிலைபெறாதா? என்றார். அப்பொழுது மந்திரிகள் ''மகாராஜாவே, இப்பூமியின் கண்ணே இதுபோல முன்னும் நடந்திருக்கின்றதே. இக்குற்றத் தின் பொருட்டு உம்முடைய புத்திரனைக் கொல்லல் முறையன்று. தரும நூலில் விதிக்கப்பட்ட பிராயச்சித்தஞ் செய்வதே பண்டுதொட்டு ஆன்றோர் வழங்கிய வழக்கு,'' என்றார்கள். அதற்கு மனுநீதி கண்ட சோழன் ''நீங்கள் தருமநெறியைச் சிறிதும் சிந்தியாது பேசுகின்றீர்கள். எந்த லோகத்திலே எந்தப்பசு கன்றையிழந்த துன்பத்தினால் ஆராய்ச்சிமணியை அடித்தது? சொல்லுங்கள். அன்றியும் சிவபெருமான் எழுந்தருளி யிருக்குந் திருவாரூரிலே பிறந்த உயிரைக் கொன் றானே. ஆதலால் அவனைக் கொல்வதே துணிபொருள் என்று சிந்தியுங்கள். நான் இப் பசுவினது துயரத்தைத் தீர்க்கவல்ல னல்லேன். ஆதலால் இப்பசு தன் கன்றை யிழந்து துயருறுதல்போல நானும் என் புத்திரனை யிழந்து துயருறுதலே நீதி'' என்று சொல்லி, எவ்விடத்தும் எக் காலத்தும் எவராலும் செயற்கரிய செய் கையைச் செய்யத் துணிர்தார். உடனே மந்திரிகள் அஞ்சி, அவ்விடத்தினின்று நீங்கினார்கள்.

மனுநீதிகண்ட சோழர் தம்முடைய புத்திரனை அங்கு வரவழைத்து ஒரு மந்திரியைப் பார்த்து,''நீ இந்தப் பிள்ளை யை வீதியிலே தேர்க்காலின் கீழ்ே கிடத்தித் தேரை நடத்தக்கடவாய்''என்று ஆணையிட்டார். அம்மந்திரி போய் அவ்வாறு செய்யாது தன்னுயிரை விடுத் தான். அதனையுணர்ந்த மனுநீதிகண்ட சோழர் தம்முடைய புத்திரனைத் தாமே கொண்டு வீதியிற் சென்று தம்முடைய குலத்துக்கு ஒரு புத்திரன் உளன் என் பதைச் சிந்தியாது, தருமவழியில் நடத்த லொன்றையே சிந்தித்து அவனைக் கீழ்ே கிடத்தி அவன் மார்பிலே உருளை அழுந்தும்படி தேரை நடத்தினார்.

மனுநீதிகண்ட சோழர் செய்த இச் செயற்கருஞ் செயகையைக் கண்டு,

மனிதர்கள் தரியாது கண்மழை பொழிந் தார்கள். தேவர்கள் பூமழை பொழிந் தார்கள். சர்வலோக நாயகராகிய தியாகேசர் இடப வாகன மேற்கொண்டு, தேவர்களும் பூதர்களும் புடைசூழ எழுந்தருளிவந்து முன்னின்றார். மனுநீதி கண்ட சோழர் அவரைத் தரிசித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார். அப்பொழுதே பசுக்கன்றும், இராஜகுமாரனும், மந்திரியும் உயிர்பெற் றெழுதலும் அதுகண்ட சோழர் தாம் இத் தன்மையின ரென்றறியாதவராயினார். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கிய புத்திரனைத் தழுவி மனமகிழ்ந்தார். பசு தன்னையணைந்த தன் கன்று உண்ணும் வண்ணம் பாலைப்பொழிந்து தனக்குண் டாகிய துன்பம் நீங்கிற்று. தியாகேசர் மனுநீதி கண்ட சோழருக்குத் திருவருள் செய்து மறைந்தருளினார்.

இப்படியே தருமநெறியில் வழுவா தொழுகும் எண்ணில்லாத மெய்யன்பர் களுக்குப் பரமப்பிரசாதஞ் செய்து கொண்டு சருவசீவ தயாபரராகிய தியா கேசர் எழுந்தருளியிருக்கும் திருவாரூரினது மகிமை நம்மாலேசொல்லற்பாலதன்று. அத்திருவாரூருக்கு வன்மீக நாதக் கடவு ளுடைய திருக்கோயில் இருதய கமலம் போலும். அத்திருக்கோயிலிலே தேவா சிரய னெனப் பெயர்பெற்ற ஆயிரக்கால் மண்டபமொன்றுண்டு. தியாகேசரைச் சேவிக்கும் பொருட்டு இத்துணைத் தென்று, அளவிடப்படாத பேராசை யோடு வந்துகூடும் விட்டுணு, பிரமா, இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும் அம்மண்டபத்திலே நிறைந்திருப்பார்கள். விபூதி உருத்திராக்ஷம் என்னும் சிவ சின்னங்களைத் தரித்தவர்களும் திருவைந் தெழுத்தை உச்சரிப்பவர்களும், ஓடும் பொன்னும் ஒப்பநோக்குபவர்களும், நல் வினையால் வரும் இன்பத்திலும் தீவினை யால் வரும் துன்பத்திலுஞ் சமபுத்தி பண்ணுபவர்களும், பசுபதியாகிய சிவ பெருமானுடைய திருவடிக்கண்ணதாகிய மெய்யன்பொன்றையே உயர் வொப் பில்லாத பெருஞ்செல்வமெனக் கொண்டு இடையறாதொழுகுந் தைலதாரை போலும் இயற்கைத்தாகிய அவ்வன்பால் விழுங்கப்பட்டவர்களும் சரியை, கிரியை, யோகம் ஞானம் என்னும் வீட்டு நெறி நான்கின் வழியே நிற்பவர்களுமாகிய திருத்தொண்டர்களுடைய திருக்கூட்டம் அத்தேவாசிரிய மண்டபமெங்கும் நிறைந் திருக்கும். அம்மெய்யடியார்களுடைய பெருமையை ஒன்றுக்கும் பற்றாத நாம் எங்ஙனந்துதிப்போம்.

சீர்மிகு திருஆரூர்

சு. சண்முகம்,
கணக்கு அலுவலர்,
இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை.

திருவாரூரில் பிறக்க முக்தி என்று சொல்லப்படுவது யாவரும் அறிந்ததே. ஆரூரன் ஆரூரில் அவ்வம்மானுக்காளாயிருந்த நம்பியாரூரராம் சுந்தரமூர்த்தி நாயனார் திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன் என்கிறார். ஏன் இவ்வாறு திருவாரூர் பிறந்தார்கள் சிறப்பிக்கப்படுகிறார்கள் என்பது சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணம் வழங்கும் திருத்தொண்டர் புராணத்தில் இரண்டு பாக்களில் சொல்லப்படுகிறது.

அருவாகி உருவாகி அனைத்துமாய் நின்றபிரான்
மருவாரும் குழல்உமையாள் மணவாளன் மகிழ்ந்தருளும்
திருவாரூர் பிறந்தார்கள் திருத்தொண்டு தெரிந்துணர
ஒருவாயால் சிறியேனால் உரைக்கலாம் தகமையதோ

திருக்கயிலை வீற்றிருந்த சிவபெருமான் திருக்கணத்தார்
பெருக்கிய சீர்த்திருவாரூர் பிறந்தார்கள் ஆதலினால்
தருக்கிய ஐம்பொறியடக்கி மற்று அவர்தாள் வணங்க
ஒருக்கிய நெஞ்சுடையவர்க்கே அணித்தாகும் உயர்நெறியே.

இவ்விரண்டு பாடல்களிலேயே திருவாரூர் பிறந்தார் புராணத்தை சேக்கிழார் இயற்றியுள்ளார்.

அருவும் உருவும் அனைத்துலகுமாய் நின்ற பெருமானை மட்டுமல்லாது சீர்பெருக்கிய திருவாரூர் என ஊரையும் புகழ்ந்து அங்கு சிவகணங்களே வந்து பிறந்தன என்கிறார். அந்த சிவகணங்களின் பரம்பரையினரே வாழும் ஊர் திருவாரூர். எனவே மிகுசிறப்பும் சீரும் பெற்று விளங்குகின்றனர் திருவாரூர் பிறந்தார்.

அப்படி அங்கு பிறக்காதவர்களுக்கு முக்தி இல்லையா எனின் உண்டு என்கிறார் ஆளுடைய பிள்ளையாய் சீர்காழியில் அவதரித்து ஞானப்பாலுண்ட ஞானசம்பந்தர்:

சித்தந் தெளிவீர்காள்; அத்தன்ஆரூரைப்
பத்தி மலர்தூவ, முக்தியாகுமே
பவனமாய் சோடையாய் நாவெழப் பஞ்சு தோப்ச்சட்டவுண்டு
சிவனதாள் சிந்தியாப் பேதைமார் போலிநீ வெள்கினாயே
கவனமாய்ப் பாய்வதோரேறு உகந்து ஏறிய காளகண்டன்
அவனது ஆரூர் தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சேல் நெஞ்சே.

எனவே, தெளிந்த சிந்தையுடன் ஆரூர் அப்பனைப் பத்திமலர்கொண்டு வணங்கும் யாவரும் முக்தி பெறலாம் என்பதுடன் சந்தேகம் கொண்டு அஞ்சாமல் இருநெஞ்சமே எனத் துணிந்து கூறுகிறார்.

மணிவாசகப் பெருந்தகை அத்தன் ஆரூர் வாழும் திருவாரூரினைப் புகழ்ந்து தெள்ளேணம் கொட்ட நம்மை அழைக்கிறார்.

திருவார் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதில்லை
அருவாய் உருவமும் ஆயபிரான், அவன் மருவும்
திருவாரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

இவ்வாறு பெருமை பெற்ற திருவாரூரில் கோயில் கொண்டு பரமனார் அங்கேயே தங்கிவிட்டதாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் சொல்கிறார்.

தாங்கோல வெள்ளெலும்பு பூண்டுதம் ஏறேறிப்
பாங்கான ஊர்க்கலெல்லாஞ் செல்லும் பரமனார்
தேங்காவி நாறும் திருவாரூர் தொன்னகரில்
பூங்கோயிலுள் மகிழ்ந்து போகாதிருந் தாரே.

இவ்வாறு திருவாரூர் கோயிலில் தங்கிய ஆரூரன் அடிதொழுது அல்லல் இன்றி உய்யலாம் என மேலும் சொல்கிறார்.

மையுலாவிய கண்டத்தன் அண்டத்தன்
கையுலாவிய சூலத்தன் கண்ணுதல்
ஐயன் ஆரூர் அடிதொழு வார்க்கெலாம்
உய்யலாம் அல்லல் ஒன்றிலை காண்மினே.

தமது வாழ்நாளில் இறைவனைத் தம்மிடம் இருந்து பிரித்து வேறாக உணராது தன் தோழனாகவே எண்ணிப் பாடல் பல இயற்றியவர் சுந்தரர். ஆரூர் மேவிய பிரான் உயிகட்குத் தேவையான மழை, கலைநுட்பம், பரிவு, இரவு, பகல் ஆகவும் ஐம்புல நுகர்ச்சிகளாகவும் நின்று நம்மிடமிருந்து பிரித்து மறத்தல் என்பதே இயலாத நிலையில் உள்ளார் எனப் பாடுகிறார். அப்பாடல் :

கார்க்கின்ற மழையாய்ப் பொழிவானைக்
கலைக்கெல்லாம் பொருளாயுடன் கூடிப்
பார்க்கின்ற உயிர்க்குப் பரிந்தானைப்
பகலும் கங்குலும் ஆகி நின்றானை
ஓர்க்கின்ற செவியைச் சுவைதன்னை உணரும்
நாவினைக் காண்கின்றகண்ணை
ஆர்க்கின்ற கடலை மலைதன்னை
ஆரூரானை மறக்கலு மாமே.

திருநாவுக்கரசரும் ஆரூர்பிரானை எல்லாவற்றிலும் தாம் கண்டு அயர்ந்து போனதாகப் பாடுகிறார்.

"நீதியாய் நிலனாகி நெருப்பாய் நீராய்
நிறைகாலாய் இவையிற்றின் நியமமாகிப்
பாதியாய் ஒன்றாகி இரண்டாய் மூன்றாய்ப்
பரமாணுவாய்ப் பழுத்த பண்களாகிச்
சோதியாய் இருளாகிச் சுவைகளாகிச்
சுவைகலந்த அப்பாலாய் வீடாய்வீட்டின்
ஆதியாய் அந்தமாய் நின்றான்தன்னை
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தவாறே''.

இவ்வாறு நால்வர்களாலும் பாடப் பெற்று நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ள கருத்துகள், உடன் நாம் சென்று ஆரூரன் அடிதொழுது உய்ய நம்மை ஆவல் கொள்ளச் செய்கின்றனவல்லவா?

நமது இடர்களும், அறிந்தோ அறியாமலோ செய்த பாவங்களும் நீங்கவேண்டும் என நினைப்போர்கள் எவ்வாறு ஏத்திப் புகழ்ந்தால் அவர்களது இடர்களும் பாவங்களும் போகும் என்பதைத் தம் நெஞ்சுக்குச் சொல்வது போல் நமக்கு உணர்த்துகிறார் திருநாவுக்கரசர் பெருமான்.

கீழ்க்கண்ட பாடல்கள் அன்பர்கள் தினமும் பாடிப் பரவி நல்கதி பெறவேண்டியே அப்பர் பெருமானால் இயற்றப்பட்டவை என்பதில் ஐயத்திற்கிடமில்லை.

இடர்கெடுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
ஈண்டொளி சேர்கங்கைச் சடையா என்றும்
சுடரொளியாய் உள்விளங்கும் சோதி யென்றும்
தூ நீறு சேர்ந்திலங்கும் தோளா என்றும்
கடல்விடம் அதுஉண்டு இருண்டகண்டா என்றும்
கலைமான் மறியேந்தும் கையா என்றும்
அடல்விடையாய் ஆரமுதே ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே.

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசுவேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்கவேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சாவண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கேனென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழில்ஆரூரா என்றே போற்றா நில்லே.

அன்பர்கள் தினமும் இப்பாடல்களைப் பாடி ஆரூர்பிரானைத் துதித்து, தங்கட்கு வந்துள்ள மற்றும் வரக்கூடிய இடர்களும் நீங்கி, தங்கள் முன்வினைப் பயனாகப் பற்றி நிற்கும் பாவங்களும் நீங்கப் பெற்று, திருவாரூரிற் பிறந்தவர்கள் பெறும் புண்ணியத்தைப் பெற்று முக்திநிலை பெறவேண்டுகிறேன். அன்பர்கள் நலம் பெற ஆரூரனை வணங்கி நிற்கிறேன்.

பாடல் பெற்ற ஆரூர்ச் சிவாலயங்கள்

கவிஞர். கோ. ஞானச்செல்வன், எம். ஏ., எம். எட்.

தமிழகத்துச் சிவாலயங்களுள் மிகு தொன்மையும், விழுமிய சிறப்பும் மேவப் பெற்றது அருள்மிகுதியாகராசப்பெருமான் திருக்கோயில் என்றழைக்கப்படும் திருவாரூர்ப் பெரிய கோவிலாகும்.

''ஒருவனாய் உலகேத்தே நின்ற நாளோ
ஓர் உருவே மூவுலகும் ஆன நாளோ
.... மாதோர் பாகம்
திருவினார் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாய்க் கொண்ட நாளே''

என்ற அப்பர் பெருமான் அருள்வாக்கு இக்கோயிலின் பழமையைப் புலப் படுத்தும். ஆராத தமிழமுதாம் தேவாரம் பாடிய மூவராலும் தெய்வத் திருவாசகம் அருளிய மணிவாசகராலும் பாடப் பெற்றவையாயின் அவற்றைப் பாடல் பெற்ற தலங்கள் என்று குறிப்பிடுவது மரபு. இத்தலத்தில் பாடல் பெற்ற சிவாலயங்கள்:

(1) திருவாரூர்ப் பூங்கோயில்
(2) அரநெறி
(3) பரவையுண்மண்டளி—என

மூன்று குறிக்கப்படுகின்றன. இவை பற்றிய அரிய செய்திகளைச் சிந்திக்கும் வாய்ப்புப் பெற்றமை திருவருட்பேறே யாகும்.

திருவாரூர்ப் பூங்கோயில்:

பல்வேறுபட்ட காலங்களில் பல்வேறு மன்னர்தளபல் செய்யப்பட்ட அறப் பணிகள் - திருப்பணிகள் காரணமாகப் பல்வேறு சந்நிதிகள், சிறுகோயில்கள், மண்டபங்கள், திருச்சுற்றுகள் என எழுந்து வளர்ந்து வியக்கத்தக்க அளவில் விளங்கும் ஆரூர்த் திருக்கோயிலின்கண் அருள்மிகு வன்மீக நாதராம் புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளி அருள் பாலிக்கும் பழமை வாய்ந்த கோயிலே பூங்கோயில் என்று அந்நாளில் வழங்கப் பட்டுள்ளது.

''தாங்கோல வெள்ளெலும்பு பூண்டேதம்
ஏறேறிப்
பாங்கான ஊர்க்கெல்லாஞ் செல்லும்
பரமனார்
தேங்காவி நாறுந் திருவாரூர்த்
தொன்னகரில்
பூங்கோயி லுண்மகிழ்ந்து போகா
திருந்தாரே''!

எனும் அப்பர் பெருமான் திருவாக்கை நோக்கி மகிழ்க. அழகிய வெள்ளெலும்பு அணிபூண்டு, காளை மீதேறி எல்லா ஊர்க்கும் செல்லும் பரமனார் இனிய குவளை மலர் மணம் கமழும் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயிலில் உள்ளம் மகிழ்ந்து வேறெங்கும் போகாது இருக் கின்றாராம்!

இத்திருக்கோயில் பூமிதேவியின் இதய கமலமாகத் திகழ்தலின் இது பூங்கோயில் எனப்பட்டது. இக்கோயிற் பகுதி திருமூலட்டானம் என்று வழங்கப்பெறுத லும் உண்டு. பெருமானின் வலப்பக்கத்தே அர்த்த மண்டபத்தில் சோமகுலாம்பிகை என்னும் பிரியாவிடைஅம்மைஎழுந்தருளி யிருக்கிறார். தேவர்களை வேள்வியில் வென்ற திருமாலின் செருக்கை அடக்கப் புற்றிடங் கொண்டு, பெருமான் தான் தோன்றிய (சுயம்பு) சிவலிங்கத் திருமேனி

யாக எழுந்தருளிக்காட்சி தந்த தலம் இது. திருத்தொண்டர் புராணமாம் பெரிய புராணத்தில், **'அகமலராம் அறவனார் பூங்கோயில்'** என்றும் **'தார்பெருகு பூங்கோயில்'** என்றும், **'பூங்கோயில், அமர்ந்தாரை, புற்றிடங் கொண்டிருந்தாரை'** என்றும் வருகின்ற தொடர்கள் பூங்கோயிற் பெருமை பேசுவன வாகும்.

திருமாலால் பூசிக்கப்பெற்று இந்திர னுக்கு வழங்கப் பெற்றதும், இந்திரனால் முசுகுந்த மன்னனுக்கு நல்கப்பட்டது மான சோமாஸ்கந்த திருவடிவில்அமைந்த அருள்மிகு தியாகேசப்பெருமான் மூர்த்த மும், உளியால் செதுக்கப்படாத விடங்க ராகிய—வீதிவிடங்கப்பெருமான் (மரகத லிங்கமாம்) மூர்த்தமும் வரலாற்று முறை மையின் புற்றிடங்கொண்ட பெருமான் எழுந்தருளிய காலத்திற்குப் பிந்தியவை என்று கருத இடமுண்டு. ஆயினும், ஆரூரா என்றும், ஆரூர் அமர்ந்த அரசே என்றும், ஆரூர் அம்மானே என்றும் ஆரூர்ம் பெருமானையும், ஆரூர் தலத்தை யும் பாடிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் பாடல்கள் அனைத்தையும் பூங்கோயிற் பாடல்களாகப் போற்றி மகிழ்வேசமாக. 'அன்னம் வைகும் வயற் பழனத்து அணி ஆரூரானை மறக்கலு மாமே' என முடியும் சுந்தரர் திருப்பாட்டு யாவரும் அறிந்ததே. சம்பந்தர் திருப் பாட்டு ஒன்றை ஈண்டு நினைந்து மகிழ்வோம்.

"சங்குலாவு திங்கள் சூடித் தன்னை யுன்னு வார் மனத்து
அங்குலாவி நின்ற எங்கள் ஆதி தேவன் மன்னுமூர்
தெங்குலாவு சோலை நீடு தேனு லாவு செண்பகம்
அங்குலாவி அண்டம் நாறும் அந்தண் ஆரூர் என்பதே"

பூங்கோயிலின் அம்மை சந்நிதி தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அம்மையின் திருப்பெயர் அல்லியங் கோதை (நீலோத் பலாம்பிகை). நல்லதமிழ்ப் பெயர்கள் எல்லாம் பிற்காலத்து வடமொழிப்பெயர் களாகமாறினபோலும். அம்மையின் இடத் திருக்கரம் ஒன்று, அருகில் தோழியின் இடுப்பிலுள்ள குழந்தை முருகன் தலை யைத் தீண்டும் வண்ணம் அமைந்த காட்சி வேறெந்தத் தலத்திலும் காண வரிது. (கிழக்கு நோக்கியவாறு—முதல் திருச்சுற்றில்—தவக்கோலத்தில் அமைந்த அருள்மிகு கமலாம்பாள் சந்நிதி தனிக் கோயில் என்பது கருதத்தக்கது).

அரநெறி

திருவாரூர்ப் பெரியகோயிலின்கண் இரண்டாம் திருச்சுற்றுத் தென்புறத்தில் மேற்கு நோக்கியவாறு அமைந்த அழகிய கோயில் அரநெறி என்னும் திருக்கோயி லாகும். அப்பர்பெருமானால் பாடப்பெற்ற இத்தலம் பிற்காலத்து அசலேச்சுரம் என வழங்கப்படலாயிற்று. இக்கோயிலின் அமைப்பில் எழுந்ததே தஞ்சைப் பெரியகோயில் என்றுரைப்பர் ஆராய்ச்சி யாளர், சமற்காரன் என்னும்மன்னவனது கடுந்தவத்திற்கு மகிழ்ந்து, அவன் தாபித்த இலிங்கத் திருமேனியில் இறை வன் சலியாதுஎழுந்தருளியமையால் இஃது அசலேசம் எனப்பட்டது என்பர், அரன் நெறி-அரனெறி, சிவநெறி (சிவனை அடையும் நெறி) என்றும், அரநெறி—பாவத்தைப் போக்கும் நெறி (ஹர—அர—போக்கு) என்றும் பொருள் கொள்வர் அறிஞர். இவ்விருவகையான தொடரும் அப்பர் பெருமான் திருப்பாடல்களுள் வந்துள்ளன எனக்கண்டு, அரனெறி என்பது மூலட்டானமாகிய வன்மீகநாதர் திருக்கோயிலைக் குறிக்கும் என்றும் அரநெறி அசலேசத்தைக் குறிக்கும் என்றும் ஆய்வுநெறிச் சான்றோர் அறை வர். நாமும் அவ்விரண்டு திருப்பாடல் களையும் நோக்கி மகிழ்வோமே.

" எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே
பந்தம் வீடவை யாய பராபரன்
அந்த மில்புகழ் ஆரூர் அரனெறி
சிந்தை யுள்ளும் சிரத்துள்ளும் தங்கவே"

" எத்தீ புகினும் எமக்கொரு தீதில்லை
தெத்தே யெனமுரன் றெம்முள் உழிதர்வர்
முத்தீ யனையதொர் மூவிலை வேல்பிடித் து
அத்தீ நிறத்தார் அரநெறி யாரே"

அப்பர் தேவாரப் பதிப்புகளில் ஒரு பதிகத்தின் இடையில் ஒருபாடலில் மட்டும் அரனெறி என்பதும் வேறு இரண்டு பதிகங்களில் முழுமையாய் (அனைத்துப் பாடல்களிலும்) அரநெறி என்பதும் அமைந்துள்ளன.

இத்தலம்பற்றி அரியதொரு சிறப்பு வரலாறு உண்டு, நமிநந்தி அடிகள் என்னும் நாயனார், இத்திருக்கோயிற்கு விளக்கிட எண்ணெய் கிட்டாது நலிவுற, சமணர்கள் இகழ்ச்சியாக 'நீரைவிட்டு விளக்கேற்றுமே' என்று கூற இறைவன் திருவருளால் தேவதீர்த்த நீரைவிட்டு விளக்கெரியச்செய்து திருவிளக்குத் தொண்டு செய்தனர். இச்செய்தியினை அப்பர் பெருமான்,

" ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன்
நம்பி நந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணாடறியு
மன்றே"

என்று திருவிருத்தப் பகுதியிலும், 'நந்தி பணி கொண்டருளும் நம்பன் றன்னை' என்று தாண்டகப் பகுதியிலும் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வரலாற்றை, 'நாதர் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய' என்ற சேக்கிழார் திருவாக்கும் நமக்கு விளக்கி நிற்கிறது. 'ஆதிமுதல் அரநெறியார்' என்றும், 'தேன் மருவும் கொன்றையார் திருவாரூர் அரநெறியில்' என்றும் பெரிய புராணத்துள் அரநெறி பேசப்பட்டுள்ளது.

அரநெறிக் கோயிலின் முன் மண்டபம் அரியதொரு நிகழ்ச்சியால் சிறப்புப் பெறுகிறது. கழற்சிங்கர் என்னும் பல்லவ மன்னன் தன் பெருந்தேவி சங்கவை என்பாளோடு பூங்கோயில் வழிபாடு செய்து வலம் வந்த போது, பள்ளித்தாம மண்டபத்துச் சிந்திக்கிடந்த மலரை எடுத்து மோந்து பார்க்க, திருமாலைத் தொண்டு செய்துவந்த செருத்துணையார் என்னும் அடியார் அதுகண்டு சினந்து அரசியின் மூக்கை அரிந்தார். அரசர் கழற்சிங்கரோ, மூக்கை அரிதல் போதாது என்று மலரை எடுத்த கையையும் வெட்டினார். இறைவன் இருவர்க்கும் இன்னருள் புரிந்தார். இருவரும் அடியாருள் இடம் பெற்றுள்ளனர்.

அருள்மிகு அரநெறியார் எழுந்தருளியுள்ள ஆலயத்து அம்பிகை வண்டார் குழலியாவார். இறைவன் திருநாமம் அசலேச்சுரர் என ஆகிவிட்டது. இக்கோயிற்கண்ணுள்ள நடராசப் பெருமான் திருமேனி எழில் சிறப்புமிகப் பெற்றதாகும். திருச்சுற்றில் அமைந்த பிற்காலக் கோயில்கள் பலவற்றைப் போல் அல்லாது இது பூங்கோயிலோடு ஒத்த பழமையுடையது.

பரவையுண் மண்டளி

கீழவீதியில் பெரிய திருத்தேரை அடுத்த (முருகன் - விநாயகர்) இரு தேர்களுக்கிடையே எதிரில் அமைந்துள்ளது பரவையுண் மண்டளி என்னும் பழங்கோயில். இத்தலத்து இறைவன் திருநாமம் தூவாயர். இறைவியின் திருப்பெயர் பஞ்சின் மெல்லடியாள். இக்கோயிலில் துருவாச முனிவர் திருவுருவம் ஒன்று விநாயகருக்கு அருகில் அமைந்துள்ளது. துருவாசர் வழிபட்ட பெருமான் இத்தலத்து இறைவனெனக்கருத இடமுண்டு. இந்நாளில் இக்கோயில் எதிரே அமைந்த தெரு துருவாசர் சந்நிதித் தெரு என்றே வழங்கப் படுகிறது. துருவாசர் கோயில் என்றே

பலராலும் அறியப்பட்ட இக் கோயிற்குப் பரவையுண் மண்டளி என்னும் பெயர் இருப்பது பலருக்கும் தெரியாது. இங்கு சனீஸ்வரன் சந்நிதி ஒன்றும் அமைந்து உள்ளது.

துருவாச நாயனார் என்ற திருநாமம் தூவா நாயனார் என்றாகி இத் தலத்துப் பெருமான் பெயராகியது என்றுரைப்பர், இது பொருந்தாது. இப்பெருமானின் பெயரே தூவாயர் என்பதைச் சந்தமிகு சுந்தரர் தேவாரத்தின் சான்றுகொண்டு அறியலாம்.

"தூவாயா தொண்டுசெய் வார்படு
துக்கங்கள்
காவாயே கண்டுகொண்டார் ஐவர்
காக்கினும்
நாவாயால் உன்னையே நல்லன
சொல்லுவேர்(கு)
ஆவாஎன் பரவையுண் மண்டளி
அம்மானே"

தூவாயனாகிய பரவையுண் மண்டளி இறைவனே தொண்டர்தம் துக்கங்களைத் தடுத்து நீதானே காக்க வேண்டும். உன்னருளைப் பெற இயலாதவாறு ஐந்து பேரும் (ஐம்பொறிகள்) தடுத்தாலும் நாவால்-வாயால் உன்னையே பாடுகிற எனக்கு இரங்குவாயாக என்றுரைக்கும் பாடலால் இறைவன் பெயர் தூவாயர் எனவும், மேலும் அவரது மற்றொரு பாடலில் உள்ள 'பஞ்சேறு மெல்லடி யாளை ஓர்பாகமாய்' எனவரும் தொடர் கொண்டு இறைவியின் திருப்பெயர் 'பஞ்சேறு மெல்லடியாள்' என்பதையும் அறியலாம்.

இப்போது, 'பரவையுண்மண்டளி அம்மான்' என்று இறைவன் பெயர் சந்நிதியில் எழுதப்பட்டுள்ளது. திருப் பனந்தாள் திருமடத்துத் திருப்பணிக் கல் வெட்டொன்றில் இறைவன் பெயர் 'தூவாயர்' என்றே குறிக்கப்பட்டுள்ளது. இரண்டும் சுந்தரர் திருவாக்கில் வருவனவே எவ்வாறழைப்பினும் பிழையில்லை யன்றோ? கற்கோயில்கள் அமையப் பெற்ற காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பின்னர் ஆதலின் மண்தளி (மண்ணால் ஆன கோயில்) எனப் பெற்ற இச் சிவ ஆலயம் மிகப் பழமையுடையதாகும்.

நால்வர் மட்டுமா ?

திருவாரூர்த் திருத்தலம் திருஞான சம்பந்தர் அருளிச் செய்த 55 திருப் பாடல் களையும், அப்பரடிகள் அருளிய 208 திருப்பாடல்களையும், சுந்தரர் சந்தமுறப் பாடிய 87 பாடல்களையும், திருவாசகத்தில் மூன்று பாடல்களையும் பெற்றுள்ளது. இந்நால்வர் அன்றி இத்தலம் பற்றிப் பாடியோர் பட்டியல் மிகப் பெரிது. அவர் களுள் காடவநம்பி, சேரமான் பெருமாள், சேக்கிழார், அருணகிரியார், குமரகுருபரர், கச்சியப்பர், காளமேகம், மறைஞான சம்பந்தர், கமலை ஞானப்பிரகாசர், அந்தகக்கவி வீரராகவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார், எல்லப்ப நாவலர், வைத்தி நாததேசிகர் போன்ற ஞானப் பெரு மக்கள் பலர் இடம் பெறுகிறார்கள்.

ஆரூர்ப்பெருமான் அழகில் ஈடுபட்ட மனம், விடுதலறியா விருப்பினதாகு மன்றோ? நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந் துருகத் திருவாசகம் பாடிய மணிவாசகர் ஆரூர்ப் பெருமானைப் பாடிய பாடல் ஒன்றுடன் இப்பணியை நிறைவு செய்வோம்.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே
நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"

திருவாரூர் சுற்றுவட்டாரத் தலங்கள்

புலவர். சு. மு. சுந்தரராசன் M. A.

'திருவாரூர் பிறக்க முத்தி' என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். சப்த விடங்கத் தலங்களில் முதன்மையானது. முசுகுந்த மன்னனால் தாபிக்கப்பெற்ற அருள்மிகு தியாகராசப் பெருமான் எழுந்தருளியுள்ள பேறு பெற்றது. நால்வர் பெருமக்கள் பாடிப்பாடிப் பரவசம் அடைந்த பதி. இசை உலகுக்கு அழியாச் செல்வத்தை அருளிய மும்மூர்த்திகள் அவதரித்த பெருமையுடையது. தருமை ஆதீனத்தை ஸ்தாபித்த ஸ்ரீ குருஞான சம்பந்தருக்கு அருகுருவாகிய ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் அவதாரத் தலமும் இதுவே. இவ்வாறு பல்லாற்றானும் பெருமைபெற்றுள்ள இத்திருவாரூரைச் சுற்றிலும் பல புண்ணியத் தலங்கள் அமைந்துள்ளன. அவை பற்றிச் சிறிது சிந்திப்போம்.

திருநெய்ப்பேர் எனும் ஏமப்பேரூர் :

திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து வழியில் உள்ளது. 63 நாயன்மார்களுள் ஒருவரான நமிநந்தி அடிகள் வாழ்ந்த ஊர். இவர் நாள்தோறும் திருவாரூர் சென்று விளக்கேற்றி வழிபடுதலை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் வழிபாட்டிற்கு சென்ற பொழுது விளக்கேற்ற நெய் இலாததால் அங்குள்ளாரிடம் வேண்ட, அப்பொழுதிருந்த சமணர்கள் நெய் தர மறுத்ததுடன், "உங்கள் இறைவன் சக்தி உள்ள இறைவனாய்இருந்தால்அவ்விறை அருளால் தண்ணீரைக் கொண்டு விளக்கு ஏற்றுக என்றுகூறி நகைத்தனர். இதனால் அயர்ந்திருந்த அடியவர் காதில்'' நீர் கொண்டு விளக்கு ஏற்று'' என அசரீரி கேட்க அவ்வாறே விளக்கேற்றி வழிபட்டார். இதனை "நீரால் விளக்கிட்டமை நீணாடு அறியுமன்றே'' என்ற தொடராலும் அறியலாம். அந்த அடியவர்க்காகவும் ஒரு கோயில் உளது அஃது அடியார் கோயில்' என்றே வழங்கப்படுகிறது.

திருக்காரவாசல் எனும் திருக்காராயில் :

திருவாரூர் திருத்துறைப்பூண்டி பேருந்து மார்க்கத்தில் சுமார் 12 கி.மீ. தொலைவில் உளது. சப்த விடங்கத்தலங்களில் இதுவும் ஒன்று. தியாகராசப்பெருமான் ஆதி விடங்கர். நடனம், குக்குட நடனம் (கோழிபோல் ஆடுவது. குக்குடம்-கோழி) காரகில் வனமாக இருந்ததால் காரகில கானாயில் என வந்திருக்கலாம்.

இறைவன்: அருள்திரு கண்ணாயிர நாதர்
இறைவி: அருள்திரு கைலாச நாயகி
திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் ஒன்று உளது.

சிறப்பு :

பிரம்ம, விஷ்ணுக்கள் தம்மையே பெரிதாகக் கருதித் தருக்குற்ற குற்றம் நீங்க இப்பதியில் உள்ள இறைவனை வணங்கிக் கழுவாய் பெற்றனர். இலக்குமி தேவியின் செருக்கு (தானே அழகி தன் கணவராகிய திருமாலே முழுமுதற் கடவுள் தன் மகன் மன்மதனே மிக அழகுடையவன்) நீங்கி இத்தலத்தில் வழிபாடு செய்ததாகவும், கபாலமுனிவர் தவத்திற்கு இரங்கி அம்பிகை அருள்காட்சி வழங்கியதாகவும், கபித்தன் எனும் அந்தணன் நீரால் விளக்கு எரித்தான் என்றும், பல

சிறப்புச் செய்திகள் கூறப்படுகின்றன. வைகாசி விசாகத் திருவிழா மிகவும் சிறப்புற நடைபெறுகிறது. இத்திருக் கோயில் கடந்த ஆண்டு பிப்ரவரித் திங்களில் குடமுழுக்கு செய்விக்கப் பெற்றுள்ளது.

திருநாட்டியத்தான் குடி :

திருவாரூர் திருத்துறைப்பூண்டி இருப்புப் பாதையில் மாவூர் ரோடு' எனும் நிலயத் திற்கு மேற்கே 2 கி. மீ. தொலைவில் உள்ளது. பெரியபுராணம் போற்றும் கோட்புலி நாயனாரின் அவதாரத்தலம்.

இறைவன் அருள்திரு மாணிக்கவண்ணர் இரெத்தினபுரீசுவரர். நாட்டியத்தான்குடி நம்பி கரிநாலேசுவரர்.

இறைவி : அருள்திரு மலர்மங்கை, மலை மங்கை, மங்களாம்பாள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப் பதிகம் ஒன்று உளது. அப்பர் பெருமான் இப்பதிபற்றிப் பாடிய இரு திருத்தாண்ட கங்கள் உள.

சிறப்பு :

இவ்வூர் வழிபாட்டிற்கு எழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் கோட்புலி நாயனார் வரவேற்றுத் தம் புதல்வியர் சிங்கடி, வனப்பகை எனும் இருவரையும் பணிப்பெண்களாக ஏற்றருளவேண்டினர் "சிங்கடியப்பன்'' என்று தம் பதிகத்தில் சுந்தரர் கூறுவதன் மூலம் இதனை அறியலாம்.

செவிவழிச் செய்தி :

வழிபாட்டிற்கு எழுந்தருளிய சுந்தரர் திருக்கோயிலில் இறைவனையும் இறைவி யையும் காணாமல் விநாயகப்பெருமானை வினவினார் அப்பெருமானோ ஈசானத் திசையைக் காட்டி, வாய் பேசாதிருந்தார். இஃது இறைவன் திருவிளையாடல் என எண்ணி, ஈசான திசைநோக்கி சென்றார். அங்கே இறைவனும் இறைவியும் உழவன் உழத்தியாக நடவு நடத்தலைக் கண்டு,

''நட்ட நடாக்குறை நாளை நடலாம்
நாளை நடக் குறை சேறு தங்கிடவே
நட்டது போதும் கரையேறி வாரும்
நாட்டியத் தான்குடி நம்பி''

என்று பாடினார்.

இறைவனும் இறைவியும் கோயிலுக்கு எழுந்தருளினர்

கரிதீர்த்தம் : யானை, தீர்த்தம் உண்டாக்கி நீராடி முத்தி பெற்றதால் கரிதீர்த்தம் எனப்பெற்றது. கரிக்கு அருள் பாலித்த தால் "கரி நாலேசுவரர்'' என வழங்கப் படுகிறார்.

திருநெல்லிக்கா :

திருவாரூர் திருத்துறைப்பூண்டி புகை வண்டி மார்க்கத்தில் உள்ளது. நெல்லிக் காடாக இருந்திருக்க வேண்டும். **தலமரம்** நெல்லி. **இறைவன்** அருள்திரு நெல்லிவன நாதர், ஆமலேசர் **இறைவி** அருள்திரு மங்களநாயகி அமலேசுவரி. திருஞான சம்பந்தர் அருளிய பதிகமும், அப்பர், சுந்தரர் அருளிய பாடல்களும் உள்ளன.

வரலாறு :

தெய்வ உலகில் உள்ள கற்பகத் தரு, சந்தானத்தரு, அரிசந்தனத்தரு, மந்தாரத் தரு, பாரிசாதத்தரு ஆகியவை, தம் கொடைச் சிறப்பால் தருக்குற்று துர்வாச முனிவரை மதிக்கத் தவறின. அவருடைய சாபத்திற்கு ஆளாகி நெல்லி மரங்களாய், இத்தல இறைவனுக்கு நிழல் தந்து சாபம் நீங்கப் பெற்றன. தக்கன் யாகத்தில் கலந்து கொண்ட சூரியன் தான் இழந்த பல்லையும், கண்ணையும், சந்திரன் தான் இழந்த ஒளியையும் இங்கு வழிபாடு செய்து பெற்றனர். சிவபெருமானைப்

போலவே தனக்கும் 5 தலைகள் இருத்தலால், தானும் சிவபெருமானுக்கு நிகர் எனக் கர்வம் கொண்ட பிரமனின் ஒரு தலையைக் கொய்ததுடன் படைத்தல் தொழிலையும் சிவபெருமான் நீக்கினார். நான்முகன் ஆகிய பிரமன் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுப் படைத்தல் தொழிலைப் பெற்றான் என்றும் கூறப்படுகிறது.

திருத்தெங்கூர் :

திருநெல்லிக்காவிலிருந்து மேற்கே 2 கி. மீ. தொலைவில் உளது.

இறைவன்: அருள்திரு வெள்ளிமலைநாதர்.

இறைவி : அருள்திரு பெரியநாயகி.

திருஞான சம்பந்தர் அருளிய பதிகம் ஒன்றும், அப்பர் சுந்தரர் அருளிய இரு பாக்களும் உள்ளன.

சிறப்பு :

ஊழிக் காலத்தில் கடல் கோளால் அழியும் போது, இத்தலம் மட்டும் அழியாமல் தேங்கி நின்றமையால் தேங்கூர் எனப் பெயர் பெற்றது.

திருமகள், பாண்டவர், பீஷ்மர், துரோணர், சிவகங்கை அசுரகுரு முதலானோர் வழிபட்டுய்ந்துள்ளனர். திருமகள் தன் கடைக்கண் பட்டவுடனேயே எவராயினும், நிறைந்த செல்வத்தைப் பெறக்கூடிய வரமருள விரும்பி, சிவபெருமானை வேண்டித் தவம்செய்ய திருமாலின் விடை பெற்று இத்தலத்தை அடைந்து, கயிலையிலுள்ள ஆயிரத்தெட்டுக் கொடு முடிகளில் ஒன்றைக் கொணருமாறு கருடனுக்குக் கூற அவ்வாறே அது கொண்டு வந்ததை நிறுவி அம்மையப்பரைப் பாவனையாகப் பிரதிட்டைசெய்து வழிபட்டாள். அசுரகுரு சுக்கிரன், வாமனாவதாரத்தில் மாவலியிடம் மண் வேண்டிய பொழுது, மன்னனின் தானத்தைத் தடுத்த பழிநீங்க, இத்தலம்வந்து வழிபட்டுப்பழி நீங்கப் பெற்றான் என்றும் தெரிய வ
கிறது.

திருக்கன்றாப்பூர் :

திருவாரூர் திருத்துறைப்பூண்டிப் பு
வண்டிப் பாதையில் மாவூர்க்குக் கிழக்
6 கி. மீ. தொலைவில் உள்ளது.

இறைவன்: அருள்திரு நடுத்தறி நாதர்.

இறைவி: அருள்திரு மாதுமைநாயகி.

திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம் உள்ளது.

சிறப்பு:

இத்தலத்து இறைவர் கன்று கட்டு
ஒரு தறியிலிருந்து சுயம்பு மூர்த்தியாக
தோன்றியதால் நடுதறி நாதர் என
பெறுகிறார். சைவப் பெண் வைண
குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டு,
கணவனும் பிறரும் அறியாதவாறு த
சிவபக்தியை விடாமல் மாட்டுத்தொ
வத்தில் உள்ள கன்று கட்டும் தறியை
சிவலிங்கமாகக் கருதி வழிபட்டனள்
இதை அறிந்த அவள் கணவன், நடுத
யைக் கோடரி கொண்டு வெட்டி
பொழுது, இரத்தம் பீறிடச் சிவலிங்கமா
வெளிப்பட்டருளினார். கோடரியி
வெட்டுக்காயங்களை இன்றும் கா
லாம்

வழிவலம்: நாகப்பட்டினம் திருத்துறை
பூண்டிப் பேருந்து மார்க்கத்தில் உள்ள

இறைவன்: அருள்திரு மனத்துணை நாத
ஹிருதய கமலநாதசுவா

இறைவி: அருள்திரு மாழையொா
கண்ணி

திருஞானசம்பந்தர் அருளிய ப
கங்கள் இரண்டும் திருநாவுக்கரசர் அ
ளிய திருத்தாண்டகப் பதிகம் ஒன்று
சுந்தரர் அருளிய பதிகம் ஒன்று
திருநாவுக்கரசர் இத்தலம் பற்றிப்பாடி
திருத்தாண்டகங்கள் ஐந்தும் அருணகி

நாதர் அருளிய திருப்புகழும் உள்ளன. வலிவலம் மும்மணிக் கோவை என்ற பிரபந்தமும் உள்ளது.

சிறப்பு:

திருமுறை வாணர்கள், திருமுறை ஓதத் தொடங்கும் பொழுதும், விநாயகரை வழிபடவும், 'பிடியதன் உரு உமைகொள'' என்று தொடங்கும் திருப் பாடலை ஓதுதலை அறியலாம் அப் பாடலைப் பெற்ற தலம் இத்திருத்தலம். கோச் செங்கட் சோழனால் கட்டப் பெற்ற மாடக் கோயில். ஓர் அரசன், முன்வினையால் கரிக்குருவியாகப் பிறந்து, வினை நீங்க இத்தலத்தில் வழி பாடு செய்து இறை அருளால் வலியனா கப் பிறந்து வலமும்,வீடு பேறும் பெற்ற தால் வலிவலம் என்று போற்றப்பெற்றது

கச்சனம் எனும் கைச்சினம்: திருவாரூர் திருத்துறைப்பூண்டிப் பேருந்து மார்க்கத் தில் உள்ளது

இறைவன்: அருள்திரு கைச்சின்னநாதர், கரச்சினனேசுவரர்.

இறைவி: அருள்திரு வெள்வளை நாயகி.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதி. கம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிய க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகப் பாடல் ஒன்றும் உள்ளன.

வரலாறு: இந்திரனின் கைச்சின்னம் பதிந்ததால் இப்பெயர் ஏற்பட்டது. கௌதம முனிவருடைய சாபத்தால் ஏற் பட்ட அவமானத்திற்கு வெட்கிய இந்திரன் திருவாரூர் அடைந்து தவம் செய்தான். இத்தலத்தை அடைந்து வழி பட்டால் இக்குறை தீரும் என அருள, மணலால் சிவலிங்கம் தாபித்து வழிபட்டு, விசாகத்திருநாளில் தீர்த்தத்தில் சிவலிங் கத்தைச் சேர்ப்பிக்க எடுத்தபொழுது, சிவலிங்கம் பூமியில் பற்றிக் கொண்டது. இந்திரனுடைய விரல்கள் லிங்கத்தில் பதிந்தன. அதனால் இப்பெயர் ஏற்பட்டது.

வில்வலன் வாதாபியைக் கொன்ற பாவம் நீங்க அகத்தியர் இத்தலத்தில் வழிபட்டார் என்றும் கூறப்படுகிறது.

திருக்குவளை திருக்கோளிலி: திருவாரூர் வேதாரண்யம் பேருந்து மார்க்கத்தில் உளது; சப்த விடங்கத் தலங்களில் ஒன்று

தியாகராசப் பெருமான்: அவனி விடங்கர்.

நடனம்: வண்டு நடனம்.

இறைவன்: அருள்திரு பிரமபுரீசுவரர்.

இறைவி: அருள்திரு வண்டமர்பூங் குழலாள்.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிய பதி கங்கள் இரண்டும், சுந்தரர் அருளிய பதிகம் ஒன்றும் உள்ளன.

11ஆம் திருமுறையில் பரணர் பாடிய திருவந்தாதியில் இத்தலம் பற்றிய வெண்பா ஒன்றும், இத்தலத்துத் தியாக ராசப் பெருமான் மீது பாடப்பெற்ற உலா ஒன்றும் உள்ளன.

சிறப்பு:

நவக்கிரகங்கள் வழிபட்டு அருள் பெற்ற தலமாதலின், அவை வக்கிரமின்றி ஒரே வரிசையில் விளங்குகின்றன.பிரமன் அகத்தியர், பாண்டவர் வழிபட்டுள்ள னர்.

குண்டையூர்க்கிழார் என்னும் ஒரு பக்தர் சுந்தரர்க்கு, செந்நெல்லும் பிறவும் கொடுத்தலை வழக்கமாகக் கொண்டிருந் தார். அவ்வாறு அவர் கொடுத்த நெல் லைத் திருவாரூர் எடுத்துச் செல்ல, இறை வனை வேண்ட, பூதகணங்கள் நெல் மலையை அன்றிரவே ஆரூர்க்கு எடுத் துச் சென்றன எனக் கூறப்படுகிறது.

சுந்தரர் இறைவன் பால் வேண்டிய இந் நிகழ்ச்சியை 'நீள நினைந்தடியேன் நித் தலும்'' எனத் தொடங்கும் அவர் பாடலா லும் அறியலாம். தருமை யாதீனத்தின் அருளாட்சிக்குட்பட்ட இத்திருக்கோயி லில் இவ் விழா மிகவும் சிறப்புற நடை பெற்று வருகிறது

திருவாய்மூர்: திருக்குவளைக்குக் கிழக்கே 7 கி.மீ. தொலைவில் உளது. நாகப் பட்டினம் திருத்துறைப்பூண்டிப் பேருந்தி லும் செல்லலாம். சப்த விடங்கத் தலங் களில் இதுவும் ஒன்றாகும்

இறைவன்: அருள்திரு வாய்மூர் நாதர்

இறைவி: அருள்திரு பாலினும் நன்மொழி அம்மை

தியாகராசப் பெருமான்: நீல விடங்கர்.

நடனம்: கமல நடனம்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் உள்ளன. சூரியன் வழிபட்ட தலங்களுள் இதுவும் ஒன்று. ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் 12, 13 ஆங்கில தேதிகளில் சூரிய கிரணங்கள் சுவாமி, அம்பாள் மீது படுதலை இன்றும் காணலாம்.

திருத்துறைப் பூண்டி: திருவாரூர் திருத் துறைப்பூண்டி பேருந்துப் புகை வண்டி மார்க்கம்.

இறைவன்: அருள்திரு பிறவி மருந்தீசுவரர்.

இறைவி: அருள்திரு மங்களநாயகி.

தேவாரப் பதிகங்கள் கிடைக்க வில்லை.

சிறப்பு: அகத்திய முனிவர்க்கு இறைவன் திருமணக் கோலத்துடன் காட்சி அருளிய தாகக் கூறப்படுகிறது. சப்தவிடங்கத் தலங்களில் சேர்ந்தது இல்லை; எனினும் இங்கும் தியாகராசப் பெருமான் எழுந் தருளி இருக்கிறார்.

இவை தவிர இப்பகுதியில் முருக பெருமான் எழுந்தருளி வேண்டுவார்க் வேண்டியவற்றை அருள்கின்ற தல களாக மூன்று சிறந்து விளங்குகின்றன.

சிக்கல்: திருவாரூர் நாகப்பட்டின பேருந்து மார்க்கத்தில் உளது.

முருகப் பெருமானுக்குரிய சிறந் வழிபாட்டுத்தலம். கந்தர் சஷ்டி விழாவி போது வேல் வாங்கும் காட்சி மிகவு சிறப்புடையது. வேல் வாங்கியவுட வியர்வை தோன்றும் காட்சியை இன்று காணலாம்.

இறைவன்: அருள்திரு வெண்ணெய்ப் பெருமான்

இறைவி: அருள்திரு வேல்நெடுங்கண்ணி

எட்டுக்குடி: திருக்குவளைக்குத் தெ கிழக்கில் 1 கி. மீ. தொலைவில் உளது திருவாரூர் வேதாரணியம் பேருந்தி செல்லலாம். சித்திரா பௌர்ணமி விழ மிகவும் சிறப்புடையது.

முருகப் பெருமானுக்கு அடியார்க பலர் காவடிகளைச் (பால், ரதம் முதலான சுமந்து வந்து வழிபடுதலைக் காணலாம் கார்த்திகை தோறும் வைத்தீசுவரன் கோயிலில், அருள்திரு செல்வமுத்து குமார சுவாமிக்கு நடைபெறும் சந்தன பிஷேகத்தைக் கண்டு தரிசித்தல் போல இங்கு அர்த்தயாம அபிஷேகத்தை கண்டு தரிசிக்க அடியார்கள் வருகின் னர். வால்மீகி முனிவர் இங்கு ஐக்கியமா இருப்பதாயும் கூறப்படுகிறது.

எண் கண்: திருவாரூர் தஞ்சைப் பேருந் மார்க்கத்தில் முகுந்தனூரிலிருந்து வட மேற்கு 1 கி. மீ. தொலைவில் உளது.

எட்டுக்குடி, சிக்கல், எண்கண் ஆகிய மூன்று திருக்கோயில்கட்கும் ஒரே சிற்ப சிலை வடித்ததாயும், இத்தகைய அழகிய

சிலையை வேறு எங்கும் வடிக்கக்கூடாது எனக் கருதி, சிற்பியின் கட்டை விரலை வெட்டியதாயும், விரலை இழந்த சிற்பி எட்டுக்குடி வேலனை வேண்ட அவனருளால் விரல் பெற்று அதற்கு நன்றியாக அங்கும் ஓர் அழகிய சிலை வடித்தான். அவ்வழகுச் சிலையைக் கண்டவர்கள் இவ்வழகு போல வேறு எங்கும் அமையக் கூடாது என எண்ணி அச்சிற்பியின் கண்களைப் பறித்ததாயும், அதனால் கதறிய கலைஞனுக்கு எண் கண் வேலன் கண் கொடுத்தருளியதாகவும் கூறப்படுகிறது.

கீழ வேளூர் : திருவாரூர் நாகப்பட்டினம் பேருந்து வழியில் உளது.

இறைவன் : அருள்திரு கேடிலியப்பர்.

இறைவி : அருள்திரு வனமுலைநாயகி.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் உள்ளன.

நாகப்பட்டினம்: திருவாரூர்–நாகப்பட்டினம் இருப்புப்பாதை.

நாகைக் காரோணம் எனவும் பெயர். சப்த விடங்கத் தலங்களில் இதுவும் ஒன்று; நீலாயதாட்சி சக்தி பீடங்களில் ஒன்றாய் எண்ணப்படுவதாகும்.

தியாகேசர் : சுந்தரவிடங்கர்.

நடனம் : பரா வார தரங்க நடனம் (கடல் அலைபோல் ஆடுவது)

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் அருளிய பதிகங்கள் உள்ளன.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய நாகைக் காரோணப் புராணம் எனும் தலபுராணத்தைப் பெற்றுளது. சுந்தரர் இவ்விறைவனை மிகவும் தோழமையுடன் பாடியுள்ளார்.

குடவாயில்: திருவாரூர் குடந்தைப் பேருந்து வழியில் உளது கோச்செங்கண் சோழன் கட்டிய மாடக் கோயில். மேற்கு நோக்கிய வாயிலை உடையதால் குடவாயில் எனப் பெயர்.

இறைவன்: அருள்திரு கோணேசுவரர்.

இறைவி: அருள்திரு பெரியநாயகி.

திருஞானசம்பந்தர் அருளிய தலபதிகமும், திருநாவுக்கரசர் அருளிய இத்தலம் பற்றிய திருத்தாண்டகப் பாடலும் உள்ளன.

திருச்சேறை: திருவாரூர் கும்பகோணம் பேருந்து வழியில் உளது.

இறைவன்: அருள்திரு செந்நெறியப்பர்.

இறைவி: அருள்திரு ஞான வள்ளியம்மை.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்கள் இரண்டும் உள்ளன.

திருநாலூர் மயானம்: குடவாசல் குடந்தைப் பேருந்து வழியில் நாலூர் எனுமிடத்தில் இறங்கிச் செல்ல வேண்டும்.

இறைவன்: அருள்திரு பலாசவன நாதர்.
இறைவி: அருள்திரு பெரியநாயகி.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் உளது.

விற்குடி: திருவாரூர் மயிலாடுதுறை பேருந்து வழியில் உளது.

இறைவன்: அருள்திரு வீரட்டநாதர்.

இறைவி: அருள்திரு ஏலவார்குழலி.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் உளது

அட்ட வீரட்ட தலங்களுள் ஒன்று; சலந்தராசுரனை அழித்த பதியாகும்.

திருப்புகலூர்: நன்னிலம் நாகப்பட்டினம் பேருந்து வழியில் உளது.

இறைவன்: அருள்திரு கோணப்பிரான், அக்னீஸ்வரர்,

இறைவி: அருள்திரு கருந்தார்குழலி, சூலிகாம்பாள்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடியருளிய பதிகங்கள் உள்ளன.

சிறப்பு:

தீக் கடவுள் வழிபட்டதால் அக்கினீசம், இறைவனின் திருமேனி சாய்ந்திருத்தலால் கோணேசம் எனப் பெயர் ஏற்பட்டது. முருகநாயனார் தங்கித் தொண்டு செய்த தலம். திருநாவுக்கரச நாயனார் இறைவன் திருவடிகளில் இரண்டறக் கலந்த தலம் சித்திரை சதயத் திருநாள் 'அப்பர்' விழாவாகக் கொண்டாடப் பெறுகிறது.

திருச் செங்காட்டங் குடி: நன்னிலம் நாகப்பட்டினம் பேருந்துவழியில் உளது.

இறைவன்: அருள்திரு கணபதீச்சுரர்.

இறைவி: அருள்திரு திருக்குழல் நன்மாது.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகம் உளது. திருநாவுக்கரசர் அருளிய பதிகமும் உளது.

சிறப்பு:

சிறுத்தொண்ட நாயனாரிடம் இறைவன் பிள்ளைக்கறி பெற்ற சிறப்பினை உடையது.

திருமருகல்: நன்னிலம் நாகப்பட்டினம் பேருந்து வழியில் அமைந்துளது.

இறைவன்: அருள்திரு மாணிக்கவண்ணர்.

இறைவி: அருள்திரு வண்டுவார்குழலி.

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் அருளிய பதிகங்கள் உள்ளன.

சிறப்பு:

திருமணம் செய்து கொள வந்து தங்கியிருந்த வணிக மணமகன் பாம்பு தீண்டி இறந்திட, மணமகள் (செட்டிப்பெண்) துயர்கண்டு, வழிபட வந்த திருஞான சம்பந்தர் பதிகம்பாடி வணிகனை உயிர்ப்பித்தருளிய தலம். செட்டிப்பெண் திருமணத் திருவிழா இன்றும் சிறப்புற நடைபெறுகிறது. இவ்வூரில் பாம்பு கடித்து யாரும் இறப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

நன்னிலம்: திருவாரூர் மயிலாடுதுறைப் பேருந்து வழியில் உளது. மாடக்கோயில் சுந்தரர் அருளிய பதிகம் உளது.

இறைவன்: அருள்திரு மதுவனேசுவரர்.

கோச் செங்கண் சோழன் கட்டிய கோயில்களில் இதுவும் ஒன்று. இவ்வாறு சீரும் சிறப்பும் மிக்க திருவாரூரைச் சுற்றிப் பல தலங்கள் இன்னும் உள்ளன. பல இங்கே வழிபாட்டிற்கு வருபவர்கள் அங்கங்கே சென்று வழிபடலாம்.

ஆரூர் கல்வெட்டில் "மாலை மாற்று"

குடவாயில் பாலசுப்ரமணியன்

ஐவகை இலக்கணம் பெற்ற அருந்தமிழ் மொழியின் கூறுகளில் "அணி" என்பதொன்று. இதனை சம்ஸ்கிருதம் "அலங்கார சாஸ்திரம்" என உரைக்கும். அலங்கார சாஸ்திரம் பற்றி அக்னி புராணம் சிறப்புற பேசும். தமிழில் மலர்ந்த தண்டியலங்காரமும் மாறனலங்காரமும் இம்மரபு பற்றி விரிவாக உரைக்கின்றன.

பொருளமைதியும் யாப்பமைதியும் கொண்டனவாய்ச் சித்திரங்களுள் அமைத்துப் பாடப்பெறும் கவிகள் "சித்ர கவிகள்" எனப்பெறும். இவ்வகையில் ஏக பாதம், மாலை மாற்று, சதுர பந்தம், சக்கர மாற்று, சுழி குளம், நாகபந்தம், மத்தளபந்தம், கோமூத்திரி எழு கூற்றிருக்கை என்பன அடங்கும்.

மாலை மாற்று எனப்பெறும் தமிழ்க் கவிதை மரபு ஆயிரத்து ஐநூறு ஆண்டுகால தொன்மைப் பெருமை மிக்கது. கவுணியர் குலபதி காழியர் கோன் தவமல்கு தமிழால் பாடிய காழிப் பதிகத்தில் மாலைமாற்றுப் பதிகம் தனிச் சிறப்புடைய தொன்றாகும்.

திருஞானசம்பந்தரின் சீர்காழிப் பதிகம் முதற்பாடல் :

"யாமா மாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மா மாயா"

என்பது முதற்பாடல். இதனை யொத்து இப்பதிகம் முழுவதுமே அமைந்துள்ளது. கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் தமிழகம் போற்றிய இக் கவிதை மரபு காலங்காலமாக தொடர்ந்து வந்துள்ளது. இம்மரபிலுதித்த அற்புதமான வடமொழி மாலை மாற்றுக் கல்வெட்டுக் கவிதைகள் இரண்டினை அண்மையில் திருவாரூர் திருக்கோயிலில் ஆய்வின் போது எம் குருநாதர் டாக்டர் இரா. நாகசாமி அவர்கள் கண்டார்கள். இதனுடன் நாகபந்தம், ஒன்றும் சக்கர மாற்றுக் கவிதைகள் இரண்டும் கல்வெட்டில் இருப்பதுகண்டு வியந்தோம். அனைத்துமே ஆரூரன் புகழ்பாடும் அற்புத வரிகள்.

பூங்கோயில் எனப்பெறும் புற்றிடங்கொண்ட ஈசனின் முன்மண்டபத்து வடபுறச் சுவரில் கி. பி. 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு வரிகளாக இச் சித்திரக் கவிதைகள் மிளிர்கின்றன.

கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் சோழ நாட்டை விஜயநரகப் பேரரசின் ஆட்சித் தலைவராக பணிபுரிந்தவர் திருமலைய்யதேவ மகாராஜர். இவரது ஆட்சிக் காலத்தில் திருமலைய்ய தேவர் மற்றும் அவரது புதல்வர் திப்பதேவ மகாராஜர் ஆகியோர் ஆரூர் தியாகராஜப் பெருமானுக்கு சில அறக் கொடைகளை நல்கினர். இவை பற்றிப் பேசும் இக்கல்வெட்டுக்கள் தமிழில் காணப்பெறுகின்றன. இதன் ஈற்றில் "நாக பந்தம்" என்ற

சித்திர கவிதை ஒன்றும், மாலை மாற்றுக் கவிதைகள் இரண்டும், சக்கர மாற்றுக் கவிதை ஒன்றும், திப்பதேவன் புகழ்பாடும் கவிதை ஒன்றும் கிரந்தப் பாடல்களாக வெட்டுவிக்கப் பெற்றுள்ளன.

தாஸ யாத த்யாக ராஜ
ஜரா கயாத் தயா ஸதா

என்ற இக்கவிதை வரிகளை மாலையாக—சித்ர கவியாக காணும்போது,

தா
ஸ ஸ
யா யா
த த
த் த்
யா யா
க க
ரா ரா
ஜ

என்ற அழகிய மாலை மாற்றைக் காணமுடிகிறது. இதே போன்று

" கதி ஸாதந தாந ரக்ஷா
க்ஷார நதா நத ஸாதிக"

என்ற பாடல்

க
தீ தீ
ஸா ஸா
த த
ந ந
தா தா
ந ந
ர ர
க்ஷா

என்ற மாலையாக மிளிர்கிறது.

த்யாக ராஜ நமஸ்ஸு
சிவபதே கால கால
ரமா நிலை யாஸி—என்ற

தியாகராஜரைப் போற்றும் பாடல் வரிகள், இரண்டு பிணைந்த பாம்பு உருவங்களின் உள்ளும், வெளியும் சிதறிய எழுத்துக்களில் மிளிர்வதைக் காணும்போது கவிதை ஆற்றலோடு சித்திர ஆற்றலும் இணைந்து தரும் இன்பச் சுவையைப் பருக இயலுகிறது.

இத்தகைய சுவையான சித்திர கவிதைகளுடன் சக்கரமாற்று கவிதை ஒன்றும் தியாகராஜனின் புகழ்பாடுகிறது. ஈற்றில் உள்ள தனிப்பாடலோ,

கோபுரமந்த: புரமப
நிருபுரமபி நைவ
வித்விஷாம ஸஹஸ்தே
ஸ்ரீ கோப திப்ப நிருபதே
த்ர புராந்தக நாம
தே ஸார்த்தம்

என்று கோபதிப்பனின் புகழ் உரைக்கின்றது.

இக் கல்வெட்டுக்களால் பல புதிய வரலாற்றுச் செய்திகளை அறிய முடிந்தது. ஆரூர் எம்மான் சோழப் பெருமன்னர்கள் காலத்தில் வீதிவிடங்கர் என்றும், தியாக விநோதான் என்றும் தான் அழைக்கப்பட்டார். "தியாகராஜன்" என்ற நாமாவளி அன்றைய கல்வெட்டுக்களிலோ, செப்பேடுகளிலோ அல்லது இலக்கியங்களிலோ குறிப்பிடப் பெறவில்லை. ஆனால் "தியாகராஜன்" என்ற பெயரை முதன் முதலில் குறிப்பிடும் கல்வெட்டு இச்சித்திர கவியும், சாளுவகோபதிப்பனின் சாசனமுமேயாகும் எனவே தியாகராஜன் என்ற சொல்லாட்சி ஆரூர் எம்மானுக்கு 15-ஆம் நூற்றாண்டில் தான் துவங்கியது என்பது தெளிவு.

அடுத்து சாளுவ கோபதிப்பன் தமிழக வரலாற்று உலகுக்கு அறிமுகமாகும் புதிய மன்னன், மற்றும் இசைவாணன். இவன் தமிழகத்தை 15 ஆம் நூற்றாண்டில் விஜயநகரபேரரசின் பிரநிதியாய் ஆட்சிபுரிந்த திருமலைய்யவேனின் புதல்வன் என்பதை ஆரூர் கல்வெட்டு உலகுக்கு எடுத்து இயம்புகிறது. இப்பெருமகன் சிறந்த பரதநாட்டிய கலைஞன், தாளநூல் வல்லோன் என்பதை அண்மையில் தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையத்திலுள்ள ஏட்டுச் சுவடியால் கண்டேன். "தாளதீபிகா" என்ற இவ்வடமொழி நூல் தெலுங்குலிபியில் எழுதப்பெற்றுள்ளது. இதற்கு பின்னாளில் விளக்கநூலாக தெலுங்குடிகா ஒன்றும் உள்ளது. தாளதீபிகா என்ற இந்நூலில் பரதம், தாளம் போன்றவை விரிவாக பேசப்படுகின்றது. இதனை யாத்தவர் கோபதிப்பன் எனும் அறிஞன் என்பதும் இவன் சாளுவ திருமலைய்ய தேவனின் புதல்வன் என்பதையும் அறிந்தேன்.

இந்நூலில் இப்பெருமகனின் ஆற்றலைக் காணும்போது, ஆரூர் சித்திர கவிதைகள் அணைத்துமே இம் மன்னனின் கை வண்ணங்கள் என்பதில் ஐயமே இல்லை. சிறந்த இசை வல்லோனாக திகழ்ந்ததால், தான் தியாகப்பெருமானுக்கு அறக்கொடைகள் அளித்ததோடு அற்புத சித்திர கவிகளையும் அர்ப்பணம் செய்துள் ளான். கோபதிப்பனின் புகழ்பாடி ஆரூர் அரசின் அடி பணிவோம்.

திருவாரூர் தியாகராச சுவாமி கோயில் வரலாறு

டாக்டர். ஆ. வேலுசுவாமிசுதந்திரன்
இணைப் பேராசிரியர், சிற்பத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

தமிழகத்தில் மிகப் பிரசித்திபெற்ற கோயில்களில் ஒன்று திருவாரூர் கோயிலாகும். சிலர் பஞ்சபூத தலங்களில் இதுவும் ஒன்று என்று குறிப்பிடுவர். ஆகாசத்திற்குச்சிதம்பரம்நடராசர் கோயிலும், வாயுவிற்குக் காளகஸ்தியும், அக்னிக்கு (நெருப்பு) திருவண்ணாமலையும் நீருக்குத் திருவானைக்காவும், மண்ணுக்கு திருவாரூரும் குறிப்பிடப்படுகின்றன, சிலர் மண்ணுக்கு காஞ்சிபுரத்தைக் குறிப்பிடுகிறார்கள்.

இக்கோயிலின் வரலாறு மிகச் சிறப்பு பெற்றதாகும். கோயிலின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு மூலகாரணமாய் அமைந்திருப்பது சமய இலக்கியங்களும் கல்வெட்டுகளுமாகும் தேவார இலக்கியங்கள், இம்மன்னனின் சிறப்பையும், இறைவனின் பெருமையையும் சிறப்புற எடுத்துக் காட்டுகின்றன. அப்பர், சம்பந்தர், சுந்தரமூர்த்தி பாடல்கள், இவ்வூரின் நாட்டுப்புறச் செழிப்பையும் விரிவாக எடுத்துக்காட்டுகிறது. சேக்கிழார் பெரியபுராணமும், இக்கோயில் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. இக்கோயிலின் புராண வரலாற்றைப் பதினெட்டு வடமொழி நூல்களும், இருபத்தெட்டு தமிழ் நூல்களும் குறிப்பிடுகின்றன. அவைகள் அனைத்தும் பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டைச்சார்ந்தன. இக்கோயிலின் உண்மையான வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்கு, அவைகள் ஓரளவுதான் துணைபுரிகிறது.

கல்வெட்டுகளும், பட்டயங்களும் இக்கோயிலின் உண்மையான வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குத் துணை புரிகின்றன.

இக்கோயிலின் மொத்தக் கல்வெட்டுக்கள் அறுதுப ஆகும். நாற்பத்தெட்டு கல்வெட்டுக்கள், சோழ மன்னர்களுக்குரியன சோழ மன்னர்களில் முதலாவதாக குறிக்கப்படுபவன் முதலாம் பராந்தகனாகும் (கி.பி.907-955). இக்கல்வெட்டு திருவாரூர் ஊரவர்களால் ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையைக் குறிக்கிறது. இவ்வுடன்படிக்கையின் மூலம் கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கு எண்ணை கொடுக்கப் பட்டது. இம்மன்னனின் மற்றுமொரு கல்வெட்டு, தனிப்பட்டவரால் விளக்கு எரிப்பதற்கு தங்கம் கொடுக்கப்பட்டதை குறிக்கிறது. மன்னன் இராசராசனின், இரண்டால் ஆட்சியாண்டில் அமைந்த ஒரு கல்வெட்டு, செம்பியன் மாதேவியானவள் இக்கோயிலுக்கு வெள்ளிப் பாத்திரங்கள் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. செம்பியன் மாதேவியானவள், கண்டராதித்தனின்(கி.பி. 950-957)மனைவியும், உத்தம சோழனின் (கி. பி. 970-985) தாயுமாவாள். இக்கோயிலில் நடன மாதர்கள் பலர் பணிபுரிந்திருக்கின்றனர். தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டொன்று. திருவாரூர் கோயிலிலிருந்து நாற்பத்திநான்கு நடன மாதர்கள் தஞ்சை பெரிய கோயிலுக்குச் சென்று பணி புரிந்ததைக் குறிப்பிடுகிறது. தஞ்சைப் பெரியகோயில் கட்டுவதற்கு

முன்னாலேயே திருவாரூர் கலைகளின் பிறப்பிடமாயிருந்திருக்கிறது என்ற உண்மை, மேற்குறிப்பிட்ட குறிப்பிலிருந்து தெரிகிறது.

முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுக்கள், பல்வேறுவரலாற்று உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன. இம்மன்னனின் இருபதாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்று கோயிலுக்கு விளக்குகளும், அணிகலன்களும் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. முதலாம் இராசேந்திரன், அணுக்கியார் பரவை நங்கையரோடு நேரில் வந்து இக்கோயிலில் வழிபாடு செய்ததையும் குறிப்பிடுகிறது. அவர்கள் இருவரும் நின்ற இடத்தை உறுதிப்படுத்துகின்ற முறையில் குத்து விளக்கொன்று நிறுத்தப்பட்ட உண்மையும் தெரிகிறது.

இம்மன்னன், இவள் மேல்கொண்ட அன்பை மற்றுமொரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. இவளின் பெயரால் ஒரு கிராமம் பரவைபுரமென்றும் ஒரு கோயில் பரவை ஈசுவரமென்றும் பெயரிடப்பட்டிருக்கின்றன. இவ்வூர் பனைய வரமென்று தற்பொழுது அழைக்கப்படுகிறது. இவ்வூர் தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் தாலுக்காவிலிருக்கிறது. இராசேந்திரனின் மற்றொரு கல்வெட்டானது ஐப்பசி மாத சதய விழாவும், ஆடி மாத ஆருத்ர விழாவும் கோயிலில் நடப்பதற்கு, வழிவகை செய்யப்பட்டதைக் குறிக்கிறது. ஆருத்ர விழா முதலாம் இராசேந்திரன் நினைவாகவும் நடத்தப்பட்டது.

முதலாம் இராசாதிராசனின் (கி. பி. 1018-1054) கல்வெட்டுக்கள் இரண்டு உள்ளன. ஒரு கல்வெட்டு அணுக்கியர் நக்கன் பரவை நங்கையார் கோயிலுக்கு நிலம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இவ்வம்மையார் இராசேந்திர சோழ தேவன் என்ற ஒரு மண்டபத்தையும் கட்டியிருக்கிறாள். இக்கல்வெட்டு, இராசேந்திரசோழன், பரவை நங்கையர்களின் சிலைகளுக்கு, பூசை நடத்துவதற்கு, வழிவகைகள் செய்யப்பட்டதையும் குறிக்கிறது. இரண்டாவது கல்வெட்டு, உடையார் வீதிவிடங்க தேவர்க்கு, தங்க மண்டபம்கட்டுவதற்கு மன்னன் முதலாம் இராசாதிராசன் (கி. பி. 1018-1054) கொடுத்த ஆணையைக் குறிக்கிறது.

இரண்டாம் இராசேந்திரனின் (கி. பி. 1051-1063) கல்வெட்டொன்று வன்மீக நாதர் சன்னதியின் கர்ப்பகிரகத்தையும், அர்த்த மண்டபத்தையும் தங்கமுலாமிடுவதற்கு இவ்வரசனிட்ட ஆணையைக் குறிக்கிறது. மற்ற கல்வெட்டுக்கள் கோயிலுக்குக்கொடுக்கப்பட்டபல்வேறு தானங்களைக் குறிப்பிடுகின்றன. முதலாம் குலோத்துங்கனின் (கி.பி. 1070-1120), கல்வெட்டொன்று தேவாசிரியன் மண்டபத்தை (ஆயிரங்கால் மண்டபம்) குறிப்பிடுகிறது. விக்கிரம சோழனின் (கி. பி 1118-1135) கல்வெட்டொன்று, மனுநீதிச் சோழன் தன்மகன் பசுவைக் கொன்றதன் பொருட்டு நீதி வழங்கியதைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் குலோத்துங்கனின் (கி. பி. 1133-1150) கல்வெட்டொன்று திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி, பரவை நாச்சியார் உருவங்களுக்கு வழிபாடு நடத்துவதற்கு வழிவகை செய்ததைக் குறிப்பிடுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனாரின் தாயின் பெயரை இசை ஞானியார் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. திருவாரூரின் மற்றொரு பெயர் கமலாபுரமென்பதும் இக்கல்வெட்டு மூலம் தெரிய வருகிறது. திருவாரூர், சுந்தரமூர்த்தியின் சொந்த ஊராகும் என்பதை இக்கல்வெட்டு வலியுறுத்துகிறது. இரண்டாம் இராதிராசனின் (கி. பி. 1163-1178) கல்வெட்டொன்று, திருவாரூர் கோயிலுக்கு இம்மன்னனின் அதிகாரியான அம்மையப்பன் வேதவனமுடையான் என்பவன், அம்மையப்பன் என்ற ஒரு கிராமத்தைத் தானமாகக் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இவ்வூர்

திருவாரூரிலிருந்து மேற்கே நான்கு மைல் தொலைவில் இருக்கிறது. மூன்றாம் குலோத்துங்கன். மூன்றாம் பிரகாரத்தின் சபா மண்டபத்தையும், கிழக்கு கோபுரத்தையும் கட்டினான். மூன்றாம் இராசேந்திரனின் கல்வெட்டுக்கள், கோயிலுக்கு நிலங்கள் வழங்கப்பட்டதைக் குறிக்கிறது இரண்டாம் பிரகாரத்தின் மேற்கு கோபுரத்தை சித்தரசனின் மகன் நாகராசன் கட்டினான் என்று குறிக்கிறது. சித்தரசன் என்பவன் தெலுங்கு சோழஅரசனாவான் அச்சுதப்ப நாயக்கனின் கல்வெட்டொன்று கோயிலுக்குக்கொடுக்கப்பட்ட வருமானத்தைக் குறிக்கிறது. இக்கல் வெட்டின் காலம் கி.பி. 1564. இரகுநாத நாயக்க மன்னனின் செப்புப் பட்டயம் ஒன்று கோயிலில் உள்ளது. இதன் காலம் கி. பி. 1614. இக்கோயிலுக்கு நிலம் தானமாக கொடுக்கப்பட்டதை இப் பட்டயம் கூறுகிறது. சரபோஜி மன்னன் கி. பி. 1717ல், இக்கோயிலைக் கும்பாபி ஷேகம் செய்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. இக்கோயிலில் பழுது பார்ப் பதற்கும், இம்மன்னன் உதவி செய்திருக் கிறான்.

மேற்குறிப்பிட்ட மன்னர்களின் அர வணைப்பில், இக்கோயில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. மன்னர்களின் இத்த கைய ஈடுபாடு, கோயிலின் முக்கியத்து வத்தையன்றோ எடுத்துக் காட்டுகிறது!

அருள்மிகு கோபிநாதசுவாமி திருக்கோயில்
ரெட்டியார்சத்திரம்

திண்டுக்கல் வட்டம் — அண்ணா மாவட்டம்

தொலைபேசி எண்: 22

தமிழ்நாட்டின் தனிப்பெறும் கால்நடை தெய்வமாக விளங்கிவரும் கோபிநாதசுவாமி திண்டுக்கல்—பழனிரோட்டில் அமைந்திருக்கும் ரெட்டியார் சத்திரத்திற்குத் தென்புறம் 4வது கிலோ மீட்டர் தொலைவில் முக்கோண மலைமீது கோயில் கொண்டுள்ளார். சனிக்கிழமை தோறும் பக்தர்கள் ஏராளமாக வந்து பால் அபிஷேகம், பொங்கல் வைத்து அபிஷேகம் செய்கின்றனர். புரட்டாசி, தை மாதம் விசேஷமான நாட்கள் ஆகும். பசு பால் கறக்காமலோ கருத்தரிக்காமலோ இருந்தால் கோபிநாதனை வேண்டிக் கோயிலுக்கு வந்து தீர்த்தம் எடுத்துச் சென்று மாடுகளுக்குத் தெளித்தால் எல்லாப் பிணிகளும் நீங்கும். தமிழ் நாட்டிலேயே பால், தயிர், வெண்ணெய் அபிஷேகம் மிக தாராளமாக இத்திருக்கோயிலில்தான் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் உள்ள தெய்வம் வேறுபாடின்றி வழிபடும் தெய்வமாகும். எனவே பக்தர்கள் அனைவரும் கோபிநாதனைத் தரிசித்து அருள்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

எஸ். செயராமன்,
எம். ரத்தினகோபால்,
எம். சேதுபதி,
பரம்பரை அறங்காவலர்கள்.

எஸ். தங்கராஜு பி.ஏ.,பி.எல்.,
நிர்வாக அதிகாரி.

தியாகராச நடனங்கள்

கோவி. தியாகராசன்

அகிலத்தை ஆட்டிப் படைக்கும் அதிகார சிவனாகவும், இன்பம் துய்க்கும் எழில்மிகு கோலங்களிலே போக சிவனாகவும், அழிக்க வேண்டியவைகளை அழிக்குங் காலங்களில் இலய சிவனாகவும் திகழும் இறைவன் கொடை வள்ளலாக மாறி, தியாகராசர் என்னும் திருப்பெயரில் சப்த விடங்கர் தலங்களில் கோயில் கொண்டு எத்தனை வகையாக நடமிடுகிறார் என்பதைக் காண்போம்.

ஆடற் கலையின் கூறுபாடுகள் மூன்று வகையாகும். அவை நாட்டியம், நிருத்தம், தாண்டவம் என்பன.

உள்ளத்தின் உணர்வுகளை நாவினால் நவிலாது கருத்தினையும், குறிப்பினையும் வெளிப்படுத்திக் காட்டும் வண்ணம் ஆடுவது நாட்டியம்.

அழகினாலும் அலங்காரத்தாலும் காந்தம் போலக் கவர்ந்திழுத்துத் தாளம் தப்பாமல் ஆடுவது நிருத்தம்.

தாண்டிக் குதித்து ஆடுவது தாண்டவம். சக்தியை வெல்வதற்குச் சிவன் ஆடிய தாண்டவம் சிறப்பினை உடையது.

கூத்தனாக விளங்கும் ஆண்டவன் ஆடிய தாண்டவங்கள் தனிச் சிறப்புடையன.

தில்லையில் ஆடிய ஆனந்தத் தாண்டவம் திருவாரூரில் ஆடிய அஜபா தாண்டவம், ஆலவாயில் ஆடிய ஞானசுந்தரத் தாண்டவம், திருவாலங் காட்டில் ஆடிய ஊர்த்துவ தாண்டவம், பூண்டியில் ஆடிய பிரம தாண்டவம் திருப்புத்தூரில் ஆடிய கவுரி தாண்டவம் ஆகிய அனைத்தும் நடனக்கலையின் சிறப்புகளை நன்கு புலப்படுத்துகின்றன.

இவ்வாறு நடனக்கலையின் நாயகனாக விளங்கும் சிவபெருமானை நடமாடி, நடராசன், கூத்தன், மன்றாடி, ஆடல் வல்லான் என்று அழைப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

ஆடற்கலையின் ஆடற் பேதங்களாக நின்றாடலும், வீழ்ந்தாடலும் விளங்குகின்றன.

மல், மரக்கால், அல்லியம், குடம் ஆகியவை திருமால் ஆடும் நடனங்கள்.

குடை துடி ஆகியன, குன்று தோறும் நின்றாடும் குமரனது நடனங்கள்.

காபாலம், கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகியன சிவனது நடனங்கள்.

அதுமட்டுமல்லாமல் காமன் ஆடும் பேடு, இலக்குமி ஆடும் பாவை, இந்திராணி ஆடும் கடையம் ஆகியனவும் நடனக்கலையில் அங்கம் பெறுகின்றன.

மேற்கண்ட நடனங்களைத் தவிர்த்து தமது விருப்பம் போல தியாகராசர் ஆடிய நடனங்களைச் சப்தவிடங்கர் தலங்களிலே காணமுடிகிறது.

உளி கொண்டு செதுக்கப்படாமல் உருவான ஏழு விடங்கர்களும் வீற்றிருக்

கும் தலங்கள் சப்தவிடங்கத் தலங்கள் எனப்படும்.

சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில்-பேரான
ஒத்ததிரு வாய்மூர் உகந்ததிருக் கோளிலி
சத்தவி டங்கத் தலம்.

திருவாரூர்—அஜபா நடனம்.

மூலட்டானத் தலமாகவும், முக்தி நகரங்கள் ஏழனுள் ஒன்றாகவும் திகழும் திருவாரூரில் ஆதி முதல்வனாகிய இறைவன் வீதிவிடங்கராக விளங்கி அற்புதமாக ஆடியது அஜபா நடனம்.

பிள்ளையில்லாக் குறையைப் போக்க, பெருமானைத் தனது நெஞ்சத்தில் நிறுத்தி வழிபடுகிறார் திருமால். பாற்கடலில்-பாம்பணையில் படுத்துறங்கும் மாலின் நெஞ்சில் நிலைத்து நிற்கும் இறைவன், திருமால் சுவாசிப்பதற்காக மூச்சுக் காற்றை உள்ளிழுக்கும் போதும் வெளி விடும் போதும் உண்டாகும் அங்க அசைவுகளுக்கு ஏற்ப மகிழ்வுடன் அசைந்து அசைந்து ஆடியது அஜபா நடனம்.

ஜபா — ஜபித்தல்

அஜபா—ஜபிக்காது இருத்தல்.

அஜபா நடனம் ஆடும் போது மந்திரங்கள் வாய்விட்டு உச்சரிக்கப் படுவது இல்லை.

அஜபா நடனத்தின் தன்மையைக் கந்தபுராணம்,

''நீடவே துயிலுமால் நெட்டுயிர்ப் பசைவினால்
பீடுசேர் நாகணைப் பேருயிர்ப் பசைவினால்
பாடுசூழ் தெண்டிரைப் பாற்கடல் அசைவினால்
ஆடியே யவனகினார் 'அலகிலா ஆடலார்'

என்று சிறப்பிக்கிறது.

திரு நாகைக் காரோணம் — பரவார தரங்க நடனம்.

நாகப்பட்டினமென அழைக்கப்படும் நாகையில் சுந்தர விடங்கராக வந்து தியாகேசர் ஆடிய நடனம் பரவார தரங்க நடனம்.

பரவாரம்— கடல்.
தரங்கம்— அலை.

கடலலையைப் போலக் கவின்பெற அசைந்து ஆடும் நடனம் இதுவாம். பரந்து விரிந்த கடலிலிருந்து பாய்ந்து வந்து கரையைத் தொட்டுத் தவழும் அலைகளின் அசைவுகளே இந்த நடனத் திற்கு அடிப்படையாகும்.

திருநள்ளாறு— உன்மத்த நடனம்.

நள்ளாற்றில் நகவிடங்கராக விளங் கிடும் தியாகராசர் அகமகிழ ஆடும் நடனம் உன்மத்த நடனம்.

உன்மத்தம்— பித்து.

பித்தம் பிடித்தவன் தன் நிலை மறந்து தலை சுற்றி ஆடுவது போன்றது இந்த நடனம். ஆனாலும் கண்டபடி அலங் கோலமாக ஆடாமல் காண்பவர் உள்ளத் தைக் கொள்ளை கொள்ளும் தன்மை உன்மத்த நடனத்தின் உயர்வாகும்.

திருமறைக்காடு—அம்ச பாதநடனம்.

புவனங் காக்கும் இறைவன் புவனி விடங்கராக விளங்கி இத் தலத்தில் ஆடி மகிழும் நடனம் அம்ச பாத நடனம்.

அம்சம்— அன்னம்.

பாதம்— கால்.

நடனக்கலையின் நளினம் மிளிர அழகிய அன்னப் பறவை அசைந்து அசைந்து அடிவைத்து நடப்பதைப் போல ஆடும் நடனம் அம்சபாத நடனம்.

திருக்காராயில்— குக்குட நடனம்

ஆதிவிடங்கராகத் தியாகராசர் திருக் காராயில் என்னும் இத் திருத்தலத்தில் நெக்குருக ஆடி மகிழ்விப்பது குக்குட நடனம்.

குக்குடம்— கோழி,

ஆழிசூழ் உலகை ஆட்டிப் படைக் கும் பெருமான் கோழியைப் போல நெஞ்சங் குளிர ஆடுவது குக்குட நடன மாகும்.

யானையையே எதிர்த்து வென்ற கோழியினால் சிறப்பு பெற்ற சோழநாட் டில் தியாகராசர் கோழி நடனம் ஆடியது சிறப்பிற்குரியது.

திருவாய்மூர்— கமல நடனம்.

நீலவிடங்கராக நின்று கோலங்காட் டும் தியாகராசர் களிப்புடன் இங்கு ஆடும் நடனம் கமல நடனம்.

கமலம்—தாமரை,

நீர் நிறைந்த பொய்கையில் ஒற்றைத் தாளில் நிற்கும் தாமரை மலர், தவழுங் காற்றில் தள்ளாடி அசைவது போல ஆடும் நடனம் கமல நடனம்

திருக் கோளிலி— பிருங்க நடனம்:

தியாகேசன் இத்தலத்தில் அவனி விடங்கராகக் கோயில் கொண்டு ஆடு நடனம் பிருங்க நடனம்.

பிருங்கம்— வண்டு,

மலருக்குள் வண்டு குடைந்து செ வது போல ஆடுவது. முகைபவிழ் ந மலர் மெல்லிதழ் தீண்டி யாழொலி எழு பிக் காவினில் உலவும் வண்டு, மண கமழும் மலரில் தேனை உறிஞ்சுவத காகக் குடைந்து குடைந்து செல்வ போல அமைந்தது பிருங்க நடனம்.

இவ்வாறு ஏழுதலங்களிலும் தியா ராசர் ஆடிய இந்த ஏழுவகையா நடனங்கள் பரதக் கலையில் புகழ் பர பும் புனித நடனங்களாகப் பொலிகி றன.

விநோதக் கூத்துகளான
குரவை,
கலிநடம்,
குடக்கூத்து,
கரணம்,
நோக்கு,
தோற்பாவை

ஆகிய அறுவகைக் கூத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்டு விளங்கும் தியா ராசரின் திருநடனங்கள் பக்தர்களின் உள்ளத்தைப் பரவசப் படுத்தும் பாங்கில் உயர்ந்து விளங்குகின்றன.

அருள்மிகு கற்பகநாதசுவாமி ஆலயம்

கற்பகநாதர்குளம் : திருத்துறைப்பூண்டி வட்டம்

பேரன்புடையீர்!

காவிரி தென்கரை தலங்களுள் 109 வது தலமாக அமைந்து உள்ளது. கற்பகநாதர்குளம் அருள்மிகு கற்பகநாதசுவாமி திருக்கோயிலாகும். திருஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்ற தலம். சேக்கிழார் வணங்கிப் போற்றிய தலம். வேறு எத்தலத்துமில்லாத ஒரு சிறப்பு இங்கு சுவாமி எட்டுப்பட்டை வடிவில் உள்ளார்.

அம்பாளின் திருநாமம் அருள்தரும் பாலசௌந்தரி. சக்தி மிகு தெய்வம். இவ்வாலயம் விநாயகர் மாங்கனி பெற்ற தலமாகும். கற்பக விநாயகர் தனிச் சன்னிதானமாக இடம் பெற்றுள்ளது சிறப்புக்குரியது.

தற்போது 45 ஆண்டுகளுக்குப்பின் இவ்வாலயத்தில் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

வருகை தருவீர்! அருள் பெறுவீர்!

ந. கலைமணி B.A.
நிர்வாக அதிகாரி

திருவாரூர்த் தேவாசிரியம்

சொல்லேருழவர் சோழன்
5, இராசாசி சாலை வட்டம் 12, நெய்வேலி–607 803.

ஞானம் மிகுந்த நமது நாட்டில் பூரண ஞானம் பொலியும் இடம் தென்னாடு என்றழைக்கப்படும் தமிழ்நாடு ஆகும். அதனால்தான் எந்நாட்டுக்கும் இறைவனாக விளங்குபவன் தென்னாட்டில் சிவனாக விளங்குகிறான் என்று சிறப்பித்துக் கூறியுள்ள னர். தேவார ஆசிரியர்களால் பாடப்பெற்ற இருநூற்று எழுபத்துநான்கு சிவத்தலங்களில் காவிரியின் தென்கரையில் அமைந்தவை நூற்று இருபத்தேழு ஆகும். அவற்றுள் 'பிறக்க முக்தி' அளிக்கும் திருப்பதி திருவாரூர் ஆகும். உலக புருடனின் மூலாதாரம் திருவாரூர். முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவலோகத்தில் பெற்றுவந்து, தாபித்து வழிபட்ட இடங்கள் சப்த விடங்கத் தலங்களாகும். அந்த ஏழு தலங்களுள் சிறப்பு மிக்கது திருவாரூர். ஏனெனில் திருமால் தன் இதயத்து வைத்து வழிபட்ட விடங்கர் குடிகொண் டுள்ள இடம் திருவாரூர். தேவர்களும் இலட்சுமியும் வந்து வழிபாடு இயற்றி மகிழ்ந்து செல்லும் பூங்கோயிலைப் பெற்றுள்ள ஊர் திருவாரூர். ஆரூர் குடிகொண்ட தியாகேசரின் திருக்கோயில் பெருமைகளால் மட்டுமன்று அளவினாலும் பெரியதாகும். அந்தமில் புகழ் அமைந்த இந்த ஆரூரைப் பற்றிப் பட்டினத்தடிகள் "ஆரூர் இங்கிருக்க, அவ் வூர்த் திருநாளென்று ஊரூர்கள் தோறும் உழலுவீர்" என்ற அடிகளால் புகழ்ந்துரைக்கின்றார். 'ஏழுலகும் வணங்கு பெரும் திருவாரூர்' என்று அழகும் புகழும், பெருமையும் புலப்படப் பாடுவார் தெய்வச் சேக்கிழார். ஒருமுறை புற்றிடங்கொண்ட பெருமானின் பூங்கோயிலை கண்டுவிட்டால் அதுவே கண்ணிறைந்த காட்சியாகிவிடும். அதனால்தான் 'கண்ணி றைந்த திருவாரூர்' என்று சிறப்புடன் அழைக்கப்பெற்றது. இந்த ஆரூருக்குப் பல பெயர்கள் உண்டு.

பூங்கோயில், அந்தரகேசுரபுரம், ஆடகேசபுரம், கந்தபுரம், கலிசெலாநகரம், கமலாலயபுரம், சக்திபுரம், ஸ்ரீபுரம், பராசக்திபுரம், சமற்காரபுரம், க்ஷேந்திரவரபுரம், தேவயாகபுரம், முசுகுந்தபுரம், மூலாதாரபுரம், வன்மீகநாதபுரம், தேவாசிரியபுரம் என்ற பல பெயரைக் காரணங்கருதிச் சூட்டியுள்ளனர். தேவாசிரியபுரம் என்ற பெயர் அமைந்த தற்கான காரணமும் அதனால் விளைந்த காரியமும் எண்ண எண்ண இனிக்கும் இயல் புடையன. அடியார்கள் வரலாற்றை நாம் அறிந்து மகிழக் காரணமானதும், மூவர் தேவாரம். நம் கைக்குக் கிடைக்கக் காரணமானதும் இந்தத் தேவாசிரியமே! சைவர் களது அக உணர்வைப் புலப்படுத்தும் பதிகங்கள் தேவாரமாகவும், அதனைப் பாடிய அடியார்களின் தொண்டினை விளக்கியுரைப்பது திருத்தொண்டர் மாக்கதையாகவும் அன்றும் இன்றும் என்றும் விளங்கிச் சைவத்தை நிலைநிறுத்தி வருகிறது. சைவர்களுக்கு இரண்டும் இரண்டு கண்களாகும்.

'புற்றிடங்கொண்டாரைப் பொன்னுலகத் தேவர்கள் எப்பொழுதும் வழிபடுவ தாலும், தேவர்க்கும் மேலாகிய அடியார்கள் ஆசிரியத் தகவுடையராய்க் குழுமிய இடம்

ஆகையாலும், இங்கு 'தேவாசிரிய மண்டபம்' என்னும் தெய்வத் திருச்சபை இருப்பதாலும் இவ்வூர் 'தேவாசிரிய புரமாகியது' என்பது முன்னோர் மொழி.

இந்த மண்டபம் கீழைக்கோபுர வாயில்வழியாக உள்ளே நுழையும்போது தெரியும் ஆயிரங்கால் மண்டபமே தேவாசிரியம் ஆகும். திருக்கோயில் கற்றளியாக மாறுவதற்கு முன்பு பூங்கோயிலாக விளங்கியது. அக்காலத்தில் இந்த தேவாசிரிய மண்டபம் 'தேவாசிரியன் காவணம்' என்றழைக்கப் பெற்றமையைப் பெரியபுராணத்தால் அறியலாம்.

'திசையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே''

என்ற அப்பர் பெருமான் அருளியவாக்கும் ஆரூர்க் கோயிலின் பழமையைப் புலப்படுத்தும். சைவத்தலங்களிலேயே திருமூலட்டானம் என்று சிறப்பிக்கப் பெறுவதும், இன்ன காலத்தது என்று அறியவொண்ணாப் பழமையுடையதும் ஆகிய தலங்கள் இரண்டாகும். அவை தில்லையும், திருவாரூரும் ஆகும். அதற்கொத்த பழமையுடையதுதான் தேவாசிரியக்காவணம்' என்றழைக்கப்பெற்ற 'தேவாசிரிய மண்டபம்' ஆகும்.

கமலாலயம் என்னும் திருவாரூர்ப் புராணத்தை எழுதிய சிதம்பரம் கண்கட்டி மறைஞான சம்பந்தர் தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பைப் புலப்படுத்துகிறார்.

'பொருவரிய திருவாரூர்ப் புற்றிடங் கொண்டருள் மூலட்டான னென்னும்
பரமசிவன் பாங்கான சன்னிதிக்கு வாமதல பாகந் தன்னில்
திரமுறு தேவாசிரிய மண்டபத்துப் பரமசிவன் வாக்கைத் தேர்ந்து
தருமமுதல் நெறியுணர்த்துஞ் சைவரும் வைதிகரும் உறுஞ்சங் கந்தன்னில்

என்பது அவரது பாடல்.

ஆசிரியர், குரவர் என்ற சொற்கள் சைவத்தின் வழி தம்பாற்குற்றம் ஏதுமின்றிப் பிறர் குற்றத்தைப் போக்கவல்ல ஞானிகளையே குறிப்பதாகும். அதன் உயர்வு விளங்குமாறு இங்கே, அவர்கூடும் இடம் தேவாசிரியம் என உரைக்கப்பெற்றது. 'அறன் அறிந்துமூத்த அறிவுடையார் கேண்மை, திறன் அறிந்த' சான்றோர்கள் தேர்ந்து வாழும் இடமே தேவாசிரியம். தெளிவாக விளங்க உரைக்க வேண்டுமென்றால், இறைவனை ஒத்த அடியாரையே தேவாசிரியர் எனக்கொள்ளவேண்டும். ஒருமையுடன் அவன்தன் திருமலரடி நினைக்கின்றார் உறைகின்ற இடமே தேவாசிரியம் ஆகும். அவர்கள் அடியார்க்கு அடியராம் தன்மையினர்- தேவர்களே இவர்களது சாபத்திற்கு அஞ்சுந்தன்மையினர். தேவர்கள் தேவாசிரியத்திற்கு வந்து அங்கு குழுமியுள்ள அடியார்களை வணங்கிய பின்னரே பூங்கோயிலுக்குள் சென்று புற்றிடங் கொண்ட பெருமானை வழிபட்டு மகிழ்வர் என்றால் அதன் பெருமையை அளவிட்டு அறிய,உரைக்க முடியுமா? தேவார மூவரும், பிற நாயன்மார்களும் தேவாசிரியன் மண்டபத்து அடியார்களை வணங்கிய பின்னரே பூங்கோயிலுக்கு வழிபடச்செல்லுவது மரபு என்று பேசுகிறது பெரியபுராணம். அந்தத் தேவாசிரியத்தில் குழுமியுள்ள அடியார்களும் பூங்கோயிலில் வாழும் சிவலிங்கமும் ஒன்றே என்பது சைவங்காத்த சான்றோர்கள் கூற்றுமாகும். சிவஞான போதமும்,

'மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே'

என்று இந்த ஒற்றுமையை உணர்த்துகிறது.

அவர்களுக்கு ஏன் அப்படிப்பட்ட சிறப்பு? என்ற எண்ணம் எழுகின்ற வேளையில் அவர்களது தெய்வப்பண்புகளைச் சேக்கிழார் பெருமான் நெஞ்சம் நெகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கூறுவதைப்பாருங்கள்.

'கேடும் ஆக்கமும் கெட்டதிருவினர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்.'

இந்த இயல்புடையாரே சிவபெருமான் அல்லது சிவபெருமானுக்கு இந்த இயல்பு! அப்படிப்பட்ட தூயநிலையும் நெறியும் துலங்கும் அடியார்கள் கூடியிருந்த தேவாசிரியன் மண்டபம்.

'பூத நாயகர் புற்றிடங் கொண்டவ
ராதி தேவ ரமர்ந்த பூங் கோயிலில்
சோதி மாமணி, நீள் சுடர் முன்றில் சூழ்
மூதெ யில்திரு வாயின் முன் னானது.'

அதனால்தான் புற்றிடங்கொண்ட பெருமானின் பூங்கோயிலைப் போலவே தேவாசிரிய மண்டபத்தையும் சிறப்பிக்கின்றார் தெய்வச் சேக்கிழார். பல இடங்களில் அதன் சிறப்பு விளங்க எடுத்துரைக்கிறார். திருக்கூட்டச்சிறப்பு, விறன்மிண்ட நாயனார் புராணம், தடுத்தாட்கொண்ட புராணம், ஆரூர்கோயிலின் சிறப்புகளை விளக்கும் பகுதி முதலியன அவற்றுள் சிறந்த இடங்களாகும். இத்தத்தேவாசிரிய மண்டபர்தான் சைவத்தைக் காத்தஇடம், சுந்தரர் அவதார நோக்கம் நிறைவேறிய இடம், பெரிய புராணத்துக்கு வித்திட்ட இடம். ஆண்டவன் சிறப்பும் அடியவர் சிறப்பும் ஒன்றென உறுதி செய்யப்பட்ட இடம்.

பரவையிடம் தூது நடந்த இறைவனுடன் தேவர்களும் பூதகணத்தவரும் பின் தொடர்ந்தனராம். பின் தொடருவதற்கு முன்பாகத் தேவாசிரியத்துக்கு வந்து அடியார்களை வணங்கிய பிறகே பின் தொடர்ந்தனராம். என்னே அதன் சிறப்பு! அதனால்தான் தேவாசிரியம் ஆயிற்றோ? அப்படியென்றால் அந்த தேவாசிரிய மண்டபத்தில் சூழ்ந்திருக்கும் அடியார்களின் சிறப்புத்தான் என்னே?

அப்படிப்பட்ட பெருமை மிகுந்த அடியார்களுள் ஒரு அடியாரே விறன்மிண்டர். திருவாரூர் மும்மணிக்கோவைபாடிய பெருமைக்குரிய சேரமான் பெருமாள் நாயனார் ஆட்சிசெய்த சேரநாட்டிலிருந்து பல தலங்களை வழிபட்டு. நிலையாகத் தங்கவேண்டிய இடம் திருவாரூர் தேவாசிரியமே என முடிவு எடுத்துத் தங்கியவர் விறன்மிண்டர். குரு லிங்க சங்கம் வழிபாடுதான் சைவர்கள் வழிபாடு, அம்முறையில், 'விளங்கு திருச் செங்குன்றூர் வேளாண் தொன்மை விறன்மிண்டர்' ஒப்பற்றவர்; அடியார்களையும் லிங்கத்தையும் சிவனெனவே வழிபட்டவர்.

கயிலையில் திருத்தொண்டு செய்த ஆலாலசுந்தரர் பூவுலகில் தம்கருமம் ஆற்றுவான் வேண்டி, திருவெண்ணெய் நல்லூரில் சுந்தரராகத் தோன்றினார். மணப்பருவம் வந்தெய்த பெற்றோர் மணம்முடிக்க ஏற்பாடு செய்தனர். திருமணத்தைத் தடுத்துத் தமக்கு அவர் குலம், வழிவழி அடிமை (இங்கு அடியவர்) என்பதனை, 'ஆட்சியில், ஆவணத்தில், அயலார் காட்சியில்' ஒன்றை அறங்கூறு அவையகத்திற்குக் காட்டிச் சுந்தரரை ஆட்கொண்டு ஆரூருக்கு வரப்பணித்தார் சிவபெருமான். அழைத்தது மட்டுமா? பரவைக்கும் அவர்க்கும் திருமணம் செய்து வைத்தார்; என்றும் சுந்தரர் சுந்தரராகவே காட்சிதரவும் ஆணையிட்டார். இறைவன் தம்மை தோழனாகவும் சுந்தரர்க்குத் தந்தார். தாசமார்க்கத்திற்குத் திருநாவுக்கரசரும், சற்புத்திரமார்க்கத்திற்குத் திருஞானசம்பந்தரும் சகமார்க்கத்திற்குச் சுந்தரரும் சன்மார்க்கத்திற்கு மாணிக்கவாசகரும் சிறந்த சான்றுகளாகி வழிகாட்டுகின்றனர். இந்த நான்கு மார்க்கங்களிலும் இறைவனோடு தோழனாக வாழும் சிறப்பு சுந்தரருக்கே வாய்ந்தது. இப்படிப்பட்ட ஒப்பற்ற பெருமை தனக்குக் கிடைத்த காலத்திலும் அடியார்கள் இறைவனோடு ஒத்தவர் என்று எண்ணி அவர்களை முறையாக வணங்கி வழிபாடு செய்தவர் சுந்தரர் பெருமான். ஆரூரரை ஆரூரில் அடியார்கள் வரவேற்கப் புகுந்தபோது முதலில்அந்த அடியார்களை வணங்கிய பிறகே புற்றிடங்கொண்டாரிடம் சென்றார். அந்தச் செயலை,

'தேனிறை கற்பகவாச மாலைத் தேவாசிரியன் தொழுது இறைஞ்சி

ஊனும் உயிரும் உருக்கும் அன்பால் உச்சி குவித்த செங்கைகளோடு'

சென்றார் எனப்புராணம் கூறுகின்றது.

பரவையாரின் திருமணத்தற்குப் பின்னரும் முறையாக அடியாரைத் தொழுத பின்னரே ஆண்டவனைத் தொழுது வந்தார். ஒருநாள் தேவாசிரிய மண்டபத்தைக் கடக்குங்கால், ஆங்குள்ள அடியார்கள் பெருமையை எண்ணி அகங்குழைந்த நிலையில்

'இவர்க்கு யானடியேனாகப் பண்ணுநாள் எந்நாள்?'

என்ற சிந்தனையில் அகவழிபாடு செய்து புறவழிபாடின்றி உட்புகுந்தார். தேவாசிரியத்திருந்த அடியார் கூட்டத்தை வணங்காது செல்லும் சுந்தரரைப் பார்த்து, அடியார் விறன் மிண்டர்

'சிவனடியார் தம்மைத் தொழுது வந்து அணையாது'
ஒருவாறொதுங்கும் வன்றொண்டர் புறகு' என்று

கூறியதோடன்றி,

சேணார் மேருச்சிலை வளைத்த சிவன டியார் திருக்கூட்டம்
பேணாதேகும் ஊரனுக்கும் பிரானாந்தன்மை பிறைசூடிப்
பூணாரரவம் புனைந்தார்க்கும் புறகு' என்னும் போது

நமக்கே உடம்பு சிலிர்க்கிறது. இறைவனுக்கும் உடல் சிலிர்த்தது. தன்னருகே வந்து வணங்கி நிற்கின்ற சுந்தரரைப் பார்த்தார். என்ன செய்வது சுந்தரர் மீது வைத்த அன்பு ஒரு பக்கம். அடியார் விறன்மிண்டர் கொண்டுள்ள சினம் ஒரு பக்கம். உடனே சுந்தரரை அருகு அழைத்து அடியார் பெருமை பற்றி உபதேசம் செய்கிறார்.

"பெருமையால் தம்மை ஒப்பார்
பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார்
ஊனமே ஒன்று மில்லார்

அருமையால் நிலையின் நின்றார்
அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையுங் கடந்து நின்றார்
இவரைநீ அடைவா யென்று'' கூறியதோடு

'நீதியால் அவர்கள் தம்மைப் பணிந்துநீ நிறைசொன் மாலை
கோதிலா வாய்மையாலே பாடெனக் கட்டளையிட்டார்.

பாட்டுவித்தால் பாடுகிறேன் என்று ஏற்றுக்கொண்ட சுந்தரர்,

'இன்னவா நின்ன பண்பென் றேத்துகேன் இதற்கு யானார்
பன்னுபா மாலைபாடும் பரிசெனக் கருள்வாய்' என்று கேட்டார்.

இறைவனும் மறையளித்த திருவாயால்,

'தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்' என்ற தொடக்கங் கொடுத்துத் தொடுக்கச் சொல்ல, சுந்தரர் பெருமான் அறுபத்துமூன்று தனியடியார்களையும் ஒன்பது தொகையடியார்களையும் திருத்தொண்டத் தொகைமூலம் வணங்கிப் பாடி முடித்தார்.

இதைக்கேட்ட விறன்மிண்டர், 'புறகு' என்று விலக்கியவர் நீர்கிழிய எய்த வடுப்போலத் தம் சினம் நீங்க,'அடியார் உடனாம் உளதென்றார்', என்னே அவர்தம் கருணை! அவருடைய கூற்று, சிவானுபவம் மேலிட்டுச் சிவாதீனமாய் நின்றதால் நமக்கெல்லாம் நற்பயன் விளைப்பதாயிற்று. விறன்மிண்டர் நந்திக்கணத்துள் ஒருவரானார். இந்த அரிய நிகழ்ச்சி ஆரூரில் நடந்ததால் சுந்தரர் 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்று பாடினார். சிறந்த அடியார்கள் குழுமி வாழும் தேவாசிரியத்தைப் பெற்ற பெருமையினால் திருவாரூரும் 'தேவாசிரியபுரம்' என்ற சிறப்புப் பெயரை உடையதாயிற்று.

விண்ணவர் தொழ நின்ற வீதி விடங்கன் திருத்தேர்

த. நாகராசன் பி, எஸ், சி.,
[துணை ஆணையர் அறநிலயத்துறை (ஓய்வு)]

பல்வேறு கோட்பாடுகளைக் கொண்ட சமுதாய வாழ்வில் பிரிந்து நிற்கின்ற மக்கட் கூட்டத்தை ஒருங்கிணைக்க, ஒற்றுமைக்கு வித்தாக இருப்பது கோயில் களே. அத்தகைய திருக்கோயில்களில் நடைபெறும் விழாக்கள் அனைத்தும், கடும் உழைப்புக்குப் பின் ஓய்வும் உற்சா கமும் பெற அடிநிலையாக உள்ளன. என்றாலும்அவைபல்வேறு இனமக்களை ஒற்றுமைப்படுத்தும் மதக்கொள்கை களையும், நாகரிகத்தையும் இறவாமல் பாதுகாக்கும் ஆற்றலுடையன.

சிறப்பாகத் தேர்த்திருவிழாக்கள் பல இனத்தவர்கள் வாழும் ஊரை ஒன்று கூட்டி அவர்களிடையே ஒற்றுமை உணர்ச்சியை ஊட்டி, அவர்கள் அனை வரையும் ஒருங்கு கூடச்செய்யும் ஒப்பற்ற பணியை ஆற்றுகின்றன.

''உதித்தவர் உதித்திடா ஆரூர்'' என்று புகழப்பட்ட திருவாரூர்த் தொன் னகரில் உள்ள தியாகேசர் திருக்கோயில், சைவ சமய வரம்பாகத்திகழ்வது, சித்திரம் சிற்பம் முதலிய கலைகளுக்கு உறைவிட மாக விளங்குவது, சரித்திர உலகுக்குப் பேரரணாகத் திகழ்வது.

வேதாரணியம் விளக்கழகு,
திருவாரூர்த் தேரழகு,
திருவிடைமருதூர் தெருவழகு

என்ற வழக்கத்தில் இருந்துவரும் பழ மொழி திருவாரூர்த் தேரின் சிறப்பைக் கூறும். அங்கு எழுந்தருளியுள்ள இறை வன் தியாகேசப் பெருமான் தேரோடு இணைத்து 'ஆழித்தேர் வித்தகர்' என்று புகழாரம் சூட்டப்பெறுவர்.

'ஆடாதும் ஆடிப்பாகற்காய் பறிக்கும் தியாகர்' என்ற பழமொழியும் இறைவன் ஆழித்தேரில் அசைந்தாடி வரும் அழகு பற்றி ஏற்பட்டது.

''ஆரூரன் சன்னிதிபோல் ஆரூரன் ஆலயம் போல்
ஆரூரன் பாதந் தழுகுபோல் - ஆரூர்
மருவெடுத்த கஞ்சமலர் வாவிபோல் நெஞ்சே
ஒருவிடத்தில் உண்டோ உரை.''

என்று தஞ்சை சரசுவதி மகாலில் உள்ள ஒரு கையெழுத்துப் பிரதியில் புகழப்பட்ட திருவாரூரில் உள்ள தேர்.

''விண்ணவர் தொழநின்ற வீதிவிடங் கன் திருத்தேர்'' என்றுசிறப்பித்துக்கூறப் பெற்றுள்ளது.

நிலமும், புலமும், நகையும் நட்டும் ஏராளமாக உள்ள ஆலயங்களில் பாரமுகு மிகு ஆரூர் ஆலயத்திற்குரிய பெருமையே அங்குள்ள ஆழித்தேரினால்தான். உயரத் தாலும், பருமனாலும், கலை மலிந்த கட்டுமானத்தாலும், அழகு உமிழும் அலங்காரத்தாலும், அகிலமும் ஆட்டும் தியாகர் அசைந்தாடி ஆழித்தேரில் வரும் அழகாலும், தேரோட்டத்தின்போது தெரு முனைகளில் திரும்பும் வன்மையாலும்

திருவாரூர்த் தேர் தனியழகு படைத்தது; தனித்தன்மை வாய்ந்தது.

இவ்வூர்த் தேரைப் போல மாதிரியாக ஒன்று செய்து சென்னைக் கண்காட்சி சாலையில் திராவிடச் சிற்பத்தின் எடுத்துக்காட்டாக வைத்திருப்பதை ''என்சைக்ளோப்பீடியோ பிரிட்டானிகா'' கூறுகிறது. அண்மையில் சென்னையில் எழுப்பிய வனப்புமிக்கவள்ளுவர்கோட்ட வடிவமைப்பும் திருவாரூர்த் தேரின் உருவில் செய்திருப்பதும் திருவாரூர்த் தேருக்கு கட்டியங்கூறும்.

ஒரிசா மாநிலத்தில் உள்ள பூரி ஜகன்னாத சுவாமி கோயிலின் தேர்தான் உலக புகழ்பெற்றது என்பார் சிலர். என்றாலும், கலையழகும்,கவின் அமைப்பும்கொண்ட திருவாரூர்த் தேருக்கு அது இணையாகாது என்பர் உண்மை உணர்ந்தோர்.

தமிழக ஆலயங்களில் தேர்விழா ஒரு சிறப்பான திருவிழாவாகும். அது பெரும்பாலும் பெருவிழாவின் போது 5வது நாள் 7ஆம் நாள், 9ஆம் நாள் ஆகிய நாட்களில் நடைபெறும் அப்பொழுது தேரில் உற்சவத் திருமேனிகளை அலங்கரித்து வைத்து வலம் வரச்செய்வது வழக்கம்.

திருக்கோயிலின் விழாக்களில் ''தேரோட்டம்'' என்பது ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடப்படும். 'ஊர் கூடித் தேர் இழு' என்ற பழமொழிக் கொப்ப ஊர்ப் பொதுமக்கள் ஒன்று கூடித் தேர் இழுக்கும் பணியில் ஈடுபவார்கள். தேர் விழாவின் போது அண்டை ஊர்களில் உள்ள நிலக்கிழார்கள் விவசாய அறுவடை வேலைகளை நிறுத்தம் செய்து, தம் தம் விவசாயத் தொழிலாளர்ப் பெருமக்களுக்குப் படிபோட்டுத் தேரிழுக்க அனுப்பி வைப்பார்கள்.

செல்வச் செழிப்புள்ள ஆலயங்களான சிதம்பரம், மதுரை, இராமேசுவரம் திருவண்ணாமலை, திருவரங்கம் ஆகியவற்றில் தேரோட்டம், ஆண்டில் பல தடவைகள் நிகழ்வுறும். கோயிலுக்குச் சென்று வழிபட இயலாதவர்கள் நலன் கருதி இறைவனை அவர்களுக்கருகில் கொண்டு சென்று வழிபடும் இந்த வாய்ப்பை முன்னோர்கள் ஏற்பாடு செய்து உள்ளனர்.

இறைவன் திருமேனிகளை வெவ்வேறு உருவம் அமைந்த ஊர்திகளில் வலம்வரச் செய்வதை விடக் கோயிலே போன்று வடிவமைக்கப்பட்ட தேரில் அத்திருமேனிகளை எழுந்தருளச் செய்து 'இறைவன், தன் பரிவாரமூர்த்திகளுடன் நான்கு வீதிகளிலுமுள்ள ஒவ்வொரு இல்லமும் சென்று அவர்களுக்குக் காட்சி தந்து அவர்களை உய்விப்பது' என்ற நல்ல நோக்கத்தில் இத்தகைய தேர் விழாக்கள் நடைபெறுகின்றன.

இறைவன் உறையும் கோயிலைப் போன்றே அமைக்கப்பட்டது தேர். தேரின் அடிப்பாகத்தில் பூலோக வாழ்க்கை, ஆகாய வாழ்க்கை, சுவர்க்க வாழ்க்கை ஆகியவற்றைச் சித்தரிக்கும் அழகிய பல உருவங்களைக் காணலாம். பூலோக வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் அரசன் கொலுவீற்றிருக்கும் காட்சிகளும் நாட்டியக் கலைகளின் நளினங்களும், உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கும். சிருங்கார ரசத்தைச் சித்தரிக்கும் ஒருசில பொம்மைகளும் ஆங்காங்கே மூலை முடுக்குகளில் இடம் பெற்றிருக்கும்.

வான வாழ்க்கையைச் சித்தரிக்கும் பொம்மைகளில் கின்னரர், கிம்புருடர் போன்றவை இருக்கும் சுவர்க்க வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் விஷ்ணு நடராசர், ஆறுமுகர், கணநாதர் ஆகிய திருவுருவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். சிவன் கோயில் தேரில் வைணவக்கதைகள் சித்தரிக்கப்பட்ட உருவங்களைக் காணலாம்.

விழாக்காலங்களில் விமானம் போன்று கூடாக இருக்கும் மேற்கோப்பு மூங்கிலால் கட்டப்பெற்று, சித்திரங்கள் வரையப் பட்ட பல வண்ணத்தேர்ச் சீலைகளால் மூடப்பட்டிருக்கும். அழகிய உருவங்கள் கொண்ட ஆலவட்டங்கள் தோரணங்கள் தேர்ச்சீலைகள், தொம்பை, வாசமாலை கள் மேல்கட்டி ஆகியவற்றால் இப்பாகம் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வாழைக் குலைகளுடன் வாழைமரங்கள், தென்னங் குலைகள், பனங்குலைகள், ஈச்சங்குலை கள் கட்டப்பட்டிருக்கும். மேற்கோப்பு சில இடங்களில் அடிப்பாகம் போன்றே நிரந்தரமாகச் செய்யப்பட்டிருப்பதும் உண்டு. கோவையை அடுத்த பேரூர்க் கோயிலின் தேரின் மேற்பாகம் இரும்புச் சட்டத்தால் வேயப்பட்டுள்ளது.

தேரிழுப்பது என்பது செயற்கரிய ஒரு செயலாக ஆன்றோர்களால் கருதப் பட்டது. கோயிலில் கொடியேறிவிட்டால் அவ்வூர் மக்களிடையே இனப்பாகுபாடு இருக்கக்கூடாது; கட்சி மாச்சரியம் அறவே கூடாது; சாதி அழுக்குகளும், வழக்குகளும் இருக்கக் கூடாது என்ற கருத்தில் ஊர் வரரியப் பெருமக்கள் ஒன்று கூடித்தேரை இழுக்கும் பணியில் ஈடுபடு வது வழக்கம் "தேர் நிலைக்கு வர்து விட்டது" என்ற வாசகமே, ஒரு செயற் கரிய செயல் செய்து முடிக்கப்பட்டதைக் காட்டவே முதுமொழியாக ஏற்பட்டது.

தேரோடும் வீதிகளில் தேர் ஓடும் போது தேர் தாறுமாறாக ஓடாமல் சீராக நிலையாக ஓட 'முட்டுக்கட்டை' போடு வது வழக்கம். இந்தப் பணியைப் பரம் பரை பரம்பரையாகச் சில குடும்பத்தாரே செய்து வருவர். சில சமயங்களில் அந்தக் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் கூட 'முட்டுக்கட்டை' போடும் பணியை மேற் கொள்ளுவர்.

மிகப்பழைய காலத்திய மரத்தாலான பல தேர்கள் காலம் பல க ந்ததால், வெயில், மழை போன்ற இயற்கையின் சீற்றத்தால் சிதைந்து போய்விட்டன. சில ஆலயங்களின் தேர்கள் முறையாகப் பாதுகாக்கப்படாமல் சிதைந்து செல் லரித்தும் போய்விட்டன. சில அரிய தேர்ப் பொம்மைகள் கலைத் திருடர் களால் களவாடப்பட்டும் போயின.

சக்கரத்தை ஆதாரமாகக் கொண்டு செய்யப்பட்ட ஊர்திகள் நம் நாட்டில் தொன்று தொட்டு இருந்து வந்துள்ளன. இவைகள் தேர்கள். சப்பரங்கள், வண்டிகள் எனப் பெயர் பெற்றன, இவற்றில் தேர் மற்றைய ஊர்திகளை விடச் சிறந்த ஊர்தியாகும். தேர்களைப் பெரும்பாலும் போர் வீரர்களும், அரசர் களும் பயன்படுத்தி வந்தனர் தேரின் மீது அமர்ந்து போர் செய்யும் வல்லுநர் களுக்கு 'அதிரதர்', 'மகாரதர்' என்ற பெயர்களுண்டு. இராமரது தந்தைக்குத் 'தசரதர்' என்ற பெயரே அவர் எட்டுத் திக்குகளுடன் ஆகாயம், பூமி ஆகிய பத்துத் திக்குகளிலும் தமது தேரை வல்ல மையுடன் செலுத்தியதால் தான் வந்தது என்பர்.

இரண்டு முதல் ஒன்பது சக்கரங் களைக் கொண்ட பலவகைத் தேர்கள் செய்யப்பட்டன. தேர் செய்யும் தொழிலே ஒரு கலையாகக் கருதப்பட் டது. "மானசாரம்" என்ற சிற்ப நூலில் தேரிலக்கணம் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது.

இத்தனை சக்கரங்களைக் கொண்ட தேர் இவ்வித வேலைக்கு, இன்னாரால் தான் செலுத்தப் படவேண்டும் என்ற வரை முறைகள் இவ்விலக்கணத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இருக்கு வேத காலத்திலேயே தேரின் கடையாணி போன்ற நுண்ணிய பாகங்கள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. கடோபநிஷத்தில் தேர், தேர்ப்பாகன், குதிரை முதலியவை

மனிதனுடைய உடல், புலன்கள் ஆகிய வற்றுடன் ஒப்பிடப்பட்டுள்ளன.

தேர்களில் தெய்வங்களின் திருவுரு வச்சிலைகளை வைத்து வலம் வருவது தமிழகத்தில் தொன்று தொட்டு நடை பெற்று வரும் நிகழ்ச்சி என்பதை 5-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் இந்தியா வுக்கு வருகை புரிந்த 'பாஹியான்' என்ற சீன யாத்திரிகன் தான் எழுதிய நூலில் தான் கண்ட தேரோட்டத்தைப் பற்றிக் குறிபிடுவதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்

பிற்காலச்சோழர்கள் காலக்கல்வெட் டுக்களிலிருந்தும், இலக்கியங்களிலிருந் தும் சோழர் காலமான 10, 11ஆம் நூற் றாண்டிலிருந்தே கோயில்களில் தேர் விழா நடைபெறுவது நடைமுறையில் இருந்து வந்ததென அறியப் படுகின்றது. விஜய நகர சாம்ராச்சியம் செழிப்பாக இருந்த காலத்தில் தேர் விழா சிறப்பாக நடந்தது எனவும் அறியக்கிடக்கிறது.

கல்தேர் தமிழ்நாட்டுகே உரிய தனிச் சிறப்புடையதாகக் கருதப்பட்டது. 9, 10 ஆம் நூற்றாண்டில் திருவாரூரில் விட்ட வாயிலுக்கு அருகில் கட்டப் பெற்ற கல் தேரும், கன்றும், பசுவும் காணத்தக்கன. கற்றேரின் சக்கரங்கள் ஒட்டுக்கல் வேலைப்பாடுடையன. ஆரக்கால் முத லியன அமைந்திருப்பதும் ஒரு தனி அழகு இதனால் மனுநீதிச்சோழன் தேரில் பவனி வரும் வழக்கம் உடையவன் என்பதை அறியலாம்.

தாராசுரத்தில் 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற மண்டபம் கல்லாலான சக்கரங்கள், குதிரைகள் ஆகியவற்றைக் கொண்டது. இது பழமையானது; அழ கானது.

விஜயநகர சாம்ராச்சியத்தின் தலை நகரான ஹம்பியில் 15,16 ஆம் நூற்றாண் டில் செய்யப்பெற்ற கல்தேர் காண்போ ரைத் தன் அழகால் ஈர்க்க வல்ல கவின மைப்பு கொண்டது.

ஒரிசா மாநிலத்தில் கடற்கரையோர முள்ள 'கொனராக்' என்ற ஊரில் உள்ள மிகப்பெரிய சூரியன் கோயில் 14 ஆம் நூற்றாண்டில் தஞ்சை சோழ மன்னர் ஒருவரின் உறவினரான கலிங்க மன்ன னால் கட்டப்பட்டது. தஞ்சைக் கலை யழகில் நெஞ்சைப் பறிகொடுத்த அரசன் தஞ்சைச் சிற்பிகளைக் கொண்டு கட்டப் பட்ட அருங்கலைப் படைப்பு இது. பனி ரெண்டு கல்சக்கரங்களையும் ஏழு குதிரைகளையும் கொண்ட இக் கல்தேர் கை தேர்ந்த சிற்பிகளின் நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்டது; காண் போரைப் பரவசத்தில் ஆழ்த்துவது.

கல்லிலே கலை வண்ணங் கண்ட தமிழர்கள் பெரிய திருக்கோயில்களில் காலத்தால் அழியக் கூடிய பெரிய மரத் தேர்களைச் செய்ததுடன் மனநிறைவு கொள்ளாமல் வெள்ளியிலான அழகிய சிறிய தேர்களைச் செய்து தெய்வத் திரு மேனிகளை அவற்றில் அமர்த்தி வீதி உலா வரச் செய்து மகிழ்ச்சியடைந்தனர்.

திருத்தணித் திருக்கோயிலுள்ள வெள் ளித் தேர் திருவலம் சிவானந்த மௌன சுவாமிகளது முயற்சியால் செய்யப்பட் டது ஒவ்வொரு ஆண்டும் இறுதி நாளான டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் இத்தேரில் முருகன் பவனி வருவார். பெரும்பாலான வெள்ளித் தேர்கள் இறை உணர்வு மிக்க செல்வந்தர்களால் செய்யப்பெற்று ஆலயங்களுக்குத் தானமாக வழங்கப் பட்டன. மதுரை, திருவண்ணாமலை, இராமேசுவரம் ஆகிய ஆலயங்களில் உள்ள வெள்ளித் தேர்கள் இவ்வகை யைச் சார்ந்தவையே. சிக்கல் சிங்கார வேலவன் ஆலயத்தில் உள்ள வெள்ளித் தேர் அவ்வாலய நிதியைக் கொண்டு செய்யப்பட்டது.

மரத் தேரிலும், வெள்ளித்தேரிலும் வீதி உலா வந்த இறைவன், இறைவியர் இரு நிதி உள்ள பெரிய திருக்கோயில்களில் தங்கத் தேரில் பவனி வரத்தொடங்கினர். முதன் முதலில் தங்கத் தேரில் பவனி வந்தவர் பழநி முருகன் தான். பழநி முருகனின் தங்கத்தேர் அக்கோயிலின் அப்போதைய அறங்காவலர் திரு V.V.C.R. முருகேச முதலியார் அவர்களால் உபயமாகச் செய்து வைக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து திருச்செந்தூர். திருத்தணி, சுவாமிமலை வாழும் முருகப்பெருமான்களும், மதுரை மீனாட்சி அம்மனும். திருவேற்காடு, சமயபுரம் மாரி அம்மன்களும், சங்கரன் கோயில் சங்கரநாராயண மூர்த்தியும், சென்னை கந்தர் கோட்டத்தில் உள்ள கந்தவேளும் தங்கத் தேரில் பவனி வரும் காட்சியைக் காணக் கண் கோடி வேண்டும்.

பண்டைக் காலத்தில் திருவாரூர் தியாகேசப் பெருமான் தேருக்கு எழுந்தருளும் போது பொன்பூ. வெள்ளிப் பூக்களை வாரி இறைப்பதாகக் கூறுவர். இதனை, 'பொன்பரப்பிய திருவீதி' என ஒரு வீதிக்குப் பெயர் வழங்கிய செய்தியாலும்

''அடிக்காயிரம் பொன் கொடுத்தார்'' எனும் வரலாற்றாலும் அறியலாம்.

''அடிக்கோராயிரம் பொன் சின்னங்கள் கூற அளிப்பார்'' என்று திருவாரூர்க் கோவையும், அடி ஒன்றுக்கு,

''உய்யும் படி பசும் பொன் ஓராயிரம்
உகந்து பெய்யும் தியாகப்பெருமானே''
என்ற திருவாரூர் உலா வரியும் இதனை உறுதிசெய்யும்.

திருவாரூர்க் கோயிலுக்கு நான்கு தேர்கள் உள்ளன. பெரிய தேரை இழுக்க 12 000, பேர்கள் தேவைப்பட்டனர். 1943 ஆம் ஆண்டின் கணக்குப்படி தேரோட்டச் செலவு ரூ 7200, கால மாற்றத்தால் தேரிழுக்க வருகை தரும் பக்தர்கள் பற்றாக் குறையை மனத்திலிருத்திக் குறைந்த எண்ணிக் கையைக் கொண்டு தேரிழுக்க மரச் சக்கரங்களுக்குப் பதிலாக இரும்புச் சக்கரங்களைப் பொருத்தி இயந்திரப் பலனைப் (Machanical Advantage) பயன் படுத்தித் தேரிழுக்க, கோயில் நிர்வாகிகள் இப்போது ஏற்பாடு செய்துள்ளனர். இந்த ஏற்பாட்டால் இப்பொழுது 2000 பேர்களைக் கொண்டு திருவாரூர்த் திருத் தேரை இழுக்கிறார்கள். இப்பொழுது தேரிழுக்க ஆகும் செலவோ ரூ. ஒரு இலட்சம் ஆகும்.

பண்டையத் தமிழர்கள் பிறந்த இனத்தால், பேசும் மொழியால் வேறு பட்டிருந்தாலும் அவர்களிடையே வேற்றுமை நீங்கி ஒற்றுமை ஒளிர வேண்டு மென்ற உன்னத நோக்கில்தான் தேர்த் திருவிழாவை நடத்தினார்கள். திருக் கோயில்களில் கொண்டாடப்படும் பெரும் திருவிழாக்கள் கேளிக்கைகளுக்காகவும் உள்ள மகிழ்வுடன் கூடிய இறையின்ப நுகர்ச்சியைப் பெறும் அடிப் படையிலும் அமைக்கப்பட்டன, என்றாலும், குறிப்பாகத் தேர்த் திருவிழாவை, தமிழ் இனத்தவரிடையே ஒற்றுமை மிளிர ஏற்பட்ட விழாவாகவே தமிழர்கள் எண்ணினர்.

சகிப்புத் தன்மை மிகுந்த இந்து மதம் பரந்து விரிந்த ஒரு மாபெருங் கடல். அதன் கடற்கரை விளிம்பிலிருந்து வேறு பட்ட கருத்தால் ஒரு மனிதத்துளி கூட மாறிப் போகாமல் இறை உணர்வால் இணைந்து போக வேண்டும் என்ற உன்னத நோக்கில் ஏற்பட்ட விழாதான் தென்னகத்தில் கொண்டாடப் பெறும் தொன்மை மிக்கதேர் விழா.

None shall be turned away
From the shore of this vast sea of
Humanity
This is Hindu Religion.

'ஆ' வுக்கு நீதி வழங்கிய அண்ணல்

நடன. காசிநாதன்
துணை இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை, தமிழ்நாடு அரசு.

திருவாரூர்ச் சிறப்பு :

''நெடியமால் பிரமனு நீண்டு மண்ணிடந்தின்ன நேடிக்காணாப்
படியனார் பவளம்போலுருவனார் பணிவளர் மலையாள்பாக
வடிவனார் மதிபொதி சடையனார் மணியணிகண்டத் தெண்டோள்
அடிகளாரூர் தொழுதுய்யலாமையல் கொண்டஞ்ச னெஞ்சே''

என்று செஞ்சொல் தமிழ் கவிஞன் ஞானசம்பந்தப் பெருமானால் போற்றித் துதிக்கப் பெறும் மதிபொதி சடையனார் உறையும் திருவாரூர், சோழர்களின் தலைநகராகவும் விளங்கிய சிறப்பைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது. அத்தகைய பெருமையைப் பெற்றிருக்கும் திருவாரூர் மற்றொரு வகையிலும் பெருஞ்சிறப்புப் பெற்ற சீர் தலமாக விளங்கி வருகிறது.

கதிரவனின் மதி மைந்தனான மநு திருவாரூரிலே அறநெறி தழைப்ப ஆண்டுவந்ததாலும் ஆரூர் அரும்சிறப்பு கொண்டிலங்கியது. பிற்காலத்தில் ஆண்ட சோழப் பெருவேந்தர்கள் தங்களின் முன்னோர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் விஷ்ணுவிலிருந்து தொடங்கி மநு, சிபி முதலிய புராண கால மன்னர்களின் பெயர்களையும், அவர்கள் ஆற்றியுள்ள அருஞ்செயல்களையும் குறிப்பிட்டுவிட்டு வரலாற்றுக்கால மன்னர்களின் பெயர்களைக் குறித்துள்ளனர்.

இலக்கியங்களில் மநுவின் கதை :

தமிழிலக்கியங்களில் முதன் முதலில் இரட்டைக் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் மநு பசுவுக்கு நீதி வழங்கிய செய்தி.

''வாயிற்கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுடைத் தான்றன்
அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே''[1]

என்று கணவனை இழந்த கண்ணகி கூறுவதின் வாயிலாகத் தெரியவருகிறது. மன்னன் அவையில் நீதிகேட்டு வழக்குரைக்கச் சென்ற கண்ணகி,தம் நாட்டில் விலங்கினத்துக்குக் கூட நீதி வழங்கிய சிறப்பைப் புகழ்ந்துரைப்பதாகக் காணப்படுகிறது.

'ஆ' வுக்கும் நீதி வழங்கிய இவ்வரிய செய்தி பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழியிலும் காணப்படுகிறது.

"சாலமறைத் தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலைக் கழிந்தததன் பின்றையு – மேலைக்
கறவைக் கன்றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு முப்பிளமை யில்"[2]

என்பதாக.

மூவருலாக்களிலும், சோழவமிசத்தின் முன்னோர் பற்றிக் குறிப்பிடப்படும்போது மநிவின் நீதிமுறை மிகவும் புகழ்ந்து பேசப்படுகிறது.

"மையல்கூர், சிந்தனை யாவிற்கு முற்றந் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த மனுவோனும்"[3]

என்று விக்கிரம சோழனுலாவும்;

"மருளும் பசுவொன்றின் மம்மர்நோய் தீர
உருளும் திருத்தே ருரவோன்"[4]

என்று குலோத்துங்கச் சோழனுலாவும்;

"ஒட்டி, அறவாளி மைந்தன் மேலூர்ந்தோன்"[5]

என்று இராசராசனுலாவும் இயம்புகின்றன.

முப்பாலுக்கு உரையெழுதிய பரிமேலழகரும் திருக்குறளின் 547–ஆம் குறளுக்கு உரை குறிக்கும் இடத்தில் 'முட்டாமற் செலுத்தியவாறு; மகனை முறைசெய்தான் கண்ணும், தன் கை குறைத்தான் கண்ணும் காண்க'' என்று கூறிப்போந்தார்.

அரிசமயதீபம் என்னும் பிற்காலநூலும்,

"மகனிரதத் துருளியினோர் சுரபிதுயர்
தணித்திடுவோன் மகிழ்வுற்றூர்ந்தும்"[6]

என்று சோணாட்டு வேந்தர்களை மனுவின்வழிவந்தோர் என்று அழகுபட இயம்புகிறது.

சேக்கிழார் கூறும் ஆரூர்ச் சிறப்பு :

திருவாரூரின் பெருமையைப் பேசவந்த சோழநாட்டமைச்சர் சேக்கிழார் பெருமான் ஆரூர் சிறப்புக்குக் காரணம் தியாகேசன் வீதி விடங்கராகக் காட்சியளிப்பதும், காவிரி யாறு சூழ்ந்திருப்பதும், மநு நீதி சோழன் ஆரூரில் இருந்து ஆட்சி செய்ததுமே ஆகும் என்று கூறியுள்ளார்.

மநு நீதிச் சோழனுக்கு வீதிவிடங்கன் என்று ஒரு ஆண்மகவு இருந்ததாகவும், அவன் ஆரூரின் முக்கிய வீதியில் தேர் ஓட்டிச்செல்லும்போது, துள்ளிக்குதித்து ஓடிவந்த ஒரு இளங்கன்றின் மீது (சிவனே கன்றாக உருவெடுத்து வந்திருக்கிறார்) தன் தேர்ச் சக்கரம் ஏறிவிடவே கன்று அந்த இடத்திலேயே இறந்து விடுகிறது. அதனை யறிந்த தாய்ப்பசு கண்களில் நீர் சொரிய அரசனிடம் முறையிட அரண்மனைக்குச் சென்று அரண்மனை வாயிலில் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தம் கொம்பினால் அசைக்கிறது. இச்செயலைச் சேக்கிழார் பெருமான்,

5-4-88ல் நிகழ்ந்த திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவில்
சிறப்பு வெளியீடாகத் **திரு. குடவாயில் பாலசுப்ரமணியன்**
அவர்கள் எழுதியுள்ள

"திருவாரூர்த் திருக்கோயில்"

என்னும் நூல் வெளிவந்துள்ளது.

இந்நூலில் 1500 ஆண்டுகால தமிழக வரலாறு கூறப்பட்டுள்ளது. இது சிற்பம், கட்டடக் கலை, ஓவியம், செப்புத் திருமேனிகள், செப் பேடுகள், கல்வெட்டுகள், புராணங்கள், இலக்கியங்கள் மற்றும் அனைத்து செய்திகளையும் தாங்கி நிற்கும் பெட்டகமாக திகழ்கிறது.

விலை : ரூ. 25-00

கிடைக்குமிடம் :

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் அலுவலகம்,
திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

கமலாலயம் திருக்குளம்

திருவாரூர்த் திருக்கோயிலையொட்டி அமைந்துள்ள கமலாலயம் திருக்குளம் தமிழ் நாட்டிலேயே பெரிய திருக்குளங்களில் ஒன்று; மிக்க அழகுடன் விளங்குவது; தேவாரத்தில் பாடல் பெற்றது; பெரிய புராணத் திலும் இதன் சிறப்புக்கள் கூறப்பட்டுள்ளன. இந்தக் குளத்தில் நீராடினால் காசி, ராமேஸ்வரம் இரண்டிலும் சென்று புனித நீராடிய பலன் கிடைக்கும் கமலாலயத்தைச் சுற்றி, காசியில் உள்ளது போன்று 64 தீர்த்தக் கட்டங் களும், கமலாலயம் திருக் குளத்தின் நடுவில் அமைந்துள்ள அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோவிலைச் சுற்றி ராமேஸ்வரம் சேதுக்கரையில் அமைந்துள்ளதை போன்று 16 தீர்த்தக்கட்டங்களும் அமைந்துள்ளன. எனவே இந்தக் குளத்தில் நீராடினால் காசி, ராமேஸ்வரம் ஆகிய இடங் களில் நீராடுவதற்கு ஒப்பாகும்.

சு. ஸ்ரீதரன்,
நிர்வாக அதிகாரி.

உ
சிவமயம்

ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளாய்,
அவனருளாலே அவன்தாள் வணங்கி,
திருக்குடமுழுக்கிலும், யாகசாலையிலும்
முசுகுந்தார்ச்சனைகளிலும், இதர விசேஷங்களிலும்
அருள்மிகு தியாகேசனுக்கு மலர்த்தொண்டு
செய்வதில் பெருமகிழ்ச்சியும், பெருமிதமும்
கொள்கிறோம்.
வாய்ப்பளித்த நிர்வாக அதிகாரி
திரு சு. ஸ்ரீதரன் அவர்களுக்கு நன்றி.

இப்படிக்கு,

T. அய்யப்பன்,
புஷ்ப வியாபாரம்,
விஜயபுரம்,
திருவாரூர்-610001
தொலைபேசி எண். 2782

கோவில் விழாக்கள், திருமணங்கள்,
இதர வைபவங்களுக்கு
நல்ல முறையில் புஷ்பம் சப்ளை
செய்வோம்.

"தன்னுயர் கன்று வீயத் தளர்ந்தஆத் தரியா தாகி
முன்நெருப் புயிர்த்து விம்மி முகத்தினால் கண்ணீர் வார
மன்னுயிர் காக்கும் செங்கோல் மனுவின்பொன் கோயில் வாயில்
பொன்னணி மணியைச் சென்று கோட்டினால் புடைத்த தன்றே"

என்று மிக அழகாகக் குறிப்பிடுகிறார்.

அவ்வாறு அடிக்கப்பெற்ற மணி ஓசை கேட்டு ஆராய்ச்சி மணியை அடிப்பது யார் என்று அறிந்துவர மன்னன் கட்டளையிடுகிறான்.

சென்று அறிந்து வந்த காவலன் பசு ஒன்று கண்களில் நீர் உகுத்த வாறு ஆராய்ச்சி மணியை அடித்தது என்று கூறவே, அரசனும் அமைச்சர் முதலானோரும் வாயிலுக்கு வந்து பார்க்கின்றனர். பசுவைப்பார்த்த மாமன்னன் அங்கு குழுமியிருந் தோரிடம் அதன்குறை யாது? என்று கேட்க, எதிர்பாராது நடந்துவிட்ட அசம்பா விதத்தை எடுத்துக் கூறுகின்றனர்.

செய்தியை அறிர்து அதிர்ச்சியடைந்த மாமன்னன் தன் அமைச்சரை அழைத்து, மரணத்துக்கு மரணம் தான் தண்டனையாகும். ஆகவே பசுவின் கன்று உயிரிழந்த அந்த இடத்தில் தன் மகனாகிய வீதிவிடங்கனைக் கிடத்தித்தேரை ஏற்றிச் செல்லுங்கள் என்று கட்டளையிடுகிறான். இச்சொல்லைக் கேட்ட அமைச்சர் தம் காதுகளைப் பொத்திக் கொண்டு இத்தண்டனையைத் தம்மால் நிறைவேற்ற இயலுமோ என்று நினைத்த வண்ணமே அவர் உயிர் பிரிகிறது. அரசனே தம் மகனை அழைத்து, கன்று உயிர் துறந்த அதே இடத்தில் படுக்க வைத்துத் தாமே தேரை ஓட்டி, தேரின் சக்கரத்தை மகன் மீது ஏற்றி உயிர்த்துறக்கச் செய்கிறான்.

மநுவின் நேர்மையையும், நீதி வழங்கும் தன்மையையும் கண்ட சிவபெருமான், பார்வதி சமேதராக வந்து பசுவின் கன்றையும், வீதிவிடங்கனையும் அமைச்சரையும் உயிர் பெற்று எழச்செய்து மநுவுக்குக் காட்சி அளித்தார், என்று சேக்கிழார் கூறியுள்ளார்.[7]

கல்வெட்டுச்சான்று:

இந்தக்கதை விக்கிரம சோழன் காலத்துக் கல்வெட்டு ஒன்றிலும் கூறப்படுகிறது. தியாகராயர் கோயில் இரண்டாம் பிரகாரத்தின் வடக்குச் சுவரில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. "பூமாலைமிடைந்து" என்று தொடங்கும் இக்கல்வெட்டு விக்கிரம சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டுள்ளது.

"திருவாரூர் உடையார் வீதிவிடங்கர் (திருவாரூர் இறைவன்) ...சிம்ஹாஸனத்து எழுந்தருளி இருந்து பதியிலாளர் தியாக விநோதத் ....ங் கண்டருளா நிற்ப ஸ்ரீகாரியம் சுப்பிர மங்கல முடையாந் மாதவந் இரவியாத மாநாலைய மூவேந்த வேளார் விண்ணப் பத்திநால் பதிபாத மூலப் பட்டுடை பஞ்சாசாரிய தேவகந்மிகளுக்கும் கோயில்.. ...... யார்க்கும் திருவாய்மொழிந்தருளிநபடி நம் ஏவலால் பூலோக ராஜ்யம் செகிற ஸூர்ய புத்ரன் மநு தந் புத்ரந் ஏரிவருகிற தேரில் பசுவின் கன்றகப்பட்டு பிரமாதப்பட அதிந் மாதாவாந ஸுரெபி கண்டு துக்கித்து மநுவின் வாசலில் மணியையெறிய அதுகேட்டு மநு தன் மந்திரி இங்கணாட்டு பாலையூருடையாந் உபயகுலாமலனைப் பார்த்து வாயிற்ப

புறத்து ஒரு பசுமணி எறியாநின்றிது என்று சொல்ல அதுகேட்டு மநு புறப்பட்டு பசுவையும் பட்டுக்கிடந்த ...... படி விரவி தந் புத்ரந் ஏறிந் தேரிலே பட்டமை அறிந்து அக்கன்றுக்கு நேராகத் தந் புத்ரந் ப்ரியவிருத்தநை தேரிலே ஊர்ந்து குடுக்கவெற்று உபய குலா மலனுக்குச் சொல்ல வவந் ஸந்தாபத்தோடும் புறப்பட்டு தந் செவிகளைத் தரையிலே குடைந்து கொடுபட்டது எண்டு த்வாரபாலகந்த் புகுந்து உபயகுலாமலந்தன் செவிகளைக் குடைந்து கொண்டு . . . துஹ்கிதநாய் மனு தாநே புறப்பட்டு தந் புத்ரநை தாநே தேரிலே ஊர்ந்து குடுக்க அப்போதே நாம் அவநை அநுக்ரஹித்து கன்றுக்கும் மந்திரிக்கும் மநு புத்ரநுக்கும் ஜீவந் குடுக்க' என்று திருவாரூர் இறைவன் வீதிவிடங்கரே இக்கதையைக் கூறுவதாக இக்கல்வெட்டில் காணப்படுகிறது.

கல்வெட்டின் பிற்பகுதியில், மநுவின் அமைச்சனான பாலையூர் உடையாந் உபயகுலாமலந் வம்சத்தானாகிய பாலையூர் உடையார் சந்திர சேகரநாதி விடங்கனான குலோத்துங்க சோள மஹாபலிவான ராஜனுக்கு மாளிகை, மனைக்காக நிலம் அளிக்கப் பெற்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டிலிருந்து மநு நீதிச்சோழனின் அமைச்சரின் பெயர் 'உபயகுலாமலன்' என்பதும் மகன் பெயர் 'ப்ரியவிருத்தன்' என்பதும் தெரியவருகிறது. புராணத்தில் மநுவின் மைந்தன் பெயர் வீதிவிடங்கன் என்று குறிக்கப்பட்டிருப்பதை முன்பே கண்டோம்.

தேர்ச் சக்கரத்தில் மநுவின் மைந்தன் :

மநு தன் மகன் மீது தேரூர்ந்த காட்சி கல்லில் வடிக்கப்பட்டு, தேரும், தேரின் சக்கரத்தில் மநுவின் மகன் ப்ரியாவிருத்தனும் இருக்கும் தோற்றத்தைத் தியாகராஜ சுவாமி கோயிலின் வடகிழக்கு மூலையில் இன்றும் காணலாம். மநு 'ஆ' வுக்கு நீதி வழங்கிய வரலாறு கெங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மப்பேடு சிவன் கோயில் கோபுர நுழைவாயில் சுவரிலும், தஞ்சாவூர் மாவட்டம் திரிபுவனம் கடம்பவனேசுவரர் கோயில் உண்ணாழியின் கிழக்குப் பக்கச் சுவரிலும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன.

தமிழகத்துக்கப்பாலும் மநுவின் கதை:

இம்மநு நீதி சோழனின் கதை தமிழ்நாட்டில் மட்டும் இல்லாது ஆந்திர மாநிலத்திலும் மக்கள் மத்தியில் சிறப்புப்பெற்று விளங்கியிருக்கிறது, என்பது ஆந்திர, கருநாடக எல்லைக் கோட்டில் அமைந்துள்ள லெபாக்ஷி வீரபத்திரர் ஆலயத்தின் ரங்கவிலாச மண்டப விதானத்தில் தீட்டப்பட்டிருக்கும் மநு நீதிக் கதையின் ஓவியங்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

மநுவின் மகன் ப்ரியவிருத்தன் தேரோட்டிச் செல்லும் காட்சியும்; தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டுத்தன் கன்று இறந்த துயரத்தைத் தாங்காது தாய்ப்பசு கதறி தறிகெட்டு ஓடும் காட்சியும், இறுதியில் சிவன், பார்வதி சமேதராக வந்து கன்றுக்கு உயிர் தந்து எழுப்புவித்த காட்சியும் வண்ண ஓவியங்களாக இங்கு தீட்டப்பட்டுள்ளன இவ்வோவியங்கள் விஜயநகர மாமன்னன் கிருஷ்ண தேவராயர் (கி.பி.1509-1529) காலத்தைச் சேர்ந்தது. ஆதலால் மநு 'ஆ' வுக்கு நீதி வழங்கிய கதை, இன்றைக்குச்

சுமார் நானூறு ஆண்டுகள் முன்புவரை ஆந்திரப் பகுதியில் சிறப்புப் பெற்று விளங்கி யிருந்திருக்கிறது என்பது கண்கூடு;

மராட்டியர்களால் மலர்ந்தது:

தஞ்சையை ஆட்சி செய்த மராட்டிய மன்னர்கள் காலத்திலும் மநுநீதிக் கதை சிறந்த செல்வாக்கைப் பெற்று விளங்கியிருக்கிறது. மராட்டிய மன்னன் சகசி (சாஹஜி) காலத்தில் எழுதப்பட்ட 'தியாகேசர் குறவஞ்சி' இக்கதையை விரிவாக எடுத்துக்கூறுகிறது இந்நூலில் தியாகப் பெருமான் பசுவாகவும், உயிர்போக்கும்காலன் கன்றாகவும் உருக்கொண்டு மநுவைச் சோதித்தனர் என்று விளக்கப்பட்டுள்ளது.

இக்கதை தஞ்சாவூர் மாவட்டத்தில் நாடக வடிவிலும் நடத்தப்படுகிறது கும்பகோணத்துக்கு அருகிலுள்ள வலங்கைமானுக்குப் பக்கத்தூரான ஆண்டாங்கோயில் என்ற ஊரில் ஆண்டுதோறும் 'மநு நீதிச்சோழன் நாடகம்' சித்திரா பவுர்ணமியைத் தொடர்ந்து ஐந்து நாட்களிலிருந்து ஒன்பது நாட்கள் வரை நடத்தப்படுகிறது இந்நாடகம் சுமார் முந்நூறு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருவதாகக் கிராம மக்கள் கூறுகின்றனர்.

உயிர்களில் வேறுபாடு கருதா ஒப்பரிய தத்துவம்:

உயிரினத்தில் வேறுபாடு கருதக்கூடாது என்ற ஒப்பரிய தத்துவத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் முகத்தான். 'ஆ' வுக்கு நீதி வழங்கும் அற்புதத்தைச் செய்து காட்ட மநுவினை ஆட்டிவைத்த தியாகேசரின் அரிய செய்கையை எண்ணியெண்ணி இன்புறுவோமாக.[10]

அடிக்குறிப்புகள்

1. மதுரைக் காண்டம், வழக்குரை காதை, வரி 53—56
2. பழமொழி, 3
3. விக்கிரம சோழனுலா, 3—4,
4. குலோத்துங்கச் சோழனுலா, 2
5. இராஜராசனுலா, 3
6. அரிசமய தீபம், 8 : 1
7. பெரிய புராணம், திருநகர்ச் சிறப்பு. பாடல்—27
8. S. I. I. Vol. V. No. 456
9. Lepakshi a Publication of Andra Pradesh Lalit Kala Academy, Plate XII and XIII.
10. குடவாயில் பாலசுப்பிரமணியன், தொல்லியல் கருத்தரங்கு. தொகுதி—1, பக்கம் 89.

அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரர் திருக்கோயில்

மயிலாப்பூர், (::) சென்னை-4.

தங்கரதத் திருப்பணி நன்கொடை வேண்டுகோள்

இத்திருக்கோயிலில் சுமார் ரூ. 25 இலட்சம் மதிப்பீட்டில் தங்கரதம் செய்யத் தீர்மானிக்கப்பட்டு அதற்கான திருப்பணி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அன்புகூர்ந்து இந்தத் தங்கரதத் திருப்பணியில் தாங்களும் பங்கேற்றுத் தங்கள் கைங்கர்யமாக பொன் காணிக்கை அல்லது ரொக்க காணிக்கையினை உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி, அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர், சென்னை-4 (தொலைபேசி எண்.71670)என்ற முகவரிக்கு அனுப்பித் தங்கரதத் திருப்பணி சிறப்புடன் நடந்திட மேலான ஒத்துழைப்பினை நல்கி, அருள்மிகு கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரப் பெருமானின் பேரருளுக்குப் பாத்திரராகும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

கே. கருப்பத்தேவன் M.A.,B.L.
உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

சிவநெறிச் செம்மல்
மா. து. குப்புசாமி முதலியார்
தக்கார்

குறிப்பு:-

இத்திருப்பணிக்காக அளிக்கப்பெறும் நன்கொடைகளுக்கு வருமான வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப் பெற்றுள்ளது.
அறிவிக்கை: (வருமானவரி) எண். 3674 எப். /176/42/80/ ஐடி (ஏஐ) நாள் 25-9-1980.

The donation given for the renovation of the temple have been exempted from the Income Tax Act-1961 Vide notification (Income Tax) No. 3674 (F 176/42/80/ IT (AI) Dated 25-9-1980.

திருவாரூர்க் கோயிலின் கல்வெட்டுகளும் செப்பேடுகளும்

சு. நாராயணசுவாமி, எம். ஏ. பி. எட்.,
சுவடிப்புலம் - நூலகக் காப்பாளர்
துறைசையாதீன சரஸ்வதிமகால் நூல்நிலைய ஆய்வு மையம்,
திருவாவடுதுறை - 609803.

தமிழகத்திலேயே தொன்மையானதும் பாடல் பெற்றதும், தலம், தீர்த்தம், மூர்த்தி எனும் மூன்றிலும் சிறப்புடையதுமான இத்திருக்கோயில் 4-4-88 அன்றைய நன்னாளில் குடமுழுக்கு வைபவத்தை ஏற்றுக்கொள்ள இருக்கிறது.

சப்தவிடங்கத் தலங்களில் முதன்மை பெற்று விளங்குவது, மூவர் முதலிகளால் பாடல்பெற்ற திருத்தலம், திருவாசகம், திருவெண்பா, திருப்புகழ் முதலான நூல்களிலும், சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்றப்படுவது.

சுந்தரர், மற்றும் நாயன்மார்கள், தருமை ஆதீனக் குரு முதல்வர் குருஞான சம்பந்ததேசிகரது ஞானாசிரியர் கமலை ஞானப்பிரகாசரும், சதாசிவ நாவலர், படிக்காசர், சாமிநாத தேசிகர், சிதம்பர தேசிகர், முதலான மகான்கள் வாழ்த்திய பதியும் இதுவே ஆகும். கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் திருவவதாரம் செய்தருளிய ஜனன பூமியாக இதுவிளங்குவது தமிழகத்தின் சிறப்பாகும்.

இம்மலரில் பல ஆராய்ச்சியாளர்கள் இத்திருக்கோயிலைப் பற்றி இலக்கியம், கட்டடக் கலை மற்றும் தொன்மையான செய்திகள் பலவற்றைத் தந்துள்ளார்கள். இவற்றுள் என்றும் நிலைத்திருக்கக் கூடியதும், திருக்கோயிலின் வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டும் வண்ணம் இக் கோயிலில் விளங்கும் கல்வெட்டுகளையும், செப்பேடுகளின் செய்தியையும் இங்கு காண்போம்.

ஆரூர்க்கோயிலின் கல்வெட்டுகளின் சுருக்கம்:

இத் திருக்கோயிலில் 65 கல்வெட்டுகளுக்கு மேல் உள்ளன. படி எடுக்காத கல்வெட்டுகளும் உள்ளன. இவற்றில் முதல் இராசராசன், இராசாதித்தன், முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசேந்திரன், இரண்டாம் இராசராசன் என்ற இவர்தம் கல்வெட்டுகளும் கி பி. 9ஆம் நூற்றாண்டைய ஸ்ரீமான் ஸ்ரீ வல்லபன் என்ற பாண்டிய மன்னன் கல்வெட்டும், கி. பி. 1268-1308ல் இருந்த மாறவர்மன் குலசேகரன்-I கல்வெட்டும், அச்சுதப்ப நாயக்கர் (கி. பி. 1572-1614) கல்வெட்டும், சரபோஜி மன்னன் (கி. பி 1711-1727) கல்வெட்டும் பிறவும் காணப் படுகின்றன.

கல்வெட்டில் குறிக்கப்பட்டவை

இராசராசன் பாட்டியும் கண்டராதித்தர் மனைவியுமான செம்பியன் மாதேவியார் ஆரூர் அரநெறிக் கோயிலைக் கற்கோயில் ஆக்கினார். மேற்படி திருக்கோயிலின் தினசரி பூசைக்காக 234 பொற்காசுகள் அளித்தார்.

வெள்ளிப் பாத்திரங்களையும் கொடுத்து உள்ளார்.

1) முதற் குலோத்துங்கன் காலத்தில் (கி பி. 1070–1110) பூங்கோவில் நம்பி என்பவன் "வீர அணுக்கன் என்னும் அரசனது நம்பிக்கைக்குரிய தலைவன் மீது நூல் ஒன்றைப்பாடினான். அது "வீர அணுக்கன் விசயம்" எனப்பட்டது.

2) முதல் இராசாதிராசன் ஆணைப் படி வீதி விடங்கப்பெருமானுக்குப் பொற் பல்லக்குச் செய்யக் கோயில் பண்டாரத் திலிருந்து பொன் பாத்திரங்களும், வெள்ளிப்பாத்திரங்களும் பயன்படுத்தப் பட்டன.

3) திருமண்டபம் பொன்னால் சமைக்கப் பலவகைப் பொன் வகைகள் குறிக்கப்பட்டுள்ளன.

4) கோவிலில் அரசனது பிறந்த நாட்கள் (ஐப்பசியில் சதயமும், ஆடியில் ஆருத்ராவும்)கொண்டாடப்பட்டுவந்தன.

5) தேவாரம் பாடுவார்க்கு நில தானம் கொடுக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

6) இராசராசமடை என்பது இக்காலப் பவுன் நிறை போன்ற அரசாங்க (Standard weight) எடை ஆகும்.

7) கோயில் காரியங்களைக் கவனிக்கக் குழு (Temple Assembly) இருந்தது; மேற்படி காரியங்களைக் கவனிக்கத் தேவாசிரியன் என்ற மண்ட பத்தில் கூடி வந்தது.

8) கன்றைக் கொன்ற மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொன்ற மநுச் சோழனுக்கு அமைச்சனாக இருந்த ஒருவனது வழியில் வந்த குலோத்துங்கச் சோழ மாவலி வாணராயன் என்பவன் செய்த அறச்செயல் குறிப்பதொரு கல்வெட்டு.

9) இரண்டாம் குலோத்துங்கன் அநபாயன் என்று பல கல்வெட்டுகளிற் கூறப்பட்டுள்ளான். அவன் காலத்தில் திருவாரூர்க் கோயிலில் ஓராண்டில் 56 திருவிழாக்கள் நடைபெற்று வந்தன.

10) திருவாரூர் கோயில் கி. பி. 13ஆம் நூற்றாண்டில் ஜயமாணிக்க வள நாட்டைச் சேர்ந்திருந்தது.

11) மூன்றாம் குலோத்துங்கனை வீதி விடங்கப் பெருமானை "நம் தோழன் திரிபுவன வீர தேவன்" என்று சொன்னதாக ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

12) ஒருகல்வெட்டில் அக்காலச் சமூக நிலை வளர்க்கப்படுள்ளது. நாரதர், மஸ்கரர், யாக்ஞ வல்கியர் முதலான அற நூல் ஆசிரியர்கள் குறிக்கப்பட்டுள்ளனர் கலப்புச் சாதியரான அநுலோமருடைய தோற்றம், கடமைகள், உரிமைகள் முத லியன விளக்கப்பட்டுள்ளன.

13) லக்கன தன்னையக உடையார் என்ற அமைச்சனது கௌரவத்திற்காகச் சித்தரசன்மகனான நாகராசன் என்பவன் மேற்குக் கோபுரத்தைக் கட்டினான் என்று கன்னடக்கல்வெட்டு ஒன்று கூறு கிறது.

14) கங்கை கொண்ட சோழபுரத்து உடையார் நவமணிகள் அளித்தான் என்று கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

15) மற்றைய கல்வெட்டுகள் பெரும் பாலும் பல கோவிலுக்கு வைத்த நிலம், விளக்கு முதலிய தானங்களும், தானியங் களும், பூசை நிகழ்த்தும் போது வேதம் விண்ணப்பிப்பவர்க்குக் கொடுக்கப்பட்ட நிலங்களும் பெருவாரியாகக் குறிக்கப் பட்ட கல்வெட்டுகளாகும்.

16) சுந்தரர் தாயான இசைஞானியார் திருவாரூரில் இருந்த ஞான சிவாச்சாரி

யார் மகளார் என்று கல்வெட்டு கூறுகிறது.

17) மநுசரிதங் கல்வெட்டு (A.R. No 164–1894) திருவாரூர் ஸ்ரீதியாகராஜஸ்வாமி கோவிலில் 2ஆம் பிரகார வடபுறச்சுவரில் உள்ள கல்வெட்டு.

18) மேலும் (12-4—1717) அன்று முதலாம் சரபோஜி காலத்திய கல்வெட்டு; முதற்பிரகாரத்தின் கருவறையின் மேற் பக்கம் தரையில் பதிக்கப்பட்ட கல்வெட்டு.

முதலாம் சரபோஜியின் கல்வெட்டு

இக்கல்வெட்டு திருவாரூர் தியாகராசர் கோயில் முதல் பிரகாரத்தில் கருவறையின் மேற்குப் பக்கம் தரையில் பதிக்கப்பட்ட. கற்பலகையொன்றில் காணப்படுகிறது.

சோழ நாட்டை ஆட்சி புரிந்த பிற மன்னர்கள் போலவே தஞ்சை மராட்டிய மன்னர்களும் திருவாரூர் மீது பற்றுக் கொண்டிருந்தனர். இரண்டாவது மராட்டிய மன்னர் சகசி பாடிய "சங்கர பல்லகி சேவா பிரபந்தம்" என்னும் இசை நாடகம் திருவாரூரில் நடிக்கப்பட்டது. சகசி மன்னர் தஞ்சாவூர் மகர்நோன்புச் சாவடியில் வி ச ய ம ண் ட ப ம் என்ற பெயரில் மண்டபம் ஒன்றமைத்து அதில் திருவாரூர்த் தியாகராஜப் பெருமானை எழுந்தருளச் செய்தார்.

தஞ்சைப் பெரிய கோயில் தேர்த் திருவிழா, நாள் வழிபாடு இறைவன் திருவீதி உலாப் போதல் முதலியவை முழுவதும் திருவாரூர் போலவே சோழர் நாளில் நடந்து வந்தன. இடைக் காலத்தில் இவ்வழக்கம் நின்று விட்டது. இதைக் கேள்விப்பட்ட மராட்டிய மன்னர் ஒருவர் திருவாரூர் சென்று வழிபாட்டு முறைகள் முழுவதையும் அறிந்து அவைகளை அப்படியே தஞ்சையில் பின்பற்றச் செய்தார்.

12-4–1717 ஆம் ஆண்டு முதலாம் சரபோசி மன்னர் (1711—1929) திருவாரூர்த் தியாகேசர் ஆலயத்தில் செய்த திருப்பணியை இக்கல்வெட்டு விளக்குகின்றது. கல்லான திருமேனிகளை வழிபாட்டுக்கு நாட்ட அட்டபந்தனம் என்னும் மருந்தைப் பயன்படுத்துவர். அவ்வட்ட பந்தனம் அனைத்தும் விடுபட்டு, கோயில் முழுவதும் சிதைந்து கிடந்ததைச் சரபோசி மன்னர் திருப்பணி செய்தார் என்ற செய்தி இதில் விளங்குகிறது.

சரபோசிக்கு முன்னர் ஆட்சி புரிந்த சகசியும் முதலாம் ஏகோசியும் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர். இக் கல்வெட்டு 24 வரியாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

செப்பேடு தரும் அரிய செய்திகள்:- 1.

இத்திருக்கோயிலில் விளங்கும் செப்பேடுகளில் உள்ள வியப்பிற்குரிய செய்தி என்னவென்றால்,

24-12-1648 முதல் 14-11-1686 முடிய 37 ஆண்டுகள் 10 மாதம் 20 நாட்கள் தில்லை நடராசர், தில்லையிலே இருந்து வெளியே கொண்டு செல்லப்பட்டார்; குடுமியான்மலை, மதுரை ஆகிய ஊர்களில் வைக்கப்பட்டு, பின்னர் தில்லைக்குக் கொண்டுவரப்பட்டார், இச் செய்தியினை ஒரு செப்பேடு கீழ் வரும் பாடலால் விளக்குகிறது.

"விடையில் வந்த செம்பொன் அம்பலத்தான் அந்த
வெள்ளியம் பலத்திலே விரும்பிச் சென்ற
நடையில் வந்த வருஷமோ சர்வதாரி,
நாயமார் கழியிருபத்தைந்து நாளாம்
கடையில் வந்த வருஷங் ரார்த் திகையிரேழு
கதிர் வாரந் திரும்ப வந்து கலந்த நாளாம்
இடையிர் வந்த வருஷ மெண்ணிப் பார்க்கில் முப்பத்
தேழு பத்து மாதம் நாள் இருபதாம்"

திருவாரூர்ச் செப்பேடு —2

இருக்கும் இடம்	:	தஞ்சை மாவட்டம், திருவாரூர்த் தியாக ராசர்கோயில் நிருவாக அலுவலகம்.
அரசன்	:	முதலாம் சரபோசி
காலம்	:	26-8-1719.
மொழி	:	தமிழ்
அளவு	:	32 செ.மீ. * 20 செ.மீ.

அமைப்பும் செய்தியும் :

திருவாரூர்க்கோயிலில் இந்தச் செப்பேடு இருந்தாலும் இது சிதம்பரம் கோயிலுக்குரிய கொடை பற்றியது. நீண்ட சதுர அமைப்புடைய இச்செப் பேட்டில் சிதம்பரத் தலத்துக்குரிய அழகிய வரை கோட்டுச் சிற்பங்கள் வரையப்பெற்றுள்ளன. செப்பேட்டின் முதல் பக்கத்தின் மேல் பாதிப் பகுதியில் வரைகோட்டு ஓவியங்கள் பல இடம் பெற்றுள்ளன.

நடுநாயகமாக நடராசப் பெருமானின் நடனக் காட்சி காட்டப்பெற்றுள்ளது. பின்வலக்கையில் உடுக்கையும், பின் இடக்கையில் அங்கியும் உள்ளன. முன் வலக்கை அபயமளிக்கும் நிலையிலும், முன் இடக்கை வரமருளும் நிலையிலும் உள்ளன. வலக் காலை முயலகன் மீது ஊன்றி இடக் காலை எடுத்த பொற்பாத மாகத் தூக்கிநின்று ஆடும் காட்சி மிகவும் அழகாக வரையப்பட்டுள்ளது. அரைக் கசைத்த புலித்தோல் ஆடை நன்கு காட்டப்பெற்றுள்ளது. பொன்னார் மேனியன் ஆடும் வேகம் தெரியும் வண்ணம் சடை முடியும், உத்தரியமும் அசைவதுபோலக் காட்டப்பெற்றுள்ளன காது, கழுத்து, கை, கால்களில் அணிகலன் கள் பல விளங்குகின்றன.

நடராசப் பெருமானைச் சுற்றிலும் வட்ட வடிவமான திருவாசி, அண்டப் பகுதியின் உருண்டை வடிவைச் சுட்டுவது போலக் காட்டப்பெற்றுள்ளது. மேலே தேவர்கள் ஆனந்தத் திருநடனக் காட்சி கண்டு மகிழ்ந்து பூமாரி பெய்யும் காட்சி யும் காணப்படுகிறது.

நடராசப் பெருமானுக்கு இடப்புறம் அருள் சுரக்கும் அன்னை சிவகாமி அம்மையார் இரு திருக்கரங்களுடன், திரிபங்க நிலையில் வலக்கையில் குவளை மலர் தாங்கி நின்றுகொண்டுள்ளார். அவரைச் சுற்றிலும் திருவாசி காட்டப் பெற்றுள்ளது. நடராசப் பெருமானும், சிவகாமி அம்மையாரும் ஒரே சப்பரத்தி னுள் இருப்பது போன்று அமைக்கப் பட்டுள்ளது.

இடப்பக்கத்தின் ஓரத்தில் ஒரு திரு முகமும், நான்கு திருக்கரங்களும் பெற்று மயில் வாகனத்துடன் உள்ள முருகன் காட்டப்பெற்றுள்ளார். பின் வலக்கையில் வேற்படையும், பின் இடக்கையில் வச்சிரப் படையும் தாங்கியுள்ளார். முன் வலக்கை அபயமளிக்கும் நிலையிலும், முன் இடக்கை வரமருளும் நிலையிலும் அமைப்பைப் பெற்றுள்ளன.

வலப்பக்க ஓரத்தில் மகாகணபதி நடராசப் பெருமானைப் பார்த்த நிலையில் உள்ளார் கணபதிக்கும் நடராசப் பெரு மானுக்கும் இடையில் சிறிய வடிவில் மூன்று உருவங்கள் நின்ற நிலையி லுள்ளன. பதஞ்சலியார், வியாக்ரபாதர், இரணியவர்மர் ஆகிய மூவரும் நடராசப் பெருமானின் ஆனந்த நடனக் காட்சியை கண்டு வழிபடும் நிலையில் நின்று கொண்டுள்ளன. இவர்கள் மூவரும் நடராசப் பெருமானுடன் நீங்காது உடன் உறையும் நிலை அருளப் பெற்றவர்கள் ஆவர்.

முதலில் பதஞ்சலியார் உள்ளார். அவர் அத்திரியின் தேவியாகிய அநுசூயை யிடம் பிறந்தவர். இவர் ஆதிசேடனின்

அவதாரம். நடராசப் பெருமானின் திரு நடனக் காட்சியைக் காண விரும்பித் தவ மிருந்து அவ்வரம் பெற்றவர். சிவன் நினைவுடன் நின்ற அநுசூயையின் கைகளில் பாம்புவடிவில் இவர் விழ, அநு சூயை பயந்து விட்டுவிடவே பாதங்களில் விழுந்தமையால் இவர் 'பதஞ்சலி" என்று பெயர் பெற்றார் என்பர். முன்பே தவம் செய்து இடையறாது சிவன் நடனக் காட்சியைக் காணும் பேறுபெற்ற வியாக்ர பாதருடன் சேர்ந்து கொண்டார். இப் பதஞ்சலியார் பாணினியின் நூலுக்குப் பேருரை செய்தார் என்று கோயில் தல வரலாறு கூறுகிறது.

இரண்டாவதாக வியாக்ரபாதர் உள் ளார். இவரைப்புலிக்கால் முனிவர் என்பர் மத்தியந்தன முனிவரின்மகன். அதிகாலை இருள் விலகா முன்னரே வண்டுகளும் மொய்க்காத அன்றலர்ந்த நாள்மலராகிய புதுமலரைச் சிவபெருமானுக்காகப் பறிக்க வேண்டித் தமது நகங்களில் கண்களும், வழுக்காமல் மரங்களில் ஏறி மலர் பறிக்கப் புலி நகங்களும் வேண்டிப் பெற்றவர். வசிட்டரின் உடன் பிறந்தவளை மணந் தார் என்பர். இவர் முற்பிறப்பில் கௌதம ராக இருந்தார் என்பது புராணச் செய்தி யாகும்.

மூன்றாவதாக இரணியவர்மர் உள்ளார் இரணியவர்மர் தில்லைத் திருப்பணி செய்த பண்டைக்கால அரசர். அங்குள்ள 5 சபைகளுள் ஒன்றான இராசசபை அவரால் கட்டப்பட்டது என்று திருப் பனந்தாள் காசி மடத்துச் செப்பேடுகள் கூறும். சூரியகுலத்து அரசன் ஒருவனுக்குச் சிங்க நிறமுள்ள மகன் பிறந்தான். ஆதலால் அவன் சிங்கவர்மன் என்று பெயர் பெற்றான். தில்லையில் வியாக்ர பாதர் அருளால் சிவகங்கையில் மூழ்கிப் பொன்னிறம் பெற்று இரணியவர்மர் என்று அவர் பெற்றார். இரணியம் பொன் தில்லைத் திருப்பணி பல செய்து முத்தி பெற்று நடராசப் பெருமானை நீங்கா நிலை பெற்றார். அச்சூரிய குல அரசரே இங்குக் காணும் இரணியவர்மர் ஆவார்.

தில்லை நடராசப் பெருமானோடு இடையறாத் தொடர்புடைய இம் மூவரும் வரிசையாகக் காட்டப்பெற்றுள்ளமை சிறப்புமிக்கதாகத் திகழ்கிறது. இம் மூவரும் தில்லைத் தைப்பூசத் திருவிழா வுக்கு எழுந்தருள்வர்.

நடராசப் பெருமானின் நடனக் காட்சியின் கீழே அழகான விமானத்தின் கீழ், பாம்பணையில் கோவிந்தராசப் பெருமாள் பள்ளி கொண்டுள்ள காட்சி காட்டப் பெற்றுள்ளது. அருகில் சீதேவியும்,பூதேவியும் நின்றுகொண்டுள் ளனர். மேல் விமானத்தினுள் சங்கு சக்கரமும், கையில் நாமமும் வரையப் பட்டுள்ளன. நாமம் தென்கலை அமைப்பில் காட்டப் பெற்றுள்ளது.

நடராசப் பெருமானுக்கும் கோவிந்த ராசப் பெருமாளுக்கும் நேராகக் கொடி மரமும், மண்டபத்துடன் கூடிய நந்தியும், பலிபீடமும் காட்டப் பெற்றுள்ளன.

நடராசப் பெருமானையும், கோவிந்த ராசப் பெருமாளையும் வணங்க வேண்டிய முறைப்படி நின்று வணங்கும் நிலையில் மூன்று ஆடவர் உருவங்கள் உள்ளன. தலைப்பாகையும் மார்போடு அணைத்த வாளும் அம் மூன்று உருவங் களுக்கும் உள்ளன. இடுப்பில் கேடயத் தோடு உள்ளவர் அக்கால அரசன் முதலாம் சரபோசியாக இருக்கலாம். அடுத்த அதே தோற்றத்துடன் சற்றுச் சிறிய வடிவில் செதுக்கப்பட்டுள்ள உருவம் முதலாம் சரபோசியின் தம்பி துளசாசி என்ற துக்கோசியாக இருக்கலாம். ஏனெனில் முதலாம் சரபோசிக்கு ஆண் வாரிசு கிடையாது. அவருக்குப்பின் அரசுப் பொறுப்பினை ஏற்றவர் அவர் தம்பி துக்கோசிதான்.

இருவரும் ஒரே பீடத்தின் மீது நிற்கின்றனர். அவ்விருவருக்குப்பின் தாடி மீசையுடன் ஒருவர் நிற்கின்றார். அவர் சரபோசியின் அமைச்சர் அல்லது தளபதியாக இருக்கலாம்.

பேரரசுச் சோழர் காலத்தில் கூட, சிதம்பரத்தில் சில வேளைகளில் சைவ வைணவப் போராட்டம் நடந்துள்ளது. மராட்டிய அரசர்கள் செப்பேட்டில் நடராசரும் கோவிந்தராசப் பெருமாளும் சரிசமமாகக் காட்டப் பெற்றுள்ளமை அவர்கள் காலத்துச் சமயப் பொறுமையைக் காட்டுகிறது.

இந்தச் செப்பேடு படி எடுக்கப்பட்டு அதன் சுருக்கம் மத்தியக் கல்வெட்டுத் துறையினரால் அதன் ஆண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. முதன் முறையாக இங்கு முழுமையான மூல பாடம் தரப்படுகிறது.

முதலாம் சரபோசியின் ஆட்சிக் காலத்தில் (1719) ஏகோசி மகாராசாவினால் சிறப்புச் செய்யப்பட்ட தொண்டை மண்டல வேளாளர் வழியில் வந்தவரும், சேறைக்கிழார் கோத்திரத்தைச் சேர்ந்தவரும், நியமம் என்ற நகருக்குத் தலைவருமாகிய ராயஸ்ரீ முதலியார் முத்துச் செல்லப்ப முதலியார் அவர்களுக்காகச் சைவ சமயத்தில் மிகுதியும் ஈடுபாடு உடைய தாண்டவ மூர்த்திச் சேருவைகாரர் அவர்கள் வல்லத்துத் தோட்டமும், ஆயத்தில் ஒரு ஆள் தீர்வையும், தில்லைச் சிதம்பரரேசுவரர்க்கும், கோவிந்தராசப் பெருமாளுக்கும் கொடையாகக் கொடுத்தார் என்பதை இச்செப்பேடு கூறுகிறது.

இக்கொடையிலிருந்து தில்லைச் சிதம்பரரேசுவருக்கு வருடத்திற்கு 12 பொன்னும், கோவிந்தராசப் பெருமாளுக்கு நாள்தோறும் குறுணி அரிசியும் நைவேத்தியத்திற்குக் கொடுக்கப்பட்டன. இந்தக் கொடையைப் பெற்றுச் சந்திர சூரியர் உள்ள காலம்வரை அதனை நடத்துவதாக ஒப்புக்கொண்டவர்கள், சிதம்பரம் அகோர பண்டாரம் அவர்கள் சார்பாக அரிச்சியப்ப முதலியார் அவர்களும், கோயில் கட்டளைகளை நடத்தும் சரவணத் தம்பிரான் அவர்களும் ஆவர்.

இக்கொடையை ஏற்று நடத்தும் பொறுப்பிலோ, அல்லது கோயில் நிருவாகத்திலோ இந்தச் செப்பேட்டில் தில்லைக்கு உரியவர்களாகக் கூறப் பெறும்தில்லை மூவாயிரவர்கள் குறிக்கப் படவில்லை என்பது குறிப்பிடத்தக்க இன்றியமையாச் செய்தியாகும்.

இச்செப்பேட்டில் வழக்கமான பொது மெய்க்கீர்த்திப் பகுதிக்குப் பின்னர் பிற திருவாரூர்ச் செப்பேடுகள் போலவே விசயநகர அரசர்கள் சிலருடைய பெயர்கள் மட்டும் கொடுக்கப் பட்டுள்ளன. (8,9)

மராட்டிய அரசர்களின் வரிசையில் இச்செப்பேட்டில் ஒரு புதிய செய்தி உள்ளது. தஞ்சை மராட்டிய அரசைத் தோற்றுவித்தவர் ஏகோசி (1676). அவருக்கும் சிவாஜிக்கும் தந்தையாகிய சாசி, பீசப்பூர் சுல்தானின் தளபதியாக விளங்கியவர்; மைசூர், பெங்களூர்ப் பகுதியை ஜாகீராகப் பெற்றவர்; 1676ஆம் ஆண்டுக்கு முன்னரே இரண்டுமுறை தஞ்சைப் பகுதிக்குப் படை எடுத்து வந்தவர். அவருடைய பெயர், ஏகோசி பெயருக்கு முன்னர் மராட்டிய அரசர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. 1676ல் தஞ்சையில் ஆட்சி அமைத்த ஏகோசி தம் ஆண்மக்கள் மூவரில் மூத்தவனுக்குத் தம் தந்தையின் பெயரையே வைத்தார்.

குறிச்சித்தெரு சுப்பிரமணியர் கோயில் செப்பேட்டில் உள்ளது போலவே இச் செப்பேட்டிலும் வேளாளர் புகழ் பலபட

புகழ்ந்து பேசப்பட்டுள்ளது. அவர்கள் அரசர்களிடம் பெற்ற சிறப்புக்கள் முதற்கண் கூறப்படுகின்றன. (19—22)

ஏகோசி மகராசா அவர்களால்,

அனுமக் கொடி
வங்கார நிசான்
வங்காரச் சுருட்டி
கனக தண்டிகை
வெள்ளி முன்னனைசு
பின்னனைசு
கொம்புக்கு முன்னே சிங்கமுகம்
உபய சாமரம்
சங்கீத மேளம்.

ஆகிய சிறப்புக்கள் வேளாளர்களின் தலைவர்கட்குக் கொடுக்கப்பட்டன.

வேளாளர்களின் பொதுச் சிறப்புகளில்,
முளைவாரி அன்னமிட்டது,
நீலிபழி கழுவியது,
சூலி முதுகிற் சுடுசோறு அளித்தது,
அரவின்மணி வாங்கி இரவலர்க் களித்தது,
ஆடைகீறிச் சிலந்தி காட்டியது,
பாடிய பாணன் படுபிணம் சுமந்தது,
மேதினி வாழ மேழிக் கொடிஎடுத்தது

ஆகியவை இச் செப்பேட்டில் கூறப்பட்டுள்ளன.

இந்தச் செப்பேட்டில் காப்புரை தனித்தன்மையுடன் விளங்குகிறது. இந்தக் கொடைக்குச் சொல்லால், உழைப்பால், பொருளால் (வாக்குச் சகாயம், சரீர சகாயம், அர்த்த சகாயம்) நன்மை புரிந்தவர்கள்,

இளமையிலே, வயதிலே மார்க்கண்டனைப் போலச்
செல்வச் செழிப்பில் குபேரனைப்போல
போகம் அனுபவிப்பதில் தேவேந்திரனைப் போல,

மறுமையிலே பதஞ்சலி, வியாக்கிர பாதர் பெற்ற பேறு போலப் பற்பல சிறப்புக்கள் பெறுவர் என்று கூறப்பட்டு உள்ளது.

இந்தச் செப்பேட்டை எழுதியவர் திருவாரூர்ச் சிற்பாசாரி செல்லப்பெருமாள் ஆசாரி என்பவர். இந்தக் கொடையைக் கையில் பெற்று நடத்தும் பொறுப்பு, தாண்டவன்தோட்டம் சபாபதி கட்டளை நடத்தும் சரவணத் தம்பிரான் ஆவார் என்று இறுதியில் கூறப்பெற்றுள்ளது. தாண்டவன் தோட்டம், தாண்டமூர்த்தி சபாபதி என நடராசர் தொடர்புடைய பெயர்கள் வருவது குறிப்பிடத்தக்கது.

திருவாரூர்ச் செப்பேடு-3

இருக்கும் இடம்	:	தஞ்சை மாவட்டம் திருவாரூர்த் தியாக ராசர் கோயில் நிருவாக அலுவலகம்.
அரசன்	:	துக்கோசி
காலம்	:	2—6—1733
மொழி	:	தமிழ்
அளவு	:	28 5 செ.மீ. 19.5 செ.மீ.

அமைப்பும், செய்தியும்

வழக்கம் போல் அழகான வேலைப்பாட்டுடன் அமைந்த கைப்பிடியுடன், இருபுறமும் எழுதப்பெற்றுள்ள நீள்சதுர வடிவில் அமைந்த இச்செப்பேட்டில் முதல் பக்க மேல் பகுதியில் திருவாரூர்த் தியாகராசப் பெருமான் வீற்றிருக்கும் கோலம் அழகிய வரை கோட்டுச் சிற்பமாக வரையப்பெற்றுள்ளது.

திருவாரூரில் புகழ்பெற்ற கமலாலயம் என வழங்கும் புற்றிடங்கொண்டீசுவரர் (வன்மீகநாதர்) கோயிலில் எழுந்தருளியுள்ள சிறப்புமிக்க தெய்வத்திருமேனி தியாகராசர். ''இளமுருகு உடன் உறையும் அம்மையப்பர்'' வடிவம் பண்டைய

தியாகராசர் வடிவம். இதனைச் சோமாஸ்கந்தர் என்பர்.

உளியால் செதுக்கப்படாதவர் (விடங்கர்) என்னும் பொருள் அமைந்த இத்தியாகராச மூர்த்தங்களை உடைய தலங்கள் ஏழு. அவைகளைச் சப்த விடங்கத் தலங்கள் என்று கூறுவர். திருவாரூர், நாகை, திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காராயில், திருவாய்மூர், திருக்கோளிலி ஆகிய ஏழு தலங்களே அவை. திருவாரூர்த் தியாகராஜரை வீதி விடங்கர் என்றும், பிற தலங்களுக்குரிய விடங்கர்களை முறையே அழகவிடங்கர், நகர விடங்கர், புவனி விடங்கர், ஆதிவிடங்கர் நீலவிடங்கர், அவனிவிடங்கர் என்றும் கூறுவர். விட்டுணுவால் பூசிக்கப்பெற்ற இம்மூர்த்தியை முசுகுந்தன் திருவாரூரில் பிரதிட்டை செய்தான் என்பர்.

ஆனால் பிற்காலத்தில் விடங்கத் தலங்கள் பெருகின. கொங்கு நாட்டில் கூடக் கொடுவாய், கடத்தூர் போன்ற இடங்களில் ''கொங்கு விடங்கீசுவரர்'' கோயில்கள் உள்ளன. தஞ்சைப் பெருவுடையார் தட்சிண மேரு விடங்கர் எனப் பட்டார்.

தஞ்சையிலிருந்து ஆட்சிபுரிந்த சோழ மன்னர்கள் திருவாரூர்த் தலத்தின்மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர். கொங்கணேசுவரர் கோயில் செப்பேட்டில் (21-10) 'வீதி விடங்கச் சோழன்' என்ற சோழன் ஒருவன் பெயர் கூறப்படுகிறது. மனுநீதிச் சோழன்வரலாறு திருவாரூருடன் இணைத்துப் பேசப்படுகிறது. திருவாரூர், தஞ்சைக்கு முன் ஒருசிலகாலம் சோழர் தலைநகராகவும் இருந்துள்ளது. தஞ்சை நாயக்கருக்குப்பின் சோழமண்டல ஆட்சிக்கு வந்த மராட்டிய அரசர்களும் திருவாவரூர்த் தலத்தின்மீது மிகுந்த பற்றுக் கொண்டிருந்தனர், இரண்டாவது மராட்டிய மன்னர் சகசி திருவாரூர்த் தியாகராஜர் மீது பல பாடல்களைப் பாடியுள்ளார்.

சகசி பாடிய ''சங்கர பல்லகி சேவா பிரபந்தம்'' என்னும் இசை நாடகம் திருவாரூரில் நடிக்கப்பட்டது, சகசி திருவாரூருக்குத் திருப்பணிகளும் செய்துள்ளார்.

தஞ்சைப் பெரியகோயில் தேர், திருவிழா, நாள் வழிபாடு, இறைவன் வீதி உலாப்போதல் முதலிய அமைப்பு முழுவதும் திருவாரூர்போலவே சோழர் நாளில் நடந்து வந்தது. இடைக்காலத்தில் இவ் வழக்கம் மாறிவிட்டது இதைக் கேள்விப்பட்ட மராட்டிய அரசர் ஒருவர் திருவாரூர் சென்று வழிபாட்டு முறைகள் முழுவதையும் அறிந்து அவைகளை அப்படியே தஞ்சையில் பின்பற்றச் செய்தார்.

சகசி, தஞ்சாவூர் மானம்புச் சாவடியில் விசயமண்டபம் அமைத்து அதில் தியாகராசப் பெருமானை எழுந்தருளச் செய்தார். அம்மண்டபமும் கோயிலும் இன்றும் அவர் காலத்து ஓவியங்களுடன் திகழ்கின்றன.

இச்சேப்பேட்டில் சிறப்புமிகு தியாகராஜப் பெருமான் வேலைப்பாடமைந்த சப்பரத்தின் மீது எழுந்தருளியுள்ளார். சப்பரத்தை மூன்று சிங்கங்கள் தாங்குவது போல் அமைப்புள்ளது. திருவாரூரிலுள்ள சிறப்புக்களைத் தொகுத்துக் கூறும் பாடலொன்று இவ்வாசனத்தை 'வீர சிங்காதனம்' என்று புகழ்கிறது.

அழகான கீரிடமும், காதணிகளும் பதக்கமும் தியாகராசர் அணிந்துள்ளார். அவர் திருத்தோள்கள் மிகுதியான மலர் மாலைகளைத் தாங்கியுள்ளன. கிரீடத்தின் இருபுறமும் பிறைச்சந்திரன் காட்டப் பட்டுள்ளது, சிறப்புத்தன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது. தியாகராஜருக்கு இடப் பக்கத்தில் உமாதேவி எழுந்தருளியுள்ளார். கீழிடம், காதணிகள், பதக்கம்

தியாகராஜர் அணிந்தவை போலவே உள்ளன. பண்டைக்கால முதற்கொண்டே இவ்விருவருக்கும் இடையில் இடம் பெறும் முருகன் இச்செப்பேட்டில் காட்டப்பெறவில்லை. இதே வடிவமே இன்று திருவாரூரில் உள்ளது.

தியாகராசருக்குப் பின்னணியாக 4 வரிசைகளைக் கொண்ட அகன்ற வேலைப்பாடு மிக்க திருவாசி (பிரபை) காணப்படுகிறது. திருவாசியின் ஓரத்தின் முகப்பில் உமாதேவி வீற்றிருப்பதைப் பார்க்கும் போது சப்பரமும் திருவாசியும் தியாகராஜருக்கு மட்டுமே அமைக்கப் பட்டது போன்றும், பின்னரே, உமா தேவியை எழுந்தருளச் செய்திருப்பது போலவும் தெரிகிறது.

சப்பரத்தின் இருபுறத் தூண்களும் போதிகைகளுடன் வேலைப் பாடுள்ளனவாகக் காட்டப்பட்டுள்ளன. சப்பரத்தின் இடப்புறம் சந்திரனும், வலப்புறம் சூரியனும் பெரிய அமைப்பில் செதுக்கப் பட்டுள்ளனர். சந்திரனும் சூரியனும் உள்ளவரை இக்கொடை நின்று நிலவ வேண்டும் என்பது இதன் கருத்தாகும்.

தஞ்சை – திருவாரூரின் வரலாற்றுத் தொடர்புப் பெருமைக்கு ஏற்பவே மராட்டிய மன்னன் துக்கோசிக்காகப் பாம்பவள நாட்டின் பாளையக்காரரான சவாயி விசைய ரகுநாத மெய்க்கண் கோபாலர் அவர்கள் திருவாவரூர் தியாக ராசருக்கு அபிடேகத்திற்காகக் கூத்தனூர் என்னும் ஊரைக் கொடையாக அளித்தார்.

இவ்வூர் அகோர சிவ பண்டாரம் என்பவரிடம் அளிக்கப்பட்டது. கொடை அளிக்கப்பட்ட கூத்தனூருக்கு எல்லைகள் கீழ்வருமாறு கூறப்பெற்றுள்ளன.

கூத்தனூர், திருவாவரூர்த் தியாகராசருக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டாலும் அவ்வூரில் உள்ள 'பலன சுவாமிக்கு, (பழனி சுவாமி - முருகன்) அபிஷேகம்' நைவேத்தியம், திருமாலை, திருவிளக்கு, அன்னதானம், திருப்பணிவிடை முதலிய காரியங்களைக் கூத்தனூர் வருவாயிலிருந்து செய்யலாம் என்பதற்காக இச் செப்பேடு அளிக்கப்பெற்றுள்ளது. **1946-47 ஆம் ஆண்டு மத்தியத் தொல் பொருள் துறையினர் இச் செப்பேட்டைப் படி எடுத்து ஆண்டறிக்கையில் சுருக்கத்தை வெளியிட்டுள்ளனர்.**

காப்புப் பகுதியில், கச்சியிலே கோடி சிவலிங்கப் பிரதிட்டை செய்வது புண்ணியம் என்று கூறப்பெற்றுள்ளது.

இதற்கு ஆகாசவாணியும், பூமிதேவியும், ஆத்மலிங்கமும் சாட்சி என்று கூறப்பெற்றுள்ளது. இச் செப்பேட்டைத் திருவாவரூரில் இருந்த சோமாஸ்கந்த ஆசாரி என்பவர் எழுதியுள்ளார். தியாக ராசரின் பெயரையே இந்தச் சிற்பி பெற்றுள்ளார்.

இச்செப்பேட்டில் ர, ஷ ஆகிய எழுத்துக்கள் சிறப்பு முகரமாக எழுதப்பட்டுள்ளது நோக்கத்தக்கது.

தவுழ்த்தான் தவிர்த்தான். (7)
கிழ்ண மகராயர். கிருஷ்ண மகராயர். (10)
அபிழேகம்—அபிஷேகம் (20)
பிறதிழ்டை—பிறதிஷ்டை (26)
வங்கிழம்—வங்கிஷம் (29)

சில இடங்களில் நகரம் 'ன'கரமாகவும், ரகரம் 'ற' கரமாகவும் மயங்கி வந்துள்ளன. னாடு (2) ரெகுனாத (14) தற்ம (13, 22, 24) புறுவ (3) மாற்த்தாண்டன் (5) நிக்கிறகன் (8) பிறிதிவிராச்சியம் (10) கிறாமம் (20).

திருவாவரூர்ச் செப்பேடு-4

இருக்கும் இடம் : தஞ்சை மாவட்டம், திருவாவரூர்த் தியாகராசர் கோயில்நிருவாக அலுவலகம்

அரசன் : துக்கோசி

காலம் : 13–7–1733

மொழி : தமிழ்

அளவு : 21 செ.மீ. 14.5. செ.மீ.

அமைப்பும், செய்தியும்:

வேலைப்பாட்டுடன் கூடிய தூணின் அடிப்பாகம் போன்று அமைக்கப்பட்ட கைப்பிடியுடன் கூடியது இச்செப்பேடு. கைப்பிடியினுள் முதல் பக்கத்தில் சிவலிங்கமும், இரண்டாம் பக்கம் சூலமும் வரையப்பட்டுள்ளன.

செப்பேட்டின் இரண்டாம் பக்கக் கடைசியில் வரிசையாகச் சிறிய 5 சிற்பங்கள் வரைகோட்டினால் வரையப்பட்டுள்ளன.

முதலில் ஒரு பீடத்தின்மேல் வச்சிரப் படை அமைந்துள்ளது. அடுத்து விநாயகப் பெருமான், சிவபெருமான், நந்தி, முருகன் ஆகியோர் வரிசையாக உள்ளனர். முருகப்பெருமான் பழனி தண்டாயுதபாணி போன்று வரையப்பட்டுள்ளார்.

இச்செப்பேடும் மத்தியத் தொல்பொருள் துறையினரால் படியெடுக்கப் பெற்றுள்ளது. ஆண்டறிக்கையில் இதன் சுருக்கமே வெளியிடப் பெற்றுள்ளது. முதன் முறையாக மூல பாடம் இங்கு வெளியிடப்பெறுகிறது.

முன்செப்பேட்டின் செய்தியே இங்குக் கூறப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் கொடையிலிருந்து ஒரு பகுதியைக் கூத்தனூர்ப் பழனியாண்டவர் வழிபாட்டுக்காகவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது முன் செப்பேட்டின் செய்தியாகும். திருவாவரூர்த் தியாகராசப் பெருமானுக்குக் கொடை கொடுத்த மூலச் செப்பேடு இதுவேயாகும். முன் செப்பேடு பிரமாதீச (1733) வருஷம் ஆனி 3ஆம் தேதி வெட்டப்பட்டது. மூலச் செப்பேடாகிய இஃது அவ்வாண்டு ஆடி மாதம் 15ஆம் தேதி வெட்டப்பட்டுள்ளது. கால வரிசை நோக்கி மூலச் செப்பேடு இரண்டாவதாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

முன்செப்பேட்டில் திணையாகுடி என்ற கொடை அளிக்கப்பட்ட ஊர்ப் பெயர் மட்டும் கூறப்பெற்றுள்ளது. இச்செப்பேட்டில் ஆவ்வூரானது தெற்குச் சீமையில், அஞ்சிரெண்டுபத்து என்னும் பகுதியில் உள்ளதாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

மானிய பூமியின் அளவு இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது. 110 கலம் நெல் விதைக்கக்கூடிய நன்செய் நிலமும் (ஒரு நாளில்) 10 ஏர் ஓட்டக் கூடிய அளவு புன்செய் நிலமும் தியாகராசருக்குக் கொடுக்கப்பட்டது. இக்கொடை தியாகராசருக்கு அபிடேகம், நைவேதனம் செய்யவும், நந்தவனம் அமைக்கவும், திருமாலை சாத்தவும், திருவிளக்கு எரிக்கவும் பயன்படுத்திக் கொள்ளப்பெற்றது.

இறுதியில் விசைய ரகுநாத மெய்க்கண் கோபாலர் கையெழுத்திட்டுள்ளார். சிவாலயத்திற்கு அளிக்கப்பட்ட கொடையாக இருப்பினும் கொடையளித்தவர் குல மரபிற்கு ஏற்பக் 'கோபாலர் துணை' என்று எழுதப்பெற்றுள்ளது. இந்தச் செப்பேட்டை எழுதியவர் செம்புலிங்கக்கபிராயர் என்று கூறப்பட்டுள்ளது.

முற்கால அரசர்களில் விசயநகர அரசர்கள் மட்டுமே கூறப்பெற்றுள்ளனர். வழக்கமான மெய்க்கீர்த்திகளுடன்,

களைத்து வந்தவர் பேரில் கலங்கு
மாராய கண்டன்
இளைத்து வந்தவர்க்கு இல்லை
யென்னாத கண்டன்
சிவபாத பூசகர்
வேத வாய்மை தப்பாத மகராயர்
நாளவம் போக்காத மன்னன்

போன்ற புதிய தொடர்கள் பல கையாள பெற்றுள்ளன.

திருவாவரூரில் பல சிவாலயங்கள் உள்ளன. தியாகராசர் கோயில் பெரிய கோயில்' என்று குறிப்பிடப் பெற்று உள்ளது. இச்செப்பேட்டில் பாழை (3) தோழம் (55) ஆகிய சொற்கள் பாஷை, தோஷம் ஆகிய சொற்களுக்காக வெட்டப் பட்டுள்ளன.

நகரத்திற்கு அகரம் மயங்கியுள்ளது. நாராயணன் (14) நாகலோகம் (21) னூர்த்து (938) னான் (44) என்பன அவை

இத்தகைய செய்திகள் இத்திருக் கோயிலை விட்டு அகலாது பாதுகாத்து வருவது நமது கடமையாகும். வரும் சந்ததியினர்க்கும் வெளிநாட்டார்க்கும் இதன் பெருமையை உணர்த்துவோமாக!

வளர்க திருக்கோயில் சிறப்பு!

அருள்மிகு இருதய கமலநாதசுவாமி கோயில்

வலிவலம் (வழி) திருவாரூர் வட்டம்

இறைவனின் பெயர்: அருள்மிகு இருதய கமலநாதர்.

இறைவியின்பெயர்: அருள்மிகு மாழையொண்கண்ணி

அமைவிடம்: கீழ் வேளூர் — திருத்துறைப்பூண்டி பேருந்து சாலையில் 16 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

சிறப்பு: வலியன் என்ற கரிக்குருவி வலம் வந்து வழிபட்டமையால் வலிவலம் எனப் பெயர் பெற்றதாக கூறப்படுகிறது. இத்தலம் கோச்செங்கட் சோழ மன்னனால் கட்டப்பட்ட மாடக் கோயில்களில் ஒன்றாகும். விநாயகரை எதற்காக இறைவர் தோற்றுவிக்கச் செய்தார் என்பது குறித்து இத்தலத்து இறைவனை போற்றி ''பிடியதனுருவுமை'' எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தில் பாடியுள்ளார். இது மிகச் சிறப்புடையதாகும். சமயக் குரவர்கள் அப்பர், சுந்தரர், சம்பந்தர் மூவராலும் பாடல் பெற்றதலமாகும்.

வேண்டுகோள்: இவ்வாலயத் திருப்பணி வேலைகள் 1981 ஆம் ஆண்டு தொடங்கப் பெற்று நடைபெற்று வருகிறது. மெய்யன்பர் அனைவரும் திருப்பணிக்கு நன்கொடை செலுத்தி அய்யனின் அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர் & பொருளாளர்,
அருள்மிகு இருதய கமலநாதசுவாமி கோயில் திருப்பணிக்குழு,
வலிவலம் - 610207

எஸ், ஜோதி பி.ஏ.
செயல் அலுவலர்,
(கூடுதல் பொறுப்பு)

தி, ஜெயராமன் பி.ஏ. பி.எல்.
தக்கார்/உதவி ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
நாகப்பட்டினம்

ஏட்டுச் சுவடியில் எழில்வேந்தன் கதை

ச. திலகம், B.Litt.

சோழநாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரியின் தென்பகுதியில் விளங்கும் சைவவத் திருப்பதி எனப் போற்றப்படும் திருநகர் திருவாரூர் ஆகும். இத்திருவாரூரின் பழமைகளைப் பற்றிச் சில கருத்துக்களை அறிவது இன்றியமையாததொன்றாகும்.

பல்வகையாலும் தொன்மைச் சிறப்பும், சைவத்தின் கேந்திரமாயும் ஆரூர் திகழ்ந்த காரணத்தினால்தான் சேக்கிழார் பெருமான் தன்பெரிய புராணத்தில் திருமலைச் சிறப்பாகக் கயிலைமலையின் சிறப்பும் திருநாட்டின் சிறப்பாக சோழவள நாட்டின் சிறப்பும் திருநகரச் சிறப்பாக ஆரூரின் சிறப்பும்தான் கூறியுள்ளார். சோழவள நாட்டில் உள்ள மற்றெந்தத் திருநகரமும் கூறாமல் ஆரூர் கூறப்பட்டமை அந்நகர் பெறற முக்கியத்துவம்தான் காரணமாகும். சோழமன்னர்கள் ஆரூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்ததுடன் தியாகேசரையும் ஆட்சி புரியச்செய்து வழிபட்டு வரும் மரபு ஏற்பட்டதாகும்.

இத்தனைப் ! பெருமைக்கு குறிப்பாக சோழப் பெருமன்னர்களின் சிறப்புக்கு திலகமாய் விளங்குவது மனுநெறிப்படி வாழ்ந்து காட்டிய சோழ மன்னன் ஒருவனது வரலாறு ஆகும். இவனது மனுநெறியினை ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம் வழக்குரை காதையில் கண்ணகியின் கூற்றாக தெளிவு படுத்துகின்றன.

அவ்வரிகள் கீழ்வருமாறு:—

''வாயிற் கடை மணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுடத்தான்
அரும்பெறற் புதல்வனை ஆழியற் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார் என் பதியே''. என்பனவாகும்.

மேலும் இவ்வரலாற்றினை ''மையல் கூர் சிந்தனையாவிற்கு முற்றத் **திருத்தேரில் மைந்தனை யூர்ந்த மறவோனும்**'' என்று விக்கிரம சோழனுலாவும், **பார்மேல் மருளப் பசுவொன்றின் அம்பர் நோய் தீர உருளுந் திருத்தேர் உரவோன்** என்று குலோத்துங்க சோழனுலாவும், **அறவாழி மைந்தன் மேல் ஊர்ந்தோன்** என்று இராசராச சோழனுலாவும், **''வெய்யோனும் செம்மலைப் பண்டூர்ந்த தேரோனும்''** என்று சங்கர சோழனுலாவும் மனு நெறியைப் பறைசாற்றுகின்றன.

சேக்கிழாரும் தம் நூலாகிய பெரிய புராணத்தில் ''மண்ணில் வாழும் உயிர்களுக் கெல்லாம் காவலனாய் விளங்கிய இம்மன்னவன் மன்னுயிர்களை மகிழ்வித்ததோடல் லாமல் விண்ணவர்களையும் வேள்விகள் பல செய்து மகிழ்வித்தானாம். வெற்றி பொருந்திய இவனது ஆணைச்சக்கரம் உலகத்தை சூழ்ந்து நிற்கவும், மனுநெறிப்படி வாழ்ந்தமையால் தன் பெயரினையும் மனுவெனவே கொண்டதாகக் குறிப்பிடுகின்றார்.

இலக்கியங்களில் கூறப்படும் மனுவேந்தனின் வரலாறு கல்வெட்டு வாயிலாகவும் அறிவதற்கு ஒரே ஒரு கல்வெட்டுத்தான் சான்றாக உள்ளது. அக் கல்வெட்டு பற்றிய செய்திகள் அனைத்தும் நண்பர் குடவாயில் பாலசுப்ரமணியம் அவர்கள் எழுதிய "திருவாரூர்த் திருக்கோயில்" என்ற நூலில் விபரமாக கூறப்பட்டுள்ளன.

ஆரூர் திருக்கோயிலில் மலர்ந்த பிரபந்தங்களின் வரிசையில் போற்றற்குரிய நூலான தியாகேசர் குறவஞ்சி என்னும்நூலில் 20ஆம் பாடலில் தியாகேசப் பெருமானின் பெருமைகள் பேசப்படுவதுடன் மனுநீதி சோழனின் வரலாறும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அதில் புதிய செய்தியாக திருவாரூர் தியாகப் பெருமானே பசுவாகவும், காலனே கன்றாகவும் வந்து பின்பு அருள்பாலித்ததாகவும் கூறப்படுகிறது.

அடுத்து "மனுநீதிச் சோழ மகாராசா நாடகம்" என்ற நல்ல தமிழிசை நாடகம் ஒன்று இவன் வரலற்றை தெள்ளத்தெளிவாக இயம்புகிறது. இந்த இசைத் தமிழ் இலக்கியத்திலும் தியாகேசர் குறவஞ்சி கூறுவது போன்ற புதிய செய்திகளும் உள்ளன. தியாகப் பெருமானே பசுவாகவும், எமனே கன்றாகவும் வந்த கதையும், மனுநீதி மகன் "வீதி விடங்கன் என்ற பெயரினன் என்றும் கூறுகின்றன.

எண்ணற்ற இலக்கியங்களில் பேசப்பட்ட மனுவின் வரலாறு ஒரு அரிய ஏட்டுச் சுவடியிலும் காணப்படுகிறது. இந்த அரிய ஏட்டுச்சுவடி "எமது சரசுவதிமகால் நூலகத்தில் "தேரூர்ந்த சோழபுராணம்" என்ற பெயரில் சுவடி எண் 320ஐக் கொண்டுள்ளது. இந்நூல் இன்னும் அச்சாகவில்லை அச்சுக்கு வரும் நிலையில் உள்ளது. இந்நூல் 92 ஏடுகளைக் கொண்டுள்ளது இது 15-16.ஆம் நூற்றாண்டு இலக்கியமாக இருக்கலாம் என ஊகிக்கமுடிகிறது. இதன் நூலாசிரியர் இன்னார் என அறிய இயலவில்லை இருப்பினும் நடை அருணகிரியாரின் முருகவழிபாட்டு நெறியில் அமைந்தும் திருப்புகழ் போன்ற சந்த இசையும் பெற்றுத் திகழ்கிறது.

மேலும் இப்புராணநூல் சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தை முதல் நூலாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. சேக்கிழார் கூறும் "மாநிலங்காவலனின் பண்பு நலங்கள் அப்படியே இந்நூலிலும் பேசப்படுகிறது.

மேற்கண்ட புராணசுவடி போன்றுவசன நடையில் எழுதப்பட்ட சுவடியும் இந்நூலகத்தில் சுவடி எண் 215 ஐக் கொண்டுள்ளது. முற்றிலும் வசன நடையில் அமைந்த இந்நூல் 21 ஏடுகளைக் கொண்டு திகழ்கிறது. இந்நூலின் இறுதியில் காணப்படும் தெலுங்குக் குறிப்பு இந்நூல் ஓர் தளவாய் பதவி வகித்தவருக்குச் சொந்தமானது என்றுளது இக் குறிப்பிலிருந்து இந்நூல் தஞ்சை ஆண்ட நாயக்கர்கள் காலத்தில் தோன்றியிருக்கலாம் என கருதப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள நூலின் ஆசிரியரோ அல்லது அதே நூலை படித்த பிறிதொருவரோ தேரூர்ந்த சோழ வாசகம் என்ற சுவடியை எழுதியிருத்தல் வேண்டும், இதன் நடை மக்களின் அன்றைய பேச்சுவழக்கை ஒட்டியும் அமைந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாக மனுநீதி சோழன் புலம்பும்போது ஒரு மன்னன் செய்யக் கூடாதவை யாவை என்பதை தொகுத்துச்சொல்வது ஆகும். இப்பகுதி தமிழகத்துக்கு மட்டுமல்ல உலகிலுள்ள அனைவருமே ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகும்.

சுவடியில் உள்ள இந்த வசன நூலை ஏட்டில் உள்ளவாறே இனிக்காண்போம்.

தேரூர்ந்த சோழன் கதை

"......................த்தழகும்
பேருருமான பெருமையே—ஆரூரில்
தேரூர்ந்த சோழன்.........குக்
காரானை மாமுகத்தோன் காப்பு".

(ஏ-1) .....த்திலே தோன்றப்பட்ட ராச வங்கிசத்திலே சோழன்மரபிலே குலோத்துங்கச் சோழனென்றும்....... சோழனென்றும் இராசேந்திர சோழனென்றும் கெங்கை கொண்ட சோழனென்றும் மனுச்சோழனென்றும் ஆறிலொன்று கடமை கொண்ட சோழனென்றும் ......னென்றும் இப்படித் தோன்றப்பட்ட சோழன் மரபிலே ஒரு ராசா தன்ம கதைகளைக் கேட்டு.........கத்துக்கள், புராணங்கள், ஆகமங்கள், சாத்திரங்கள், காவியங்கள், ஞான நூல் யோக ... பெரியோர்கள் தபோதனர்கள், தீட்சதர்கள் உடனே சம்பாஷணம் பண்ணிக்கொண்டு வேதமாய் இருக்கிற வள்ளுவர் குறளைக் கேட்டு இப்படி ஒருவன் தேடுகிறது அஞ்சு பங்.....மன்று கேட்டு ராசகரமே நெருங்கப் போகாது ஆறு பங்காக்கி ஆறிலொன்று கடமை ..

(ஏ-2) ......க்கொரு பங்காக்கி ஏற்ற வேணுமென்று திருவுளத்திலே நினைந்து தன்ம சிந்தையாய் ஒரு......ஏக சக்கிரமாய் நடத்திப் புலியும் புல்வாயும் ஒரு அரையிலே கூடி வாழ்க சிவ சமையும், விஷ்ணு சமையும் மகத்தான தர்மம், பிரதியுபகாரம், தூபதீபமாலை, சாந்து, புழுகு பன்னீர் தட்டுப் புழுகு எண்ணெய் விளையாடல் வசந்தன் விளையாடல், ஆணை ஏற்றங் குதிரை ஏற்றம், கெருடிக் கூடம், நாடக சாலை......ஒன்றாலொன்றுங் குறைவற நடத்தி, எச்சிக் குற்றம், ஏத்த வாட்டம் வாராமல் சகலபிராணிகளுக்கே தாயும் தந்தையும் போலே கிருபையுந் தயவு நேசமும், அன்பும் பட்சமு முண்டாய் தியாகபோக .....பமென்ன சத்தங் கேளாமல், முறையிட்டி சத்தங் கேளாமல் இந்தப் படி எண்பது வருடம்......... பண்ணி அனேகஞ் சீர்மையும் அனேக ராச்சியம் நடக்கிற நாளையிலே இதற் கொரு குறையுண்டாகி,

(ஏ-3) .... ஏழை சனமான பேர்கள் நம்முடைய அண்டைக்கு வந்து சொல்லப் பயப்படுவார்கள் என்று.........துக்கொரு ஆராய்ச்சி மணியை அரண்மனை வாசலிலே கட்டி வைத்தார். யாதாமொருவர்.........உள்ள பேர்கள் இந்த மணியை அசைத்தால் நாம் வந்து பராபத்தியம் பண்ணக் கடவோமென்று ....

டுகல்தூண் நிறுத்திப் பெரிய மணியாய்க்கட்டி வைத்தார்கள். இந்த மணியை எண்பது வருட .. க ஒருத்தருக்குந் தெண்டமுண்டிகை, நோவு சிலவு, எச்சிக் குற்றம், ஏத்த வாட்டம் வந்ததில்லை .... (மணி)யை அசைத்த பேருமில்லை. பூவேபறிபடும், புனலேசிறைப்படும், காவேயலைப்படும். பரியேகட்டுண்ணும். மா........ கோழியே போர் செய்யும். கொடுவாளே வளைப்படும். தென்னை மரமே குலைபடும். நெல்லே கதிர்படும் (நெய்)யே உருக்குண்ணும். கரும்பே நருக்குண்ணும். களையே பறிபடும். தேரிலே கட்டுஞ்சீலையிலே கோணல்

ஏ-4) ....எம் மாதரிடையிலே குறைவு, தன பாரத்திலே வட்டம் இதுவே ஒழிந்து வேறொரு குறை...... இந்த மணியை அசைத்த பேருமில்லை.

இப்படி இருச்கிற ராசாவுக்கு அறுபத்து நாலு வயதுக்கு மேல் ஒரு குமாரன் பிறந்தான். எண்ணெய் விளையாடல், வசந்தன் விளையாடல் பட்டண மெல்லாங் சிங்காரித்து......யாக நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியு மாக வளர்ந்து சகல வித்தையும் கற்றுக் குமாரன்......கா அனேகங் குமரர் களுடனே ஆனையேற்றம், குதிரை ஏற்றம், ஆயுதப் பரீட்சையுங் கற்று விதி விடங்கன் அழகும், ஆண்மையும்,புத்தி வித்தாரமும், தெளியும் கண்டு ராசாவும், மந்திரியும் அளவற்ற சந்தோஷ.......ள ராசராசாக்கள் மன்ன மண்டலீகர் பட்டவர்த்தனர், மகுட வர்த்தனர், நாடு ராச்சியம் ஊர் உறவின.......... து முண்டான பெரியோர்கள் கண் களி கூரப் பதினாறு வயதனான்.

ஏ-5) இந்த நாளிலே (கைலாச)த்திலே பரமேசுரனும் பார்வதியாரும் இவனுடைய நியாயத்தையும், தன்ம சிந்தையாயிருக்கிற நேசத்தையும் கண்டு இந்தப் பதவியிலே இருக்கிற ராசாவுக்கு இடும்பன்றியிலே, ஆங்கார மன்றியிலே ..... களையும் விஷ்ணு ஞானிகளையும் கண்டால் பரமேசுரன் வடிவுதானே என்று (நா)டியிருந்த படியினாலே ந..... ருந்த பத்தன் இவனை ஆண்டு கொண்டு சிவபதத்திலே சேர்க்க வேணுமென்று திருவுளத்திலே நினைந்து......வேளை யேதன்று பார்த்திருந்தார். வேளையும் வந்து நேரிட்டது.

நீ கைலாசத்திலே பரமேசுவரனும், பார்வதியாரும், விக்கினேசுபரனும், தெண்டேசுவரனும், நந்தி கேசுவரனும், சத்திய தேவர்கள்..... தர்கள், புவனாதிபர், கெருடகந்தருவர், தும்புரு, நாரதர், தேடியிருக்க அனேகங் குமாரர்களுடனே கூட.. ராசாவின் சமையத்தே போய் ராசாவையும் தெண்டன் பண்ணி தேவர்கண்டன தியாகராயா.......

6 ......திடங் கொண்ட.....ா அசைந்தாடு மாடரவக் கிண்கிணிக் காலா கமலா லையத் திறைவா, திருவாரூரை......தெண்டன் பண்ணிவருகிறேனென்று அனுப்பிவித்துக் கொண்டு மாதா, பிதாவையும் தெண்டன் பண்ணினான். மாதாபிதா.....முத்து, பவழம், வைரம், மாணிக்கம், கோமேதகம், மரகதம். இந்த வகையிலே நவரெத்தினங்களும், மாடைக்காசும் ...ட்டு வர்க்கமும் தம்பிரானாருக்குக் காணிக்கையுமிட்டு ராசராசாக்கள், மன்னர். மண்டலீகர் பரிவாரமும் புடை சூழ.....சிங்காரித்து இருக்கிற தேரை நமஸ்கரித்துத் தேரின் பேரிலே குமாரனும் ஏறினான். ஆனை, குதிரையுள்ளதும் பரிவாரமும், மன்னர், மண்டலீகரும் செவிற்றுவர். ஆலவட்ட மிரட்ட, வெண்சாமரை வீச முத்தின் குடைநிழற்ற தட்டியக் காரர் எச்சரிக்கை பண்ண, பட்டர்கள் பட்டாங்கு படிக்க ஆனைவீறிடக்குதிரை அனுமானிக்க, வீரர் ஆர்ப்பரிக்க அனேகம் பெண்கள் புடைசூழ பேரிகை, தம்பட்டம், கிடுபிடி, உடோல், முருகு, தப்பு, நாதசுரம்,மத்திளம், மச்ச.ரி .....

ஏ-7) முழாடக்கை, யுடுக்கை, மணி, உறுமி, வீராணம் வீர உண்டிகை கனகதப் படை.....(செ)வத்திமுரசு தியாகமுரசு, தவண்டை, மல்லாரி, எக்காளை, சின்னதுகானை, தவளைச்..... சந்..... சாமண்டலமாரவண அளற்றம் திமிரியுள்ளம், உடுவை குடம் உண்டானதெ..... டத்துக்கருவி, நரம்புக் கருவியென்று சொல்லப்பட்ட பஞ்சவாத்தியங்.....லே தேரோடி வருகிற

தறுவாயிலே இது நல்ல தறுவாயென்று பரமேசுவர.....யும், விக்கினேசு வரையும், தண்டே சுவரரையும், நந்தி கேசுவரரையும், சித்தி வித்திய.... திக்குப் பாலகர், பிருமா, விஷ்ணு இப்படிக் கொத்தவர்களெல்லாரையும் நிறுத்தி .....ரூபமென்னில் நாலு வேதமும், நாலு காலாகவும், சந்திர, சூரியர் இரண்டு கண்ணாகவும், வ.....

(ஏ-8) செவியாகவும், சமுத்திரமே கோசலமாகவும், ஞானமே சிறந்த தொழுகிற பாலாகவும், சாலோக சாமீப, சாரூப, சாயுச்சிய மென்று மிந்த நாலும் முலையாகவும் இயமதன் மராயனே ஒரு செங்கன்றாகவும் இப்படி ஒரு பசுவும், கன்றுமாகப் புறப்பட்டு ஊர்ரெல்லையிலே கோபுர வாசலிலே புறப்பட்டு கமலாலையமென்னும் பொய்கையிலே தண்ணீரும் குடித்துச் சாணாக..... கிலும் புறப்பட்டு வீதியிலே சென்று கன்று முன்னே துள்ளிக் குதித்தோட ஓடினவிடந் தோறும் பின் தொடரக் கன்றைய ....பேரையும் உறுக்கிப் பாய அதிர நடக்கக் கண்ட பேரை யெல்லாம். கேவிக் கதறி உருட்டி விழித்துக் கன்றுடனே கூட ஓட்ட ராசகுமாரன் வருகிற தேருக்குள்ளே கன்று உட்புகுந்து வாத்தியமுழக்கத்திலும், அரவாரத்திலும் அந்த அதிர்ச்சியிலும் கன்று..... வறுபட்டுக் கன்றோடித் தேர்க்காலிலே யகப்பட்டு நறுங்கி யிரண்டு கூறாய்க் கிடக்கத் தேரும் நெகிழ்ந்து ராசக்குமாரனும் பிறகே பார்த்துரெண்டு கூறாய்க் கிடக்கிறக்கன்றைக் கண்டு திடுக்கிட்டேங்கி தேரைநிறுத்தி,

(ஏ-9). வைத்து அக்கன்றையும் பார்த்துப் பெருமூச்சு விட்டு ஓம் நமச்சிவாயயென்று பயந்து நிற்கிற தறுவாயிலே பிரிந்து போன பசுவும் கன்றையும் கண்டு அம்மா, அம்மாவென்று வாய்விட்டுக் கதறிக் கனைத்து உச்சியை மோந்து இரண்டு கண்ணாலும் தாராளமாகச் சொரிய நாலு வாக்கும் பார்த்து,இரண்டு கூறாய்க் கிடக்கிற கன்றைமுஞ் ...லே ஒன்றாக்கிக் குறுக்கே நின்று நாலு முலையும் பாலாய்ச்சொரிந்து கன்றுமெழுந்திருந்து முலையுண்ணாதது கண்டு, திட்டெனவெழுந்திருந்து வாய்விடாமல் கதறிமிவை யெல்லாம் குமாரன் கண்டு நடுநடுங்கி இந்த (ஆ) பாவம் இருந்த வாறென்னம் பேர் தியாகராயரே! இந்தப் பாவம் பார்க்கவோ தேரிலே வந்தேன். அய்யா கேட்டாலென்படு வாரோ. அம்மனறிந்தாலென்படுவாரோ. இதற்கென்ன செய்வேனென்று பிரலாபித்தார்.

கூட வந்த பேரும், மந்திரிகளும் குமாரனே! என்ன விதனப்படுகிறீர். நாம் வலியக் கொல்லவில்லை.

(ஏ-10) ......யே கன்று தானே வந்து மடிந்தால் என்ன செய்வோம்.கன்றை யெடுத்துப் போட்டு பொய்கையிலே முழுகி தியாகராயரையும் தெரிசித்துக் காணிக்கையு மிட்டுத் தானதன்மமும் பண்ணினால் ஒரு தோஷமுமில் லையென்றார்கள். அப்படிச் செய்யலாமோ. எங்கள் மரபிலே ஒரு புறாவுக்கல்லவா தன்னுயிரை யீந்தான். அவன்.........அறியாமல் கொடுத்தானோ. அய்யாக்கறிக்கை பண்ணினால் அதற்கான காரியம் செய்வார்கள். நான் அப்படி செய்யப்ப.... வேனென்றான். அந்தத்தறுவாயிலே பசுவும் கொப்பென வெழுந்திருந்து தேர்வந்தவழியே போய் அரண்மனை வாசலிலே கட்டியிருக்கிற ஆராய்ச்சி மணியைக் கொம்பாலே அசைக்க மணியின் சத்தம் கணீரென்றது. அந்தச் சத்தம் பட்டணத்துண்டான பேர்கள் கேட்டார்கள். இராசாவும் முன்னே ஆசார மண்டபத்திலே தேவேந்திர னோலக்கம் போல யிருந்து பரா...... தியம் பண்ணுகிற

தறுவாயிலே மணியின் சத்தம் கேட்டது. கேட்ட மாத்திரத்திலே ராசாவும் சிங்காதனத்தை விட்டு,

(ஏ-11) திட்டெனவெ (முந்தி) ருந்ததுக்குப் பிறகு இத்தனைக் காலம் கேளாதமணியின் சத்தம் இன்று கேட்டோம். இது இருந்தவாறென்னம் போவென்று கைநடுங்கி கால் நடுங்கி நாவுலர்ந்து வாய்வறண்டு உள்ளிலும் வெளியே புறப்பட்டு வந்தார். பசுவும் மணியண்டே வந்தது. ராசாவும் பார்த்து ஒரு மனுஷ ராகிலின்ன குறை சொல்லுவார்கள். அறுவிட்டுக் கொடுப்பேன் ஓ! தெய்வமே! தியாக ராயரே என்றிருக்க தறுவாயிலே ராசாவின் ஊழியக்காரர் குமாரன் ஏறிப்போன தேர்க்காலிலே ஒரு பசுவின் கன்று அகப்பட்டு நெருங்கி இரண்டு கூருய்க் கிடக்கிறவர்த்தமானஞ் சொன்னார்கள். இந்த விசேஷம் கேட்டு காதையிரண்டு கையினாலு மூடிக்கொண்டு சிவ நமசிவாயமென்று ராசாவும் மெத்தக் கிலேசித்து நான் செய்த தோஷமென்ன பேர்ராச்சியத்தை அநியாயம்பண்ணி அடந்தேற்ற மாக இறை கொண்பேனோ. தேவதான, மடப்பிரதான, சிவநிந்தை குரு நிந்தை செய்தேனோ. தண்ணீர்ப் பந்தல், நந்தவனம், திருவாசல், கோயில், மதில் களைப் பிடிங்கி எல்லாம் மாறாட்டஞ் செய்தேனோ.

(ஏ-12) ......ங்களைத் தூர்ப்பித்தேனோ, மகத்துக்களைத், தபோதனர்களை, மாதா, பிதாவை இடறு சொல்லப் பார்த்திருந்தேனோ, தீர்த்தவாசி........மயேசுரரை நிந்தை செய்தேனோ, ஊமை குருடர், மூடவர், ஏழை சனங்களை, அடித்துப் பறித்தேனோ, வேத சாத்திரத்தைப் பழித்தேனோ, கரையில்லாக் கண்டத் தோரையுங், கரைபடும்களி யாரையும் கலந்தேனோ, ஆசார ஈனம் பண்ணி னோ புலையருடன் .. தோனோ, சந்தியான விரதங்களைத் தவிழ்த்தேனோ, நம்பின பேரைக் கைவிட்டு அற்பரை யாளாக்கினேனேனோ; வங்கிஷவான்களை நிந்தை பண்ணினேனோ; மண்ணோரஞ் சொல்லி உயர்ந்த குலத்தைத் தாழ்ச்சி செய்தேனோ, துணையாகக் கூடிப்போய் நடுவழியிலும், நட்டாற்றிலும் கை விட்டேனோ, பாலகரை விருத்தரைக் கொல்வித்தேனோ, நடுங்கப்பணி கொண்டு கூலிக்கு நாளை வாவென்றேனோ பங்கில்லா...........பதறி யெடுத் தேனோ ஊர் முனிய வாழ்ந்கேனோ விழுந்த பசுவையெடாமல் விலகிப் பார்த்துப் போனேனோ திருக்கோ. . . . மாதரைச் சேர்ந்தேனோ, வாழை மரங் வெட்டிக் கிணறுகளைத் தூர்ப்பித்தேனோ, கல்வெட்டுகளை யழித்தேனோ. நட்டக்கல்லை.........

(ஏ-13) ...கி எல்லை மாறாட்டஞ் செய்தேனோ, இந்தப் பசுவின் பழிக்கு ஏந்தடவிலே தீர்த்து அறுவிட்டுக் கொடுப்பேன் என்று பிரலாபித்தான். தேவியார் கண்டு என் நாயகனே புழுதியிலே கிடந்து இப்படி விதனப்படுவார்களோ. வந்த... பொல்லா வந்து விட்டால் என்ன செய்யப் போகிறோம். கன்றின் பழிக்கு அடியேனைப் பசுவின் முன்னே ஆக்கினையிட்டால்...வந்தாப் போலே ஆம் தேவரீர் விசாரம் பாராமல் பெண்டாட்டியானவளை விற்க ஒத்தி வைக்க தான் ...கொடுக்க ஆட்சிக்க ஆக்கிணையிடக் கடனாயிருக்கும் அடியேனை அனுப் பும்படி உத்தாரம் பண்ணுமென்றாள் வா...தேவி! உம்மை ஒப்புக் கொடுத்தால் உம்முடைய பழிக்கு நானென்ன செய்வேன். அது வார்த்தையல்ல பெற்ற பிள்ளையே . . அழகுள்ளவனென்றும், ஒரு பிள்ளையுள்ளதென்று மெண்ணாமல் வீதிவிடங்கரை யொப்புக் கொடுக்கும்ப...சாரியென்று திருவுளம் பற்ற இதற்கு அடியேளைக் கேட்கிறதென்ன தேவரீர் மரபுக்கு அபகீர்த்தி வராமல்.

(ஏ-14) அப்படியே குமாரனைப் பசுவின் பழிக்குத் தீர்த்துக் கொடுமென்றாள். அப்போது ராசாவுஞ் சந்தோஷப்பட்டு. . மந்திரி சகல கலா. . விணரையழைத்து வீதி விடங்கரைத் தேர்க்காலிலே கிடத்திரெண்டு கூறாய்க் கண்டுவாருமென்றார் அப்போது மந்திரியும் புறப்பட்டு வருகிறதைக் கண்டு நம்மை ஆக்கினையிடத் தக்கதாக ராசாவும் திருவுளம் பற்றி மந்திரி வருகிறதாயிருக்கிறது. பிள்ளையென்று பட்சம் பாராமல் தெளிந்தது. அய்யற்கே அருமையுண்டு. நல்லகாரியம் நினைத்தாரென்று குமாரனும் மந்திரிக்கெதிரே நடந்து வாராய். மந்திரியே எங்களையா திருவுளம் பற்றின படியே நீர் காலதாமதம் பண்ணாமல் கடுக முகித்து விடுமென்றான், அப்படி சொன்ன குமாரனைப் பார்த்து இவனுடைய தெளிவும், புத்தி வித்தாரமும், அழகும், ஆண்மையும் இருந்தபடி ஏதோ ராசாவும் தவசு பண்ணி...தொரு குமாரனிவனைக் கொல்லுகைக்கு நாமோபாதகரென்று, இந்தக் கண்றாவி பார்க்க.

(ஏ-15) நம். . விதிப்படியை பாரீர் இந்தப் பாட்டுக்கு நாமோ பாதகர். சிவனே! சிவனே புற்றிடங் கொண்ட ஈசனே தியாகராயரேயென்று விதனப்பட்டு ராசாவின் குமாரனை எப்படிக் கொல்லுவோமென்று திகுதிகென. . தேரிலே ஏறி அரையிலே இருக்கிற சீராவை உருவிக் கொண்டு கழுத்திலே குத்திக் கொண்டு தரையிலே பசுவின் முன்பாக விழுந்தான். மந்திரி விழுந்தது கண்டு குமாரனும்மந்திரி நம்மைக் கொல்ல மாட்டாமல் தான் செத்தானென்று வெகுவாய் விசாரப்பட்டு இருக்கையிலே அப்போதும் ராசாவுக்கு அறிக்கை பண்ணினார்கள். அப்போது புண்ணிலே கோலிட்டாப் போலே ராசாவும் சிரித்து நாம் முன்னுக்குச் சுகித்த தெல்லாம் ஒரு கடுகும், இன்று இந்த துயரம் ஒரு மலையுமாயிற்றே என்று தேவி கண்டாயோ! நமக்குண்டான,

(ஏ-16) அநியாயத்தைப் பாரென்று தயங்கிப் போய் நிற்கையிலே ராசாவும், தேவியும் இன்னமொருவரைப் போகவிட்டால் குமாரனைக் கொல்லக் கூசுவார்கள். கன்றின் பழிக்குக் குமாரனும் மந்திரி பழிக்கு நாமுமேயாயிற்றென்று ராசாவும் தேவியைப் பார்த்து, மந்திரிகுமாரனை முன்னிட்டுக் கொண்டு உன்னையத் தள்ள மட்டும் எங்களை நினையாதே, விதனப்படாதே என்று நிறுத்தவும் நில்லாமல், ஆண் பெண் குழந்தைகள் அவரவர்கள் அலறி முறையிட்டார்கள். இப்படியிருக்க ராசாவும் ஒடிச் சென்றார், பசுவும் ராசாவுக் கெதிரே நடந்து ராசாவையும் பார்த்துக் கன்றையும் பார்த்தளவில் ராசாவுக்கு மகத்தாகியதுயரம் வந்தது. ராசாவும் பசுங்கன்றைப் பார்த்துத் தம்முடைய குமாரனையும் ஏற பார்த்தார். அந்த பார்வையைக் குமாரன் கண்டு அய்யரே பூருவ காலத்திலே தொன்னூற்றாறு தலைமுறை சத்திய வசனம் தப்பாமல் தருமமே நிலை நிறுத்திச் செங்கோல் கோணாமல் நடத்தி வந்தார்கள். இப்போதும் தேவரீர்,

(ஏ-17) முகாந்திரமாக ஒரு பிள்ளையைப் பார்த்து நீதி தப்ப நடந்தால் மரபுக்கோச்சியம் பேசுவார்கள். சேரன், பாண்டியார் கேட்டாலும் ஒரு பிள்ளையைப் பார்த்தாரொயழித் தன்மத்தை விட்டாரென்று மோசம் பேசுவார்கள். . . . . பூலோகம் விளைய வேணும் திங்கள் மும்மாரி பொழிய வேணும். சகல பிராணிகளும் பிழைக்க வேணும். ஆகையினாலே பசுவின் மனது நோகாமல் கன்றின் பழிக்கு அடியேனைத் தேர்க்காலிலே போட்டு ஊர்ந்து கொடுத்தால் அபகீர்த்தி வாராது . . . . . . க்கு கீர்த்தியுண்டாம். தடுக முகித்து விடுமென்றான். அப்படி சொன்ன குமாரனை ராசாவும், தேவியும் கட்டிக் கொண்டு உச்சியை மொகந்து

கொண்டு குளிப்பாட்டி முழுக கூட்டிப் பட்டுக் கச்சைகட்டி, முடி சூட்டி மோதிர மிட்டு முத்துமாலை நவரத்தினமாலை, பன்னீர்மாலை சூட்ட...... தட்டுப் புழுகு நிறைய விட்டு சிலம்புவெண்டையும், தோள்வளை, மேல்வளை, உடுதாரம், வாகுபுரி, சரப்பளி, நிறையப் பூட்டித் திருநீறணிந்து மன்மதரூபனெனெ அலங் கரித்துத் தான தருமம் பண்ணிவித்து கையிலே போந்தையக் கோலும் பிடித்துக் கொண்டு அழைத்து வருகிற தறுவாயிலே,

(ஏ-18) மரங்கள்,கற்கள் உருகப்பிள்ளைபெற்றவர்கள் வயிறு பற்றியெறிய கண்ட கண்ட பேர்கள் கண்கள் பொறி பறக்க, கண்ணை மூடிக்கொள்வாரும் சிவசிவாவென் பாரும். பெருமூச்செறிவாரும் குமாரன் அழகு போகுதென்பாரும், இந்தப்பாதகம் கண் கொண்டு பார்க்க முடியாதென்பாரும், ராசாவுக்குத் தயவில்லையோவென் பாரும் இவையெல்லாம் கேட்டும் கேளாதுபோலே வந்து கிழக்கே முகமாய் நின்று தியாகராசரைந் தெண்டன்பண்ணி தெய்வப் பிராமணரையும் குருக்களையும் நமஸ்கரித்து ரராசாவும் தேவியும் சூரியனையும் நமஸ்கரித்து சிவாயநமவென்று தேர்க்காலுக்குக் குறுக்கே பூமியிலே நின்று குமாரனும் விழுப்தான். இராசாவும் திட்டெனப் பார்த்து கன்றும் குமாரனுக்குஞ் சரியாயிற்று. இன்னம் நம்முடைய பொருட்டாயிருக்கிற மந்திரி பழிக்கு என்ன செய்வேனென்றான். தேவியும் அடியேனை மந்திரி பழிக்குத் தீர்ந்து கொடுமென்றான். அப்படிச் செய்வார்களோ முதலாளியிருக்கையிலே பெண் சாதியானவளை ஒப்புக்கொடுப்பார்களோ வென்றும் நீ ஏங்கித் திரியாதே கேளென்று தேவியைத் தேரிலுமிறக்கு மந்திரிபிரதாணிகள் முன்னிட்டுக்

(ஏ-19) கொண்டு....திக்கொண்டுவா வென்று சொல்லி மந்திரி குத்திக்கொண்ட நிலையிலே நின்று அரையிலேயிருக்....கொள்ளச் சம்மதித்தார். பெரியோர்கள் மன்னர், மண்டலீகர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர்வி...... கொள்ள வேண்டியிருக்கும்; நீங்கள் தருமத்துக்கு அகிதம் பண்ணுவார்களோ வென்று கழுத்திலே....பிறகு செத்துக் கிடக்கிற குமாரனும், மந்திரியும், ஓகோ! பதறாதே என்று ராசாவினுடைய கையை ...ஈன பூதப்படையாளி வந்தான். நாராயணப்பிரியன் வந்தான். ஆனந்தத் தாண்டவன் வந்தான். சிவ..... ற தேவ துந்துபி முழங்க, தேவர்கள் புடைசூழ, வெள்ளை ரிஷபத்தின் மேலே அர்த்தநாரியாக .....தேவர்கள், ரிஷிகள், புவனாதிபர், பிருமா, விஷ்ணு எல்லோரும் தோத்திரம் பண்ணவந்து எழுந்தருளி.... ள்ளபத்தன் மகா சந்தோஷமாயிற்று. பசுவாய் வந்தது நாமாயிருக்கும். கன்றாய் வந்தது எமனாயி......

(ஏ-20) ...அன்பு சோதிக்க வந்தோர் ராசாவே! நீரும், தேவியும், குமாரனும், மந்திரியும் கைலாயமே வாருங்களென்று இந்திரவிமானத்திலே ஏற்றிக்கொண்டு பரமேசுவரனும், பார்வதியாரும் கைலாயமே எழுந்தருளினார்கள். ஆகை யினால இந்லத்திருவிளையாடலைப்பார்த்தபேர் கேட்ட பேர் இந்தராசாவும் தேவியும் குமாரனும் மந்திரியும் பெற்ற பேறுபெறுவார்கள் என்றவாறு.

தேரூர்ந்த சோழன் கதை எழுதி முடிந்தது.

முற்றும்.

ஆரூர்க் கோயிலின் ஆடற்கரணங்கள்

டாக்டர். இரா. கலைக்கோவன்

மனிதன் எப்போது தோன்றினானோ அப்போதே கலைகளும் தோன்றின எனலாம். உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்வுகளை வெளிப்படுத்த மனித உயிர்கள் மேற்கொண்ட முதல் முயற்சியே கலைகளுக்குக் கால்கோள் நாட்டியது. புறத்தாக்கங்களால் தன்னுள் எழுந்த உணர்வு நுணுக்கங்களையும், அதன் விளைவாய்ப் பிறந்த எண்ணத் தொடர்களையும் அசைவுகளாலும், வீச்சுகளாலும், ஒலிகளாலும் வெளிப்படுத்திக் காட்டிய நிலையில்தான், மனிதன் ஆடல், ஓவியம், சிற்பம், இசை என்று கலைகளில் பல வடிவங்களைக் கண்டான். இந்த நுண்கலைகள் ஒவ்வொன்றும் தமிழ்மண்ணின் பல மரபுப் பேரரசர்களாலும், அறிவாற்றலும் கலையார்வமும் நிறைந்த பேராளர்களாலும் கண்ணெனப் போற்றிக் கருத்தாய் வளர்க்கப்பட்டது. சங்க காலத்து இலக்கிய வரிகளில் இதமாய்த் தெரியும் கலையிழைகளைப் பின்னும்போது, அந்த சமுதாயத்தில் கலைகள் பெற்றிருந்த உயர்ந்த நிலைகளை உணர்ந்து மகிழலாம் பல்லவர் காலத்துச் சிற்பங்களும், செப்புத் திருமேனிகளும், கல்லில் வடித்த ஓவிய வரிகளும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்க் கலை வளர்ந்த கதையைக் கனிவோடு சொல்கின்றன. இந்தக் கலை வளர்ச்சியின் சிகரத்தைத் தொட்டு, இமயப் பெருமைகளைத் தோளில் சுமப்பவர்கள் தொல்குடிச் சோழர்கள். பாண்டியர்களும், பழுவூர் மன்னர்களும், கொடும்பாளூர் வேளிர்களும், அதியமான்களும் இன்னும் இன்னோரன்ன ஆர்வலர்களும் கலை வளர்ச்சிக்குத் தங்கள் முயற்சிக்கு மேலும் முனைந்து செயல்பட்டதைக் காலத்தின் வரலாறு, கவிதை வரிகளில் எடுத்து வைக்கிறது. இப்படி கண்ணுக்குள் கண்ணாய்க் கருத்துக்குள் கருத்தாய், மக்களாலும், மன்னர்களாலும், மற்றவராலும் போற்றிப் புரக்கப்பட்ட புகழார்ந்த கலைகளுள் தலையாய ஒன்று ஆடற்கலை.

அந்த ஆடலுக்கென்றே எழுந்த அருமையான இலக்கண நூல் பரதரின் நாட்டிய சாத்திரம். பரத நூலின் பழமையை இராஜசிம்மனின் கல்வெட்டு நிலைநிறுத்துகிறது. இந்த நூலில் ஒரு பகுதியாய்க் காணப்படுவதுதான் கரணங்கள். 'தாண்டவ லட்சணம்' என்ற தலைப்பிட்டு நூற்றியெட்டுக் கரணங்களை வரையறுத்து வரிசைப்படுத்துகிறார் பரதர். இந்தக் கரணங்கள் எப்போது வழக்குக்கு வந்தன என்பது, காலம் நமக்குச் சொல்லாத ரகசியம். என்றாலும், இவை தமிழ்நாட்டில் பெரிதும் போற்றப்பட்ட காலம் கி. பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகள் என்பதைத் தஞ்சைக் கோயில் நமக்கு உணர்த்துகிறது. தேவாலயங்களின் சக்கரவர்த்தியாய்த் தஞ்சையில் எழுந்த பெரியகோயிலின் விமான உட்சுவர்களில் இக்கரணங்களில் எண்பத்தோருவகைகள் சிற்ப வடிவங்களாய்ச் சிறக்கநிற்கின்றன. முதலாம் இராசராசனின் வரலாற்றுச் சாதனை இது. இதே போன்ற கரணச் சிற்பங்கள் குடந்தை சாரங்கபாணி கோயிலிலும், தில்லை ஆடவல்லான் கோயிலிலும், விருத்தாசலம் விருத்தகிரீசுவரர் கோயிலிலும், திருவண்ணாமலைத் திருக்கோயிலிலும் காணப்படுகின்றன. சிதறிய கரணங்களாய்ச் சில,பல கோயில்

களில், ஆடல் தொடர் அற்புதங்களாய்க் காணக் கிடக்கின்றன. அவற்றுள்ளும் அபூர்வமான சில கரணங்களைக் கொண் டிலங்கும் பெருமையை ஆரூர்க் கோயிலே பெறுகிறது.

கீழைக் கோபுரச் சுவர்களிலும், கல் தேரின் புறச் சுவர்களிலும் அழகிய நங்கையர் அபிநயித்துக் காட்டும் கரண வடிவங்களாய்ச் சிற்பங்கள் சிலவும், புற்றிடங் கொண்டாரின் திருக்கோயில் புறச்சுவர்களிலும், கூரைகளிலும் அந்தப் பெருமானே ஆடிக்காட்டுவதாய்க் கரணக் கோல ஓவியங்கள் சிலவும் இக்கோயிலில் காணக்கிடக்கின்றன. இவற்றுள் பல, இது நாள் வரையிலும் இக் கோயிலைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் நூல்கள் எதிலும் இடம் பெறாமல் போயிருப்பதுதான் விந்தையாக உள்ளது.

புற்றிடங் கொண்டார் திருக்கோயிலின் புற சுவர்களிலும், கோயிலைச் சுற்றிய திரு நடைமாளிகையின் கூரைச் சுவர்களிலும் சிவபெருமானின் திருக்கோலங்கள் பல அழகிய ஓவியங்களாய் வரையப் பெற்று உள்ளன. இவற்றுள் மூன்று ஓவியங்கள் பரதரின் ஆடற்கரண விளக்கங்களாய் இலக்கணப் பிறழ்ச்சியின்றி அமைந்துள் ளன.

இவற்றுள் முதலாவது ஓவியம் மேற்குக் கோட்டத்தில் உள்ளது. இதில் இளம் பிறையுடன் கூடிய இறைவனின் சடா மகுடத்தின் பின்னால் இடப்புறம் அன்னமும், வலப்புறம் பாதியழிந்த நீலே யில் கருடனும் தீட்டப்பட்டுள்ளன. இறை வன் நடுநாயகமாக ஸ்வஸ்திக கரணத்தில் அழகுகளின் முழுமையாய்ப் புன்னகை பொலிந்த முகத்தினராய்க் காட்சி தரு கிறார். எட்டுத் திருக்கைகளில் வலமுன் கை, காக்கும் குறிப்பு காட்டுகிறது. பின் கைகளில் கீழிருந்து மேலாக மணி, அம்பு, பாம்பு சுற்றிய துடி காணப்பட, இடமுன் கை வேழ முத்திறையில் வீசிய கையாய் நீண்டுள்ளது. இடப் பின் கைகளில், கீழிருந்து மேலாகக் கேடயம், ஈட்டி, தீச்சுடர் உள்ளன. மேற்சட்டை முழங்கை வரையில் நீண்டுள்ளது. மணிக் கட்டுகளில் பூவளைகள். மார்பிலும், கழுத் திலும் வரிசை வரிசையாய் வண்ண வண்ண அணிகலன்கள். இடுப்பில் புலித்தோலாடை, அதை இறுகச் சேர்த்து கட்டிய இடுப்புத் துணியின் முடிச்சுகள் பக்கவாட்டுகளில் அழகாய்த் தொங்கு கின்றன. அரை மண்டலத்தில் உடல்நிலை அமைய, இடக்கால் சமபாதமாய்க் குப் புறக் கவிழ்ந்து கிடக்கும் முயலகனின் முதுகின் மீது உறுதியாய் ஊன்றி இடப் புறமாய்த் திருப்பப்பட்டுள்ளது. வலக்கால் இடக்காலின் கணுக்காலருகே முன்புறத் தில் குறுக்காகக் கடந்து இடப்புறத்தில், விரல்களால் ஊன்றிய நிலையில் அக்ரதல சஞ்சாரத்தில் பொருந்தியுள்ளது. இந்தப் பாத நிலையைத்தான் பரத நூல் ஸ்வஸ்திகக் கரணத்தின் அடிப்படை அமைப்பாய் வரையறுக்கிறது. கரண இலக்கணங்கள், கால்களுக்குரிய அசைவு களுடன் கைகளுக்குரிய அசைவுகளை யும் சேர்த்தே தருகின்றன. என்றாலும் சிற்பிகளும், ஓவியர்களும் இறை வடிவங் களைக் கரணக் கோணங்களில் வடித்த போது, கால்களுக்குரிய கோட்பாடுகளை மட்டும் பொருத்திப் பார்த்தனரே தவிர, கைகளுக்குரிய வரையறைகளை ஒதுக்கி விட்டனர். இறைக்கைகளில் அந்தத் தெய்வத்திற்குரிய கருவிகளை வழங்கி அழகு படுத்துவதில் தான் அவர்கள் இன்பம் கண்டனர். இதற்கு விதிவிலக் காய் அமைந்த சிற்பங்கள் தஞ்சை, திரு மழபாடி போன்ற சில இடங்களிலேயே காணக் கிடைக்கின்றன. செப்புத் திரு மேனிகளில் கூட, கால் இலக்கணங் களைப் பின்பற்றிய அளவு, கைக்குறிப்பு களை வார்ப்பறிஞர்கள் எடுத்துக் கொள் ளாமை இக்காரணம் பற்றியே என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த அபூர்வ பாத ஸ்வஸ்திகரின் வலப்புறம் இளையவராய் அடியவர் ஒருவர் கையில் தாளங்களுடன் இறைவனின் ஆடலுக்குப் பொருத்தமாய் இசையெழுப்புகிறார். இளமையான தோற்றம், கைகளில் தாளம் இவை கொண்டு பார்க்கும் போது, இவ் வடிவம் சம்பந்தரைக் குறிப்பதாய்க் கொள்ளலாம். பாத ஸ்வஸ்திகரின் இடப்புறம் உமையன்னை வலக்கை, கடக முத்திரையில் மலர் கொண்டு இருக்க, இடக்கை தொங்கும் கையாக அமையக் கரண்ட மகுடத்துடன் காட்சி தரும் அன்னையின் ஆடை அணிகலன்கள் ஓவியரின் கற்பனைத் திறனுக்குச் சான்றாய் நிற்கின்றன. நெற்றிக் கண்ணராய்ப் பளீரென்ற வெள்ளை வண்ணத்தில் பார்வைகளை மலர்விக்கும் பேரழகுத் திருத்தோற்றப் பெருமானாய்க் காட்சி தரும் இந்தப் பாத ஸ்வஸ்திகரின் கரணக் கோலம் - ஆரூர்க் கோயிலின் பெருமைக்குரிய புதையல்களுள் ஒன்றெனலாம்.

புற்றிடங் கொண்டார் கருவறையின் மேற்குப் புறச் சுவரில், லிங்கோத்பவர் தேவகோட்டத்தை அடுத்து சந்தியாநந்த மூர்த்தி என்ற பிழையான பெயருடன் சிவபெருமானின் விஷ்ணுகிராந்தக்கரண ஓவியம் தீட்டப்பட்ள்ளது. திருவாலங்காட்டுச் செப்புத் திருமேனியைக்கண்முன் நிறுத்தி இந்த ஓவியத்தைப் பார்த்தால், இரண்டிற்குமுள்ள இனிய ஒற்றுமை எளிதாய் விளங்கும். விஷ்ணு கிராந்தக் கரணம் திரிவிக்கிரமரின் கதையை அடிப்படையாய்க் கொண்டது. இந்த வகைக் கரணத் தோற்றங்களை ஊர்த்வ தாண்டவமென்று பல அறிஞர்கள் பிழைபட இனம் கண்டு குறித்திருக்கிறார்கள் பரத நூலின் பின்னணியில் வாமன விக்கிரமரின் கதைச் சுவட்டில் இக் கரணத்தைக் காண வேண்டும். இலக்கணம் பிறழாமல் படைக்கப்பட்டிருக்கும் இந்த ஓவியம் அங்க அமைப்புகளில் அத்தனைத் தெளிவுபட அமையவில்லையென்றாலும் முகப் பொலிவில் மயக்கும் அழகுடன் திகழ்வதை யாரே மறுக்க முடியும்?

ஊமத்தம்பூவும், கொக்கிறகும் நடுநாயகமாய் விளங்கி எழில் சேர்க்க, வலப்புறம் கூப்பிய கைகளுடன் கங்கையும், இடப்புறம் பிறையும் திகழ, விரிசடை அழகராய்க் கண்களில் கருணை சிந்தி, இதழ்களில் இளநகை பூக்கக் காட்சியளிக்கும் இறைவனின் இந்த இணையற்ற அழகிற்கு ஒப்புமை சொல்லும் வலிமை எந்த மொழிக்குத் தான் உண்டு! பின் கைகளில் வலப்புறம் உடுக்கையும், இடப்புறம் மலரும் இருக்க, வலமுன்கை காக்கும் குறிப்பு காட்ட, இடமுன்கை வேழ முத்திரையில் வலப்புறம் வீசப்பட்டுள்ளது. இடுப்பில் புலித்தோலாடை கால்களுக்கிடையில் இடுப்புக் கட்டின் தொங்கல் வலக்கால் சமபாதமாய், இடப்புறம் தலைவைத்துக் குப்புறப் படுத்திருக்கும் முயலகனின் முதுகின் மீது ஊன்றியிருக்க, வலக்கால் விஷ்ணு கிராந்தமாய் வானோக்கி உயர்த்தப்பட்டுள்ளது. இறைவனின் இடப்புறம் உமையன்னை வலக்கையில் மலர் மொட்டும், இடக்கையைத் தொங்கும் கையாகவும் கொண்டு நிற்கிறார். உமையின் முகம்தான், ஓவிய மெருகு குலைந்து போனதால் செல்லரித்தாற் போல் காணப்படுகிறது.

இந்த விஷ்ணுகிராந்தக் கரணக் காலமைப்பைச் சிலர் தண்டபாதமென்றும் வித்யுத்பிரந்தம் என்றும் கொள்வதுண்டு. அது பொருத்தமாகாது. ஏனெனில் 'விஷ்ணுகிராந்தம்' திரிவிக்கிரமரின் கதையுடன் தொடர்புடையது. திரிவிக்கிரமக் காலமைப்புகளை ஆய்வு செய்தவர்கள் விஷ்ணுகிராந்தக் காலமைப்பிற்கும் திரிவிக்கிரமக் காலமைப்பிற்கும் உள்ள ஒற்றுமைகளை உணர்வார்கள். அதியர் குடைவரைகள், மல்லைக் குடைவரைகள், சாளுக்கியரின் வாதாபிக் கோயில்கள், அஜந்தாச் சிற்பங்கள்

இவற்றையெல்லாம் சிற்பரத்னா, வைகானச ஆகமங்களின் துணையோடு பார்வையிட்ட கண்களுக்குச் சிவ பெருமானின் இந்தத் தோற்றம் விஷ்ணு கிராந்தக் கரணமே என்பதில் யாதொரு ஐயமும் தோன்ற வழியில்லை.

புற்றிடங் கொண்டார் கோயில் கூரையில் ஊர்த்வஜாநு கரணத்தில் சிவபெருமான் காட்சியளிக்கிறார். இது பரதரின் கரணப்பட்டியலில் இருபத்தைந்தாவது இடத்தைப் பெறுகிறது. ஊர்த்வஜாநு என்பதற்கு உயர்த்தப்பட்ட முழங்கால் என்று பொருள். ஊர்த்வஜாநு கரணத்தில் முழுக்காலும் உயர்த்தப்படுவதில்லை. பாதத்தைக் குஞ்சிதமாக அமைத்துக் காலை முழங்காலளவில் மடக்கி, அந்த மடக்கிய முழங்காலை மார்பளவு உயர்த்துவதுதான் ஊர்த்வஜாநு அதாவது மடக்கிய குஞ்சிதக் காலின் முழங்கால் மார்பளவு உயர்த்தப்படும். கைகளுக்குத்தனிக் குறிப்பு எதுவும் இக் கரணத்திற்குச் சொல்லப்பட்டவில்லை. மார்பளவு என்று இலக்கணம் பேசினாலும், ஊர்த்வஜாநு கரணச்சிற்பங்களில் பொதுவாக இடுப்பளவு உயர்ந்த முழங்காலைத்தான் காண முடிகிறது. தஞ்சை, குடந்தை, தில்லை ஆகியமுன்று கோயில் கரண வடிவங்களுமே இப்படித்தான் அமைந்துள்ளன. இதைக் கருத்தில் கொண்டு புற்றிடங் கொண்டார் திருக் கோயில் கரண ஓவியத்தைப் பார்த்தால் மகிழ்வுபிறக்கிறது. வலக்கால், சமபாதமாய் குப்புற வீழ்ந்து கிடக்கும் முயலகனின் முதுகின் மீது ஊன்றியுள்ளது. பாதம் குஞ்சிதமாய் அமைய, இடக்கால் முழங் காலளவில் மடிந்து இடுப்பளவு உயர்த் தப்பட்டுள்ளது. இறைவனின் நான்கு திருக்கைகளில் பின்னிரண்டில் மழுவும், மானும் இருக்க, முன் கைகளில் வலப்புறம் முத்தலை ஈட்டியும், இடப்புறம் சுட்டு முத்திரையும் காணப்படுகின்றன. சடா மகுடத்தில் வழக்கமான அலங்கரிப்புகள்! உதரபந்தம் வரை மேலாடை. இடுப்பில் புலித்தோலால் அரையாடை. அதன் முடிச்சுகள் வலப்புறமும் கால்களின் நடுவிலும் ஆடலுக்கேற்ப அழகாய்த் தொங்க, திருமுகத்தில் சினக்குறிப்பு உயர்த்திய இடக்காலின் அருகே அப்பரைப் போல் தோற்றம் கொண்ட அடியவர் ஒருவர். சற்றுத்தள்ளி உமையன்னை இடுப்பில் முருகனுடன். முருகனின் வலக்கை இறைவனைச் சுட்டும் அழகு பாராட்டிற்குரியது.

இந்த ஊர்த்வஜாநு கரணத்தில் காட்டப்பட்டுள்ள இறைவனின் முகக் குறிப்பும், வலக்கையிலுள்ள முத்தலை ஈட்டியும் இது, காலாரி மூர்த்திக்கோலமோ என்ற ஐயத்தைத் தரலாம். காலாரி மூர்த்திக் கோலத்தில் இறைவனின் உயர்த்திய காலருகே இயமன் காணப்பட வேண்டும். வலப்புறத்தில் லிங்கத்தைத் தழுவிய மார்க்கண்டேயர் இருக்க வேண்டும். சிவபெருமான் லிங்கத்தி லிருந்து தோன்றியவராய்க் காட்டப்பட வேண்டும். இங்கு இம்மூன்று நிலைகளுமே இல்லாமையின் இவ்வடிவம் ஊர்த்வஜாநு கரண விளக்கமாகவே வரையப் பெற்றதாகக் கொள்வதில் பிழையிருக்க முடியாது.

இறைவனின் இணையற்ற இந்த ஆடற் கரணங்களைப் போலவே, எழில் கொஞ்சும் கரணக் காரிகைகளையும் இத் திருக்கோயில் சிற்ப அற்புதங்களாய்க் கொண்டிருக்கிறது. மனுநீதிச் சோழனின் தேராக வருணிக்கப்படும் கல்தேரின் வெளிப்புற வடிப்புகளில் அரைத் தூண் களுக்கு இடையிலுள்ள சிறு கோட்டங் களில் கங்காவதரணக் கோலத்தில் ஓர் ஆடல்அழகியும் அர்த்த ஸ்வஸ்திகத்தில் ஓர் ஆடல்அழகியும் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றனர்.


நாட்பட்ட நிலையாலும், வெயிலும் மழையும் சேர்ந்து செய்யும் சதியின் விளைவாலும் இவ்விரண்டு சிற்பங்

உ



தியாகேசன் திருத்தாள் போற்றி!
வன்மீகன் திருத்தாள் போற்றி!
அன்னை அல்லியங் கோதைதாள் போற்றி!
ஆதிசக்தி கமலாம்பிகை பதம்போற்றி! போற்றி!!

நூற்றாண்டுகள் கழிந்து நடைபெற்ற, வரலாற்றில் இடம் பெற்ற இந்த குடமுழுக்கில் யாகசாலை அலங்காரம் செய்யும் பேறு பெற்றேன். நான் செய்த அனைத்துப் பணிகளிலும் இதுவே பெரும்பணி. இதுவரை யாரும் செய்ததில்லை; இனி செய்வதும் கடினம். துணிவும் வாய்ப்பும் தந்து, உற்றுழி உதவி ஆலோசனைகள் நல்கிய நிர்வாக அலுவலர் திரு சு. ஸ்ரீதரன் அவர்களுக்கு நன்றிக்கடப்பாடுடையேன்.



இவண்,

சீ. ந. மாரிமுத்து,
காளியம்மன் கோயில் தெரு,
குத்தாலம்-609 801
தஞ்சை மாவட்டம்

யாகசாலைகள், பந்தல் அலங்காரம்,
கோவில் திருவிழாக்களுக்கு
சகோபுரம், தெப்பம், பல்லக்கு
முதலியனவும்,
திருமண வைபவங்களுக்கும்
முகப்பு அமைப்பவர்.



பொன்னும் மெய்ப்பொருளும் போகமும்
திருவும் புணக்கும்
மன்னிய புகாழாரூரன் திருக்கோயில்
குடமுழுக்கினை
விண்ணளாவிய புகழ் விளங்கி
சிறக்கும் வகையில் நடத்திய
அண்ணன் தென்கோவன் தம்பி
ஸ்ரீதரன் இருவரையும்
வணங்கி வாழ்த்துகிறோம்.

TEL : VEESKKE

M/s. V. S. K. கணபதி செட்டியார் மளிகை

கணபதி விலாஸ் மளிகை
கணபதி எண்டர்பிரைசஸ்

46, அண்ணா சாலை
8, எல்லையம்மன் தெற்கு வீதி,
விஜயபுரம், திருவாரூர்,

போன் : ஆபீஸ் 2288
வீடு 2325



உரிமையாளர்கள் :

S. சிவகுமார் மேனேஜிங் பார்ட்னர்.
S. கணேசன் பார்ட்னர்.

தியாகராஜர் வடிவம்

தியாகராஜரை சோமாஸ்கந்த வடிவம் என்றே பெரும்பான்மையானோர் கருதி வழிபடுகின்றனர். ஆனால் தியாகராஜ வடிவத்தை கழுத்துக்குக்கீழே கண்டோர் இலர்; கண்டவரிலும் விண்டவர் இலர். தியாகராஜர் திருவுருவம் சோமாஸ்கந்த வடிவம் அன்று எனக் கூறுவோரும் உளர். ஆகம சாஸ்திரப்படி சிவன் எனும் செம்மேனி எம்மானின் வடிவங்கள் இருபத்தைந்தாகும். இந்த இருபத்தைந்து திருவுருக்களில் ஒன்றே சோமாஸ்கந்த திருவுரு. அகக்கண்ணால் தியாகேசரைக் கண்டு இன்புற்றுப் பலவாறு அனுபவித்து ''ஆரூரில் கண்டடியேன் அயர்த்தவாறு'' என புலம்பிய நாவுக்கரசர், ''பையஞ்சு நாகம் பள்ளி கொள்வான் உள்ளத்தானும்'' என்ற தம்முடைய தேவாரத்தில் ''ஐயைஞ்சின் அப்புறத்தானை'' அதாவது ஐயைந்து, இருபத்தைந்து சிவ வடிவங்களில் இருந்து வேறுபட்டவன் எனக் கூறுகின்றார். எனவே தியாகேசர் திருவுரு இன்னதென்று அறிந்திடற்பாலதன்று. இதனையே சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ''இன்ன தன்மை யன்றறிவொண்ணா எம்மானை'' என்று பாடுகிறார்.

கு. ஸ்ரீதரன்,
நிர்வாக அதிகாரி.

களுமே சிதிலமாகியுள்ளன. இரண்டுள்ளும் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருப்பது கங்காவதரணக் கன்னிதான்.

பகீரதன் கங்கையைப் பெறச் செய்த தவத்தின் நீட்சியும், அந்தத் தவத்தின் விளைவால் வந்த கங்கையை இறைவன் தன் சடைகளில் ஏற்ற மாட்சியும் கதை கதையாய்க் காவியங்களில் சொல்லப் பட்டுள்ளன. கடவுள் கங்கையை ஏற்கும் நிலையைத்தான், கங்காவதரணக் கரண அடிப்படையாகக் கொள்கிறார்கள். தில்லையிலும், குடந்தையிலுமுள்ள கங்காவதரணக் கரணச் சிற்பங்கள் இக் கரணத்தின் வடிவ விளக்கங்கள் எனலாம் இவ்விரண்டனுள் குடந்தை முதல் நிலையையும், தில்லை இரண்டாம் நிலையையும் சுட்டுகின்றன. இவ்விரண்டாம் நிலைக் கங்காவதரணத் தோற்றத்தையே ஆரூர்க் கல்தேரின் ஆடல் அழகியும் அரங்கேற்றிக் காட்டுகிறார். இரண்டு கைகளாலும் நிலத்தை ஊன்றி, உடலை வில்லாய் வளைத்துக், கால்களைப் பின் புறமாய் வானோக்கி உயர்த்தியிருக்கும் கங்காவதரணக் கரணத் தோற்றம் ஆடற் கலையின் அதி உச்சம் எனலாம் செவிகளில் பனையோலைக் குண்டலங்கள் காட்சி தர, உயர்த்திய கால்களில் சிலம்புகள் ஒலிக்க, கழுத்தில் அணிகள் தொங்கக் கரணம் காட்டும் இந்த அழகியின் மார்புப் பகுதியில் பெரிய துளையொன்று பொந்து போல் அமைக்கப்

பட்டுள்ளது. இந்தப்பொந்து அமைக்கப்பட்டதன் காரணம் நமக்குத் தெரியவில்லை. இது தேரையமைத்தவர்கள் செய்ததா, அல்லது காணப் பொறுக்காத கல்மனங்களின் கை வேலையா என்பது விளங்கவில்லை.

இதே கல் தேரின் இன்னொரு கோட்டத்தில் அர்த்த ஸ்வஸ்திகக் கரணத்தில் ஓர் ஆரணங்கு, காலத்தின் கடுமைக்குச் சற்றே தப்பியவராய் குறையாத அழகுடன் வெட்கப் பார்வையை வீசிய முகத்தினராய்ப் பொலிவோடு பார்க்கிறார். வலப்புறமாகச் சற்றே சாய்ந்த சன்னதக் கோலத்துத் திருமுகம்; தலைமுடி கொண்டையாய் முடியப்பட்டுள்ளது. செவிகளில் பனையோலைக் குண்டலங்கள். எடுப்பான எழிலார்ந்த அளவான மார்பகங்கள். உடுக்கையை நினைவூட்டும் ஒடுங்கிய இடை. அரை மண்டலத்தில் உடல் நிலை. இந்த அழகியின் ஆடற்கோலந்தான் எத்தனை நயம்!

நாட்டிய நூற்படி அர்த்த ஸ்வஸ்திகத்தில் இரண்டு கால்களும் ஸ்வஸ்திகத்தில் இருக்க, வலக்கை வேழ முத்திரையிலும், இடக்கை மார்பருகிலும் காணப்பட வேண்டும். இந்தக் கரணத்திற்கான குடந்தை சாரங்கபாணி கோயில் விளக்க சிற்பத்தைப் பார்த்த கண்களால், கல்தேர் கண்மணியைப் பார்ப்பவர்கள் வியந்து போவார்கள்! இழை கூடப் பிசகாமல் குடந்தையாரை முன்னோடியாக்கிக் கோலம் கொண்டுள்ளாள் இந்தக் கோமகள். இடக்கால் முன்னால் சமபாதமாய் இடப்புறம் திரும்பிய பாதநிலையில் அமைய, வலக்கால் இடக்காலின் குறுக்காகப் பின்னால் இடப்புறமாய் நீட்டப்பட்டு அக்ரதல சஞ்சாரத்தில் தரையைத் தடவ, வலக்கை மார்பருகே பொருந்த, இடக்கை தொங்கும் கையாய் தூணருகே நீள, அர்த்த ஸ்வஸ்திகக் கரணத்தின் பொருளார்ந்த படப்பிடிப்பாய் இந்தக் காவியச் சிற்பம் காண்பாரைக் களிப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

இவை மட்டும்தான் என்று எண்ண வேண்டா. நிகுஞ்சிதம், வலிதம் முதலிய கரணங்களிலும், ஊர்த்வ தாண்டவக் கோலங்களிலும் இக் கோயிலில் ஓவியங்களும் சிற்பங்களும் விருந்து படைக்கின்றன. ஆடற்கலைக்கு இத் திருக்கோயிலில் எத்தனை முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது என்பதற்கு, இக்கோயில் கல்வெட்டுகளும், தஞ்சைப் பெரியகோயில் கல்வெட்டுகளும், பரவை நங்கையின் பெருமிதக் காதலும், அப் பெரு மாட்டி காலத்தால் பெற்ற கணக்கிட முடியாத உயர்வும் சான்றாய் நிற்கின்றன. ஆரூர், ஆடலென்னும் கலை பிறந்து வளர்ந்து வாழ்ந்து திகழும் பேரூர். இங்குக் கரணங்களைக் காண்பதில் வியப்பிருக்கமுடியாது நாளும் பொழுதுமாய்க் கால்களிலும் கைகளிலும் கவிதைத் துடிப்புகளை முத்திரைகளாகவும், குறிப்புகளாகவும், நிலைகளாகவும் திறம்படஅமைத்து,காண்போர் தம் இதயப் பேரேடுகளில் எத்தனையோ காவியக் காட்சிகளை அழியாத ஓவியங்களாய் அமைத்துப் போந்த ஆடலரசிகளின் அஜந்தா நினைவுகள்தாம் இன்று நம் கண்களில் படமாகிக் கருத்தில் நிலை பெற்றுக் களிப்பைப் பெருக்கிடும் இந்தக் கரணக் கோலங்கள். ஆரூரின் இந்த ஆடல் அற்புதங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்குக் காத்துத் தருவது நம் தலையாய கடமையாகும்.

சிவயோகமும் திருவாரூரும்

பேராசிரியர், டாக்டர். அ. அறிவொளி, M.A., Ph.D.,
53, சேதுராமப்பிள்ளை காலனி, திருச்சி—620020.

'ஆரூரில் பிறந்தவர்களுக்கு முக்தி உண்டு'என்று கேட்டதும் சிலர் சிரிப்பர். நமக்குக் கூடவா? என்று கெக்கலிப்பர்! 'சிறு விலங்கு பிறந்தால் அதற்குமா?'— என்று விசாரிப்பது போல வேடிக்கை செய்வர்!

ஏன் இப்படிச் செய்கிறார்கள்? அநேகமாக இதில் யாருக்கும் முழு நம்பிக்கை இல்லை! சரிதானா?

ஆரூரில் பிறந்த சராசரி பிறப்புக் கெல்லாம் முக்தி இல்லை தான். அப்படியானால் முன்னோர் சொன்னதை மறுக்கிறாயா? என்றும் மடியைப் பிடிப்பார்கள்.

மறுக்கவில்லை; மதிக்கிறேன்! மறுப்பதன் மூலமாகவே மரியாதை செய்கிறேன்! மேலோட்டமானதை மறுக்கிறேன்! உள்ளோட்ட மானதில் மனம் பறிகொடுக்கிறேன்.

ஆரூர் என்பது முதுகந்தண்டின் அடியில் உள்ள கீழ்முனைக்குப் பெயராகும். மூலாதாரம் என்று சொல்வதே ஆரூர் ஆகும். யோகம், பத்தி, ஞானம், போன பிறவிப்பலன் முதலிய காரணங்களால் இந்த மூலாதாரத்தில் ஒர் ஒளி தோன்றும். அது யாருக்குத் தோன்றினாலும், அவர் அமெரிக்கராக இருந்தாலும், இதுதோன்றிவிட்டால் அவர் ஆரூரில் பிறந்தவர் ஆகிவிடுவார். ஆரூரில் பிறந்தும் இது தோன்றாவிட்டால் அவர் ஆரூரில் பிறந்தவர் ஆகமாட்டார். இப்படி மூலாதாரத்தில் ஒளி தோன்றினால் அவர்கள் உறுதியாக முக்தி பெறுவர் என்பதைத் அந்தப் பழம் பெரும் நம்பிக்கை அல்லது கருத்து நமக்குணர்த்துகிறது. இதையறியாமலும், அதற்கு முயலாமலும் பலர் கேலி செய்கின்றனர்.

நானாக இதைக் கண்டு சொல்லவில்லை. திருவாரூர் சிவயோகி(அமரர்)மா. இரத்தினசபாதி பிள்ளையவர்கள் நூல்படி சொல்கிறேன். 1973இல் 'திருவாசகமும் சிவராஜ யோகமும்' என்று 360 பக்கத்தில் ஒரு நூல் எழுதினார்கள் சிதம்பரம் வாணி பார்மஸி அதிபர் திருவாளர் கு. பழநிவேல் அவர்கள் தம் செலவில் அந்நூலை வெளியிட்டார்கள்.

அந்த நூலை மேம்போக்காகப் படித்துத் தாமும் புரியாமல் பிறர்க்கும் புரிய வைக்காமல் பலர் இதழ்களில் கட்டுரை எழுதுகிறார்கள். அவர்கள் தாங்கள் எங்கிருந்து இதைப் பெற்றோம் என்று கூறாமல் மேதாவிகளாக எழுதுகிறார்கள்.

அந்தச் சிவயோகியின் அனுபவக் கண்டு பிடிப்புக்களைப் பயின்று பழகி உண்மையறிய வேண்டும். இதற்காகச் சிலவற்றை இதில் எழுதுகிறேன். மற்றவர்கள் அந்நூலில் பலவற்றைப் பயின்று அறியலாம்.

ஆரூரில் கமலாம்பிகை கோயில், வெளிச்சுற்றில் இருக்கிறது. இக் கோயில் ஒன்றே ஆரூர் முழுமைக்கும் இந்தியத் தத்துவங்களுக்கெல்லாம் கூடப்பெரிய விளக்கமாகும்.

சதுரமாய் அமைந்த எந்தக் கோயிலுக்குள்ளும்-ஒரு குறுக்குக்கோடு போலத் தென்மேற்கிற்கும் வடகிழக்கிற்கும் கோணக் கோடாக ஒரு சிறு கோயில் அமைந்திருக்காது. ஆனால் கமலாம்பிகையின் தனிக்கோயில் உள்ளது ஏன்? எதற்காக? இப்படியுள்ளது?

மூலாதாரம் இருப்பதற்குத் தென்திசை என்று பெயர். அதற்கு வலப்பக்கமாக அதாவது தென்மேற்குத் திசையிலிருந்து இடா என்ற நாடி புறப்பட்டு உச்சித் தலையின் இடது பக்கமாக,அதாவது வடகிழக்கில் அந்த நாடி முடிகிறது. இது சந்திரயோகம் என்று திருமந்திரத்திலும் கூறப்படுகிறது.

இந்தச் சந்திரநாடிதான் இந்தக் கோயில் அமைப்பாகும். தென்மேற்கு என்பது கன்னிதிசை எனப்படும். ஓர் அசுர கன்னியாவாள் அவள். அந்த இடத்தைத்தான் கமலாம்பிகை, தன் இருப்பிடமாகக் கொண்டுள்ளாள்.

கமலாம்பிகையும் அரக்கியா? இல்லை! உடம்பில் தென்மேற்கு திசையில் சிந்தை வைக்காதபோது அந்த அரக்கத் தனத்தையே அங்குள்ள கன்னியினால் பெறுவார்கள். அந்தக் கன்னி மூலையை (பக்கத்தை) யோக சிந்தனையுடன் உணர்வு எழுப்பினால் அங்கே யோகாம்பிகையாகிய கமலாம்பிகை வந்து விடுவாள்.

இவள் இருப்பது தென் மேற்கில். இவளுக்கு வலப்புறம் நேராக இருப்பது மந்திர பீடம் என்பதாகும். இவளது கோயில் திருச்சுற்றிலேயே அதுவும் உள்ளது. மூலாதாரமாகிய தென்திசைக்கு அதுவே அடையாளம்.

அந்த மந்திரபீடத்தில் ஒரு பட்டத் திருவாசியில் 51 அட்சரங்கள் எழுதப் பட்டுள்ளன. அவை மூலாதாரத்தில் ஆக்கும் வாக்கு இருப்பதன் அடையாளம். இதையே கமலம் (நான்கிதழ்த்தாமரை) என்று கொள்ள வேண்டும். இதன் சக்தியே கமலாம்பாளாகத் தென்மேற்கு இடா நாடியில் உள்ளாள்.

கமலாம்பிகை பார்ப்பது வட கிழக்காகிய ஈசனின் திசையாகிய ஈசானமாகும். அதாவது 'ஈச்வரன், என்றால் 'ஐச்வரியம்', எல்லாம் பெற்றவன்; தருபவன்' என்று ஆகும். ஆகவே யோகம் செய்வோர் ஈச்வரனோடு உச்சியில் சம்பந்தம் அடைவதை, முக்திபெறுவதை இது குறிக்கிறது.

இதனால் கமலாம்பிகை பார்க்கும் வடகிழக்கில் பார்வதீச்வரர் கோயிலையும் இதற்காகக் கட்டியுள்ளனர். அங்கேதான் கமலாம்பிகை பள்ளிகொள்வதாக நடைமுறையும் இருந்து வருகிறது.

இரண்டிற்கும் நடுவே ஒருகிணறு உள்ளது. இப்போது மூக்குத்திக் கிணறு என்பார்கள். இது முக்திக் கிணறு ஆகும். இந்தக் கிணறு இரண்டின் அடையாளமாகும்.

யோகம் சாதித்தால் தலையில் அமுதம் ஊறி உடல் நாடியெல்லாம் நிரம்பும் என்பார்கள் அந்த அமுதக் கிணறுதான் இந்த முக்திக் கிணறாகும்.

இல்லறமாகிய ஆண் பெண் இன்பத்தையும் யோகமாக்கி முக்தி அடைய முடியும் என்பதை நம் நாடு துணிவுடன் மெய்ப்பிப்பதாகும்.

"அங்கப் புணர்ச்சியும் ஆகின்ற தத்துவம்
அங்.த்தில் விந்து வருகின்ற போகத்துப்
பங்கப் படாமல் பரிகரித்துத் தம்மைத்
தங்கிக் கொடுக்கத் தலைவனும் ஆமே"

என்று திருமந்திரம்(828)சிற்றின்பத்தையே பேரின்பமாக மாற்றும் தத்துவச் செய்தியை ஒப்புகிறது மனிதர்களின்

(உடம்புகளின்) பிறப்பு உறுப்பு உள்ள இடம் நீர் நிலையாகிய சுவாதிட்டானம் எனப்படும்.

எனவே, முக்திக்கிணறு மேலுள்ள பேரின்ப அமுதையும், கீழுள்ள சிற்றின்ப அமுதையும் குறித்ததாகும்.

இந்தக் கமலாம்பிகை காலின்மேல் கால் போட்டபடி அமர்ந்திருக்கும் காட்சி யோக விளக்கம் ஆகும். இது மிகவும் அரிதான காட்சியாம்.

இக் கோயிலின் முழு விளக்கமாக இருப்பவர் தியாகராசப் பெருமானாவார்.

இவரது சக்தியாகியாகிய பெருமாட்டிக்குக் 'கொண்டி'என்று பெயர். தஞ்சையில் பெண் குதிரையைக் கொண்டி என்று கூறுவதை இப்போதும் கேட்கலாம். அடங்காத பெண்குதிரை கொண்டி என்று அழைக்கப்பெறும்.

சந்திர ரேகை எனப்படும் இடாநாடி, மூச்சுக்காற்றின் - கிரமமான யோக உந்துதலால் ஒளியாகிப் போகும். போகும் ஒளி ஈசான முகமாக உச்சித் தலையில் யோகிக்குக் காட்சியாகும்.

இதன் விளக்கமே தியாகராச மூர்த்தமாகும். இந்த யோகமூச்சே குதிரை என்று கூறப்படும். அதுவே, 'கொண்டி' என்ற சக்தியாகக் கூறப்படுகிறது.

சிற்றின்பத்தால் பேரின்பத்தை அடைய முடியும் என்பதைக் காட்டும் சிறப்பு விளக்கமே தியாகராசர். இவருக்குத்தான் இங்கே மிகுந்த சிறப்புண்டு.

இவரின் பூசைமுறை முதல் சடங்கு அனைத்தும் சிருங்காரமாக போக மூர்த்தத் தொடர்பு கொண்டதாகவே இருப்பதைக் காணலாம்.

இவரும்'கொண்டியும்'முழுதும் தெரியும் மேனியராக இல்லாமல் மறைக்கப்பட்டிருப்பர். பரியங்கம் என்னும் சிற்றின்ப யோகத்தை உலகில் நிர்வாகம் செய்து (அதிட்டித்து) நிற்பதால் இப்படி இருக்கிறார்கள்.

சூரிய நாடி (வலதுகண்) சந்திர நாடி (இடதுகண்) அக்னி நாடி (பிடரிக் கண்) ஆகிய மூன்றும் இணைந்து ஆத்மாவைச் சாதகனுக்கு ஒளி வடிவமாகத் தெரிய வைக்கும்.

''ரவீந்த்வக்னி ஸம்யுக்த சிச்சக்ர(ம்)'' என்று யோக மீனாட்சி ஸ்தோத்திரம் (9) கூறும்.

இதுவே வியாபினி என்னும் ஒன்பதாவது கலை எனப்படும். இதை ஆத்ம சோதி என்று கூறுவர்.

''அங்கி மதிகூட ஆகும் கதிரொளி
அங்கி கதிர்கூட ஆகும் மதியொளி
அங்கி சசிகதிர் கூட அத்தாரகை
தங்கியதுவே சகலமு மாமே,,

என்ற திருமந்திரத்தில்(824) இதை விளக்குகிறார். தாரகை ஒளி என்பது ஆத்ம சைதன்யமான ஆத்ம சோதியே ஆகும்.

இப்படி மூன்று ஒளிகள் கூடி உருவாகும் ஆத்ம சோதியைத் தியாகராசர், கொண்டி, முருகன் ஆகிய மூன்று பேர் கூடும் சோமாஸ்கந்தர் வடிவமாக காட்டியுள்ளனர். இது அதோ முகதரிசனம் என்ற திருமந்திரப் பகுதியில் விளக்கப் பெற்றதாகும்.

'ஸ' என்பது சிவத்தைக் குறிப்பது. 'உமா',தேவியைக் குறிப்பது. 'ஸ்கந்தர்', முருகனைக் குறிப்பது. இவை வடமொழிப்படி ஸோமாஸ்கந்தர் என்று ஆகும். 'உ.ம்.அ.' என்னும் மூன்று எழுத்துக்கள் உ. ம். அ. எனச் சேர்ந்து உமா என்று வரும். இது 'ஸ' என்பதுடன் சேர்ந்தால் ஸோமா என்று ஆகும். சந்திர யோகத்தை இந்தப் பதமே குறிப்பிக்கிறது. 'ஓம்'

என்ற மந்திரம் உமா என்று பயன்படு முறையில் மாறியுள்ளது. எனவே, சந்திர நாடியாகிய (இடா) இடப்பக்க நாடியில் 'ஓம்' என்பதைச் சொல்லி உச்சித் தலையில் ஈசானத்தில் ஓர் ஒளியைத் தோன்ற வைப்பதைத்தான் ஸோமாஸ்கந்தர் என்ற பெயரும் நமக்கு உணர்த்துகிறது.

இந்த யோகத்தைச் சிற்றின்பமுறையில் செய்து பேரின்பப் பயனை அடையலாம் என்று தியாகராசர் சந்நிதி உணர்த்துகிறது.

உச்சியில் போகும்போது மரகத நிலையில் இந்த ஒளிபோகும் என்பதை விளக்கத் தியாகராசர் கருவறையில் ஒரு மரகதலிங்கம் உள்ளது. அபிஷேகம் இதற்குத் தான் நடக்கும்.

திருப்பள்ளி எழுச்சி பாடித் தியாகராசரை எழுப்பும் முறையில் இது பள்ளியறை விளக்கம் என்பதை நாம் அறியலாம். இது 'தியாகராஜ வித்தை' என்ற யோக வழியின் முழுவிளக்கமாகும்.

வன்மீகர் என்பதே திருவாரூரில் மூலவர் ஆவார். இவரை மூலட்டானர் என்றே திருமுறைகள் அழைக்கும். காரணம்,மூலாதாரத்தைக் குறிக்கும் ஊர்க் கோயிலாகையால் இவரை 'மூலட்டானர்' என்று அழைத்தார்கள்.

'வன்மீகர்', புற்றில் இருப்பவர் என்று பொருளாகும். மூலாதாரம், சுவாதிட்டானம்(குறி)எனும் இரண்டு வளைவாக முதுகுத் தண்டில் இருக்கும் (Perineum). ஆகையால் இது புற்றாக உருவகம் செய்யப்பட்டது.

புற்றில் நாகம் வாழ்வதுபோல் குண்டலினியெனும் நாகசக்தி மூலா தாரத்தில் சுவாதிட்டான இணைப்போடு தான் உள்ளது.

இவருக்குச் சோமகுலாம்பிகை என்று பெயர்கொண்ட பிராட்டி உண்டு. சந்திர யோகத்தைக் குறிக்கும் பெயரே இந்தப் பெயர் என்பதில் சந்தேகமில்லை.

தியாகராசர், வன்மீகருடைய உற்சவ மூர்த்தம் என்று பலர் நினைப்பது தவறு. மூலாதாரத்தில் உள்ளவர் வன்மீகர். அவரது சக்தி சோமகுலாம்பிகையாவாள்.

தியாகராசரோ மூலாதாரத்திற்கு மேல் உள்ள சுவாதிட்டானத்தில் உள்ள செய்கையை விளக்குபவர். இரண்டிற்கும் இடையில் நம் உடலில் இரண்டு விரல் தான் இடைவெளி. இக்கோயிலின் பரப்பை எட்டுவிரல் என்று வைத்துக் கொண்டால் இந்த இருவர் சந்நிதிக்கும் இரண்டு விரல் அளவுதான் பரப்பு என்று சொல்லும்படி அமைத்துள்ளார்கள். இது உள் பிரகார அளவில் மட்டும் உள்ள அளவாகும்.

அடுத்த திருச்சுற்றில் நீலோத்பலாம்பாள் என்ற தாயார் சந்நிதி உள்ளது. இவர்க்குரிய சிவமூர்த்தம் தனியாகயில்லை. இவள் கன்னியுமில்லை என்பதை இவளுடைய தோழியின் கையில் ஒரு குழந்தையிருப்பதும் அக் குழந்தையை இவள் தொட்டு இன்புறுவதும் விளக்கப்பட்டடிருக்கின்றன. ஆகவே, சிவத்துடன் கலந்தவள் என்பது தெரியவருகிறது.

தனியாகச் சிவசந்நிதி ஏனில்லை? என்பது நம் சமயத்தின் சிறப்பை உணர்த்தும் கட்டமாகும்.

மூலதாரத்தில் வன்மீகராக இருப்பவரே, சுவாதிஷ்ட்டானத்தில் தியாகராசராக உள்ளார். அவரே மணிபூரகமாகிய (கொப்பூழ்) ஆதாரத்தில் காக்கும் கடவுளாக உள்ளார். அவரே அநாகதத்தில் (இருதயப்பகுதி) ருத்திரராக உள்ளார். அவரே விசுத்தியில் ஸதாசிவராக உள்ளார். (கழுத்தின் அடிப்

பக்கம்). அவரே ஆக்ஞையில் (புருவ மத்தி) மகேச்வரராக உள்ளார். அவரேதான் ஈசான மூர்த்தியாக வடகிழக்கு உச்சித் தலையில் விளங்குகிறார்.

அதாவது கடவுள் ஒருவரே என்பது இதன் உண்மையாகும் வீட்டிலும், கடைவீதியிலும், அலுவலகத்திலும், படுக்கையறையிலும்,வெளியூர் பயணத்திலும் ஒரேமனிதன் பலவிதமான ஆடைகளை இடத்துக்குத் தக்கபடி ஒவ்வொன்றாய் உடுத்துவதுபோல, ஒரே சிவம் பல கட்டங்களிலும் பலவிதமாகத் தோற்றமளிக்கிறது. இந்த உண்மையைத்தான் உலகம்மை என்ற நீலோற்பலாம்பாள் உணர்த்துகிறாள். அதாவது தனியாகத் தனக்கெனச் சிவமூர்த்தம் கொள்ளாமல் இதை ஏற்கிறாள்.

ஈசானர் ஒளிக்கடவுள். சந்திர யோகத்தின் உச்ச விளைவாகத் தோன்றியதும் சிவபெருமானின் 5 முகங்களில் ஒன்றும் ஈசானம்.

இதை விளக்குவதற்காக உச்சிக்குடுமியை இடது பக்கம் சிறிது சாய்த்து முடிந்திருப்பதை வைத்துணரலாம். தில்லை தீட்சிதர்களின் தலைக்கோலம் இப்படித்தான் இருக்கும். இந்த ஒளிமுகம் நீலநிறமாய் இருக்கும் என்பதை உணர்த்தவே நீலோற்பலாம்பாள் என்றபெயரும் பூண்டுள்ளார்.

நீலோற்பலம் என்பது கருங்குவளைப்பூ. இது ஈசானத்தின் அடையாளம். தியாகராசருக்குச் செங்கழுநீர்ப் பூவே மிகுந்த பிரியமுடையதாகும். சுவாதிட்டனஒளி சிவப்பாகவும், ஈசான ஒளி நீலமாகவும் இருப்பதால் இதை நாம் உணரலாம். செங்குவளை, கருங்குவளை இரண்டும் ஒருவகையே; குவளைப்பூவே. ஆனால், நிறம்வேறுபடும்.

இதுபோல் சிவம் ஒன்றுதான்; ஆனால் இடம் நோக்கி நிறம் வேறுபாடுகொண்டிருக்கும்.

வேதங்களுக்குத் தனிக்கோயில் இக்கோயிலில் தான் உண்டு.'வேதம்'என்பது போக நெறிடைப் பயிற்சியாகவும், சடங்காகவும், மந்திரஒளி (நாதம்) யாகவும், கொள்கையாகவும், விளங்கும் நான்கு தன்மையுடையது. இதனால்தான் யோகக் கோயிலாகிய ஆரூரில் வேதங்களாகிய யோக நூல்களுக்குக் கோயில்கள் உள்ளன. ஆகவே, 'ஆரூர்' சிவயோகத்தலமாகும்.

யான் மணிவாசகர் நூலகத்தினர் வேண்டுகோளின்படி திருவாரூர் என்னும் நூல் எழுதியுள்ளேன். அதிலும் சில கருத்துணர்ந்து பிறசிறப்பையும் இவ்வூரில் உணரலாம்.

அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் கோயில்

அய்யம்பாளையம், மங்கலம் 638 663 பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்.

உலகினில் பலவாம் கொடுவிடம் பலவில் உடையதிங் குயிர்பல வுறினும்
இலகிய நாக விடத்திலும் கொடிய தில்லையென் பார்உல கத்தோர்
குலவிய நாக மெதுகடித் திடினும் கூடும் நின்றன் திருப் பெயரெச்
சொலவுறும் போதே அகலுமாண் புடையாய் தோயும்வா ழைத்தோட்டத்
தையாவே!

கொங்கு நாட்டில் கோவைக்கும் திருப்பூருக்கும் நடுவே அமைந்துள்ளது, அருள்மிகு வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயில். சேரமான் பெருமாள் நாயனாருடன் திருக்கயிலாயம் சென்றடைந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள், சிவனுக்குத் தொண்டு புரியும் அடியார்களை வணங்குவதே சீரிய சிவத் தொண்டென "அடியார்க்கும் அடியேன்" என்ற சொற்றொடரால் கூறிப் போந்தார். அத்தகைய சீரிய சிவத் தொண்டாற்றி 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் சின்னையச் செம்மலெனும் வாழைத் தோட்டத்து அய்யன். கொங்குத் தமிழில் அய்யன் என்பது பெரியவர் என்ற பொருளைக் குறிக்கும். வாழைத் தோட்டத்து அய்யன் அவர்கட்கு, சிவபெருமான் துறவியர் வேடத்தில் வந்து சர்வவிஷ சம்ஹார மந்திரத்தையும், பஞ்சாட்சரத் தையும் உபதேசித்து அருளியுள்ளார்.

இத்தகைய சிறப்புபெற்ற இப்புண்ணிய தலத்திலுள்ள புற்றுமண் ஆயிரக் கணக்கோரின் பிணி போக்கும் அருமருந்தாகப் பயன்பட்டு வருகிறது. விடம் தீண்டப் பெற்றவர்கள் இங்கு வந்து தங்கி புற்று நீரணிந்து நோய் நீங்கப் பெற்று செல்வது நாளும் நடைபெறும் நிகழ்ச்சியாகும். நாள் தோறும் ஆயிரக் கணக்கான மக்கள் வந்து வழிபட்டுப் புற்றுமண் எடுத்துச் செல்கின்றனர். வந்து தங்குகிறவர்களுக்கு, முடி எடுத்து, பொங்கல் வைத்துப் பிரார்த்தனை செலுத்த அன்றாடம் வரும் பக்தர்கட்கு, பெரிய கூடங்கள், பொங்கல் சாவடிகள், இலவச அறைகள், வாடகை அறைகள், குளிக்கும் அறைகள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்திருக் கோயில் நிதியிலிருந்து கட்டப்பட்ட மேல்நிலைப் பள்ளியொன்றும், அன்பு இல்லம் ஒன்றும் உள்ளன. அய்யன் சிவனடி அடைந்த மார்கழித் திருவாதிரை நாள் இந்த ஆலயத்தின் சிறப்பு மிக்க குருபூசை விழாவாகும்.

அனைவரும் வந்து அய்யனின் அருள்பெற்று உய்யுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

வே. கோவிந்தராம் எம்.ஏ., பி.எல்.,
செயல் அலுவலர்.

ப. கிருஷ்ணசாமி, எம்.ஏ.,
உதவி ஆணையர்/தக்கார்.

ஆரூரானும் யோக வித்தைகளும்

அடியார்க்குநல்லான்

திருத்தலங்களில் தேர்ந்து அமைந்தது திருவாரூர்.

ஆரூரின் ஆலய அமைப்பு, பிரணவ சாதனையைப் பிழையறப் பேசும், குண்டலினி யோகத்தின் குறிப்புணர்த்தும் ஸ்ரீவித்யை மந்திரங்களின் கருவறையைக் காட்டும்; அசபை என்கிற அந்தரங்க சாதனையை அழகுறச் சொல்லும்; அன்றி அத்தன் அருள்பெற சித்தரும் முனிவர் பலரும் கைக்கொண்ட பரியங்க யோகத்தைப் பரிந்துரைக்கும்.

ஆரூர் ஆலயத்தின் மூலவர் வன்மீகர். அருகே அன்னை சோமகுலாம்பிகை. இறைவன் சூரிய குலம். அம்பிகை சந்திர குலம்.

வன்மீகரின் வலப்பக்கத்தில் - தனி சந்நிதியில் தியாகராஜர் வீற்றிருக்கிறார். சிறப்புப் பூசைகள் எல்லாம் இவருக்கே. தியாகராசத் திருமேனியை ஒட்டி அவரோடு பிரிதலின்றி கொண்டி என்கிற சக்தி. கருவறையில் தனியாக விடங்கர் என்கிற மரகத லிங்கம். இவரே அபிஷேக மூர்த்தி.

அடுத்த பிரகாரத்தில்—சிறு கோயிலில் உலகம்மை நீலோத்பலாம்பிகையாக அழகுறக்காட்சியளிக்கிறாள்.

கடைசிப் பிரகாரத்தில் வடகீழ் மூலையில் தனிக்கோயிலில் கமலாம்பிகை சுகாசனக் கோலத்தில் வீற்றிருக்கிறாள்.

இவர்களே ஆலயத்தின் பிரதான மூர்த்திகள். இனி இவ்வாலயம் காட்டும் யோக நெறிகளைக் காண்போம்.

இக்கோயிலின் இரண்டு தேவியரும் பூவைப் பெயராகக் கொண்டிருக்கிறார்கள். ஒருத்தி கமலத்தைக் கொண்டு கமாலாம்பிகை. மற்றவள் அல்லியைக்கொண்டு நீலோத்பாலாம்பிகை. இது ஏன்?

'திருமூலட்டானனே போற்றி போற்றி' என்கிறார் நாவுக்கரசர். சாதகன் உடம்பில் மூலாதரமே திருமூலட்டானம் குண்டலினி யோகத்தில் அக்கினி கண்ட ஒளியைக் காணும்போது அதுவே திருவாரூர். இதய வழிபாட்டில் சூரிய ஒளியைக் காணும்போது அதுவே தில்லை. சாதகன் உள்ளுணர்வாலாய உடம்பில் பிரணவ யோகத்தால் சந்திர கண்ட ஒளியைக் காண்பான். அதுவே திருப்பெருந்துறை.

மூலாதாரம், இதயம், சிரசு என்ற இந்த மூன்று இடங்களிலும் அருளாறு பெருகுவதை உணர்த்துபவனே ஞானகுரு. மற்றவர் மந்திரம் முதலான தீட்சைகள் தருகிற போத குரு.

எனவே, ஆருரே மூலாதாரம்; அங்கு எழுந்தருளும் வன்மீகரே குண்டலினி யாகிய சிவம்.

தியாகராஜர் இங்கு சோமாஸ்கந்தர் ஆனார். சக + உமா + ஸ்கந்தர் = சோமாஸ்கந்தர். மூலாதாரத்துக் குண்டலினி, மேல் நோக்கி எழுவதால் சிவசக்தியின் ஊடே ஸ்கந்தம் இருப்பதாய் உணர்தல் வேண்டும். கந்தன் எனில் ஒன்று சேரப்பெற்றவன் என்பதாம். இதை 'தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே' என்பான் திருமூலன். மூலாதாரம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை, சகஸ்ராரம் என்கிற ஆறு சக்கர பேதனத்தால் மாற்றமடைந்து வெளிப்பட்ட புருவ மத்திய ஒளிக் கீற்றுக்களே ஆறுமுக கடவுள். முதுகின் இடப்புறத்தில் சுப்பிரமணிய நாடி ஆறு கிளைகளாக இருப்பதை யோக சாதனையில் அறிக.

குண்டலினியைக் குலாங்கனை என்றும் அது செல்லும் சுழுமுனைப் பாதையைக் குலபதம் அல்லது ராஜவிதி என்றும் கூறுவர். குண்டலினியானவள் மூலாதாரத்தில் குழந்தை போல் சப்திப்பதால் குமாரி. அனாகதத்தில் பக்குவப்பட்டதால் பருவப் பெண்ணான தருணி. சகஸ்ர கமலத்தில் கணவனாகிய கண்ணுதற் கடவுளோடு கூடியதால் பதிவிரதை. இவளே பிரணவ யோகத்தைப் பிழையறக்காட்டும் ஆரூர் எழுந்தருளிய கமலாம்பிகை.

தேரேறித் தியாகேசன் வீதி விடங்கராய்த் திருவீதி வலம்வருவார். குலபதம் என்கிற சுழுமுனைப் பாதையே ராஜவீதி. 'விண் பக்ஷிண: டங்கைதி இதி விடங்க:' என்பது விடங்கர் என்பதன் பதப் விரிவு, அதாவது சுதந்திர பட்சியாகத் திரிகிறவன் என்று பொருள். பட்சியாவது அம்சப் பறவை. அம்சமாவது அசபை என்கிற செபிக்காத மந்திரம். எனில், வீதி விடங்கன் தேர் வரல் தெருவாகிய ராஜவீதி அன்று. பிரணவ யோகியின் சுழுமுனைப் பாதையான ராஜவீதியில் அசபையின் உந்துதலால் சிவசக்தியாகிய குண்டலினி உலாப் போதல் அது.

விடர் + அங்கம், விடங்கமானது. விடர் எனில் வெடிப்பு பிளவில் வெளிப்பட்ட சுயம்பு என்று பொருள் காணலாம். பிளவென்றால் சலனப்பட்ட பிரம்மப் பிளவில் தோன்றிய அழகிய திருமேனி என்றுணர்க.

அசபை என்பது ஹம்ச மந்திரம். இதுவே தியாகராச வித்தை. ஹம்ச என்கிற மந்திரத்தில் சிவம் அடர்ந்து காணப்படுகிறது. இதன் பொருள் நான் அவன். இதில் 'ஹ' என்பது ஆகாய பீஜம். 'ச' என்பது மூலாதாரத்தில் உள்ள சக்தி பீஜம். உடலின் அசைவுகள் யாவும் சக்தியின் ஆற்றல். அசைவினால் பெறப்படும் அறிவு சிவம். அறிவை முதலாகக் கொள்ள சக்தி தொடரும். அந்த உணர்வு சிரசுக்கு மேல் ஆகாயமாகும் போது ஆன்ம விளக்கு சுடர் விடுகிறது. ஆகாயம் எனில் சித்தாகாயம் என்றுணர்க. ஆக, பிரணவ வித்தையில் மூலாதாரத்தில் இருந்த சிவத்தைத் தொடர்ந்த சக்தி, சாதகனுக்கு இன்பம் அளித்து அவன் சிரசுக்கு மேல் தன்னுருவை இழந்த சூக்குமப்பரையானது என்பது கருத்து. இந்த சிவசக்தியின் ஊடே ஸ்கந்தம் உள்ளதைக் குண்டலினி மேல் முகம் கொள்வதால் அறிதல் வேண்டும். அதனால் ஆரூர் அண்ணல் சோமாஸ்கந்தரானார். ஹம்ச மந்திரத்தை சோகம் என்பர். 'பூவுக்குள் மந்திரம் போக்கற நோக்கிடில் ஆவிக்குள் மந்திரம் அங்குசமாமே' என்பது திருமூலன் வாக்கு. இம்மந்திரம் சாதகன் உடல் முழுதும் அலைபோல் இன்ப உணர்வாய் மோதும் அரிய ஆற்றல் மிக்கது.

இதுவே உயிராகிய யானையை (பிரணவம்)ச் செலுத்தும் அங்குசம் என்கிறார் திருமூலர். உணர்வற்றவனின் மூலாதாரத்தில் சுருண்டு கிடக்கும் பிரணவ சக்தியை ஹம்ச மந்திரம் அங்குசமாய் இயக்கி மேலெழுப்பும் என்பது இதன் பொருள்.

இதுதான் அலையில் ஆடும் அசபை நாயகன் ஆரூர் அண்ணல் தியாகேசன். மேலும் கீழுமாய் நடனமிட்டுச் சாதகனின் உள்ளுணர்வாலாய உடம்பில் உணர்த்தும் பிரணவ வித்தை. ‘பூவுக்குள் மந்திரம்’ என்றது மூலாதாரத்தின் அடித்தளமாகிய கமலம், கமலம் வெண் சிவப்பு. மூலாதார சிவசக்தியும் இந்நிறத்ததே. இங்கு இவ்வாலயத்தம்மன் கமலாம்பிகையின் பெயர் நுணுக்கம் அறிக.

உள்முக தியானத்தில் இடது கண் பார்வையைப் பூவலமாகக் குரு உணர்த்திய முறையில் செலுத்தினால் வலது கண்ணுக்கு மேலே ஒளிக்கீற்று தென்படும். அவ்வொளியே இடது கண்ணுக்கு மேலே ஈசான மூர்த்தியாக உத்திரகோச, மங்கைப் பகுதியில் வெளிப்படும். பின் நொடிப் போதில் வலமிருந்த சூரியனும் இடமிருந்த சந்திரனும் பிடரிக் கண்ணில் விளங்கிய அக்னியும் ஒருமித்து, சிரசின் மேல் வெளிப்படும். ஆரூர் யோகநாயகி கமலாம்பிகை ஈசான திக்கை நோக்கித் தவமிருத்தல், சாதகனின் ஈசான அனுபவத்தின் ஆழம் உணர்த்தல் பொருட்டே.

இதயத்தில் தியானிக்கும் நடராச வித்தையிலும் மேலானது மேற்சொன்னதே என்பதால், அம்பலத்தில் ஆடுகிறவன் அலையில் ஆடுகிற ஆரூரனுக்கு அடுத்தபடியே.

இப்படி மூலாதாரத்தில் இருள் வசப்பட்டுக் கிடக்கும் குண்டலினியாகிய சிவ சக்தியை எழுப்பும் வல்லமை அறியாத பக்தர்கள் அதிகாலை பள்ளியெழுச்சி பாடிப் பதவியை இழந்தனர். பதவி எனில் சாயுச்சிய பதவி.

அசபை மந்திரத்தின் உந்துதலால் குண்டலினியை எழுப்பி சிரசுக்கு மேல் விளங்கும் ஒளி மண்டபத்தில் சீவனின் நினைவக் கலக்கச் செய்தலே சிவ யோகமாகிய பிரணவ வித்தை.

யோக வெற்றிக்கு இல்லற நெறி, துறவற நெறி இரண்டும் பொருந்தும். மது நாட்டமும், மாதுவின் கூடலும் மானுட இயற்கை. இதில் ஆகமம் வைத்த முடிச்சும் சித்தர்கள் வைத்துப் பாடிய சூதும் என்னவெனில், இரண்டிலும் இறைவனைத் துணை யாக்கிக் கொள் என்பதே. மது அருந்தி தியானிப்பதை பால் பிரண்டன் போன்ற அயல் நாட்டு யோக அறிஞர்கள் கண்டிப்பதில் ஓரளவு உண்மையிருக்கிறது. இனி, ஸ்திரி வித்தை என்பது பெண்ணோடு கூடும்போது, காமேஸ்வரன், காமேஸ்வரி தோற்றத் தையோ அல்லது அர்த்தநாரியையோ சாதகன் மனதில் கொண்டால் காமநிலை ஸ்கந்த நிலையாகி வாமதேவன் பூரித்து ஈசானர் வெளிப்படுவார். ஸ்திரி வித்தை செய்பவன் உணவை இறைவனுக்கு அர்ப்பணித்து உண்டால் சிரசில் ஒளிப்பெருக்கம் உண்டாகும் இந்த யோகத்தில் விந்து நீக்கம் நிகழாது.

‘உண்ணும்போது உயிரெழுத்தை மேலே வாங்கி உறங்குகின்ற போதெல்லாம் அதுவேயாகும்; பெண்ணின்பால் இந்திரியம் விடும் போதெல்லாம் பேணிவலம் மேல் நோக்கி அவத்தில் நில்லு’ — என்கிற அகத்தியர் பாடல் இது பற்றியதே. இந்த வித்தை யைச் செய்கிறவர்கள் மறலி கையில் அகப்படார்கள் என்கிறார் அகத்தியர். சுந்தரர் தம்பிரான் தோழன். தோழமை பாவம் என்பது எல்லாச் செயல்களிலும் இறைவனைத் துணை சேர்ப்பது. காமத்திலும் சிவத்தைச் சிந்திக்க வேண்டும்.

காமநிலை இருள்நிலை. சிவ சிந்தனையோடு பெண்ணைக் கூடினால் காமநிலை யோகநிலையாக பரிணாமம் பெறும். அதுபோழ்து இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தியில் காமேஸ்வரன் வெளிப்படுவதைச் சாதகன் உணர்வான். நஞ்சைப் போக்க நஞ்சையே மருந்தாக உண்ணல் ஒரு வழக்கம். காமத்தில் எல்லாம் மறந்து சுகம் காணல் போல, தேகத்தைக் கடந்த சிரசில் சுகம் காணல் எண்ணுமாப்போல.

விடங்கர் என்பது ஆண்குறி. 'கடம்பூர் புகுந்த விடங்கா போற்றி' எனில் யோனிப்பை புகுந்த என்பதாகும். திருவாரூர் தியாகேசன் திருமேனியோடு கொண்டி என்கிற பிரிவற்ற சக்தி உள்ளது. கொண்டி என்றால் அடங்காக் காமம் உடையவள். என்பது பொருள்.

கூடல் இன்பத்தில், இருளின் ஊடே மனக்கண்ணில் எதிர் பால் முகம் அறிவது போல, பரியங்க வித்தையில் தேகம் கடந்த சிரசில் சீவனுக்கு, சிவம் தலைப்பட்டு இன்பம் பெய்யும். இந்த சூட்சுமம் உணர்த்தவே ஆரூர் அண்ணல் உடல் மறைத்து முகம் காட்டினார். அவரோடு உறைந்தருளும் கொண்டியும் அவ்வாறே என்றுணர்க.

இந்த ஸ்திரி வித்தையில் வெற்றி கண்டவர் சுந்தரர். இவருக்குக் கிடைத்த தீட்சையின் பெயரே வழங்கு பெயராய் ஆரூரன் என்வுயாயிற்று. 'திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' எனப் பாடிப் பரவினார். மூலாதாரத்தில் சிவசக்தி ஒளியைக் கண்டவர்களே திருவாரூரில் பிறந்தவர்கள்,

பிரணவ யோகமே சோடச கலா சந்திர ஞானம். இந்த யோகத்தில் சாதகனுக்கு தோள்களுக்கு மேல் சந்திர மண்டல உதிப்பு அமையும். இதுவே சோம வட்டம், சந்திர தீபம் என்று பரிபாஷையில் பேசுவர். ஆருரில் வன்மீகருக்கு அருகமர்ந்த அம்பிகையின் பெயர் சோமகுலாம்பிகை. எனில், சொல்லறு நிலையில் சந்திர தீப அறிவை ஞானகுரு வல்லவராயின் உணர்த்துவார்.

"குவளைக் கண்ணிக்கூறன் காண்க" என்றார் மாணிக்கவாசகப் பெருமான்.

இதில் குவளை என்றது நீலோற்பலம். கண்ணி என்பது தலையில் சூடும் பூமாலை. சிரசின் மேலுள்ள நீலோற்பல ஒளியில் தானும்தனது சக்தியுமாகக் கலந்து விளங்கு பவள் என்பது இதன் பொருள்.

கழுநீர் (செங்கழுநீர், நீலோத்பலம்) மாலையணிந்து தலைவனுக்குக் காதல் நோயைக் காட்டுவது போல மலபரிபாகம், இருவினை ஒப்பு ஆன்ம சாதனையில் சாத கனின் சிரசுக்கு மேல் வெளுப்பு, சிவப்பு, நீலம் கலந்த ஒளி மண்டலத்தின் ஊடே சிவம் வெளிப்பட்டு, சீவனைக் காதலிக்கும் குறிப்பு என்றறிக.

இந்த சாதனை சந்திர ஞானம் பற்றியதால் சந்திரன் உவக்கும் புஷ்பமான நீலோத் பலம் சாதனையின் எல்லைக்கு குறியீடானது.

மணிவாசகப் பெருமான் பிரணவ யோகத்தில் வெற்றி கண்டவர். மணி வாசகம் என்றால் சிந்தாமணி உணர்வால் கிடைத்த பட்டறிவின் வாசகம். மந்திரத்திற்குச் சிந்தா மணி என்றொரு பொருளும் உண்டு. எனில், சிந்தையில் செபிக்காமல் செபிப்பது; அசபை. ஆதலால் மணிவாசகருக்கு இறைவனால் உபதேசிக்கப்பட்டது திருவைந்தே முத்து மட்டுமா? அல்ல துபஞ்சாட்சரத்தோடு சேர்ந்த அசபையுமா? என்பதை வல்லார் வாய்க் கேட்டறிக.

எனவே கட்டுரையில் கண்ட ரகசிய யோக வித்தைகளின் அடித்தளமான குளம் (மூலாதாரத்துக்குக் கீழ்) வெளிர் சிவப்பானதால் கமலத்தின் பெயர் கொண்டு ஆரூரில் கமலாம்பிகையாகவும், சாதனையின் முடிவில் சிரசின் மேல் (அகுலம்) வெளிர் நீல ஒளி யுணர்வில் சாதகன் சிவத்தை அறிவதால் நீலோத்பல மலரைப் பெயராகக் கொண்டு மற்றொரு அம்பிகையும் எழுந்தருளியிருக்கின்றனர். நீலோத்பலாம்பிகையே மிஸ்ர பிந்து. இவளே யோக முடிவு.

சாதனையில் சந்திர தீபம் உணர்த்த ஆரூரில் வன்மீகருக்கு அருகமர்ந்தவள் சோம குலாம்பிகை.

பரியங்க யோகம் உணர்த்தியதால் ஆரூர் அண்ணலுக்கு அருகே உறைந்தருளு பவள் கொண்டி எனப் பெயரேற்றாள்.

நீலோத்பலாம்பிகை வலது கரத்தில் மேற்சொன்ன மலரேந்தி, இடது கரத்தின் ஆள்காட்டி விரலால் சேடிப்பெண் தூக்கி வைத்திருக்கும் குழந்தையைத் தீண்டுவது போலக் காட்சியளிக்கிறாள். இது, ஆன்ம பரிபாலனம் செய்கிற அனுக்கிரக முத்திரை. குழந்தை மல (ஆணவம், கன்மம், மாயை)த்தில் அழுந்தியிருக்கும் ஆன்மா.

ஆரூர் அண்ணல் தியாகேசனுக்குத் தூதுவளைக்கீரையும் பாகற்காயும் பிடித்த நிவேதனம். அசபை வித்தையான பிரணவ யோகத்தில் சாதகனுக்குத் தலைசுற்றலோ மயக்கமோ நேர்வதுண்டு. அக்கால் பாகற்காய் பயன்படும். தூதுவளைக்கீரை வாசியை நேர்செய்யும் ஆற்றலுடையது. இந்தவாசி (முச்சு)யை வரைப்படுத்தும் கலையைத்தான் 'ஏற்றி இறக்கி இருகாலும் பூரித்துக்காற்றை அடக்கும் கணக்கறிதல்' என்பார் திருமூலர்.

திருவாரூர் கல்வெட்டு ஒன்றில் தேரோடும் வீதிக்கு,'திருவடிப்போது நாறிய வீதி' என்கிற பெயர் குறிப்பு காணப்படுகிறது. சுந்தரர் பொருட்டுப் பரவையாரிடம் தூது சென்ற இறைவனின் திருவடி பட்ட வீதியாதலால் தேரோடும் வீதி 'நாறிய வீதி' ஆனது. யோகத்தில் குலபதம் என்கிற சுழுமுனைப் பாதையே ராஜவீதி. அசபையின் உந்து தலால் குண்டலினி உணர்வு முதுகுத் தண்டின் ஊடே செல்லும்பேது சாதகனைச் சுற்றி ஒரு விதமான மணம் கமழும். மனச் செவிகளில் நாதம் கேட்கும். சிரசில் ஒளிப் பெருக்கம் உண்டாகும். இதை ஆகாய சம்மியம் என்பர். ஆதலால் 'திருவடிப்போது நாறிய வீதி' என்பதை யோக சாதனை செய்கிற வல்லார்வாய்க் கேட்டறிக.

ஆரூர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் கமலாம்பிகை, அசபை வித்தையான பிரணவ யோகத்திற்கு அரணாக அமைந்தவள்.

கமலாம்பிகை சுயம்பு. கோயில் கொண்டுள்ள வன்மீகரும் சுயம்பு. சுயம் பாவது, சிற்பியின் கைபடாதது. எனில், காமக்கலைத்தோற்றமான கமலாம்பிகை எந்த ஒரு விற்பனச் சிற்பியின் கற்பனையும் அல்லள்.

காமம் என்பது சிவம். கலா என்பது சக்தி. சிவம் பிரகாச பிந்து. சக்தி விமர்ச பிந்து. இந்த விமர்ச பிந்துதான் சித்சக்தி.

இந்த சிற்சக்தியைத்தான் கட்டுரையின் தொடக்கத்தில் அகுலம் என்று கண்டோம், பிரணவ சாதனையான குண்டிலினி உணர்வில் இந்த சித்சக்தியால்தான் சாதகன் சிவத்தை உணர்கிறான். இந்த சித்சக்தியே ஆதார நிலையாகிய கமலாம்பிகை.

இவளின் உற்சவ மூர்த்தி மனோன்மணி பெயரால் கருத்து மேலும் விளங்கும். " உன்மன் யந்தே பரசிவஹ' என்பது மனோன்மணியின் விளக்கம். இதைத்தான் 'வாயும் மனமும் கடந்த மனோன்மணி' என்பார் திருமூலர். யோக வெற்றி சித்தாகாயத்தோடு தொடர் புடையது. ஆதலால் மனோன்மணியாகிய கமலாம்பிகையே சிற்பர வெளியின் தற்பர தேவதை.

இவளுக்குப் பைந்தவ வாசினி என்கிற பெயரும் உண்டு. பைந்தவமாவது புருவநடு. குண்டலினியாகிய அம்பிகை இங்கு ஒளிர்கின்ற போதுதான், உயிர் அஞ்ஞானமகன்று மெய்ஞானத் தலைவனை உணர்கிறது. இந்த அருட்சக்தியான காமக்கலையே கமலாம்பிகை என்ற குண்டலினி.

இருட்டறை மூலை யிருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்து,
குருட்டினை நீக்கிக் குணம்பல காட்டி
மருட்டி யவனை மணம் புரிந்தாளே.

என்பது தலைமைச் சித்தரின் தகவுடைய சான்று.

மேலும் 'போமாறவ் வாதாரப் பூங்கொடியாளே' என்ற அம்மையை விளக்கு கின்றார். ஆதாரப் பூங்கொடியாவது, ஆதார சக்தியான கமலாம்பிகை என்றுணர்க.

காமம் அனைத்தும் முடிகின்ற கோடி (கடைசி) நிலமாக, அதாவது எல்லா விருப்பு களும் இறந்துபட்ட அத்வைதமாக அம்பிகை இருக்கின்றாள் என்று அனுமானிக்க.

காம துகா பவ கமலே
காமகலே காமகோடி...என்கிற மூக பஞ்சசதியில் வருகிற வரிகளை இங்கு நினைந் தின்புறுக.

இவள் எழுந்தருளிய பீடமே 64 சக்தி பீடங்களுக்கும் ஆதார நிலையாகும். லலிதா சகஸ்ரநாமாவளி அனைத்தும் இவளொருத்திக்கே பொருந்தும். ஸ்ரீவித்யை என்கிற மந்திர சாத்திரத்தின் யந்திர நாயகி இவளே.

தியாகராஜ சன்னிதி வல்லபை கணபதியில் தொடங்கும். கமலாம்பிகை சன்னிதி உச்சிஷ்ட கணபதியில் துவங்கும்.

ஸ்ரீவித்யை சாதனையில் அம்பிகையின் 32 உபாங்க தேவதைகளில் முதலாமவர், வல்லபை கணபதி. கடைசி தேவதை உச்சிஷ்ட கணபதி. 'உத்க்ருஷ்ட யச்சக்தி உச்சிஷ்டஹ' என்கிற நயம் அறிந்து சிந்திக்க வேண்டும்.

பிற தலங்கள் போல அல்லாமல் திருவாரூரில் திருக்குளம் (86 கோடி தீர்த்தம்) ஆலயத்திற்குப் பின்புறம் அமைந்திருக்கிறது. யோகக் கலையின் முதிர்ச்சியில் குண்ட லினிஉணர்வலைகள் சகஸ்ர கமலத்தில் வலம்புரியாய்ச் சுழன்று சிரசிலிருந்து சாதகனின் உடல் நனைய வர்ஷிப்பதே தீர்த்தம். அதனால் பிரணவக் கலையைப் பிழையறக் காட்டும் ஆரூர் அண்ணலுக்குத் தலைப்பக்கமாய் (பின்புறம்) இங்கு குளம் அமைந்தது. இறைவன், ஏனைய தீர்த்தங்கள்போல் அல்லாமல் சுந்தரர் பொருட்டு வயோதிகனாய் இக்குளத்தில் விழுந்து எழுந்ததைத்தீரச் சிந்திக்க வேண்டும்.

சிந்தையை நெகிழ வைக்கும் ஓர் நிகழ்ச்சி.

வெள்ளை யானையில் தம்பிரான் தோழர் சுந்தரர் திருக்கயிலைக்குப்பயணம் செய்கிறார். இது கண்டு வியக்கும் மந்திர மாமுனிவர் 'இவன் யார்' என்று இறைவனைக் கேட்கிறார்கள். இதைக்கயிலையை அடையாத சுந்தரர் மெய்யுணர்வால் அறிந்த வண்ணம் செல்கிறார். யானை கயிலையை அடைகிறது. ஆரூர் அண்ணலின் தோழன் வந்ததும் கயிலாயத்துக் கதவங்கள் திறக்கப்படுகின்றன. உள்ளேகினார். ஊனுருகப் பாடுகின்றார். இதுதான் நொடித்தான் மலைப்பதிகம். மந்திர முனிவர்கள் 'இவன் யார்? எனக்கேட்க, அதற்கு இறைவன் தந்த விடையை, வரும் வழியிலேயே மெய்யறிவால் உணர்ந்த தம்பிரான் தோழர், அந்தக்கயிலை நாதனின் வாய் மொழியை உள்ளடக்கி,

இந்திரன் மால்பிரமன்
எனயெழிலார் மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொளஎன்னை
மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர்
இவனார்என எம்பெருமான்
நந்தமர் ஊரென்றான்
நொடித்தான்மலை உத்தமனே!

என்கிற ஒன்பதாவது பாடலில் நம்மைச் சிந்திக்க வைக்கிறார். 'நந்தமன் ஊரென்றான்' என்கிற பாட்டுடைச் சீர்கள், 'என்னவன் என்றும், என்னூரைச் சேர்ந்தவன்' என்றும் பொருள்படும். அதனால் இவன் யார்? எனக்கேட்ட முனிவர் களுக்கு இறைவனார் சொன்ன விடையால் திருக்கயிலை மூர்த்தி, ஆரூரானே' என்பது முடிபு.

அதனால் 'தேசுபயில் நாரணன்பால் இனிது பெற்று, செஞ்சுடர் வேற்குமர னொடும் தேவியொடும், வாசவன் பூசனை புரிந்த தேவச்சிந்தாமணியே' அசபையில் ஆடும் ஆரூர் அண்ணல்.

'மாயவன் மார்பன் என்னும் மரகதமாம் மணிப்பூங்கோயில், ஆயிரங்கட் கோமகன் செல்வமுதூர், மேயதோர் செம்பொற் கோயில் வெறுத்து, தூய ஆரூரில் வந்த தூயனே' நம் ஆரூரன்.

அந்த அசபையே சப்த கோடி மந்திரங்களுக்கும் ஆதாரம். ஆகவேதான் தனது நூலின் முதல் தந்திரத்தின் தொடக்கத்திலேயே 'அன்ன மந்திரம்' பாடினார் திருமூலர்.

நம் அனைவருக்கும் ஆரூர் அண்ணல் அருள்புரிய விதிவழி நந்தி கூட்டி வைப்பானாக.

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

மருதமலை -:- கோவை-46

திருமுருகனின் அருள்மிகுந்த ஏழாவது படைவீடு எனப் போற்றப்படும் இத்திருத்தலம் கோவை மாநகருக்கு மேற்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலைகளின் சரிவில் அமைந்துள்ளது. பதினென் சித்தர்களில் ஒருவராகிய பாம்பாட்டிச் சித்தர் இத் திருத்தலத்தில் முருகனை வழிபட்டு, சித்துகள் பல செய்து சமாதியடைந்துள்ளார்.

திருக்கோயில் காலை 6 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலும், மாலை 2 மணி முதல் இரவு 8-30 மணி வரையிலும் திறந்திருக்கும். தினசரி 5 கால பூஜைகள் நடைபெறுகின்றன. 5 கால பூஜைகளையும் தமது செலவில் நடத்தி வைத்து முருகனருளுக்குப் பாத்திரமாக விரும்பும் பக்தர்கள் ரூ. 3000/- செலுத்தினால் அதில் கிடைக்கும் வட்டியைக் கொண்டு பக்தர்கள் குறிப்பிடும் நாளில் சிறப்புற பூஜை செய்து பிரசாதம் வழங்கப்படும். உச்சிக் கால பூஜைக்கு மட்டும் ரூ. 1000/- செலுத்தினால் அந்த பக்தர் குறிப்பிடும் நாளில் உச்சிக் காலத்தில் சிறப்புறப் பூஜைகள் செய்வித்து பிரசாதம் வழங்கப்படும். ரூ. 50/- செலுத்தினால் கிருத்திகை தோறும் அர்ச்சனை செய்து ஓராண்டு காலத்திற்குப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

ஆண்டுதோறும் தைப்பூசத் தேர்த் திருவிழாவும், கார்த்திகை தீபமும், கந்தர் சஷ்டி உற்சவமும் ஆகிய மூன்று முக்கிய திருவிழாக்களும் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

கோவை சிரவணபுரம் ஆதீனம் தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமையில் திருப்பணிக்குழு அமைக்கப்பட்டு, திருப்பணி வேலைகள் துவங்கப்பட்டுள்ளன

திருக்கோயில் ஆதரவில் நடைபெற்று வரும் சமூகப் பணிகளாக வடவள்ளி கிராமத்தில் இலவச சித்த வைத்திய மருத்துவமனையும், மேனிலைப் பள்ளியும், அன்பு இல்லமும் நடத்தப்பட்டு வருகின்றன.

மலைமீது பக்தர்கள் வந்து செல்ல மூன்று பேருந்துகள் இயங்கி வருகின்றன. பக்தர்கள் தங்குவதற்கு வசதியான அறைகளும் மலை அடிவாரத்தில் உள்ளன.

ஏ. ஏ. வெங்கடாசலம் பி.ஏ.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்.

இரா. அரங்கசுவாமி பி.எஸ்சி., பி.எல்.,
துணை ஆணையர்/தக்கார்.

'திருவாரூரும் திருமகள் கோட்பாடும்'

டாக்டர். அடைக்கலம் சுப்பையன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

திருவாரூருக்குக் **"கமலபுரம்"** என்ற பெயர் உண்டு. திருமகள் சிவபெருமானை வேண்டியதற்கு இணங்க இதற்குக் கமல **புரம்** என்ற பெயர் வந்ததாகச் சொல்லப் படும் செய்தி, திருமகளின் செல்வாக்கைப் புலப்படுத்துகிறது. பெரியபுராணம் இதைச் சிறப்புப்படுத்திச் சொல்லுகிறது.

சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது.[1]

ஆதிபராசக்தி இந்நாளில் - திருவாரூரில் - யுகம்யுகமாகத் தவம் செய்வதாக வழி வழியாக இந்து சமயத்தினர் நம்பி வழி படுகின்றனர்.[2] திருவாரூர் **அந்தராகேசபுரம்** என்றும் அழைக்கப்படுகிறது. திருவருளும் திருமகளும் ஒரே இடத்தில் நிரந்தரமாகக் குடிகொண்டிருப்பதால் இவ்வாறு அழைக் கப்படுகிறது.

"திருவும், கல்வியும்" அனைவருக்கும் தேவைப்படும் செல்வங்களாகும். கல்வித் தெய்வம் சரஸ்வதியைத் தூய்மையின் சின்னமாகச் சித்தரிக்கிறோம். அறிவுச் செல்வத்தைப் பெற அறிவைக் கூர்மை யாக்கி, அனுதாபத்தை வளர்த்து, ஆத்திர வெறிகளை அடைக்கினால்தான் நாம் கல்விச் செல்வத்தை முழுமையாக அடையமுடியும். கலைமகள் வீணை வாசிப்பதாக உருவகம் செய்யப்படுகிறது கலையும், இசையும் கல்விச் செல்வத்தின் முக்கிய அம்சங்களாகக் கருதப்படு கின்றன.

அகத்தெளிவு, கலையழகுணர்வு, ஆன்மீகப் பொறுப்புணர்வு ஆகியவை அறிவியல் வளர்ச்சியுடன் தாமாகத் தோன்றிவிடும் என்று எண்ணிவிடக் கூடாது. இதை அறிவுறுத்தவே "ஆதி பராசக்தி' தவம் செய்வதாக நம் முன் னோர்கள் உணர்த்தினார்கள்.

விவேகம், தரிசனம், வரலாறு, அகத் தெளிவு, ஆகிய கோட்பாடுகளை நமக்குத் திருமகள் உணர்த்துவதோடு, திருவாரூர்த் தலத்தை இருப்பிடமாகவும் கொண்டு உள்ளாள். திருவாரூரில் குடிகொண்டு உள்ள இறைவனும் இதைத்தான் நமக்கு காலங்காலமாக உணர்த்தி வருகிறான்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் - "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்கிறார். ஆதிசங்கரர் பஜ கோவிந் தத்தில் "பணப் பேராசை பிடித்து அலை யாதே! ஆனால், உனக்கு உரிய உழைப்பினால் நீ ஈட்டுகிற பொருளைக் கொண்டு நியாயமாக வாழ்ந்து உன் னையே உயர்த்திக்கொள்!" என்று கூறி யுள்ளார் இந்தப் பேருண்மையைத் திருவாரூரில் குடிகொண்டுள்ள இறைவன் காலங்காலமாக நமக்குப் போதனை செய்கிறான்.

செல்வத்திற்கு அதிதேவதையாக இருப்பவள் திருமகள். திருமகள் திருவரு ளோடு குடிகொண்டுள்ள இடம் திரு வாரூர். உலகில் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண

ஆனந்த வெள்ளமான தேவி பராசக்தி எந்த நியதிக்கும் கட்டுப்படாமல் எந்தத் தோற்றத்திலும் வகைப்படுத்த முடியாமல் கோயிலில் எழுந்தருளியிருக்கும் சிறந்த இடம்தான் திருவாரூர் திருக்கோயில்.

திருமகளை வழிபடுவதால் நாம் அடையும் பலன் என்ன? திருமகள் முப்பெரும் சக்தியின் மூலமாக விளங்குகிறாள். எப்பொழுதும் ஆக்கம் விளைவித்துக் கொண்டு இருக்கிறாள். அந்த சக்தியே உலகை ஆள்கிறது.

மனித வாழ்க்கையின் உள்ளும் புறமும் ஆகி மனித வாழ்க்கையின் மெய்க் கதியை உணர்த்துகிறாள். ஊக்கத்தோடும், உறுதியோடும் உழைப்பவர்களுக்கு அவர்களின் நோக்கத்தை நிறைவேற்றி வைக்கிறாள். அந்த சக்தி வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் ஆக்கவழி காட்டி நம்மை அரவணைத்துக் காத்திருக்கின்றது. "திண்ணிய நெஞ்சத்தோடும், தெளிந்த நல்லறிவோடும்" மக்களை வாழ்விக்கும் சக்தியாகும்.

ஓதாது உணரும் வழியைக் காட்டியருளும் சக்தி அது. ஐம்பெரும் ஆற்றலைக் கொண்டு அருள் செய்பவள். "ஆணினில் பெண்ணும், பெண்ணினில் ஆணும்" ஆகிக் கலந்து அருள்செய்பவள், மனித வாழ்க்கையின் பல்லுருவிலும் ஊடுருவி நற்கருணைத் தாயாய் விளங்குகிறாள். பல்வகைப்புலமையை அளிப்பவள். தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியாரும் திருமகள் வழிபாடு (Mother Worship) பற்றிக் கூறியதும் இதுதான்.

Our ancestors were great apostles of this Mother Worship. Para-Shakti supreme energy, is the name whereby they knew her. In the dark ages of our history, this worship of the Supreme Energy began to be misunderstood and misrepresented by its votaries. Has not the same thing been done with the Vedas? The Wheel of time throws all down and again all things aloft. Mother Worship will save humanity; for the supreme energy renders immortal all that reflects her beauty and her fire.

இந்தக் கோட்பாடுகள் எல்லாம் எவற்றை நமக்கு உணர்த்துகின்றன? செல்வச் சிறப்பைக்காட்ட,செல்வத்தைப் போற்றி வளர்க்கும் முறையை உணர்த்தவே திருமகள் வழிபாடு. அது சக்தி; செல்வத்தின் சக்தி. செல்வத்தின் மெய்ப்பாடுகள், திருவாரூர் கோயிலில் திருவருளின் மூலமாக வெளிப்படுகின்றன. உண்மையான செல்வச் செழிப்பைப் பெற்ற மனிதனிடமிருந்து கருணை, பெருமிதம், சமநிலை, உவகை எல்லாம் தோன்றும்.

செல்வம் சரியாகப் பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். வாழும் உயிர்கள் அனைத்தையும் ஏற்றங்கொள்ளத் திருவருளால் அவைகள் படைக்கப்பெற்றன. அவைகள் சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் மனித வாழ்வில் அல்லல் அதிகமாகும். இந்தக் கோட்பாட்டின் உண்மையைத் திருவாரூரில் குடிகொண்டுள்ள தெய்வம் நமக்கு உணர்த்துகிறது.

அடிக்குறிப்புகள்

1. **பெரியபுராணம்:** *திருநகரச் சிறப்பு, முத்துக்குமாரசாமி பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு—35, (1982).*
2. David Deen Shulman, Tamil Temple Myths, (Printed on University Press 1980) P. 110

“திருவாரூரில் பல்லவர் கால சப்தமாதர் சிற்பங்கள்”

இராம. புருஷோத்தமன், எம். ஏ.,
பரங்கிப்பேட்டை.

திருவாரூர் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகரர், நாயக்கர், மராட்டியர், போன்ற பல்வேறு அரச மரபினரின் கலைச்சின்னங்கள் காணப்படுகின்றன. இவை இவ்வாலயத்தின் தொல்புகழையும், சிறப்பையும் அறிந்துகொள்ள உதவுகின்றன, இக் கோயிலிலுள்ள சிற்பங்களிலேயே சப்தமாதர்களின் சிற்பங்கள் தாம் தொன்மை வாய்ந்த சிற்பங்களாகக் கருதப்படுகின்றன. இவை பல்லவர் காலத்தவை. பல்லவர்கால சப்தமாதர் சிற்பங்களை இக்கோயில் இரண்டாம் பிரகாரத்திலுள்ள சப்தமாதர் சன்னிதியில் காணலாம். இச்சன்னிதி வடதிசை நோக்கி அமைந்துள்ளது. சப்தமாதர்களுக்குரிய சன்னிதியின் கட்டுமானம் பிற்காலத்தது. ஆனால் சன்னிதியில் அமைந்துள்ள சிற்பங்களோ பல்லவர் புகழ் பேசும் சிற்பங்களாகக் காணப்படுகின்றன.

இக் கோயில் கருவறையில் நீள் செவ்வக வடிவக் கற்பலகையில் சப்தமாதர் எழுவரின் சிற்பம் பொறிக்கப் பட்டுள்ளன. பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டா ஆகிய எழுவரின் உருவங்கள் வரிசையாகச் செதுக்கப் பட்டுள்ளன. இச்சிற்பங்கள் அனைத்தும் புடைப்புச் சிற்பங்கள் வகையைச் சார்ந்தவை. ஒரே கல்லில் செதுக்கப் பட்ட இச்சிற்பங்கள் சிற்ப இயலை அறிந்து கொள்ளவும், தமிழகக் கலை வரலாற்றின் தொன்மையைக் கணிக்கவும் உதவி செய்கின்றன.

சிலப்பதிகாரத்தில் கிடைத்துள்ள சப்தமாதரைப்பற்றிய குறிப்புகளுக்குப் பிறகு பல்லவ, பாண்டிய சிற்பங்களில் காணப்படும் வடிவங்களே நமக்கு முதன்மையாகக் கிடைக்கின்றன. தொண்டை நாட்டில் பல்லவர் கால சப்தமாதர் சிற்பங்கள் காணக்கிடைக்கின்றன அவை கி. பி. 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. சற்றேறக்குறைய அதே நூற்றாண்டில் பல்லவர் காலச் சிற்பங்கள் சோழ நாட்டில் காணப்படுவது இதுவே முதல் தடவையாகும். அந்த வகையிலும் இச்சிற்பங்கள் சிறப்பும், புகழும் பெறுகின்றன.

பிராமி :

இது இடது காலைக் குத்திட்டு வலது காலைத் தொங்க விட்டு, அமர்ந்த கோலத்தில் நான்கு கைகளுடன் காணப் படுகிறது. பின் கரங்களில் ஒன்று கெண்டியை ஏந்தியுள்ளது. கீழ் வலக்கை அர்ச்சிக்கும் நிலையில் மார்புக்கு முன் புறம் காட்டப்பட்டுள்ளது. இடது கையில் ஏந்தியுள்ள பொருள் அக்க மாலையைப் போன்று காணப்படுகிறது. தலையில் ஜடா மகுடம் அணிந்து மூன்று

முகங்களுடன் பிராமி காட்டப்பட்டுள்ளது. கழுத்தில் பளுவான அணியும், தோளில் வளையமும், முன்கையில் உருண்டையான வளையும், மேல்தொடைவரை பளுவான ஆடையும் பிராமியை அலங்கரிக்கின்றன.

மகேஸ்வரி:

இது வலது காலைக் குத்திட்டு இடது காலைத் தொங்க விட்டு நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. மேல் வலக்கையின் மீது பாயும்மான் காட்டப்பட்டுள்ளது. மேல் இடக்கை கடக முத்திரையிலுள்ளது. கீழ் வலக்கை வயிற்றுக்கு முன்புறம் காட்டப்பட்டும், இடக்கை நீண்ட திரிசூலத்தைப் பிடித்த நிலையிலும் விளங்குகிறது. தலையில் ஜடா மகுடமும், காதில் குண்டலமும், கழுத்தில் பட்டையான அணியும், தோள் முன் கைகளில் உருண்டையான வளையும் கொண்டு விளங்குகிறது.

கௌமாரி:

மூன்றாவதாகக் கௌமாரியின் உருவம் காணப்படுகிறது. இது இடது காலைக் குத்திட்டு வலது காலைத் தொங்க விட்டுப் பக்கவாட்டில் அமர்ந்துள்ளது. இதன் நான்கு கைகளில் மேல் வலக்கையில் சக்திப் படையைப் போன்ற ஆயுதம் காணப்படுகிறது. மேல் இடக்கை கடக முத்திரையில் காட்டப்பட்டுள்ளது. கீழ் வலக்கை மேல் வயிற்றுக்கு முன்புறம் முத்திரை காட்டுகிறது. இடது கையை முழங்கால் மீதுகொண்டுள்ளது. தலையில் சிறிய கரண்ட மகுடமும், காதுகளில் குழையும். கழுத்தில் அணியும், மேற்கைகளில் தோள்வளையும் தொடைவரை பளுவான ஆடையும் அணிந்து காணப்படுகிறது.

வைஷ்ணவி:

இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு நான்கு கைகளுடன் நேராக அமர்ந்த நிலையில் வைஷ்ணவியின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மேல் வலக்கை மீது சக்கரம் குறுக்காகக் காட்டப்பட்டுள்ளது. இடக்கை மீது சங்கு காணப்படுகிறது. கீழ்வலக்கை அருள் பாலிக்கும் அபயக் கையாக உள்ளது. இடக்கை தொடைமீது அமைந்துள்ளது. தலையில் உயர்ந்த கீரிட மகுடம் அலங்கரிக்கிறது. கழுத்தில் அணியும், இடையில் ஆடையும் காணப்படுகின்றன.

வராஹி:

வராஹியின் உருவம் வலது காலைக் குத்திட்டு இடது காலைத் தொங்கவிட்டு வைஷ்ணவியை நோக்கியவாறு நான்கு கரங்களுடன் காணப்படுகிறது. மேற்கைகளில் சக்கரமும், சங்கும் உள்ளன. கீழ் இடக்கை நீண்ட தண்டைப் பிடித்துள்ளது வலக்கை மார்புக்கு முன்பு அபயகரம் காட்டுகிறது. கிரிட மகுடமும், கழுத்தணியும் கீழாடையும் வராஹியை அலங்கரிக்கின்றன. நீண்ட வராஹி முகமும், மானிட உடலும் பெற்ற இவ்வடிவம் விளங்குகிறது.

இந்திராணி:

இது இடது காலைக் குத்திட்டு வலது காலைத் தொங்க விட்டு நான்கு கைகளுடன் நேராகப் பார்த்த நிலையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.மேல் வலக்கை மீது வஜ்ஜிரப்படை காட்டப்பட்டுள்ளது. இடக்கை கடக முத்திரையில் உள்ளது. கீழ் வலக்கை தொடை மீது அமைந்துள்ளது. கீழ் இடக்கை ஒடிந்துள்ளது. கீரிட மகுடமும், தாழ் குழையும் கண்டசரமும். இடையில் பளுவான ஆடையும் அணிந்துள்ளது. இடையின் முன்புறம் நீண்ட ஆடைக்கட்டு வீழ்ந்துள்ளது.

சாமுண்டா:

வலது காலைக் குத்திட்டு இடது காலை மடித்து, தலையைச் சாய்த்த வண்ணம் நான்கு கைகளுடன் காணப் படுகிறது. மேல் வலக்கையில் கபாலத் தட்டைத் தாங்கியுள்ளது, இடக்கையின் மேல் ஆடும் அரவம் உள்ளது. வலக்கை, மார்புக்கு முன் கடக முத்திரையிலுள்ளது இடக்கை அசுரன் ஒருவனைப் பிடித்து உள்ளது போன்று காணப்படுன்றது. தலையில் விரிந்த சடை வனப்பூட்டுகிறது கழுத்தில் பளுவான மணியும் இடுப்பில் தொடைவரை ஆடையும், கடிபந்தமும் காணப்படுகின்றன. தூக்கிய புருவமும் பிதுங்கிய விழியும், புடைத்த நாசியும், திறந்த வாயும், கோரைப் பற்களும் கொண்டு அச்சுறுத்தும் வகையில் காணப் படுகின்றன, தனங்கள் இரண்டும் தளர்ந்து தொங்குகின்றன.

இச்சிற்பங்கள் அனைத்தும் 234 செ.மீ. நீளமும், 78 செ.மீ உயரமும் கொண்ட ஒரே கற்பலகையில் செதுக்கப் பட்டுள்ளன.

விநாயகர்:

மேல் திசையில் விநாயகரின் உருவம் காணப்படுகிறது. விநாயகர் உருவம், இரண்டு கால்களைச் சிறு குழந்தையைப் போன்று ஒன்றோடு ஒன்று மடித்து அமர்ந்த நிலையில் உள்ளது. இவ் விநாயகர் இரண்டு கைகளுடன் தொன் மை மரபோடு காணப்படுகிறது. வலது கை வயிற்றை ஒட்டியும் இடதுகை நீண்ட தன்டை பற்றியது போன்றும் காணப்படுகின்றன. சிறிய கரண்ட மகுடமும், அகன்ற காதும், முக்கோண வடிவில் நீண்ட முகமும் வலம்புரித் துதிக் கையும், சிறிய கண்களையும் கொண்டு விளங்குகிறது. வயிற்றைச் சுற்றிலும் உதரபந்தம் பட்டையாகக் காட்டப் பட்டுள்ளது. இவ் விநாயகரின் உயரம் 65 செ.மீ. அகலம் 30 செ.மீ. காலம் கி.பி. 8 ஆம் நூற்றாண்டு.பல்லவர் கலை.

சிவன்:

கீழ்த்திசையில் தலையில் பளுவான ஜடாபாரம் தரித்து, காதுகளில் குண்ட லங்கள் அணிந்து, நான்கு கைகளுடன் சிவபெருமானின் உருவம் காணப் படுகிறது. மேல்வலக்கை மீது பாயும் மான் காணப்படுகிறது. இடக்கை, ஆடும் அரவத்தைப் பிடித்துள்ளது. கீழ்வலக்கை, தோளை ஒட்டி அபய முத்திரை காட்டு கிறது. இடது கை நீண்ட கொடியைப் பிடித்துள்ளது. கொடி மீதுள்ள தேய்ந்த உருவம் ரிஷபமாக இருத்தல் வேண்டும். கழுத்தில் அணியும், இடையில் முழங் காலுக்குக்கீழ்வரை பளுவான ஆடையும் கொண்டு விளங்குகிறது. சிவனது உருண்டையான முகம்தேய்ந்த நிலையில் காணப்படுகிறது. இச்சிவனின் உயரம் 84 செ.மீ., அகலம் 52செ.மீ., காலம் கி.பி.8 ஆம் நூற்றாண்டு. பல்லவர் கலை.

இங்குள்ள சப்தமாதர் சிற்பங்கள் அனைத்தும் கால வெள்ளத்தில் மிகவும் மழுங்கியுள்ளன. ஆடை அணிகலன் களும், முகப்பொலிவும், அறிய முடியா தவாறு தேய்ந்துள்ளன. சப்தமாதர்களின் மார்புகளில் 'மார்க்கச்சை யில்லை. கீழாடைகள் பளுவாக அமைந்துள்ளன. சாமுண்டா சிற்பத்தில் பட்டையான கடிபந்தம் காணப்படுகிறது. இந்திராணி யின் கீழாடையில் நீண்ட ஆடைக்கட்டு சரிந்துள்ளது. இச்சிற்பங்களில் மகேசுவரி வைஷ்ணவியைத் தவிர ஏனைய உருவங் கள் பக்க வாட்டில் முகத்தைத் திருப்பி யுள்ளன. பிராமியின் கையில் உள்ள கெண்டியும், மகேசுவரியின் கையில் உள்ள மழுவும், திரிசூலமும், கௌமாரி யின் கையில் உள்ள சக்திப்படையும், வைஷ்ணவி, வராஹி கைகளிலுள்ள சங்கு, சக்கரமும், இந்திராணி கையி லுள்ள வஜ்ஜிராயுதமும், சாமுண்டா கையிலுள்ள கபாலமும், பாம்பும் இவற்றை அடையாளம் காண உதவுகின் றன. பிராமியும், மகேசுவரியும் ஜடா

மகுடம் அணிந்து காணப்படுகின்றனர். கௌமாரி கரண்ட மகுடம் அணிந்து காணப்படுகிறாள். வைஷ்ணவியின் தலையில் கிரீட மகுடம் அலங்கரிக்கின்றது. சாமுண்டாவின் தலையை ஜடாபாரம் அலங்கரிக்கிறது.

இச்சிற்பங்களின் தொன்மையை, கையிலுள்ள ஆயுதங்கள், ஆடை அணி கலன்கள் யாவும்கொண்டு கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர்காலக் கலையாகக் கருதலாம் இவை பல்லவர் காலச் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன.

'ஆரூர் வளர்த்த அற்புதங்கள்"

ஆரூர். கே. கோவிந்தராஜன்

ஆரூர் வளர் பெரு நகராம்
ஆன்மீக ந்தனில் சிறப்புறும் பேரூராம்;
ஆன்றோரும் சான்றோரும் ஏத்திப் போற்றிட
ஆயிரங் கால் வீறு கொண்டது.

நல்வினை ஏற்று நயம்பா டுரைக்கும்
நல்லிசைப் புலவர் களைநீடு கொண்டது;
நன்புகழ் கொண்ட அம்சந் தனிலிங்கு
நாவாரப் போற்றிடுவது தியாகே சனாலயம்.

மூலஸ்தான மிட்டெழுந்த தியாகே சனாட்டம்
மூன்றும்பிறை போல் கிடைத்திராக் காட்சி;
தோளினில் தாங்கிடும் அன்பர்களின் உருக்கந்தனில்
தோன்றிடும் மக்களிடை ஆன்மீக நெருக்கம்.

தேரும் தெப்பமும் உலாப்பெறும் காட்சியானது
தேவர்களையும் ஈர்த்திடும் வனப்பு மிக்கது;
ஏற்றத்தாழ்வு பாராது ஒன்று சேர்ந்திடும்
ஏமுறு திருவிழாவாக இவ்விரண்டும் விளங்கிடும்.

வற்றாத கடலாம் கமலாலய மிங்கு
வருவோரின் உள்ளமதைக் குளிர்விக்கும் கவிகையாம்
வல்லூறுபோல் பறந்திடும் மனமுடையார் எவரும்
வந்திங் கமர்வரேல் மெய்ப்பொரு ளடைவர்.

நீதிக்கு முன்பு உயிரனைத்தும் சமமெனும்
நீங்கா மீயுயர் தத்துவந்தனைக் கொண்டிட்டது;
சுவர்க்கத்தில் இடம் வேண்டிடின் ஆரூர்தனில்
அவதரித்திட வேண்டுமெனும் அரும்பேர்பெற் றதுவாம்.

இசையினில் லயித்திடா உயிர்கள் உலகிலிலை
இதனில் கர்நாடக இசைக்கு நிகரில்லையென
மும்மூர்த்திகளை முத்தாக இசையினில் பதித்தெடுத்து
மூலப்பரம் பொருளானவன் ஆரூர்க்கே அணிவித்தான்.

இளவேனில் பூத்திடும் மலர் போலிங்கு
வளமான தொன்மை வனப்புட னழைக்குது;
ஊழ்வினையே அனைத்திற்கு மென்றெண்ணிடா உந்தாற்றல்
ஊர்ந்திடும் மனதிடை ஆரூரின் அருளாலே.

திருவாரூரும் விக்கிரம சோழனும்

கோ. முத்துசாமி, எம்.ஏ., பி.எட்.,
சென்னை-28.

முன்னுரை:

சோழர்களின் ஐந்து முக்கிய தலை நகரங்களுள் ஒன்றாக விளங்குவது திருவாரூர் ஆகும். அவர்கள் முடிசூட்டிக் கொள்ளும் விழா, காவிரிப்பூம்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், உறையூர் என்ற இந்தத் தலைநகர்களில் ஏதாவது ஒன்றில் சிறப்பாகப் பண்டைக்காலத்தில் நடைபெற்று வந்துள்ளது. மநுநீதிச்சோழன் காலம் தொடங்கி இன்றுவரை வரலாற்றுச்சிறப்பு மிக்கது திருவாரூர் ஆகும். இது சக்தி பீடத்தில் ஒன்றாகவும் காவிரித் தென் கரைத் தலங்களுள் 87ஆவது ஆகவும் விளங்குகிறது. மேலும், தியாகேசர் கோயில் கொண்டுள்ள சப்தவிடங்கத் தலங்களுள் முதன்மை யாகவும் இவ்வூர் காணப்படுகிறது.

பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தரைக்குறிப்பிடும் போது, "பிள்ளைபாதி புராணம் பாதி" என்பார்கள். அதுபோல் திருவாரூர் என்றாலே கோயிலும், குளமும் சேர்ந்து பாதியாகவும், ஊர் பாதியாகவும் உள்ளதும் நமக்குத்தெரிகிறது. மற்றும் திருவாரூர்த்தேர் உலகப்பிரசித்தி பெற்றதாகும். வரலாற்றிலும் இலக்கியத்திலும், கல்வெட்டிலும் திருவாரூர்ச் சிறப்புமிகவும் மேலோங்கியே நிற்கிறது. இங்கு திருவாரூரும் விக்கிரமசோழனும் என்பது பற்றிக் காண்போம்.

விக்கிரமசோழன்:

கி.பி. 1118 முதல் 1135 வரை கங்கை கொண்ட சோழபுரத்தை தலைநகரமாகக் கொண்டு, பரகேசரி என்ற பட்டம் புனைந்து சோழப்பேரரசை ஆட்சி செய்தவன் விக்கிமசோழனாவான். இவன் முதலாம் குலோத்துங்கனின் புதல்வனாவான். "மூவருலா" பாடிய ஒட்டக் கூத்தர் இவன் அவைக்களப்புலவராவார்.

அறச்சாலையும், நீதி மண்டபமும்:

விக்கிரமசோழனின் மூன்றாம் ஆட்சியாண்டின் கல்வெட்டு ஒன்றினால் "தியாக விநோதன் சாலைமதா" என்ற அமைப்பு ஒன்று இருந்ததும், இதன் மூலம் ஏழைகளுக்கு உணவளிக்கும் மண்டபம் ஒன்று செயல்பட்டதும் புலனாகின்றன.

விக்கிரம சோழனின் 5-ஆம் ஆட்சியாண்டின் கல்வெட்டு ஒன்றில் அவன் மநுநீதிச் சோழனுடன் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளான். "தேவாசிரியன் மண்டபம்" என்னும் நீதிமண்டபம் இருந்ததும், சோழன் அங்கு எழுந்தருளி வீதிவிடங்கப் பெருமான் முன்னிலையில் நீதிபரிபாலனம் செய்ததும் புலனாகின்றன. இம்மண்டபத்தில் அமர்ந்துதான் சிவபெருமானின் தோழனாக விளங்கிய சுந்தர மூர்த்திநாயனார் திருத்தொண்டர் தொகை அருளினார் என்பதும் தெரிய வருகிறது.

நடன நங்கைக்குப் பட்டம்:

விக்கிரம சோழனின் 5ஆம் ஆட்சியாண்டின் மற்றொருகல்வெட்டு, வீதி விடங்கப் பெருமானின் முன்னிலையில் சித்திரைச்சதய நாளில் தேவாசிரியன் மண்டபத்தின் திறந்த வெளியில் அக்கா

லத்தில் நாட்டிய நங்கைகளுக்கு நடன அரங்கேற்றம் நடப்பித்து, "தியாக விநோத தலைக்கோலி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்ததையும் தெரிவிக்கிறது. மூன்றாவதாக நடன அரங்கேற்றம் நடைபெற்ற விதமும் இதில் கூறப் பட்டுள்ளது.

அமைச்சனின் வேண்டுகோள்:

விக்கிரம சோழ வேந்தனின் 5-ஆம் ஆட்சியாண்டின் மற்றொரு கல்வெட்டு, பெரியபுராணத்தில் சேக்கிழார் கூறும் மநுநீதிச்சோழனின் செயலை உறுதிப் படுத்துகிறது. மேலும் மநுவின் மந்திரி உபயகுலாமலன் என்பதையும், அவன் சோழமண்டலத்து இங்கணாட்டுப்பாலை யூரினன் என்பதையும், அவ்வழியில் வந்தவனே பாலையூர் உடையான் சந்திர சேகரனாதி வீதிவிடங்கனான குலோத் துங்கச்சோழ மாபலிவாணராயன் என்ற விக்கிரம சோழனின் அமைச்சனாவான் என்பதையும் மேலும், சோழனின் வம்ச வழியாக வருகிற மாளிகைமனையில் நாள்தோறும் அடியார்க்கு அமுது இடப் பெறவேண்டுமென்னும் இவ்வமைச் சனின் வேண்டுகோளை விக்கிரம சோழனும் ஏற்று இசைவளித்ததையும் புலப்படுத்துகிறது.

பசுவிற்கு நீதி வழங்கிய வரலாறு:

இக்கல்வெட்டிலேயே, பசுவின் கன்றினை அறியாமல் கொன்ற தன் ஒரே மைந்தன் பிரியவிருத்தனை, பசுவின் கண்ணீரைத் துடைக்க, மநுநீதிச் சோழனேதேரில்ஏறி மகன்மேல்செலுத்தி நீதியை நிலை நாட்டியதும், உடனே இறையருளால் கன்று,மந்திரி, இளவரசன் ஆகிய மூவரும் உயிர் பெற்று எழுந்த வரலாறும் சூரியவம்சத்தில் தோன்றிய மநு நீதிச் சோழனின் வழியில் வந்தவன் விக்கிரம சோழன் என்ற விவரமும், அவனது பெருமையும், முற்காலச்சோழ அரசர்களின் வழிமுறைப் பட்டியலும் இதில் இடம் பெற்றுள்ளன.

கோயில் பணியாளர் நியமனம்:

கிழக்குக் கோபுர வாயிலின் முதல் திருச்சுற்றின் வலது பக்கத்தில் உள்ள நான்கு கல்வெட்டுக்களுள் ஒன்று விக்கிரம சோழனின் 5ஆம் ஆட்சியாண்டில் கோயிலுக்குப் பணிபுரியப் பணி யாளர்கள் நியமனம் செய்யப்பட்ட விவரத்தைத் தெரிவிக்கிறது.

சபையும், திருவிளக்கும்:

தியாகேசுவரர் கோயில் அகலீஸ்வரர் மண்டபத்தில் விக்கிரமனின் 6-ம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு ஒன்று உளது. திருவாரூர் நகர சபையினர், தேவர் 64 பேர் முன்னிலையில் ஒன்று கூடித் திருவர நெறி மகாதேவர்க்கு நொந்தா விளக்கு ஒன்று வைப்பதற்கு "திரு மூலட்டான தொண்டர் காலவன் பொருத்தம் பொந்தை" என்பவர் முப்பது கழஞ்சு பொன் தானமாக அளித்தும், இதன்படி "திரு நீலகண்டன்" என்ற அளவையால் தினமும் உழக்கு நெய் விளக்கெரிக்க அளிக்க வேண்டும் என்று முடிவு செய்தமையும் தெரியவருகின்றன.

முதல் திருச்சுற்றின் கிழக்குச் சுவரில் உள்ள இச்சோழனின் 8 ஆம் ஆண்டின் கல்வெட்டு ஒன்று, கொயக்குறுநாடு மேலை மாரியபாடி" என்னும் வணிகர் விளக்கு ஒன்றுக்கு நிவந்தமாகக் காசு அளித்தமையைக் கூறுகிறது.

குடிகளுக்கு நிலம் வழங்கியது:

கோயிலின் இரண்டாம் திருச்சுற்றில் தென் வடக்காக உள்ள எட்டு கல்வெட்டு களுள் 5 கல்வெட்டுக்களில் விக்கிரம சோழனின் வாழ்க்கை வரலாறு பொறிக் கப்பட்டுள்ளது. அதில் அவன் தனித் தனியாக குடிமக்களுக்கு நிலமும் வழங்கி,

குளம் வெட்டி நீர்ப் பாசனத்திற்கும், கோயில் கட்டித் தெய்வ வழிபாட்டிற்கும், தானத்திற்கும் ஏற்பாடு செய்தமையும் நன்கு விளக்கப்பட்டு உள்ளன. மற்றைய வற்றில் அவனது வெற்றி, அரண்மனை கள், மாட மாளிகைகள் பற்றியும் கோயிலுக்கு நிலம் தானம் செய்தது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

முடிவுரை:

எனவே, விக்கிரமசோழன் தன் முன்னோர் வழியில் குடிகளைக்காத்து வந்ததையும், கோயில் கட்டிக்கலையையும் அறத்தையும் காத்துவந்ததையும், முன்னோரின் பழைய தலைநகரங்களையும் அரண்மனைகளையும் பேணிப் பாதுகாத்துவந்ததையும், கங்கை கொண்ட சோழபுரமே தலைநகராய் இருப்பினும், திருவாரூரையும் மிகச்சிறப்பாக வைத்திருந்ததையும், மநுநீதிச் சோழன் காலம் முதல் இன்றுவரை சோழநாட்டில் தஞ்சைத்தரணியின் நடு நாயகமாகத் திருவாரூர் சிறப்புடன் நின்று நிலவுகிறது என்பதையும் இதன்வழி நாம் அறிய முடிகிறது.

பயன்பட்ட நூல்கள் :

1. "Sri Thyagaraja Temple Thiruvarur" —By. S. Ponnusamy.
2. "Inscriptions of the Madras Presidency Vol. II" —By. Rangacharya.
3. "திருஞானசம்பந்தர் தேவாரம்– இரண்டாம் திருமுறை" —தருமையாதினப் பதிப்பு-குருபூசை விழாமலர்.

அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயில், மன்னார்குடி

'தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி மதில் அழகு; கோயில் ஒரு பாதி; குளம் ஒரு பாதி;மறையோர் மிகுந்தது மன்னார்குடி' என்றெல்லாம் புகழப் படும் இத்தலத்தில் திருமால் உவந்து வைகும் புண்ணிய கலைக்கோயில் இது. தென் துவாரபதி, தட்சிணத்துவாரகை, சண்பகவனம், சண்பகாரண்ணியம் என்றெல்லாம்புகழப் படுவதும் இத்திருக்கோயிலே. வஹ்னிமுகர் என்ற முனிவரின் இரு புதல்வர்களான கோப்பிரணயர், கோபிலர் என்ற முனிவர் களுக்கு அருள்செய்ததலம். பிரம்மா, அக்னி, பிருகு, இராசசேகரன், முசுகுந்தன் முதலியோரும் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். வைணவ ஆசாரிய ரான மணவாள மாமுனிகள் சுவாமிகளால் அபிமானிக்கப்பட்டதலம்.

பெருமாள் மூலவர்: ஸ்ரீ வாசுதேவப்பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் நின்ற திருக்கோலம்.

உத்ஸவர்: ருக்மணி சத்யபாமாவுடன் ஸ்ரீவித்யா ராஜகோபாலன். இவருக்கு இராஜமன்னார், கோபாலன் என்ற திருப்பெயர்களும் உண்டு. நின்ற திருக்கோலம் வலது கரத்தில் பொன் சாட்டை; ஒரு காதில் குண்டலமும் ஒரு காதில் தோடும் கொண்டவர்.

தாயார் மூலவர் : செண்பகலட்சுமி. உத்ஸவர்: செங்கமலத்தாயார்.

தலவிருட்சம்: சண்பகமரம். புன்னை மரமும் உள்ளது.

இத்தலத்திற்குச் சிறப்பளிக்கும் மற்றொரு அம்சம் ஹரித்திராநதி என்ற திருக்குளமாகும் 23 ஏக்கர் பரப்பிலமைந்த இக்குளத்தின் நடுவே வேணு கோபாலன் திருக்கோயில் உள்ளது. ஆனிப் பௌர்ணமி அன்று ஸ்ரீகோபாலன் தெப்பத்திருவிழா கண்கொள்ளாக் காட்சியாகும். மற்றும் துர்வாஸ தீர்த்தம் (கஜேந்திரமோக்ஷம்)திருப்பாற்கடல்,கோபிகாதீர்த்தம் (கோபிகாநாதன் குளம்) ருக்மணி தீர்த்தம், கோப்பிரளம் (அக்னி குண்ட தீர்த்தம்) கிருஷ்ணதீர்த்தம். சங்கு தீர்த்தம், சக்கரதீர்த்தம் என்ற புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

திருவரங்கம் போன்று ஆண்டு முழுவதும் திருவிழாக்காணும் பெருமாளாக ஸ்ரீ இராஜகோபாலன் விளங்குகின்றார். சிறப்பாக ஆனித் தெப்போற்சவம், ஆடிப்பூரம் தாயார் உற்சவம் மார்கழி இராப்பத்து, பகல்பத்து உற்சவம் பங்குனி பிரம்மோத்ஸவம் என்பன குறிப்பிடத்தக்கன. மன்னார்குடி வெண்ணெய்த்தாழி, கருடஸேவை கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

அண்மையில் 9 9 59ல் இக்கோயிலில் மகா சம்ப்ரோட்சணம் நடைபெற்று உள்ளது. 8-12-1966ல் இராஜகோபுரம் திருப்பணி முடிந்து பதினாறு மகா சம்ப்ரோட்சணம் நிகழ்ந்தது. கோபுரங்களும் மண்டபங்களும் மதில்களும் திருப்பணி செய்யப் பெறவேண்டியுள்ளன. அடியார்கள் மனம் வைத்தால் அருள் நிலையங்களைச் செம்மையாக்க முடியும். திருப்பணிக்கு நிதி வழங்கி அருள்பெற வேண்டுகிறோம்.

பி.ஆர். சிவப்பிரகாசம் பி.ஏ. பி.எல்.,
தக்கார்.

அ. தனபாலன் பி.ஏ.
நிர்வாக அதிகாரி.

அயிராவணமேறி அமரர் நாடாளாதே ஆரூர் ஆண்டு எங்களையாட்கொண்ட இறை தக்கார்க்குத் தக்கான், தியாகவிநோதன், செம்பொன்மேனி யழகன், ஆடரவக் கிண்கிணிக் காலகழன், கமல வசந்தத் தியாகேசன் பூங்கோயில் திருப்பணியிலும் குடமுழுக்கிலும் பங்கேற்ற அனைவரையும் தலையார கும்பிட்டு நெஞ்சார வாழ்த்துகிறோம்.



REGD. TRADE MARK

சங்கு மார்க்
லுங்கிகள்
கைக்குட்டைகள்

மதறாஸ் பளயகாட் கம்பெனி (பி) லிட்.
88, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-600 001

CHARI

மலரின் தேனை யுண்டு
மகிழும் சோலை வண்டு!

வண்ணக் கயிலி தேடி
மகிழும் மாந்தர் கோடி!

கத் தலைகோலி' என்று குறிப்பிடப்படு கிறது.

தஞ்சாவூர்க் கோயிலிலும் இராஜராஜன் காலத்தில் பல திருமேனிகள் செய்து அளிக்கப்பட்டன. ஒரு திருமேனி 'தட்சிணமேரு விடங்கன்' எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் நிறை எடுக்க உதவும் கல்லுக்கு'தட்சிணமேரு விடங்கன்'என்ற பெயர் வழங்கப்படுவது கல்வெட்டு களால் அறியப்படுகிறது. மேலும், இக் கோயிலுக்கே 'மகாமேரு விடங்கர்' 'மகாமேரு விடங்கர் நம்பிராட்டியார்' 'தஞ்சை விடங்கர்'ஆகிய திருமேனிகளும் செய்து அளிக்கப்பட்டுள்ளன.

திருவொற்றியூர்க் கோயிலில் 'கரணை விடங்கத் தேவர்' என்ற திருமேனி செய்து அளிக்கப்பெற்றதாக ஒரு கல்வெட்டு குறிக்கிறது. தஞ்சை மாவட்டம் குத்தாலம் கோயிலில் முதலாம் இராசராசசோழனின் 17ம் ஆட்சியாண்டில் 'நாங்கூருடையான் அமரன் பல்லவரையன் என்பவன் இக்கோயிலுக்கு, 'பொற்பலகை விடங்கர்'முன் நந்தாவிளக்கு எரியத் தானம் அளித்துள்ளான்.

திருச்சிக்கு அருகில் உள்ள திருப்பாசிலாச்சிராமக் கோயிற் கல்வெட்டு இராசராசவிடங்கர்' என்னும் திருமேனியைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

திருவாமாத்தூர் கோயிலில் வீதிவிடங்கன் என்று அழைக்கப்பட்ட மரக்கால் இருந்தாக ஒரு குறிப்பு தெரிவிக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவேங்கைவாசல் கோயிலில் முதலாம் இராசேந்திரன் காலத்தில் 'நித்தசூளாமணி விடங்கர்' என்ற செப்புத்திருமேனி செய்தளிக்கப்பட்டு வழிபாட்டிற்குதானம் அளிக்கப்பெற்றதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. மேலும், இக்கோயிலில் மூன்றாம் இராஜாதிராஜன் காலத்தில் 'சதிரவிடங்க தேவர் மற்றும் நம்பிராட்டியாரையும்', சதிரன் இராஜன் என்ற குலோத்துங்கச் சோழக்கிடாத்தரையன் என்பவன் செய்தளித்தான்.

வைகாசி மாதத்தில் திருவாதிரைத் திருநாளில் சதிர விடங்க தேவர் முன்பு சாந்திக்கூத்து ஆட நிலதானம் 'அளிக்கப் பெற்றதாக இக்கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. எனவே, பெரும்பாலான கல்வெட்டுக்களில் குறிக்கப்பெறும்'விடங்கர் என்னும் சொல்' சோமாஸ்கந்தர் திருமேனியைக் குறிக்கிறது எனக் கொள்வதில் தவறில்லை. ஒரே கோயிலுக்குப் பலர் பல விடங்கர் திருமேனி பல்வேறு காலத்தில் செய்தளித்திருக்கிறார்கள் என்பதையும் அறிகிறோம். இதனால்தான் இன்றும் ஒரே கோயிலில் பல சோமாஸ்கந்தர் திருமேனிகள் இருப்பதைக்காணலாம்.

மேலும் சோமாஸ்கந்தர் திருமேனி கல்வெட்டுக்களில் பல்வேறு பெயரிட்டும் அழைக்கப்படுகின்றது. 'உமாஸ்கந்த சகிதத் திருமேனி','குழந்தை நாயகர்' என்றெல்லாம் குறிக்கப்படுகிறது. திருச்சிக்கு அருகில் உள்ள அல்லூர்க்கோயிலுக்கு முதலாம் இராஜாதிராஜசோழன்காலத்தில் ஓகை உடையான் என்பவன், உமாஸ்கந்த சகிதத் திருமேனி ஒன்றை அக் கோயிலுக்குச் செய்தளித்தான்.

தஞ்சை மாவட்டம் நீடாமங்கலம் வட்டத்தைச் சேர்ந்த முல்லைவாசல் சிவன் கோயிலில் உள்ள சோமாஸ்கந்தர் செப்புத் திருமேனியின் பீடத்தில் 'உமாஸ்கந்த தேவரை எழுந்தருளுவித்தான் குன்றனூர் கிழவன்குலமாணிக்கம் எடுத்த பாதம்' எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இத்திருமேனி 11, 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். திருச்சிக்கு அருகில் உள்ள திருநெடுங்களம் கோயிலில் உள்ள

விடங்கர் (சோமாஸ்கந்தர்) வழிபாடு

கி. ஸ்ரீதரன்

சிவபெருமான் பல வடிவங்களை எடுத்தார். அவற்றை ஈசானமூர்த்தி சத்யோ ஜாதமூர்த்தி, தத்புருஷமூர்த்தி, வாமதேவமூர்த்தி, அகோரமூர்த்தி என ஐந்து வகையாகப் பிரிப்பது உண்டு. ஈசான மூர்த்தியில் சோமாஸ் கந்தமூர்த்தி. நடராஜர். ரிஷபாருடர் கல்யாணசுந்தரர், சந்திரசேகரர் ஆகிய திருஉருவங்கள் அடங்கும்.

தமிழ் நாட்டில் சப்த விடங்கத் தலங்கள் உள்ளன. இதைக்குறித்துத் தனிப்பாடல் ஒன்று உள்ளது.

"சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில்-பேரான
ஒத்த திருவாய்மூர் உவந்த திருக்கோளிலி
சத்த விடங்கத் தலம்."

திருவாரூர். திருநள்ளாறு. திருநாகைக் காரோணம், திருக்காரயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகியவை சப்தவிடங்கத் தலங்களாகக் குறிக்கப்படுகின்றன.

'டங்கம்' என்றால் உளியால் பொளிதல். உளியால் பொள்ளாத சுயம்புமூர்த்தியாக, தானே தோன்றியதாகக் கொள்ளப்படுகிறது. மேற்கூறிய அனைத்துக் கோயில்களிலும் 'விடங்கர்' என அழைக்கப்படும், பளிங்குக் கல்லில் செய்யப்பட்ட சிறிய லிங்கத்திற்கு அபிஷேகமும், ஆராதனைகளும் நடைபெறுகின்றன.

விடங்கர் என்றசொல் ஆடவல்லான் பெருமானைக் குறிக்கும் பொழுது 'பேரழகன்' என்ற பொருளில் வரும். விடங்கொள் கண்டத்தெம் விடங்கனே யுன்னைத் தொண்டனேன் விரும்புமா விரும்பே' என்ற திருமாளிகைத் தேவர் தில்லையில்அருளியதிருவிசைப்பாவாலும் திருப்பல்லாண்டில் 'வில்லாண்ட கனகத் திரள் மேருவிடங்கன், விடைப்பாகன்' எனவரும் சேந்தனார் வாக்காலும் அறியலாம்.

ஆனால் பலகோயில்களில் விடங்கர் திருமேனி செய்து அளித்தும், வழிபாட்டிற்காகத்தானம் அளிக்கப்பெற்றதாகவும்கல் வெட்டுகள் கூறுகின்றன. முதலாம் இராஜ இராஜனின் பட்டத்தரசி லோகமாதேவி ஆவாள். இவளுக்கு இயற்பெயர் தந்தி சத்திவிடங்கி என்பதாகும். திருவையாற்றில் லோகமாதேவீச்சுரம் என்னும் கோயிலைக் கட்டுவித்தாள். இக்கோயிலுக்கு 'ஒலோக விடங்க தேவர், என்ற செப்புத் திருமேனி ஒன்றைச்செய்து அளித்தாள். இதில் இறைவன்' ஒலோக விடங்கதேவர்' என்றும், இறைவி ஒலோக்விடங்க தேவர் நம்பிராட்டியார்' என்றும் இவர்களுக்கு இடையில் உள்ள கந்தன் 'பிள்ளையார் சுப்பிரமணியத்தேவர்' என்றும் குறிப்பது சிறப்பாகும்.

மேலும் திருவையாறு கோயிலில் தங்கம், மணிகளை நிறுக்க உதவிய துலாக்கோலுக்கும், (தராசு) எண்ணெய் போன்ற பொருட்களை அளக்க உதவிய உழக்குக்கும்'ஒலோக விடங்கன்'பெயரே வழங்கப்பட்டு வந்துள்ளதையும் கல்வெட்டுக்களில் காண்கிறோம். இக் கோயிலில் இருந்த ஒரு ஆடல் மகளின் பெயர்'நக்கன் பூமியான பரமாக்க விடங்

வல்லாளதேவன் கல்வெட்டு 'குழந்தை நாயகர்' எனக் குறிப்பிடுகிறது.

சோமாஸ்கந்தர் வழிபாடு:

சோமாஸ்கந்தர் வழிபாடு பல்லவர் காலத்தில் சிறப்பான இடம் பெற்று விளங்கியது. பல்லவ மன்னர்கள் தாம் அமைத்த குடைவரை கோயில்களிலும், கட்டடக் கோயில்களிலும் கருவறையில் லிங்கத்திற்குப் பின்புறம் கருவறைச் சுவரில் சோமாஸ்கந்தர் திருஉருவத்தை அமைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். இத்தகைய அமைப்பினை மாமல்லபுரம் குடைவரை கோயில்கள், கடற்கரைக் கோயில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஆகியவற்றில் காணலாம். மாமல்லபுரம் சிற்பங்களில் தேவி தன் மடியின்மீது குகனை அமர்த்திக்கொண்டிருக்கிறாள். இறைவன், இறைவி. குகன் மூவரும் பீடத்தில் அமர்ந்திருக்கின்றனர். பீடத்தின் கீழே நந்தி ஒன்று உள்ளது. அவர்களுக்கு இருபுறமும் திருமாலும் பிரம்மாவும் தொழுகின்ற நிலையில் உள்ளனர். மாமல்லபுரத்தில் சாளுவங்குப்பம் குகைக் கோயிலிலும் சோமாஸ்கந்தர் உருவம் காணப்படுகிறது. இங்குள்ள கல்வெட்டில் 'பசுபதியானவன் குகனோடும் இங்கேயே தங்கட்டும்'எனக் குறிப்பிடப்பட்டுள்ளது காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலிலும் சிற்ப உருவில் மட்டுமல்லாமல், ஓவியங்களிலும் சோமாஸ்கந்தர் திருமேனி உருவத்தைக் காணலாம். பல்லவர் காலத்தில் சோமாஸ்கந்தர் வழிபாடு சிறப்பாக இருந்தது என்பதை மேற்கண்ட சான்றுகளால் அறியலாம்.

தக்கோலம் கோயிலில் கருவறையின் நுழை வாயிலின்மேல் உள்ள சிற்பத்தில் இறைவன் நந்தியின் மீது சாய்ந்து கொண்டிருக்கிறார். அருகே குகனும், தேவியும் அமர்ந்திருக்கும் கோலத்தைக் காணலாம். மிகவும் அழகிய சிற்பம் இது.

சோழர் காலத்தில் கற்சிற்பங்களை விட அதிக அளவில் செப்புத் திருமேனிகளில் சோமாஸ்கந்தர் திருஉருவத்தை அமைத்து வழிபட்டார்கள். அவற்றின் வழிபாட்டிற்காகத் தானங்கள் அளித்தார்கள் என, பல கல்வெட்டுச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

பிற்காலச் சோழர் காலத்தில் சோமாஸ்கந்தர் திருஉருவினைக் கோபுரங்களில் அமைத்தார்கள். பின்னர் விஜய நகர நாயக்கர் காலத்தில் கோயில் தூண்களில் இவ்வுருவினை அதிக அளவில் அமைத்திருக்கின்றனர்.

திருவாரூர் விடங்கள்:

சோழ நாட்டை முசுகுந்த சோழன் என்னும் பேரரசர் திருவாரூரைத் தலை நகராகக்கொண்டு ஆட்சிசெய்து வந்தார். தேவர் தலைவனாகிய இந்திரனுக்கு அசுரர்களால் துன்பம் ஏற்பட்டபோது இவர்உதவிசெய்தார்,உதவிசெய்ததற்குக் கைம்மாறாக இந்திரன் வணங்கும் தியாகராசப் பெருமான் திருவுருவத்தை அளிக்குமாறு வேண்டினார். இந்திரன் தான் வழிபட்ட தியாகராசப் பெருமானைப் போன்றே வேறோர் உருவத்தைப் படைத்து அளித்தான். ஆனால் சோழன் இந்திரன் வணங்கும் தியாகராசப் பெருமானைத் தருமாறுவேண்ட இந்திரன் படைத்த ஆறு திருவுருவங்களோடு ஏழாவதாகத் தான் வணங்கிய தியாகராசப் பெருமானையும் அளித்தான். முசுகுந்தச் சோழன் ஒன்றைத் திருவாரூரிலும், மற்ற ஆறு திருவுருவங்களையும் அதனைச் சூழ்ந்துள்ள பிற ஆறு தலங்களிலும் நிறுவி வழிபட்டு மகிழ்ந்தான். இவற்றிற்கு சப்த விடங்கத்தலங்கள் என்று பெயர். பொதுவாக இந்தத் திருமேனிக்குத் தியாகராசர் என்ற பெயர் இருந்தாலும் ஒவ்வோர் இடத்துக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. அவையாவன்:—

திருவாரூர்—வீதிவிடங்கர்.
திருநள்ளாறு—நகவிடங்கர்.
நாகப்பட்டினம்—சுந்தரவிடங்கர்.
திருக்காரவாசல்—ஆதிவிடங்கர்.
திருக்குவளை—அவனிவிடங்கர்.
திருவாய்மூர்—நீல விடங்கர்.
திருமறைக்காடு—புவனி விடங்கர்.

திருவாரூர் வீதிவிடங்கருக்குப் பல்வேறு பெயர்கள் வழங்கப் படுகின்றன. அவையாவன:- வீதிவிடங்கர், தேவர் கண்ட பெருமான், தியாகப்பெருமான், தியாக வினோதர், செவ்வந்தித் தோடழகர், செங்கழுநீரழகர், கம்பிக்காதழகர், ஆடரவக்கிண் கிணிக்காலர், தேவ சிந்தாமணி என்பனவாம்.

அப்பர் பெருமான் திருப்பதிகங்களில் வீதிவிடங்கப் பெருமான், 'உலா' வந்ததாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

''*புவனி வீதி விடங்கனைக் கண்டிவள்*
தவனி போயின வாறென்றன் தையலே.''
—அப்பர் தேவாரம் 5:7:8:

திருவாரூர்க்கோயில் கல்வெட்டு ஒன்றில் வீதி விடங்கப் பெருமான், தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளி யிருந்து 'வீர அணுக்க விஜயம்' என்ற இசை அல்லது நாடக நிகழ்ச்சியைக் கண்டதாகக் குறிப்பு காணப்படுகிறது. மேலும், பூங்கோயில் நாயகத்தலைக்கோலி என்பவள் நாட்டியம் ஆடினாள் என்ற குறிப்பும் காணப்படுகிறது. முதற்குலோத்துங்கச்சோழன் கல்வெட்டில் புக்கத்துறை வல்லவத்தலைக் கோலியின் நடனம் கண்டதாகக் குறிக்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கச் சோழன் கல்வெட்டில் தைப்பூசத்திருநாள் அன்று வீதி உலா செய்ததாகவும், வழிபாட்டிற்கு நிலம் தானம் அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

திருவாரூர்க் கோயிலில் இருக்கும் அசலேசுவரம் என்ற கோயிலில் இருக்கும் முதல் ராசேந்திரன் கல்வெட்டு' திருவரநெறி தன்மவிடங்க தேவர்க்கு''உற்சவத்தின் போது திருவமுது படைக்கத் தானம் அளித்ததாகக் கூறுகிறது. இதே கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில் இறைவனுக்கு வேண்டும் பூமாலைகளுக்காக ஊர்ச்சபை நிலம் அளிக்கப்பெற்றதாகக் குறிக்கிறது. ஊர்ச்சபை கூறியபடி எழுதியவன் ''திருவாரூர் கிழான் பரவை வீதிவிடங்கனேன், என்றபெயர் குறிப்பிடப்படுகிறது

திருவாரூர்க் கோயிலில் இருக்கும் சத்யவாசகேசுவரர் கோயில்கல்வெட்டில் முதற்குலோத்துங்கச் சோழனின்கொடை விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் திருஉற்சவங்கள்எழுந்தருளும் 'ஆலவிடங்க தேவருக்கும் இவர் நம்பிராட்டியாருக்கும்' திருவமுது படைக்க நிலம் அளிக்கப் பெற்றதாகக் குறிப்பு வருகிறது.

திருவாரூர்த் தியாகேசருக்குச் செங்கழுநீர் மாலையும், செவ்வந்தி மாலையும் சிறப்பாக உரியன என்று திருவாரூர் உலாவில் குறிக்கப்படுகின்றன. செங்கழுநீர் திருப்பள்ளித் தாமம் (மலர்மாலை) இறைவனுக்குச் சாத்த நந்தவனங்கள் அமைத்துத் தந்ததாகவும்கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

திருவாரூரில் தியாகராசப்பெருமானின் அலங்காரம் தனிச்சிறப்பு உடையது. தியாகராசப் பெருமானின் முகம் மட்டும் தெரியும்படியும் மற்ற அங்கங்களும் ஸ்கந்தரும் மூடப்பட்டிருக்கும். இதே போன்ற நிலையை நாயக்க, மற்றும் மராட்டிய கால ஓவியங்களில் காணலாம்.

திருவாரூரிலும், மற்ற இடங்களிலும் சோழர் காலத்தில் விடங்கப் பெருமானின் வழிபாடு சிறப்பாக இருந்து வந்ததை மேற்கண்ட வரலாற்றுச் சான்றுகளால் அறிகிறோம்.

திருக்கோளிலி விடங்கன்–தலவரலாறு

கோ. வீராசாமி

'திருக்கோளிலி' சிவனுக்குரிய சப்தவிடங்கத் தலங்களில் ஒன்று. சமயக்குரவர்கள் மூவராலும் துதிக்கப்பட்ட பாடல் பெற்ற [illegible] லாற்றுச் சிறப்பும், புராணச் சிறப்பும், சிற்பச் சிறப்பும் பெற்று விளங்குவது இத்தல . 'திருக்கோளிலி' என்று தேவாரத்தில் சிறப்புப் பெற்ற இத்தலம் தற்போது 'திருக்குவளை' என்று அழைக்கப்படுகிறது.

இத்தலம், தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர்–திருத்துறைப்பூண்டிப் புகைவண்டி மார்க்கத்தில் 'திருநெல்லிக்காவல்' என்னும் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கில் சுமார் 7 கல் தொலைவிலும், திருவாரூர்–திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் கச்சனத்திற்குக் கிழக்கே 3 கல் தொலைவிலும் உள்ளது. இத்தலத்திற்குச் செல்ல, திருவாரூர் திருத்துறைப் பூண்டி, நாகப்பட்டினம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இத்தலத்தில்உள்ள திருக்கோயிலில் உறையும் இறைவனின் பெயர் 'திருக்கோளிலி' உடையார். பிரம்மபுரீஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். அம்பிகையின் திருநாமம் 'வண்டமர் பூங்குழலாள்'. இத்திருக்கோயில் தருமையாதீனத்தைச் சேர்ந்த 27 திருக்கோயில்களில் ஒன்று.

திருக்கோயில் அமைப்பு:

திருக்குவளை என்னும் ஊரின் நடுவே அமைந்துள்ளது இத்திருக்கோயில். கிழக்குநோக்கிய சந்நிதி இத்திருக்கோயிலின் நுழைவாயிலில் இராஜகோபுரம் உள்ளது. எதிரில் பிரம தீர்த்தம் உள்ளது. வெளிச் சுற்றின் வடபுறம் வசந்த மண்டபம் உள்ளது. கொடி மரத்தை அடுத்துள்ள இரண்டாம் கோபுரத்தின் நுழைவாயில் வழியாக உள்ளே சென்றால் பிரம்மபுரீஸ்வரர் சந்நிதியும் உள்ளது. எதிரில் சுந்தரமூர்த்தி நாயனார் பரவை நாச்சியாருடன் உற்சவ மூர்த்தியாகக் காட்சியளிக்கிறார். உள் திருச்சுற்றில் வலம் வரும்போது தியாகவிநாயகர் சந்நிதியையும், முருகனுக்குத் தனித் திருக்கோயில் உள்ளதையும் காணலாம். வடபுறத்தில் சொக்கலிங்கம் அண்ணாமலையார் இலிங்க வடிவங்களும், நால்வரின் திருஉருவங்களும் மகாலெக்ஷ்மியின் திருஉருவமும் உள்ளன. அம்மையின் திருக்கோவில் தனிச் சந்நிதியுடன் கிழக்கு நோக்கி உள்ளது. அதை அடுத்து ஆடவல்லானின் சந்நிதி உள்ளது. இத்தலத்தில் நவக்கிரகங்கள் ஒருமுகமாகத் தென்திசை நோக்கி அமைக்கப்பட்டுள்ளன. கருவறையையைச் சுற்றியுள்ள தேவ கோட்டங்களில் நர்த்தன கணபதி, பிட்சாடனர், தெக்ஷிணாமூர்த்தி முதலிய மூர்த்திகளின் உருவங்கள் உள்ளன. திருச்சுற்றின் கீழ்ப் புறத்தில் திருமாளிகைப் பத்தியில் சூரியர், சந்திரர் உருவங்களும் உள்ளன.

இரண்டாம் கோபுரத்தின் தென்புறக்கீழ் மதிலில் இறைவனைப் பிரமன் பூசிப்பதையும், பஞ்சபாண்டவர் பூசித்து வழிபடுதலையும் கல்லில் வடிக்கப் பெற்றுள்ளன. சுவாமி

கோவிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடையில் தனிக் கர்ப்பக்கிரக அர்த்த மண்டபத்துடன் கூடிய அகத்தியர் பூசித்த இலிங்கம் ஒன்று உள்ளது. சண்டிசருக்கும் தனி சந்நிதி உள்ளது. தலவிருட்சம் தேற்றாமரம்.

புனித தீர்த்தங்கள்:

இத்திருக்கோயிலுக்கு வடபுறம் அருகில் புண்ணிய நதியாகிய சந்திரநதி உள்ளது. கோயிலுக்கு எதிரில் பிரம்ம தீர்த்தமும், தென்புறம் இந்திர தீர்த்தமும், மேல்புறம் அகத்தியர் தீர்த்தமும் உள்ளன. அம்மன் சந்நிதிக்கு அருகே உள்ள சக்தி தீர்த்தம் எனப்படும் கிணற்றில் உள்ள புனித நீர் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. சந்திரநதி கடலோடு கலக்கும் சங்கமேசுரத்தில் தை, ஆடி, மகாளய அமாவாசைக் காலங்களில் மக்கள் கூடிக் கடலில் நீராடுகிறார்கள்.

தலச் சிறப்பு:

ஆரூரில் பெருமான் புற்றிடங்கொண்டவராக விளங்குகிறார். இத்தலத்தில் வெண் மணலே சிவமூர்த்தமாக விளங்குகிறார். பிரம்மதேவன் படைத்தல் தொழிலைப் பெற விரும்பி இத்தலத்தில் உறையும் இறைவனைப் பூசித்ததினால் இத்தலம் பிரம தபோவனம் என்றும் பிரமபுரி என்றும் வழங்கப்பெறும். புட்பவனம், தென்கயிலை என்ற பெயர்களும் இத்தலத்திற்கு உண்டு. நவக்கிரகங்கள் முதலியோருக்கு உளதாய குற்றங்களை நீக்கி அருள் புரிந்தமையால் 'கோளிலி' என்ற பெயரையும் இத்தலம் பெற்றது.

பாண்டவர்கள் உருமாற்றிக்கொண்டு வாழுங் காலத்தில் பகாசுரனுக்கும், பீமனுக்கும் நடந்த பெரும்போரில் பகாசுரனைப் பீமன் கொன்று விடுகிறான். பகாசுரனைக் கொன்றதினால் பீமனைப் பிரமஹத்தி தோஷம் பற்றிக் கொண்டது. பிரமஹத்தியை நீக்கி அருள் செய்பவன் கோளிலிப்பெருமான் எனக் கண்டு பீமன் தனது அண்ணன் தம்பிமாருடன் இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபட்டான். அவனைப் பற்றியிருந்த பிரமஹத்தியும் விலகியது. பாண்டவர் ஐவரும் திருக்கோளிலிப் பெருமானை வழிபட்டு இன்புற்றனர்.

திருத்தொண்டர்தொகை பாடித் திருஆரூரில் தம்பிரான் தோழராக விளங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இத்தலத்தை அடுத்துள்ள குண்டையூரில் வசித்து வந்த குண்டையூர்க்கிழார் என்னும் வேளாளர் நெல் அரிசி, பருப்பு முதலானவற்றை அனுப்பித் தொண்டு செய்துவந்தார். ஒருசமயம் மழையில்லாது விளைவு குன்றியபோது சுந்தரருக்கு நெல் அனுப்ப இயலாது தனது தொண்டினுக்கு இடையூறு வந்துற்றதே என்று மனம் கலங்கி உண்ணாது துயில் கொண்டார். இறைவன் அவர் கனவில் தோன்றி 'ஆரூரன் பொருட்டு நெல் அளித்தோம்' என்றனர். பொழுதுவிடிந்து பார்க்கும்போது குண்டையூரில் நெல், மலையாகக் குவிந்திருப்பதைக் கண்டு சிவபெருமான் திருவருளையும், நம்பியாரூரரின் பெருமையையும் வியந்து தொழுதார். இந்த நெல்மலையைத் திருவாரூருக்குக் கொண்டுசெல்லத் தன்னால் இயலாது எனக்கண்டு, திருவாரூருக்குச் சென்று சுந்தரரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி 'அந்த நெல்மலை மனிதர் எடுக்கும் அளவினதன்று. யான் என் செய்வது' என்றனர். ஆரூரரும் குண்டையூருக்கு வந்து நெல்மலையைக் கண்டு வியந்து பரவையின் மாளிகைக்கு இந்த நெற் குவை போய்ச் சேர நீலகண்டரே திருவருள் புரிந்தாலன்றி வேறு வழியில்லை எனக்கண்டு திருக்கோளிலி என்னும் இத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் பெருமான் மீது,

"நீளநினைந்தடியேன் உமைநித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர் நெல்லும் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே!

என்ற பாடலுடன் துவங்கும் திருப்பதிகத்தைப் பாடித்தொழுது இறைஞ்சினார், அப்போது. "பாவை மனையளவோடு நில்லாது திருஆரூர் நிறைய இந்நெற்குவை இன்றிரவே நமது பூத கணங்களால் கொண்டு வந்து சேர்ப்பிக்கப்படும்" என அசரீரி வாக்கு கேட்டது. அதைக் கேட்ட ஆரூரரும் மகிழ்ந்து திருவாரூர் வந்து பரவையாருக்கு இவ்வற்புத நிகழ்ச்சியை எடுத்து இயம்பினார். அன்றிரவு பரவையார் மனையே அன்றி ஊர் முழுவதும் நெற்குவை நிரம்பக்கண்டு ஊர்மக்கள் அதிசயித்தனர், பரவையின் கட்டளைப்படி ஊர்மக்கள் அந்நெல்மலையை வாரி எடுத்து வைத்துக்கொண்டு பசிப் பிணி நீங்கிச் சுந்தரர் புகழ்பாடி இன்புற்றார்கள்.

இத்தலத்தில் பிரமதேவர் பாண்டவர்கள் தவிர திருமால், இந்திரன், முசுகுந்தன், அகத்தியர், நவக்கிரகங்கள், ஹேமகாந்த மன்னன் முதலியோர் வழிபட்டு உய்ந் துள்ளார்கள்.

தியாகேசன் :

இறைவன் ஆன்மாக்கள் தன்னையடைந்து உய்யும் பொருட்டு எழுந்தருளியுள்ள சிவதலங்களில் சப்தவிடங்கத் தலங்கள் சிறப்புடையன. இறைவன் தியாகேசன் எனத் திருப்பெயர்பூண்டு சோமாஸ்கந்த மூர்த்தமாய் திருமாலின் ஆன்மார்த்தமாக அவரது இதயக்கோயிலில் எழுந்தருளியிருந்து அருள் வழங்கியபின் இந்திரனால் பூசிக்கப்பெற்று முசுகுந்தன் என்னும் மாமன்னனால் வழிபடப்பெற்றவர். அச்சிவ மூர்த்தம் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு வந்தது சிறப்பு மிக்க செய்தியாகும்.

வெகு காலத்திற்கு முன்பு, திருவாரூரை ஆண்ட முசுகுந்தச் சக்ரவர்த்தி என்னும் மன்னன் இந்திரனிடமிருந்து ஏழு சோமாஸ்கந்த மூர்த்திகளைப் பெற்றுவந்ததாகவும் அவற்றில் மூலமூர்த்தியைத் திருவாரூரில் பிரதிட்டை செய்ததாகவும் ஏனைய மூர்த்திகளை முறையே திருநாகைக் காரோணம், திருநள்ளாறு, திருக்கோளிலி, திருக்காராயில், திருவாய்மூர் மற்றும் திருமறைக்காடு ஆகிய தலங்களில் பிரதிட்டை செய்ததாகவும் கூறப்படுகிறது. இவ்வரலாற்றைக் கந்த புராணம் விரிவாகக் கூறுகிறது. இந்த சோமஸ்கந்தமூர்த்திதான் தியாகேசனாகவும், தியாகராஜராகவும் வழிபாடு செய்யப்படுகிறார். சப்தவிடங்கத் தலங்களில் தியாகேசர் ஏழுவகைத் திருப்பெயர்களைப் பூண்டு ஏழுவகைத் திருநடனங்களைப் புரிந்து அருளுகிறார்.

1. திருவாரூர் – வீதிவிடங்கன் — அஜபா நடனம்.
2. திருக்கோளிலி — அவனிவிடங்கர் — பிரமர நடனம்.
3. திருநள்ளாறு — நகவிடங்கர் உன்மத்தநடனம்.
4. திருநாகைக் காரோணம் – சுந்தரவிடங்கர் – பாராவாரத் தரங்கநடனம் —வீசிநடனம்.
5. திருக்காராயில் — ஆதிவிடங்கர் — குக்குட நடனம்.
6. திருவாய்மூர் – நீலவிடங்கர் — கமலநடனம்.
7. திருமறைக்காடு — புவனிவிடங்கர் – ஹம்சபாத நடனம்.

தியாகேசன் அவனிவிடங்கராகத் திருக்கோளிலியில் பிரமர நடனம் ஆடுகின்றார். வண்டு மலர்களுக்குள் குடைந்து ஆடிச் செல்வது போன்ற காட்சியை இந்நடனத்தில் காணலாம்.

தத்துவம்.

'சோ' என்றால் பரமேஸ்வரன் 'மா' என்றால் உமையவள். ஸ்கந்தன் என்றால் முருகன். ஆக சோமாஸ்கந்தன் என்றால் சிவன், பார்வதி, முருகன் அடங்கிய உருவம். சிவனுக்கும் அம்மைக்கும் இடையில் முருகன் ஆனந்தக் கூத்தாடுகிறார். இம் மூர்த்தியைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் கீழ்வரும் பாட்லில் வருணித்திருப்பது நோக்கத்தக்கது.

''ஏல வார்குழல் இறைவிக்கும் தனக்கும்
பாலன் ஆகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவோடு பகலுக்கும் நடுவே
மாலை யாண தோன்றலின்றி வைகுமாறு தொக்க',

என்பது அப்பாடலாகும்

சோமாஸ் கந்தரைச் சச்சிதானந்த மூர்த்தி என்றும் கூறுவார்கள். சத் உண்மை, சித்-அறிவு, ஆனந்தம்-மகிழ்ச்சி. இறைஅறிவால் உண்மையைக் காணும் ஆன்மாக்கள் முடிவில்லா ஆனந்தத்தில் திளைப்பார்கள் என்பதே இதன் கருந்தாகும். 'நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்' என்று சோமாஸ்கந்த மூர்த்தியைப் பாடுகிறார் அப்பர் பெருமான்.

திருவிழாக்கள்:

ஆண்டு தோறும் மாசி மகநாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு பூத கணங்கள் நெல் அட்டிச் செல்லும் திருவிழா 3 நாட்களுக்கு நடைபெறுகிறது. மார்கழிமாதத்தில் ஆருத்ராதரிசனமும், தியாகராஜப் பெருமான் வசந்தமண்டபத்தில் காட்சியளித்தலும் நடைபெறுகின்றன. கார்த்திகை ஞாயிறுகளில் பிரமதீர்த்தத்தில் தீர்த்தவாரி நடை பெறுகிறது. இவற்றைத்தவிர முசுகுந்தார்ச்சனையும் ஆண்டுதோறும் தருமை யாதீனத் தினரால் நடத்தப்படுகிறது. தைப்பூசத்தில் இந்திர தீர்த்தத்திலும், மார்கழியில் அகஸ்தியர் தீர்த்ததிலும், மாசிமகத்தில் சந்திர தீர்த்தத்திலும் தீர்த்தம் கொடுத்தல் நிகழ்கிறது

தலத்திருப்பதிகங்கள்:

திருஞானசம்பந்தர் பெருந்தகை இத்தலத்திற்கு வருகை புரிந்து கோளிலியப் பரைப் பாடிப்பரவுகின்றார். இத்தலத்தில் உறையும் கோளிலியம் பெருமான் கோள் களின் தீமை போக்கி ஆட்கொள்வான் என்ற குறிப்புப்பட, ''கோளாய நீக்குமவன், கோடரவம் நீக்குமவன் எனக்கருத்துப்பட''நாளாய போகமே நஞ்சணிகண்டனுக்கே'' என்று துவங்கும் பதிகத்தைப் பாடியருளியுள்ளார்கள்.

திருநாவுக்கரசு சுவாமிகளும் இத்தல்த்திற்கு எழுந்தருளி, கோளிலியப்பர் மீது ''மைக்கொள் கண்ணுமை பங்கினன் மான்மழு'' என்று துவங்கும் திருக்குறுந்தொகைத்

திருப்பதிகத்தையும், ''அன்னமே நினையா தொழிந்தேனுனை, என்று துவங்கும் திருக் குறுந்தொகைத் திருப்பதிகத்தையும் பாடி இறைவனைத் தொழுதுள்ளார்கள், கோளிலிப் பெருமானைத்தொழ அல்லல் நீங்கும்; வினை நாசமாகும்; அல்லல் இல்லை என்றும், இரவும் பகலும் கோளிலிப் பெருமானைப் பாடிப்பரவுவாருக்குச் சிவகதி கைகூடும் என்றும் கூறித்தொழா தொழிந்த காலத்தை எண்ணி இரங்குகிறார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இக்கோளிலி இறைவன் மீது திருப்பதிகம்பாடி யுள்ளார்கள். மழைவளம் குன்றிய காலத்து, சுந்தரருக்கு நெல் அனுப்ப இயலாது வருந்திய குண்டையூர் கிழாருக்கு இறைவன் அளித்த நெல்மலையைத் திருவாரூருக்குக் கொண்டுசெல்ல ''நீள நினைந்தடியேன், என்று தொடங்கும் பதிகம் பாடிக் கோளிலி யப்பர் அருளால் திருவாரூருக்குப் பூதகணங்கள் மூலம் எடுத்துச் செல்லச் செய்தார். இத் திருப்பதிகத்தில் உள்ள பல பாடல்களில் ''குண்டையூரில் சில நெல்லும் பெற்றேன் ஆளிலை யெம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே'', என்ற வேண்டுதல் அமையப் பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

இக் கோளிலிப் பெருமான்மீது 'திருக்குவளை ஸ்ரீ தியாகராஜ சுவாமி உலா' என்று ஒரு உலாப் பாடப் பெற்றுள்ளது. இதனைப்பாடிய ஆசிரியர் யார் என்று தெரிய வில்லை. இது பிற்காலத்தில் பாடப்பெற்றிருக்கலாம். திருக்கோளிலித் தியாகேசர், திரு வீதி உலா வருவதை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது இந்த உலா. இந்த உலாவில் திருக்கோளிலியப்பன் பெருமையும் பிரமன், பாண்டவர் வழிபாடு செய்ததும், சுந்தரருக்கு அருளியதும், முசுகுந்தச் சக்ரவர்த்தி தியாகேசன் மூர்த்திகளைப் பெற்ற செயலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், இத்தலத்தின் சிறப்பும். பேதை முதல் பேரிளம் பெண்வரைஏழ் பருவ மகளிரும் இப்பெருமானைக் காதலிப்பதும் புனைந் துரைக்கப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர பதினோராம் திருமுறையில் பரண தேவநாயனார் அருளிச் செய்த சிவபெருமான் திருவந்தாதியில் சிவத்தலங்கள் பலவற்றுள் ஒன்றாக பாடல் 49ல் இத்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வெட்டுக்கள்:

இத்தலத்தில் இக்கோயிலைப் பற்றிய கல்வெட்டுக்கள் சுமார் 19 உள்ளன. இவையாவும் பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள் காலத்தைச் சேர்ந்தவை. இராஜாதி ராஜன் (கி. பி. 1018-1054), மூன்றாம் குலோத்துங்கன் (கி பி. 1178-1216) மூன்றாம் இராஜேந்திரன் (கி. பி. 1246-1279) முதலிய சோழ மன்னர்கள், சடையவர்மன் சுந்தர பாண்டியன் (கி பி. 1251-1271), குலசேகர பாண்டியன் (கி. பி. 1268-1310) ஆகிய பாண்டிய மன்னர்கள் காலத்திய கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை. இவற்றால் இராஜாதிராஜன் ஆட்சிக்கு வந்த 10வது ஆண்டில் பழையனூருடையான் வேதவன முடையான் நுந்தா விளக்குக்காக 100 காசு அளித்தும், குலோத்துங்க தேவரின் 20ம் ஆண்டில் கோளிலி உட்டையாருக்குத் திருச்சாட்டியக் குடியுடையார் திருமடை விளாகத்து இருந்த ஒருவர் திருநுந்தா விளக்கு எரிப்பதற்கு இக்கோயில் முப்பதுவட்டத்துக் காணி யுடைய சிவபிராமணர்களிடம் 800 காசைக் கொடுத்த செய்தியும் சடையவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சி 18வது ஆண்டில் இவன் பிறந்த நாளாகிய திருவாதிரை தோறும் அரசர்க்கு நலம் உண்டாகப் பெருமானும் நாச்சியாரும் சிறப்பமுது செய்தருளித் திரு வுலாப் போதவும், ஆளுடைப்பிள்ளையார் திருநாளமுது செய்து திருவுலாப் போதவும்,

தேவாரம் பாடவும் நிலம் வாங்கி அளித்த செய்தியும், வீரராஜேந்திரன் 7வது ஆட்சி யாண்டில் இராஜேந்திர சோழவள நாட்டுடையார் திருக்கோளிலி உடையாருக்கு வெண் டாழை வேளுர் கூற்றத்துப் பெரிய உடையார் திருநுந்தா விளக்கு எண்ணெய்க்காக 135காசு அளித்த செய்தியும், குலசேகர பாண்டியனின் ஆட்சியாண்டு 31 ஆவதில் சித்த மல்லி வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து பொன்னி நல்லுடையான் சீராம தேவன் திருக்கோளிலிநாயனாருக்கு இரண்டு நுந்தா விளக்கிட விளக்குப்புறமாக நிலம் அளித்த செய்தியும் இன்னும் பிறஅரிய வரலாற்றுச் செய்திகளும் அறியக் கிடக்கின்றன.

இரண்டாம் கோபுரத்தில் உள்ள ஒரு கல்வெட்டில் இக்கோபுரத்தைக் கட்டு வித்தவன் தவலோக நாதன் என்பது "நவலோக பாலன் கயிலாயன் வல்லை நரேசன் சற்றே அவலோகனத்தில் விடை கொடுத்தான் கலித்திட பொழுதே தவலோக நாதன் திருப்பணி என்று பொறிக்கப்பட்டிருப்பதிலிருந்து தெரிகிறது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்பும்,புராணச் சிறப்பும், தெய்வீகச் சிறப்பும்,பழமை யும் உடைய பாடல் பெற்ற இந்த அரியதலத்தில் உள்ள கோளிலி உடையாரையும் வண்டமர் பூங்குழலாளையும் அவனிவிடங்கரையும் வழிபட்டு நம் அல்லல் நீங்கி உய் வோமாக.

திருநள்ளாறு-தர்ப்பாரண்யேஸ்வரர் ஆலயம்

க. நெடுஞ்செழியன்
தொல்பொருள் ஆய்வுத் துறை, கங்கைகொண்ட சோழபுரம்.

அமைவிடம்:

சப்த விடங்கர் ஸ்தலங்களில் மூன்றாவது ஸ்தலமாக விளங்கும் திருநள்ளாறுபுதுவைமாநிலத்தில் காரைக்காலுக்கு மேற்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சப்த விடங்கர் ஸ்தலங்களில் ஆறு தலங்கள் தமிழகத்திலும், ஒன்று புதுவை மாநிலத்திலும் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.

ஊரும், பேரும்:

இவ்வூர் இலக்கியங்களில் நள்ளாறு என்று அழைக்கப்படுகின்றது. சுந்தர மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோர் இவ்வூரினைப்புகழ்ந்து பாடியுள்ளனர். இவ்வூரில் நளன் ஆறுதல் பெற்றதால் நள்ளாறு என்றாயிற்று என்பர். இவ்வூருக்கு ஆதிபுரி என்றும் தர்ப்பாரண்யம் என்றும் வேறு பெயர்களும் உண்டு.

சைவப்பாடல்களில் திருநள்ளாறு:

இறைவன் கோயில் கொண்டுள்ள ஆற்றுப்பதிகளை ஒரு பாட்டிலே அடுக்கிக்கூறியுற்ளார் திருநாவுக்கரசர்.

"நாள்ளாறும் பழையாறும், கோற்றாற் றோடு
நலந்திகழும் நாளாறும், திருவையாறும்,
தெள்ளாறும்"

என்று திருநாவுக்கரசரின் திருப்பாசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று திருநள்ளாறு ஆகும்.

தர்ப்பாரண்யேஸ்வரர் கோயில்-சப்த விடங்கத் தலங்களில் ஒன்று:

இக்கோயில் திருநள்ளாறு புகை வண்டி நிலையத்தில் இருந்து தெற்கே ½ கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயில் காவிரி ஆற்றின் தென்கரையில் காணப்படுகின்றது. இத்தலம் சப்த விடங்கத் தலங்களில் ஒன்றாகக் கருதப் படுகின்றது. இக்கோயிலில் உள்ள இறைவன் பெயர் தர்ப்பாரண்யேஸ்வரர் என்று அழைக்கபடுகிறது. இக்கோயிலில் உள்ள கல்வெட்டுக்களில் நள்ளாறூர் எனவும், நள்ளாறுடையார் எனவும் இறைவன் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. இறைவி, போக மார்த்தபூண்முலையாள் என்று அழைக்கப்பெறுகிறாள். வடமொழியில் பிராணேஸ்வரி என்று அழைக்கப் பெறுகிறாள்.

கோயில் அமைப்பு:

நான்கு வீதிகளின் நடுவே கிழக்கு நோக்கி அமைந்துள்ளது இக்கோயில். கோயிலின் திருவாயிலில் பெரிய திருமுற்றம் உள்ளது. முற்றவெளியை அடுத்து ராஜகோபுரம் ஐந்து நிலைகளோடு அழகுற விளங்குகின்றது. கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் இரண்டாவது திருச்சுற்றை அடையலாம். இத்திருச்சுற்றின் சுவரில் நளன் சரித்திரமும், ஸ்தல வரலாறும் ஓவியங்களாக உள்ளன. வடமேற்கு மூலையில் தியாகேசப்பெருமான் வசந்த விழாக் கொள்ளும் மண்டபம் உள்ளது.

இதன் வட கீழ்க்கோடியில் காளத்தி நாதர் கோயில் உள்ளது.

அடுத்து, உட்கோபுரமாகிய கட்டைக் கோபுரத்தை அடையலாம். கோபுரவாயிலின் தென்பால் கற்பக விநாயகர் உருவம் உள்ளது. இதன் உள்ளே நுழைந்ததும் மூன்றாம் பிரகாரத்தை அடையலாம். இதை வலம் வந்தால் கட்டைக் கோபுரத்தின் தென்பாலுள்ள திருமாளிகைப்பித்தி மண்டபத்தில் முதலில் காட்சி வழங்குபவர் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவர் எழுந்தருளும் திருமேனியாக நகவிடங்கப் பெருமானை வணங்கிய வண்ணம் மேற்கு நோக்கிய நிலையில் இருப்பர்.

நகவிடங்கர்:

இத்தலத்தில் உள்ள விடங்கரை நகவிடங்கர் என்று அழைப்பர். நகவிடங்கர் உருவம் மரகதத்தால் ஆன லிங்க உருவில் அமைந்துள்ளது. எனவே, இதனை மரகதவிடங்கர் என்றும் அழைப்பர். இத்தலத்திற்குச் சிறப்பாக விளங்கும் மரகதவிடங்கர் பெட்டகத்தில் எழுந்தருளியிருக்கிறார். சாதிப்பச்சை ரத்தினத்தால் ஆன சிவலிங்கத்திருமேனி ஆகும். இதற்கு உசத்காலம், காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங்காலம் ஆகிய ஐந்து காலங்களிலும் அபிஷேகமும், அர்த்த சாமத்தில் தீபாராதனையும் நடைபெறும். தீபாராதனை நடக்கும் பொழுது ஒளி வடிவான இறைவனைத் தரிசித்தல் வியப்பான நிகழ்ச்சிகளில் ஒன்று.

தியாகேசர்:

கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் தியாகேசர் சன்னிதி உள்ளது. இதில் தியாகேசர் எழுந்தருளியுள்ளார். இவர் நகவிடங்கத் தியாகர் என்றும், நகவிடங்கத் தியாகராஜர் என்றும் அழைக்கப் பெறுகின்றார். இத்தலத்தில் உள்ள தியாகராஜர் நடனம் பிற சப்த விடங்கத் தலங்களிலிருந்து மாறுபடுகின்றது. இங்குள்ள தியாகராஜரது நடனத்தை உன்மத்த நடனம் என்பர். உன்மத்த நடனம் என்றால் பித்துக் கொண்டவன் ஆடுதல் போன்று நடனமாடுதல் ஆகும்.

இங்குள்ள தியாகராஜர் உருவம் கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச்சோழரின் கலைப்படைப்பாகும் இச்சன்னிதியின் சுவர்களில் சோழ ராஜ்யத்தின் கடைசிமன்னனான மூன்றாம் ராஜேந்திரன், காடவமன்னன், கோப்பெருஞ்சிங்கன் ஆகியோரது கல்வெட்டுக்கள் உள்ளன. எனவே திருநள்ளாறு தியாகராஜர் உருவமும் சற்றேறக்குறைய கி. பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதலாம்.

கல்வெட்டுக்களில் திருநள்ளாறு பற்றிய செய்திகள்:

திருநள்ளாறு கோயிலில் முதலாம் ராஜாதிராஜன், இரண்டாம் ராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், இரண்டாம் குலோத்துங்கன், விக்கிரமசோழன், இரண்டாம் ராஜராஜன், இரண்டாம் ராஜாதி ராஜன், மூன்றாம் ராஜராஜன், மூன்றாம் ராஜேந்திரன் போன்ற சோழ மன்னர்களின் கல்வெட்டுக்கள் உள்ளன. மேலும், ஜடாவர்மன் குலசேகர பாண்டியன் கல்வெட்டுக்களும், கோப்பெருஞ்சிங்க காடவராயனது கல்வெட்டுக்களும் உள்ளன,

இக்கோயிலில் உள்ள நடராஜர் செப்புத்திருமேனியில் அத்திருமேனியைச் செய்து அளித்தவர் பெயர் உள்ளது. இக்கல்வெட்டு கி பி. 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. மேற்குறித்த கல்வெட்டுச் செய்திகள் இந்தியக்கல்வெட்டு ஆண்டு

அறிக்கைகளில் 1965-66, 1968-69ல் வெளிவந்துள்ளன.

திருநள்ளாறு பிராமணர்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட ஊராகும். இவ்வூர் முலையூர் நாட்டு உய்யக்கொண்டான் வளநாடு என்ற பிரிவில் அமைந்திருந்தது. முதலாம் இராஜராஜன் காலத்தில் அவன் விருதுப் பெயரோடு தொடர்பு படுத்தி, "சோழேந்திரச் சதுர்வேதி மங்கலம்" என்ற பெயரில் திருநள்ளாறு அழைக்கப்பட்டது. திருநள்ளாற்றில் உள்ள பழமையான கல்வெட்டு முதலாம் ராஜேந்திர சோழன் மைந்தனாகிய முதலாம் ராஜாதிராஜன் கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டில் தன் தந்தையாகிய முதலாம் ராஜேந்திர சோழன் அளித்துள்ள கொடைகளைக் குறித்து உள்ளான். முதலாம் ராஜாதிராஜனின் 34ஆவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் திருநள்ளாறு உய்யக் கொண்டான் வளநாடு என்ற நாட்டுப்பிரிவு, பெயர் மாறி ஜெயங்கொண்ட சோழவளநாடு என்ற பிரிவில் அமைந்துள்ளது. இரண்டாம் இராஜேந்திர சோழன் காலத்தில் ஆதிராஜேந்திரன் வளநாடு என்ற நாட்டுப்பிரிவில் அமைந்து வழங்கப் பட்டது. குலோத்துங்கன், விக்கிரம சோழன் காலங்களில் திருநள்ளாறு ராஜநாராயண வளநாடு என்ற நாட்டுப் பிரிவில் அமைந்து விருதுராஜ பயங்கரச் சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப் பட்டது.

சனி வழிபாடு,

"வளங்கொழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுவி நாளும்வழிபாடுசெய்
நள்ளாறே."

எனக் குறிக்கின்றது தேவாரம். நளன் என்னும் அரசன் இங்குள்ள ஈசனை வழிபட்டுக் கலிநீங்கப் பெற்ற இடமாக இத்தலம் விளங்குகின்றது. இத்தலத்தில் உள்ள நளதீர்த்தத்தில் பக்தர்கள் எண்ணெய் தேய்த்து நீராடி வழிபடுகின்றனர். ஆதலால் இக்கோயிலில் சனி வழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது.

அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயில், சங்கரன்கோவில்
திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்.

சங்கன், பதுமன் என்ற பாம்பரசர்கள் இருவர், முறையே சிவன்தான் பெரிது; நாராயணன் தான் பெரிது; என வாதிட்டு முடிவு காணாமல் இருந்த போது அன்னை உமாதேவி இறைவனை நோக்கி அரனும் அரியும் ஒன்றே என்று உணர்த்த வேண்டித் தவமிருக்க, இறைவன் ''சங்கரநாராயணராக', காட்சி கொடுத்தருளியது இத்திருத்தலத்தில்தான். இதுவே ஆடித்தபசு உற்சவமாக இங்கு சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது.

இத்திருக்கோவில் கி.பி. 11ம் நூற்றாண்டில் உக்கிரபாண்டிய மன்னரால் கட்டப்பெற்றது. நெடிது உயர்ந்த ராஜகோபுரமும், முன்மண்டபமும் பின் சீவலமாற பாண்டியனால் கட்டப்பட்டது.

பாம்பரசர்களால் தோண்டப்பட்ட நாகசுனையில் மூழ்கிப் புற்றுமண் பூசி வழிபடுவோர் தீராத நோய்கள் நீங்கப்பெற்று வருகின்றனர். இத்திருக் கோவிலில் வழங்கப்படும் புற்றுமண் பிரசாதம் தீராத பிணிகளையும் தீர்க்கும் அருமருந்தாகும். தேள், பாம்பு, பூரான் இன்னபிற விஷப் பூச்சிகள் தொல்லை யினின்றும் விடுபட அவைகளின் வெள்ளியிலாலான உருவ சாமான்களைக் காணிக்கை செலுத்தும் திருத்தலம்!

அன்னை கோமதி சன்னதியின் முன் திருவாவடுதுறை ஆதீன பத்தாவது குருமகா சந்நிதானம் அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற ஸ்ரீ சக்கரத்தின் மீது அமர்ந்து நோன்பிருந்தோர் பில்லி, சூனியம், சித்தப்பிரமை போன்ற கோளாறுகள் நீங்கப்பெறும் திருத்தலம்.

ஸ்ரீ சங்கரலிங்கசுவாமி மீது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் 21, 22, 23 செப்டம்பர் திங்கள் 21, 22, 23 ஆகிய நாட்களில் சூரியனது கிரணங்கள் சூரிய உதயத்தின்போது விழும் காட்சியை இன்றும் கண்டுகளிக்கலாம்.

இச்சிறந்் வாய்ந்த திருக்கோவிலில் வரும் 1990க்குள் திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லா ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் அனைவரும் தங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி வேண்டு வோர்க்கு வேண்டும் வரம்தரும் அன்னை கோமதியின் அருள்பெற வேண்டுகிறோம்.

டி சிதம்பரம் பி.எஸ்சி., பி.எல்.,
உதவி ஆணையர்/செயல் அலுவலர்.

எஸ். கனகய்யா, பி.எஸ்சி., பி.எல்.,
தக்கார்/துணையர்.

நாகை-காரோணேஸ்வர சுவாமி

ச. செல்வராஜ், எம். ஏ.,
தொல்பொருள் அலுவலர், சிதம்பரம்.

அமைவிடம்:

''சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு
காரார் மறைக்காடு காராயில்—பேரான
ஒத்த திருவாய்மூர் உவந்ததிருக் கோளிலி
சத்த விடங்கத் தலம்''

என்று குறிக்கும் பாடல் மூலம் சப்த விடங்கர் ஸ்தலங்களில் திருநாகைக் காரோணேஸ்வரர் ஆலயம் இரண்டாவது விடங்கர் ஸ்தலமாக அமைந்து கிறப்புப் பெறுகின்றது. இவ்விடங்கஸ்தலம் பற்றி இங்கு காணலாம். தஞ்சை மாவட்டத்தில் காவிரியின் தென் பகுதியில் தேவாரப் பாடல் பெற்ற இடம் நாகப்பட்டினம். இவ்வூர் தஞ்சையில் இருந்து 79 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது.

ஊரும், பேரும்:

நாகை என்றும், நாகப்பட்டினம் என்றும் அழைக்கப்படும் இவ்வூர் சோழர்கள் காலத்தில் சோழகுல வள்ளிப் பட்டினம் என்று அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. இங்கு காணப்படும் கோயிலை, ''திரு நாகைக் காரோணம்'' என அழைப்பர். இப்பகுதி ஓர் சிறந்த துறைமுகப்பகுதியாக விளங்கி உள்ளது இவ்வூரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது நீண்ட வீதிகளும் அழகிய மடங்களும் துறைமுகத்தில் அதிக அளவு கப்பல்களும் காணப்படும் என்று விளக்குவர். பெயர்க்காரணம் கூறும் பொழுது நாகவம்சத்துத் தலைவன் தன் மகளைச் சூரிய வம்ச சாலிசுகன் என்பவனுக்கு மணமுடித்துக் கொடுத்தான். பின்னர், அவன் அரசனாக மணிமுடி தரித்தான் எனவே, நாகப்பட்டினம் என்ற பெயர் அந்த நாகர் தலைவன் நினைவாக வந்தது என்பர்.

காயாரோகணர் ஆலயம் சப்த விடங்கர் ஸ்தலங்களில் ஒன்று:

இக்கோயிலில் வீற்றிருக்கும் இறைவன் காயாரோகணர் என்பர். அது பேச்சு வழக்கில் காரோணர் என்று மருவியது. தமிழகத்தில் இது மிகவும் பழமை வாய்ந்த கோயில் ஆகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர் அகிய மூவராலும் பாடப்பெற்ற ஆலயம் இக்காயாரோகணர் ஆலயம். இங்குள்ள இறைவன் பல்வேறு வடிவில் புகழ்ந்து இப்பெருமக்களால் பாடப்பட்டுள்ளார். அர்த்த நாரீஸ்வரர், லிங்கோத்பவர், திருபுராந்தகர், "சம்கார மூர்த்தி, காலாரி காமதகன மூர்த்தி, இராவணன் வதம், ஆலகால விடத்தை உண்டவன். சுடுகாட்டில் ஆடும் நடராஜர் மண்டை ஓடுகளை மாலையாக அணிந்தவன் என்று பல்வேறு கோணங்களில் இவ்விறைவனை இவர்கள் பாடிச் சென்றுள்ளனர். இவ்வாறு பாடப்பெற்ற தலங்களில் இதுவும் ஒன்று இக்கோயிலை சப்த விடங்கன் தலங்களில் ஒன்றாகக் குறிப்பர். இங்கு விடங்கனாக வீற்றிருப்பவர் சுந்தர விடங்கர் அவர். சுந்தரர் இவ்விறைவன்முன், விலையுயர்ந்த பொன், மணி, மரகதம், ஆபரணங்கள், பட்டு, முத்து, வாசனைத் திரவியங்கள் குதிரை போன்ற பலவகைப் பொருள்களையும் தன் மனைவிகளான பரவை, சங்கிலி நாச்சியாருக்காக வேண்டுகின்றார். இங்கு விடங்கன் ஸ்தலம் மூலசன்னிதியின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ளது. விடங்கனுடைய பெயரும், அவ்விடங்கனின் ஆடலும் இடத்திற்கு இடம் வேறுபட்டு

விளங்குகின்றன. அவ்வகையில் திருநாகைக்காரோணத்தில் உள்ள விடங்கன் சுந்தர விடங்கர் என்று அழைக்கப்படுகிறார். இத்தலத்தில் உள்ள கோமேதகத்தால் ஆன லிங்க வடிவத்தைச் சுந்தர விடங்கர் என அழைப்பர்.

இதனுடைய பொலிவையும் பேரழகுத் தன்மையையும், கொண்டு இப்பெயர் பெற்றிருக்க வேண்டும். இத்லலத்தில் உள்ள தியாகராசரது நடனமும் பிற விடங்கர் ஸ்தலங்களில் இருந்தும் மாறுபடுகிறது. இத்தலத்தில் உள்ள தியாகராஜர் நடனத்தைத் தரங்க நடனம் என்றும், பாராவாரத்தரங்க நடனம் என்றும் குறிப்பர். தரங்கம் என்றால் அலையைக் குறிக்கும். தியாகராசரின் நடனம் கடலலைகளைப் போன்று ஆடி அசையும் தன்மை வாய்ந்ததால் இப் பெயர் பெற்றது போலும்.

இவ்வாலயம் முதலாம் ராஜராஜன் காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருத்தல் கூடும். இக்கோயில் கிழக்குப் பார்த்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளே அமைந்த கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டது. வெளியே உள்ளது ஐந்து தளங்களைக் கொண்டு திகழ்கின்றது. இலிங்கக்காரோணர், சோமாஸ்கந்தர், சுற்றி அமைந்துள்ள ரிஷிகள் ஆகிய இவர்களின் உருவங்கள் விஜயாலய சோழீஸ்வரம், திருவீழிமிழலை போன்ற இடங்களில் காணப்படுவது போன்று இங்கும் அமைந்துள்ளன.

கல்வெட்டுக்கள்:

இக்கோயிலில் காணப்படும் கல் வெட்டுக்கள் பல. அவை முதலாம் ராஜராஜன், முதலாம் ராஜேந்திரன், இரண்டாம் ராஜேந்திரன், மூன்றாம் குலோத்துங்கன் போன்ற சோழர்குல மன்னர்கள் இக்கோயிலுக்கு அளித்துள்ள தானம் மற்றும் ஆற்றிய சிறப்புப் பணிகளும் குறிக்கப்படுகின்றன. இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் மிகவும் முதன்மையானதுமுதலாம்இராஜராஜனின் இருபத்தி ஐந்தாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஆகும். இக்கல்வெட்டில் 20 காசுகள் இறைவனுக்கு அமுது படைத் தலுக்கும், 29 ஆம் ஆட்சி ஆண்டுக் கல் வெட்டில் பாலையூரில் உள்ள நிலத்தைத் தானமாகத் தந்து இறைவனுக்குப் பூசை வழிபாடு செய்ய அளித்த செய்தியும் குறிப்பிடப்படுகின்றன.

முதலாம் ராஜேந்திரன்:

முதலாம் ராஜேந்திரனின் மூன்றாம் ஆட்சி ஆண்டில் இரண்டு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பொன்னையும், மணியையும், ஆபரணங் களையும் குறித்து நிற்கின்றன. பச்சை, மரகதம், மாணிக்கம், வீரபட்டம், மகரம், வட்டப்பு, பருத்திகுரல் ஆகிய இவை அனைத்தும் நிறையிட்டு நாகைத் திருக் காரோணம் எனும் சத்திரிய சிகாமணி வளநாட்டில் எழுந்தருளியிருக்கும் நாகை யாள்வார் திருமேனிக்கு அளித்த செய்தி இவற்றில் காணப்படுகின்றது.

ஸ்ரீவிஜயன் என்ற மன்னர் சார்பில் நிமலன் அகஸ்தீஸ்வரன் என்பவன் தேவா சுரகண்ட ஆசாரியனால் அமைக்கப்பட்ட பல்வேறு வகையான விளக்குகளாகிய பாவை விளக்கு, குருக்கு விளக்கு, மட்ட விளக்குப் போன்ற விளக்குகளைத் தானமாகத் தந்து காரோணசுவாமியை ஒளிமயமாக்கிச் சென்றுள்ளான்.

மேலும் இக்கோயிலுக்கு முதலாம் ராஜேந்திரன் காலத்தில் பல்வேறு வெள்ளிப்பாண்டங்களை வாணிகர்களும் சிவபிரமாணர்களும் அளித்துள்ளனர். மேற்குறித்த மன்னனது ஏழாவது ஆட்சி ஆண்டில் தோன்றிய கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள இரண்டு தன்மங்கள் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். அவையாதெனில் 87, 3/4 கழஞ்சு சினக் கனகம், 60 3/4 கழஞ்சு உண்டிகை பொன். இவை இறைவன் திருக்கரோண

முடையாருக்குப் பொன்னாபரணம் செய்யவும், அமுது படைக்கவும், பூசை வழிபாடு அர்த்தநாரிக்குச் செய்யவும், இரண்டு கோயில் பிராமணர்களுக்கு உணவு அளிக்கவும் மேற்படி தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்தகு உயர்ந்த் தானங்கள் ஸ்ரீவிஜயன், கடாரம் சூளாமணி வர்மன் அல்லது அவனுடைய வழித் தோன்றல் மாறவிஜயோத்துங்கனின் கட்டளை பேரில் ஏற்படுத்தப்பட்டன வாகலாம். இக்கல்வெட்டுகள் மேலும், முதலாம் ராஜ ராஜனால் பெருமைப்பத்தப் பட்டு சூளாமணி விகாரம் எனும் ராஜ ராஜப் பெரும்பள்ளியை நாகப்பட்டி னத்தில் எழுப்பியது பற்றியும் குறிப்பிடு கின்றன. இவை. சீன தேசத்தினர்க்கும் சோழர்களுக்கும், கடாரத்தை ஆண்ட ஸ்ரீவிஜயனுக்கும் இருந்த நெருக்கத்தைக் காட்டுகின்றன. இவற்றில் குறிப்பிடப் பட்டுள்ள சின்னக் கனகம் என்பது சீன தேசத்து பொன்னைக்குறிக்கும்.

முதலாம் ராஜாதிராஜன் காலத்தில் ஆடவல்லான் திருமேனியைச் சோழப் பல்லவத்ரையன் திருக்காரோணம் உடையார் சன்னிதியில் நிறுவினான். இரண்டாம் ராஜராஜன் காலத்தில் மகா மண்டபத்தில் காணப்படும் பத்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு 83 காசுகள் விளக்கு எரிக்க அளித்துள்ள செய்தியைக் குறிப்பிடுகின்றது. இங்கு நாகையைக் குறிப்பிடும் பொழுது செயமாணிக்க வளநாட்டில் பட்டினக் கூற்றத்தில் உள்ள சோழர்குல வள்ளிப் பட்டினம் என்று உள்ளது. எனவே, நாகை, சோழர்குல வள்ளிப் பட்டினம் எனச் சோழர்கள் காலத்தில் அழைக்கப்பட்டு வர்துள்ளது என்று புலனாகின்றது. அடுத்துக் காணப் படும் கொடைகள் விளக்குகள் அளித்தல் நெய்வேதனம் செய்தல், பூசை வழிபாடு நடத்துதல் பற்றியவையாகும்.

மூன்றாம் குலோத்துங்கன்:

தியாகராஜர் சன்னிதி மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் விரிவுபடுத்தப் பட்ட ஒன்று. இவனது 4வது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, இவனைத் திரிபுவனச் சக்கரவர்த்திகள் வீரராஜேந் திரன் என்று குறிப்பிடுகிறது. மற்றைய இரண்டு கல்வெட்டுக்கள் மணக்கொண் டான் தேவேந்தன் என்பவனுடைய நிலம் விற்றல் தொடர்பான கல்வெட்டுக்கள் ஆகும். அடுத்து, 14 ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் மருதமங்களமுடைய மலை மேல் அமர்ந்தவன் என்னும் வானவன் விழுப்பரையன், திருக்காரோணமுடைய நாயனாருக்கும், அழகிய விடங்கருக்கும் வெள்ளியாலும், பொன்னாலும் ஆடை ஆபரணங்களை அளித்துள்ள செய்தி காணக்கிடைக்கின்றது. இங்குள்ள கல் வெட்டுச் செய்திகளில் இருந்து ஓர் உண் மையை அறிய முடிகின்றது. அவ்வுண் மையாவது சுமார் 796 ஆண்டுகளுக்கு முன்பே மூன்றாம் குலோத்துங்கன் காலத் தில் வாழ்ந்த வானவன் விழுப்பரையன் அழகிய விடங்கருக்குப் பொன்னும் மணி யும் கொடையாக அளித்துள்ளான் என்ப தேயாகும். எனவே. இங்குள்ள அழகிய விடங்கர் சற்றேறக்குறைய 796 ஆண்டு கட்க்கு முன்பே புகழ் பெற்றுவிளங்கி யதைக் இக்கல்வெட்டு நமக்கு உணர்த்து கின்றது. மேலும், மூன்றாம் குலோத் துங்கன் காலத்திலேயே விடங்கருக்காக உரிய பழைய கோயில் புதுப்பித்து விரிவு படுத்தப்பட்டதாகவும் இக்கல்வெட்டு கூறுகிறது. எனவே இங்குள்ள கோயிலும் அழகிய விடங்கரும் மூன்றாம் குலோத் துங்கனுக்குப் பலநூறு ஆண்டுகட்கு முன்னதாகவே இருந்திருக்கக் கூடும், என்பது தெளிவாகின்றது. மேலும், இங்கு உள்ள தியாகராஜர் உலோகப் படிமமும் காலத்தால் மூந்தியதாகக் கருதப்படுகிறது. கழுத்துக்குக் கீழ்ப்புறம் மூடப்பட்டுள்ள தால் இதனுடைய காலத்தையும் கலை வரலாற்றையும் கூர்ந்து அறிந்து கொள் வது அரிதாக உள்ளது. எனவே, சமயத் தொன்மையும், வரலாற்றுப் புகழ்மிக்க சுந்தரவிடங்கரும், தியாகராஜரும் பண்டைய புகழைப் பறைசாற்றி நிற்கும் சமயச் சின்னங்களாக விளங்குகின்றனர்.

அருள்மிகு சத்குணநாதசுவாமி திருக்கோயில்,
இடும்பாவனம்-614 703.

திருத்துறைப்பூண்டி வட்டம் **தஞ்சை மாவட்டம்**

ஆலய வரலாற்றுக் குறிப்பு

திரு இடும்பாவனம் என்னும் திருத்தலம் பட்டுக்கோட்டையிலிருந்து வேதாரண்யம் செல்லும் நெடுஞ்சாலையில் தில்லை வளாகம் இராமர் கோயிலுக்கு கிழக்கே 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

சுவாமியின் பெயர்: அருள்மிகு சத்குணநாதசுவாமி.
அம்பாள் பெயர் : அருள்தரும் மங்களநாயகி.
தல விருட்சம் : வில்வமரம்.

இத்திருக்கோயில் மிகவும் பழமையானது தமிழ்ஞானசம்பந்தப் பெருமானால் பாடல் பெற்றது. தமிழ் நாட்டில் சோழ மண்டலத்தில் கடல் சூழ்ந்த கானகத்தில் அமைந்த ஆலயங்களில் திருமறைக்காடு, கடிகுளம் என்ற கற்பகநாதர் குளம், திருஇடும்பாவனம், தில்லைவளாகம் ஆகிய தலங்கள் மிகவும் சிறந்து விளங்குகின்றன. இவ்வாலயம் பிரம்மாவால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. கி.பி. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பூம்புகார் சோழன் காலத்தில் கட்டிடம் கட்டப்பெற்றுள்ளது.

தீர்த்தம்: திருக்குளம் பிரம்மதேவரால் தோற்றுவிக்கப்பெற்றது.
திருவிழா: வைகாசி விசாகப் பெருவிழா

திருவிடும்பாவனம் குருமாமுனிவருக்குக் காட்சி கொடுத்த தலம். இடும்பன், இடும்பி முக்தி பெற்ற ஊர். பிரம்மதேவன் பூஜைசெய்த புண்ணிய பூமி, பிர்மாவும், எமதர்மராசரும், இழந்த தங்கள் ஆற்றலை மீண்டும் பொலிவுறப் பெற்று மேன்மை பெற்ற அற்புதமான இடம் இடும்பாவனம் ஆகும். அருள்ஞான தவக் கொழுந்தாம் சம்பந்தப் பெருமான் இத்தலத்தை "இறைவர்க்கு இடம் இடும்பாவனம் இதுவே" என்றும் மாந்தர் "இடர் களையும் இடும்பாவனம் இதுவே, என்றும் குறியிட்டு குறிப்பிட்டுச்சிறப்பித்து உள்ளார்கள்.

இத்தலம் இன்றும் தென்னையும், வாழையும், நெல்லும், சூழ்ந்த இயற்கை எழிலும் வளமும் மிக்க பேரூராய்த் திகழ்கின்றது. அற்புதங்கள் மிகுந்த இடும்பாவனத்தில் புதிய திருமண மண்டபம் அமைத்தல், திருக்குளம் சீர் அமைத்தல். இராஜகோபுரம் மற்றும் விமானங்கள் புதுப்பித்தல் ஆகிய திருப்பணிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அன்பர்கள் செயற்கரிய இத்திருப் பணியில் பங்குபெற்று பெறற்கரிய பேரின்பப் பெருவாழ்வு பெற்று இன்புற வேண்டுகிறோம்.

மா. தருமலிங்கம்,
தக்கார்.

மா. பரமசிவன் பி.காம்.,
நிர்வாக அதிகாரி.

அருள்மிகு இரேணுகாதேவி அம்மன் திருக்கோயில் திருவாரூர்–விசயபுரம்

புலவர். சீனி. சண்முகம், எம். ஏ.,

''மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும்
பராபரமே.''
—தாயுமானவர்.

''மூர்த்தமாவது தியாகேசன் திருவுருவே;
ஏத்தரும் தலம் எழில் திருவாரூரே;
தீர்த்தம் என்பது சீர்மிகு கமலாலயமே.''

இம்மூன்றாலும் சிறப்புபெற்ற ''திருவாரூர் பிறந்தார்கள் அடியார்க்கும் அடியேன்'' என்று போற்றப்பெறும் புண்ணியத் தலமாம் திருவாரூர்த் தென்பால் விசயபுரத்தில் அமையப்பெற்றது அருள்மிகு இரேணுகா தேவி அம்மன் திருக்கோயில். இத்திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள அம்பாளை எல்லையம்மன் என்றும் வழங்குவர்.

பாண்டவர்கள், பாரதப் போரில் பலரையும் வதம் செய்த தோஷம் நீங்கப் பூவுலகிலுள்ள பல்வேறு புண்ணியத் தலங்களையும் தரிசித்து வந்தனர். வழியில், விசயபுரத்தில் இரத்த ஆறு ஓடுவதைக் கண்டு மார்க்கண்டேய மகரிஷியிடம் விளக்கம் கேட்டனர். 'இருபத்தொரு தலைமுறை அரச பரம்பரையினரைக் கொன்ற பரசுராமன் தன் கோடரியை இவ்வாற்றில் கழுவியதால் ஆறு இரத்தமானது' என்ற வரலாற்றை மகரிஷி கூறினார். இரேணுகாசுரன் என்பானுக்கு இருபத்தொரு மனைவியர் இருந்தும் மகப்பேறு இல்லாமையால் மனம் வருந்திய நிலையில் கௌதம முனிவரின் அறிவுரைக்கேற்ப மூகாம்பிகா பர்வதம் சென்று அரண்மனை அமைத்துக் கொண்டு பாலதுர்க்கையை எழுந்தருளச் செய்து நாளும் வழிபட்டுவருவானாயினன்

தேவியின் அருளால் மூத்த மனைவி போகவதி என்பாளுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கு 'இரேணுகா' என்ற திருப்பெயரிட்டுக் கொண்டாடி மகிழ்ந்தனர். சோதிடர்கள் குழந்தை இரேணுகாவின் எதிர்காலத்தைக் கணித்துக் கூறினர். பின்னாளில் இரேணுகாவின் வயிற்றில் ஆணவம்மிக்கஅரசர்களின்கொட்டத்தை அடக்கி அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட வீரவிசயன் தோன்றுவான் என்று கூறக்கேட்டதும் பெற்றவர் நீங்கலாக மற்ற மனைவியர் பொறாமைக்கு ஆளாயினர்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக குழந்தை ரேணுகா வளர்ந்து வரும் ஒரு நாளில் நச்சுப் பாம்பொன்று குழந்தையைத் தீண்ட வந்தபோது துண்டாடப்பட்டுக் குழந்தை அருகே கிடந்ததைத் தந்தை இரேணுகாசுரனும் தாய் போகவதியும் கண்டு அதிர்ச்சியுற்றனர். அமைச்சன் சந்திரகாந்தனுடன் அம்பாளை வழிபடச் சென்றபோது அம்பாளின் கையில் இருந்த கட்கத்தில் (கத்தி) இரத்தம் படிந்திருப்பதைக் கண்டு அம்பாள்தான் பாம்பைத் துண்டாடிக் குழந்தையைக் காப்பாற்றி யிருக்கிறாள் என்பதறிந்து ஆனந்திக்கின்றனர். பொறாமை வயப்பட்ட அரசனின் மற்ற மனைவியர் தீட்டிய சதித்திட்டத்தின் விளைவால் பாம்புப் பிடாரன் மூலம்

அனுப்பப்பட்ட பாம்புதான் துண்டாடப் பட்டது என்பதறிந்து இரேணுகாவைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருவாராயினர்.

இரேணுகா, ஐம்பத்தாறு தேசத்து அரச குமாரர்களுக்கும் மேலாக சாத்திரங்கள் பல கற்றுவிளங்கிய நிலையில் திருமண வயதை அடைந்தாள். அழகுத் தெய்வமாய் வளர்ந்த இரேணுகாவை மணக்க அரச குமாரர்கள் போட்டியிட்டார்கள். என்றாலும், துர்க்காதேவியின் அருளால் எழுநூறு சீடர்களைக் கொண்டுயர்ந்த ஜமதக்கினிமுனிவரை இரேணுகா மணந்து வாழ்ந்து வருவாளாயினள்.

நாள்தோறும் அதிகாலையில் ஆற்றில் நீராடி மண்ணெடுத்துக் குடம்செய்து நீர் எடுத்துவருவது இரேணுகா தேவியின் வழக்கம். ஒருநாள் எதிர்க்கரையில் நீர் விளையாட்டில் ஈடுபட்டிருந்த கந்தர்வர்களைக் காண நேர்ந்தது. அதுகாரணமாக மணற்குடம் செய்ய வாராமையால் ஆற்றங்கரையில் தயங்கிய நிலையில் இருந்த தேவியின் செயலை அறிந்த ஜமதக்கினிமுனிவர் முனிதலுற்றார். இரேணுகையின் தலையை வெட்டிவருமாறு கூறிய போது அவ்வாறு செய்ய முனிவரின் மக்கள் மூவருள் இருவர் மறுத்தபின் இளையவரான பரசுராமர் தந்தை சொல்லைத்தலைமேற்கொண்டு தாயின் தலையைக்கொய்து வருகிறார். தன்ஆணையை நிறைவேற்றிய மகன் பரசுராமனிடம் 'உனக்கு வேண்டுவதைக்கேள்' என்றார் ஜமதக்கினி முனிவர். தந்தையின் ஆற்றலை அறிந்திருந்த காரணத்தாலேயே தாயின் தலையை வீழ்த்திய பரசுராமர், இறந்த தன்தாயையும் தாயைக்காப்பற்ற முற்பட்டுத் தன்னால் வெட்டுண்ட மாதங்கியையும் உயிர்ப்பித்துத்தருமாறு வேண்டுகிறார். இரேணுகா தேவியையும் மாதங்கி அம்மனையும் முனிவர் தம்கமண்டலத்திலிருந்த புனிதநீரை மும்முறை தெளித்து உயிர்ப்பித்தருளினார். முனிவரும் தேவியும் முன்போலவே இனிது வாழ்ந்து வருவாராயினர்.

ஒருநாள் கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசன் வேட்டையாடிக் களைத்த நிலையில் தன்பரிவாரங்களுடன் முனிவரின் ஆசிரமத்தை அடைந்தான். வந்த அனைவருக்கும் தம்மிடம் இருந்த 'காமதேனு' என்ற பசுவின் துணை கொண்டு முனிவர் நல்விருந்து படைத்தார். காமதேனுவின் ஒப்பில்லாத் தன்மையை அறிந்த மன்னன் அதனைத் தனக்களிக்குமாறு ஜமதக்கினி முனிவரிடம் கேட்டான். முனிவர் மறுக்கவே, அரசன் ஆணவத்துடன் முனிவரை வெட்டிக்கொன்று காமதேனுவைக் கவர்ந்துசென்றனன்.

தன்கணவனின் நிலைகண்டு துயருற்ற மனைவி இரேணுகா தேவி, இருபத்தொருமுறை தன் மார்பினில் அடித்துகொண்டு அழுது புலம்பினள். அது கண்ட பரசுராமர், கார்த்த வீரியார்ச்சுனனின் அவைக்குச் சென்று தந்தையை கொன்றது அநியாயம் என்பதை நிருபணம் செய்து இருபத்தொரு தலைமுறை அரசபரம்பரையை அழிப்பதாகச் சபதம் ஏற்றுக் கார்த்த வீரியார்ச்சுனனைக் கொன்றார். உடன் கட்டை ஏற முயன்ற தாயையும் இறந்த தந்தையையும் காவடியில் இருபக்கத்திலும் தூக்கி வைத்துக் கொண்டு குருவாகிய தத்தாத்திரேயரிடம் சென்றார். தத்தாத்ரேயர் ஆசி கூறத் தாய் தந்தையர் மறைகின்றனர். கங்கையில் மூழ்கிவருமாறு பரசுராமருக்குக் குரு கட்டளை இடுகிறார். தான் சபதமேற்றதற்கு இணங்கப் பரசுராமர் அரசபரம்பரையை அழிக்கமுற்படுகிறார். மணக்கோலத்தில் இருப்பவரை பரசுராமர் கொல்வதில்லை என்பதறிந்த தசரதசக்கரவர்த்தி பரசுராமர் வரும்போதெல்லாம் ஒவ்வொரு பெண்ணைத்திருமணம்செய்து கொள்ளும் மணக்கோலத்தில் இருக்க வேண்டியிருந்ததால் அறுபதினாயிரம் மனைவியரோடு வாழ வேண்டியதாயிற்று என்பது வரலாறு

குரு கட்டளைக்கிணங்க கங்கையில் மூழ்கித் திரும்பி வந்தபோது வழியில் பூமி பிளந்து தன் தாய் இரேணுகா தேவியின் சிரசுமட்டும் வெளிவந்த நிலையில் இருப்பது கண்ட பரசுராமர் அவ்விடத்தி லேயே தாயின் தலையைப் பிரதிஷ்டை செய்து வழிபடலானார். அவ்வாறு பரசு ராமர் வழிபட்ட இடமே தற்போது திருவாரூர்–விசயபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு இரேணுகா தேவியம்மன் திருக்கோயிலாக விளங்கி வருகிறது என்பது தலவரலாறாகும்,

நன்செயும், புன்செயும் கொஞ்சி விளையாடப் பொன்னி நதிபாயும் கன்னித் தமிழ் மணக்கும் ஆரூர் விசயபுரத்தின் கடைவீதியின் மையப் பகுதியில் கம்பீரமாகத் தோற்ற மளிக்கும் இராஜகோபுரம் தான் அருள்மிகு இரேணுகா தேவியம்மன் திருக்கோயிலின் முகப்பாகும். உள்ளே நுழைந்தால் நம் கண்ணெதிரே நிற்பது கொடிக்கம்பம். அடுத்து நம்மை வரவேற்பவர் பலீபீட அகோர வீரபத்திரர். நிருத்த மண்டபத் தில் நுழையுமுன் இருபுறமும் அருள்மிகு மகாகணபதியும், பாலமுருகனும் இடவல மாக எழுந்தருளியுள்ளனர், எழில்பூத்த ஓவியங்கள், நிருத்த மண்டபத்தின் மேல் விதானத்தின் இருமருங்கும் இறைவியின் வரலாற்றைப் பக்தர்களுக்கு விளக்குவன வாக வரையப்பட்டுள்ளன. மகாமண்டப நுழை வாயிலின் வலப்பக்கம் ஜமதக்கினி முனிவர் காட்சி தருகிறார். மகாமண்டப பத்தினுள் வலப்பக்கம் அருள்மிகு இரேணுகா தேவியம்மன், வள்ளி தெய் வானையுடன் சுப்ரமணியர், 'திருமாலின் அவதாரம் என்பதைக் குறிக்கும் வகை யில் சங்கு சக்கரத்துடன் பரசுராமர், ஆகியோரின் ஐம்பொன்னாலான உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளனர். அர்த்த மண்டபத்தின் நுழைவாயிலையும், கரு வறையின் நுழைவாயிலையும் ஒளிவீசும் சரவிளக்குகள் அலங்கரிக்கின்றன. அர்த்த மண்டப வாயிலின் இருமருங்கும் துவாரபாலகர்களின் புடைப்புருவம் அமையப் பெற்ற பித்தளைத் தகடுகள் பதிக்கப்பட்டுள்ளன. இவ்வழகிய காட்சி யினூடே கருவறையினுள் பரசுராமரால் வழிபடப்பெற்ற அருள்மிகு இரேணுகா தேவியம்மனின் சிரசுமட்டுமே திருமஞ்சன வழிபாட்டுக்குரிய மூலவராக எழுந்தருளப் பெற்றுள்ளது. அதன் பின்புறம் அம்மன், நின்ற கோலத்தில் சுதைத் திருமேனியாகக் கோயில் கொண்டுள்ளார்.

அம்பாளை வழிபட்டு வெளிச் சுற்றுக்கு வரும்பொழுதுகீழ்ப்பிரகாரத்தின் இடப்பறமும் மடப்பள்ளியும், அதை யடுத்து தெற்குப் பிரகாரத்தில் நிர்வாக அலுவலகமும், மணிமண்டபமும், அமைந் துள்ளன. அடுத்து அருள்மிகு மாதங்கி அம்மனின் முழுமையான, மற்றும் வெட்டுண்டு ஒட்டிய தலையுடன் கூடிய திருமேனியும் எழுந்தருளப்பெற்றுள்ளது. சற்று மேற்கே சென்றால் எதிர்கொண்டு அழைப்பது அழகிய நந்தவனமும், புனிதக் கிணறுமாகும். நந்தவனத்தில் அண்மைக் காலமாக நாக தேவதையைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகின் றனர். மேல் பிரகாரத்தில் அருள்மிகு சக்தி விநாயகர், இராமர் திருவடி, சுப்ரமண்யசுவாமி சுற்றுக் கோயில்கள் உள்ளன. அவற்றை அடுத்து, கலியுகத் தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் ஹரிஹரசுதனாகிய அருள்மிகு ஐயப் பனுக்கு 1953ஆம் ஆண்டு பக்தர்களால் புதிய சந்நிதி அமைக்கப்பட்டுக் குட முழுக்கும் செய்விக்கப் பட்டுள்ளது. அடுத்துக் காணப்படுவது கிழக்கு நோக்கி அமைக்கபட்ட திருமண மண்டபம். வடக்குப் பிரகாரத்தின் சுற்றுச்சுவரில் ஐயப்பன் வரலாறு கூறும் அழகிய வண்ண ஓவியங்கள் கண்ணைக் கவர் வனவாக வரையப்பட்டுள்ளன. இப் பிரகாரத்தின் மையப் பகுதியில், வடலூர் வள்ளலாரின் திருவுருவப்படம் வைக்கப் பெற்று, பக்தர்களால் வழிபடப்

பெறுகிறது. கிழக்குப் பிரகாரத்தின் முன் பகுதிக்கு வரும்போது காட்சியளிப்பது வசந்தமண்டபமாகும்.

திருவாரூர்வாழ்மக்களுக்குக் காவல் தெய்வமாக அமைந்து அருள்பாலித்து வருபவள் அருள்மிகு இரேணுகாதேவி யம்மன். குருவிக்கரம்பை மற்றும் வாத் தலைக்காடு முதலிய பதின்மூன்றுகிராமங் களில் வாழும் மருளாளிகளின் தொல்லை நீக்கும் குலதெய்வம் இவ்வெல்லை யம்மன். தஞ்சை இராசராசனின் குல தெய்வமாகப் போற்றப்பட்டு வந்த இத் தெய்வத்தின் பெருமைகளைச் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான திருமுத்து சாமி தீட்சதர் புகழ்ந்து,

ரேணுகாதேவி ஸமரஹி தோஹம் அனிலபம்
வேணுவாத்ய தியத விஜய நகரஸ்திதே
மாணிக்ய பூஷண மதுர ரஸ ப:ஷினி
பாண ஸ்தருஸ அஷினி பரசுராம ஜனனி
கோணத்ரய வாஸிஸ குருகுஹ விஸ்வாஷினி
கன்னட பங்காளே காந்தர்வ பஞ்ஜனி

என்று பாடியுள்ளார்.

இத்திருக்கோயிலில் சைவ,வேத ஆகம முறைப்படி நாள்தோறும் காலை சந்தி, சாயரட்சை, அர்த்த சாமம் ஆகிய மூன்று கால வழிபாடுகளும் முறையாக நடை பெற்று வருகின்றன. அம்பாளுக்கு எடுக்கப்படும் விழாக்களில் ஆடிப்பூரப் பெருவிழா மிகச் சிறப்பு வாய்ப்புவாய்ந்தது. இவ்விழா, இத்திருக்கோயில் மூலம் உபய தாரர்கள் மற்றும் வணிகப் பெருமக்களின் ஒத்துழைப்பால் செம்மையாகக் கொண் டாடப்பட்டு வருகிறது. கார்த்திகைத் திங்கள் முதல்நாளில் இருந்து அருள்மிகு ஐயப்பசுவாமி சந்நிதியில் பக்தர்களால் மண்டல வழிபாடு செய்யப்பெற்று வரு கிறது.

இத்திருக்கோயிலுக்குச் சொந்தமாக நன்செய் நிலம் 0.25 ஏக்கரும், புன்செய் நிலம் 2·21ஏக்கரும் உள்ளது சிறியபெரிய கட்டடங்கள் கடைகளாக இருபத் தொன்பது உள்ளன. கடைவாடகை, மனைப்பகுதி, அர்ச்சனைசீட்டு,உண்டியல் இவைகளின் மூலம் ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ரூபாய் முப்பத்தையாயிரம் திருக்கோயிலின் வருமானமாகும்.

இத்திருக்கோயிலின் நிர்வாகம், தமிழக அரசு அறநிலையத்துறைத் தஞ்சாவூர் துணை ஆணையரின் O-A No. 142/56 உத்தரவின்படி செயல் அலுவலராலும், மற்றும் அறநிலையத் துறையினரால் அவ்வப்போது நியமனம் செய்யப்பெறும் அறங்காவல் குழுவினராலும் நடத்தப் பெற்று வருகிறது.

மேருமலையின் மேம்பட்ட தவத்தான்

திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்.

நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை
எல்லா உயிருந் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்.

சேக்கிழார்.

"உலகம் உய்யத் திருத்தொண்டத் தொகையை அருளிச்செய்த சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்க வந்த இந்தப் பிறப்பை வணங்குகின்றேன்" என்று தெய்வச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகின்றார். இதனால் சுந்தரரின் பெருமை எத்துணை விழுமியது என்று விளங்குகின்றது.

திருக்கயிலை மலையில் செம்மேனி எம்மான் எழுந்தருளியிருக்கின்றார். சிவமூர்த்தி பவள நிறம் படைத்தவர். சிவப்பு அழகாக இருக்கும். "செழும்பவளந் தானேக்குந் திருமேனி" என்கிறார் அப்பரடிகள்.

பரமேச்வரன் 'கண்ணாடியில் தன் நிழலைக் கண்டு "சுந்தரா! வருக" என்றார். சிவபெருமானுடைய நிழல், உருவம் பெற்று வந்தது. அவ்வாறு வந்த நிழல் தான் சுந்தரர்.

மாலயனாதி வானவர்கள் 4-ஆம் பிரகாரத்தில் இருப்பார்கள். சுந்தரர் இறைவனுடைய அருகில் திருநீற்றுக் கோயிலை ஏந்தி மிக அணுக்கராக இருந்து பணிபுரிவார். இவருடைய பெருமை யாராலும் அளக்க முடியாது. சங்கிலியாருடைய கனவில் சிவபெருமான் தோன்றி அவருக்குச் சுந்தரரை அறிமுகஞ் செய்கின்றார். சுந்தரரைப் பற்றிப் பரமேச்சுரர் பகர்ந்த வார்த்தை இது.

"மேருவரையின் மேம்பட்ட தவத்தான். மகாமேருபருவதத்தைவிடப் பெருந்தவஞ் செய்தவன்" என்று கூறுவரானால் சுந்தரருடைய அருமையும், பெருமையும் நம்மனோரால் நவிலற்பாலதோ?

தண்ணீரேயில்லாத ஏரியில் தண்ணீரையும், முதலையையும், அதன் வாயிலிருந்து மதலையையும் வரப் பாடிய அவருடைய பெருமை, சிந்தனைக்கும் எட்டாதது என உணர்க!

இந்த உலகிலே எத்தனையோ மகான்கள் — மதகுருமார்கள் — வாழ்ந்தார்கள். யாருக்காவது மேல் உலகில் இருந்து அழைப்பு வந்ததா? இல்லை; இல்லை.

பதினெட்டு வயதுடைய சுந்தரர் கயிலை செல்ல வேண்டுமெனச் சிந்தித்தவுடன் சிவபெருமான் ஆரோகணிக்கும் ஈராயிரந் தந்தங்களையுடைய அயிராவணம் என்ற யானையுடன், இந்திரன், பிரமதேவர், திருமால், தேவர்கள் யாவரும் வந்து அழைத்துச் சென்றார்கள் என்பதனால் சுந்தரரின் பெருமை நமக்கு நன்கு தெளிவாகப் புலப்படுகின்றது.

இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு
தேவரெல்லாம்
வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
மந்திரமாமுனிவர் இவன்யார் என்ன
எம்பெருமான்
நந்தமர் ஊரன்என்றான் நொடித்தான்மலை
உத்தமனே.

- சுந்தரர்

திருஆரூரரும் திருநாவல் ஆரூரரும்

புலவர் மணி வித்துவான், திரு. மு. இரத்தினதேசிகர்

திரு என்ற சொல் 'அழகு, இலக்குமி, வீடு' என்ற பல பொருள்களைத் தருவ தாகும். அலைந்து திரிந்து உள்ளே நுழைந்தார்க்கு, விடுதலை தருவது நாம் குடியிருக்கும் வீடு. இம்மண்ணுலக வாழ்வில் நுகர்ந்த பல இன்னல்களிலிருந்து உயிர்கள் விடுபட்டுச் சென்றடைவதே பேரின்ப வீடு. விடுதலை அளிப்பது வீடு. நால்வகைப் பேறுகள், 'அறம் பொருள், இன்பம், வீடு' என்பனவாம். இவற்றுள் முன்னைய மூன்றும், மனித முயற்சியால் அடையப் பெறுவன. வீடு அப்படிப்பட்டதன்று; எளிதில் எய்த முடியாத ஒன்று. சரியை, கிரியை, யோகம் என்ற நெறிகளில் நின்று ஞானத்தை அடைந்தால்தான் ஒரு உயிர் பேரின்ப வீட்டினை அடைய முடியும்.

"சென்றடையாத்திரு", என்று திரு ஞானசம்பந்த சுவாமிகள் கூறுவார்கள்.

"சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து,
அந்தமில் இன்பத்து அழிவில் வீடு."

என்று சிலம்பு கூறும். இத்தகைய திருவைத் தன்பால் கொண்டிருக்கும் ஊர் திருவாரூர் எனப்பெற்றது. திரு ஆர் ஊர்.

'கமலையில் பிறக்க முத்தி'' என்பது ஆன்றோர் கண்ட உண்மை. கமலை என்பது திருவாரூர். இந்த ஊரில் பிறந்தவர்கள் வாழ்க்கை முடிவில் வீட்டுலத்தையே அடைவர். இந்த ஊரில் பிறந்தவர்கள் நமனுலகு அடையார்; தேவருலகடையார்; நரகிலுஞ்சேரார். அனைவரும் வீட்டுலகத்தையே அடைவர்.

இத்தகையதோர் சிறந்த தலமாகிய திருவாரூரைத் தமது இடமாகக் கொண்டதால் திருவாரூர்ப் பெருமான் திருவாரூரர் என்று அழைக்கப் பெறுகின்றார். இந்த ஊரில் யமன் கண்ணீஸ்வரராக இருந்து உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றான்.

"ஆரூரன், எம்பெருமாற்கு ஆளாய்இனி அல்லேனென்ன லாமே!"

என்று தன்னை வெண்ணெய் நல்லூரில் தடுத்தாட்கொண்ட இறைவனை ஆரூரான் என்று கூறுகின்றார் சுந்தரர்.

திருநாவுக்கரசு சுவாமிகள் "திருவாரூரா!" என்று திருவாரூர் இறைவனை விளிக்கின்றார்.

மாணிக்கவாசக சுவாமிகளும் 'ஓங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே!' என்று அழைக்கின்றார்.

எனவே, ஆரூரர் என்று திருவாரூர்ப் பெருமான் பெரியோர்களால் அழைக்கப் பெறுகின்றமை நன்கு உணரப்படுகிறது.

இனி நாவலாரூரரைப் பற்றிச் சிந்திப்போம். நாவல் என்ற சொல் திருநாவலூர் என்ற சொல்லின் மரூஉமொழியாகும். திருநாவலூர் என்று நீண்டிருப்பதை நாவல் என்று சுருக்கி வழங்குவது மரூஉ மொழியாகும். இந்த ஊரில் நம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் மகவாய்த் தோன்றினார்கள். கயிலையில் கண்ணாடி முன் நின்று இறைவன் தன் திருமேனியின் அழகைப் பார்த்தபொழுது அக் கண்ணாடியிலிருந்து அந்த அழகிய வடிவம் வெளிப்பட்டது. அந்த வடிவத்தை இறைவன் 'சுந்தரா வா' என அழைத்தார் என்பது வழக்கு.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பல காரணப் பெயர்கள் உண்டு. அவற்றை எல்லாம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய பதிகங்களின் ஈற்றுப் பாடல்களாகிய தடைக்காப்புச் செய்யுள்களில் கூறியுள்ளார்.

அரூரான், தென்னாவலர்கோன், நாவலர்கோன், நம்பி ஆரூரன், நாவலூரன், ஆரூரான் தொண்டன், தொண்டர் தொண்டன், சடையனவன் சிறுவன், பத்தன், ஊரன் வனப்பகையப்பன், நாவலூர் மன்னன், சிங்கடியப்பன், திருவாரூரன், நன்சடையன் இசைஞானிசிறுவன், வன்றொண்டன், தொண்டன், திருநாவலூரன், திருநாவல்ஊரன், அடியான் அடித்தொண்டன், அல்லியந் தாமரைத்தார் ஆரூரன், அருள்வடிவினான், இசைஞானி காதலன், ஆரூரன் பேர் முடி வைத்த மன்னு புலவன், செஞ்சொல்காவலன், பித்தனொப்பான், அடித்தொண்டன், மடச்சிங்கடிதம் வைத்த புகழ்ச்சிறுவன், நாவலூர் நம்பி, ஆரூரான் அடிநாய், அணுக்க வன்றொண்டன், அருங்குலத் தருந்தமிழ் ஊரன், நாவின் மிசை அளாயன்னொடு தமிழ் ஞானசம்பந்தன், சிவன் அடியார்களுக்கு அடியான், அடித்தொண்டன், மல்லின்மல்குதிரன், தோள் ஊரன், நாவலர்கோமான், திருவாரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த ஆரூரன், தம்பிரான் ஆரூரன் என்பன பெயர்கள்.

இப்பெயர்கள் எல்லாம் சுந்தரருக்கு காரணப் பெயர்களாயமைந்துள்ளன. இவற்றுள் ஆரூரன் என்ற பெயர், ஆரூர் இறைவனையும் சுந்தரரையும் சுட்டுகின்றன. சுந்தரருக்கு ஆரூரர் என்ற பெயர் எப்படி வந்தது? திருவாரூர் இறைவன் பெயர் சுந்தரருக்கு எவ்வாறு வழங்கலாயிற்று? தடுத்தாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் சுவாமிகள், சுந்தரர் திருஅவதாரத்தைப் பற்றிக் கூறுமிடத்து, சுந்தரர் தவத்திற்சிறந்த சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகவாகப் பிறந்த பொழுது அம்மகவுக்கு வேண்டிய சடங்குகள் பலவற்றைச் செய்தார்கள். அச்சடங்கில் 'நம்பிஆரூரன்' என்றேநாமம் சாத்தினார்கள் என்று கூறுகின்றார்கள்.

''தம்பிரான் அருளினாலே தவத்தினில் மிக்கோர் போற்றும்
நம்பி ஆரூரன் என்றே நாமமும் சாத்தி மிக்க''

(தடுத்தாட்கொண்ட புராணம் செ. 4)

இனிச் சேக்கிழார் சுவாமிகள் ''திருவெண்ணெய் நல்லூரில் இறைவன், அவையோர் முன்னின்று பழையமன்றாடி'' யாய் வழக்காடுகின்றான். ''அவன் நினைத்தால் எதையும் செய்வான்; விச்சதின்றியே விளைவு செய்வான்.''

''ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய், என்ன முன்னே

மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூலஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன் என்றனன் மாயை வல்லான்!''

தடுத்தாட்கொண்ட புராணம் செய்யு: 56

என்று கூறி வழக்கைத் தொடர்கின்றான் என்று கூறுகின்றார்கள். அவையோரிடம் மூலஓலையை அவன் கொடுக்கக் கரணத்தான் அதனை அவையோர் முன் படிக்கத் தொடங்குகிறான். அந்த மாய ஓலையில் திருநாவலூரில் வாழும் ஆதி சைவனாகிய ஆரூரன் என்ற பெயரைத் தாங்கிய நானும், என் வழியில் வருகின்ற என் மரபினரும், பெரிய முனிவனாய் வெண்ணெய் நல்லூரில் வாழும்பித்தனுக்கு வழிவழியாக அடிமைத் தொண்டு செய்கிறோம். இந்த அடிமை ஓலையை, மனமும், செய்கையும் ஒத்து நிற்க எழுதிக் கொடுத்தேன். இப்படி எழுதிக் கொடுத்த இந்த ஓலை என்கையினால் எழுதப் பெற்றதே இப்படிக்கு ஆரூரான் என்று கரணத்தான் படித்தான்.

''அருமறை நூல் ஆதிசைவன் ஆரூரான் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபினோரும் வழித்தொண்டு செய்தற் கோலை
இருமையால் எழுதிநேர்ந்தேன் இதற்கிவை என்னெழுத்து''

(தடுத்தாட்கொண்ட புராணம், செய்யு. 59)

மேற்கண்ட இரு நிகழ்ச்சிகளால் ஆரூரன் என்ற பெயர் சுந்தரருக்கு எப்படி வந்தது என்பதை நாம் நன்கு அறிகின்றோம். பாட்டனுர் பெயரைப் பெயரனுக்கு இன்னும் இடுவது வழக்கமாய் உள்ளது.

சுந்தரர் தாயார் இசைஞானியார் பிறந்த ஊர் எது என்பதை நமக்கு வரலாறு கூறவில்லை. இவ்வம்மையார் திருவாரூரை அடுத்துள்ள கமலாபுரத்தில் பிறந்தவர். இவரைத் திருநாவலூர்ச் சடையனார் மணந்தார். இருவருக்கும் ஒரே பிள்ளையாய்ச் சுந்தரர் திருவவதாரம் செய்தார். சுந்தரர் திருவவதாரம் செய்தது திருவெண்ணெய் நல்லூரிலா? கமலாபுரத்திலா? என்று சிந்தித்தால் கமலாபுரத்தில்தான் என்ற முடிவிற்கு வரலாம். ஒருத்தி தன்முதல் மகப்பேற்றினைத் தான்பிறந்த வீட்டில்தான் வைத்துக் கொள்வாள். இது இன்றும் உள்ள வழக்கு. பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டிய பெற்றோரும், உற்றோரும் அக்குழந்தையின் பாட்டனார் பெயராகிய ஆரூரான் என்ற பெயரைச் சூட்டினார்கள். இது ஆரூர் இறைவன் பெயராயும் அமைந்தது.

இந்த வரலாறுகள் செவிவழிச் செய்திகளாக ஆரூரில் வழங்குகின்றன. ஆனால், இவை, பெரியபுராணத்தில் இடம் பெறவில்லை. சோழநாட்டில் முதலமைச்சராய் இருந்த சேக்கிழார் சுவாமிகளுக்கு இந்த வரலாறுகள் கிடைக்காததே இதற்குரிய காரணம் ஆகும். இந்த உண்மை, சித்தாந்தசரபம் திருமிகு. ஈசானசிவாச்சாரிய சுவாமிகள் ஆராய்ந்தறிந்ததாகும்.

ஆரூர் அமர்ந்த அரசே போற்றி

அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோவில், திருக்கருகாவூர் - 614 302

பாபநாசம் வட்டம் () தஞ்சாவூர் மாவட்டம்

இக்கோயிலின் புரான மகிமைச் சுருக்கம்: முன் காலத்தில் முல்லைவனம் என்ற இத்தலத்தில் கௌதமர், கார்க்கேயர் என்ற இரண்டு முனிவர்கள் தவம்செய்து வந்தனர். நித்திருவர் என்பவரும் அவருடைய மனைவி வேதிகை என்பவளும் ஆசிரமத்தில் தங்கி தவம் செய்துவந்த முனிவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தனர். நித்திருவரும், வேதிகையும் முல்லைவனநாதரையும், இறைவியையும் வணங்கினர். அதனால் அவர்களுக்கு மனமகிழ்ந்த மகப்பேறு உண்டாயிற்று.

வேதிகை கருவுற்றிருந்தபோது கணவர் இல்லாமல் தனித்திருந்த சமயம் கர்ப்பாவஸ்தையால் சுய நினைவிழந்து மயக்கமுற்றிருந்தபோது ஊர்த்துவபாதர் என்ற முனிவர் வந்து பிட்சைகேட்க மயக்கமுற்றிருந்தபடியால் வேதிகையால் முனிவருக்கு பிச்சையிட முடியவில்லை. அது அறியாத முனிவர் சாபமிட வேதிகையின் கரு கலைந்தது. வேதிகை அம்பாளிடம் பிரார்த்தனை செய்து முறைபிட அம்பாள் கர்ப்பரட்சகியாகத் தோன்றி கலைந்த கருவை ஒரு கடத்துள் ஆவாகனம்செய்து குழந்தை உருவாகும் நாள் வரையிலும் வைத்துக்காப்பாற்றி நைதுருவன் என்ற குழந்தையாகக் கொடுத்தாள். இறைவியின் அருள் மகிமையைக் கண்டுணர்ந்த வேதிகை ''இனி இத்தலத்தில் கர்ப்பரட்சகாம்பிகையாகவே எழுந்தருளி, உலகில் கருத்தரித்தவர்களையும், கருவையும் காப்பாற்ற வேண்டும்'' என்று பிரார்த்திக்க அம்பாள் அவ்வாறே அருள்பாலித்தாள். அது முதற்கொண்டு இத்தலத்திற்கு 'திருக்கருகாவூர்' என்றும் அம்பாளுக்கு 'ஸ்ரீ கர்ப்பகரட்சாம்பிகை' என்றும் பெயர் வழங்கி வரலாயிற்று. இங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு முல்லைவனநாதர் சுயம்பு லிங்கமாகும். லிங்கம் புற்றுமண்ணினால் ஆகியதாகும். எனவே சுவாமிக்குப் புனுகு கட்டம் மட்டுமே சாத்தப்படுகின்றது. லிங்கத்திருமேனியில் முல்லைக்கொடி படர்ந்திருந்தமைக்கான வடுவை இன்றும் காணலாம். தீராத நோயுடையவர்கள் சுவாமிக்கு புனுகுச் கட்டம் சாத்தி தம்நோய் நீங்கப்பெற்று வருகின்றார்கள்.

திருமணம் கூடிவரப் படிக்கு நெய் மெழுகுதல்: திருமணம் கூடிவராத கன்னியர்களும், பல ஆண்டுகளாகக் குழந்தையில்லாத பெண்களும் இக்கோயிலுக்கு நேரில் வந்து ஸ்ரீஅம்பாள் சன்னதியைச் சிறிது நெய்யால் மெழுகிக் கோலமிட்டு அர்ச்சனை செய்து வழிபடவேண்டும். இவ்வாறு செய்தால் விரைவில் திருமணம் நடைபெறும். குழந்தை இல்லாதவர்களுக்கு மகப்பேறு உண்டாகும். திருமணமாகிப் பல ஆண்டுள் ஆகியும் குழந்தை இல்லாதவர்களுக்கு ஸ்ரீ கர்ப்பரட்சகாம்பிகையின் திருப்பாதத்தில் வைத்து மந்திரித்துக் கொடுக்கப்படும் நெய்யைத் தம்பதியினர் 48 நாட்கள் தொடர்ந்து இரவில் சிறிதளவில் சாப்பிட்டு வர விரைவில் கருத்தரிக்கும்.

சுகப்பிரசவம் அடைய விளக்கெண்ணெய் மந்திரித்தல்: கர்ப்பம் அடைந்த பெண்கள் சுகப்பிரசவம் அடைவதற்காக இத்திருக்கோயிலில் ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை திருப்பாதத்தில் விளக்கெண்ணெய் வைத்து மந்திரித்துக் கொடுக்கப்படுகிறது. இது விசேஷமானதாகும். இந்த விளக்கெண்ணையை பிரசவ வலி ஏற்படும்போது வயிற்றில் தடவினால் எவ்விதமான கோளாறுகளோ, பேறுகால ஆபத்துகளோ, பின் விளைவுகளோ இல்லாமல் சுகப்பிரசவம் ஆகும். நேரில் வரவியலாத வெளியூர் வாசிகள் கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாக அதிகாரிக்கு எம் ஓ மூலம் பணம் அனுப்பி அச்சு ரசீதையும் அனுக்கிரகித்த மகாப் பிரசாதத்தையும் தபால் மூலம் பெற்றுப் பயனடையலாம்.

1. அஷ்டோத்திரம் அர்ச்சனை ரூ 5-00
2. சகஸ்ரநாமம் அர்ச்சனை ரூ. 25-00
3. அபிஷேகம் ரூ. 50-00
4. விளக்கெண்ணெய் மந்திரித்தல் ரூ 25 00
5. நெய் மந்திரித்தல் ரூ 25-00

T. S. கோபாலன்,
தக்கார்.

வி. நாகராஜன் பி.காம்.,
நிர்வாக அதிகாரி.

கமலை ஞானப்பிரகாசர்

டாக்டர். இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்.

தோற்றுவாய்:

திருக்கயிலாய பரம்பரை, மெய்கண்ட சந்நிதானத்தில், கி. பி. 15-ஆம் நூற்றாண்டின் இடைக்காலப் பகுதியில் வாழ்ந்திருந்த ஞானாசாரியர், கமலை ஞானப்பிரகாசர். கமலை என்பது திருவாரூரின் பழம்பெயர்களுள் ஒன்று. மூர்த்தி, தலம், தீர்த்தங்களால் சிறந்தொளிரும் திருவாரூர் சிவராஜதானியாக விளங்கிய பேரூர். இத்திருத்தலம் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் வளர்ச்சி வரலாற்றில், தில்லை, சீர்காழி நகரங்களை அடுத்துப் பெரும் பங்கு வகிக்கிறது திருவாரூரில் பிறந்து ஞானாசிரியராகத் திகழ்ந்து, அருளற்புதங்கள் நிறைந்த பெருவாழ்வு வாழ்ந்து, ஞான நூல்கள் பல அருளிச் செய்து அருள்நலம் நிரம்பிய மாணாக்கர் பலரைச் சைவ உலகிற்கு வழங்கிய பேரருளாளர் கமலை ஞானப்பிரகாசர். இதுநாள்வரை முறையாக ஆராய்ந்து வெளிப்படுத்தப்படாத இவ்வருளாளர் வரலாறு உரிய அகச்சான்றுகளோடு இக்கட்டுரையில் ஆராய்ந்து வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

ஆய்வுத்தரவுகள்:

கமலை ஞானப்பிரகாசரின் அருள் வரலாற்றை ஆராய்ந்து நிறுவ அகச்சான்றுகள் பல கிடைத்துள்ளன. 1) வெள்ளியம்பலவாணர் அருளிய 'முத்தி நிச்சயப் பேருரை', 2. தருமையாதீனம் சிதம்பரநாத முனிவர் இயற்றியதாகக் கூறப்பட்டு வரும் 'ஞானப் பிரகாச மான்மியம்', 3. ஆசிரியர் பெயர் தெரியாத 'குருஞான சம்பந்தர் சரித்திர சங்கிரகம்', 4. குருஞான சம்பந்தர் அருளிய 'பண்டாரக் கலித்துறை 'என்னும் 'ஞானப் பிரகாச மாலை', மற்றும் 'நவரத்தினமாலை', 5. குமரகுருபர சுவாமிகள் அருளிய 'பண்டார மும்மணிக் கோவை', 6. சோழ மண்டல சதகத்தின் இருபத்து நான்காவது பாடல். 7. சிக்கல், அருள்மிகு. வெண்ணெய்ப் பெருமான் திருக்கோயில் கல்வெட்டுக்களுள் ஒன்று, 8. கமலை ஞானப்பிரகாசர் அருளிய 'தந்திவனப் புராணப்' பாயிரப் பாடல்களுள் சில, 9. கி. பி. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்த வரலாற்று அறிஞர். திருவாரூர். திரு. சோமசுந்தர தேசிகரின் இலக்கிய வரலாறு, 10. திருச்சிற்றம்பலம், வரலாற்றுப் பேரறிஞர். திரு. மு. அருணாசலம் அவர்களின் 16 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முதல், இரண்டாம் பாகங்கள், 11. டாக்டர். தா.வே.வீராசாமி அவர்களின் 'ஏந்திவனப் புராண'ப் பதிப்பின் முன்னுரை 12. டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி அவர்களின் முனைவர் பட்டத்திற்கான 'தருமபுர ஆதீனமும் தமிழும்' என்ற ஆய்வேடு, 13. தருமையாதீன வெளியீடுகளில் காணப்பெறும் சில அரிய குறிப்புக்கள் ஆகியன கமலை ஞானப்பிரகாசர் அருள் வரலாற்றை உருவாக்கத் துணை செய்யவல்ல அகச்சான்றுகளாகத் திகழ்கின்றன.

குருவருள் வெளிப்பாடு :

இவற்றிற்கெல்லாம் மேலாகத் திருக்கயிலாய பரம்பரையில் கமலை ஞானப் பிரகாசரிடம் அருளுபதேசம் பெற்ற ஸ்ரீ குருஞான சம்பந்தர் தோற்றுவித்தருளிய திருக் கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருவருட் குறிப்பால் உய்த்துணர்ந்து வெளிப்படுத்தி அருளிய அரிய குறிப்புக்கள் இவ்வரலாற்றை உருவாக்குவதில் பெருந் துணையாய் அமைந்தன.

மெய்கண்ட சந்தானம் :

திருக்கயிலாய பரம்பரையில், புறச்சந்தானாசாரியருள் நான்காமவர் உமாபதி சிவாச்சாரியார். (1260-1325). இவரது மாணாக்கராகிய சீகாழி மச்சுச்செட்டியார், அருள் நமசிவாயர் (1300-1330) என்ற அபிடேகத் திருநாமத்துடன் சிறந்த ஆசாரியராக திகழ்ந்திருந்தார். அருள் நமசிவாயரின் மாணாக்கர் பலர். அவர்களுள் ஒருவர், காழி கங்கை மெய்கண்டார் (1325-1335). காழி கங்கை மெய்கண்டார் வழி வளர்ந்து வந்த திருக்கயிலாய பரம்பரையில் சில தலைமுறைகளுக்குப் பின் வந்தவரே கமலை ஞானப் பிரகாசர் (1525-1550).

மரபுவிளக்கம்:

உமாபதி சிவாசாரியருக்கும், கமலை ஞானப்பிரகாசருக்கும் இடைப்பட்ட திருக்கயிலாய மரபு விளக்கத்தை வெள்ளியம்பலவாணர் (1640-1660)தம் முத்திநிச்சயப் பேருரையில் நிரல்பட வழங்கியுள்ளார். அதில்காணப்படுமாறு:- உமாபதி சிவம், அருள்நமசிவாயர், காழி கங்கை மெய்கண்டார், காழி பழுதைகட்டிச்சிற்றம் பல நாடிகள் (1325-1350) காழி பழுதைகட்டிச் சம்பந்த முனிவர்(1350-1375) சிவபுரம் ஞானப்பிரகாசர் (1375-1425)சிவபுரம் தத்துவப்பிரகாசர் (1425-1475). திருவாரூர் செட்டித்தெரு பழுதை கட்டி ஞானப்பிரகாசர் (1475-1525), கமலை ஞானப்பிரகாசர் என இவ்வாறு இம்மரபு சுட்டப்பட்டுள்ளது, இம்மரபில், அருள்நமசிவாயரின் மற்றொரு மாணாக்கராகிய சித்தர் சிவப்பிரகாசர் வழியில் திருவாவடுதுறை ஆதீனமும், சிற்றம்பலநாடிகளின் மாணாக் கர்களுள் ஒருவாரன காஞ்சி ஞானப்பிரகாசரின் வழியில், காஞ்சி ஞானப்பிரகாசர் ஆதீனமும், கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கர்களுள் ஒருவராகிய குருஞானசம்பந்தர் வழியில் தருமபுர ஆதீனமும் கமலை ஞானப்பிரகாசரின் மற்றொரு மாணாக்கராகிய நிரம்ப அழகிய தேசிகர் வழியில் துழாவூர் ஆதீனமும் தோன்றின.

ஞானாசிரியர்:

'சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாசப் பண்டாரம்' என அதீன அருள் நூல்களுள் கமலை ஞானப் பிரகாசர் குறிக்கப் பெற்றுள்ளார். திருக்கயிலாய பரம்பரையில் வந்த இல்லற நெறியினராகிய திருவாரூர் செட்டித்தெரு பழுதைகட்டி ஞானப்பிரகாசரின் திருக்குமாரர் இவர், இளமையிலேயே கல்வி, கேள்விகளில் நிரம்பிய இவர், இல்லறம் மேற்கொண்டு, தம் தந்தையாரிடமே ஞானோபதேசம் பெற்று ஆசாரியராகத் திகழ்ந்தார். இவரது குடும்பப்பரம்பரைப் பெயர் சிதம்பரநாதன் என்றும், ஆரூர்த் தியாகேசன் வழங்கியருளிய நாமம் ஞானப்ரகாசன் என்றும், இவர் இயற் பெயர் செங்கமலப் பொற்பாதன் என்றும் ஆய்வாளர்கள் குறித்துள்ளனர். தேசிகர்,

பட்டாரகர், பண்டாரம் முதலிய அடைகளும் இவர்பெயரோடு சேர்ந்து வழங்கி வருகின்றன. கமலை ஞானப்பிரகாசர் இலக்கணம், இலக்கியம், சாத்திரம் முதலிய பல்துறை நூலாசிரியராகவும், ஞானாசிரியராகவும் திகழ்ந்தவர். இவர் மாணாக்கர் பலர். அவருள் சிலர் பெரும் புலவர்களாக விளங்கி, புராணம் மற்றும் சைவ சித்தாந்தச் சாத்திரச் சார்பு நூல்கள் பல யாத்துள்ளனர். கமலை ஞானாப்பிரகாசர் மாணாக்கர்களுள் குருஞான சம்பந்தர், நிரம்ப அழகிய தேசிகர், திருவொற்றியூர் ஞானாப்பிரகாசர், அளகைச் சம்பந்தர், ஞானக் கூத்தர் முதலியோர் குறிக்கத்தக்க பெருஞ்சிறப்போடு விளங்கியவர்கள்.

வாழ்வில் அற்புதங்கள்:

'ஞானப்பிரகாச மான்மியம்,' 'குருஞானசம்பந்தர் சரித்திர சங்கிரகம்' என்னும் நூல்கள் கமலைஞானப்பிரகாசர் வாழ்வில் நடந்த அருளற்புதங்கள் பலவற்றை விரித்துரைக்கின்றன. திருவாரூர்த் திருக்கோயிலில் தியாகராசப் பெருமானின் திருநடனம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, பல்லக்கின்தண்டு முறிந்ததாகவும், அக்காலை இவர்

'அண்டமுழுதும் ஆழ்ந்து போகாமல் என்றும்போல்
பண்டை நிலைநிறுத்தும் பாதனே—துண்டுபட்ட
அசபா நிருத்தம் அசையும் படிதண்(டு)
இசையும் வகையருள்வாய் இன்று.'

என்று பாடித் துதித்தவுடன், தண்டு உடனே கூடிற்று என்றும் கூறுவர். திருமறைக் காட்டில் தம்மை வந்து தொழுத அந்தணன் ஒருவனின் தொழுநோயை,

'வேதவன மறையோன் மெய்யுறு குட்டமதின்
வாதனனைய நீக்கி மகிழுறவே—ஏதமிலாச்
செய்ய சடையானே பெருமானே ஏவர்க்கும்
ஐயமிலா திப்போ தருள்'

என்றபாடல் அருளிச்செய்து நீக்கியருளினார் என்றும் வரலாற்று நூல்கள் குறிக்கின்றன. மற்றும் மதுரையில் ஐயப்பட்டர் என்பார்க்கு இழந்த கண்ணொளியை இவர் மீட்டு வழங்கியுள்ளார், காசியில் பாம்பு தீண்டி இறந்த சிறுவன் ஒருவனை உயிர்பெற்று எழச்செய்தார். மக்கள் வேண்டுகோளுக்கு இணங்கத் திருவருளால் வற்கடக் காலத்தில் மழைபெய்வித்தார். இவ்வாறான அருளற்புதச் செய்திகள் மேலும் பல இவர் வரலாற்றில் குறிக்கப்பெற்றுள்ளன.

தல புராணங்கள் :

கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய தலபுராண நூல்கள் இரண்டு. ஒன்று, கொள்ளிட நதியின் வடகரை விளங்கும் மூவர் தேவாரப் பாடல் பெற்ற திருமழபாடித் தலத்திற்குரியது. ''திருமழுவாடிப் புராணம்'' என்பது இதன் பெயர், வாழ்த்தும் பாயிரமும் அல்லாது எட்டு சருக்கங்களும், 571 திருவிருத்தங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் கி.பி. 1908 இல் சச்சிதானந்த சுவாமிகள் என்பவரால் முதன் முதலாகப் பதிப்பிக்கப் பெற்றது.

"மாசிலா வயிரத்தூணர் மழுவையம் புராணந் தன்னை
ஆசில்செந் தமிழி னாலே அணிபெற வகுத்த மைத்தான்
பேசரும் புகழ்சேர் ஞானப் பிர. ாசன் கமலை வாழும்
தேசிகன் அறிஞர் போற்றும் செங்கமலப் பொற்பாதன்."

என்ற இப்புராணப்பாடல் அகச்சான்றாக விளங்குகின்றது. கமலை ஞானப்பிரகாசர் இயற்றிய மற்றொரு தலபுராணம் திருவானைக்காவிற்கு உரியது. இதன் பெயர் 'தந்தி வனப் புராணம் என்பது. இதனுள் 14 சருக்கங்களும், 571 திருவிருத்தங்களும் இடம் பெற்றுள்ளன. சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் டாக்டர் திரு தா. வே. வீராசாமி அவர்கள் 1981 இல் இதனை விரிவான ஆராய்ச்சி முன்னுரை மற்றும் குறிப்புரையோடு பதிப்பித்துள்ளார்.

"கற்பார் மகிழத் தந்திவனக்
கடவுள் புராணக் கதைபொழிப்பின்
சொற்பான் மைபெறும் வடநூலைத்
துலங்கு தமிழால் தொடுத்தமைத்தான்
நாற்பார் புகழும் தென்கமலை
ஞானப் பிரகாசன் அந்தப்
பொற்பார் ஞான தேசிகனாம்
புகழ்செங் கமலப் பொற்பாதன்."

எனவரும் பாயிரத்தின் ஒன்பதாம் பாடல், புராண ஆசிரியர் பெயரை உறுதி செய்கிறது.

பிறவகை நூல்கள்:

இவ்விரு புராணங்கள் அல்லாது கமலை ஞானப்பிரகாசர் அருளியனவாகப் பல நூல்கள் தற்போது அறிய வந்துள்ளன. ஞானாசிரியராகத் திகழ்ந்தமைக்கு ஏற்ப சரியை முதலிய நான்கு நெறிகளுக்கும் பொருந்துவனவாக இவர் நூல்கள் அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது. சரியைக் குரியனவாக சைவ அநுட்டான அகவல், புட்பவிதி, பூமாலை என்பனவும், கிரியைக்குரியதாகச் 'சிவபூசை அகவல்' என்பதுவும், யோகத்துக்குரியதாகப் 'பிராசாத'மானால்' என்பதுவும், ஞானத்துக்குரியனவாகச் 'சிவானந்த போதம்', 'அத்துவித சாரம்', 'அத்துவாக்கட்டளை' என்பனவும் இவர் இயற்றியனவாகத் தெரிய வந்துள்ளன. இவையன்றி 'அண்ணாமலைக் கோவை', 'ஆயிரப்பாடல்', 'தியாகராசர் கழிநெடில்', 'சாதிநூல்', 'திருவாரூர்ப்பள்ளு' முதலிய தனி இலக்கிய வகைகளும் இவரால் இயற்றப் பெற்றுள்ளன. வடமொழியில் தியாகராசர் லீலை' என்ற நூல் ஒன்றும் இவரால் இயற்றப்பெற்றதாகத் தெரிகிறது.

உள்ளீடுகள்:

கமலை ஞானப்பிரகாசர் நூல்களுள் சைவானுட்டான அகவல் 118 அடிகளைக் கொண்டது. 'நியமம் புரிவோர் நீடு வாழ்வார்' என்ற நூற்பயனோடு நிறையும் இந் நூலுள் தீட்சை மற்றும் பூசை முறைகள் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. 'புட்பவிதி' வெண்பா ஒன்றும் 54 விருத்தங்களும் கொண்டது. பூசைக்குரிய மலர்களையும், ஆகாத மலர்களையும் கூறி மலரிடும் முறை மாவிளக்கிடும் முறைகளையும் விரிக்கிறது. 'அத்து வாக்கட்டளை', அத்துவாக்களைப் பற்றி விரிவாகக் கூறும் உரைநடை நூல். வினா

விடையில் 60 விருத்தப்பாக்களால் அமைந்த சாத்திர நூல், 'அத்துவித சாரம்' என்பது. 'தியாகராசர் கழிநெடில்' 10 பாடல்களால் இறைவனின் சின்னங்கள், அபிடேகம், திருவிழா, சிங்காதனம், மூவர்தேவாரச் சிறப்பு முதலியவற்றை விரித்துரைக்கிறது. வட நூல்களை ஒட்டி 104 பாடல்களில் அமைந்த 'சாதி நூல்' 81 சாதிகளைப் பற்றிக் கூறி, கலப்பு மணக்குழந்தைகளுக்குப் பெயரீடுகளையும் விரிக்கிறது. உலக நாதர் வேண்ட இந்நூல் பாடப்பட்டதாகக் குறிப்புள்ளது. 'திருவாரூர்ப்பள்ளு', காப்பு உட்பட 72 பாடல்களைக் கொண்டது. 'சிவபூசை அகவல்' 444 அடிகளைக் கொண்டுள்ளது. 12 செய்யுட்களாலான 'பிராசாத மாலை' பிராசாத யோக நெறியை மிகத் தெளிவாக விரிக்கிறது. ஏனைய நூல்கள் பற்றிய குறிப்புக்கள் கிடைத்தில.

காலம் :

கமலை ஞானப்பிரகாசரின் காலத்தை ஆய்ந்து தெளிய அகச்சான்றுகள் சில கிடைத்துள்ளன. ஒன்று சிக்கல் வெண்ணெய்ப் பெருமான் திருக்கோயிலில் வெட்டப் பட்டுள்ள விசயநகர வேந்தர் சதாசிவ மகாராயர் ஆட்சிக் காலக் கல்வெட்டு. இக் கல்வெட்டு தஞ்சைப் பகுதியை ஆண்டு வந்த முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் (1564-1572) வழங்கிய அறக்கொடையைக் குறிக்கிறது. இவர் சக ஆண்டு 1483 இல் கமலை ஞானப்பிரகாசருக்குப் பரதேசி முத்திரையும் கணக்கெழுத்தும் அடைத்துக் கொள்ளும் படி செய்வித்து அதற்காக அவருக்குச் சர்வமானியமும் வழங்கியமை இக்கல்வெட்டால் அறிய வருகின்றது. இக்கல்வெட்டின் காலம் கி. பி. 1561. அடுத்துத் திருமழுவாடிப் புராணம். அந்நூல் கமலை ஞானப்பிரகாசரால் பாடப்பெற்ற காலம் சகம் 1487 ஐ அடுத்த குரோதன ஆண்டு எனக் குறிக்கிறது. இது கி. பி. 1566 க்கு நேரானது. எனவே, இவற்றால் கமலை ஞானப்பிரகாசர் ஆசாரியராய்ச், சிறப்புற்றிருந்த காலம் கி. பி. 1525 க்கும் 1575க்கும் இடைப்பட்ட காலமாதல் வேண்டுமென்பது துணியப்படுகிறது.

குருபூசை :

கமலை ஞானப்பிரகாசர் முத்திப்பேறு எய்தியது ஓர் ஐப்பசித் திங்கள் தேய்பிறை சஷ்டி நாளில் என்பது தெரிய வருகிறது. இல்லற ஞானியாகிய இவர் திருமேனி திருவாரூர் ஓடம்போக்கி ஆற்றின் கரையில் உள்ள ஞானப்பிரகாசர் கொல்லையில் எரியூட்டப் பட்டது. அக்கொல்லையின் அருகில் ஒருமண்டபம் பழுதடைந்தநிலையில் இன்றும் காண படுகிறது. கமலை ஞானப்பிரகாசர் இல்லம் செட்டித்தெரு என வழங்கப்பெறும் திருவாரூர் குமர கோயில் தெருவில் இன்றும் சிறப்புற இலங்குகின்றது. ஆண்டுதோறும் கமலை ஞானப்பிரகாசரின் குருபூஜை விழாவைத் தருமை ஆதீனத்தினர் ஐப்பசித் தேய் பிறை சஷ்டியில் சிறப்புறக் கொண்டாடி வருகின்றனர். கமலை ஞானப்பிரகாசர் ஆசாரிய ராக வீற்றிருந்த திருமடம் ராஜன் கட்டளை என்ற பெயரில் திருவாரூர் தெற்கு வீதியில் இன்றும் உள்ளது. அதன் நிர்வாகம் இன்று வரை தருமை ஆதீனத்தின்கீழ் இயங்கி வருகின்றது.

நிறைவுரை :

கமலை ஞானப்பிரகாசரின் அருள் வரலாற்றில் இன்னும் ஆய்ந்து காணவேண்டிய பகுதிகள் பல உள்ளன. அத்தகு முயற்சிகளுக்கு இவ்வாய்வு ஓர் அடித்தளமாக அமைதல் கூடும்.

திருவாரூர் இலக்கியம்

மு. அருணாசலம், எம். ஏ., திருசிற்றம்பலம்.

திருவாரூர், சைவ சம்பிரதாயப்படி பஞ்சபூதத் தலங்களில் பிருதிவித் தலம் ஆகும். சுவாமி இங்கு புற்றிடங்கொண்டாராயிருப்பது அந்தத் தன்மையைக் காட்டுகிறது. அப்பர் சுவாமிகள், உலகமெல்லாம் படைக்கப்படுவதற்கு முன்னமே இந்தத் தலம் தோற்றம் கொண்டது என்ற கருத்தை ஒரு தாண்டகப் பாசுரத்தில் அழகாகத் தெரிவித்திருக்கிறார்.

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ
ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந்
தெரிந்த நாளோ
மான்மறிக்கை யேந்தியோர் மாதோர்பாகந்
திருவினாள் சேர்வதற்கு முன்னோபின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளோ.

இத்தனைச் சிறப்புடைய இந்தத்தலத்தில் நடந்த நாயன்மார் வரலாறுகளை, வழிபட்டுப் பேறுபெற்றோர் தம் செய்திகளை இங்கு சொல்லவில்லை. இங்கு எழுந்த இலக்கியங்களை மட்டுமே இப்போது பேசுகிறோம்.

இங்கு தேவார ஆசிரியர் மூவரும் பதிகம் பாடியிருக்கிறார்கள். சம்பந்தர் ஐந்து பதிகங்கள், குறிஞ்சி, யாழக் குறிஞ்சி, காந்தாரம், நட்டராகம், கௌசிகம் ஆகிய பண்கள். அப்பர் சுவாமிகள் காந்தாரம் 2, சீகாமரம் 2, குறிஞ்சி 1, பிறகு திருநேரிசை 2, திருவிருத்தம் 2, திருக்குறுந்தொகை 2, திருத்தாண்டகம் 10 ஆக 21 பதிகங்கள், சுந்தரமூர்த்தி, இந்தளம், கொள்ளி, கொள்ளி கௌவானம், பழம் பஞ்சுரம், தக்கேசி, காந்தாரம், புறநீர்மை, செந்துருத்தி ஆக 34 பதிகங்கள். இவற்றுள் சுந்தரமூர்த்தி பாடிய செந்துருத்திப் பண் சம்பந்தர் பாடாத பண் அன்றியும், திருத்தொண்டத் தொகை இத்தலத்தில் பாடப்பெற்றது.

இதுவன்றி இந்த ஊரின்கண் திருவாரூர் அறநெறி என்ற தலமும். (அப்பர் 2 பண்) திருவாரூர் பறவையுண் மண்டலி என்ற சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய தலமும் அடங்கியுள்ளன. மாணிக்கவாசகர் தாம் பாடிய திருவாசகத்தில் 'போற்றித்திருவகவலில்' ''ஆரூர் அமர்ந்த அரசே போற்றி'' என்று பாடியதுடன் மீண்டும் 'திருப்புலம்பல்' என்ற தலைப்பில் மூன்று பாடல் பாடினார் என்பது வரலாறு.

சேரமான் பெருமாள் இத்தலத்தில் 'திருவாரூர் மும்மணிக் கோவை' என்ற பிரபந்தம் 30 பாடலால் பாடினார். கமலை என்னும் திருவாரூரில் வாழ்ந்த தமது ஆசாரியராகிய கமலை ஞானப்பிரகாசர் மீது தருமை ஆதீன ஸ்தாபகரான குரு ஞான சம்பந்தர் 'ஞானப்பிரகாசர் மாலை' என்ற ஒரு நூல் பாடினார். மனுநீதிகண்ட சோழன் வரலாற்றைப் பாடும் முகமாகச் சேக்கிழார் திருநகரச் சிறப்பு என்ற தலைப்பில் 50 பாடல்களால் பாடியிருக்கிறார். இப்பகுதி திருவாரூர்ச்சிறப்பென்று சொல்லப் பெறும். இதுவுமன்றி, திருவாரூர்ப் பிறந்தார் என்ற சருக்கத்திலும், மற்றும் திருவாரூரில் தொண்டுபுரிந்து முக்தி பெற்ற நாயன்மார் வரலாறுகளிலும் சுந்தரமூர்த்தி நாயனார், பரவை நாச்சியார் வரலாறுகளிலும் எண்ணற்ற

இடங்களில் சேக்கிழார் திருவாரூரைப் பாடியிருக்கிறார்.

திருவாரூரில் முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனிடமிருந்து பெற்று வந்த வீதி விடங்கரைப் பிரதிட்டை செய்து வழி பட்டார். மற்றைய ஆறு விடங்கரும் அயலிலுள்ள ஆறு தலங்களில் பிரதிட்டை செய்யப்பட்டனர். இதைக் கூறும் முகமாகக் கச்சியப்பசிவாசாரியர் தம் கந்த புராணத்துத் தட்ச காண்டத்தில் கந்த விரதப்படலம் என்ற பகுதியில் 127 பாடல் களால் திருவாரூரின் பெருமையைக் கூறுகிறார்.

அளகைச் சம்பந்த முனிவர் என்பவர், திருவாரூர்ப் புராணம் 2929 பாடல்களால் பாடியிருக்கிறார். சிதம்பரத்தில் சைவ சமயத்தில் பிற்காலத்தில் ஆசாரியராய் விளங்கிய மறை ஞானசம்பந்தர் என்பவர் 'கமலாலயச்சிறப்பு'(கமலாலயப்புராணம்) என்ற பெயரில் 1066 பாடல்களால் ஓர் அழகான புராணம் பாடியிருக்கிறார். இது ஆதிகமலாலய மகாத்மியம்' என்றும் பெயர் பெறும்.

தமிழ் இலக்கியவானில் ஒளி மிக்க நட்சத்திரமாகப் பிரகாசிக்கின்ற குமர குருபர சுவாமிகள் மதுரையிலிருந்து திருவாரூர் வந்து, திருவாரூர் நான்மணி மாலை என்ற மிகச் சிறந்த ஒரு நூல் 40 பாடல்களால் பாடியிருக்கிறார்.

திருவாரூரில் வாழ்ந்த வைத்தியநாத தேசிகர் இலக்கண விளக்கம் பாடிப் புகழ் பெற்றவர். அவர் திருவாரூர்ப்பன்மணி மாலை என்று 100 பாடல் கொண்ட ஓர் அழகிய துதி நூல் பாடியிருக்கிறார். அந்தகக்கவியாக யிருந்த வீரராகவ முதலியார் இத்தலத்துக்கு 'திருவாரூர் உலா' என்ற 528 கண்ணி கொண்ட சிறப் புடைய பிரபந்தம் பாடியிருக்கிறார். சைவ என்ற அடைபெற்ற எல்லப்ப நாவலர் திருவாரூர்க் கோவை பாடினார். தருமபுரத்தில் 10 ஆவது சந்நிதானமாக இருந்த சிவஞான தேசிகர் திருவாரூருக்கு அஜபா நடனம் பாடினார்.

அருணகிரிநாதர், முக்கியமான தலங் களுக்கெல்லாம் திருப்புகழ் பாடியிருக்கி றார். திருவாரூரிலும் அநேக திருப்புகழ் பாடியிருக்கிறார். இராமநாடகம் பாடிய அருணாசலக் கவிராயர் 'தியாகேசர் வண்ணம்'பாடியிருக்கிறார். வைத்தியநாத தேசிகருடைய புதல்வரான சதாசிவ தேசிகர் 'திருவாரூர் இரட்டைமணிமாலை' பாடினார். தியாகையர் முதலியோருக்கு காலத்தால் 150 ஆண்டு முற்பட்டவரான பாபநாச முதலியார்'திருவாரூர் குறவஞ்சி' பாடினார். கீழ்வேளூர் குருசாமி தேசிகர் என்பவர் திருவாரூர் 'ஒருதுறைக்கோவை' பாடினார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை 'தியாகராஜ லீலை' என்ற புராணம் பாடினார். திருவாரூரில் இருந்த பெரும் புலவர்கள் பாடிய நூல்கள் எண்ணற்றன. 'சந்தான தேசிகர் புராணம்' சாமிநாத தேசிகர் பாடினார். சிதம்பர தேசிகர் பாடியது, 'கமலை பராசக்தி மாலை'. 'தியாகேசர் குறவஞ்சி' என்ற ஒருநூல், பெயர் தெரியாத ஓர் ஆசிரியரால் எழுதப் பட்டது. இது மிகவும் சமீப காலம் வரை திருவாரூரில் தியாகேசர் சந்நிதியில் திருவாரூர்க் கமலம் என்ற பரதநாட்டியக் கணிகையால் மிகவும் சிறப்பாக நடிக்கப் பட்டு வந்திருக்கிறது.

இந்தத்தலம் சம்பந்தமாக எழுதப் பட்ட பல்வகை பிரபந்தங்கள் அநேகம். தியாகராஜ செட்டியார் சில பிரபந்தங்கள் எழுதியிருக்கிறார். 'தியாகராஜர் கழி நெடில்' என்பன பழமையான பிரபந் தங்கள் பின்னும் குறிப்பிடத்தக்கவை, சுந்தரர் வேடுபறி தேர் ஊர்ந்த சோழ புராணம் கமலாம்பிகை பிள்ளைத் தமிழ், கமலாலய அம்மன் பிள்ளைத் தமிழ், என்பனவாம். தியாகேசருடைய நடனம், அஜபா நடனம் என்று பெயர் பெறும்.

அதாவது மந்திரத்தை வாயினால் ஜபிக்காமலே இருந்து ஆடுகின்ற நடனம்.

வடமொழி நூல்களாகவும், புராணங்களாகவும், கீர்த்தனங்களாகவும் வடமொழியில் இத்தலம் சம்பந்தமாக நூல்கள் 20க்கு மேல் உள்ளன. கீர்த்தனங்கள் என்று சொல்லும் சியாமா சாஸ்திரிகள் (1762-1827), தியாகையர் (1767-1847), முத்துசாமி திட்சிதர் (1787-1847) ஆகிய மூவருமே திருவாரூரில் பிறந்தவர்கள் என்பது சிறப்பாய்க் குறிப்பிடத்தக்கது. பின்னும், தமிழில் இன்று ஆட்சியிலுள்ள சிறப்புப் பத்ததியான 'அகோர சிவாசாரியார் பத்ததிக்கு', இந்த ஊரில் புகழாவர்ணர் திருவீதி என்ற காரைக்காட்டுத் தெருவில் வாழ்ந்தவரான 'நிர்மலமணி தேசிகர்' என்பவர் 17 ஆம் நூற்றாண்டில் சிறப்பான வடமொழி வியாக்கியானம் எழுதினார், இந்தத் தேசிகரிடம் தருமபுரத்து வெள்ளியம்பலவாணத் தம்பிரான் கல்வி பயின்றார்.

இவ்வாறு தமிழிலும் இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறையிலும் வடமொழியிலும் இந்தத் தலம் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள இலக்கியங்கள் மிகப் பலவாகும்.

திருவாரூர்–திருஞானசம்பந்தர் தேவாரம்

டாக்டர். கோமதி சூரியமூர்த்தி,
சைவசித்தாந்தத்துறை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

முன்னுரை :

பஞ்சபூதத் தலங்களுள் திருவாரூர் பிருதிவித்தலம். தியாகேசர் எழுந்தருளியுள்ள சத்தவிடங்கத் தலங்களுள் முதன்மையானது இங்கு இலக்குமியும் தேவர்களும் பூசித்துப் பேறு பெற்றனர். தீர்த்தக்குளம், கமலாலயம் என்றும், கோயில், பூங்கோயில் என்றும் பெயர் பெறும். சுவாமி— வன்மீகநாதர் (புற்றிடங் கொண்டார்)—திருமூலட்டான நாதர். தேவியார்—அல்லியம் பூங்கோதையம்மை—கமலாம்பாள். இங்குள்ள தேவாசிரிய மண்டபம் அடியார் கூட்டம் நிறைந்தது. திருவாரூர் அடியார் கூட்டத்தின் பெருமை பெற்றது. 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்'' என்று சுந்தரர் போற்றுவார். திருவாரூர்ப் பிறக்க முக்தி என்பர். இத்தலத்திற்கு 34 தேவாரப் பதிகங்கள் உண்டு அவற்றுள் திருஞானசம்பந்தர் அருளிச் செய்தவை ஐந்து பதிகங்களாகும். திருநாவுக்கரசர் அருளிச் செய்தவை இருபத்தொரு பதிகங்களாகும். சுந்தரர் அருளிச் செய்தவை எட்டுப் பதிகங்களாகும். திருவாசகத்திலும், திருக்கோவையாரிலும் இத் தலத்தின் பெருமைகள் பல இடங்களில் கூறப் பெற்றுள்ளன. ஏனைய திருமுறைகளிலும் இத்தலத்தைப் பற்றிய பாடல்கள் உண்டு திருஞானசம்பந்தர் தேவாரத்திலிருந்து அறிய வரும் திருவாரூர் பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் பாடிய திருவாரூர்ப் பதிகங்கள் :

திருஞானசம்பந்தர் இத்தலத்தின்மீது பாடிய பதிகங்கள் ஐந்து. அவற்றுள் இரண்டு பதிகங்கள் முதல் திருமுறையிலும் (*1:91,1:1*(5), இரண்டு பதிகங்கள் இரண்டாம் திருமுறையிலும் (2:215, 2:237) ஒரு பதிகம் மூன்றாம் திருமுறையிலும் (3 : 303) அமைந் துள்ளன. இவை தவிர மூன்றாம் திருமுறையிலுள்ள ஒரு பதிகம் (3:367) திரு ஆனைக்கா, திருமயேந்திரம், திருக்கயிலை, திருவாரூர் என்ற நான்கு தலத்தும் மேவிய வேதப் பொருளானாரைத் திருவானைக்காவின்கண் புகழ்ந்து பாடியதாகும். மேலும், வேறு தலத்துப் பதிகங்கள் நான்கில் திருவாரூர் பற்றிய குறிப்பமைந்த பாடல்கள் உள்ளன; அவை *1:11:5, 1.52:4, 1:84:2, 2:175:1*.

பதிகங்கள் பாடிய வரலாறு:

திருஞானசம்பந்தர் செய்த தலயாத்திரைகள் மொத்தம் ஆறாகும். அவற்றுள் ஐந்தாவது தலயாத்திரையின் பொழுது பல தலங்களைத் தரிசித்துத் திருப்புகலூரிள்ள முருகனார் மடத்தில் தங்கியிருந்தார். அப்பொழுது திருநாவுக்கரசுப் பெருமான், திருவாரூரைச் சேவித்துவிட்டு அங்கு வருகின்றார். திருவாரூரில் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெறுவது வழக்கம். திருநாவுக்கரசரும் அவ்வூரின் திருவாதிரைவிழாவின் சிறப்பைத் திருஞானசம்பந்தரிடம் கூறுகின்றார். அதுகேட்ட திருஞானசம்பந்தர்

திருநாவுக்கரசரிடம் ''தாங்கள் திருப்புகலூரிலேயே எழுந்தருளியிருங்கள். நான் ஆரூரமர்ந்த மாணிக்கத்தை,வீதிவிடங்கரைப் போற்றி வருவேன்'என்றுகூறி அப்படியே திருவாரூரைத் தரிசிக்கப் புறப்பட்டார்.

வழியில் விற்குடி, வீரட்டானத் தலங்களைப் போற்றி, பின் திருவாரூர் செல்லும் வழியில்''பாடலனான்மறையான்''என்றுதொடங்கும் பதிகம்பாடி ஆரூர் அடைவோமே என்று கூறித் திருவாரூர்ப் புறத்தணைந்தார். ஆங்குத் திருவாரூர்நகர் ஒரு பொன்னுலகம் போலத் தோன்ற, ''பருக்கையானை'' என்று தொடங்கும் பதிகம் அருளித் திருநகரின் எல்லை சேர்ந்தார். காதல் வெள்ளம் கரையின்றிப் பெருகச் சிவிகையினின்றும் இறங்கிக் கைகளில் நிறைந்த மலர் தூவித்தொழுது, ''சித்தந் தெளிவீர்காள்'' என்று தொடங்கும் திருவிருக்குக் குறள் பாடிப் பணிந்தார். ஆரூர் மக்கள் இவர் வரவறிந்து தெருவெல்லாம் தோரணமும், மலர் மாலைகளும் கட்டி, சுண்ணப்பொடியும், பொரியும், மலர்களும் தூவி, மங்கல வாத்தியம் முழங்க நகரின் புறத்தணைந்து திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு தொழுதனர். திருஞானசம்பந்தர் தாமும் அவர்களை வணங்கி, 'அந்த மாயுலகாதியுமாயினான்'' என்று தொடங்கும் பதிகம் பாடினார். பின்,திருக்கோயிலினை அடைந்து திருத்தேவாசிரியனைத் தொழுது, திருமாளிகை வலங்கொண்டு உட்புகுந்து, இறைவன் திருமுன்பு பெருங்காதலினால் நிலமுறப் பலமுறை பணிந்து வீழ்ந்தெழுந்து செஞ்சொல் திருப்பதிகம் பாடித் திளைத்தார். (நாம் செய்த தவக் குறைவால் அப்பதிகம் இப்போது நமக்குக் கிடைக்கவில்லை.)

திருஞானசம்பந்தர், புற்றிடங்கொண்ட புண்ணியர் பூங்கோயிலையும், அருகில் உள்ள அரனெறி என்னும் திருக்கோயிலையும் நாளும் வணங்கி வாழ்ந்தார் சிலநாட்கள் கழிய மற்றைப் பதிகளை வணங்க எண்ணி, திருக்கோளிலி, திருவலிவலம் முதலிய திருப்பதிகளைச் சென்று கும்பிட்டுத் திரும்பவும் ஆரூர் சேர்ந்தார். மற்றும் பல நாட்கள் கழிய, திருஞானசம்பந்தப் பெருமான் திருப்புகலூரில் எழுந்தருளியிருக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளைக் காண விரும்பினார்கள். ஆரூர்ப்புறத்தே சென்றார். சென்றதும் ஆரூரையே நோக்கி நின்றார். திருப்புகலூர்,'வருக' என்று அழைக்கின்றது, திருவாரூர், செல்ல வொட்டாது தடுக்கின்றது. உள்ளம் திருவாரூரையே விழைந்தது. பிரிவு வருத்தியது. உள்ளந் தெளிய, ''புவனமாய்ச் சோடையாய்'' என்று தொடங்கும் பதிகம் பாடி, 'மையல் கொண்டு அஞ்சாதே' திருவாரூரை மீண்டும் போந்து தொழலாம், என்று நெஞ்சிற்கு அறிவுறுத்தித் திருவாரூரினின்றும் புறப்பட்டார்.

	பதிகம் பாடிய சூழல்	பதிகத் தொடக்கம்	பதிக எண்
1	திருவாரூர் செல்லும் வழியில் அருளியது.	''பாடலனான் மறையான்''	1:105
2	நகர் கண்டபோது திருநகரின் ஒளி கண்டு பாடியது.	''பருக்கையானை''	2:237
3	எல்லையில் சிவிகையினின்றும் இறங்கி மலர் தூவித் திருநகரினைப் போற்றிப் பணிந்தது.	''சித்தந் தெளிவீர்காள்''	1:91
4	நகர்ப் புறத்து அடியார் கூட்டத்தை வணங்கிப் பாடியது.	''அந்தமா யுலகாதி''	3:303
5	திருவாரூரினின்றும் புறப்படும் போது அருளியது.	'பவனமாய்ச் சோடையாய்''	2:215

பதிகங்களின் பொதுக்குறிப்பு:

''பாடலனான் மறையான்'' என்று தொடங்கும் பதிகம் ஆரூர் இறைவனை வழி பாடு செய்ய வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. இப்பதிகத்தின் முதற்பாடலின் இறுதி அடி ''ஆதிரையின் ஆரூர் அமர்ந்தானே'' என்று முடிகின்றது. திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரிடம் திருவாரூரின் திருவாதிரைவிழாச் சிறப்புப் பற்றித் தெரிவித்தது அவர் உள்ளத்தில் நிற்றலால், தாம் திருவாரூர் மீது பாடிய முதல் பதிக முதல் பாடலி லேயே இறைவனை ஆதிரையான் எனக் குறிப்பிடுகின்றார். இப்பதிகம் திருவாரூர்ப் பெருமானை வழிபட விரும்பிய திருஞானசம்பந்தரின் கனிந்த காதலை உணர்த்தும்.

''பருக்கையானை'' என்று தொடங்கும் பதிகம் பேரொளிமயமாகக் காட்சி யளித்த திருவாரூர் கண்டு பாடியதாதலால் அவ்வூர் வளம்பற்றியும் இறைவனின் வருணனை பற்றியும் தெரிவிக்கின்றது.

''சித்தந் தெளிவீர்காள்'' என்று தொடங்கும் பதிகம் திருவிருக்குக்குறளால் ஆனது. திருவிருக்குக்குறள் என்பது வீடு காதலிப்பவரால், விரும்பப் பெறும் இரண்டு சீர்களால் ஆக்கப்பெற்ற, இருக்கு மந்திரம் போன்ற பாடல் ஆகும். மந்திரம் சொற் சுருக்கமுடையது; எண்ணுவார் எண்ணத்தை ஈடேற்ற வல்லது அதுபோல் இப்பதிகம் அமைந்துள்ளது. முதற்பாட்டு முக்தி எய்தலாம் என்பதைத் தெரிவித்து அதற்கு உபாயம் உணர்த்துகின்றது. இப்பதிகத்தில் ஐந்து பாடல்கள், ஆரூரை மலர்தூவ அடையும் பயனையும், இரண்டு பாடல்கள், வாழ்த்துவார் எய்தும் பயனையும், இறுதிப் பாடல், பாடற்பயனையும் உணர்த்துகின்றன. சுருங்கக்கூறின் இப்பதிகம் திருவாரூர் தல வழிபாட்டின் சிறப்பை உணர்த்துகிறதெனலாம்.

''அந்த மாயுல காதியு மாயினான்'' என்று தொடங்கும் பதிகம் அகப்பொருட் பதிகம் என்பர். அகப்பொருட்டுறையில் தலைவி தலைவனிடம் அவன் அன்பைத் தெரிவிக்கும் முறையில் மாலை தர வேண்டுவாள். இப்பதிகத்தில் வரும் ''அலங்கல் தந்தெனை அஞ்சலெனும் கொலோ?'' என்னும் தொடர்கொண்டு இதனை அகப் பொருட்பதிகமாகக் கருதுவர். தலைவி தலைவனது பெருமையையும், தன் சிறுமையினை யும் எண்ணி ''என்று கொளுங்கொலோ?' என உரைப்பதாகக் கூறுவர். ஆனால் சித்தாந்தக் கண்கொண்டு நோக்கும்பொழுது உயிர் தன் உண்மைநிலையை உணர்ந்து, வினையினால் கருவழிப்பட்டுப் பிறந்திறந்து உழலும் தன்னை, இறைவன் பாசநீக்கம் செய்து தன்னோடு இரண்டறக் கலக்கும் வண்ணம், 'எப்பொழுது என்று கொளுங் கொலோ?' என ஏங்குவதாகக் கருதலாம்.

''பவனமாய்ச் சோடையாய்'' என்று தொடங்கும் பதிகம், பாடல் இறுதி தோறும் ''ஆரூர்த் தொழுது உய்யலாம்; மையல் கொண்டஞ்சல் நெஞ்சே'' என்று முடிவதால் நெஞ்சிற்கு உபதேசிக்கும் பதிகம் என்பர். யாக்கை நிலையாமையையும், பிறவித் துன்பத்தையும் நெஞ்சிற்கு அறிவுறுத்தி, நிலைத்த பொருளான திருவாரூர்ப் பெருமானை நாடும்படி செய்தலே இப்பதிகத்தின் உட்கோள் எனலாம்.

திருவாரூர் இறைவனின் வருணனைகள்:

தோத்திரத் தமிழ்ப்பாடல்களையும் நான்மறைகளையும் உடையவன்; எஞ் ஞான்றும் எவ்வகையினும் ஒப்பில்லையாம்படி உயர்ந்த திருமேனி அழகினை யுடையவன்; திங்களைச் சூடியவன்; மூவிலைச்சூலம் ஏந்தியவன் (1: 105: 1).

அருளே திருமேனியாக உடையவன் ''அருளன் ஆரூராதி'' (3: 367: 4).

எவர்க்கும் மேம்பட்டவன் ' அதியன் ஆரூராதி'' (3: 367: 5).

''மதிபொதி சடையனார் மணியணி கண்டத் தெண்டோள் அடிகளார்'' (2. 215: 10)

தருக்கி வந்த கங்கையை அடக்கிச் சடையில் கரந்தவர்(1: 105: 3,6); அறவடிவான வெள்ளிய இடபமுடையவன் (1: 105: 3).

அடியார்கள் வினை வெந்து போதற்குக் காரணமாகிய கறையற்ற மழுவையும், வாளையும் ஏந்தியவன்; ஐம்பொறிகளையும் தத்தம் புலன்களில் செல்லவிடாது தடுத்தாட் கொள்ளும் தன்மையைப் போல ஆடுந்தன்மை வாய்ந்த ஐந்தலைப்பாம்பைச் சேட்டியாது திருவரையில் இறுகக் கட்டியவன் (1: 105: 4)

வெய்ய காட்டை இடமாகக் கொண்டு வெய்ய கனலைக் கையேந்தி ஆடுபவன்; (1: 105. 5).

''எல்லியம் போதெரி யாடுமெம் மீசன்'' (2: 215 11).

நீறணிந்த மேனியன்; வளராத மதி சூடியவன்; நீண்ட ஆறணிவார் சடையான்; எருதுக் கொடியுடையோன் (1: 105: 7).

புலித் தோலுடையவன்; பிரமனின் கபாலத்தில் பிச்சை ஏற்பவன்; திங்கட் கண்ணியான் (1: 105: 9).

வன்னி கொன்றை மதியொடு கூவிளம் சென்னி வைத்த பிரான் (3:303: 11); பவளம் போலுருவனார் (2: 215: 10) என்றெல்லாம் திருஞானசம்பந்தர் திருவாரூர் இறைவனை வர்ணிக்கின்றார்.

இறைவன் உலக ஒடுக்கத்திற்கும் தோற்றத்திற்கும் நிமித்த காரணன் என்பதை, ''அந்த மாயுல காதியு மாயினான்'' (3:303:1) எனத்திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார்.

எந்தப் பொருளையும் தீயிலிட்டு எரித்தால் எஞ்சுவது சாம்பல். உலகமெல்லாம் அழிந்தாலும், அழியாது எஞ்சி, என்றும் நிலைத்து நிற்பவன் அவன் என்பதை உணர்த்த வெண் பொடி பூசியுள்ளமையை ''வெந்த வெண்பொடி பூசிய வேதியன்'' (3: 303: 1) என்று கூறுகின்றார்.

ஐம்பொறிகளையும் உலகவழிச் செல்லாது சிவபெருமான் திறத்தில் அடக்கி, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்ற ஆறுபகைகளையும் வென்று, மேனியிலே நீறு பூசித் தலையாரக் கும்பிட 'அஞ்சேல்' என்று அருள் செய்வான் அவ்விறைவன் (2:237:4). தன்னை உன்னுவார் மனத்திலிருப்பவன் (2:237:5); உள்ள மொன்றி உள்குவரர் உள்ளத்திலிருப்பவன் (2:237:6) இறைவன் உமையம்மையைத் தன் ஒருபாகத்தில் வைத்திருப்பதைப் பலபாடல்களில் கூறுகின்ருர் (1:105:6, 2:215:7, 10; 2:237:7; 3:303:2, 6,7). திருஞானசம்பந்தர், இறைவனின் உருவத்தைப் பெரிதும் வருணிப்பது இறைவன்மீது அவருக்குள்ள ஆராக்காதலை உணர்த்தும். மேலும் திருஞானசம்பந்தர் இறைவனை அம்மையுடன் இணைத்துப் பாடுவது, பின்வந்த சாத்திர நூல்களுள் இறைவனுக்கும் சக்திக்குமுள்ள தன்மை பிரிப்பற்றது என்று கூற ஏதுவாகின்றது.

திருவாரூர்த் தேவியின் திருநாமம்:

திருவாரூர்த் தேவியின் திருநாமம், அல்லியம் பூங்கோதையம்மை என்பதை, "அல்லியங் கோதைதன்னை யாகத் தமர்ந்தருளி" 1:105:9 என்றும், "பொன்னுலா அல்லிமாதமர்ந் திருந்த அந்தணாரூர்" (2:237:11) என்றும் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

புராணச் செய்திகள்:

திருவாரூர்ப் பதிகங்களில் திருஞானசம்பந்தர் பின்வரும் புராணச் செய்திகளைக் குறிப்பிடுகின்றார்.

1. திரிபுரம் எரித்தது (1:105:1, 10; 2:237:8, 3:303:23)
2. பிரமன் சிரமரிந்தது (1:105:7)
3. பிரமனின் கபாலத்தில் பலியேற்றது (3:303:4, 1:105:9,)
4. யானைத்தோல் போர்த்தது (2:237:10)
5. நஞ்சுண்டது (2:237:1, 10), 1:105:4,
6. திருமாலும் பிரமனும் அறியா வண்ணம் நின்றது (2:215:10, 3:303.9, 3:367)
7. தக்கன் தலையரிந்தது (3:367:6,)
8. காமனை உருவழியச் செய்தது (2:237:7,)
9. காலனைக் காய்ந்தது. (2:237:3)

இவைபோன்று குறிப்பிடப்படும் பல புராணச்செய்திகள், இறைவனின் முழு முதல் தன்மையையும், அளவில் ஆற்றலையும், அளக்க வொண்ணாக் கருணையையும், தவறு செய்வோரைத் தண்டித்து அருள்புரியும் பண்பையும் உணர்த்தும்.

திருவாரூர்த் தலவழிபாடு செய்ய அறிவுறுத்துதல்:

ஆரூரில், பாலும், தயிரும், நெய்யும் அபிடேகம் செய்யப்படும் இறைவனின் பாதங்களைக் காலையும், மாலையும் போய்ப் பணிதல் கருமமே (1: 105: 2) என்று திருஞானசம்பந்தர் ஆரூர் இறைவனை வழிபடுதலைக் கடமை எனக் குறிப்பிடுகின்றார். மேலும், "உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித் தொழுமின்" (1: 105: 3) என்றும், "ஆரூரைச் சென்று பாடுதல், கைதொழுதல், பணிதல் கருமமே" (1:105:5) என்றும் குறிப் படுகின்ருர்.

திருவாரூர்த் தல வழிபாட்டின் சிறப்பு:

ஆரூர் இறைவனின் திருவடிகளை வணங்குபவர்களின் தீவினைகள் நைந்து இல்லை யாகும். அவர்கட்கு நாள்தோறும் நல்லனவே வரும் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்ருர்.

"ஆரூர்ப்....பரமனடிப்பரவப் பாவம் நைந்தறும்; வந்தணையும் நாடொறு நல்லனவே" (1:105:4)

இவ்வாறு வினைகள் நைந்து போவதால் அவர்கட்கு வீடுபேறும் எளிதாகும் (1:105:5), ஆரூர் இறைவனைத் தங்கள் கைகளினுல் தொழுது வணங்குபவர்கள் பிறவிக்கடலில், வினைச்சுழலில் தடுமாறார். (1:105:6). ஆரூரில் எழுந்தருளியுள்ள புண்ணியமே உருவான இறைவனை வணங்குபவர்களும் புண்ணியம் செய்தவர்களாவார்கள் (1:105:9).

மேலும், "சித்தந் தெளிவீர்காள்" என்று தொடங்கும் பதிகம் முழுவதுமே (1:91) ஆரூர்த் தலவழிபாட்டின் சிறப்பை உணர்த்தும் மலமறைப்பறுவதையும், கலக்குண்ட சித்தந் தெளிவதையும் விரும்புகிறவர்கள், ஆரூர் இறைவனைப் பக்தியாகிய மலர் கொணடு வழிபட முக்தி இன்பம் பெறுவர். (1:91:1).

முக்தியாதற்குப் பிறவி இடையூறாகும். பிறப்போ, பாசம் காரணமாக வருவது. ஆரூர் இறைவனை மறவாது வழிபட்டால் பிறவிக்கு ஏதுவாகிய பற்றுள்ளம் கழியும் (1:91:2).

ஆரூர் இறைவனை நன்பொன் மலர்தூவி வழிபடத் துன்பம் நீங்குவதோடு மட்டுமல்லாமல், இம்மையின்பமும், முக்திப் பேரின்பமும் உண்டாகும் (1:91:3)

'பிராரத்தவினை உடலளவில் அனுபவித்துக் கழியும்' என்பது சித்தாந்த உண்மை யாதலின், ஆரூர் இறைவனைக் கையினால் தொழ பிராரத்த வினை நைந்து போகும் என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார் (1:91:4). வல்வினைகள் மெலிந்துபோகும். வினைப்பலனின் தாக்குதல் அதிகமிராது.

நெல்லின்வாய் பிளந்தால், அது மீண்டும் முளையாது. அதுபோல ஆரூர் இறைவனை மலர்தூவி வழிபட, இனி வரக்கடவதாகிய ஆகாமிய வினையும் முளையாத வாறு விண்டுபோகும் (1:91:5).

ஆரூர் இறைவனை மலர் தூவி வழிபடுபவர்கள் பாச நீக்கம் பெற்று இறைவனுக்கு நேசமாவர் (1:91:6).

திருவாரூரின் வளம் :

பொதுவாகத் திருஞானசம்பந்தர் 'பாடல்களில் இறைவனின் வருணனைகளைப் போன்று, இயற்கை வருணனைகளும் மிகுதியாகக் காணப்படும் என்பர். இனி, திருஞான சம்பந்தர் கூறும் திருவாரூர்வளம் பற்றிய வருணனைகளைக் காண்போம்.

திருவாரூரின் நீர் வளம் :

"திளைக்கும் தண்புனல் சூழ்திரு வாரூர்" (3:303:7) என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். திருவாரூரில் குளங்கள் பல உள்ளன மருதநில - விலங்காகிய எருமைகள் மயங்கி வேகமாக ஓடி வழியிலுள்ள வள்ளை, வெள்ளை போன்ற நீண்ட கொடிகளை 'அறுத்துக் கொண்டு, அக்குளத்திலே பாய்கின்றன என்று திருஞான சம்பந்தர் ஆரூர் பற்றிக் குறிப்பிடுகின்றார் (2:237:3).

திருவாரூரின் வயல் வளம் :

திருவாரூர், பண்டைத் தமிழர் வகுத்த ஐவகை நிலப்பாகுபாட்டினுள் மருதநிலப் பகுதியாகும். வயலும், வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும்.

"அள்ளல் அகன்கழனி ஆரூர்" (1:105:3)

"அல்லி மலர்க்கழனி ஆரூர்" (1:105:11)

என்று திருவாரூரிலுள்ள வயல் பற்றித் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். திருவாரூரி லுள்ள வயல்களில் வாளை மீன்கள் துள்ளிப் பாயும். வயல்கள் கடற் பகுதியாகிய

நெய்தல் நிலத்தைத் தொடுமளவு நீண்டிருக்கும். அங்குள்ள நெய்தற் பூக்களைச் சூழ்ந்து வண்டுகள் உலாவும். அங்குள்ள சேற்றில் நாரைகள், ஆரல்மீன்களைப் பிடிக்கும் என்று திருவாரூர் வளம் பற்றத் திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார் (2:237:6).

மணலாகிய வண்டலை அடித்துக் கொண்டு நீரானது, செந்நெல் அறுத்த வயலினிடத்துப் பாயும் வளமுடைய ஊர் திருவாரூர் (2:237:10).

திருவாரூரில் நெல்லிற்கு அடுத்தபடியாக மிகுதியாக விளையும் விளைபொருள் கரும்பு. கருப்பங் கழனிகளையுடைய திருவாரூர் என்பதை ''ஆலை ஆரூர்'' (3:367:3) என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

திருவாரூரின் சோலை வளம் :

''சிறைவண் டார்பொழில் சூழ்திரு ஆரூர்'' (3:303:3)

என்று திருஞானசம்பந்தர் திருவாரூர் சோலைவளம்பற்றி குறிப்பிடுகின்றார். திருவாரூரை சுற்றி மாடங்கள் பல உள்ளன. மாடங்களின் அருகே பூந்தோட்டங்கள் உள்ளன. அங்கு குருந்த மரத்தின் மேல் மாதவிக்கொடி ஏறிப்படர்ந்துள்ளது. தேன் நிறைந்த கொன்றை மலர்கள் விரிந்து அலர்ந்து அதன் வாசம் எங்கும் நிறைந்துள்ளது (3:303:5). சோலையில் வண்டுகளும் சுரும்புகளும் இசைக்கின்றன (1:105:2).

தென்னை மரங்கள் நிறைந்த சோலைகளில் தேன்நிறைந்த செண்பகப் பூக்களின் மணம் எங்கும் சூழ்ந்திருக்கும்.

''தெங்குலாவு சோலைநீடு தேனுலாவு செண்பகம்
அங்குலாவி யண்டநாறு மந்தணாரூ ரென்பதே'' (2:237:5)

என்று திருஞானசம்பந்தர் திருவாரூரின் சோலை வளம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

சோலைகளிலுள்ள தென்னை மரங்களில் பெண் குரங்குகள் ஏறி, அருகிலுள்ள வழைக்குலையை ஒடித்து மாமரத்தின்மேல் ஏறும் வளமுடைய ஊர் திருவாரூர் என்பதை,

''தெங்கினூடு போகிவாழைக் கொத்திறுத்து மாவின்மேல்
அங்கண்மந்தி முந்தியேறு மந்தணாரூ ரென்பதே'' (2:237:7)

என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

சோலைகளில் செருந்தி, ஞாழல், புன்னை, வன்னி, செண்பகம், குரா இவை மலர்ந்து எங்கும் நறுமணம் சூழ்ந்திருக்கும் ஊர் திருவாரூர்.

''செருந்திஞாழல் புன்னைவன்னி செண்பகஞ் செழுங்குரா
அரும்புசோலை வாசநாறு மந்தணாரூ ரென்பதே'' (2:237:9)

என்றும் திருஞானசம்பந்தர் திருவாரூரின் சோலைவளம் பற்றித் தெரிவிக்கின்றார்.

திருவாரூரின் செல்வ வளம்:

''பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.'' (குறள்-738)

என்று திருவள்ளுவர் குறிப்பிடுவார். நாட்டிற்குரிய அணிகலன்களுள் ஒன்றான செல்வவளமும் மிக்க ஊர் திருவாரூர்.

''செல்வ மல்கிய தென்றிரு வாரூரான்'' (3:303:4)
''திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்'' (3:303:5)
''சீர்கொள் மாடங்கள் சூழ்திரு வாரூரான்'' (3:303:6)
''வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்'' (3:303:8)
''செல்வத் திருவாரூர் மேயான்'' (1:11.5)
என்று திருஞானசம்பந்தர் திருவாரூரின் செல்வவளம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.


பெரிய யானைகளைச் சிங்கங்கள் தாக்கி நெற்றியைப் பிளக்க யானையின் தந்தங்களிலுள்ள முத்துக்கள் சிதறிக் கிடக்கின்ற ஊர் திருவாரூர் (2:237:1).

திருவாரூரில் கரும்புகள் அதிகம் விளைவதால் கரும்பாலைகள் பல அமைக்கப் பட்டு அதிலிருந்து கிளம்பும்புகை மேகத்தைப் போய்த் தொடும் என்பதை,

''ஆலையின் வெம்புகைபோய் முகில்தோயும் ஆரூர்'' (1:105:2)
எனத் திருஞானசம்பந்தர் திருவாரூரின் வளம்பற்றிக் குறிப்பிடுகின்றார்.

முடிவுரை:

திருவாரூர்ப் பதிகங்களில் திருஞானசம்பந்தர் ''அஞ்சும் ஒன்று'' (2:237:4), 'ஆறு வீசு' (2:237:4), 'உள்ளம் ஒன்றி உள்குக' (2:237:6), 'கள்ள நெஞ்ச வஞ்சகக் கருத்தை விடு' (2:237:6). குஞ்சியார வந்தி செய் (2:237:4) என்று ஆத்திசூடி போன்ற உபதேசப்பொன் மொழிகளையும் உயிர்கள் உய்ய அருளிச் செய்துள்ளார். திருஞானசம்பந்தர் தம் நெஞ்சை நோக்கி ''நெஞ்சமே நீ அஞ்சாதே. தந்தை, தாய் சகோதரர், புத்திரர், மனைவி என்னும் பற்று நீங்காதவர்க்குப் பிறவித் துன்பத்தினின்றும் உய்தி அடையும் உபாயம் இல்லை என்று தெளிந்து ஆரூர் இறைவனின் திருவடியே கதி எனப் பற்றிக் கொண்டாய்'' என்று தம்நெஞ்சிற்கு அறிவுறுத்துவதுபோல, இப்பற்று நீங்க அப்பெருமானைப் பற்றிக் கொள்ளும்படி உலகமக்கட்கு அறிவுறுத்துகின்றார். பிறவியால் வருவன கேடுள என்பதைஉணர்ந்து, இத்துன்பத்திலிருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைய நாம் திருவாரூர்த் தியாகராசப் பெருமான் திருவடிகளைக் கதிஎனப் பற்றி வழிபட்டு உய்வோமாக!



தேவாரக் காட்சி- I

ஆரூர் தியாகப் பெருமான் ஆதிரை நாள் விழாக் காட்சிகளை ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசரை நோக்கி வினவுகிறார். இருவரது திருத்தொண்டர் குழாங்கள், அவர்கள் சந்தித்த போது, இரண்டு நிலாக்கடல்கள் போல் கலந்தன என்கிறார் சேக்கிழார். அப்போது அப்பரடிகள் கூறுகிறார்,

"முத்துவிதானம் மணிபொற் கவரி முறையாலே,
பத்தர்களோடு பாவையர் சூழப்பலிப்பின்னே,
வித்தகக் கோலவெண்டலை மாலைவிர திகள்,
அத்தன்ஆரூர் ஆதிரை நாளாலது வண்ணம்"

முத்துக்களால் புனையப்பட்ட மேற்கட்டி நிழல்செய்ய, பொன்னால் ஆகிய மணிகளிழக்கைப்பெற்ற கைப்பிடிகளைக் கொண்ட சாமரங்களை வீசி, பத்தர்கள், பாவையர்கள் சூழ்ந்துவர, திக்குப் பாலகர்களுக்குப் பலியிட்டபின், மிக அழகிய கோலத்தோடு தலைமாலை அணிந்த 'மாவிரதிகள்' எனப்படும் தீவிர சைவர்கள் வழிபட, ஆரூர் இறைவன் ஆதிரைக் கோலங்காட்டியருளும் வண்ணம் அதுவாகும் என்கிறார்.



திருநாவுக்கரசரின் திருவாரூர்த் திருப்பதிகங்கள்

செஞ்சொற்கொண்டல், தமிழாகரர்,
டாக்டர். சொ. சிங்காரவேலன், M. A., Ph. D.,
(தமிழ்ப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மயிலாடுதுறை)

எண்ணிக்கை :

திருநாவுக்கரசர் பாடியுள்ள திருப்பதிகங்களில், திருவதிகை பற்றியவையும், திருவாரூர் பற்றியவையுமே மிகுதியாகக் கிடைத்துள்ளன. நான்காம் திருமுறையில் 9 திருப்பதிகங்கள்; ஐந்தாம் திருமுறையில் 2 திருப்பதிகங்கள்; ஆறாம் திருமுறையில் 5 திருப்பதிகங்கள் ஆக 16 திருப்பதிகங்கள் திருவதிகைக்கு உரியவை. நான்காம் திருமுறையில், 9 திருப்பதிகங்கள்; ஐந்தாம் திருமுறையில் 2 திருப்பதிகங்கள்; ஆறாம் திருமுறையில் 10 திருப்பதிகங்கள் திருவாரூர் அரநெறிக்கு உரியவை. நான்காம் திருமுறையில் 1; ஆறாம் திருமுறையில் 1 ஆக 23 திருப்பதிகங்கள் திருவாரூர்க்கு உரியவை. இத்தொகைக்கான காரணம் யாதாக இருப்பினும், **திருநாவுக்கரசர்க்குப் பேரீடுபாடு இத்தலத்துப் பெருமானிடம் இருந்திருக்க வேண்டும் என்று கருதுவது பிழையாகாது.**

இறைவனின் திருப்பெயர்கள்:

திருவாரூர், மூலட்டானமாக விளங்குவது; தொன்மைச் சிறப்பு வாய்ந்த திருத்தலம். ஐம்பெரும் பூதங்களில் இங்கு மண் வடிவாகப் பெருமானின் திருமேனி விளங்குகின்றது. புற்றிடங்கொண்ட புனிதனாகப் பொன்னார் மேனியன் திருக்காட்சி வழங்குகின்றான்; 'வன்மீக நாதன்' (வன்மீகம்-புற்று) என்று வடமொழித் தொடரால் போற்றப்படு கின்றான். காந்தராப் பண்ணில் அமைந்த திருப்பதிகத்தில் 'ஆரூர் அமர்ந்த அம்மான்' என்றும், பழமொழித் திருப்பதிகத்தில் 'ஆரூரர்' எனறும், சீகாமரத் திருப்பதிகங்களில், 'ஆலத்தின் கீழான்', 'அக்கணிந்த அம்மான்', 'ஆயத்திடையான்', 'அந்தணன்', 'வித்தகன்', 'அஞ்சுடராய் நின்றான்', 'நஞ்சமுதா உண்டான்', 'ஆடும் தீக் கூத்தன்', 'வெண்ணீற்று அஞ்சாந்தணிந்தான்' என்றும் போற்றுவர்; திருவாதிரைத் திருப்பதிகத்தில் 'அத்தன்', 'அணியான்', 'ஆரூர் ஆதி', 'ஆரூர் அணங்கன்', 'ஆரூர் அந்திரன்', 'ஆரூர் அடிகள்', 'ஆரூர் அன்பன்', 'ஆரூரன்' என்ற திருப்பெயர்களால் பாடி இன்புறுவர். மேலும், 'ஆரூர் மூலட்டனார்', 'ஆரூரனார்', 'புற்றிடங் கொண்டான்', 'பொரு விடையான்', 'திருமூலட்டானன்', 'திருவாரூரான்', ஆரூர் ஆண்ட அயிராவணம்', 'அணியாரூர்த் திருமூலட்டானனார்', 'திருவாரூரில் பரஞ்சோதி', 'திருமூலட்டானத்தெம் செல்வன்', 'அரநெறியில் அப்பன்', 'அரநெறியார்' என்ற தொடர்களாலும் போற்றி மகிழும் திறத்தை இத் திருப்பதிகங்களில் காணலாம்.

காந்தாரப் பண்ணில் வெளியிட்ட கருத்துக்கள் :

காந்தாரப் பண்ணில் அமைந்த திருப்பதிகம் முழுவதும், இறைவனின் பேரருள் திறத்தைப் பல தொடர்களால் புகழ்வதாக அமைகின்றது. இத்திருப்பதிகத்துள்,

'நரியைக் குதிரை செய்வானும்' (2)

என்ற தொடர், மணிவாசகர் வரலாற்று நிகழ்ச்சி என்று கொண்டு திருநாவுக்கரசர்க்குக் காலத்தால் முந்தியவர் திருவாசக ஆசிரியர் என்று நிறுவும் அறிஞரும் உளர். இறையருள் வெளிப்பாட்டிற்கு நரி குதிரையாதலைக் கொண்டால், அவ்வரலாற்றிற்கும் இத் தொடர்க்கும் தொடர்பு இன்மை விளங்கும்.

'நினைப்பவர் நெஞ்சத்துளான்'
'உகப்பவர் உச்சியுளான்'
'பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கருள் செய்யும்
ஐயைஞ்சின் அப்புறத்தான்'

என்ற தொடர்கள் ஊன்றி உணர்தற்கு உரிய பொருள் நலம் வாய்ந்தவை. நெஞ்சம்—உள்ளம்; உச்சி—தலை; துவாதசாந்தம் என்ற தத்துவப் பொருண்மையும் உள்ளது. 'தத்துவங்களுக்கு அப்பாற் பட்டவன்' என்ற மெய்ப்பொருண்மை, 'ஐயைஞ்சின் அப்புறத்தான்' என்ற தொடரில் விளங்குகின்றது.

பழமொழித் திருப்பதிகப் பொருளமைதி:

'கழிந்ததற்கு இரங்கித் தன்னைப் பழிக்கும் திறன்,பழமொழிப் பதிகம் முழுவதும் விளங்குதல் தெளிவு. திருவாரூர்த் திருப்பதிகம் ஒன்றிலேயே இவ்வமைப்பு விளங்குதல் அறியத் தக்கது. பழமொழிகள்,'சமுதாய வாய்மொழி இலக்கியப் பண்புடையன' வாக மதிக்கத் தக்கவை. அப்பரடிகள் முழுமையும் 'சமுதாய முனிவர்' என்றும் மதிக்கத் தக்க அளவிற்கு மக்கட் சமுதாயத்தில் ஊடுருவி நின்று உயர்பணி செய்த அருளாளர்.

தொல்காப்பியர், 'முதுசொல்' 'முதுமொழி' என்று பழமொழிகளைக் குறிப்பர்:

'அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்
ஏது நுதலிய முதுமொழி என்ப.'

அகநானூற்றில், 'பழமொழி' என்ற சொல்லாட்சி,

'பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழ'

(களிற்று யானைநிரை, மருதம் 66.)

எனவருவதும் அறியதக்கது. அப்பர் அடிகளார் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முன்றுறை அரையனார்க்குப் பிந்தியவர்; பழமொழி நானூற்'றின் பிற்பட்ட காலத்தவர்.

அளவு அடிப்படையிலும், பொருள் அடிப்படையிலும், அகரவரிசை அடிப் படையிலும், அமைப்பியல் அடிப்படையிலும்,பயன் அடிப்படையிலும் பழமொழிகளை ஐந்து வகைப் படுத்துவர் அறிஞர் [நாட்டுபுற இயல் ஆய்வு, சு. சக்திவேல்,மணிவாசகர் பதிப்பக வெளியீடு (1983) ப.79)]பழமொழிகள் நான்கு வகையாக்கப் படுதலும் உண்டு. நேர் சமமதிப்பு, எதிர்மறை சமமதிப்பு,நேரடியான காரண காரியத் தொடர்பு, எதிரிடைக் காரண காரியத் தொடர்பு என்பவை அவை [Roger D. Abraham's 'Proverbs and proverbal Expressions, Folklore and Folk life cicago P *121* (*1972*)]. இந்தச் சிந்தனைகளுடன் அடிகளாரின் திருவாரூர்த் திருபதிகத்துப் பழமொழிகளை அணுகலாம்.

''கனியிருப்பக் காய்கவர்ந்த கள்வனேனே'' (1)

''முயல்விட்டுக் காக்கைப்பின் போன வாறே'' (2)

''அறமிருக்க மறம்விலைக்குக் கொண்ட வாறே'' (3)

''பனிநீராற் பாவைசெயப் பாவித் தேனே'' (4)

''ஏதன்போர்க் காதனாய் அகப்பட் டேனே'' (5)

''இருட்டறையின் மலடுகறந் தெய்த்த வாறே'' (6)

''விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்த வாறே'' (7)

''பாழூரின் பயிக்கம்புக் கெய்த்த வாறே'' (8)

''தவமிருக்க அவஞ்செய்து தருக்கி னேனே'' (9)

''கரும்பிக்க இரும்புகடித் தெய்த்த வாறே'' (10)

இவற்றுள், 'அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே' என்பதும், தவம் இருக்க அவம் செய்து தருக்கினேனே' என்பதும், ஒருபொருள்த ழுவியவை எனலாம். அறம்-மறம், தவம்-அவம் என்பன எதிர்மறை சமமதிப்பில், நல்வினை-தீவினை பற்றியவை. இவை, நற்செயல், தீச்செயல் தொடர்பாக எழுந்தன. 'கனியிருப்பக் காய் கவர்தல், 'கரும்பிருக்க இரும்பு கடித்தல்' என்ற இரண்டும் எதிர்மறை சமமதிப்பில், வாய்ப்பொறி பற்றியவை; 'ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்படல்', 'இருட்டறையின் மலடு கறந்து எய்த்தல், 'பாழூரிற் பயிக்கம் புக்கு எய்த்தல்' மூன்றும் எதிரிடை காரணகாரியத் தொடர்பு அடிப்படையில் அமைந்தவை. 'முயல் விட்டுக் காக்கைப்பின் போதல்' என்பது நேர்சம மதிப்பில் அமைந்தது என்பது தெளிவு. 'பனிநீராற் பாவை செயப் பாவித்தல்' என்பதும் நேர்சமமதிப்பில் அமைந்ததே ஆகும். இப்பழமொழிகள் அனைத்தும் அப்பரடிகள் காலத்தில் பெருவழக்கினவாக இருந்திருக்க வேண்டும். ஆதலின் தம்நிலை விளக்கத்திற்காக இவற்றை எடுத்தாண்டனர் அடிகள் எனலாம்.

திருவாதிரைத் திருப்பதிக மாட்சி :

திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா நிகழ்முறை மாண்பை எடுத்து விளக்கும் திருப்பதிகம் கூர்ந்து நோக்கிடற்கு உரியது. முத்து விதானம், கவரிகள் தாங்கியவராய்ப் பத்தர்களும், பாவையர்களும் சூழ்ந்து இவ்விழாவை மகிழ்ந்து கொண்டாடினர். (1) வெண்தலை மாலை அணிந்த சைவ சமயப் பிரிவினர் இதனை மகிழ்ந்து நிகழ்த்தினர் (2) திருவாரூரில் வீதிகள் தோறும் அழகு செய்யப்பட்டது. வெண்கொடி, மேற்கட்டிகள், மணித் தொங்கல்கள் ஒளி பரப்பின. பவளம், முத்துத் தாமங்கள் தொங்க விடப்பட்டன. (3) சங்கு, பறை, கல்லவடங்கள் ஆகிய இசைக் கருவிகள் பேரொலி எழுப்பின. இடியோசை என்று அப்பேரொலியைக் கருதி மயில்கள் களித்து ஆடத் தொடங்கின. (5) ஆடவரும் பெண்டிருமாகக்கூடி இவ்விழா எடுத்தனர். (6) தேவர்கள் கூடி இவ்விழா அயர்ந்தனர். (8) பாடலும், ஆடலும் அறாத திருவிழாவாகத் திருவாதிரைத் திருவிழா இருந்தது.

சீகாமரப் பண்ணில் அமைந்த இரு திருப்பதிகங்களில் 'ஆழித்தேர் வித்தகன்'(7) என்பதனால், 'திருவாரூர் தேரழகு' என்ற கருத்து குறிப்பாக உணர்த்தப்பட்டது என்று கருதலாம்.

சிவபிரான் இத்திருக்கோயிலுள் வீற்றிருக்கும் கருவறை 'பூங்கோயில்' என்று குறிக்கப்பட்டதென்று கருதப் பின்வரும் பகுதி சான்று ஆகும்:

''திருவாரூர்ப் பூங்கோயிலுள் மகிழ்ந்து போகாதிருந்தாரே'' (5); விரிசடை அந்தணர், விரதிகன், சைவர், பாசுபதர், கபாலிகர் ஆகியோர் திருவாரூர்த் திருவீதிகளிற் காணப்பட்டனர் என்ற குறிப்பு (3) இன்றியமையாதது. அகச்சமயக் கோட்பாடு அக் காலத்துத் தமிழகத்து விரவியிருந்தது என்பதும் தெளிவாகின்றது. செந்நெல் பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்ற நெல் வகைகள் திருவாரூர் மருத நிலங்களில் பயிரிப்பட்ட குறிப்பும் (7) அடிகளாரால் தரப்பட்டுள்ளது. சைவ வேளாளர் ஆதலின் இக்குறிப்பு அடிகளாரால் கூர்ந்து நோக்கிப் பாடப்பெற்றது என்று கருதலாம்.

''பெரியசெந்நெல் பிரம்புரி கெந்தசாலி திப்பியம்
என்றிவை யகத்து
அரியும் தண்கழனி அணியாரூர் அம்மானே'' (7)

திருநேரிசையும், திருவிருத்தமும் :

திருநேரிசைத் திருப்பதிகங்கள் இரண்டுள், முன்னது (52) ஐம்பொறிகளால் வரும் துயர அனுபவங்களை எடுத்துரைப்பதாகவே முழுதும் அமைந்துள்ளது. அடிகளார் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டங்களையே இப்பாக்கள் குறித்தனவாகலாம்.

''உயிர்நிலை உடம்பே காலா
உள்ளமே தாழி யாகத்
துயரமே ஏற்ற மாகத்
துன்பக்கோ லதனைப் பற்றிப்
பயிர்தனைச் சுழிய விட்டுப்
பாழ்க்குநீர் இறைத்து மிக்க
அயர்வினால் ஐவர்க் காற்றேன்
ஆரூர் மூலட்ட னீரே.'' (7)

இந்தப் பாட்டிற் காணும் உருவகம் இனியது; 'உடம்பு - கால்; உள்ளம் - தாழி; துயரம் - ஏற்றம்; துன்பம் - கோல்''. இவ்வாறு பாழுக்கு நீர் இறைத்தேன் என்று உடம்பால் வரும் வீண் முயற்சியை விளக்குகின்றார் அடிகளார் இறைவனுடைய விசுவரூபம் (53) இரண்டாம் திருநேரிசை (10)யில் விளக்கப்பட்டமை அழகியது. 'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்' தமக்கும் கிட்டுமோ? என்று திருவிருத்தப் பதிகங்கள் இரண்டுள் (101, 102) முன்னதில் ஏங்குகின்றார்; பின்னதில், நமிநந்தி நாயனார் தண்ணீரால் விளக்கிட்ட அற்புதத் திருத்தொண்டை (2,4) உளமாரப் பாராட்டி மகிழ்கின்றார்.

மன்மதனைக் (கரும்பு பிடித்தவர்) காய்ந்த சிவபிரான், சண்டேசுவரரை (இரும்பு (மழு) பிடித்தவர்) இன்புறச் செய்த செயலை 'முரண்பாடுள்ளவை' (Contrast) போலக் கவிநயம்படப் பாராட்டும் பகுதியும் நோக்கி இன்புறத் தக்கது:

''கரும்பு பிடித்தவர் காயப்பட்டார் அங்கோர் கோடரியால்
இரும்பு பிடித்தவர் இன்புறப் பட்டார்'' (5)

திருக்குறுந்தொகைக் குறிப்புக்கள்:

திருக்குறுந்தொகைத் திருப்பதிகங்கள் இரண்டினுள், (6,7) முன்னது சிவபிரான் பேரருளை வியப்பது; பின்னதில் பேரருள் வியப்புடன், அகப்பொருள் நலம் தழுவிய மாண்பும் அமைந்துள்ளது. (7,8) ஈன்ற தாயும், தந்தையும் தம்மை விட்டுச் சென்ற பிறகு தம் உறுதுணையாக 'அம்மை யார்?' என்று தாம் அரற்றியதாகவும், இறைவனும் அவ் வேண்டுகோளை ஏற்று, திலகவதியாரைத் தமக்கு அருளியதாகவும் பாடி மகிழும் குறிப்பும் இத்திருப்பதிகத்துக் காணப் பெறுகின்றது:

"எம்மை யாரிலை யானும் உளேனலேன்
எம்மை யாரும் இதுசொல வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரற்றினேற்(கு)
அம்மை யாரைத்தந் தார்ஆரூர் ஐயரே" (6)

திருத்தாண்டகத் திறன்:

திருவாரூர்த் திருத்தாண்டகங்கள் (24-34), பொருள் நலமும், பத்திச் சுவையும் ததும்பியவை.

"திருவாரூரான் காண் என் சிந்தையானே" என்று உருகும் பகுதி மறக்கவியலாதது.

"ஆரூரிற் கண்டடியேன் அயர்த்தவாறே" என்று தம்மனுபவம் புலப்படுத்துவார் அடிகளார்.

"திருவாரூரில் திருமூலட்டானத்து எம்செல்வன்தானே" என்று சொல்லிச் சொல்லி ஒரு திருப்பதிகம் முழுவதும் மகிழ்வெய்துவார். "நெஞ்சே நீவா!" என்றழைத்து, 'ஆரூரன் திருநாமங்களைக் கூறி ஏத்துவாயாக' என்று ஒரு திருப்பதிகம் முழுதும் கட்டளை பிறப்பிப்பார். ஒரு திருப்பதிகத்தைப் போற்றித் திருத்தாண்டகமாகவே அமைத்துள்ளார். திருவாரூர்த் தொன்மையை எடுத்துரைப்பதாகவே ஒரு திருப்பதிகம் அமைந்துள்ளது. "ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ" என்று தொடங்கி, "தேசமுமை அறிவதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்று முடிக்கும் திறம் இதனுள் காணப்படும்.

திரு நேரிசையில் ஐம்பொறிகளால் வரும் துன்பங்களை ஓதி உருகுவதைக் கண்டோம்; அவற்றை விளித்து, திருவாரூர்ப் பெருமான் திருவருள் பெற்ற தம்மை அவற்றால் ஒன்றும் செய்ய இயலாது என்று முடிவு செய்யும் திருத்தாண்டகம் இது.


யோகக் குறிப்பாக அடிகளார் அருளும் திருப்பாடற் பகுதி பின்வருவது:

"உயிரா வணமிருந்து உற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படு வாரோ(டு)ஒட்(டி) வாழ்தி" (25-1)

அடியாருடைய 'தசகாரியங்களை' உரைப்பதாகவும், 'நாயக நாயகி பாவம்' புலப்படுத்துவதாகவும் உள்ள திருத்தாண்டகம் உலகம் வியந்து போற்றி வரும் ஒட்பம் உடையது:

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.'' (25-7)

திருவாரூர்த் திருப்பதிகங்கள் அனைத்தும் வெளிப்படுத்தும் பொருள்நலங்கள் எல்லை யற்றவை.. அவற்றுள் சில கருத்துக்களை அறிமுகப்படுத்தும் அளவிலேயே இக்கட்டுரை அமைந்துள்ளது. இவை விரிவாகச் சிந்தித்தற்கு உரிய சிறப்பு வாய்ந் தவையாகும். விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்'என்ற சங்கப்பாநெறியே இவற்றைக் கூர்ந்து நோக்கும்போது நெஞ்சில் எழுகின்றது.



தேவாரக் காட்சி-11

திருநாவுக்கரசர், ஆரூர் புற்றிடங்கொண்டாரைப் பணிந்து அவர் தம் பழமை குறித்து வியந்து, பாடியருளிய திருப்பாடல் இது.

"ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ,
ஓருருவே மூவுருவம் ஆன நாளோ,
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ,
காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ,
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்தநாளோ,
மான்மறிக்கை ஏந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ, பின்னோ,
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

சிவபெருமான் ஆரூரைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளிய நாள், பெருமானை ஒப்பற்ற முழுமுதல் தலைவனாய் உலகம் ஏற்று ஏத்திய நாளோ, அவனே அரி, அயன், அரனாகி படைத்தல் முதலான முத்தொழிலையும் தொடங்கிய நாளிலோ. அவன் மார்க்கண்டர்க்காகச் சினந்து காலனைக் காலாலுதைத்து வீழ்த்திய நாளிலோ தான் விரும்பி மண்ணையும், விண்ணையும் தெறிக்கச்செய்து படைத்த காலத்திலோ, மானினை அன்புடன் கையிலேந்தி உமையவளை மணந்து உடலின் ஓர்பாகம் அளித்த நாளிலோ, அன்றி அதற்கு முன்னோ பின்னோ, அறிந்திலனே. எனக்கூறி இறைவனின் அருஞ் செயல்களை மனக் கண்ணால் கண்டு வணங்குகிறார் நாவரசர். அதனை இங்கு வண்ண வண்ண ஓவியமாக்கித் தந்துள்ளார் ஓவியர்.





ஆரூரில் அப்பர் அனுபவம்

கவிஞர். சீ. சோதி, பி. ஏ., செயல் அலுவலர். கீவளூர்.

அப்பர் பெருமான் கொண்ட அனுபவங்கள் பல. அவைகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று புற அனுபவம்; மற்றொன்று அக அனுபவம்.

புற அனுபவம்:

புற அனுபவம் என்பது சைவத்திற்குத் தலைப்படும் முன்னர் பெற்ற பிற அனுபவங்கள், அல்லது புறத்தில்—உலகில்—உடலில்–வெளியில் தெரியும் வண்ணம் பெற்ற அனுபவங்களாகும். மற்றவர்கள் கண்ட அப்பர் பேற்றினையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

நீற்றறையில் நெடிதிருந்து திரும்பி வந்ததும், கடலில் கற்றுணைபூட்டி எறிந்த பின்னர் மிதந்து கரையடைந்ததும், யானையின் காலால் இடரப்பட விருந்தபோது மீண்டதும் புற அனுபவங்கள் தாம். இவற்றை மக்கள் கண்டனர். சமணச்சருகை சூடிய சதிகாரர்களும் கண்டனர். எதனால் இத்தகைய அனுபவம் பெற்றார்கள் எனின் அவர்களின் அக அனுபவ உணர்ச்சி வெளிப்பாடே என்றால் அது மிகையாகாது.

அக அனுபவம்:

அக அனுபவம் என்பது, அருள் பெற்ற நிலை. இறையுருள் தாமே அல்லது, தன்னடியார் வழியாகப் பக்குவத்தில் உள்ளோரைக் கவர்ந்து கொள்ளுதல் என்றும் இதற்குப் பொருள் கூறலாம். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி என்பதற்கேற்ப அருளைத் தன்மயமாக்கிக்கொண்ட பெருநிலையே அனுபூதி நிலையாகும். திலகவதியார் செப்பிய திருவைந்தெழுத்து, மந்திரமானது; வழங்கிய திருநீறு, மருந்தானது. சூலை நோய் காலைக் கதிரவனைக் கண்ட பனிபோல ஆளைவிட்டு ஓடிவிட்டது. மந்திரமும் மருந்துமான திருவருள், மருள்நீக்கயாரைத் திருநாவுக்கரசர் என்றாக்கி–அப்பர் பெருமானாக்கி உயர்த்திக் காட்டிற்று. திருவருள் பெற்ற திருநாவுக்கரசர்தம் அனுபவங்கள்–அக அனுபவங்கள் ஆயிரம். அவை எண்ணிப்பார்க்க நுண்ணியனவாம். எழுதிப் படிக்கதத் தொழுதலேயாம். உரைத்து அறியக் கரைதலேயாம். நல்லூரில் திருவடி தீட்சை, திருவையாற்றில் கைலாசக் காட்சி, திருவீழிமிழலையில் பொற்காசு பெறுதல், திருமறைக் காட்டில் கதைவத் திறத்தல், அப்பூதியடிகளுக்குத் திருவடி தீட்சை செய்தமையை அறிவித்தல் முதலானவை ஆண்டவர் அப்பர் மீதுள்ள அன்பு நிலையை நிலைநாட்ட ஆற்றல்பெற்ற அனுபவங்கள். நல்லூரில் கண்ட திருவடிக்காட்சியும் திருவையாற்றில் கண்ட கைலாசக் காட்சியும் அப்பர் சுவாமிகள் மட்டும் தாமே கண்ட அனுபவங்களாம். அதைப்போலவே ஆரூரில் அப்பர் பெருமான் அனுபவம் பெற்றார்கள். அதனையே இங்கு கொஞ்சம் ஆய்வோம்.

நீடு புகழ் கொண்டிலங்கும் திருவாரூர் திருக்கோயிலுக்குப் பெருமானார் எழுந் தருளினார். அன்பர்கள் யாவரும் திருமலி மங்கலக் குடம் நீட்டி வரவேற்று வழிபாடு செய்ய உடனிருந்தனர். சந்தனம் என மணக்கும் செந்தமிழில் ஆரூர்ப்பிரானை அழகாகப் பாடினார்கள் பேர் குறித்துப் பாடல்கள்; தேர் குறித்துப் பாடல்கள்;கோவில் குறித்துப் பாடல்கள், கோவில் தோன்றிய காலம் குறித்துப் பாடல்கள்,ஆடல் பாடல்; நீதி என்பன பற்றி எல்லாம் பாடல்கள். இன்னும்,எவ்வளவோ பற்றிய பல பாடல்கள் 22 பதிகங்கள் அருளினார்கள்.அவைகளுடே தனது அகஅனுபவத்தைக் காட்டினார்கள்.

''ஆருரில் கண்டடியேன் அயர்ந்தவாறே''என்று ஈற்றடி நிறைவு பெறும் தகைமையில் ஒருபதிகம். ஆனால் அப்பதிகத்தில் ஆறு பாடல்கள்தாம் உள்ளன. மற்றவை கிடைத்தில.

''ஆருரில் அம்மான் தன்னை ''அறியா தடிநாயேன் அயர்ந்தவாறே'' என்ற ஈற்றடி யில் நிறைவு பெறும் வகையில் ஒரு பதிகம். இதில் 10 பாடல்களும் இருக்கின்றன.

பதிகத்திற்கு ஒரு பாடல்:

''பாதித்தன் திருவுருவிற் பெண்கொண் டானை
பண்டொருகால் தசமுகனை அழுவித் தானை
வாதித்துத் தடமலரான் சிரங்கொண் டானை
வன்கருப்புச் சிலைக்காம னுயிர்அட் டானைச்
சோதிச்சந் திரன்மேனி மறுச்செய் தானைச்
சுடரங்கி தேவனையோர் கைகொண் டானை
ஆதித்தன் பற்கொண்ட அம்மான் தன்னை
ஆருரில் கண்டடியேன் அயர்ந்த வாறே.''

''திருமணியைத் தித்திக்குந் தேனைப் பாலைத்
தீங்கரும்பின் இன்சுவையைத் தெளிந்த தேறல்
குருமணியை குழல்மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியன் பாணி யானைப்
பருமணியைப் பவளத்தைப் பசும்பொன் முத்தைப்
பருப்பதத்தில் அருள்கலத்தைப் பாவந் தீர்க்கும்
அருமணியை ஆருரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்ந்த வாறே''

முதற்பதிகப் பாடலைப் படிக்கும்போது ஆருரில் சிவபெருமானைக் கண்டிருக்கிறார்; அயர்ந்தும் இருக்கிறார் என்பது தெரிகிறது. இரண்டாம் பதிகப் பாடலைக் கண்ணுறும் போது ஆருரில் அம்மான் தன்னை அறியா தடிநாயேன் அயர்ந்தவாறே என்று தம்மைத் தாழ்த்திக் கொள்வதும் தெரிகிறது. அங்கு எழுகின்ற வினா என்னவெனில் ''கண்டடியேன் அயர்ந்தவாறு'' என்பது, ''அறியா தடிநாயன் அயர்ந்தவாறே'' என்பதற்கு எதிராகத் தோன்றுகின்றதே என்பதுதான். சுருங்கக்கூறின், ''கண்டேன்'' என்பதும், ''அறியா'' என்பதும் முரணாகத் தோன்றுவது போலத் தோன்றுகின்றதே என்பது தான். அப்பர் பெருமான் மிக நுணுக்கமாகச் சிவ பெருமான் வடிவத்தை இங்கு காட்டுகின்றார்கள். எப்படி?

அப்பர் பெருமான் பெற்ற அனுபவங்களில் திருவையாற்றில் கண்ட காட்சியை நினைவுபடுத்திக்கொள்வோம். அங்கே "கண்டேன் அவர் திருப்பாதம்" என்றும், "கண்டறியாதன கண்டேன்" என்றும் அருளினார்கள். ஒன்று காண்டல். மற்றொன்று அறிதல். கண்டேன் என்றார்கள். பிறகு ஏற்கனவே அறியாதனவைகளைக் கண்டேன் என்றார்கள். கற்க கசடற கற்பவை என்பதுபோல,கண்டறியாதவைகளைக் கண்டார்கள். காதல் மடப்பிடியும்களிறும் வருவதைக் கண்டார்கள். சிவசக்தி தரிசனம் என்று பொருள் சொல்வார்கள். அதுபோலவே ஒரு பதிகத்தில் திருவையாற்றில் கண்ட காட்சியைப் பாடுவதுபோல இங்கு ஆரூரில் இரண்டு பதிகங்களில் பிரித்து நமக்குக் காட்டுகிறார்கள்.

திருவையாற்றில் திருநாவுக்கரசு கண்ட காட்சி, பருக்காட்சி எனில் திருவாரூரில் கண்டக்காட்சி அருட்காட்சியாகும்.சிவபெருமானின் திருவடியைக் கண்டார்கள். ஆனால் அங்கு அடிச்சுவடுகளைக் காணமுடியவில்லை. பிடியும்களிறும், கோழியும் பெடையும், குயிலும் பேடையும் இன்னும் பிற எல்லாம் சேவல் பேடையோடு ஆடி வருவதைக் கண்டார்கள். அவைகளை உயிரினப்பொருளாகக் காட்டினார்கள். தாம் கண்டதை மற்றவர்கள் காணாவிட்டாலும் அறியச் செய்வதே அறிவு. அதுபோலவே, "கண்டு அறியாத" ஒன்றினைத் திருவாரூரில் கண்டார்கள்.

பதிகங்கள் பலவுள் சிவபெருமானின் அங்க அமைப்புகள், அலங்கார வடிவங்கள், ஆடை ஆபரணங்கள்,ஆயுதங்கள் என்று பலவற்றையும் புகழ்ந்து அவரைப் பாட்டுடை தலைவனாக்கிப் பாடி மகிழ்ந்துள்ளார்கள். ஆனால் ஆரூரில் தான், தாம் அறிந்த, உணர்ந்த பிரணவத்தை மற்றவர்க்கு அருளிச் செய்தார்கள். திருவையாற்றில் கண்ட காட்சிகளையும் இங்கே கண்டார்கள். அப்பதிகங்களை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம். ஆனால், அகமுகமாக, 'பருப்பொருளாகத் தெரிந்த காட்சிக்கு உரிய பீடமாக' உள்ள பிரணவத்தை—ஓங்காரத்தை இங்குதான் கண்டு அறிந்தார்கள்.

பிரணவத்தை வேறெந்தத் தலத்திலும் அறியாத நிலையை எண்ணியே "அறியாதடிநாயேன் அயர்ந்தவாறே" என்று தம்மை மிகவும் தாழ்த்திப் பேசி இறையருளை விதந்தோதுகின்றார். அவர்கள் காட்டும் பாடல் அனைவர்க்கும் பாதையும், பாடமும் ஆம். ஓங்காரத்தை உணர்வோம். உயர்நிலை பெற இறையைத் தொழுவோம்.

"பிறநெறியாய்ப் பீடாகி பிஞ்ஞ கனுமாய்ப்
பித்தனுமாய்ப் பத்தர் மனத்தி னுள்ளே
உறநெறியாய் ஓமமாய் ஈமக் காட்டில்
ஓரிபல விடநட்ட மாடி னானைத்
துறநெறியாய்த் தூபமாய்த் தோற்ற மாகி
நாற்ற மாகி நன்மலர்மே லுறையாநின்ற
அறநெறியை ஆரூரில் அம்மான் தன்னை
அறியா தடிநாயேன் அயர்ந்த வாறே."

இசை பரிமளிக்கும் நாவரசர் நற்றமிழ் போற்றுவோம்.

ஆரூர் அண்ணல் புகழ் வாழ்த்துவோம்.

ஆரூரில் ஆரூரர்

டாக்டர். கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பி. எச்டி.,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.

திருவாரூர் ஐம்பெரும் பூதத்தலங்களுள் நிலத்திற்குரிய தலமாகும். காஞ்சியும் இவ்வகையில் இடம் பெறத் தக்கதே. எனினும் அதனை அம்மையின் இருக்கை என்பர். ஆரூரை அப்பனின் இருக்கை என்பர். 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்', 'ஆரூர்ப் பிறத்தல் நேர்படின் அல்லது செயற்கையின் எய்தும் இயற்கைத் தன்றே', 'அமரர் நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட என் அம்மானே' என்றாற் போல வரும் திருவாக்குகள் ஆரூரின் பெருமையை உணர்த்தும். சேக்கிழார் நகரச் சிறப்பிற்கு இடனாகக் கொண்டது இத்திருவாரூரே ஆகும்.

சைவசமயக்குரவர் நால்வராலும் பாடல் பெற்ற திருப்பதி இதுவாம். அந் நால்வருள் ஒருவராய சுந்தரர் தம் பரவை நாச்சியாருடன் வீற்றிருந்த பெருஞ் சிறப்பும் இத்திருப்பதிக்கு உரியது. ஞான சம்பந்தர் தாம் தோன்றிய காழியில் வதிந்து பல்வேறு திருப்பதிகளுக்கும் சென்று வந்ததுபோல. சுந்தரரும் திருவாரூரில் வதிந்து, பிற பிற பதிகளுக்குச் சென்று வழிபட்டு வந்துள்ளார். இவ்வகையில் சுந்தரர் பிறபதிகளினும் இப்பதியில் தங்கியகாலம் மிகுதியாகும்,

சுந்தரர், இத்திருப்பதிக்கு உரியதாக அருளிய பதிகங்கள் எட்டென அடங்கல் முறையில் குறிக்கப்பெற்றுள்ளது. இவையன்றிப் பொதுப்பதிகங்கள் எனும் தலைப்பில் சுந்தரர் பாடிய நான்கு பதிகங்கள் உள்ளன. இவைகளுடன் வேறுபிற பதிகங்களும் திருவாரூருக்கு இருந்திருக்க வேண்டுமெனப் பெரிய புராணத்தால் தெரியவருகிறது. சேக்கிழார் வழிநின்று இத்திருப்பதிகங்கள் பாடிய அமைப்பைக் காணலாம்.

தில்லையில் பண்ணினால் நீடி, அறிவரும் பதிகம் பாடிப்பரவிப் பணிந்து மகிழ்ந்த சுந்தரரை, ஆரூரில் வருகவென, இறைவன் அருள ஆரூர் செல்கின்றார் சுந்தரர். அவ்வாறு சென்ற ஆரூரர், திருவாரூர் வீதிவழிச் செல்லும் போது, 'கரையும் கடலும்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளுகின்றார். பத்துப் பாடல்களிலும் பெருமானை 'அரையன்' என்றும், 'இனியன்' என்றும், 'ஆதி' என்றும், 'அருத்தன்' என்றும், 'எந்தை' என்றும், 'அண்டன்' என்றும், 'அமரன்' என்றும், 'ஈசன்' என்றும் கூறி 'அவன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' என வினவிச் செல்வதாக அமைந்துள்ளது. ஞானசம்பந்தர் 'எந்தைதான் எனை ஏன்றுகொளுங் கொலோ' என்றும், நாவுக்கரசர், 'தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் நமக்கு உண்டு கொலோ' என்றும் வினவிச் சென்ற அருட்பாக்களோடு இப்பதிகம் இயைத்துக் காண்டற்குரியதாம்.

இவ்வரிய பதிகத்தைப் பாடிக் கொண்டே சென்ற சுந்தரர் இறைவன் திருமுன்சென்று தமிழ்மாலை பாடினர் என்றும், 'இறைவன் தம்மைத் தோழமையாகத் தந்தனம்' என்றருளிய பின், அவ்

வருட் செயலை நினைந்து நினைந்து', 'புற்றுளாரைப் பாடித்திளைத்து மகிழ் வொடும் செல்லாநின்றார் என்றும் பெரிய புராணத்துள் கூறப்படுகிறது. இவ்வகை யில் இரு பதிகங்களேனும் பாடப்பெற் றிருத்தல் வேண்டும். பரவை நாச்சியாரை மணந்த பின் ஆரூரில் ஆரூரர் தங்கி யிருந்த அமையத்து, திருப்பதிகம் பல படைத்திலேனென்றும் கூறுகின்றார். எனி னும் இவை இன்று கிடைத்தில.

திருவாரூரில் வாழ்ந்து வருங்கால் ஒரு நாள் இறைவழிபாடு ஆற்றச் செல்ல, அதுகாலை தேவாசிரிய மண்டபத்தில் அடியவர் பலரும் வீற்றிருக்க, 'இவர்க்கு யான் அடியானாகப் பண்ணுநாள் எந் நாள் எனும் உளக்குறிப்போடு உள் சென்று வணங்கினார். அது கண்ட விறல் மிண்டர், 'அடியவரை வணங்காது செல் லும் ஆரூரர் நமக்குப் புறகு' என்றார். இச் சூழ்நிலையில் வாய்த்த திருவருட் குறிப்பே திருத்தொண்டத் தொகை எழக் காரணமாயிற்று. ஆரூரர் ஆரூரில் பாடிய திருப்பதிகங்களுள் இற்றைக்குக் கிடைத் திருப்பவைகளுள் இப்பதிகம் இரண்டாவ தாகும்.

சுந்தரர் இம்மண்ணுலகில் தோன்றிய தற்குக் காரணம் இத்திருப்பதிகத்தைத் தோற்றுவிக்கவேயாம் என்பர்சேக்கிழார்.

'மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வார்அவர் மேல்மனம் போக்கிட
காதல் மாதரும் காட்சியில் நண்ணினார்.'

என்பது அவர் திருவாக்காகும். இவ் வரிய பதிகம் 'தொகை நூல்' எனச் சிறப் பிக்கப்பெறும் தகையது. இதன் 'வகை நூல்' திருத்தொண்டர் திருவந்தாதியாகும். விரிநூல் பெரியபுராணம் ஆகும். இவ்விரு நூல்களும் (வழியும், விரியும்) தோன்ற மூலமாய் அமைந்தது திருத்தொண்டத் தொகையாகும். தனி அடியார்கள், தொகைஅடியார்கள் எனும் இருவகை யினரையும் 'ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி சைவ நன்னெறியின் சீலம் உய்ய, எழுந்த இப்பனுவல் பல் காலும் பயின்று பயின்று இன்புறத் தக்கதாம்.

இறைவன் அருளியவாறு திருமுதுகுன் றத்தில் பெற்ற பொன்னை ஆற்றில் இட்டுப் பின்பொருநாள் திருவாரூர் குளத்தில் அதனை எடுக்குங்கால் பாடிய பதிகம் 'பொன்செய்த மேனியினீர்' எனத் தொடங்கும் பதிகமாகும். ஆரூரில் இருந்து இப்பதிகம் பாடப் பெற்றிருப்பினும், திரு முதுகுன்றப் பெருமானை நோக்கிப்பாடப் பெற்றிருத்தலின் இதனை இவ்வூர்ப்பதி கங்களோடு எண்ணி அடங்கல் முறையில் கணக்கிடப்படவில்லை.

ஆரூரில் வதிந்திருந்தகாலை ஒருநாள் பெருமானை வழிபடச் சென்றவர் 'பாறு தாங்கிய' எனத் தொடங்கும் பதிகத்தை அருளுவராயினர். இப்பதிகம் வினாவு ரைப் பதிகமாக அமைந்ததாகும். பாடல் தொறும் நமக்கு அடிகளாகிய அடிகள் 'ஏறுதாங்கியவரோ' 'படுதலை கையிற் கொண்டவரோ,','பாவையோர் கூறுதாங் கிய குழகரோ' என்பன போன்ற வினாக் களை அடுக்கிக் கூறப்பெற்றிருக்கும் பதிகமாகும். இப்பதிகத்தில் ஆரூர் எனும் பெயர் வாராமையின் அடங்கல்முறையில் இது பொதுப்பதிகம் எனக் குறிக்கப் பெற்றுள்ளது.

திருவொற்றியூரில் சங்கிலி நாச்சி யாரை மணம் செய்து கொண்டு வாழ்ந்த காலத்துத் தென்றல் அணைதர அச்சூழல் திருவாரூரில் நிகழும் வசந்த விழாவை நினைப்பித்தது. அந்நினைவோடு பாடப் பெற்ற பதிகம் 'பத்திமையும் அடிமை யையும்' எனத் தொடங்கும் பதிகமாகும். திருவொற்றியூரிலிருந்து பாடப் பெற்ற தாயினும் பாடல் தொறும் ஆரூர்ப்பெரு மானை நினைந்து,'எத்தனை நாள் பிரிந் திருக்கேன் என் ஆரூர் இறைவனையே,

'எவ்வணம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே' என்றெல்லாம் தழுதழுத்துப்பாடி இருத்தலின் இவை திருவாரூர்ப்பதிகங்கள் என எண்ணப் பெறுவதாயின.

திருவொற்றியூர் நீங்கக் கண்ணிழந்த சுந்தரர் திருவெண்பாக்கத்தில் ஊன்று கோலும், காஞ்சியில் இடக்கண்ணும் பெற்று ஆரூர் வருகிறார். அவ்வாறு வரு கின்றவர் காஞ்சியைக் கடந்து வருகின்ற பொழுது இடைவழியில் பாடிய பதிகம் 'அந்தியும் நண்பகலும்', எனத்தொடங் கும் பதிகமாகும். 'எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவது' எனும் குறிப்பு, பாடல் தொறும் அமைந்திருப்பது அவருக்கு ஆரூரர் மீதிருந்த பெருவேட் கை யைப் புலப் படுத்துகின்றது, இடைவழி யில் பாடப்பெற்ற தாயினும் ஆரூர்ப் பொருமனை நோக்கிய பதிகமாகலின் திருவாரூர்ப் பதிகங்களாக இவையும் எண்ணப் பெறுவதாயின.

இப்பெரு வேட்கையுடன் ஆரூர் வருகிறார் சுந்தரர். முன் ஆரூருக்கு வருக என இறைவன் பணிக்க வந்தபொழுது இருந்த மகிழ்வும்,உணர்ச்சி மீதூர்வும் இது பொழுது இல்லை. இந்நிலையில், அர்த்த யாமத்தே வந்த ஆரூரர், அன்பர் எதிர ணைய அவர்முகம் நோக்கிக் 'குருகுபாய' எனத்தொடங்கும் பதிகத்தைப் பாடுகின் றார். தலைவனின் பிரிவாற்றாமையால் வருந்திய தலைவி,பூவைகளையும், நாரை களையும், குருகுகளையும், மேகங்களை யும், வண்டுகளையும் நோக்கிக் கூறுவ தாக இப்பதிகம் அமைந்துள்ளது. சேக் கிழார் 'காதல்புரிகைக்கிளையால்' பாடிய பதிகம்என இதனைக்குறிப்பர் இலக்கண உலகில்தலைமகனின் கூற்றும், செயலும் கைக்கிளையாகக் கூறப்பெற்றுள்ளன. 'நாம்காதல் கொண்டால் நமக்கு எவன் செய்பவோ' தாம் காதல் கொள்ளாக் கடை, என்பார் திருவள்ளுவர் அவ்வகை யில் அமைந்த கைக்கிளையாய்த் தலைவி கூற்றாய் அமைந்தது இது வாகும். சொல் லாமரபின் அவற்றொடு கெழீஇச் செய்யா மரபின் தொழிற்படக்கிளக்கும் இக்கைக் கிளையில் முதல் பாடலில் யாரையும் நோக்கி விளிக்கப்படவில்லை. எனவே, எதிர் அணைந்த அன்பர்களே தம்கருத் தைச் சொல்ல வேண்டு மென்பது ஆரூர ரின் திருவுள்ளம்போலும்.

பின் அர்த்தயாமத்தே பெருமானின் திருமுன் வணங்கிப் பாடிய பதிகம் 'மீளா அடிமை' எனத் தொடங்குவதாகும். 'மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி ஆளாய் இருக்கும் ஆரூரர் தம்மகங்குழையப் பாடிய பதிகம் இதுவாகும். ஒரு மருங்கு அல்லற்பாடும் பிறிதொரு மருங்கு இறைவன் தம்மைத் தோழமையாகக் கொண்ட உணர்வும் மீதூர, பாடல்தொறும்'வாழ்ந்து போதீரே' எனும் நிறைவுச்சொல் அமைந்துள்ளது. தம் உயர்குடிபிறப்பை'இழியாக் குலத்தில் பிறந்தோம் உம்மை இகழாதேத்துவோம்' எனும் தொடரால் புலப்படுத்தி இருப்பது ஈண்டு அறியத் தக்கது.

கழறிற்றறிவாருடன் பாண்டி நாட்டுத் திருப்பதிகளை வழிபட்டு வந்த ஆரூரர் திருவாரூர் வந்ததும் இறைவன் திருமுன் இறைஞ்சித் திருப்பதிகம் எடுத்தேத்தினார் எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். எனி னும் இப்பதிகம் இப்போது கிடைத்திலது.

கழறிற்றறிவாரோடு கொடுங்கோளூரில் ஆரூரர் தங்கி இருந்தபொழுது ஆரூர்ப் பெருமான் நினைவு வர அருளிய பதிகம், 'பொன்னும் மெய்ப்பொருளும்தருவானை' என்பதாகும்.பாடல்தொறும் 'ஆரூரானை மறக்கலுமாமே' எனவரும் குறிப்பு ஆரூ ரரின் அயராவேட்கையைப் புலப்படுத்து வதாகும். மனம், மொழி, மெய், அறிவு என்பனவெல்லாம் நமக்கு இருப்பது வாய்மையாயின், ஆரூரனை மறத்தல் ஆகாது எனும் குறிப்போடு வரும் பாடல் கள்,தாம் மட்டுமன்றி, ஆரூரனைப் பிறரும்

மறக்கலாகாது என்பதை வற்புறுத்து வனவாகும்.

இனி, இறைகளோடு இசைந்த இன்பம், எனத்தொடங்கும் பதிகம் எங்குப் பாடப் பெற்றது என்பதற்கான குறிப்பு இல்லை யாயினும், ஆரூரர் இறுதியாகத் திருவஞ் சைக்களம் செல்லுதற்கு முன் பாடப் பெற்றிருத்தல் வேண்டும். காரணம், இவ் யாத்திரை மேற்கொள்வதற்கு முன் இருந்த சுந்தரரைச் சேக்கிழார், முடிவிலாத சிவ போகம் முதிர்ந்து விளைந்த விளைவாய்க் காணுகின்றார். அத்தகைய முதிர்ந்த விளைவு ஏற்பட, 'கூடிய வெய்ய இரு வினையின் களை 'கட்டமை' யையும் குறிப்பிடுகின்றார். இத்தகைய திருவுளக் குறிப்பை இப்பதிகம் விளக்குகின்றது. 'மானுடப்பிறவி வாழ்வு வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்; சொல்லிடில் எல்லை இல்லை சுவையிலாப் பேதை வாழ்வு' 'பொய்த்தன்மைத் தாயமாயப் போர்வையை மெய்யென்றெண்ணும் வித்தகத்தாய வாழ்வு வேண்டி நான் விரும்பகில்லேன்' எனவரும் குறிப்புக்கள் இவ்வுண்மையை விளக்கும்.

'வீழக்காலனை', 'காட்டூர் கடலே' என வரும் பதிகங்களும் ஆரூரிலிருந்து பாடப் பெற்றுள்ளன. ஆயினும் அவற்றில் ஆரூரைப்பற்றிய குறிப்பு இன்மையால் பொதுப்பதிகங்களில் சேர்க்கப்பட் டுள்ளன.

திருமுறைகளைப் பயில்வார்க்கு இறை யருளும் பத்திமையும் வளரும்; தழையும் என்பது ஒருதலை. அவ்வாறு பயிலுங்கால் சேக்கிழார் வழிநின்று அவர் தரும் வர லாற்றுணர்வோடும் பயில்வாராயின் அவ் வப் பெருமக்களின் 'அருள் உணர்வும், அன்பு மீதூர்வும்' கண்டு மகிழவும் வாய்ப் பாகும்.

ஒன்பதாம் திருமுறையில் 'ஆரூர்'

அ. பாலருவாயன், எம். ஏ.,
இலயோலாக் கல்லூரி, சென்னை-34.

திருவிசைப்பா :

நம் சைவத்திற்குரிய பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப் பல்லாண்டு என இரு வகையாக அமைந்துள்ளது. சேந்தனாரின் ஒரே ஒருபதிகம் திருப்பல்லாண்டு. ஏனைய திருவிசைப்பா.

'திரு' என்பது அடைமொழி. 'இசைப்பா' என்பது இசைப் பாட்டுக்கள். தேவாரங்களும் இசைப்பாட்டுக்களே! எனினும் தேவாரங்களைப் போலத் தாளமும், பண்ணுமாக அமையாமல் இவை 'பண்' மட்டுமே கொண்டுள்ளமையாலும், தேவார காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய பாடல்கள் எனப் பிரித்தறியவும் 'திருவிசைப்பா' என இவற்றை முன்னோர் பிரித்து வழங்கினர்.

ஆரூர்ப் பதிகம் :

தேவாரங்களில் காணப்பெறாத 'சாளரபாணி' என்னும் பண் திருவிசைப்பாவில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது அரிதான இப் பண்ணில்'கோயில்'பதிகத்தைப் பாடியருளியவர் 'பூந்துருத்தி நம்பி காட நம்பி' ஆவார். இந்நம்பி காட நம்பிகள் பாடியதாக ஒன்பதாம் திருமுறையில் திருவாரூர்ப் பதிகம் ஒன்று உள்ளது. ஆனால், அது முழுமையாகக் கிடைக்கவில்லை. பதிகத்தின் இரண்டு திருப்பாடல்களே நமக்குக் கிடைத்துள்ளன.

பதிக அமைப்பு :

பதிகம் 'பஞ்சமம்' என்ற பண்ணில் அமைந்துள்ளது. முதல் திருப்பாடல் ''கைக்கு வான் முத்தின்'' என்றும், இரண்டாவது ''பத்தியாய் உணர்வோர்'' என்றும் தொடங்குகின்றன. இரண்டு பாடல்களின் முடிவும் ''ஆரூர் ஆதியாய் வீதி விடங்கராய் நடங்குலா வினரே'' என்று ஒத்து முடிந்துள்ளது. எனவே கிடைக்கப் பெறாத ஏனைய பாடல்களின் முடிவும் இப்படியே இருந்திருக்கும் என்று கருதலாம்.

இரண்டு பாடல்களிலும் திருவாரூர்ப் பெருமானின் திருவுருவச் சிறப்புக் குறிக்க பெறுகின்றது. ஆரூரனைப் பொதுப் பெயரில் 'ஆரூர் ஆதி' என்றும், சிறப்புப் பெயரில் 'வீதி விடங்கர்' என்றும் நம்பிகள் குறிக்கிறார்.

வீதி விடங்கர் :

'விடங்கன்' என்னும் சொல்லுக்கு 'அழகன்' என்றும், 'உளியால் செதுக்கப் படாமல் தானே தோன்றிய திருமேனி உடையவன்' என்றும் இருபொருள் உள.

'வீதி விடங்கன்' என்ற சொல்லுக்கு, ''திருவீதியுலா வரும் அழகன்'' என்பதே பொருள். பூந்துருத்தி நம்பிகாட நம்பிகள் ஆரூரரை 'வீதிவிடங்கன்' என்ற சொல்லால் குறித்தது போலத் திருஞானசம்பந்த

ரும், சுந்தரரும் தம் ஆரூர்ப் பதிகங்களில் குறிக்கவில்லை. ஆயினும் திருநாவுக்கரசர்,

'பவனி வீதிவிடங்கனைக் கண்டிவள்
தவனி யாயின வாறென்றன் தையலே'
(5-ஆம் திரு. பா. 69)

எனத்தம் திருவாரூர்ப் பதிகத்தில் குறித்தருளினார். சேக்கிழார் திருநகரச் சிறப்புக் கூறும்போது விரிக்கும் மனுநீதிச்சோழன் வரலாற்றில் அவனுக்கு ஆரூர்ப் பெருமான் காட்சியளித்த இடத்தைப் பாடும்போது,

'விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங்கப் பெருமான்'
(பெரியபுரா. திருநகர. பா. 45)

என்கிறார்.

பதிகப்பாடற் கருத்து :

''வெண்மையான முத்துக்களையுடைய தோள்வளை, கைவளை, கழுத்து வடம் இவற்றைக் கட்டி முக்கண் நாயகராய் உலாவரும் இந்த அழகு, உடனிருக்கும் உமையும், கங்கையும் கண்டறியாத பேரழகு அல்லவா? அந்த அழகோடு ஆரூர் முதல்வர் வீதிவிடங்கராய் மண்ணுலகோர் கண்டு மகிழ வீதியில் நடம் டரிகின்றாரே. அவர் கொள்கை இதுவோ?''

''பத்தியால் உணர்ந்து அருளை வாய் மடுத்து அமுதம் பருகியவர்க்கே இந்த நடனத் திருவுரு தித்திக்கும். அம்மையாய், அப்பனாய், உலகிற்கு ஒப்பற்ற தலைவனாய், தோற்ற ஒடுக்கத்திற்கு நிலைக்களனாய் இருக்கும் ஆரூர்ப் பெருமான் வீதியில் நடம் புரிகிறார். தேவர்களே! நீங்களும் இத்திருவுருவ வண்ணம் வர்து பாரீர்!''

மண்ணுலக மாண்பு :

இறைவன் மண்ணுலகை விரும்புகிறான்; இங்கிருக்கும் அடியார்களுக்கே உவந்து அருள் புரிகிறான் என்பது சைவ சமயக் கருத்து திருவாரூர்த் தலபுராணமும் தியாகராசர், தேவர் உலகில் இல்லாது திருவாரூர் வந்தமர்ந்தமையை முசுகுந்தச்சக்கிரவர்த்திக் கதை மூலம் குறிக்கிறது.

'அமரர்நா டாளாதே ஆரு ராண்ட
அயிரா வணமே'
(6-ஆம் திரு. பா. 252)

என்று அப்பரும் இவ்வரலாற்றைக் குறித்தார். ''வேதங்களும், தேவர்களும் காணமுடியாத இறைவன் திருவடியை உமையம்மை நாளும் தன் வழிபாட்டால் காண முயல்கிறாள். ஆனால் அடியவர்கள் மெய்யன்பினால் அவன் திருவடிகளை அடைந்து இடையறாது கண்டு இன்புறுகிறார்கள்'' என்று மாணிக்கவாசகர் அடியவர் பெருமை கூறுகிறார்.

'பரவுவார் இமையோர்கள்; பாடுவன
நால் வேதம்;
குரவுவார் குழல்மடவாள் கூறுடையாள்
ஒருபாகம்;
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள்;
மேன்மேல்உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ
அரியானே!'
(திருவாச. திருச்சத. 17)

இக்கருத்துக்களை உட்கொண்டே நம்பிகாடநம்பி,வீதிவிடங்கனின் நடனம் காணும் வாய்ப்பு உமையம்மைக்கும், கங்கைக்கும் கிட்டவில்லை என்கிறார். மண்ணுலகோர் மெய்யன்பினால் காணப் பெறுகின்றனர் என்பது பாடலின் குறிப்பு பொருள்.

மெய்யன்பில்லாத் தேவர் :

வானவர்கள் இறைவனை வாழ்த்துவதும்,வழிபடுவதும் தாமும் தம் பதவியும் நிலைபெறுவதற்காகவேயன்றி உண்மை அன்பினால் அன்று.

'வாழ்த்துவதும் வானவர்கள் தாம்
வாழ்வான்'
(திருவாச. திருச்சத. 16)

என்று மாணிக்கவாசகர் சற்றுக் கடுமையாகப் பாடியது இக்கருத்துப் பற்றியே. தேவார ஆசிரியர்களிடம் இக்கடுமையை நாம் காண முடியவில்லை என்றாலும் வானவர்கள் வணங்கும் குறிப்புகளைக் காணலாம்.

மெய்யன்பு என்பது இறைவனிடம் எதையும் வேண்டாது செலுத்தப்படும் அன்பு.

'வீடும் வேண்டா விறலின்
விளங்கினார்
(பெரியபுரா. திருக்கூட். 8)

என்று சேக்கிழார், வீட்டுப்பேற்றையும் இறைவனே தந்தால் பெற்றுக்கொள்வ தன்றித் தாம் கேட்டுப் பெறாத மெய்யன் புத்திறம் உடையோர்என அடியார்களை குறித்தார்.

இது பற்றிய கண்ணப்பருக்கு முன்பே, கண் இடந்துபூசை முற்றுவித்த திருமாலை அச் செயலைக் குறிக்கும் சிறப்புப் பெயர் ஏதும் இட்டு அமையாமல், பின்வந்த திண்ணனார்க்குக் 'கண்ணப்பர்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர் சான்றோர். திருமால் இயற்றியபூசை சக்கரம் வேண்டி, செய்த காமியபூசை. எனவே திருமாலின் கண்ணிடந்த அரிய செயலும் திண்ணனார் அன்பு போலன்றி மெய்யன்பில் குறைபாடுடையதாயிற்று.

'ஆழியான் அன்புடைமை'
(திருவாச. திருவெம். 8)

என்று மாணிக்கவாசகர் இக் கருத்தைக் குறிப்பால் சுட்டினார்.

இதனால்தான் தாம் ஒளியுடம்பு உடையவர்களாய் இருக்கிறோம் என்று செருக்குக் கொள்ளாமல் ஆரூரரின் அழகு திருவுருவைக்காண வரும்படி நம்பிகள் தேவர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.

தித்திக்கும் திருவுரு :

வீதி விடங்கரின் நடனத் திருக்கோலம் கண்களால் காண்பது அரிது. உணர்வினால் உணரப்படுவதாகும். அது பத்தியுடையோர்க்கே இயல்வது.

நம் சைவ சித்தாந்தம் துரியநிலை, துரியாதீதநிலை என இருநிலைகளைக் குறிக்கும். முன்னையது அருள்நிலை; பின்னையது ஆனந்தநிலை. கேட்டல், சிந்தித்தல் என்ற இருநிலைகளைக்கடந்த பின் வரும் தெளிதலில்தான் துரியநிலை வாய்க்கும். அடுத்த, படிநிலையான — முடிநிலை நிட்டை கூடல் இதுவே துரியாதீதம். இந் நிட்டை கூடியவர்க்கே இறைவனது பேரின்பத்தை முற்றத் துய்க்கும் பேறு கிட்டும்.

'சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச்
சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன'
(4 ஆம் திரு. பா. 883)

என்பதும்,

'சித்தத்துள் தித்திக்கும் தேனே'
(9-ஆம் திரு. திருவிசை. பா.1)

என்பதும் இத் துரியாதீத நிலையைக் குறிப்பன.

இவ் அரிய நிலையையே நம்பிகாட நம்பிகள்,

'பத்தியாய் உணர்வோர் அருளைவாய்
மடுத்துப்
பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும்.

என்று கூறி மகிழ்கிறார். 'ஒத்தவர்க்கே' என்று படர்க்கையில் குறித்தாராயினும் தமக்கும் அத்திருவுருவம் தித்தித்திருப்பதை உணர்த்துவதே நம்பியின் நோக்கமாகும்.

அசபா நடனம்:

இனி, இவ் இருபாடல்களிலும் நம்பிகாட நம்பிகள் குறிக்கும் திருவாரூர்ப்

பெருமான் நடனம் 'அசபா நடனம்' எனக் குறிக்கப்பெறும். இந் நடனத்தை இறைவன் திருமால் மார்பில் இருந்து நடிப் பதாகக் கூறுவர். திருமால், இறைவனைத் தன் மார்பில் வைத்திருப்பதால் திருமாலின் உள்முச்சு, வெளி முச்சுக்களுக்கு ஏற்ப இறைவன் தானும் அசைகிறான். அந்த நிலையில் திருமால் தன் வாயினால் இறைவன் திருநாமத்தை ஜபிப்பதில்லை. ஆதலால் இந்த நடனம் "அசபா (அஜபா-ஜபிக்காத) நடனம்" எனப் பெயர் பெற்றது. உயிர்ப்பினை 'சம்' என உள்வாங்கி 'அம்' என வெளியே விடுப்பதால் இந்நுண்ணிலை மந்திரம் 'அம்சமந்திரம்' எனப்படும்.


ஆரூர்ப் பெருமானின் இந்த அசபா நடனத்தைக் கச்சியப்ப சிவாச்சாரியார் தம் கந்த புராணத்தில் குறிக்கிறார்.

"நீடவே துயிலுமால் நெட்டுயிர்ப் பசைவினால்
பீடுசேர் நாகனைப் பேருயிர்ப் பசைவினால்
பாடுசூழ் தெண்டிரைப் பாற்கடல் அசைவினால்
ஆடியே வைகினார் அலகிலா ஆடலார்.

(கந்தபுரா - கந்தவிரத. பா. 95)

முடிவுரை:

திருவாரூர்ப் பதிகமாக ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பாடல்களே கிடைப்பது நம் தவக்குறையேயாகும். எனினும், அவ்விருபாடல்களில் நம் பெருமானின் திருவுரு அடியார்க்கு எளி வரல், சிவசத்திநிலை, உலகுக்குத் தனி முதல் எனத் தோத்திர, சாத்திரக் கருத்துக் களைத் தொகுத்து வழங்கியுள்ளார் பூந்துருத்தி நம்பிகாடநம்பி. நம்பி ஆரூ ரின் ஊடல் தீர்த்த பிரானான வீதி விடங்கனை நாமும் பத்தியாய் உணர்ந் தால் அனந்த நிலை கூடும்; அவ்வுருக் கோலம் தித்திக்கும்!



பெரியபுராணக்காட்சி !

திருவாரூர் திருநகரச் சிறப்பு படலம்

" உள்ளம் ஆர் உருகாதவர் ஊர்விடை
வள்ளலா திருவாரூர் மருங்கெலாம்
தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன பூவைகள் "

திருவாரூர் நகரச் சிறப்பைக் கூறப் போந்த சேக்கிழார், நந்தவனங் களிலெல்லாம் கிள்ளைகள் தேவாரம் பாட, பூவைகள் (குயில்கள்) கேட்பதாகக் கூறுகிறார். இந்தநிலை எப்படி ஏற்பட்டது? நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக தேவாரங்கள் எங்கும் முழங்கி வந்தவற்றைக் கேட்டு, கேட்டு கிள்ளைகளுக்கு மனப்பாடம் ஆகி அவற்றைப் பாடுகின்றன.

சுந்தரர் தம் தேவாரத்தில்

"பறக்கும்எம் கிள்ளைகாள் பாடும் எம்பூவைகாள்
அறக்கண் எனத்தகும் அடிகள் ஆரூரரை "

எனப்பாடுவது இங்கு ஒப்பு நோக்கற்பாலது. சுந்தரர் குயில்கள் பாடிக் கிள்ளைகள் கேட்பதாகக் கூறுகிறார். சேக்கிழாரோ கிள்ளைள் பாடிப் பூவைகள் கேட்பதாகக் கூறுகிறார். சுந்தரர் காலத்துக்குப்பின் கிள்ளை களுக்கு தேவாரத்தில் அவ்வளவு பரிச்சயம் ஏற்பட்டுவிட்டதையும் எப்பொழுதும் பாடும் பூவைகளே வாயடைத்துப் போய் கேட்கும் நிலை ஏற்பட்டுவிட்டதையுமே, சேக்கிழார் இவ்வாறு படம் பிடித்து காட்டுகிறார்.



சேக்கிழார் கண்ட திருவாரூர்

டாக்டர். தா. வே. வீராசாமி

பழங்காலத் தமிழகத்தின் சோழ நாட்டில் ஆரூர் அமைந்துள்ளது. இவ்வூரில் வீற்றிருக்கும் இறைவனைப் புற்றிடங் கொண்டார் என்று போற்றுவதால் இத்தலம் ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணிற்குரியதாகக் கொள்வர். (இந்நிலையில் கச்சி ஏகம்பமும் ஒன்றாகக் கருதத்தக்கது.) முசுகுந்தர் பெற்ற ஏழுவிடங்க மூர்த்திகளுள் இவரைத் திருமால் பூசித்ததாகக் கூறுவர். அப்பர் தேவாரத்தில்

இவண மைப்பல பேசத் தொடங்கினான்
அவண மன்றெனில் ஆரூர் அரனெனும்
பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்
தவணி யாயின வாறென்றன் தையலே.

(தேவாரம் 5,7,8).

எனப்பாடிப் பரவுவார். மேலும் இவர் காலத்தில் நடைபெற்ற ஆதிரை விழாவின் சிறப்பைப் பலபடப்பாடியுள்ளார். 'முத்துவிதானம்' என்று தொடங்கும் பதிகத்தில்

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்
கணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்

(தேவாரம் 4,21,2).

என்று சிறப்புற, அடியார் அன்பு கரைபுரண்டு திருவிழாவாக உருவெடுத்துத் திகழ்ந்ததைக் குறிப்பிடுவார்.

புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளியிருக்கும் பூங்கோயில் ஐந்து வேலிப் பரப்புடையதைக் குறிப்பிட்டு 'நாகத்தை நங்கை அஞ்ச' என்ற பதிகத்தில் 'அஞ்சணை வேலி ஆரூர் ஆதரித்திடங் கொண்டாரே' (தேவாரம் 4,53,7) எனப் புகழ்வார்,

இத்தகைய சிறப்புடைய ஊரைச் சோழர்கள் பண்டு தொட்டு ஆண்டு வந்ததுடன் தாங்கள் முடிசூட்டிக் கொள்வதற்கெனத் தேர்ந்தெடுத்த ஐந்து நகரங்களில் இதுவும் ஒன்றாக விளங்கியது.

இவ்வூரில் நீதிக்காகத் தன்மகன் மீது தேரூர்ந்த மனுநீதிச் சோழன் ஆண்டான் என்பதைப் பெரிய புராணம் கூறும் ஆயின் சேக்கிழார்க்கு முன் தோன்றிய இளங்கோ அடிகளோ கண்ணகி வழக்குரைத்த போது

'ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெருப்பெயர்ப் புகாரென் பதியே'

(சிலப்பதிகாரம் 20,54 56).

என்பர். இத்தகைய வரலாற்றுச் சிக்கல் விடுபடாச் சிக்கலாக இருப்பினும் சேக்கிழார் காலக் கருத்து, கறவை முறை செய்த காவலனாம் மனுநீதிச்சோழன் ஆரூரில் இருந்த தாகவே சிறப்புற விளங்கும்.

சேக்கிழார் பெருமான் இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவாரூரைத் தம் நூலின் தொடக்கம் முதல் இறுதிவரை உரிய இடத்தில் எடுத்துக்காட்டியுள்ளார் உயிர்களின் இதயம் போல உலகமாம் காதல் மடந்தையின் இதயத் தாமரையாகத் திருவாரூர் தென்திசையில் மலர்ந்தது (43) என உருவகித்து இதில் இறைவன் எழுந்தருளியிருப்ப தாக உரைப்பார்.

தொன்மையான நகரம் இது. இங்குத் திருமகள் வழிபட்டாள் (86). வேதம், வீணை, தோத்திரம், ஆடல், முழவு, பாடல் ஆகியவற்றின் ஓசைகள் இந்நகரில் கிளர்ச்சியூட்டின (87). பல இன்னியங்களின் ஒலிகளுடன் நாற்படையின் ஒலியும் அளவின்றி எழுந்தது (88). அடும் மகளிரின் சிலம்பொலி, மாடம், மாளிகை, கூடம், கோபுரம், சாளரம், அரங்கு ஆகிய இடங்களிலெல்லாம் ஒலித்தது (89). இந்நகரத்துள்ள மாளிகையில் உமையின் சேடி பரவை, அவதாரம் செய்ததும் (90) இதன் வீதிகளில் சுந்தரர்க்குத் தூதுசென்ற இறைவனின் திருவடி மணம் கமழ்வதும் (91) சேக்கிழார் சிந்தையில் நகரம் பற்றிச் சிறப்பாகப் புலப்படும். படை ஒலியும் சிலம்பொலியும் கேட்பதுடன் தெள்ளு மோசைத் திருப்பதிகங்களைக் கிளிகள் பாடின. அவற்றைப் பூவைகள் கேட்டன (93). இவ்வூர்க் கடை வீதிகள் ஒலியாலும் பலகலன்களின் ஒலி யாலும் கடல்போல் விளங்கின (94).

இங்ஙனம் புறநகர்ப்பாங்கினைக் காட்டியபின் அகநகரின் அழகைக் காட்டும் போது தாழ்சடையினர், சைவர், தபோதனர், முனிவர், மறையவர், இல்லற வாழ்வினர் ஆகியோர் வாழும் பல இடங்கள் இருப்பது புலப்படும் (96). இத்தகைய அழகுடைய இந்நகரம் நிலமகளின் நெற்றித் திலகம் போன்றது; சோழர் அரசுபுரியும் நகரம், மலர்மகளின் தாமரை போன்றது (97).

இந்நகரில் மனுவேந்தன் தோன்றி நீதியைத் தன் பெயராக்கினான் (100). ஆகம முறைப்படி புற்றிடங்கொண்ட புனிதர்க்குப் பூசனை செய்ய முறைவகுத்தான். இவன் மகன் தேரூர்ந்து சென்றபோது ஆன்கன்று ஒன்று தேர்ச்சக்கரத்தில் சிக்கி உயிர் விட்டது. அதனை அறிந்த சோழமன்னன்

பெருமானார் மேவியுறை திருவாரூர்த்
தோற்றமுடையுயிர் கொன்றான் ஆதலினால்
துணைபொருள் தான் ஆற்றவும் மற்றவற்
கொல்லும் அதுவேயாம்' (126)

எனத் தன்மகனைத் தேராழியில் மடித்து அறநெறி நின்றான். அப்போது உயிரிழந்த எல்லாம் உயிர்பெறத் திருவாரூர் வீதியில் இறைவன் அருள்புரிந்த மூதூர் (135) என்று

பெரியபுராணத் திருநகரச் சிறப்பு விளக்கும். இவ்வாறு மனுநீதிச் சோழன் பெருமையை இந்நகரச் சிறப்போடு இணைத்து விரிவாகப் புகழ்வார் சேக்கிழார்.

சிவன்பத்தராய்ப் பணிபவர் பலவகையினராவர். அவர்களில் திருவாரூர் ஆளும் சிவனை வணங்குபவர் ஒருவகையினர்(4154).

தொகை அடியார்களுள் 'திருவாரூர்ப் பிறந்தார் என்பவர்கள் ஒரு கூட்டமாவர். 'திருவாரூர்ப் பிறந்தார் புராணம்' என, பெரிய புராணத்தில் தனிப்புராணம் ஒன்று உள்ளது. சிவன் மகிழ்ந்தருளும் திருவாரூர்ப் பிறந்தார்கள் திருத்தொண்டைக் கூறுவது அருமையாகும் (4158). எனவே, இவ்வூரார் திருவடியை வணங்கினால் உயர்நெறி அடைவது எளிது (4159).

திருநாவுக்கரசர் திருநல்லூரில் இறைவனை வணங்கி இருந்தபோது திருவாரூரைத் தொழ நினைத்தார் (1479) எனப் பெரியபுராணம் கூறும்போது 'இவ்வூர்', அடியார் உள்ளத்தில் எத்தகைய சிறப்பிடம் பெற்றிருந்தது என அறிய முடிகிறது. அப்பர் இவ்வூர் வீதியுள் செல்லும்போது தம்முணர்வு அற்றவராய்ச் சென்றார் (1485). புற்றிடங் கொண்ட பெருமானைப் 'பாடிளம் பூதத்தினானும்' எனும் பதிகம்பாடி வணங்கினார் (1491). இவ்வூர் நமிநந்தி அடிகள் தொண்டைத் திருவிருத்தத்துள்,

'ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே

(தேவாரம் 4, 102, 2).

எனப்பாடித் திருவீதிப்பணி செய்து வந்தார். இவ்வூரிலிருந்து வலிவலம் கீழ்வேளூர், கன்றாப்பூர் ஆகிய ஊர்களுக்குச் சென்று இறைவனை வணங்கி மீண்டும் இவ்வூர்க்கே திரும்பினார் (1493) பிறபதிகளை வணங்கும் வேட்கைமிகுந்திட இவ்வூரை அகல நினைந்து செல்லினும் இங்குத் தம்உள்ளம் வைத்தார் (1495). திருப்புகலூரில் அப்பரை அரம்பையர் மயக்கிய போதும், திருவாரூர் அம்மானுக்காளேன் அலையேன்மின்னே, என்று திருத்தாண்டகம் புகன்றபோதும் (தேவாரம் 6, 27, 2) ஆரூரை மறவாமல் அடைக்கலம் புகுவார்

திருஞானசம்பந்தர் திருவானைக்காவில் இறைவனைத் தொழுதபோது 'மண்ணதுவுண்டரி (தேவாரம் 3, 109, 1) என்ற பதிகம்பாடித் திருவாரூரில் இறைவன் எழுந்தருளிய சிறப்பைப் போற்றுவார் (2244). திருப்புகலூரில் இவர் தங்கியிருந்தபோது திருவாரூரானைப் போற்றிப்பாடிய அப்பர் வந்தார் (2390). அவரை எதிரேற்ற சம்பந்தர் 'திருவாரூரிலனை எத்தன்மையில் தொழுதுய்ந்தது?' எனக் கேட்டார் (2393). ஆரூர்த் திருவாதிரை விழாவின் சிறப்பைக் கேட்ட சம்பந்தர்' திருவாரூர் வணங்குவதற்குச் சென்று மீண்டும் வருவேன்'' எனக்கூறிச் சென்றார் (2394).

வானளவு உயர்கொடி ஆரூர். பொன்னுலகு எனத்தோன்றப் 'பருக்கையானை' (தேவாரம் 2, 101,1) எனப் பதிகம்பாடி ஆரூர் எல்லையை அடைந்தார் (2397). சிவிகையிலிருந்து இறங்கி மலர்தூவித் திருவிருக்குக் குறள் பாடி ஆரூரைப் பணிந்தார் (2398). அடியார்கள் சம்பந்தரை வரவேற்க ஆரூரின் அழகு எல்லையற்று விளங்கியது (2399).

ஆரூரில் சிலநாள் தங்கிப் பின், பலபதிகளுக்கும் சென்று இறைவனை வணங்கி மீண்டும் ஆரூர் தொழச் சம்பந்தர் வந்தார் (2413). இவ்வூரின் புறம்பு போந்து இதனை நோக்கி நின்று 'பவனமாய்ச் சோடையாய்' (தேவாரம் 2, 79, 1) என்று பாடி (2416)

ஆரூர்ப் பணிந்து அரிது சென்றார் (2417). பல ஊர்கள் சென்று வணங்கியபோதும் திருவாரூர்த் தொழச் சம்பந்தர் நினைந்ததை (2471) பெரியபுராணம் குறிக்கும்.

நமிநந்தி அடிகள் என்னும் நாயனார் தம் ஊராம் ஏமப் பேருரை விட்டுச் சிவனை வணங்கத் திருவாரூரை அடைந்தார் (1871). இவ்வூர்க்கோயிலின் திருமுற்றத்தின் ஒரு பக்கத்திலுள்ள அரநெறி என்ற தலத்தை வணங்கினார் (1772). வேற்றுச் சமயத்தைச் சார்ந்த சமணர்களுக்குத் தெளிவுண்டாக்க அவர்கள் கூறியவாறு குளத்து நீரை விளக்கில் பெய்து விளக்கெரித்தார் (1879). இவர் திருப்பணியால் சமணர் அழியத் தேவர் பணியும் திருவாரூரில் ஏழுலகம் போற்றும் பெருமை நிலவியதாகச் சேக்கிழார் புகழ்வார் (1883). இவ்வடிகளின் தொண்டால் இறைவற்கு நிபந்தம் பலவும் சோழ மன்னன் அமைத்தான். இறைவன் திருவாரூரில் திருவிளையாடல் புரியும் செயலினையும் பங்குனி உத்திரத் திருவிழாவினையும் கொண்டருளுமாறு விண்ணப்பிக்க விழாக் கொண்டாடும் நிலைபெற்றார் அடிகள் (1885) இவ்வாறு திருப்பணிகள் பலவும் செய்து திருவாரூரில் சிவனடியார் வழி நின்றார் (1886). அடிகள், தம்மூரில் துயிலும் போது இவர் கனவில் சிவன் தோன்றி, 'ஞானமறையோர் ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம்கணங்களான பரிசு காண்பாய்' என அருளினார் (1892). துயிலிலிருந்து எழுந்த அடிகள், இறைவனின் திருவாரூருள் புக அந்நகரை எதிரே கண்டார் (1893) திருவாரூர்ப் பிறந்து வாழ்வார் எல்லாரையும் சிவன் வடிவாகக் கண்டு நிலத்தில் வீழ்ந்து வணங்கினார் (1894). திருத்தொண்டு புரிந்து ஆரூர் மன்னராம் சிவனடி சேர்ந்தார் (1897) எனும்போது திருவாரூரில் பிறக்கும் பெருமையை அடிகளின் காட்சி வாயிலாகப் பெரியபுராணம் உணர்த்துகிறது.

திருவாரூரில் பலசமணர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை நமிநந்தி அடிகள் புராணம் காட்டும். அவரைப் போன்றே சமணர்களின் தீய செயல்களைக் கண்டு தண்டி அடிகளும் அவர்களைக் கலங்கச்செய்தார் (3591). திருவாரூர்ப் பெருமானுக்கே தொண்டுபுரிந்த தண்டி அடிகளைச் (3593) சிவனருளால் கண் பெறுமாறு அரசன் கூற, அவர், 'சிவனுக்கு ஏய்ந்த அடிமை யான் என்னில் இன்று என்கண் பெற்றிடத் திருவாரூர் விரவும் சமணர் கண் இழப்பர்' என்றார் (3610). அதனால் கண்ணிழந்த சமணர் திருவாரூரை விட்டகல அரசன் ஆணையிட்டான் (3612). இவ்வாறு சைவ ஒளி பெருகத் திருவாரூர் வழிகாட்டியது.

இங்ஙனம் இசை மணக்கும் திருவாரூரை வணங்கத் தம்பட்டத்தரசியுடன் கழற்சிங்க நாயனார் வந்தார் (4098). இக்கோயிலில் வலம் வரும்போது பட்டத்தரசி இறைவற்குரிய பூவை எடுத்து மோந்தார். அது கண்டு சிவாபராதம் எனச் செருத்துணையார் என்னும் சிவனடியார் அவ்வரசி மூக்கை அறுத்தார். அரசரோ, பூவை எடுத்த அரசியின் கையையும் வாளால் அறுத்தார். இவ்வின்னல் தீரத் திருவாரூர் இறைவன் அரசர்க்குத் திருவருள் புரிந்தார் (4107) எனப் பெரியபுராணம் அடியார் பெருமையைப் பாடும். பிற சமயத்தார் மட்டும் தண்டனைக்குரியவரல்லர். அரசனின் பட்டத்தரசியே ஆயினும் சிவாபராதம்புரியின் தண்டிக்கத்தக்கவர் என்ற நடுநிலை நெஞ்சை அடியார் நெஞ்சில் குடிநிலை, உறவுநிலை என்பவற்றையும் விஞ்சி, நிலைநின்ற பெருமையைச் சேக்கிழார் திருவாரூர்ச் செயலாகக்காட்டுவார்.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் யாழ் வாசித்துப் பலபதிகளில் இறைவனை வணங்கித் தேவர் நாட்டாட்சியை விடுத்து ஆரூர் ஆண்டவரின் திருவாரூரை அடைந்து

(4221) இறைவனை வணங்கினார். இதனால் சீலமுடைய அடியார் பிரியாத திருவாரூரில் (4223) இறைவன் மீது யாழிசையும் பரவ இடம் தந்தது.

மலைநாட்டைச் சார்ந்த விறன் மிண்ட நாயனாரும் அந்நாட்டைக் கடந்து சிவன் வீற்றிருக்கும் திருவாரூர்க்கு வந்து பணிந்தார் (496). அடியாரைக்காணாது இறைவன்பால் சென்ற நம்பியாரூரரையும், அவரைத் தம்பிரான் தோழராக ஏற்ற இறைவரையும் புறம்பாகக் கொண்டு அடியார் பெருமையை முன்னிறுத்திய இவ்வூர்ச் செய்தியைச் சேக்கிழார் அழகுறக்காட்டுவார்.

திருநாவலூரில் பிறந்த நம்பியாரூரரை 'முத்தெறியும் நீர்வளமிக்க பொன்னி பெருகும் வண்ணப் பண்ணை ஆரூரில் நம்பால் வருக' என்ற சிவனருளால் வானில் நாதம் கேட்டுச் சுந்தரர் (254) இவ்வூரை நோக்கி வந்தார். அவரை வரவேற்கத் திருவாரூரில் வாழ்வோருக்குச் சிவன் அருள் செய்தார் (264). ஊரை அலங்கரித்து விரைப்பனி நீர் தெளித்துப் பாடல் பாடி ஆடல் புரிந்து திருவாரூர் வாழ்வோர் வாயிற் புறத்துச் சுந்தரரை வரவேற்றனர் (268). அவர் 'கரையுங் கடலும்' (தேவாரம் 7,73,1) என்ற பதிகத்தில் 'எந்தை யிருப்பது மாரூர்' எனப் பாடிப் பணிந்தார் (269). 'தோழமையாக உனக்கு நம்மைத் தந்தோம்; மணக்கோலம் என்றும் புனைந்து நிலவுலகில் வாழ்க' என்ற இறைவன் வாக்குச் சுந்தரர்க்குக் கேட்டது. அதுகேட்டு ஆரூரில் புற்றிடங்கொண்ட பிரானை வணங்கச் சுந்தரர் சென்றார் (274).

திருவாரூரில் இறைவன் முன்னின்று சென்ற பரவையாரைத் தேட நம்பியாரூரர் முற்பட்டார் (297). பரவையைத் தமக்களிக்குமாறு இறைவனையே வேண்டினார் (302). தேவர் பணியும் திருவாரூர் இறைவன் திருவடிகள், பரவையிடம் தூது செல்ல இவ்வூர் வீதியில் நடந்தன (324) எனப் பக்திச் சுவை நனி சொட்டச்சொட்டச் சேக்கிழார் பாடியுள்ளார். சுந்தரர்க்கு 'நம்பிஆரூரர்' என்றபெயர் இவ்வூரால் அமைய மக்களெல்லாம் சுந்தரரை 'ஆரூர் மறையவர் தலைவ' எனப் போற்றினர் (332). இவ்வூரின் இறைவனைச் சுந்தரர் வணங்கி அருள் பெற்றார் (346). பெரியபுராணத்திற்கு முதல் நூலாய் விளங்கும் 'திருத்தொண்டத் தொகை'யைப் பாடத் திருவாரூர் இறைவன் - 'தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்' என அடிஎடுத்துக் கொடுக்கச் (358) சுந்தரர் அடியார் பெருமையைப் பாடிப்பரவினார்.

திருத்தொண்டத்தொகை பாடிய நம்பியாரூரர் கருத்தொன்று காதலால் பொன் மதில் திருவாரூரில் சிவனை வணங்கிப் பிரியாது உறைந்தார் (3163). 'நம்பியாரூரரின் திருவாரூர்த் திருமாளிகைக்கு நெல் கொடுக்கக் குறையாகின்றது. என் செய்தேன்?' எனக் குண்டையூர் கிழார் வருந்த (3167) இறையருளால் நம்பியாரூரர் பரவைமனையளவின்றித் திருவாரூர் நிறைநெல்லைச் சிவபூதங்கள் கொண்டு தந்தன (3175).

இறைவன் அருளைப் போற்றிய சுந்தரர் பலபதிகளை வணங்கிப் பின் திருவாரூர் வந்தார் (3176). திருவாரூரடங்கவும் நெல்மலையைக் கண்டு அற்புதம் எய்தினார் (3179). அணியாரூர்த் தெருக்களில் ஆளியங்கப் பறையறைந்ததால் தம்மனை எல்லைக்குட்பட்ட நெல்லை எல்லாம் தத்தம் மனையிலேயே திருவாரூர் மக்கள் கொண்டனர் (3183). இவ்வூர் இறைவன் முன்னிலையில், தேவர் ஒதுங்கத் திருத்தொண்டர் மிடைந்தனர். இது, இவ்வூரைச் 'செல்வத் திருவாரூர்' எனப் புகழ் பெறச் செய்தது (3186).

ஒருமுறை திருவாரூர் பங்குனி உத்திரத்திருநாள் வந்தது (3200). பொன்பெறச் சுந்தரர் புகலூர் செல்ல அங்குச் செங்கல் பொன்னாயிட அவற்றைக் கொண்டு திருவாரூர்ப் பரவை மாளிகைக்குத் திரும்பினார் (3205).

திருமுது குன்றூரில் இறைவனிடம் நம்பியாரூரர் பெற்ற பன்னிரண்டாயிரம் பொன்னை ஆரூர்மக்கள் மருளுற்று வியக்க, அங்கே வரப் பெறவேண்டும் என இறைவனிடம் வேண்ட, அவர் 'மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் போய்க் கொள்க' என அருளினார் (3262).

சிவனுறை தலங்கள் பலவும் வணங்கி மேகம் சூழ்ந்த சோலைகள் நிறைந்த மலர்த்தடங்கள் அமைந்த செந்நெல் வயல் மருதத் திருவாரூரைச் சுந்தரர் அடைந்தார். செல்வமலி திருவாரூரில் இறைவனைப் 'பானு தாங்கிய' என்ற பதிகம் பாடி (தேவாரம் 7,33,1) வணங்கினார் (3295). அடியார்கள் சுந்தரர் இவ்வூர்பால் கொண்ட அன்பை உணர்ந்து 'திருவாரூர்த் தம்பிரான்' எனப்போற்றினர் (3312). நம்பியாரூரர் எனவும் சுந்தரர் குறிக்கப் பெற்றார் (3395) எனப் பெரியபுராணம் போற்றும்.

இத்தகைய சீரும் திருவும் பொலியும் திருவாரூர்ச் சார்ந்து நம்பியாரூரர்க்கு அன்பால், 'சோமாசிமாற நாயனார்' சிவலோக இன்பம் பெற்றார் (3633, 3634) எனச் சேக்கிழார் சிவனடியார் பெருமையை நிலைநாட்டுவார்.

திருவாரூர்மீது எல்லையற்ற அன்புகொண்டு மிகவும் மகிழ்ந்து வாழ்ந்த நிலையைச் சுந்தரரை மணக்கப்போகும் சங்கிலியாரும் நன்கு அறிந்திருந்தார் (3396). அவரை மணந்து, பின் பிரியாதுறையச் சபதம் செய்ததை மறந்து, பொதியத் தென்றல் திருவொற்றியூரில் வர, திருவாரூர் அணிவீதி அழகர் மங்கல வசந்தத் திருவோலக்கத்தைச் சுந்தரர் எண்ணினார் (3424). திருவாரூர் மகிழ்ந்தானை மிக நினைந்து,

'ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே' (தேவாரம் 7, 51, 10)

எனப்பாடி வருந்தினார் (3427). பின்னொரு நாள் ஆரூர்தனைப் பெருக நினைந்து திருவொற்றியூரை நீங்கிட, கண்ணொளி மறைந்து மூர்ச்சித்தார் (3428). அவ்வாறு கண்ணொளி நீங்கியதையும் சிவனருளாக எண்ணித் திருவாரூர் தொழநினைந்து, பொங்கு காதல் மீளா நிலைமையால் நம்பியாரூரர் சென்றார் (3431). காஞ்சியில் இடக்கண்ணொளி பெற்று அவ்வூரைக் கடந்து செல்லும்போது,

'அந்தியு நண்பகலும் அஞ்சுபதஞ் சொல்லி
முந்தி யெழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்றிரு வாரூர்புக்
கெந்தை பிரானாரை யென்றுகொ லெய்துவதே.'

என்று பாடி (தேவாரம் 7, 83, 1) ஏங்கினார் (3445). பல ஊர்கள் கடந்து கண்ணிறைந்த திருவாரூர், முன்தோன்றக் கண்டார் (3455). ஒரு கண்ணால் அதைக்கண்டு இன்பம் முற்றப் பெறாது பொழுது மயங்கும் மாலைப் போதில் ஊருட்புகுந்தார் (3456). மற்றொரு கண்தர 'மீளாவடிமை யுமக்கே' என்ற பதிகத்தில் 'எற்றுக் கடிகேளென் கண்கொண்டீர்,

நீரே பழிபட்டீர். மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே' (தேவாரம் 7, 95, 2) எனப் பாடிக் கண் பெற்றார்.

நம்பியாரூரரைப் பரவையார் எதிரேற்காது ஊடியதால், இறைவன் அவரிடம் தூது செல்லத் திருவாரூர் வீதியிலே சென்றபோது சிவலோகம் முழுதும் காணுமாறு ஆயிற்று (3490) எனச்சேக்கிழார் திருவாரூர் சிவலோகமாகக் கண்ட காட்சியை மனக்கோலமாக வரைந்துள்ளார்.

இவ்வாறு இறைவனைப் பரவையிடம் தூதுவிட்ட நம்பிஆரூரர் மீது செற்றம் கொண்ட ஏயர்கோன் கலிக்காமரின் செற்றத்தை நீக்கிய சுந்தரர் அன்புடன் அவரை அழைத்துக்கொண்டு மலர்புகழ் திருவாரூர் அடைந்தார் (3561). செற்றம் நட்பாகிக் கூடும் இடமாகப் பெரியபுராணத்தில் திருவாரூர் பொலிகிறது.

சேரமான் பெருமாள் நாயனார், நம்பி ஆரூரருடன் பல ஊர்களிலுமுள்ள இறைவனை வணங்கிப் பின், மகளிர் மணிவாய்க்குத் தோற்றுச் சேதாம்பல் இரவிலே மலரும் திருவாரூர் வந்து சேர்ந்தார் (3867). அவர்களிருவரையும் திருவாரூர் மக்கள் எதிர் கொண்டு காதலுடன் வணங்கினர் (3868) இரு நாயன்மார்களும் தொண்டர்களுடன் செம்பொன் மதில் ஆரூரைத் தொழுது சென்றனர் (3876).

கொடுங்கோளூரில் சேரமான் பெருமாள் நாயனாரின் அரண்மனையில் தங்கி மகிழ்ந்திருக்கும்போது சுந்தரர் ஒருநாள் திருவாரூர் ஆளும் சிவனை எண்ணிப் 'பொன்னும் மெய்ப் பொருளும்' (தேவாரம் 7, 59, 1) என்ற பதிகம் பாடி ஆரூரை விட்டு வந்ததற்கு அஞ்சினார் (3903). 'திருவாரூரைச் சென்று தொழுவேன்' என நம்பி ஆரூரர் புறப் பட்டார் (3904) அப்போது அவரிடம் சேரமான் பெருமாள், 'தேரூரும் நெடுவீதித் திருவாரூர்க்கெழுந்தருள நேருரும் மனக்காதல் நீக்க அஞ்சுவதா'கக் கூறினார் (3906). அது கேட்ட சுந்தரர், 'என்னுயிர்க்கின்னுயிராம் எழில் ஆரூர்ப்பிரானை . . மறந்திரேன்' என மறுமொழி கூறினார் (3907). கோமானைப்பிரிந்த காதலினால் விரைந்து சென்று கரும்பும் நெல்லும் சூழ்ந்து விளங்கும் திருவாரூர்ச் சென்றணைந்தார் (3919).

திருவாரூரில் இருந்த சுந்தரர் சேரமான் பெருமாளைக் காண விரும்பினார் (4231). அவரைக் காணச் சென்றார். சுந்தரர் வரவறிந்த சேரமான், 'ஆரூரிற் சைவன் அணைந்தான்' என உவகை முரசம் நகரெங்கும் அறைவித்தார் (4245). வந்த சுந்தரரிடம் திருவாரூர்ச் செல்வம் கேட்டின்புற்றார் (4248) எனச் சேக்கிழார் கூறும்போது அடியார் உள்ளத்தில் திருவாரூர்ச் செல்வம் நீங்காது நிலைபெற்றிருந்தது புலப்படும்.

இந்நிலையில் பெரியபுராணத்தொடக்கம் முதல் இறுதிவரை திருவாரூர்ச் செல்வத்தைச் சேக்கிழார் அள்ளி அள்ளித் தருகிறார். அதன் வாயிலாக அறிவன:

1) தொன்றுதொட்டுச் சோழர் முடிசூடிய நகர்களில் ஒன்றாக இருந்தது. சைவப் பயிர் வளர்க்கவும் மாற்று நெறியிலிருந்து மீளவும் சைவத்தாயகமாக விளங்கியது.

2) திருவாரூர்பிறந்த உயிர்களில் எல்லா உயிர்களும் ஒத்ததன்மை உடையன. நீதியை நிலைநாட்ட ஆன்கன்றின் உயிரும், அரசர் மகன் உயிரும் ஒன்றாகவே கருதப்பட்டன.

3) சைவ அடியார்கள் ஆரூர்ச் செல்வத்தைக் காண விரைந்துவந்தனர்; அல்லது பிற அடியார் வாயிலாகக் கேட்டு அதனைக் கண்டு மகிழ்ச் சென்றனர்;

ஆரூரை மையமாகக் கொண்டு மற்ற பதிகளை வணங்கி மீண்டும் இவ்வூரையே அடைந்தனர்; வேற்றூரில் இருந்தபோதும் இதன் ஈர்ப்பிலே தோய்ந்திருந்தனர்; செய்த சபதத்தை மீறியும் இதனைக்காண விரைந்து கண்ணை இழப்பினும் தம் ஆரூர்ப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

4) அடியார் சிறப்பைப் பரப்பும் சைவ இதயக்கமலமாக இது மலர்ந்திருந்தது; 'ஆண்டவனும் அடியாரின் தோழர்' என்ற பொதுமை உணர்வை வளர்த்தது; ஆண்டவன் அருளால் பெற்ற பொருளைத் தமக்கெனக் கொள்ளாது ஊர்ப் பொதுமையாக்கும் உணர்வை ஊட்டியது.

௫) ஆரூர் மக்கள் அனைவரும் சிவ கணங்களே என்ற உயர்நிலையைக் கூட்டி, அடியாரை வணங்கியே வீடுபேறு அடையலாம் என்ற உண்மை ஒளியைப் பரப்பியது.

அடிக்குறிப்புகள்

டாக்டர் தா.வே. வீராசாமி எம்.ஏ பிஎச்.டி., முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)., பெருஞ்சொல்லகராதித்துறை, பேராசிரியர் & தலைவர், தொகுப்பியல் துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

பெரியபுராணத்தொடர் எண்கள். இவை சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பின்படி உள்ளன.

மனுநீதிச்சோழன்

பேராசிரியர் டாக்டர். மு. சிவச்சந்திரன், எம்.ஏ., பி.எச்டி., பி.எட்., தருமபுரம்.

பெரிய புராணத்தில் மனுநீதிச் சோழனின் செங்கோல் உயர்வு, "திருநகரச் சிறப்பு" என்னும் தலைப்பில்கூறப் பெறுகின்றது. பொதுவாகக் காப்பியத்தில் நாட்டுச் சிறப்பு, நகர சிறப்பு போன்றவை கூற வேண்டும் என்னும் நியதியில் இது உள்ளது எனக்கருதலாம். 'நகரச் சிறப்பு' கூறும் பொழுது, காப்பியத்தின் நாயகன் பிறந்த ஊரின் சிறப்பினைக் கூறுவது மரபு. ஆனால் பெரியபுராணத்தில் காப்பிய நாயகராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த திருநாவலூரின் சிறப்புக் கூறப்பெறாமல் திருவாரூரின் சிறப்புக் கூறப்பெறுவது சிந்தனைக்குரியது.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த நோக்கம் பற்றிச் சேக்கிழார் கூறும் பொழுது,

"மாதவம் செய்தென்திசை வாழ்ந்திட
தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரா"

அவதரித்தார் என்று எழுதுகின்றார்.

அருளாளராகிய சுந்தரர் பிறந்தது திருநாவலூர் எனினும் அவர் சிறந்தது திருவாரூரில் ஆதலின்-அதாவது அவர் அவதரித்த நோக்கமாகிய திருத்தொண்ட தொகை பாடியது திருவாரூரில். ஆதலின் அவ்வூரையே திருநகரச்சிறப்பில் சிறப்பித்துக் கூறுவது உரியது எனச்சேக்கிழார் கருதினார் போலும். இவ்வகையில் குன்றத்தூராளி திருநகரச் சிறப்பினை முன்பு அமைத்துள்ளார். இதற்கு முன்பு, திருவாரூர் என்னும் நகரம் அமைந்துள்ள சோழநாட்டின் சிறப்பினைத் "திருநாட்டு சிறப்பு" என்னும் தலைப்பில் கூறி, இவரின் அவதாரம் நிகழ்வதற்குக் காரணமாகிய நிகழ்ச்சி நடந்தது திருக்கயிலையில் ஆதலின் அதன் சிறப்பினைத் "திருமலை சிறப்பு" என்னும் தலைப்பில் கூறிச் சேக்கிழார் இவற்றிற்கு ஒரு இயைபையும் காட்டுகின்றார்.

திருத்தொண்டத்தொகை பாடி அடியார்களைப் போற்றுவதே சுந்தரரின் அவதார நோக்கமாதலின் அவரை வழிபொற்றிச் சேக்கிழார் சுவாமிகளும் அடியார்களைப் போற்றிப் பரவுவதற்கு என்றே "திருக்கூட்டச் சிறப்பு" என்னும் தலைப்பினை அமைத்துக் கொள்கின்றார் இங்ஙனம் நூலின் தொடக்கத்தில் பாயிரத்திற்குப்பின் தடுத்தாட் கொண்ட புராணத்திற்கு முன் உள்ள இந்நான்கு இயல்களும் அவசியமுடையனவாகவும், கருத்துத் தொடர்ச்சி கொண்டனவாகவும் விளங்குகின்றன எனக் கருதலாம்.

இனி, திருநகரச்சிறப்பில் மனுநீதிச் சோழன் வரலாறு அமைந்துள்ள முறைமையினைச் சிந்திக்கலாம். திருவாரூர் சோழமன்னர்களுக்குரிய சிறந்த நகரமாக விளங்கிய காரணத்தினால், திருநகரச் சிறப்பினைக் கூறவந்த சேக்கிழார், சோழ மன்னர்களின் பெருமையினைக் கூறுவதற்கு இவ்விடத்தைப் பயன்படுத்திக் கொண்டார். அநபாய சோழமன்னனின் முதலமைச்சராக விளங்கியிருந்த காரணத்தினாலும், அச்சோழ மன்னனின் வேண்டுகோளினாலும் இக்காப்பியம் எழுதப் படுகின்றது என்னும் வகையில் அம் மன்னனுக்கு நன்றி கூறும் முகமாகவும்

இப்பகுதி அமையப்பெற்றுள்ளது. அதனால்தான் மனுநீதிச்சோழனைச் சிறப்பித்துக் கூறுமிடத்தில் சேக்கிழார் சுவாமிகள் அவன் கதிரவன் வழிவந்தோன் என்றும், அநபாய சோழனின் வழி முதன்மையுடையவன் என்றும் கூறுகின்றார்.

''அன்ன தொன்ன கருக்கர சாயினான்
துன்னு வெங்கதி ரோன்வழித்
தோன்றினான்
மன்னு சீரந பாயன் வழிமுதன்
மின்னு மாமணிப் பூண்மனு வேந்தனே''

என்பது பெரிய புராணப்பாடல்.

திருநகரச் சிறப்பில் திருவாரூரை மையமாகக் கொண்டு சோழ மன்னர்களின் பெருமைகளைக் கூறவந்தவர், குறிப்பாக மனுநீதி சோழனின் செங்கோல் சிறப்பினை விளக்கிக் கூறியதன் காரணம் என்னவெனில், ஓர் உயிர் தன்னிலையில் கடமை தவறாது இருக்குமானால், அதுவே கடவுள் திருவருளைப் பெறுவதற்குக் காரணமாக அமையும் என்னும் கருத்தினை, இச்சோழ மன்னனின் வரலாறு துல்லியமாகக் காட்டுவதால் இதனையே அடிப்படையாகக் கொண்டு இக்காப்பியத்தைத் தொடங்குகின்றார்.

திருவாரூர்ச் சிறப்பு:

திருவாரூர் நகர், பிறந்தால் முத்தி தரும் சிறப்புடையது. நம்பியாரூரருக்காகச் சிவபெருமான் ஒருமுறைக்கு இருமுறை நடந்து சென்ற சிறப்புடையது. எனவே இவ்வூர் வீதிகளைச் ''சிவம் நாறும் வீதி'' என்பர். சேக்கிழார் சுவாமிகள், இதனைக் கருத்தில் கொண்டு,

''..வன்தொண்டர்க்குத் தூதுபோய்
நடந்த செந்தா மரையடி நாறுமால்''

என்று கூறுகின்றார். இவ்வூரில் வாழும் மனிதர்களேயன்றிக் கிளிகளும் திருப்பதிகங்கள் ஓதுகின்றன என்றும் அவற்றை நாகணவாய்ப் பறவைகள் கேட்கின்றன என்றும் கூறுகின்றார்.

''...திருவாரூர் மருங்கெலாம்
தெள்ளு மோசைத் திருப்பதி
கங்கள்பைங்
கிள்ளை பாடுவ கேட்பன
பூவைகள்.''

என்பது சேக்கிழார் வாக்கு.

மனுநீதியின் மாண்பு:

இந்நகரைத் தலைநகராகக் கொண்டு ஆளும் மனுநீதிச்சோழன் மக்களுக்கேயன்றி உயிர்களுக்கெல்லாம் கண்ணும் உயிரும் போல இருந்து காவல் செய்கிறான். இங்ஙனம் மண்ணுலக உயிர்களுக்கு மட்டுமின்றி விண்ணவர்க்கும், அவர் மகிழும்படி பல வேள்விகளைச் சிறப்பாகச் செய்கின்றான். இக்கருத்தினைச் சேக்கிழார்,

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாங்
கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்
விண்ணு ளார்மகிழ் வெய்திட வேள்விகள்
எண்ணி லாதன மாண வியற்றினான்

எனக் கூறுகின்றார். இத்தகைய மன்னன் தன்னளவில், உயிர்களைக் காக்கும் செயல்களைச் செய்தானாயினும் எதிர்காலத்தில் இயற்கைச் சீற்றத்தினாலும் பகைவர்களாலும் தீங்குகள் எவையும் தன்நாட்டு உயிர்களுக்கு நேராவண்ணம் இறைவனை நோக்கி வழிபடும் முகமாகப் பூசனை புரிந்து வாழ்ந்தான். கோயிலில் பூசைகள் தடைப்படின் அதனால் ஆட்சி செய்வோருக்கு முதற்கண் பாதகம் விளையும் என்றும், காலத்தில் மழை பொழியாது என்றும், களவு போன்றன மிகுந்து மக்கள் துன்புறுவர் என்றும் அறிந்து மனுநீதி ஆட்சி செய்தான்.

''முன்னவனார் கோயிற் பூசைகள்
முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள; வாரி
வளங்குன்றும்;
கன்னங் களவு மிகுத்திடும்; காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.''

என்ற திருமூலர் பாடல் ஈண்டு நினைக்கத்தக்கது.

அரசுகன்றும், ஆன்கன்றும்:

இம் மன்னனுக்கு இளஞ்சிங்கம் போன்று ஓர் ஆண்மகன் பிறந்தான். பல கலைகளையும் கற்றுத் தேர்ந்த இவ்விளவரசன், ஒரு நாள் தானை சூழ அரண் மனையினின்றும் புறப்பட்டுத் தேரின் மீதேறி அரச வீதியிலே உலாப்போந்தான். அவ்வமயம் அங்கிருந்த பலரும் காணா வண்ணம் பசுவின் இளங்கன்று ஒன்று துள்ளி வந்து தேர்க்காலில் வீழ்ந்தது. இதனைச் சேக்கிழார், அறக் கடவுள் சிறிதும் கருணையின்றி அரசனது நீதியின் தன்மையினைச் சோதித்தற்கு வந்தாற்போலக் கன்று வந்து வீழ்ந்தது என்கிறார். அக்கன்று தேர்க்காலில் பட்டு விண்ணுலகு அடைய. அது கண்ட தாய்ப்பசு அலறிச் சோர்ந்தது. இதனைக் கண்ட இளவரசன், ''வந்தது இங்கு அபாயம்'' என்று சொல்தடுமாறி இதற்கு என் செய்வேன்? என்று தேரினின்று இறங்கி நின்றான். ''மனுவெனும் என் கோமானுக்குப் பழிவந்து எய்தப் பிறந்தேனே'' என்று வருந்தினான். ''என் தந்தையின் செவிக்கு இச்செய்தி சேரா முன்னம் யான் இதற்குப் பரிகாரம் தேடுவேன்''என்று அந்தணர்களை நாடினான்

இந்நிலையில் பசுவானது, முகத்தில் கண்ணீர்பெருக மன்னனின் அரண்மனை வாயிலில் கட்டியிருந்த அழகிய மணியினைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது. அதைக்கேட்ட மன்னன் அரியணையிலிருந்து இறங்கி வர, காவலர்கள் பசு ஒன்று தூங்கிய மணியினைக் கோட்டால் துளக்கியது என்றனர். இங்கு சேக்கிழார், 'தூங்கிய மணி' என்னும் சொல்லில் இருபொருளை வைத்துப் பேசுகிறார். தொங்கிக் கொண்டிருந்த மணி என்னும் ஒரு பொருளும், இந்நாள் வரை யாராலும் அடிக்கப்பெறாது தூங்கிக் கொண்டிருந்த மணி என்னும் மற்றொரு பொருளும் காணலாம் உடனே மன்னன் பசுவை நோக்கி அமைச்சனை இகழ்ந்து பார்த்து, ''என் இதற்கு உற்றது?'' என்றான். அமைச்சனும் நடந்ததை மறைக்காமல் உரைத்தனன். ''வளவனே! உன் மகன் ஆங்கோர் மணிகள் பூட்டிய தேரில் ஏறித் தானைகள் பலவும் சூழ்ந்து வர அரசர்கள் மட்டுமே செல்லும் வீதியில் போகும் பொழுது இளமையான ஆண் கன்று ஒன்று தேர்ச் சக்கரங்களின் இடையில் புகுந்து இறந்ததாக இத்தாய்ப் பசு தளர்வுறுகிறது '' என்றான். இப்பாடலில் சேக்கிழார் நுட்பமும் திட்பமும் விளங்கக் கருத்துகளைக் கூறியுள்ளார்.

பசுவின் கன்று இறந்தற்கு நின் மகன் தேரில் சென்றது காரணம் என்பது செய்தி. ஆனால் அமைச்சன். அவ்விளவரசன் குற்றவாளி அல்லன் என்னும் கருத்தில் ஐந்து காரணங்களைக் கூறுகின்றான்.

(1) தேர் மணிகள் கட்டியும் நெடிதாக இருந்ததும் காரணமாக அக்கன்று தப்பித்து இருக்கலாம் என்பது.

(2) தானைகள் உடன் சென்ற பொழுது கன்று இளவரசன் தேர்க்காலில் வந்து வீழ்ந்தது எதிர்பாரது நிகழ்ந்தது.

(3) இவன் சென்ற வீதி அரசர்கள் மட்டுமே செல்லும் வீதியாகும். அதில் கன்று ஓடிவரக் காரணமாக இருந்த பிறரே குற்றம் செய்தவர்கள்.

(4) இக்கன்று இளங்கன்றாதலின் பயமறியாது வீழ்ந்து போனது.

(5) கன்று வீழ்ந்ததும், தேரின் முன் சக்கரங்களில் அல்லாதுபின்சக்கரங்களில் ஆதலின் இளவரசன் குற்றமுடையோன் அல்லன்.ஈண்டு,சேக்கிழார், முதலமைச்சராய் இருந்தவர் ஆதலின் அமைச்சருக்

குள்ள கடமையினையும் பொறுப்பினையும் உணர்ந்து எழுதியுள்ளார். மேலும், ''கன்று இறந்தது'' என்று கூறாமல் ''கன்று இறந்ததாக'' என்று கூறுவது அமைச்சராய் இருப்போர் அரசனிடம் கூறவேண்டிய பாங்கினைக் காட்டுகிறது.

மகனை முறைசெய்த மன்னவன் :

இச்செய்தியினைக் கேட்ட அரசன், தன்செங்கோட் சிறப்பினை எண்ணித் தளர்ந்து வருந்திச் சோர்ந்து போனான். அதுகண்ட மந்திரிகள், அந்தணர் நூலில் சொன்னவாறு தீர்வுகாணல் தக்கது என்றனர் அதனைக் கேட்ட மன்னன் ஏற்காது ஓர் அரசனின் கடமை இன்னது என வலியுறுத்திப் பேசுகின்றான். ஒரு மன்னன் நாட்டைக் காக்கும் பொழுது, அந்நாடு வாழ் உயிர்களுக்கு. தன்னாலோ, தன் சுற்றத்தாலோ. பகைவர்களாலோ கள்வராலோ, பிற உயிர்களாலோ இடையூறு நேரா வண்ணம் காத்தலோடு, அங்ஙனம் நேர்ந்து விடுமோ என்னும் அச்சங்கூட நெஞ்சில் உதியா வண்ணம் காக்க வேண்டும் என்றான். இதனை சேக்கிழார்,

''மாநிலங்கா வலனாவான் மன்னுயிர்க்
காக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன்
பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரா
லுயிர் கள்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா
னல்லனோ?''

என்று கூறுகின்றார்.

இந்நிலையில் மந்திரிகளின் சொற்களை ஏற்காத மன்னன், ''என் மகன் செய்தான் என்பதற்காக பரிகாரம் தேடச்சொல்லும் நீங்கள், இச்செயலை வேறு ஒருவன் செய்திருப்பானாயின் அவனைக் கொல்லுதல் தக்கது என்பீர் அன்றோ? இது மந்திரிகள் வழக்கோ!'' என்று கூறினான். அவ்விடத்தில் ஓர் அமைச்சன், ''ஆன் கன்று இறக்கக் காரணமாய் இருந்த ஒரு அரச கன்றினைக் கொல்லுதல் இதுவரை மரபன்று; கழுவாய் தேடுதலே தக்கது'' என மொழிந்தனன் இது கேட்டுச் சினந்த மன்னன் எவ்வுலகில் எப்பசு எக்கன்று இறந்தபொழுது இங்ஙனம் மணிஅசைத்து உயிர்துடித்து அழுதது?'' என்று கேட்டு, ''எம்பெருமான் வீற்றிருந்தருளும் திருவாரூரில் பிறந்த ஓர் உயிரினை கொன்றவன் என் மகன். ஆதலின் அவனைக் கொல்லுதலே முறை'' என மொழிந்தான். ''பிறந்தால் முத்தி தரும் தலம் திருவாரூர் ஆதலின் இதனில் பிறந்த உயிரினைக் கொன்றவனுக்கு இதுவே தீர்வு' என மன்னன் கருதினன் போலும்! மேலும், கன்றை இழந்து துயருறும் பசுவின் துன்பத்திற்கு நீதி, அதுபோன்று என் மகனை இழந்து நானும் துன்புறுவதே' என மன்னன் கருதினன்.

உடனே மன்னன், தன் மகனை அழைத்து அமைச்சன் ஒருவனை நோக்கி ''என்மகனை அத்தெருவில்தேர்க்காலில் இட்டு ஊர்ந்து வருக'' என்றான். ஆனால் அமைச்சன் அது செய்யமாட்டாது, தனி ஓர் இடம் சென்று, தன் உயிரை துறந்தான். இதனை அறிந்த மன்னன், தன்மகனைத் தானே தேர் ஊர்ந்து முறை செய்ய நினைந்து அங்ஙனமே செய்தான். தருமத்தின்வழிச் செல்கையே தன்கடன் என்றும், அப்பொழுது உறவுக்கும் உரிமைக்கும் அணு அளவும் இடம் இல்லை என நினைந்தும் முறைசெய்த மன்னனின் மாண்புதான் என்னே! விண்ணவர்கள் பூமாரி பொழிய, அவ்விடத்து அரசனது செயற்கரிய செயலை கண்ட மண்ணுலகோர் கண்ணீர் மழை பொழிந்தனர். வீதிவிடங்கப் பெருமான், அவ்விடத்து அரசனுக்குக் காட்சி கொடுத்து அருளினார். இறைவன் திருவருளால், முதலில் ஆன் கன்றும், பிறகு அரசன் கன்றும், அதன்பின் மந்திரியும் எழுந்தனர். முன்னவனே முன்னின்று முடித்தருளிய இந்நிகழ்ச்சியால் அரசன்

கன்றினை அரசன் அணைத்துக்கொள்ள, ஆன் கன்று தாயின் மடியில் சென்று பால் அருந்த, அனைவரும் மகிழ்ச்சி கொண்டனர்.

முடிவுரை :

திருவாரூர்ப் பெருமான் கடமை தவறாத மனுவேந்தனுக்கு வீதியிலே அருள் கொடுத்த எளிவந்த பெருமையினை ஏழுலுகும் எடுத்து ஏத்துகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தரிசித்தலோடு, ஒவ்வொரு உயிரும் தன் வாழ்வினைத் தருமத்தின்வழி அமைத்துக் கொண்டால் இறையருள் எளிவந்த நிலையில் கிட்டும் என்பதற்கு இவ்வரலாறே சான்றாகும்.

''தருமத்தை நாம் கடைப்பிடித்து
வாழ்ந்தால்
தருமம் நம்மைக் காப்பாற்றும்''

இது நம் வாழ்வின் தாரக மந்திரம் எனக் கொண்டு உய்தி பெறுவோமாக!

மும்மணிக்கோவையில் ஒரு முதல் மணிக்கோவை

டாக்டர். அ. கலியபெருமாள், எம். ஏ., எம். பில்., பி. எச்டி.,
பேராசிரியர், ஏ. வி. சி. கல்லூரி.

மும்மணிக்கோவை :

பலவகைக் கோவையாம் பக்திப் பிரபந்தமே மும்மணிக்கோவை. பன்னிரு பாட்டியல்,

''வெள்ளையும் அகவலும் நேரிசை யாகக்
கலித்துறை வரஅந் தாதி யாகி
முறைமையின் இயல்வது மும்மணிக்
கோவை'' (156)

எனப்பகர்வதால் வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய மூவகைப் பாக்களும் அந்தாதித் தொடையில் அமைவது 'மும் மணிக் கோவை' என்பது விளங்கும். பாவகையிலும் நேரிசை வெண்பா, நேரிசை ஆசிரியம், கட்டளைக் கலித் துறைப் பாக்களே இடம்பெறும். ''.. ஆண்டகவல்/முன்முறையே வெண்பாக் களித்துறைய'' (செய்-3) என்று வெண்பா பாட்டியல், அகவலை முன்வைத்து விளம் பும். இந்நூல் முப்பது பாக்கள் பெறு வதை, ''தொகை முப்பது பெற'' (55) என்று இலக்கணப் பாட்டியல் மொழியும். தொன்மை வாய்ந்தனவாய்ப் பக்திச்சுவை சொட்டும் ஏழுபிரபந்தங்கள் பதினோராம் திருமுறையிலேயே உள்ளன. சேரமான் பெருமாள் நாயனாரின் 'திருவாரூர் மும் மணிக்கோவையும்', நக்கீரதேவரின் 'திருவலஞ்சுழி மும்மணிக்கோவையும்', இளம் பெருமாள் அடிகளின் 'சிவபெரு மான் திரு மும்மணிக்கோவையும்', பட்டி னத்தடிகளின் 'திருக்கழுமல மும்மணிக் கோவையும்', 'திருவிடைமருதூர் மும் மணிக்கோவையும்' சிவபிரான் பற்றியன வாம். அதிரா அடிகளின் 'மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை' விநாயகரை ஆராதிப்பது. அடியார்களை போற்றும் அற்புதப் பிரபந்தமே, நம்பி யாண்டார் நம்பியின் ஆளுடைய பிள்ளை யார் 'திருமும் மணிக்கோவையாம்.' தலப் பெயரில் அமைந்த கோவைகள் திருனத் தொடங்கப் பாட்டுத்தலைவர் பெயரில் அமைந்தவை, மும்மணிக் கோவைக்கு முன் அடைமொழி பெற்று விளங்கக் காணலாம். மும்மணிக்கோவை நூல் களுள் முதல் மணிக்கோவையாக விளங்கும் மூல இலக்கியம் 'திருவாரூர் மும்மணிக்கோவையே' யேயாகும்.

மூல இலக்கிய மூலம்:

கொடையிற் சிறந்த கோமகன் சேரமான் பெருமாள் 'பருவக் கொண் மூப்படியெனப் பாவலர்க்கு உரிமையின் உரிமையின்' உதவுவதாகப் போற்றும் திருமுகப்பாசுரம் உயிர்கள் கழறுவ உணரும் சேரமானை, 'கார் கொண்ட கொடைக் கழற்றறிவார்க்கும் அடி யேன்' (திருத்தொண்டத் தொகை-6) என்று ஏத்துவார் ஆரூரர். இவர். பொற் கொடையில் அன்றிச் சொற்கொடை யிலும் மிக்கார் என்பது, இவர் அருளிய 'பொன்வண்ணத் தந்தாதி, 'திருவாரூர் மும்மணிக் கோவை'. திருக்கயிலாய ஞான உலா' ஆகியவற்றால் விளங்கும். இவைகளுள் மும்மணிக் கோவை ஆரூரர் அருகிருக்க ஆரூர் இறைவன் மீது பாடல் பெற்றதாகும். இச்செய்தியை சேக்கிழார்

'தேவர் முனிவர் வந்திறைஞ்சும்
தெய்வப் பெருமான் கழல்வணங்கி
மூவர் தமக்கும் முதலாகும்
அவரைத் திருமும் மணிக்கோவை
நாவல் ஊரர் தம்முன்பு
நன்மை விளங்கக் கேட்பித்தார்
தாவில் பெருமைச் சேரலனார்;
தம்பிரானார் தாங்கொண்டார்'.
(கழற்றறிவார் நாயனார் புராணம் 69)

எனக் குறிப்பார். எனவே திருப்பாட்டு இயற்றும் திறத்தவராம் ஆளுடைய நம்பி அருகிருந்து கேட்ட பெருமையை இந் நூல் அடைகிறது.

நூலமைப்பு:

நூலின் பெயருக்குப் ஏற்ப 'ஆரூர் அமுதன் பெருமை ,மூவகைப் பாக்களில் அந்தாதித் தொடையாக அமைந்த முப்பது பாக்களில் நுவலப்படுகிறது.அன்பின் ஐந்திணையாம் அகப்பொருள் அமைதி உடையதாய், இறைவன் பெருமை பேசுவதையே இலக்காகக் கொண்டு பாடப் பெற்றுள்ளது இந்நூல்.'விரிகடல்' எனும் முதற்பாவின் தொடக்கம் முப்பதாம் பாடலில் 'விரிகடலே' என்று முடிவெய்துகின்றது. பெரும்பான்மையும், முதற்பாடலின் அந்தமாகிய ஈற்றுச் சீர்ச் சொல்லே அடுத்த பாடலின் ஆதியாக இடம் பெறுகின்றது. 'கண்துயிலாவே' (4) 'துயிலா' (5) எனவும், 'ஏந்திழைதானே' (7). இழை (8) எனவும், 'தம்பாலோனே' (19) 'பாலோய்'(20) எனவும்,'ஆயினளே (28), ஆயின(29)எனவும் வரும்.ஆயினும் சில இடங்களில் கீழ்க்காணுமாறு வேறுபடுவதையும் காணலாம். (எ.கா) சொல் அளவில் அந்தாதியாக அமைந்தும் பொருளளவில் வேறுபடும் இடங்களையும் 'கடிது' (17) 'கடிமலர்' (18) எனவும், 'அம்மனையே'(18),'மனை'(19)எனவும், வரும் பகுதிகளில் காணலாம்.

எல்லாப் பாடல்களிலும் இறைவன் பெருமை இயம்பப்படுகின்றது.பதினான்கு பாக்களில் (1. 4, 6, 7, 8, 10, 13, 14,16,18, 22, 25, 28, 29) ஆரூர் குறிக்கப்படுகிறது. இறைவன், ஆரூர் இயல்புகள் உவமை வாயிலாக எடுத்துரைத்தப் படுகின்றன. ஆரூரேயன்றிச் சிராமலை, கடவூர், மாந்துறை, மறைக்காடு ஆகிய தலங்களும் இடம் பெறுகின்றன. முதற்கண் 'மராமரச் சோலைச் சிராமலை' (10) எனவும், 'சிராமலை வாய்க்கொந்தார் பொழில்'(12) எனவும் சிராமலைத்தலம் செப்பப்படுகிறதுஅணிநலம் பொருந்தக் கடவூர்பற்றிய குறிப்பு அமைகிறது. '. வார்சடையான் கடவூர்/துறைமலி ஆம்பல்பல் லாயிரத்து தமியே யெழினும் / நறைமலி தாமரை தன்னதென்றே சொல்லும் நற்கயமே' (24) என்பது பாடற்குறிப்பு. கடவூரில் உள்ள பொய்கைகளில் பல்லாயிரம் ஆம்பல்கள் படர்ந்திருப்பினும் பங்கயம் அலர்ந்த பொய்கைகள் அல்லியின் பெயரையல்லாமல் தாமரையின் பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றன. அது போல.பரத்தையர் பலர் இருப்பினும் அணியனத் திகழும் தலைவிக்கே தலைவன் உரிமையுடையவனாம். ஒரே பாடலில் மாந்துறையும் மறைக்காடும்,'... சீருலாம்/ மாந்துறைவாய் ஈசன் மணிநீர் மறைக் காட்டுப்/பூந்துறைவாய்'' (26) எனச் சுட்டப்படுகின்றன.

ஆரூர்:

ஆரூரின் இயற்கை அமைப்பும், ஆவணத் திறனும், விழாச் சிறப்பும், வழிபாட்டு நிலையும் விளக்கமாக பேசப்படுகின்றன. ஆரூர் என்று பெயரளவில் ஒரே பாடலில் (8) குறிக்கப்படுகின்றது. ஊரின் நீர்வளம்'அலை புனல் ஆரூர்'(16) 'தண்ணாரூர்' (14), 'அந்தண் ஆரூர்' (4) என உரைக்கப்படுகிறது. ஆரூர்,'திண்ணிதிற் செய்த சிறைகெழு செம்புனல்' (22) அமைந்தது. புனலில் தாமரை பூத்து விளங்குவதை, 'வளமலி கமலம்' (7), 'செய்வளர் கமலம்' (13) எனவரும் தொடர்களால் அறியலாம்.'செறிபொழில்

அருகுடை ஆரூர்'(10) என பொழில் நலம் கூறப்படுகிறது. ஆவணத்துறைக் காட்சியை,'தூக்கும் எழில்மென் காட்சிக் கண்ணது' (19)என்பதன் மூலம் நமக்குப் புலப்படுத்துகிறார் கவிஞர். ஆரவார மிக்க விழாவின் அருமையை 'ஆர்கலி விழா' (25) என்பது விளக்குகிறது. ஆரூர் எல்லையில் இரும்பலி சொரியும் 'கல்லும் (1)வளமிகு ஊரினை நலமிகு தலைவிக்கு உவமையாகச் சொல்லுதல் சங்கப்புலவர் வழக்கு. ஓரம் போகியார், 'வேனிலாயினும் தண்புனல் ஒழுகும் / தேனூர் அன்னை இவள்' (ஐங்குறுநூறு-54) என ஒ''பிடுவார். இதைப் போலவே இந்நூலாசிரியராகிய சேரமான் பெருமாளும் சீர்மிகு தலைவிக்கு ஏர்மிகு ஆரூரை உவமையாகச் (பாடல் 6, 29) சொல்லுவார்.

அமுதன்:

அனைத்துப் பாக்களிலும் இணைத்து போற்றப்படும் ஆரூர் இறைவன் 'அமுதன், அண்ணல், உத்தமன் சங்கரன் நக்கன், பரமன், பூதநாதன், அதிமூர்த்தி, வானவன், ஈசன்' என்றெல்லாம் இயல்பு பற்றிக் குறிக்கப்படுகிறான். உரிமை பற்றி 'எந்தை என்றும், கண்ணாளன் என்றும்' ஓதப்படுகின்றான். அவனது தோற்றத்தில் அயரவைக்கும் ஏற்றமும், இயல்பில் ஈரமும், செயலில் வீரமும் புலப்படுகின்றன. தோற்றத்தில் முதற்கண் தோன்றுவது உமையொரு பாகத்தோற்றமே. 'அரிவை பாகத்து அண்ணல்'(1,7) எனச்சுட்டும் கவிஞர், பின்னால் திருமட மலைமகட்கு ஒருகூறு கொடுத்துத்தன்/ அன்பின் அமைத்தவன்' என்று வியந்து போற்றுவார்.

சடாமுடி தாழ்ந்து நீண்டது; ஆகாய கங்கையை அள்ளி முடித்தது; திங்களும், அரவும், கொன்றையும் திகழ்வது; 'கடிமலர் கொன்றையும், திங்களும், செங்கண் அரவும் அங்கே/முடிமேல் ஆக்கிய முக்கண் நக்கன்' (18) எனப் போற்றப்படுவது அத்தோற்றம். குரா மலரும் அணி செய்யும் கோலத்தை 16ம் பாடல் குறிக்கிறது. சடாமுடியின் நீட்சியோ 'வார்சடை' (1,24) என்றும், 'தாழ்ந்து கிடந்தசடை' (30) என்றும் சுட்டப்படும்' '...கங்கை/வருவிசை தவிர்த்தவார்சடை, (1), 'கங்கை தாங்கிய பிஞ்ஞகன்' (9), 'தீர்த்தச்சடையன்' (12), '.. விண்ணின்றிழிந்த பிளிறு குரல் உலா நீர்க்ங்கை ஒரு சடை கரந்து' (28), எனவரும் பகுதிகளில் ஆறு தாங்கிய ஆறு உணர்த்ப்படுகிறது. திங்களே கன்னியாக திகழ்வதை 'அந்திங்கள் கண்ணியான்' (5) என்னும் தொடர் புலப்படுத்துகிறது.

நெற்றியில் கண் விளங்கும் நீர்மை சிவனுக்கே உரியது. ''கண்ணார் நுதல்'' (3), ''முக்கண் மூர்த்தி'' (10), ''முக்கணான்'' (11) கண்ணுதல் எந்தை'' (16), ''முக்கண் நக்கன்'' (18), என வரும் பகுதிகளில் மூன்றாம் கண் மலர்வதைக் காணலாம். நெற்றிக் கண்ணுக்குக் கீழே நிலவும் கண்டம் இருண்டது; தியாகப் பின்னணி கொண்டது. 'கண்டத்து இளமாசி' (2) காமரு கண்டம்' (3) ''துன்னரும் நஞ்சாரும் மிடறு'' (6), ''இறை கண்டம் போலிருண்ட'' (21), ''மணிதிகழ் மிடறு'' (25) ஆகிய பகுதிகள் கண்டத்தின் இயல்பை நன்கு விளக்குவனவாம். 'நன்பணைத் தோள்' (2), எனத் தோளும் 'கலை யமர் கை' (16). 'துள்ளும் கலைக்கை' (27) எனக் கலைமான் ஏந்திய கையும் சுட்டப்படுகின்றன. அழகும் திருநீறும் அலங்கரிக்கும் மார்பை' 'சுடுபொடி அணிந்த துலங்கொளி அகலம்' (22) என்றும், ''அணிதிகழ் அகலம்'' (25) என்றும் கவிச்சொல் அலங்கரிக்கும். 'முருகுவிரி தெரியல்' (10) விளங்கும் முக்கண் மூர்த்தியின் கழல், 'தொழுதமரர் முன்னம் சேர் மொய்கழல்' (11). 'அறைகழல்' (19) எனக் கழறப்படுகிறது. வடிவிலே காணும் வண்ணத்தை, ''செந்தாமரை வண்ணன்'' (12), 'செக்கர் ஒக்கும் பனிமலர் மேனி' (18). 'சுடர் வண்ணன்' என வரும் தொடர்களால்

ஆசிரியர் காட்டுகின்றார். இவ்வண்ணத் தானாம் இறைவனின் ஏறு வண்ணத்தை யும் 'வாய்ந்த கனமாலை விடையேறுவன்' (2) என்னும் தொடரில் காணலாம்.

முன்குறித்த பெயர்களால் முக்கணான் இயல்புகள் விளங்குவதோடு 'அண்டத்து அப்பாலான்' (5), "பிழையாச் சீர் அம்மான்" (8), "நான் மறையவன்" (11), 'பொய்யால் தொழினும் அருளும் இறை' (21), 'பாரோம்பும் பேரருளான்' (29) என வரும் பகுதிகளாலும் அவன் சீர்மை அறியப்படுகிறது. அருளியல்பால் அவன் புரிந்த அறச் செயலும், மறச் செயலும் ஆங்காங்கே காணப்படுகின்றன. அருச் சுனற்கு அருளியவாறு "அலகில் ஆற்றல் அருச்சுனற்கு அஞ்ஞான்று / உலவா நல் வரம் அருளிய"(4) என்னும் அடிகளால் அறியப்படுகிறது. திரிபுரம் எரித்த தீரம் 'திரிபுரம் எரிய ஒருகணை தெரிந்த' (7) என்பதாலும், 'நண்ணாருர் முன்றெரித்த நாகம்சேர் திண்சிலையான்'(14) என்பதாலும் அறியப்படுகிறது. களிறு உரித்த கைத்திறம், 'அன்றுரித்த கைம்மான்' (8) என்றும், 'புலால் நீர் ஒழுகப் பொருகளிறு உரித்த' (28) என்றும் பேசப்படுகிறது. தக்க யாகம் அழித்த தறுகண்மையை 'தக்கன் வேள்வி செற்ற' எனும் தொடர் விளக்கும். கூற்றம் கடிந்த கோபத்தை, 'கூற்றெனப் பெயரிய கொடுந் தொழில் ஒருவன்/ஆற்றல் செற்ற'(13) என்பதால் உணரலாம் மாரனை எரித்த மறம், 'தார் மதனன் தன்னைக் கடைக்கணித்த தீயில்' (17) கனல்கிறது.

வழிபாடு:

வழிபாட்டில் பெரிதும் மனம் வைத்தவர் சேரமான் பெருமான் நாயனார். பூதநாதனை' பொய்யால் தொழினும் அருளும்' திறத்தில் நம்பிக்கை கொண்டவர். ஓங்கிரு நல் இமையோரும் உத்தமன் கழல் வணங்கச் செல்வதாய்ப் பாடுவார். தலைவன் தேர் உலாத்தரத் தலைவியின் உள்ளம் 'துள்ளும் தலைச் சிகைச்சுடர் வண்ணனைத் தொழுவார் போன்று' (27) உருகுவதாகக் கூறப்படுகிறது. இறை தொழார்க்கு ஏற்படும் இன்னலை, 'படி மலர்மேனி பரமன் அடிபரவாதவர் போல்' (18) என தலைவியின் இடருக்கு உவமை யாக்குகிறார். அதே தலைவி, 'சங்கரன் தாள் பணியாது ஆழ்ந்து கிடந்து நைவார் கிளை போல்' அயர்வதாகப் பேசப்படு கிறாள். அல்லல்படுபவள், 'ஆரூர்ச் சிந் தித்து மகிழா மயரிய மாக்களைப் போல்' (4) ஆகி விடுகிறாளாம். இவ்வாறு சேரமான் பெருமாள் நாயனார் அன்பின் ஐந்திணையைக் கருவியாகக் கொண்டு இறைவன் சிறப்பை இம்மும்மணிக் கோவை நூல் முழுவதும் விளக்கி இருக்கும் திறன் சுவைத்துச் சுவைத்து இன்புறத் தக்கதாகும்.

அருள்மிகு அக்னீஸ்வரஸ்வாமி திருக்கோயில், திருப்புகளூர்

நன்னிலம்வட்டம் தஞ்சை மாவட்டம்

இத்தலம் நன்னிலம் - நாகை மார்க்கத்திலுள்ளது.

இறைவர்: ஸ்ரீ அக்னீஸ்வரன், ஸ்ரீ சரண்யபுரீஸ்வரர்; ஸ்ரீ கோணப்பிரான், பூம்புகளூர்நாதன்

இறைவி : ஸ்ரீ சூளிகாம்பாள், ஸ்ரீ கருந்தார்க்குழலி

சமயக்குரவர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர் மூவராலும் பாடப்பெற்ற தலமாகும். அப்பர் இறைவனுடன் இரண்டறக்கலந்தவிடமாகும். அப்பர் உற்சவம் 10 நாட்கள் நடைபெறும். பல நாயன்மார்கள் அவதரித்து இறை தொண்டு புரிந்த தலமாகும்.

சனீஸ்வரபகவானுடன் நளனும் சேர்ந்திருப்பது இங்கு விசேஷமாகும் ஸ்ரீ சூளிகாம்பாள் பச்சை ஒருவருக்கு பிரசவம் பார்த்ததாக ஐதீகம். இன்றும் சாயங்கால பூஜையில் வெள்ளை ஆடை அணிவது வழக்கம்.

இத்தலத்தில் ஒருகல்வெட்டில் இராஜராஜ சோழன் தன் ஜன்ம நக்ஷத்ரம் சதயம் தன் மனைவியின் ஜன்ம நக்ஷத்ரம் சதயம், அப்பர் சுவாமிகள் நக்ஷத்ரம் சதயம் என்றும் ஷி கோயிலில் உத்சவம் நடத்த சில கிராமங்களை கொடையாகக் கொடுத்துள்ளான்.

பக்தர்கள் வருக இறைவனருள் பெறுக.

ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சன்னதிகள்
வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர் பரம்பரை தர்மகர்த்தர்

அருள்மிகு பார்வதீஸ்வர சுவாமி திருக்கோயில்

இஞ்சிக்குடி, நன்னிலம் வட்டம்.

தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், மயிலாடுதுறை, திருவாரூர் இருப்புப் பாதையில் பேரளம் இருப்புப்பாதை நிலையத்திலிருந்து தெற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் அருணகிரிநாதராலும் இரட்டைப் புலவராலும் பாடப்பெற்ற தலமாகும்.

மண்வளம் நிறைந்த இவ்வூரில் இஞ்சி மிகுதியாகப் பயிர் செய்யப்பட்ட தாலும், இஞ்சிப்பயிரை வளர்த்து வாழும் மக்கள் வாழ்ந்திருந்ததாலும் இஞ்சிக் குடி என்று பெயர் உண்டாயிற்று என்பர். அம்பாள் சிவபெருமானைக் குறித்து தவம் இருந்தபொழுது அவர் தவத்தை மெச்சி, அம்பாள் பெயரிலேயே பார்வதீஸ்வரர் என்று இத்தலத்தில் ஆட்கொண்டுள்ளார். அம்பிகை அம்பரன் என்னும் அசுரனைக் கொன்று சாந்தி பெற்றதால் சாந்தநாயகி என்றும் பெயர் பெற்றாள்.

இத்திருக்கோவிலின் தலவிருட்சம் சந்தன மரமாகும். இஞ்சிக்குடி, புராண காலத்தில் சந்தனக் காடாக இருந்தமையால் கந்தவனமென்றும், உமாதேவி அருள்நிறைந்த வடிவில் தவக்கோலத்தில் அமர்ந்திருப்பதால் சாந்திவனம் என்றும் பெயர் பெற்றது என்பர்.

மாதவிழாவாக ஒவ்வொரு மாதமும் கார்த்திகை திருவிழாவும், ஆண்டு விழாவாக வைகாசி மாதத்தில் ஏகதின உற்சவமும் நடைபெற்று வருகின்றது.

இக்கோயில் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினரின் நிர்வாகத்திற்கு உட்பட்டு இயங்கி வருகிறது. இக்கோயிலுக்கு 132.98 ஏக்கர் நன்செய் நிலமும், 52.40 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. இக்கோயிலுக்கு ஆண்டு வருமானம் 80 ஆயிரம் ருபாயாகும்.

எஸ். ஜெயராமன், எம்.ஏ.,பி.எல்.,
தக்கார்.

ரா. ஒய்யணன், பி.ஏ.,
நிர்வாக அதிகாரி.

அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில், கூத்தூர்

திருவாரூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

இத்திருக்கோயில் திருவாரூர் நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் 12 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கார்த்திகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனை உண்டு. தைப்பூச விழா சிறப்பானதாகும். திருப்பணி நடக்க உள்ளது.

எஸ். ஜோதி, பி.ஏ.
நிர்வாக அதிகாரி

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், நீலப்பாடி

திருவாரூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

இத்திருக்கோயில் நாகப்பட்டினம்-திருவாரூர் நெடுஞ்சாலையில் திருவாரூரிலிருந்து 10 கி. மீ. தூரத்தில் உள்ளது. இத்திருக்கோயிலில் உறைந்துள்ள இறைவனை கார்க்கோடகன் பூசித்ததாக ஐதீகம்.

இறைவன் : நாகநாதசுவாமி
இறைவி : சௌந்தரநாயகி

ஜெயதுர்க்கையம்மனுக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்து வேண்டியதைபெற்று நீடூழிவாழ்வார்கள்.

வருக அருள் பெறுக.

எஸ். ஜோதி, பி.ஏ.
நிர்வாக அதிகாரி

ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனை

அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில்,

திருநாகேஸ்வரம் 612 204. கும்பகோணம் வட்டம்.

ஸ்ரீ ராகு பகவான் தம் இரு தேவியருடன் தனிச் சன்னிதிக் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார்.

ஸ்ரீ ராகு பகவான் பூஜித்து சிறப்பு பெற்ற இத்தலம் ராகு தோஷம், திருமண தோஷம், காலசர்ப்ப தோஷம், புத்திர தோஷம் நிவர்த்தி செய்து தனி சிறப்பு பெற்று விளங்கி வருகிறது. இப்பெருமானுக்கு பால் அபிஷேகம் செய்தால் பால் நீல நிறமாவதை பக்தர்கள் நேரே வந்து பார்க்கும் அற்புதமாகும். நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் ராகு தோஷம் நிவர்த்திக்கு வந்து பால் அபிஷேகம் செய்து பலன் பெறுகிறார்கள்.

உலக நன்மைக்காகவும் ஸ்ரீ ராகு பகவானுடைய அருளை வேண்டியும் அவர் திருவருளுடன் ஸ்ரீ ராகு பகவானுக்கு 27—7—86 முதல் கோடி அர்ச்சனை துவங்கி நடைபெறுகிறது. தாங்களும் கோடி அர்ச்சனையில் கலந்துகொண்டு,

1) கோடி அர்ச்சனைக்கு 1க்கு கட்டணம் ரூ 25 மட்டும்.
2) பால் அபிஷேகம் செய்ய கட்டணம். ரூ. 50
3) உஷத்கால கட்டளை வைப்பு நிதிக்குக் கட்டணம் ரூ. 200

கோடி அர்ச்சனை செய்ய விரும்புவோர் ரூ. 25-எம். ஓ. அனுப்பிப் பெயர், நட்சத்திரம், கோத்திரம், முகவரி அனுப்பவும்.

கட்டணம் அனுப்ப முகவரி :-

செயலாளர் & பொருளாளர்,

ஸ்ரீ ராகு பகவான் கோடி அர்ச்சனை குழு, அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயில் திருநாகேஸ்வரம்—612 204.

அருள்மிகு கொழுந்தீஸ்வரசுவாமி திருக்கோயில் கோட்டூர்.

மன்னார்குடி வட்டம்.

முன்னொரு சமயம் நாரதரால் அரம்பையையும் சிவபெருமானால் ஐராவதயானையும் சாபத்துக்குள்ளானார்கள். அவர்களை சாபத்திலிருந்து மீட்க இந்திரன் கோட்டூர் கொழுந்திஸ்வரரைப் பூசித்து அவர்களை சாபத்திலிருந்து மீட்டான்.

இன்னொரு சமயம் பிரம்மா சிவபெருமானை மதிக்காதிருந்தபோது சிவபெருமானால் பிரம்மா கர்வபங்கப்படுத்தப்பட பிரம்மா கோட்டூர் கொழுந்தீஸ்வரரை பூசித்து தன் பழைய ஆற்றல்களை ஈசனிடமிருந்து பெற்றார். நால்வருள், ஒருவராகிய திருஞானசம்பந்தப் பெருமானால், கோட்டூர் நற்கொழுந்தே' எனத் தமது தேவாரத் திருப்பதிகம் ஒன்றில் பாடிப் போற்றியுள்ளார்.

இத் திருத்தலம் மேற்கு நோக்கியுள்ள சிறப்புப் பெற்றது. இங்குள்ள அரம்பையின் தபசு நிலை சிலையும், அர்த்த நாரீஸ்வரர் சிலையும் காண்போர் மனதை கவர்ந்திருக்கும் கலையம்சம் பொருந்தியது.

இத்திருக்கோயிலில் கட்டப் பெற்றுள்ள திருமண மண்டபம் ஏழை, எளியவர்களுக்கு பயன்படும் வண்ணம் எல்லா வசதிகளோடு மிகக் குறைந்த கட்டணத்தில் கொடுக்கப் பெறுகின்றது.

திருத்துறைப்பூண்டி — மன்னார்குடி நெடுஞ்சாலையில் 13. கி. மீ. தொலைவில் உள்ளது இத் திருத்தலம்.

T. செல்லத்துரை
தக்கார்

கே. நடராஜன், எம்.ஏ.,
நிர்வாக அதிகாரி.

ஓம் சக்தி

அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில்,

தேக்கம்பட்டி, மேட்டுப்பாளையம் வட்டம், கோவை மாவட்டம்.

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளுந் தளர்வ றியா
மனந்தரும் தெய்வ வடிவந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாந் தரும் அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் வனபத்ரகாளி கடைக் கண்களே.

இத்திருக்கோயிலில் ஒவ்வொரு அமாவாசையுமே திருவிழாவாகும். ஆடி அமாவாசை இத் திருக்கோயிலில் பெரிந்திருவிழா எனலாம். இத் திருக் கோயிலின் தாயத்து பில்லி சூனிய மந்திர தந்திரங்களின் தீமைகளை அகற்றி நன்மை பயப்பன.

கட்டண விவரங்கள்.

இக்கோயிலில் கீழ்க்கண்ட கட்டணச் சீட்டுக்கள் நடைமுறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

1.	அர்ச்சனை சீட்டு 1க்கு	1-00
2.	தேங்காய் சீட்டு 1க்கு	0-25
3.	தனிவழி சீட்டு 1க்கு	1-00
4.	அலங்கார அபிஷேகம் சீட்டு 1க்கு	10-00
5.	அபிஷேகம் சீட்டு 1க்கு	1-25
6.	வாகனச் (லாரி, பஸ்) சீட்டு 1க்கு	10-00
7.	வாகனச் சீட்டு (கார், ஸ்கூட்டர்) 1க்கு	3-00
8.	முடிக்காணிக்கை சீட்டு 1க்கு	3-00
9.	செம்பு தாயத்து சீட்டு 1க்கு	2-00
10.	செம்பு இயந்திர தகடு 1க்கு	15-00
11.	தலவரலாறு புக் 1க்கு	1-50
12.	மெரவனை சீட்டு 1க்கு	5-00
13.	குங்குமப் பிரசாதம் 1க்கு	0-75
14.	காதுகுத்துதல் சீட்டு 1க்கு	5-00
15.	பொங்கல் வைத்து படைத்தல் சீட்டு 1க்கு	2-00

பூசை நேரங்கள்.

காலை சந்தி பூசை	: காலை 7-30 மணிக்கு
உச்சிகாலம் பூசை	: மதியம் 12-15 மணிக்கு
சாயரட்சை பூசை	: மாலை 6-00 மணிக்கு
அர்த்தசாம பூசை	: இரவு 7-00 மணிக்கு

கோயில் திறந்திருக்கும் நேரம்.

காலை 6-00 மணி முதல் 1-00 மணி வரை மதியம் 2-00 மணி முதல் இரவு 7-00 மணி வரை.

ச. கிருஷ்ணன் பி. ஏ.,
செயல் அலுவலர்

பி. கிருஷ்ணசாமி எம். ஏ.,
தக்கார்/உதவி ஆணையர்.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

எட்டுகுடி, நாகை வட்டம்.

எட்டுக்குடி, அருள்மிகு சுப்ரமணிய சுவாமி ஆலயம், நாகப்பட்டினத் திலிருந்து திருக்குவளை வழியாக 28 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது

எட்டுக்குடி என்ற பெயர் இத்தலத்திற்கு வரக் காரணம் தெய்வச்சிற்பியால் செய்யப்பட்ட மயிலுடன் கூடிய திருமுருகனின் திருவுருவம் விண்ணில் எழுந்து பறக்க முற்பட்டபோது, 'எட்டிப்பிடி' என்று கூவியதனால் எட்டிப்பிடி என்று பெயர் ஏற்பட்டுப்பின் எட்டுக்குடி என மருவி இப்பெயர் வழங்கப்படுகிறது.

இத்திருக்கோயிலின் தலவிருட்சம் எட்டி மரமாகும்.

எட்டுக்குடி ஆலயம் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற ஸ்தலம். இத்தலம் ஒரு காலத்தில் எட்டி வனமாக இருந்ததாகவும், எட்டி எனும் ஒருவகை செட்டி மக்கள் வாழ்ந்ததாகவும் காஞ்சிமரக்காடு இருந்தமையால் , காஞ்சிரங்குடி என்று விளங்கியதாகவும் இத்தலத்தில் உறையும் சிவபெருமானை பார்வதி தேவியார் வழிபட்டு சிவபெருமானை விட்டுப் பிரியாமல் இருக்க கேதாரீசுர விரதமிருந்து உடலொரு பாகராய் ஆனதாகவும் சித்தர்களுள் ஒருவரான 'வன்மீகி' இத்தலத்தில் ஆனந்தவல்லி பராசக்தியை வழிபட்டு முக்தி அடைந்ததாகவும் ஒரு வரலாறு உள்ளது.

எட்டிக்குடி, எண்கண், சிக்கல் (பொரவாச்சேரி) ஆகிய மூன்று தலங்களில் உள்ள மூலவர் விக்கிரகம் ஒரே சிற்பியால் செய்யப்பட்டவையாகும்.

இத்திருக்கோயிலின் ஆண்டு திருவிழா சித்ராப்பருவ விழாவாகும். இத் திருக்கோயிலுக்கு சித்ராப்பருவம் அன்று சுமார் 50,000 பால்காவடிகள் வரும். சித்ராப்பருவ விழாவில் முருகனுக்கு இரண்டு நாட்கள் இரவு பகல் முழுவதும் பால் அபிஷேகம் நடந்துக் கொண்டே இருக்கும்.

தி. பாஸ்கரசேதுராஜ், பி.காம்.
செயல் அலுவலர்.

சி. பாலசுப்பிரமணியன்,
தக்கார் / உதவிஆணையர், குடந்தை.

தொலைபேசி:— திருநெல்லிக்காவல் 26.

தமிழகத்தின் பிரம்மாண்டமான திருக்கோவில்களில் முதன்மையான திருவாரூர் திருக்கோவிலின் திருப்பணியை திறம்பட முடித்துவைத்த திருப்பணிக்குழுத் தலைவர் திரு. சு. தென்கோவன், திருக்கோவில் நிர்வாகி திரு. சு. ஸ்ரீதரன் ஆகிய இருவரும் பல்லாண்டு வாழ்க வாழ்க என வாழ்த்துகிறோம்.

தரத்திலும் மணத்திலும் சிறந்த

பாரத் காபி

உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள் :

பாரத் காபி ஒர்க்ஸ்
Regd. No. 113
64, மார்கெட் தெரு.
விஜயபுரம், திருவாரூர்.

நல்வாழ்த்துக்கள்

KTR வாசனுதி திரவியசாலை

P. B. No. 3, விஜயபுரம், திருவாரூர்

KTR எண்டர்பிரைசஸ்

திருவாரூர்,

கடந்த 85 ஆண்டுகளாக கீழ்க்கண்ட பொருட்களை தரம் குறையாது சுவை குன்றாது தயாரித்து வருகிறோம்.

KTR பன்னீர்
,, ஓமதீநீர்
,, பொன்னுங்கன்னிதைலம்
,, சந்தனுதிதைலம்
,, அரைக்கீரைத்தைலம்
,, ஊறுகாய் வகைகள்
,, சர்பத் வகைகள்
,, அரகஜா

KTR ஜவ்வாது பவுடர்
,, குல்கந்து
,, தசாங்கம்
,, வாசனைசுண்ணும்பு
,, பாத்திங் பவுடர்
,, பூஜாபவுடர்
,, பூஜா பில்லைகள்
,, பத்தி வகைகள்

பெரியபுராணக் காட்சி-II

ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்,
அருமந்த அரசாட்சி அரிதோ ? மற்றெளிதோதான் !
தண்ணாளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழுவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.
சடைமருங்கில் இளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கில் உமையாளும் எம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையும்முன் கண்டரசன் போற்றிசைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்கொடுத்தான்
அந்நிலையே உயிர்பிரிந்த ஆண்கன்றும் அவ்வரசன்
மன்னுரிமைத் தனிக்கன்றும் மந்திரியும் உடனஎழலும்
இன்ன பரிசானான் என்றறிந்திலன் வேந்தனும்யார்க்கும்
முன்னவனே முன்நின்றால் முடியாத பொருளுளதோ.

இந்நான்கு பாடல்களில் சேக்கிழார் அமைத்துக் காட்டியுள்ள காட்சி இரண்டினை ஓவியர் ஓவியங்களாக வரைந்துள்ளார்.



மனுநீதிச்சோழன் தன் மகனைத் தேரூர்ந்து பசுவுக்கு நீதி வழங்க
வீதிவிடங்கர் உமையாளுடன் காட்சி தருதல்



வீதிவிடங்கப் பெருமானருளால் அனைவரும் உயிர் பெற்று எழ
வானவர் பூமாரி பொழியும் காட்சி

மாண்புமிகு மனுவேந்தன்

புலவர். இரெ. சண்முகவடிவேல், M.A., D.E.,

பூவைகள் கேட்டுக் கொண்டிருக்கக் கிள்ளைகள் பாடிக் கொண்டிருக்குமாம்; எதைப் பாடும் அந்தக் கிளிகள்? தேவாரப் பதிகங்களைப் பாடிக்கொண்டிருக்கும் எங்கே நடக்கிறது இந்த அதிசயம்? திருவாரூரில். ஆம். நாம் சொல்லுவதைத் தானே கிளிப் பிள்ளைகளும் சொல்லும்! திருவாரூர் வாழ் மக்களின் இல்லத்தில் குழந்தைகள் முதல் 'குடுகுடு' கிழவர்கள் வரையுள்ளவர்களெல்லாம் தெய்விகப் பாக்களையே பாடுகிறார் கள்; அதனால் அவர்கள் வளர்க்கும் கிளிகள், நாகணவாய்ப் பறவைக்கு ஆசானாகி அதையே சொல்லித் தருகின்றன. 'தூது நடந்த தியாகரின் செந்தாமரை அடிகளின் மணம் திருவீதிகளில் எல்லாம் கமழ்கிறது' என்றால், மக்கள் வாயில் தெய்வ மணம் கமழக் கேட்பானேன்? 'நிலமகளுக்கு நெற்றியில் அமைந்த திலகம்' இத்திருவாரூர். 'திருமகளின் உறைவிடமாகிய செந்தாமரை' இத் திருவார்ந்த ஊர். இவையெல்லாம் திருவாரூர்க்குச் சேக்கிழார் பெருமான் தெரிந்து சொன்ன பெருமைகள். இந்தப் பெருமை களின் அணியில் இன்னொரு சீரும் இணைந்து கொள்கிறது; அதுதான், மனுநீதிச் சோழன் வாழ்ந்து நீதி செலுத்திய மேன்மை. நீதி மாண்பினால் அம்மன்னன் மாண்புமிகு மனுவேந்தன் ஆகிறான்.

சிலம்பு காட்டும் சீர்மை :

ஐம்பெருங் காப்பியத்தில் தலையாய காப்பியம் சிலப்பதிகாரம், அச்சிலப்பதி காரத்திலேயே மனுவேந்தன் மாண்பு மடைதிறந்த வெள்ளமெனக் கண்ணகித் தாயி னால் வாய்நிறையப் பேசப்படுகிறது. பாண்டியன் நெடுஞ்செழியனிடம் வழக்குரைத்த கண்ணகி தன் நாட்டின் பெருமையைக் கூறுங்கால்,

> வாயிற் கடைமணி நடுநா நடுங்க
> ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
> அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்

என்று மனுநீதிச்சோழனின் மேன்மையைக் கூறுகிறாள். பின்னரும்,

கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை என்று அவனது பெருமை பேசப்படுகிறது.

அரண்மனை வாயிலில் ஆராய்ச்சிமணி. அதனை அசைத்து ஒலியெழுப்பிய பசுவின் கண்ணில் கண்ணீர்த் துளிகள் மணியோசை கேட்ட மன்னன் நெஞ்சிலோ நீதி பறிபோன நெடுந்தவிப்பு. நீதி காக்கப்புறப்பட்ட மன்னனிடம் அரிமாவின் சிலிர்ப்பு கன்றைக் கொன்று தாயைத் தவிக்கவிட்டவன் தன் மகனென்று அறிந்தபின்னும் பின் வாங்க எண்ணாத நீதியின் உயிர்ப்பு. 'கொன்றவனை கொல்லல்' என்ற முறையால் முறை செய்து முடித்த நேர்மையின் மதர்ப்பு. இவை சிலம்பில் காட்டப்பெறும் மனுவேந்தன்

மேன்மைகள். 1800 ஆண்டுகளுக்கு முன்பே எழுந்ததாகிய சிலப்பதிகாரம் இவ் வரலாற்றைக் கூறுகிறதென்றால் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்னரே மக்களால் மனமகிழப் பேசப்பெற்ற வரலாறாக, மனுநீதிச்சோழன் வரலாறு திகழ்ந்திருப்பதை அறிந்து இன்புறுகிறோம்.

பெரியபுராணம் புலப்படுத்தும் பெருமை :

'மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்'.

என்று பெரியபுராணத் திருநகரச் சிறப்புப் பகுதியில் மனுநீதிச் சோழனைச் சேக்கிழார் புகழ்ந்துரைக்கிறார். அவ்வேந்தன் மாதவம் செய்து, சிங்கக் குருளையென ஆண்மக வொன்றைப் பெற்றனன்.

இளவரசன் ஆகும் தன்மையைப் பெறவிருக்கும் நாளில் ஒரு நாள் தேரில் சென்றான். பசுங்கன்று ஒன்று வந்து தேர்க்கால் இடைப்புகுந்து இறந்தது தாய்ப்பசு வருத்தந் தாளாமல், மனுவேந்தன் அரண்மனை வாயிலில் கட்டப் பெற்றிருந்த மணியைத் தன் கொம்பினால் புடைத்து ஓசை யெழுப்பித் தன் குறையைக் கண்ணீரால் அறிவித்தது. மன்னன் அமைச்சரை இகழ்ந்து நோக்கினான்.

வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணிநெடுந் தேர்மே லேறி
அளவில்தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்த தாகத்
தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்த(து) இத் தன்மை என்றான்.

பெரியபுராண மணியாரத்தில் காணப்பெறும் மாமணிகளுள் ஒன்றாகும் இச்செய்யுள். இப்பாடல் மன்னனுக்கு மதியமைச்சன் தரும் பொருள்பொதிந்த விடையாகும். மேற் போக்காகப் பார்க்குங்கால்,

'தேர்கள் பல சூழ நின் புதல்வன் சென்ற தேர்க்காலில் புகுந்து, இளங்கன்று இறந்ததைப் பொறுக்கமுடியாத இத்தாய்ப்பசு, மணியடித்துக் குறையைத் தெரிவிக் கிறது' என்று கூறுவதாகத் தோன்றும் இப்பாடலுக்குள் நுணுகிப் பார்த்தால்,

''தேரின் மணிகள் ஒலித்துக் கொண்டே சென்றன; கன்று நகர்ந்திருக்கலாம்; நகரவில்லை.

பெரியதேர்; ஆகவே வந்தது தெரியாமல் விழுந்திருக்க நியாயமில்லை; துள்ளி வந்து தானே விழுந்திருக்கிறது சந்து பொந்தில் போகவில்லை; அரசன் உலாப்போகும் அரசவீதியில் போயிருக்கிறான்; அங்கு கன்று வந்ததுதான் தவறு.

தேர்க்காலின் இடையிலே புகுந்திருக்கிறது; அதாவது, பின் சக்கரத்தில் அடிபட்டு இறந்திருக்கிறது; ஆகவே உன் மகனுக்குத் தெரிந்து இது நடக்கவில்லை.

எதனால் அப்படி விழுந்தது? இளங்கன்று பயமறியாதல்லவா! அதனால்தான்.

இருந்தும் கூட, ஏன் இப்பசு மணியடித்துக் குறை கூறுகிறது? தாய் என்பதால் தான். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா! குழந்தையின் தவற்றினைத் தாய் ஒருநாளும் உணரமாட்டாளே! இதுவே காரணம்.

ஆகவே இறந்து போனதற்குக் காரணம், இறந்த அக்கன்றே தவிர, உன் மகன் அல்லன். நின் மகன் குற்றமற்றவன்'' என்று கூறினான் நுண்மாண் நுழைபுலம் மிக்க அமைச்சன்.

ஆயினும் அரசன் நீதியிலேயே கருத்தைச் செலுத்தினான். பாசத்தால் நீதிக்கு விடை கொடுக்கும் சாதாரண மனிதனாக இல்லாமல் நீதிக்காகப் பாசத்தைக் கொல்லும் புனிதனாக மாறினான். அரசநீதி என்ன என்பதை அழகாக விவரிக்கிறான்.

மாநிலங்கா வலன்ஆவான் மன்னுயிர் காக்குங் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரி சனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?

தன்னால், தன் அதிகாரிகளால், பகைவரால், கள்வரால், பிற உயிரால் ஆபத்து வராமல் உயிர்களைக் காப்பவனே அரசன். அதுதான் அறங்காத்தல் ஆகும். இதைவிடச் சுருக்கமாகவும், தெளிவாகவும் அரசனின் கடமையை அறிவுறுத்தலும் ஆகுமோ! முதலமைச்சராக விளங்கிய சேக்கிழார் எழுத்து அல்லவா! அதற்கேற்ற பொலிவுடன் ஒளி வீசுகிறது.

அமைச்சர்களுக்கு விளக்கமளித்தான் மன்னன்.
அமைச்சர்களோ ஆனவரை சமாளித்தனர்.
எதுவும் எடுபடவில்லை.

''முன்னர் கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள்
எம்முறையில் பரிகாரம் கண்டனரோ, அவ்வாறே செய்வோம்''.
இது அமைச்சர் காட்டிய பாப விமோசனம்.

''பசுவின் துன்பத்துக்கு இது மருந்தாகாது'',
என மறுத்தான் வேந்தன்.

''பசுங்கன்றைக் கொன்றவனைக் கொல்லுதல் மரபன்று'',
என்றனர் அமைச்சர்.

''எந்தப் பசுவாவது இப்படி ஆராய்ச்சிமணியை அடித்து முறையிட்டுக் கொண்டதுண்டா? திருவாரூரில் தோன்றிய உயிர்கள் யாவும் புற்றிடங் கொண்டாரின் படைப்புகளே. அவற்றில் ஒன்றைக் கொன்ற மற்ற உயிரைக் கொல்வது ஒன்றே நீதியாகும். இப்பசுவின் துயரை நானும் கொள்வேன்''. இவ்வாறுரைத்த மன்னன் சொற்கேட்ட அமைச்சர்கள் அஞ்சினர்.

அவ்வருமை மைந்தனைக் கொல்லும்படி ஓர் அமைச்சருக்கு ஆணையிட்டான் அவ்வமைச்சனோ தன்னைத் தானே வாளால் வெட்டிக்கொண்டு வீழ்ந்து இறந்தான் பின்னர் மனுவேந்தனே வீதியில் மகனைத் தேர்க்காலில் இட்டுத் தேரூர்ந்து கொன்றான் விடைமருவும் எம்பெருமான் தோன்றி அருள் செய்தார். உடனே கன்றும், இளவரசனும், அமைச்சனும் உயிர் பெற்று எழுந்து வந்தனர்.

இவ்வரலாறு தொன்மைக் காலந்தொட்டு மக்களால் பேசவும், இலக்கியங்களில் எழுதிக் காட்டவும் பெற்றுத் திகழ்ந்தது. சேக்கிழார், அழகொழுக நெஞ்சை உருக்கும் இந்நிகழ்ச்சியைச் சொல்லோவியமாக்கிக் காட்டினார்.

இராமலிங்க அடிகளாரின் வாசகம் :

'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல்
எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்ற
உயர்நிலை வேண்டும்'

என்று ஏங்கிய இராமலிங்க வள்ளலார் இவ்வரலாற்றில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அதன் விளைவே அவருடைய'மனுமுறைகண்ட வாசகம்'என்ற உரைநடைக் காவியம்.

மனுமுறை கண்ட வாசகத்தைப் படிப்பார்க்கு, அது நெஞ்சை உருக்கும்; கண்ணில் நீரைப் பெருக்கும்.

கன்றை இழந்த பசுவின் துன்பத்தைத் தன் துன்பமாகவே எண்ணி, தான் அதுவாக மாறி எழுதுகிறார் வள்ளலார். 'தேர்க்காலில் அடிபட்டு, உயிர் பிரிந்து, உடல் சிதைந்து கிடக்கும் கன்றைக் கண்ட தாய்ப்பசு இவ்வாறு வருந்திற்றாம்', என்று எழுதுகிறார் வள்ளல்பெருமான்.

"இஃதென்ன தீவினையோ! இஃதென்ன இந்திரசாலமோ! இஃதென்ன விபரீதமோ! வாலசைத்துக் கால்விசைத்து எனக்குமுன் இப்போது துள்ளி விளையாட இப்போது பார்த்தேனே! இத்தனை விரைவில் இப்படிப்பட்ட இடி இடிக்குமென்று எள்ளளவும் அறியேனே! காவிரி முதலான தீர்த்த யாத்திரை செய்தும், சிதம்பரம் முதலான ஸ்தல யாத்திரை செய்தும், திருக்கோயில்களிலும் திருவீதிகளிலுமுள்ள புல் முதலானவைகளை வாயினால் களைந்து திருப்பணி செய்தும், புல் மேயாமலும், நீர் குடியாமலும் நெடுநாள் விரதங் காத்தும், உன்னைப் பெறப்பட்டபாடு தெய்வம் அறியுமே!அவ்வளவு பாட்டையும் அவலமாக்கி விட்டு, சேங்கன்றே! என்னைத் தெருவில் விட்டாயே! உன்னைப் பெறுகிறதற்கு நோற்ற நோன்புகளால் வந்த இளைப்பு இன்னும் ஆறவில்லையே! இதற்குள் இப்படிப்பட்ட ஆறாத பெருநெருப்பை அடி வயிற்றில் வைத்தாயே! இந்தத் துக்கத்தை இனி எந்த விதத்தினால் சகித்துக் கொள்ளுவேன்!"

பசுவின் கதறலா இது? இல்லை. வாராததுபோல் வந்த மாமணிக் குழந்தையை இழந்துவிட்ட ஒரு மானுடத் தாயின் மனக்குமுறல் போலவே அல்லவா இருக்கிறது! வள்ளலாருக்கு மனித உயிரும் மாட்டின் உயிரும் சமம். அதனால்தான் அவர் நெகிழ்ந்து போய் எழுதி நம்மையும் நெக்குருக வைக்கிறார்.

பெரியபுராணங் காட்டும் வரலாற்றையே விரிவுபடுத்துகிறார் வள்ளலார். இளவரசனுக்கு வீதிவிடங்கன் என்று பெயரிட்டுக் காட்டுகிறார்.

இளவரசன் உலாப் போனதாகக் காட்டுகிறார் சேக்கிழார்; தியாகராஜர் திருக்கோயிலுக்கு வழிபாட்டுக்குப் போவதாகக் கூறுகிறார் வள்ளலார். இளவரசனைக் கொல்ல மனமின்றித் தற்கொலை புரிந்து மாண்ட அமைச்சன் பெயர் கலாவல்லபன் என்றும் காட்டுகிறார். 'மகனைக் கொல்ல வேண்டாம்' என்று கூறித் தடுத்த அமைச்சர்களைப் பார்த்து மன்னன் கூறுவதாக வள்ளலார் குறிப்பிடுகிறார்.

"' கரும்பு கசப்பென்றால்—எட்டிக்காய் போல் கசப்பென்றும்,
தாயைக் கொலை செய்வது தக்கதென்றால் வேதத்தின் முதற்
காண்டத்தில் விதித்திருக்கிறதென்றும்,
வெள்ளத்தில் கல்மிதக்குமோ என்றால்—ஆற்றில் அம்மி
மிதிக்கக் கண்டோம் என்றும்,
கல்லின் மேல் நெல்லு முளைக்குமோ என்றால்—கொத்தால்
ஆயிரம் குலையால் ஆயிரம் என்றும்,
பொய் ஆயிரம் சொல்லலாமோ என்றால்—ஐயாயிரம்
மட்டும் சொல்லலாம் என்றும்,

ஒருவன் மனையாள் மற்றொருவனைக் கூடலாம் என்றால்—

ஐயா, அடக்கத்தில் ஆயிரம் பேரைக் கூடலாம் என்றும். என் பிள்ளையும் எச்சரிக்கைக்காரன் பிள்ளையும் ஒருவனை ஒருவன் உதாசினமாகத் திட்டினராம். இதற்கென்ன செய்யலாம் என்றால்—உமது சற்புத்திரன் வாய்க்குச் சர்க்கரை இடவேண்டும். மற்றவன் வாய்க்கு மண்ணிட வேண்டும்—என்றும் கூறும் தீய அமைச்சர்களைப்போல் பேசாதீர்கள்'' என்று கூறித் தான் 'எடுப்பார் கைப்பிள்ளை இல்லை' என்று தெளிவு படுத்துகிறான். அழகாக உரைநடை இலக்கியம் படைத்துள்ளார் இராமலிங்கஅடிகளார்.

அம்மானை அழகு:

இவ்வரலாற்றையே சுவையான முறையில் அணுகிப் பார்க்கிறது ஓர் அம்மானை பாடல்,

ஈசன் பசுவாகி ஏமன்ஒரு கன்றாகி
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை
வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அமாகில்
காசளவு பாலேனும் கறக்குமோ அம்மானை
கன்றை உதை காலி கறக்குமோ அம்மானை.

அம்மானை ஆடும் ஒருத்தி கேட்கிறாள், 'ஈசனே பசுவாக எமனே கன்றாக ஆரூர் வந்தார்கள் என்கிறாயே, அப்பசு காசளவு பாலாவது கறக்குமோ?'

மற்றவள் சொல்லும் மறுமொழி மிக நயமானது.

"கன்றையே உதைக்கும் பசுவாயிற்றே. அதுவா நமக்குப்பால் கறந்துவிடப் போகிறது?'

எமனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனைக் காத்த வரலாறு அழகாகக் காட்டப்பெறுகிறது.

ஆரூரா? பூம்புகாரா?

சிலம்பில், பூம்புகாரில் நடந்ததாகக் கூறப்படும் வரலாறு பிறவற்றில் ஆரூரில் நடந்ததாக அறிவிக்கப்படுகிறது. திருவாரூரில் நடந்ததாகக் கூறப்படுவதே சரியானதாக தெரிகிறது. சோழ நாட்டில் எப்பகுதியில் நடந்தாலும் அது தலைநகராகிய பூம்புகாரில் நடந்ததாகக் கூறப்படுவது இயல்புதானே! சோழச் சிற்றரசன் மனுவேந்தனின் புகழ் சோழப் பெருநாட்டின் புகழேயன்றோ? அதனால்தான் பூம்புகார்ப் பெருமையைக் கூறுமிடத்துக் கண்ணகி,

'அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே!'

என்று பாண்டிய மன்னன் முன் சோழனின் பெருமையை நிலைநாட்டுகிறாள்.

ஆரூரில்தான் பல்வேறு நிலைவுச் சின்னங்களும் இந்நிகழ்ச்சியை உணர்த்துவதாக அமைந்துள்ளன. திருவாரூரில் நடந்ததைப் பூம்புகார்ப் பெருமையாகக் கூற முடியும். காந்தியடிகள் என்றதும் குஜராத் மாநிலம் மட்டுமா பெருமைகொள்கிறது? இந்தியப்பெரு நாடே பெருமை கொள்ளவில்லையா!

நினைவுச் சின்னங்கள்:

திருவாரூரில் வடக்கு மடவளாகத்தில் கல்தேர்க் கூடம் ஒன்று அமைந்துள்ளது. இதில் மனுவேந்தன் தன் மகனைத் தேர்க்காலில் ஊர்ந்திடும் காட்சி அருமையாகச் சித்தரிக்கப் பெற்றுள்ளது பசு ஆராய்ச்சி மணியை அடிப்பதும் அழகாகச் சிற்ப உருப்பெற்றுள்ளது.

திருவாரூர் திருக்கோயிலின் இரண்டாவது திருச்சுற்றில் இருக்கும் விசுவகர்மா கோயிலில் – இது நீலோத்பலாம்பாள் கோயிலில் மேற்புறம் அமைந்துள்ளது. வடக்குச் சுவரில் மகிஷாசுர மர்த்தினி சிற்பத்தின் மேற்புறத் தூணில் ஒரு சிற்பம் அழகாக உள்ளது அதில் தேரில் பசுநிற்கிறது. கீழே தேர்க்காலில் இளவரசன் கிடக்கிறான். சிற்பியின் உள்ளம் என்னவோ! எதனால் தேரில் வேந்தனுக்குப் பதில் பசுவை நிறுத்தினானோ, தெரியவில்லை! இப்படியிருக்கலாமோ? கன்னற இழந்த பசுவின் மனநிலையை மனு மன்னன் அறிந்ததால், தான் பசுவாகவே மாறித் தன்மகன் என்பதை மறந்து — தன் கன்றைக்கொன்றவன் என்ற மனநிலையில் — தேரூர்ந்தான் என்பதைக் காட்டத்தான் இப்படிச் சித்தரித்துள்ளானோ! மன்னன் பசுவாக மாறியிருந்தால்தான் மகன் பாசம் அவனிடமிருந்து நீங்கியிருக்கும். சிற்பியின் கற்பனை அபாரம்!

மனுநீதியா? உயிரிரக்கமா?

மனுநீதி என்பது, ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்று மனித உயிர்களையே பிறப்பால் தரம்பிரித்துக் காட்டி, ஒரே குற்றத்தை உயர்ந்த மரபினர் என்று கூறப் படுபவர் செய்தால் குற்றமில்லை யென்றும், அதையே தாழ்ந்த குலத்தினர் என்று அம்மனுவால் குறிப்பிடப்படுபவர் செய்தால் குற்றமாகும் என்றும் உரைப்பது, வேதத்தைத் 'தாழ்ந்தோர்' கற்றல் ஆகாது என்று தடுப்பது. அம்மனு முறையா பசுங் கன்றின் உயிரையும் இளவரசன் உயிரையும் ஒன்றாக எண்ணிடவைக்கும்? இருக்காது. மன்னனின் ஆன்மநேய ஒருமைப்பாடும் உயிரிரக்கக் கொள்கையுமே அவனை அவ்வாறு செய்யத் தூண்டியிருந்திருக்கும். உயிரிரக்கக் கொள்கையாளனாகிய மனுவேந்தன் உயிர்களை ஒன்றாக எண்ணி நீதி செலுத்தினான் என்பதே துணிபு.

உணர்வை மதிப்போம்:

மனித உயிரும் மாட்டின் உயிரும் சமமா? இப்படியொரு வினா எழுதல் இயல்பே. எனினும், முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியையும், மயிலுக்குப் போர்வை போர்த்திய பேகனையும் செய்த செயலுக்காக அன்றி, கொண்டிருந்த உயர்ந்த உணர்வுக்காக மதிக்கிறோம் அல்லவா! அதுபோன்றே மனுவேந்தனையும் அவன் கொண்டிருந்த அந்த நல்ல உணர்வுக்காக மதிக்கிறோம். நீதிக்காக ஏங்கித் தவிக்கும் இந்நாளில் ஓர் அரசனே அவன்தன் ஒரே மகனை அவன் கொண்டிருந்த கொள்கை வழி தண்டிக்கத் துணிந்த நேர்மை நம்மைக் கிளர்ச்சி கொள்ளச் செய்கிறது.

காய்தல், உவத்தல் அகற்றி நேர்மையாக எண்ணி நீதி செலுத்திய அவன் உள்ளத்து உணர்ச்சியை உயர்வாக மதிப்போமாக!

———✽———

பெரியபுராணத்தில் சுந்தரர்

'தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!'

உலகில் சைவமும் தமிழும் தழைத் தினிதோங்கத் தம்பிரான் தோழராய் அவதரித்தார் சுந்தாரர். சைவ நெறியின் சீலம் உய்யவும், உலகும், தமிழும் ஓங்கி வாழவும் தொண்டர்களின் வரலாற்றைத் 'திருத்தொண்டத் தொகை' யாகப் பாடினார் 'நம்பி ஆரூரன் நாம் தொழும் தன்மையான்' என்று உப மன்னியு முனிவர் போற்றுகிறார். 'திருமணக்கோல பெருமான் எமது குலதெய்வம்' என்று சைவ சிந்தாந்த சாகரமாகிய சிவஞான முனிவர் கூறுகிறார். தெய்வச் சேக்கிழார் பெருமான் தாம்பாடிய திருத்தொண்டர் புராணத்தில் திருமலைச்சி றப்பு, தடுத், தாட் கொண்ட புராணம், ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், சேரமான் பெருமாள் நாயனார் புராணம், வெள்ளா னைச் சருக்கம் ஆகிய ஐந்து இடங்களில் சுந்தரர் வரலாற்றை விரிவாகக்கூறுகிறார். மற்றும் தில்லை வாழ்ந்தணர் சருக்கம், முதல் பத்து சருக்கங்களின் முடிவில் ஒவ்வொரு பாடலில் சிறப்புச் செய்திகளைக் கூறிச் சுந்தரரைப் போற்றி வணங்குகிருர் இம்முறையே சுந்தரரின் சிறப்புச் செய்திகளைச் சுருக்கமாகக் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

திருமலைச் சிறப்பு:

கயிலை மாமலையின் தோற்றம் கவி ஞறக் கூறப்படுகிறது. பல்லாயிரம் முனிவர்கள் யோகிகள் சூழ உபமன்னியு முனிவர் இருக்கிறார். தென் திசையிலிருந்து பெரிய ஜோதி ஒன்று வருகிறது. கண்ண பிரான் குருவும், சிறுகுழவியாயிருந்த போதே சிவனருளால் பாற்கடலையே பெற்றவருமான உபமன்னியர் எழுந்து வணங்குகிர் என்று சேக்கிழார் பெருமான் சுந்தரர் வரலாற்றுக்குத் தோற்றுவாய் செய்கிறார். சூழ இருந்த முனிவர்களும், யோகிகளும் 'சிவனைத் தவிர யாரையும் வணங்காத தாங்கள் இச்சோதியை வணங்கக் காரணம் யாது'? என வினவு கின்றனர். முனிவர் அவர்களுக்குச் சுந் தரர் வரலாற்றைக் கூறுகிறார்.

கயிலையில் சிவபெருமானுக்கு மலர்த் தொண்டு செய்து வந்த சுந்தரர் ஒருநாள் நந்தனவனம் செல்கிறார். அதேசமயம் உமாதேவிக்குப் பணிவிடை செய்யும் கமலினி, அநிந்திதை என்ற இருசேடி யரும் மலர் பறிக்க வந்தனர். தென்திசை வாழ்ந்திடத் திருத்தொண்டத் தொகை தர வந்தவர் 'மாதர்மேல் மனம் போக்கினார்' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். சிவ பெருமான், 'இவ்வுலகில் பிறந்து காதலின்பம் கலந்து பின்வருக' எனச் சுந்தரர்க்கு ஆணையிட்டார். சுந்தரர் கண்ணீருடன் கைகள் அஞ்சலி கூப்பி 'உலகியலில் யான் மயங்கும் போது தடுத்தாட்கொள்ள வேண்டும்' என்று இறைஞ்சினார். அவ் வண்ணமே சிவபெருமான் அருளினார்.

'மற்ற திசைகளெல்லாம் இருக்க, தென்திசை எவ்வண்ணம் சிறப்புடைத்து' என அங்குள்ளோர் வினவ உபமன்னியு கூறுகிறார். 'எம்மை ஆளுடைய பிராட்டி காணவும், எந்தை வியாக்கிரபாதர் பூசித்துப் பேறு பெறவும் அம்பலத்தில் ஆடும் பெருமான் உள்ள சிதம்பரம் இத் திசையில் உள்ளது. பூதேவியின் இதய கமலமாக விளங்கும் ஆரூர் உள்ளது. அங்கே மாதொருபாகன் தியாகராஜனாக

விளங்குகிறார். மற்றும் காஞ்சிபுரம், தோணிபுரம் (சீர்காழி), திருவையாறு முதலிய தலங்களும் உண்டு. எனவே தென்திசையே புண்ணியமுடைத்து' என்றார். இதனாலன்றோ மணிவாசகரும் 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனத் துதிக்கின்றார்.

தடுத்தாட் கொண்ட புராணம்

திருமுனைப்பாடி நாட்டின் சிறப்பு: தேவாரம் பாடிய மூவரில் நாவுக்கரசரும், சுந்தரரும் பிறந்த நாடு திருமுனைப்பாடி நாடு. இந்நாட்டில் நாவலூர் என்னும் தலத்தில் மாதொரு பாகனார்க்குப் வழி வழி அடிமைசெய்யும் சிவாச்சாரிய குலத்தில் தோன்றிய சடையனார்க்கும், இசை ஞானியார்க்கும் மகவாகத் தோன்றினார் நம் சுந்தரர். மணித்தேர் உருட்டி விளையாடும் சிறுவயது. அந்நாட்டு அரசர் நரசிங்க முனையரையர் கண்டு அன்பு மீதூரப் பெற்று, தம்மகனாக எண்ணி வளர்க்க அழைத்துச் செல்கிறார். அந்தணர் திருவும், அரசர் திருவும் ஒருங்கே பெற்ற சுந்தரர் மணப்பருவம் எய்தினார். 'புத்தூர் சடங்கவிச்சிவாச்சாரியாரின் பெண்ணை மணம் பேசித் திருமணம் தொடங்குகின்றனர். முன்பே அருளியபடி சிவபெருமான் முதியவேதியராக வந்து ஆவணம் காட்டி ஆண்டார். வேதியர் திருவெண்ணெய் நல்லூர்க் கோவிலில் மறைந்தார். அனைவரும் திகைத்தனர். சுந்தரர்க்கு எம்பிரான் காட்சி தந்தார். 'அருச்சனை' பாட்டே ஆகும். எம்மைப் பாடுக' என்றார். 'பித்தன் என்று முதலில் பேசியதால் பித்தன் என்றே தொடங்குக' என ஆணையிட்டார். 'பித்தா! பிறைசூடி' என்று தொடங்கித் தம் வாழ்வில் நிகழ்ந்த முதல் திருவருள் நிகழ்ச்சியை 'அத்தா உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே' என்று பதிகம் பாடினார். புத்தூரில் நடக்க இருந்த திருமணத்தின் போது 'யாருக்கு யார் அடிமை?', வேதியர்க்கு வேதியர் அடிமையாவதுஉண்டா?'' என்றெல்லாம் கேட்டாரே, அதற்கெல்லாம் பதிலிறுப்பது போல இப்பதிகம் அமைந்துள்ளது. இவ்வாறு சுந்தரர் வரலாறு முழுமையும் திருமுறை ஆதாரத்தை வைத்தே சேக்கிழார் பெருமான் விவரித்துச் செல்கிறார்.

சுந்தரர், திருவெண்ணெய்நல்லூரில் அருள்பெற்றபின் தன்சொந்த ஊரான திருநாவலூர் செல்கின்றார்; அடுத்து, தவநெறிவேண்டித் திருத்துறையூர் சென்று பாடி வணங்குகின்றார்; திருவதிகைக்கு வெளியே சித்தவட மடத்தில் இரவு தங்கினார். சிவபிரான் மீண்டும் வேதியராக வந்து திருவடி தீட்சை செய்கிறார். பின்னர் அவர் தில்லை சென்று நடராசப் பெருமானின் பேரருள் வெள்ளத்தில் மூழ்கினார் 'திருவாரூரில் நம்பால் வருக' என அசரீரி ஒலியும் கேட்டார். பல தலங்களையும் தரிசனம் செய்து கொண்டு திருவாரூரை அடைகின்றார்; தம்மை வரவேற்ற அடியார்களை 'எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்' எனப் பதிகம் பாடி வினவினார்; ஆரூர்ப் பெருமானைக் கண்டு அன்புமிக அழுது பாடித் தொழுதார்; 'திருமணக் கோலத்தில் உன்னை ஆட்கொண்டதால் அக்கோலத்துடனேயே எம்மை வழிபடுக' எனச் சிவபிரான் உணர்த்த திருமணக் கோலப் பெருமானாகவே இவ்வுலகில் நம் வழிகாட்டியாக அமைந்தார்.

கமலினியார், ஆரூரில் பரவையார் என்ற பெயருடன் உருத்திர கணிகையர் குலத்தில் தோன்றியுள்ளார். சுந்தரர் அவரைக் கோவிலில் ஒருநாள் சந்திக்க, முன்னைத் தொடர்பால் சிவபெருமான் திருவருளால் அவரை மணம் செய்து கொண்டு வாழ்ந்தார்; தேவாசிரிய மண்டபத்தில் இருந்த அடியார் பெருமக்களைப் பாடி வணங்க எண்ணினார்; சிவபெருமானே அடி எடுத்துக் கொடுக்கத் திருத்தொண்டத்தொகை பாடினார்.

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்:

குண்டையூர்க்கிழார் என்ற வேளாளர் சுந்தரருக்கு நெல் கொடுக்கிறார். அதனை சிவபிரான் திருவருளால் திருக்குவளைப் பெருமானைப் (கோளிலி) பாடி ஆரூருக்கு கொணர்ந்தார். புகலூர்ப் பெருமானிடம் பொன்வேண்டிப் பெற்றார். பல தலங்களையும் வணங்கிக்கொண்டு பாண்டிக் கொடுமுடி சென்று 'நமச்சிவாயத் திருப் பதிகம்' பாடினார். திருமுதுகுன்றம் சென்று இறைவனைப்பாடிப் பொன் பெற்று ஆற்றில் போட்டுப் பின் ஆரூர் கமலாலயத் தீர்த்தத்தில் பரவையார் முன்னிலையில் எடுத்தார். சோழ நாட்டுத் தலங்கள் பலவும் கண்டு பின் தொண்டை நாடு செல்கிறார். திருக்கழுக்குன்றம் தரிசித்துக் கச்சூர் ஆலக்கோயில் வந்தார் அந்தணர் உருவில் சிவபிரான் வந்து யாசித்து உணவு தர அதனை உண்டு பின் பாடித் தொழுதார். காஞ்சி முதலான தலங்களைத் தரிசித்துத் திருவொற்றியூரை அடைந்தார்.

திருவொற்றியூரில் ஞாயிறுகிழார் மகள் சங்கிலியாராகக் கயிலையில் இருந்த அநிந்திதை தோன்றியுள்ளார். அவரைப் பிரியமாட்டேன் என்று சபதம் செய்து கொடுத்து மணந்தார். மண இன்பம் நுகர்ந்துபலநாள் தங்கினார். 'சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்தோள்' என்று அவரே கூறுவதாலும், 'புண்டரிகத்தவள் வனப்பைப் புறங்கண்ட தூநலத்தை, கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றமர்ந்திருந்தார்' என்று சேக்கிழார் கூறுவதாலும் அறியமுடிகின்றது.

ஆரூர்ப்பெருமானின் வசந்தவிழா காணவேண்டும் என்ற பெரு விருப்பம் எழுந்தது. 'எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே' என்று பாடினார். ஆரூர் செல்லப் புறப்படுகிறார். சபதம் மீறி எல்லை தாண்டியவுடன் கண்களை இழந்தார். வெண்பாக்கம், திருமுல்லைவாயில் முதலிய தலங்களில் கண்பார்வை கேட்டும் கிடைக்காமல் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார். காமாட்சி அம்மை உடனாகிய ஏகம்பநாதப் பெருமானின் அருளால் 'இடக்கண்' பெற்று 'ஆலந்தானுகந்து' என்ற பதிகத்தில் 'கால காலனைக்காணக் கண் அடியேன் பெற்றவாறே' என்றும் குறிப்பிடுகின்றார் திருப்பூந்துருத்தியில் தீர்த்தமாடி உடற்பிணி நீங்கினார். திருவாரூரைச் சார்ந்து 'மீளா அடிமை' என்ற பதிகம்பாடி வலக் கண் பார்வையும் பெற்றார்.

சங்கிலியாரை மணந்த செய்தி கேட்டுச் சீற்றம் கொண்டிருந்த பரவையார் சுந்தரரைப் பார்க்கவும் மறுத்து விட்டார். அப்பொழுது சுந்தரர், ஆரூர் எம்பெருமானையே வேண்டி, அவரையே இருமுறை தூதாக அனுப்பி மீண்டும் பரவையாருடன் இணைந்தார். தூதனுப்பிய செய்தி கேட்டுப் பெருமங்கலத்தில் வாழ்ந்த 'ஏயர்கோன்' பெருஞ்சீற்றம் கொண்டார்; சுந்தரரை வெறுத்தார். இருவரையும் நண்பராக்கத் திருவுளம் கொண்டார் சிவபிரான். ஏயர்கோனுக்குச் சூலைநோய். சுந்தரரால் தீரும் என்ற நிலை. சுந்தரர், சிவபெருமான் ஆணைப்படி

பெருமங்கலம் வருகிறார். ஏயர்கோன் தன் வயிற்றை வாளால் கிழித்து இறந்தார். சுந்தரர் பெருவருத்தம் கொண்டு தாமும் இறக்க எண்ணினார். சிவபிரான் அருளால் ஏயர்கோன் உயிர்பெற இருவரும் நண்பராயினர்; பின்னர் திருப்புன்கூர் முதலான தலங்கள் சென்றனர்.

சேரமான் பெருமாள் நாயனார் புராணம்:-

சேரமான் ஆரூர்வந்து சுந்தரரைக் கண்டு நண்பரானார். இருவரும் பல தலங்களையும் தரிசித்தனர். 'பரவும் பரிசொன்று அறியேன் நான்' என்ற பதிகம் பாடி காவிரி வழிவிடத் திருவையாறு தரிசனம் செய்கின்றனர்; பாண்டி நாட்டுத்

தலங்களையும் தரிசித்துப்பின் சேரநாடு செல்கின்றனர். சில நாள் சென்று பெருஞ் செல்வம் கொடுத்துச் சேரமான் சுந்தரரை ஆருருக்கு அனுப்பி வைக்கிறார். திருமுருகன் பூண்டி என்ற தலத்தின் அருகில், பூதகணங்கள் கள்வர் உருவில் வந்து அவரது செல்வத்தைக் கொள்ளை கொண்டன. சுந்தரர் 'எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே' என்று பதிகம் பாடிப் பொருளைத் திரும்பப் பெற்று ஆரூர் அடைந்தார்.

பலநாள் சென்றபின் மீண்டும் சேரமானைக் காணச் சுந்தரர் புறப்பட்டார்; வழியில் திருப்புக்கொளியூர்' என்ற ஊரில் எதிர்எதிர் வீட்டில், அழுகுரலும், மங்கல முரசும் கேட்டுக்காரணம் வினவினார்; சிறுவனைப் பல ஆண்டுகட்கு முன்பு முதலையுண்ட செய்தியறிந்து, புக்கொளியூர் அவிநாசிப் பெருமானை வேண்டிப் பதிகம்பாடி முதலையுண்ட பாலனை மீட்டுக் கொடுத்தார்; பின் சேரநாடு சென்று திருவஞ்சைக் களத்திறைவரைப் பணிந்து சேரமானோடு இனிதிருந்தார்.

வெள்ளானைச் சருக்கம்:-

'தலைக்குத்தலைமாலை' என்ற பதிகம் பாடி இவ்வுலகை நீத்து இறைவனடி சேர எண்ணுகிறார், சுந்தரர். சுந்தரரின் குறிப்புணர்ந்தார் கயிலை நாதர்! தேவர்கள் புடைசூழ வெள்ளானையை அனுப்பினார். சுந்தரரும் மகிழ்ந்து வணங்கி வெள்ளையானை மீதேறிக் கயிலைக்குச் செல்கிறார். செய்தியறிந்தார் சேரமான். தாமும் ஒரு குதிரையில்ஏறி அதன் காதில் ஐந்தெழுத்து மந்திரம் ஓதுகிறார். அதுவும் விண்ணில் பறந்து சுந்தரருடன் செல்கிறது. இருவரும் கயிலை சென்றனர். அணுக்கன் திருவாயிலில் சேரமான் நிற்க, சுந்தரர் இறைவனிடம் சென்றார். பின் திருவருளால் சேரமானும் கயிலைப் பெருமானை அடைந்தார். சுந்தரர் 'தானெனை முன்படைத்தான்' என்ற பதிகம்பாடி வருணனிடம் கொடுத்து அஞ்சைக்களத்தப்பரிடம் அனுப்பினார் சேரமான் 'கயிலாய ஞான உலா' பாடியதைக்கேட்ட மாசாத்தனார், அதைத் 'திருப்பிடவூர்' என்னும் தலத்தில் வெளிப்படப்பகன்றார்.

இவ்வாறு சுமார் 800 பாடல்களில் சுந்தரரின் சரித்திரம் சேக்கிழாரால் கூறப் படுகின்றது. மேலும் பத்து சருக்கங்களின் முடிவில் கூறப்பட்ட பத்துப் பாடல்களில் சில முக்கிய செய்திகள் கூறப்படுகின்றன.

முதற்பாடல் 'ஆவணப்பழமை காட்டி அண்ட திறத்தைப்' பேசுகின்றது. இரண்டாம் பாடலும் ஆறாம் பாடலும் 'இறைவனை இருமுறை தூதனுப்பிய செய்தி'யைப் பகர்கின்றன. மூன்றாம் பாடலில் தென்திசை உய்யத் திருத்தொண்டத் தொகை பெற்ற செய்தியைக் குறிக்கின்றார். நான்காம்பாடல் 'முதலையுண்ட பாலனை மீட்ட செய்தி'யைக் கூறும். ஐந்தாம் பாடல் 'சங்கிலியை மணம் புரிந்ததை'ச் செப்புகின்றது. 'பொன்னை ஆற்றில் இட்டுக் குளத்தில் எடுத்த செய்தி'யை ஏழாம் பாடல் இயம்பும். எட்டாம் பாடலும், பத்தாம் பாடலும் 'திருமுருகன் பூண்டியில் பொன்னை இழந்ததையும், மீண்டும் பெற்றதை'யும் கூறுகின்றன. ஒன்பதாம் பாடலில் திருவையாற்றில் தரிசனம் செய்ய ஆறு வழிவிட்ட வரலாற்றை'க் கூறுகின்றார்.

மேலும் மூன்றாம்பாடலில் சேக்கிழார் ஒரு புதிய செயதியைக் கூறுகின்றார்; 'மக்களின் கூனும் குருடும் நீக்கி ஏவல் கொண்ட சுந்தரர் பெருமான்' என்று குறிப்பிடுகின்றார்; அவரைப் போற்றி, 'ஏழு பிறப்புக்களினாலும் வந்த கூனை யான் தீர்த்துக் கொள்வேன்' என்றும் குறிப்பிடுகின்றார். விரிவான வரலாற்றில் எங்கும் இச்செய்தியை அவர் குறிப்பிடவில்லை. மற்றும் ஒருசெய்தி. திருப்பூந்துருத்தித் தீர்த்தத்தில் முழ்கி உடற்பிணியைப்

போக்கிக் கொண்டார் எனில் உடற்பிணி எப்போது வந்தது என அவர் குறிப்பிட வில்லை. மேலும், சுந்தரர் வரலாற்றில் சிறப்பாக, 'தீர்த்தமாடினார், காவிரியாடி னார்' என்று தீர்த்தச்சிறப்பையும் சேக் கிழார் பாடுகிறார்.

ஆக, 'கயிலையில் தொடங்கி கயிலையில் முடியும்' இவ்வரலாறு சேக் கிழாரால் செம்மையாகக் கூறப்பட்டது. தேவர்களும் மூவர்களும் தேடிவரும் திரு வடிகள் திருவாரூர்த் தலத்தில் இரவில் தூதாய் நடந்து மெலிந்தன. சிவனடி யார்கள் 'கேடும் ஆக்கமும் கெட்ட திரு வினராகக்' கொலுவீற்றிருந்த தேவா சிரிய மண்டபம் இருப்பதும் இவ்வூரே. ஆரூரன் என்ற பெயரையே தம் பெயரா கக் கொண்ட சுந்தரர் பெருமானை வணங்கிப் பேறு பெறுவோமாக.

ஆளுடைய நம்பியின் அடிமலர்கள் போற்றி, அம்மையப்பரின் அருள் பெற்று உய்வோமாக!

'ஆரூர் அமர்ந்த அரசே போற்றி!

சீரார் திருவையாறா போற்றி!'

நங்கை பரவையார்

டாக்டர். திருமதி. சாரதாநம்பி ஆரூரன், எம். ஏ , எம்.ஃபில்., பிஎச்டி.,
பேராசிரியை, இராணிமேரி கல்லூரி, சென்னை-4.

சேக்கிழார் பெருமானால் அருளப்பட்ட செம்பொருட் காப்பியம் திருத்தொண்டர் புராணமாகும். இப்புராணத்தின் தன்னிகரில்லாத் தலைவனாக சுந்தரமூர்த்தி நாயனாரை அமைத்துக் கொண்டார் சேக்கிழார்.

வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய கயிலைநாதருக்கு திருமாலையும், திருநீறும் ஏந்தும் அணுக்கத் தொண்டர் ஆலால சுந்தரராவார். ஒருநாள் மலர் கொய்ய நந்தவனம் சென்றபோது. அந்தமில் சீர் வனிதையராம் அனிந்திதையும், கமலினியும் வரக்கண்டு மனதை அவர் பால் செலுத்த, ''மாதர்மேல் மனம்வைத்தனை. தென் புவிமீது தோன்றி, அம் மெல்லியலாருடன் காதலின்பம் கலந்து அணைவாய்''என்று இறைவன் ஆணையிட்டார்.

இவ்வாறாக ஆலால சுந்தரர். 'நம்பி ஆரூரர்'என்னும்பெயருடன் திருஅவதாரம் செய்தார். நங்கைமாரும், 'பரவை நாச்சியாரும், சங்கிலி நாச்சியாருமாக'ப் புவியில் பிறந்தனர். இம்மண்ணுலகில் அவரது தோற்றம், மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடவும், தீதிலாத் திருத்தொண்டத் தொகையைச் சுந்தரர் அருளவும் காரணமாயிற்று.

பிறப்பும், வளர்ப்பும்:

கதிர் மணி பிறந்ததென்ன, உருத்திர கணிகைகள் என்று சொல்லப் பெற்ற 'பதியிலார்'குலத்தில் பரவையார் அவதரித்தார். தளர் நடைப் பருவம் அடைந்த அவரது அழகு நாளும் பெருகியதை,

''மானிளம் பிணையோ? தெய்வ வளரிள
முகையோ? வாசத்
தேனிளம் பதமோ? வேலைத்திரையிளம்
பவள வல்லிக்
கானிளங் கொடியோ? திங்கட் கதிரிளங்
கொழுந்தோ? காமன்
தானிளம் பருவங் கற்கும் தனிமிளந்
தனுவோ?''

என்று வியக்கின்றார் சேக்கிழார்![1]

அழகின் முதிர்ந்த நிலைக்குப் பிணை, முகை, தேன்பதம்,பவளக்கொடி,திங்கள், காமன் வில் முதலியவற்றை உவமை சொல்லல் மரபு. ஆயின், அம்மையார் இளங்குழவியாதலால் முற்றாத வளரும் அழகிற்கேற்ப இளம்பிணை, இளமுகை, தேனிளம் பதம், இளம் பவளக்கொடி, திங்கட் கதிரிளங் கொழுந்து, இளம்தனு போன்ற பொருத்தமான உவமைகளைச் சேக்கிழார் எடுத்தாண்டுள்ளார்.

''கண்டு. கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலனுக்கும் பொருந்தும் அளவில் பிணை, கொடி, தேன். முகை, திங்கள் இவற்றை ஒப்பிட்டுள்ளார்'' என்பாருமுளர்.[2]

அந்தமில் அழ்கு :

உயர்ந்த உறுப்பழகு சீரிய குணங்களின் வெளிதோற்றமென்பர் 'உள்ளத்து இயல்புகளில் காணும் வேறுபாடுகளுக் கேற்பவே புறத்தில்காணும் வேறுபாடுகள் அமையுமென்பன்பர் அறிஞர்.[3] அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்பதற்கேற்ப நற்குண, நற்செய்கைகளுக்கு இருப்பிட

மாக விளங்கிய பரவையாரின் அழகு பல இடங்களில் பாராட்டடப்படுவதைக் காண் கிறோம்.

"வரமலர் மங்கையாகிய இலக்குமிதான் இங்கு வந்தாளோ?'[4] என்று பரவையாரை கண்டு வியக்கும் சுந்தரர் கூற்றில் பரவை யைப் பூவின்மங்கையாகவே சேக்கிழார் காட்டுகின்றார்.

"மயிலியலின் இன்தொண்டைச் செங்கனிவாய் இளங்கொடிதான் யார்?''[5] என்று நங்கையின் இனிய சாயலைக் கண்டு ஆருரர் வியக்கின்றார்.

ஓவியநான் முகன்எழுத ஒண்ணாமை
உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்தொரு
மணிவிளக்கோ?[6]

என்று நம்பி ஐயுறுகின்றார்!

பரவையாரின் கன்னிப்பருவ அழகினை கண்டு வியந்த சுந்தரர்,

கற்பகத்தின் பூங்கொம்போ?காமன்றன் பெருவாழ்வோ? பொற்புடைய புண்ணி யத்தின் புண்ணியமோ? புயல் சுமந்து விற் குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ? அற்புதமோ? சிவனருளோ? அறியேனென்றதிசயித்தார்?

கேட்பவையனைத்தும் கொடுக்கவல்ல கற்பக மரத்தின் கொம்பிற்கு ஒப்பிட்டுள் ளமை ஆருரர் விரும்பிய நலன்கள் அனைத்தும் பரவையாரிடம் அமைந்து கிடப்பதனாலே யாம்!

கற்பு+அகத்து+இன்+பூ + கொம்பு— என்று பிரித்துக் கற்பனை அகத்தே கொண்ட இனிய பூ மலர்தற்கிடமாகிய கொம்பு என்றும் பொருள் கொள்ளலாம்.[8]

புண்ணியத்தின் புண்ணியமான பரவை யாரைச் சந்தித்தது, அற்புதமோ? சிவன ருளோ? என்று வியந்தார். சிவனுக்கே ஆளாய் பின்னர், அவனருள் வழியே சென்று வாழ்கின்ற தன்னை இவ்வாறு அற்புதப் படுத்துவது அவனருளல்லாது பிறிது ஒன்றினாலும் இயலாது என்னும் துணிவுவுடையராதலின்' சிவனருளோ'? என்றார்[9]

அண்ணலும் நோக்கினான்;
அவளும் நோக்கினாள்:

நற்பெரும் வினையின் காரணமாக நகை பொதிந்து இலங்கு செவ்வாய், விற் புரை நுதலின் வேற்கண் விளங்கிழை யாராம் பரவையாரும் நம்பி ஆரூரரைக் கண்ட அளவில் 'தன்னை மறந்தாள், தன்நாமம் கெட்டாள்; தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே' என்னும் நிலைக்கு ஆளாயினார்.

'முன்னே வந்தெதிரில் தோன்றுபவன் முருகனோ? மாரனோ? விஞ்சையனோ?' என்று அதிசயித்தார்; 'மின்னேர் செஞ்ச டையண்ணல் மெய்யருள் பெற்றவ னாகவே இருத்தல் வேண்டும்' என்று நம்பினார். ஏனெனில் 'சிவனடியாரே கணவராதல் வேண்டும், அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்ய வேண்டும்' என்று வாழ்ந்தவர் அவர். எனவே அவர் சிவனருள் பெற்றார் கன்றி பிறர் தம்மனம் புக இயலாது என்று உறுதியாக நம்பினார்.

'தம் மனம் கொண்ட மங்கையார் பெயர் நங்கை பரவை' என்றறிந்ததும், சுந்தரர் பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்குல் ஆர்பரவை யணிதிகழும் மணிமுறுவல் அரும் பரவை சீர்பரவை யாயினாள் திருவுருவின் மென் சாயல் ஏர்பரவை யிடைப்பட்ட வென் னாசை யெழுபரவை'[10] என்று வியந்து பாராட்டுகின்றார்.

இப்பாடலில் 'பரவை' என்ற சொல் பன்முறை பயிலப்பட்டுச் சிலேடைப் பொருளில் வருதல் சிறப்புடைத்தாகும்.

ஒரே பாடலில் 'எழுபரவை' அதாவது ஏழு கடல்களையும் அடக்கிய சேக்கிழாரை, "முறையினொரு சிறு தூக்கின் எழுபரவையும் புக முடித்து உற நிறுத்தான். இவன் மொழி எங்கள் தம்பிரான் வல்லபம் உணர்ந்திலை கொல்" என்று மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களே பாராட்டு கின்றார்.

இப்பாடலில் உள்ள 'பரவை' ஏழு என்பதைச் சேக்கிழார் 'என் ஆசை எழு பரவை' என்று முடித்தும் இரட்டுற மொழிந்து காட்டியுள்ளார். பரவையாரின் நடை, முறுவல், அழகு, சாயல் போன்ற வற்றால் சுந்தரர் மனம் கவரப்பட்டு, 'கடல் போன்று அவர் ஆசை எழுவதற்கு பரவையார் காரணமாக இருந்தார்' என்றறிகிறோம். எனவே காப்பியத் தலைவியாம் பரவையாரின் அழகு கற்பனைக்கும் அப்பாற்பட்டது என்பது புலனாம்.

பெரிய புராணப் பெண்டிருள் பரவையார், சங்கிலியார் இருவரது அழகை மட்டுமே '**முற்றிய பெண்மை**' என்று சேக்கிழார் பாராட்டுகின்றார். நம்பி ஆரூரரின் பிறப்புக்குக் காரணமாக இருந்தவர்கள் அல்லவா? அது மட்டுமன்று. பெரிய புராண கமளிரனைவரிலும் பரவையாரின் தெய்வீக அழகே சேக்கிழாரால் அதிக மாகப் பாராட்டப் படுகிறது. மிகுதியான உவமைகள் பரவையாருக்கே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே பெரியபுராணத்தின் காப்பியத் தலைவி,[11] ஆரூரரின் அன்பு மனைவியாம் பரவையாரே!

வண்ணமலர்க் கருங்கூந்தல் மடக் கொடியாம் பரவையார்மனம் இறைவனை யன்றி அயல் அறியாததாயிருந்தது. பின்னர் ஆரூரர் பால் கொண்ட வேட்கையால் உள்நிறையும் குணம் நான்கும் ஒருபுடை. சாய்ந்தன. ஆயினும் அவ்வேட்கையைக் காட்டிலும் கண்ணுதலைத் தொழும் அன்பே பெரிதாயிருந்தது. எனவே பக்தியின் ஆற்றலால் வேட்கையை அப்புறப்படுத்தி வென்ற பரவையார் ஆற்றலும், 'கூடும் அன்பினில் கும்பிடல்' என்ற பேரன்புச் செயலில் அவருக்கிருந்த உறுதியும் போற்றுதற் குரியன.

தெய்வக் காதல்:

'காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்றார் ஔவையார். 'நம்பி ஆரூரர், பரவையார் காதல்' தெய்வீகக் காதல்!

பரவையைப் பாராட்டிய சுந்தரர் இறுதியில் ,சிவனருள்' என்றே வியந்தார்! ஆரூரர் அழகில் தம்மை மறந்த பரவையும் 'செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ' என்றே அதிசயித்து நின்றார்! இருவரும் ஒருவரை ஒருவர் 'சிவனருள்' என்றே கருதியமை இவர்தம் காதலுயர்வைக் காட்டும்!

பார்க்கின்ற பொருள்களனைத்திலும் பரம் பொருளைக் கண்ட சுந்தரர், சிவனருளாகவும் பரவையாரைக் கண்டார்! 'மாழை ஒண்கண் பரவையைத் தந்தாண்டானை' என்று தேவாரத்தில் குறிப்பதால் ஆரூரர் பரவையாரை எத்துணை உயர்வாக மதித்தார் என்பது புலனாகும்!

மேலும் 'பண்மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும் பற்றாய பெருமானே' எனும் போதும் தமக்கும், தம் மனைவியர்க்கும் இறைவன் பற்றுக் கோடாக இருந்து அருள் புரிகின்றான் என்று பாடுவது, அவர்களிருவர் பால் கொண்ட காதல், 'சிவத்தை அடிப்படையாகக் கொண்ட காதல்' என்பதைக் காட்டுகிறது.

சிற்றின்பமே பேரின்பத்திற்கு வழி காட்டும் என்பது சைவசமயச் சான்றோர் கொள்கை.

'பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமங்கு
முற்ற வரும்பரி சுந்தீபற
முனையாது மாயையென் றுந்தீபற'.

என்ற திருவுந்தியார் பாடலும் இக் கருத்தை வலியுறுத்துகின்றது.

இல்லறமாம் நல்லறம்:

கண்ணுதற் கடவுளருளால் பரவை யாரும் நம்பி ஆரூரரும் மணம் புரிந்து கொண்டு திருவாரூரில் இல்லறத்தை இனிது நடத்தினர். அம்மையார் அற வோர்க்களித்தும், அந்தணரோம்பியும், துறவோர்க் கெதிர்ந்தும். விருந்தெதிர் கொண்டும் மனையறத்தை மாண்புற நடத்தி வந்தார்.

தனக்கென வாழாமை:

குண்டையூர் கிழார் ஆரூரரிடம் மிகுந்த அன்புடையவராய், அவருக்குத் தேவையான உணவுப் பொருட்களனைத் தையும் நாளும் பரவை மனைக்கு அனுப்பி வந்தார். வான் பொய்த்தமை யால், எங்கும் வறுமை மிஞ்ச, கிழார் வருந்தினார். இறைவனை இறைஞ்ச, ஆரூரனுக்காக நெல்மழை பொழிவித் தார் நீலமிடற்றண்ணல்! 'ஆளிலை எம் பெருமான் அவை அட்டித்தரப் பணியே' என்று ஆரூரர் வேண்ட, பூதகணங்கள் உதவியால் திருவாரூர் தெருவெல்லாம் நெல் மலைகள் குவிந்தன. அவரவர் வீட்டிற்கு முன் உள்ள நெல்லை வாரி வைத்துக் கொள்ளும்படி பரவையார்,

'இன்றுங்கள் மனைஎல்லைக் குட்படு நெற் குன்றெல்லாம்
பொன்தங்கு மாளிகையிற் புகப் பெய்து கொள்க' [12]

என்று பறையறைவித்தார்.

சுந்தரரைக் கேட்டுச் செய்யாமல், 'பரவையார் தம் விருப்பப்படி நெல்லை வாரி வழங்கும் உரிமை வாழ்வை' அவர் குச் சுந்தரர் அளித்திருந்தமை ஈண்டு எண்ணற்குரியது. 'இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது, வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும் எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே''[13] என்று குமணனிடம் பரிசில் பெற்று மீண்ட பெருஞ்சித்திரனார்தம் மனைவியிடம் கூறிய பாங்கினையும் 'பண்பினையும் பரவையாரிடம் காண்கி றோம்'

பொன்தந்த பொன்னார் மேனியன்:

தோழமையாகத் தன்னை ஆரூரர்க்கு வழங்கிய அண்ணல், திருப்புகலூர், திருப் பாச்சிலாச்சிராமம், திருமுதுகுன்றம், திரு ஒண காந்தன் தளி ஆகிய ஊர்களில் பொன் வழங்கினார். 'பொன்னைத் தந்து என்னைப் போகம் புணர்த்த தன்மை யினார்', 'பொன்னைத் தந்து என்னைப் போகவிடா மின்னவன்' என்று சுந்தரர் பாடுவதால் அறியலாம்.

திருமுது குன்றத்தில் இறைவன் அளித்த பன்னீராயிரம் பொற்காசுகளை மணிமுத் தாறிற்ல் இட்டு திருவாரூர்க் குளத்தில் எடுக்க முயன்றபோது பொன் கிடைக்க வில்லை; 'ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுவீர்; இதுவோ சிவனருள்?' என்று கேட்டுப் பரவையார் நகைத்தார்.

''மின்செய்த நுண்ணிடையாள் பர
வை இவள் தன்முகப்பே
என்செய்த வாறுஅடிகேள் அடி
யேன் இட் டளங்கெடவே''
''வம்ப மருங்குழலாள் பர
வையிவள் வாடுகின்றாள்''

என்றெல்லாம் திருமுது குன்றரைப் பாட நங்கை முன் நம்பியின் மானத்தைக் காப் பாற்ற பொன் அனைத்தையும் தந்து அருளினான் பொன்னார் மேனியன்.

ஆரூரர் இறைவனிடம் பன்முறை பொன்வேண்டிப் பெற்றது தமக்காகவோ

பரவை யாருக்காகவோ அன்று', அவர் மாளிகைக்கு வரும் சிவனடியார்களை உண்பிக்கவே என்பதை உணர்தல் வேண்டும்.[14]

பரவையார் புலவி:

செம்மை நெறிசேர் திருநாவலூரரர் திருவொற்றியூரில் சங்கிலியார் தமைக் குலவு மணம் புணர்ந்ததைக் கேட்ட பரவையார் ஆரூரர்பால் அளவற்ற சினம் கொண்டார். இதனைக் கேள்வியுற்ற ஆரூரர் தாயினல்ல தோழருமாம் தம் பிரானாரிடம் பரவையுறு புலவி தீர்த்துத் தருமாறு வேண்டினார்.

துன்ப மொழிநீ யாமுனக்கோர்
தூத னாகியிப் பொழுதே
பொன்செய் மணிப்பூண்
பரவைபாற் போகின்றோம்[15]

என்றருள் செய்தார் தூது வந்தவர் இறைவன் என்பதை அறியாமல் முதலில் மறுத்த பரவையார். பரம் பொருளே வந்தவரென்றறிந்ததும் இறைவனை வணங்கி' ஆரூரன் பால் கொண்ட ஊடல் தீர்ந்தார்.

'பரவைதன் புலவி தீர்ப்பான்
கழுதுகண் படுக்கும்பானா
ளிரவினிற் றூது கொண்டோன்''

என்று திருவிளையாடற் புராணம் குறிக்கின்றது.

''பேரூரும் பரவைமனப் பிணக்கற வெம் பெருமானை ஊரூரும் பலபுகல ஓரிரவில் தூதனெனத் தேரூரும் ஆரூர்த் தெருவு தொறும் நடப்பித்தாய்'' என்று வள்ளலார் வியக்கின்றார்.

செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண் பாலான[16] எனும் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தவர்கள் பெரியபுராணப் பெண்டிர். அவருள் பரவையார் தன்னைக் காத்து, தற்கொண்டானைப் பேணி, மனையறம் ஓம்பி, பக்தி நிலையிலும் பங்கேற்று, தம்மிடம் உள்ளனவற்றைப் பிறர்க்கு வாரி வழங்கிய வள்ளலாய், பெண் குலத்திற்கு வழிகாட்டியாய் விளங்கியுள்ளார்!

அடிக்குறிப்புகள் :

1 சேக்கிழார், தடுத்தாட்கொண்ட புராணம், பாடல் 280
2 கி. வெங்கடாசலம், சுந்தரர். ப. 28
3 தி.நா. சுப்பிரமணியன், மேற்கோள், அ. சுங்கரி பெரிய புராணத்தில் உவமைகள், ப. 145. 4. தடுத்தாட் கொண்ட புராணம் பாடல். 133.
5 மே. நூல்: பாடல், 147. 6. மே. நூல்: பாடல், 141. 7. மே நூல்:பாடல் 140
8 சி. கே. சுப்பிரமணிய முதலியார் உரை (தடு. புராணம்) ப. 346
9 சி. கே. சு. உரை (தடு.புரா) ப. 348. 10. தடு.புராணம், பாடல், 148.
11 அ. சங்கரி, பெரியபுராணத்தில் உவமைகள். ப. 170.
12 ஏயர்கோன். புராணம், பாடல் 28. 13. பெஞ்சித்திரனார் 'புறநானூறு' 163
14 மறை. திருநாவுக்கரசு, பெரியபுராண ஆய்வுரை (1 தொகுதி) ப. 101
15 ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம், பாடல் 329
16 தொல். பொருள். நூற்பா. 15

அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயில்

கீழ வீதி, -:- திருவாரூர்.

தஞ்சாவூர் மாவட்டம்

வரலாற்று சிறப்புமிக்க அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் கிழக்கே, நகரின் நடுநாயகராக எழுந்தருளி இருப்பவர் அருள்மிகு பழனியாண்டவர். நாள்தோறும் பெருகி வரும் பக்தர்கள் எண்ணிக்கை வேலவனின் வள்ளல் தன்மையை விளக்கும் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் இத்திருக் கோவிலின் குடமுழுக்கினை நடத்த விரைவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அருள்மிகு பழனியாண்டவர் மூலவர் தங்கக் கவச திருப்பணிக்கு பக்தர்கள் தங்கள் காணிக்கையை பெருவாரியாக வழங்க வேண்டுகிறோம்.

சு. ஸ்ரீதரன், B.A.
செயல் அலுவலர்

அ. ஜெயராமன், B.A.
உதவி ஆணையர்/தக்கார்

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் குழு ஆலயங்களில் ஒன்று

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரை, தமிழ்நாடு

மதுரை பல நூற்றாண்டு கால வழிபாட்டின் மைய தலமும், சமய வரலாற்றுச் சிறப்பும் பெற்ற திருத்தலமாகும். இத்திருக்கோயில் சுமார் 3600 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்போதுள்ள கோயிலில் மிகப்பெரும் பகுதிகள் கி. பி. 1200-1800-ல் கட்டப்பட்டவையாகும். இத்திருக்கோயில் நமது நாட்டின் தொன்றுதொட்டே கலைத் திறனையும் கட்டடக் கலையின் சிறப்பையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. பல மண்டபத்திலுள்ள தூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் இத் திருக்கோயிலின் சீரிய சிறப்பை உணர்த்துகின்றன.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் கோல சிற்பக் காட்சியில், அருள்மிகு சுந்தரேசுவரர் பெருமானின் கம்பீரமும் அன்னை மீனாட்சியின் நாணமும், வலது புறத்தில் விஷ்ணு புனித நீரை தாரைவார்த்து மணமக்களின் கரங்களை இணைத்து வைக்கும் காட்சியும் ஈடிணையில்லாத காட்சியாகும். பிரசித்தி பெற்ற ஆயிரங்கால் மண்டபம் கலையின் கருவூலம் என்பதற்கேற்ப திருக்கோயிலின் கலைக்கூடம் பொருத்தமாக நிறுவப் பட்டு உள்ளது.

இத்திருக்கோயிலில் புகைப்படங்கள், முன் அனுமதியுடன் டிக்கட் பெற்று எடுக்க அனுமதிக்கப்படுகின்றன. இத்திருக்கோயிலுக்கு வருகைதந்து அன்னை மீனாட்சி தந்தை சுந்தரேசுவரர் பெருமானை வழிபட்டு அவர்களின் ஆசியும் கருணையும் பெற்றிட வேண்டுகிறோம்.

வழிபடும் நேரங்கள் :-

காலை 5 மணி முதல் மதியம் 12-30 மணி வரை.
மாலை 4 மணி முதல் இரவு 9-30 மணி வரை,

திருவிழா :-

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் புகழ் பெற்ற ''சித்திரைப் பெருவிழா'' இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழாவாகும்.

கருங்கல் விமானங்கள்

இத்திருக்கோவிலில் வன்மீகநாதர் மூலஸ்தான விமானம், தியாக ராஜர் கருவறை விமானம், விஸ்கர்மேஸ்வரர் விமானம் மூன்றும் கருங் கல்லால் ஆனவை. அசலேஸ்வரர் விமானம், கமலாம்பிகை விமானம், நீலோத்பலாம்பாள் விமானம் ஆகிய மூன்றும் பாதியளவு கருங்கல்லால் ஆனவை. இந்த ஆறு விமானங்கள் மீதும் சுண்ணாம்பு காரை பூசப்பட்டு அலுங்கு, பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இவற்றுள் விஸ்வ கர்மேஸ்வரம் மட்டும் எவ்வித பின்னமும் இன்றி மிக அற்புதமாக இருந்ததால் தற்போதைய திருப்பணியின் போது மேலே போர்த்தப் பட்டிருந்த சுண்ணாம்பு காரை அகற்றப்பட்டு கருங்கல்லாகவே விடப் பட்டுள்ளது.பீடம் முதல் கலசம் வரை கருங்கல்லாலேயே ஆன விமான மாக உள்ளது. விமான கோஷ்டம், கருவறை கோஷ்டங்களில் உள்ள சிற்பங்களும் கருங்கல்லால் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அதிகாரி

அருள்மிகு கண்ணாயிரமூர்த்தி ஐயனார் திருக்கோயில்

சொரக்குடி, கங்களாஞ்சேரி (அஞ்)

நன்னிலம் வட்டம்

சைவ சமயத்தின் தலைமைப் பீடமான அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில் அமைந்துள்ள திருவாரூரிலிருந்து வடக்கே மயிலாடுதுறை சாலையில் 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. வேண்டுபவர்க்கு வேண்டுவன அனைத்தும் அளித்து கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக அருள்பாலிக்கின்றார் அருள்மிகு கண்ணாயிரமூர்த்தி ஐயனார் மனமுருகி குறைகளை முறையிடுவோருக்கு மனமிரங்கி வாழ்விக்கும் வள்ளல். வழிபட்டு வாழ்வாங்கு வாழ வேண்டுகிறோம்.

சு. ஸ்ரீதரன், பி. ஏ.

தக்கார்

வழிபட வரும் அருளாளர்களுக்கு தங்குவதற்கென இத்திருக் கோயிலின் நிர்வாகத்தில் மேலக் கோபுரத்திற்கு அருகில் 'பிர்லா விஷ்ரம்' எனப்படும் தங்கும் விடுதியுள்ளது.

சிறப்பு வழிபாடுகள் :-

1.	வைரக்கிரீடம் சாத்த	ரூ. 500/-
2.	உபய கல்யாணம் செய்ய	ரூ. 501/-
3.	தங்க ரதம் இழுக்க	ரூ. 1001/-

தினசரி பூஜை நேரம்:

அம்மன் சன்னிதி

திருவனந்தால் சித்தி விநாயகர் சன்னிதி
தீபாரதனை காலை 5 மணி
திரைபோடும் நேரம் :-

		ம. நி.		ம. நி.
விளாபூஜை காலசந்தி	காலை	6-30		7-00
திருக்கால சந்தி உச்சிக்காலம்	,,	10-30		11-00
சாயரட்சை	மாலை	4-30	மாலை	5-15
அர்த்த ஜாமம்	இரவு	7-30	இரவு	7-45

பள்ளியறை தீபாராதனை முடிவு இரவு 10-00 மணி

சுவாமி சன்னிதி

சம்பந்தர் சன்னிதி
தீபாராதனை காலை 6 மணி
திரைபோடும் நேரம் பூஜை முடிய

	ம. நி.	ம நி.
காலை	6-45	7-30
காலை	11-00	11-30
மாலை	5-00	5-30
இரவு	7-45	8-30

இரவு 9-30 பல்லக்கு புறப்பாடு

கே. எஸ். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி.

வி. என். சிதம்பரம்,
தக்கார்.



கழற்சிங்க நாயனார்

சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ.,
பேராசிரியர், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறை.

''ஆடுவாய் நீநட்டம் அளவிற் குன்றா
அவியடுவார் அருமறையோ ரறிந்தே னுன்னைப்
பாடுவார் தும்புருவும் நார தாதி
பரவுவார் அமரர்களும் அமரர் கோனும்
தேடுவார் திருமாலும் நான்மு கனும்
தீண்டுவார் மலைமகளும் கங்கை யாளும்
கூடுமே நாயடியேன் செய்குற் றேவல்
குறையுண்டே திருவாரூர் குடிகொண் டீர்க்கே''[1]

—பாவுக்கரசராம் நாவுக்கரசர்.

புகுமுன் :

மனிதன் மனிதனாக வாழ்தற்கும், மனிதன் மனித நிலையினின்றும் இனிதுயர்ந்து புனித நிலை எய்துதற்கும் அருந்துணையாய் இலங்குவன புராணங்கள். ''புரா என்றால் பழமை; ந என்றால் புதுமை. பழமையும் புதுமையும் சேர்ந்தது புராணம்; புரா, ந இரண்டும் சேர்ந்து புராணம் ஆயின. ரகரம் வந்தால் ந, ண வாக மாறும். நடந்த காலத்தால் பழமையானது. ஆனால்இன்றைக்கும் அது பயன் தருவதால் புதுமையானது'' என்பார் திருமிகு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்.[2] இப்புராண வகையைச் 'சார்ந்தது' என்னும் பான்மையினது அரியபுராணமாகிய பெரியபுராணம். பாக்கிழாராகும் சேக்கிழார் சுவாமிகள் இதனை இயற்றி நமக்குப் பாடி உதவியுள்ளார்கள்.

அரியபுராணமாம் பெரியபுராணம் :

இரண்டு காண்டங்களையும், பதின்மூன்று சருக்கங்களையும், நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்களையும் உடையதாய அரிய புராணமாம் பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணத்தில், சோழநாட்டில் காவிரிக்கு வடகரைப்பகுதியில் உள்ளதாகும் தேவாரத் தலம் போன்று, அறுபத்திமூன்று தனி யடியார் புராணங்கள் பேசப்படுகின்றன. இதனோடு ஒன்பது தொகையடியார் வரலாறுகள் சேர்த்து ஆக எழுபத்திரண்டு வரலாறுகள் மிளிர்ந்து அரநெறியினையும் அறநெறியினையும் அறிவுறுத்தி ஒளிர்கின்றன. சேக்கிழாரடிகள் பாடிப்பரவிய தனியடி யார்களுள் ஒருவரே.

''கழற்சிங்கர்''

பத்தாம் சருக்கமாம் ''கடல் சூழ்ந்த சருக்கம்'' என்னும் பகுதியுள் ஐம்பத்து மூன்றாம் வரலாறாக இடம்பெற்றுள்ள ''கழற்சிங்க நாயனார்', குறித்துச் சேக்கிழாரடிகள் பதின்மூன்று திருப்பாட்டுக்களைப் பாடியுள்ளார்கள்.

கவியரசர்நோக்கில் புவியரசர்:

கவிவேந்தராம் சேக்கிழாரடிகள் புவிவேந்தராம் கழற்சிங்கரைக் குறித்துப் "படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்"[3] எனத் தொடக்கப்பாடலின் தொடக்கத்திலேயே பாடித் தொடங்குகின்றார். பல்லவராய் வந்துதித்த கழற்சிங்கர் சிவாலயங்களிளெல்லாம் வந்து துதித்துச் சிவனடியே சிந்தித்திருப்பார்:

"படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
கடிமதில் மூன்றும் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
அடிமலர் அன்றி வேறொன்று அறிவினில் குறியா நீர்மைக்
கொடிநெடும் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார்"[4]

வல்லவராம் பல்லவர்கள்:

தமிழரில் வல்லவர்கள் என்றும் தமிழர் அல்லாதவர்கள் என்றும் இரு கூற்றதாய் குறிக்கப்பெறும் மரபினர் பல்லவர்கள். 'பஹ்லவர்' என்னும் பாரசீக மரபினர் என்றும், கோதாவரிக்கும் கிருஷ்ணைக்கும் இடைப்பட்ட வேங்கி நாட்டவர் என்றும், தென்னிந்தியக் குடியினர் என்றும் பல்வேறுபட்ட கருத்துக்கள் பல்லவர்பற்றி அறிஞரிடையே உலவுகின்றன.[5] 'நிலையான பரம்பொருளுக்கு நிலையான கற்கோயில் முதற்கண் சமைத்தவர்கள் பல்லவர்களே! மாமல்லபுரத்தே விளங்கும் இராசசிம்மன் கற்றளிக் கோயில் வகையே இந்நாளில் காணலாகும் கோயில்களுக்குத் தொடக்கமாகும். இப் பல்லவர் வழிவந்தவரே கழற்சிங்கர்.

வடநாடுடையோனும், தென்னாடுடையோனும்:

கழற்சிங்கர் வடபுல அரசர்களைப் பொடிபடச்செய்து வெற்றி மாலையினைப் பெற்றியுடன் அணிந்தவர். வடபுலத்தாரைக் களத்திலேயே வைத்துக் கடும்போர் செய்த கழற்சிங்கர் தென்னாடுடைய சிவனை எந்நாளும் மறவாத நெறியுடையாராவார். அறநெறியில் தோய்ந்த கழற்சிங்கர் குற்றமற அரசாண்டு மக்களை நன்னெறியில் வளர்த்து வரும் இயல்பினராய் இலங்கினார்.

அரண்மனை விடுத்து அரன்மனை நாடல்:

பகைக்குப் பகை வைத்த கழற்சிங்கர் சிவதலங்களுள் சில தலங்களை வலம் வருதலே வாழ்வில் வளம்தரும் என உணர்ந்து தன் அரண்மனையினின்றும் அரன்மனை நாடிச் சென்று வழிபட்டார். 'குவலயத்து அரனார் மேவும் கோயில்கள் பலவும் சென்று'[6] தக்க மெய்த்தொண்டு செய்வார்.

சீரூர் தொழுகை; ஆரூர் வருகை :

நிலையான பரம் பொருளுக்கு நிலையான ஆலயங்கள் முதற்கண் சமைத்த பல்லவர் வழிவந்த கழற்சிங்கர், நிலையாத வாழ்வு எண்ணிக் குலையாத அன்புடன் கலையாத கல்வி உணர்வுடன் ஊரூராய்க் கண்டு வணங்கி ஆரூர் வந்தெய்தினார். ஆவியுடன் உடல் பொருளைச் சிவபெருமானுக்கு ஆக்கும் கழற்சிங்கர் தேவியுடன் இந்த ஆரூர் ஆலயத்திற்கு வந்து எய்தினார். கழற்சிங்கருடன், கரணத்தியல்வர், கருமாதிகாரர், கனகச்

சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என்னும் எண்பேராயம் சூழக் கழற்சிங்கர் சித்தத்தைச் சிவன்பால் வைத்து வணங்கினார்

'அரசியல் ஆயத் தோடும் அங்கணர் கோயிலுள்ளால்
முரசுடைத் தானை மன்னர் முதல்வரை வணங்கும்' [7]

பேரூராம் ஆரூர்ச் சிறப்பு:

முத்தித்தலங்கள் இன்னின்னன என நான்கு தலங்களைக் குறிப்பிடுவர் சைவசமயிகள். பேரூராம் ஆரூர், காசினியில் அரும்பதியாம் காசிப்பதி, மண்ணாப் புகழுடைய அண்ணாமலை, தில்லை போல் எப்பதியும் அருள் வழங்குவதில்லை என்று ஏற்றப்படும் தில்லை எனப் போற்றப்படும் தலங்கள் முறையே பிறக்கவும், இறக்கவும், நினைக்கவும், வழிபடவும் முத்திப்பேறு நல்கும் தகுதிப்பேறு உடைய தலங்களாகும். இன்னும் ஐம்பூத தலங்களுள், 'பிருதிவி' என்னும் மண்ணுக்குரிய மன்னுபுகழ்த் தலமாகவும் பிறக்கமுத்தி நல்கும் திருவாரூர் விளங்குகின்றது.

திருவாரூர்த் திருத்தலத்தில் வழிபட்டுப் பேறுபெற்ற தேவர், முனிவர், அரசர், பிறர் என்போர் மிகப் பலராவர். நாவாரப் பாடுதற்கு முப்பத்தினான்கு தேவாரப் பதிகங்கள உடையது இத்திருவாரூர்த் திருத்தலமாகும். [8]

கழற்சிங்க நாயனாரோடு, செருத்துணை நாயனார், சோமாசி மாற நாயனார், தண்டியடிகள் நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், நமிநந்தியடிகள் நாயனார், விறன்மிண்ட நாயனார் என்போர் சேர்த்து எண்ணவரும் எண்மர் திருவாரூர் வந்து வழிபட்டு நற்பேறு பெற்ற நாயான்மார்கள் ஆவார்கள்.

திருவாரூர்க்குரிய பல்வேறு குறிப்புகளைத் 'திருவாரூர்' எனப்பெயரிய தருமையாதீன நூலினுள் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும், திருவாரூர்த்தியாகராஜ லீலை, 'திருவாரூர் உலா', 'திருவாரூர்க்கோவை' என்ற நூல்களின் ஆராய்ச்சி முன்னுரையில் திரு உ.வே.சாமிநா ஐயர் அவர்களும் மிகச்செறிவாக,விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

பூவை நுகர்ந்த பூவை:

இத்தகு ஆரூர்ப் பதியில் கழற்சிங்கர் தியாகேசப் பெருமானை இனிதே வழிபட்டு இருந்தார். தேவியோ அதுபோது திருக்கோயிலை வலம் வந்து எம்பெருமானுக்கு மாலை தொடுக்கும் மண்டபத்தினைத் தனியே வந்தெய்தி அங்குக் கிடந்த புதுப்பூ ஒன்றை எடுத்து அதனை நுகர்ந்தார்:

"கோயிலை வலங்கொண்டு அங்கண் குலவிய பெருமை எல்லாம்
சாயல்மா மயிலே போல்வாள் தனித்தனி கண்டு வந்து
தூயமென் பள்ளித் தாமம் தொடுக்கும்மண் டபத்தின் பாங்கர்
மேயதோர் புதுப்பூ அங்கு விழுந்ததொன் றெடுத்து மோந்தாள்." [9]

இவ்வாறு, புதுப் பூவை நுகர்ந்தகைக் கண்ட, இறைத்துணை வேண்டும் நாயன்மாராகிய 'செருத்துணை நாயனார்' மிக வெகுண்டு, "இது மலர் திருமுற்றத்துள் எடுத்து மோந்தனளாம்"[10] என ஓடிவந்து தேவியாரின் மூக்கினைப் பிடித்து வெட்டிவிட்டார்!

வெட்டிவிட, 'மலர்ந்த கற்பகத்தின் வாசப் பைந்தளிர்ப் பூங்கொம்பு ஒன்று பார்மிசை வீழ்ந்தது என்ன' [11] தேவி கீழே விழுந்து அரற்றினாள்.

அரசியல் புகழ் கைக்கொண்டார் அரசியார் செங்கை கொண்டார்:

அரசியாரின் அலறல் குரல் கேட்டு அரசராம் கழற்சிங்கர் கடிது வந்தார்; கொடியது இது என்று கடிந்தார்; தடிந்தார் யாரென்று கடிந்தார். தடிந்த செருத் துணையார் கழற்சிங்கர் வாழ்க்கைத் துணையார், ஆடும் அரனார்க்குச் சூடும் பூவை நுகர்ந்தது கூறினார். 'ஆலய வழிபாட்டிற்கான பூவை எடுத்து நுகர்ந்தமைக்கு மூக்கை அரியும்முன் அப்பூவை எடுத்த கையையன்றோ முதலில் துணித்திருக்க வேண்டும்' என்று கூறித்தன் உடைவாளால் தன் உடையவளின். 'பட்டமும் அணிந்து காதல் பயில்பெரும் தேவி'' ஆனவளின், கையை 'வளைபொடும் துணிந்தார்.' [12]

அரன்நெறியும்; அறநெறியும்:

ஆலய வழிபாட்டிற்கான பூக்கள் எங்கிருப்பினும் அதனை நுகர்தல் ஒருபோதும் தகாது என்னும் அரன் கோயில் நெறியினைச் சற்றும் அறம் பிறழாது, தன் பட்டத்து அரசியேயாயினும், கையையே துணித்துவிடத் துணிந்துவிட்ட கழற்சிங்கரை வானோரும், ஏனோரும் மிகப்புகழ்ந்து, "மருவிய தெய்வ வாச மலர்மழை பொழிந்து" வாழ்த்தினார்கள்.

செருத்துணையார் யார்?

ஆலயத்தின் பூமாலை கட்டும் மண்டபத்தின் பாங்கில் இருந்த ஒரு பூவினை எடுத்து நுகர்ந்த கழற்சிங்கன் தேவியை அவர் கூந்தல் பற்றிப்பிடித்துக் கீழ் வீழ்த்தி, "பரமர் செய்ய சடை முடியில் ஏறும் திருப்பூ மண்டபத்து மலர் மோந்திடும் மூக்கைத் தடிவேன்"[13] என்று வாளினால் அரசியின் மூக்கினைத் தடிந்த செருத்துணையார், "மருகல் நாட்டுத் தஞ்சாவூர்" பகுதியினர். இப்பெரிய புராணத்துள் வேளாளர் மரபினராய்க் குறிக்கப் பெற்ற பதின்மூன்று நாயன்மாருள் இச்செருத்துணையாரும் ஒருவர்.[14] ஏழு பாக்களால் விவரிக்கப்பட்டுள்ள செருத்துணை நாயனார் புராணம் பெரியபுராணத்தின் ஐம்பத்தைந்தாம் புராணமாகும்.

வரலாற்றறிஞர் கழறும் கழற்சிங்கன்:

"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்'' [15]

என்று சுந்தரர் பெருமான் சுந்தரத் தமிழில் திருத்தொண்டத் தொகையில் சுட்டப்பெற்ற கழற்சிங்கன் கி.பி. 825 தொடங்கிக் கி.பி. 850 ஈறாக அரசாண்ட 'மூன்றாம் நந்திவர்மன் என்ற பல்லவ மரபினனே ஆவான் என முனைவர் மா. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள் தம் 'பல்லவ வரலாறு' நூலுள் நுவன்று இருக்கின்றார்கள். 'இதனை முதன் முதலில் விளக்கிக் கூறிய பெருமை டாக்டர் மீனாட்சியம்மையார்க்கே உரியது'[16] என்று நன்றியுடன் போற்றுகின்றார் 'மா நா' அவாகள். மீனாட்சியம்மையாரின் நூலின் பெயர் Ad. and S. Life under the Pallavas' என்பதாகும்.

'ஆடக மேரு வில்லார் அருளினால் அமரில் சென்று
கூடலர் முனைகள் சாய வடபுலம் கவர்ந்து கொண்டு
நாடுஅற நெறியின் வைக நன்னெறி வளர்க்கும்' [17]

எனவரும் சேக்கிழார் அடிகளின் அடிகள் குறிக்கும் 'வடநாட்டுப் போர்' பல்லவர்-இராட்டிர கூட மரபினர் போர் என்பார் 'மா.ரா' அவர்கள். இவ்வடநாட்டுப் போரினை குருக்கோட்டைப் போர் என்பர். 'குருக்கோட்டை என்பது பெல்லாரிக் கோட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் உள்ள குருக்கோடு என்பதே ஆகும். அங்குள்ளமலை மீது அழகிய கோட்டையும் சாளுக்கியர் காலத்துக் கோயில்களும் பிறவும் அழிந்த நிலையில் இருக்கக் காணலாம்'[18] என்பர் 'மா.ரா' அவர்கள்.

கழற்சிங்கராகும் மூன்றாம் நந்திவர்மனின் வடநாட்டுப் போரினை வேலூர்ப் பாளையப் பட்டயம் குறிப்பாகக் குறிக்கும். 'படைக்கலப் பயிற்சியில் பண்பட்ட நந்தி வர்மன் பிறரால் பெறுதற்கரிய பல்லவப் பெருநாட்டின் செழிப்பைப் பெற்றான். அவன் அதற்காகப் போர்க்களத்தில் தன் பகைவரைக் கொன்றான். அவ்வாறு வாளால் துணிக் கப்பட்ட யானைகள் அணிந்திருந்த முத்துமாலைகள் போர்க்களத்தில் சிதறிக் கிடந்த காட்சி போர்க்கள மங்கை தன்பற்களைக் காட்டி நகைப்பது போல இருந்தது' [19]

கழற்சிங்கனாகிய இம்மூன்றாம் நந்திவர்மன் போரிட்ட இராட்டிர கூடமன்னன் கி. பி. 814 முதல் 880வரை அரசாண்ட ''அமோக வர்ஷன்'' ஆவான்.[20]

பல்வேறு நிவந்தங்களைச் சிவாலய வழிபாட்டிற்காக அமைத்தவன் இப்பல்லவன் என்பதனை, ''சிவனை முழுதும் மறவாத சிந்தையன்''[21] என்னும் நந்திக் கலம்பக வரிகள் விளக்கிக்காட்டும். கழற்சிங்கனாகும் இம்மூன்றாம் நந்திவர்மன் அரன் பணி யினை விளக்க அரண்செய்வதுபோல் 'வேலூர்ப்பாளையப்பட்டயம்' என்னும் பட்டய வரிகள் காண்கின்றன. அவை, சிவனது திருஅடையாளம் நெற்றியிற்கொண்ட (திருநீறு அணிந்த) நந்திவர்மன் கைகளைக் குவித்து, 'எனக்குப் பின்வரும் அரசர் இந்தத் திருப்பணியைப் பாதுகாப்பாராக' என்று வேண்டுகின்றான் என்பனவாகும்.[22]

இனி, 'பூசலார் நாயனார்' என்பாருடன் இணைத்துக்காட்டிப் பேசப்படும் இராச சிம்மனை (கி. பி. 685--705) கழற்சிங்கன் என்று தவறாகக் கருதிச் சுந்தரர் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் நிறுத்தினர் பலராவர் எனக் குறிப்பாகக் குறிப்பிடுகின்றார் 'மா. ரா.' அவர்கள்.[23]

கொற்றவன் குடியார் போற்றும் கழற்சிங்கர் கொற்றம்:

குரு, இலிங்கம், சங்கமம் என்னும் முத்திற வழிபாட்டினுள் இலிங்க வழிபாட்டு நெறியால் நம் வழிபாட்டிற்குரியராகிய கழற்சிங்கர் அவதரித்தநாள் வைகாசி மாதத்துப் பரணி நட்சத்திரத் திருநாளாகும், 'பரணியில் பிறந்தவர் தரணி ஆள்வார்' என்னும் பழமொழிக்கு நன்றான சான்றாய் இலங்கியவர் கழற்சிங்கர். 'அவனி நாரணன்' என்றெல்லாம் போற்றப்படும் மூன்றாம் நந்திவர்மனாகிய கழற்சிங்கரால் விளைந்த, கலம்பக நூல்களுள் சிறந்த 'நந்திக்கலம்பகம்' யாவராலும் போற்றி ஏற்றப்படும் நூலாகும். சேக்கிழாரடிகள் விவரித்த இவ்வரலாற்றை ஒரு விருத்தத்தால் பொருத்தமுறப் பாடியுள்ளார், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார், தம் 'திருத்தொண்டர் புராணப் பயன் என்னும் திருத்தொண்பர் புராண சாரம்' என்னும் நூலினுள்:

''காடவர்தம் குலமுவந்த கழலார் சிங்கர்
காதல்மிகு தேவியின் காவ லாரு
ராடவல பெருமானைப் பணிவா ரங்கோ
ரகன்றமலர் தனைமோந்த வரிவை மூக்கைச்
சேடுடைய செருத்துணையா ரரியக் கேட்டுத்
திறலரசர் மலரெடுத்த செங்கை யென்றே
சூடகமுன் கைதடிந்து ஞாலம் காத்த
தூய்மையார் அருள்சேர்ந்த வாய்மை யாரே ''[24]

தொகுப்பும், முடிப்பும்:

ஆக, இதுகாறுங்கண்டவற்றான், பட்டத்தரசியே யாயினும் சில அபராதச் செயல் செய்யின் அதற்குண்டாய தண்டனையினின்று, முன்பின் அறியா அரனடியார் தந்த தண்டனையனின்று, தப்பிட இயலாது எனவும், அரனடியார் தண்டனை குறையின் அரசனே கைக்குறைத்துத் தண்டனை வழங்குவான் எனவும், மூன்றாம் நந்திவர்மனே கழற்சிங்கன் எனவும் பெரியபுராணத்தின் பாங்கான பாக்கள் சிந்தனை யுடன் பன்னூற் சிந்தனைகளையும் இணைத்து நினைத்து ஒரு சிறிது புலப்படுத்தப் பெற்றது.

''வையகம் நிகழக் காதல் மாதேவி தனது செய்ய
கையினைத் தடிந்த சிங்கர் கழலிணை தொழுது போற்றி ''[25]

சான்றாதாரக் குறிப்புக்கள்:

1 திருநாவுக்கரசர்: தேவாரம்: ஆறாம்திருமுறை: திருவாரூர்ப்பதிகம்: பா. 8
2 கி.வா. ஜகந்நாதன்: கந்தவேள் கதையமுதம்: பக் 6-7
3 சேக்கிழார்: பெரியபுராணம்: கழற்சிங்க நாயனார் புராணம்: பா. 1
4 —— மேற்படி ——
5 டாக்டர் மா. ராசமாணிக்கம்பிள்ளை: பல்லவர் வரலாறு: ப. 25
6 சேக்கிழார்: பெரியபுராணம், கழற்சிங்க நாயனார் புராணம்: பா. 3
7 —— மேற்படி ——: பா. 4
8 திருஞானசம்பந்தர் பாடியன 5 பதிகங்கள், திருநாவுக்கரசர் பாடியன 21 பதிகங்கள், சுந்தரர் பாடியன 8 பதிகங்கள். ஆக, 34 பதிகங்கள் திருவாரூர்க்கு உரிய பதிகங்களாகும். மாணிக்கவாசகரும், பிற அருளாளர்களும் இத்தலம் பற்றி மிகப்பல இடங்களில் குறித்துள்ளனர்.
9 சேக்கிழார்: பெரியபுராணம்: கழற்சிங்க நாயனார் புராணம்: பா. 5
10 —— மேற்படி ——: பா. 6
11 —— மேற்படி ——: பா. 8
12 —— மேற்படி ——: பா. 10
13 சேக்கிழார்: பெரியபுராணம்: செருத்துணைநாயனார் புராணம்: பா. 5

14 பெரியபுராண நாயன்மார்களுள், குலமரபு குறிக்கப் பெற்றவர்களுள், வேளாளர் மரபினைச் சார்ந்தவர்கள் பதின்மூன்று நாயன்மார்கள் காணப் படுகின்றனர். அவர்கள் திருப்பெயர்கள்: அரிவாட்டாயர், இளையான் குடிமாறன், ஏயர்கோன் கலிக்காமன், கோட்புலியார், சத்தியார், சாக்கியர், செருத்துணையார், அப்பர், மானக்கஞ்சாறர், முனையடுவார், மூர்க்கர், வாயிலார், விறன் மிண்டர்.

15 சுந்தரர்: திருத்தொண்டத் தொகை: பா. 9

16 டாக்டர். மா. இராசமாணிக்கம்பிள்ளை: பல்லவர் வரலாறு: அடிக்குறிப்பு: ப.201

17 சேக்கிழார்: பெரியபுராணம்: கழற்சிங்கநாயனார் புராணம்: பா. 2.

18 டாக்டர் மா. இராசமாணிக்கம்பிள்ளை: பல்லவர் வரலாறு: ப. 199.

19 —— மேற்படி —— ப. 200.

20 —— மேற்படி —— ப. 198.

21 நந்திக்கலம்பக ஆசிரியர்: நந்திக்கலம்பகம்; கோ. அருணாசலதேசிகர் விளக்க உரைப்பதிப்பு: அதிகமாகக் காணப்படும் செய்யுள்: பா. 8.

22 டாக்டர். மா. இராசமாணிக்கம் பிள்ளை: பல்லவர் வரலாறு: ப. 201.

23 —— மேற்படி ——

24 உமாபதி சிவாசாரியார்: திருத்தொண்டர் புராணப்பயன் என்னும்திருத்தொண்டர் புராண சாரம்: பா. 58.

25 சேக்கிழார்: பெரியபுராணம்: கழற்சிங்கநாயனார் புராணம்: பா: 13.

சோமாசிமாற நாயனார்

இரா. செல்வநாயகம்,
நூலகர், கலைக்கல்லூரி, தருமபுரம்.

உலகில் எண்ணற்ற மொழிகள் தோன்றி வாழ்கின்றன. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பு உண்டு. ஆங்கிலத்தை வாணிகத்தின் மொழி என்றும், இலத்தீனைச் சட்டத்தின் மொழி என்றும்,கிரேக்கத்தை இசையின் மொழி என்றும்,பிரெஞ்சை தூதின் மொழி என்றும் இத்தாலியை காதலின் மொழி என்றும் சொல்வது போல தமிழை பக்தியின் மொழி என்று சொல்வது ஒரு வகையில் மிகவும் பொருந்தும் ஏனெனில் எம்மொழிக்கும் இல்லாத ஒரு தனி அமைப்புத் தமிழுக்கு உண்டு. சங்க காலத்திற்குப் பிறகு கி.பி. 6-ஆம் நூற்றாண்டுத் தொடங்கி 19-ஆம் நூற்றாண்டு வரை சுமார் 1300 ஆண்டுகள் தமிழ்மொழியினை,சமயம் என்ற ஒன்றிலிருந்து பிரித்துக் காண முடியாத வகையில் அது அமைந்துள்ளது.

தமிழின் கண் அமைந்துள்ள முப்பெரும் புராணங்களுள் ஒன்றான பெரிய புராணத்தினைச் சேக்கிழார் அருளினார். இப் புராணத்தில் சோமாசிமாற நாயனாரின் வரலாறு 6 பாடல்களில் சுட்டப்பட்டுள்ளது. அப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அவர் வரலாறு இங்கு எழுதப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க திருவாரூர் குடமுழுக்கு விழாமலரில் சோமாசி மாறனாரின் வரலாறு இடம் பெறுவது அந்நாயன்மார் ஆரூர் அடைந்து வன்தொண்டருக்கு அன்பராகி வாழ்வில் உய்ந்தமையினால் பொருந்துவதாகும்.

சோலைகள் சூழ்ந்த திருஅம்பர் என்னும் ஊரில் சோமாசிமாறனார் தோன்றினார். மாறர் என்பது இவரின் இயற்பெயராகும். சோமாசி என்பதற்கு வேதாகமங்களில் விதித்தவாறு சிவயாகங்களை நியமமாகச் செய்யும் மறையோர் எனப் பொருள் படும். யாகங்களில் சோமயாகம் பண்ணுகிறவர் சோமயாஜி எனக் குறிப்பிடப்படுவர். இச்சோமயாஜி என்பது பின்னே சோமாசி என்று ஆயிற்று. ஸ்ரீ ராமானுஜாசாரியாரின் தகப்பனார் சோமயாகம் பண்ணியவர் என்றும், அவரின் பெயர் கேசவசோமயாஜி என்றும் குறிப்பர். சோமயாகங்களுக்குச் சாமவேதமே சிறப்புடையதாகும்.

இந்நாயனார் செய்த தொண்டுகள் பலவாம். பொதுவாகச் சைவ அடியார்கள் பலரும் ஏதேனும் ஒரு தொண்டினைக் கைக்கொண்டு அதனை இடைவிடாது செய்து உய்ந்தனர். ஆனால் இச் சோமாசி மாறநாயனார், தொண்டுகள் பலவற்றை இடைவிடாது செய்து உய்ந்தவர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

சிவ வழிபாடு:

இவர் சிவபெருமானைப் போற்றும் யாகத்தினைச் செய்து பெரும் புண்ணியம் கொண்டவர். இவர் செய்த பெருயாகத்தில் சிவபெருமான், தேவியாரும் தாமுமாக நீச

வடிவத்துடன் வந்து அவிகொண்டருளினார் என்னும் ஒருவரலாறு திருஅம்பர்த் தல மான்மியத்துள் சிறப்பாக வழங்கப்படுவதையும், அதனை முன்னிட்டு அம்பர்யாகம் என்றதொரு விழா அங்கு ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதையும் ஈண்டு நினைவு கூறலாம். ஆனால் இறைவனும் இறைவியும் யாகத்திற்கு வந்த குறிப்பு பெரியபுராணத்தில் இல்லை.

குருவழிபாடு:

சைவ சமயத்துள் சிறப்பாகக் குறிக்கப்பெறும் மூன்று வழிபாடுகளுள் குருவழிபாடு ஒன்று. ஆண்டவன் மனிதச்சட்டை தாங்கி வந்து சகலராகிய சராசரி உயிர்களை ஆட் கொள்ளுவன் என்று சாத்திரங்கள் கூறும். இவ்வகையில் இந்நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தமக்குக் குருவாகக் கொண்டு உய்ந்தார். இதனைச் சேக்கிழார்

சீருந்திரு வும்பொழி யுந்திரு வாரூர் எய்தி
ஆரந்திகழ் மார்பின் அனுக்கவன் றொண்டர்க் கன்பால்
சாரும்பெரு நண்பு சிறப்ப அடைந்து தங்கிப்
பாரும்விசும் பும்பணி யும்பதம் பற்றியுள்ளார்.

என்று கூறுகிறார்.

அப்பூதியடிகள் அப்பரைப் போற்றி உய்ந்தமை போல இவரும் சுந்தரரைப் போற்றி இன்புற்றார் என எண்ணி மகிழலாம், திருமூலர் குருவழிபாட்டின் சிறப்பைக் கூறும் பொழுது

தெளிவு குருவின் திருமேனி காண்டல்;
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்;
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

என்று கூறுவர். இவ்வாக்கிற்கிணங்க இவர் வாழ்ந்த வரலாறு, அறிந்து கடைப்பிடித் தற்குரியது.

சங்கம வழிபாடு:

அடியார்களை அழைத்துவந்து அமுதூட்டி அவருக்கு வேண்டுவன செய்து வாழ்தல் சங்கம வழிபாடாகும். இதன் சிறப்பினைச் சேக்கிழார் இளையான்குடிமாறர் வரலாற்றில்

''கொண்டுவந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டிநாலு வித்தி லாறு சுவைத்தி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர்இச்சையில் அமுது செய்ய அளித்துளார்.''

என்று கூறுவர். சோமாசிமாறரும் அன்பர் வந்தால் அவர் பாதம் பணிந்து அமு தூட்டி மகிழ்ந்தார் என்னும் கருத்தினைச் சேக்கிழார்,

'ஏதம்புரி யும்எயில் செற்றவர்க் கன்பர் வந்தால்
பாதம்பணிந் தார்அமு தூட்டுநற் பண்பின் மிக்கார்'

என்று கூறுகிறார்.

இக்காலத்து மக்கட்பலர், சமயம் என்பது சமுதாயத்து மக்களைப் பிரித்துப் பார்க்கிறது என்றும், மனித ஒருமைப்பாட்டிற்கு சமயம் துணை நிற்காது என்றும் மனம் வந்த வகையில் பேசியும் எழுதியும் வருகின்றனர். இது முற்றிலும் தவறானது என்பதைச் சமய அருளாளர்கள் வாழ்வும்,வாக்கும் மெய்ப்பிக்கும்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது திருமூலர் வாக்கு.

''சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்''

என்பர் அப்பர் அடிகள். எனவே சமயம், சாதிவேறுபாடு கடந்தது என்பதனை உணரலாம். உண்மையில் எண்ணிப்பார்த்தால் உலக மக்களை வேறுபாடற்ற ஒரு வட்டத்திற்குள் அடக்க வேண்டுமெனில் அதற்கு எல்லாச் சமயங்களையும் படிநிலைகளாகக் கொண்டு வளர்ந்து முதிர்ந்துள்ள சைவசமயமே துணை நிற்கும்.

இதனைக் கருத்தில் கொண்ட சோமாசிமாற நாயனார் என்ன சாதியில் பிறந்து இருந்தாலும் எவ்வளவு செல்வம் பெறாதிருந்தாலும், தாழ்ந்த பதவி உடையோராய் இருந்தாலும் அவர்கள் ஆண்டவனுக்கு அன்பராய் இருந்தால் நம்மால் வணங்கப்படும் தகுதியுடையோராவர் என்று எண்ணி வாழ்ந்து வந்தார். இதனைச் சேக்கிழார்

'எத்தன்மைய ராயினும் ஈசனுக் கன்பர் என்றால்
அத்தன்மையர் தாம்நமை யாள்பவர் என்று கொள்வார்'

என்று கூறுகிறார்.

'சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில்
அங்கமெலாங் குறைந்தொழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே'

என்ற அப்பர் தேவாரமும் இங்கு நினைவு கூரத்தக்கது.

ஐந்தெழுத்து ஓதிய அன்பர்:

ஞானசம்பந்தர் வேதங்களின் மெய்ப்பொருளாவது,'நாதன் நாமம் நமச்சிவாயவே' என்றார். எனவே, ஐந்தெழுத்தினை நியமமாக ஓதுதல் ஒன்றே வேதங்களை ஓதும் புண்ணியத்தினைத் தரும் என்பது கருத்தாம். திருநீல நக்கர், வேதம் ஓதும் அந்தணர் குலத்தில் பிறந்து இறைவனுக்குப் பூசனை செய்து அதனால் மனம் நிறைவுபடாது இறைவனை வலம் வந்து வணங்கி நேர்நின்று ஐந்தெழுத்தோதி அமைந்தார் என்று சேக்கிழார் அவர் வரலாற்றில் குறிக்கிறார்.

நீடு பூசனை நிரம்பியும் அன்பினால் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு வணங்கிமுன் வழுத்தித்

தேடு மாமறைப் பொருளினைத் தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற இருந்துமுன் நவின்றார்.

என்பது அப்பொருள் உடைய பாடல்.

எனவே ஐந்தெழுத்து ஓதுதல் வேதங்களின் வழி யாகம் செய்தலை விட ஆக மங்களின் வழி பூசனை புரிவதை விடச் சிறந்தது என்பாராய்ச் சேக்கிழார்,

'வேதம் பயிலும் மறையாளர் குலத்தின் மேலோர்'

என்று இவரை அறிமுகப்படுத்தி

'சித்தந்தெளி யச்சிவன் அஞ்செழுத் தோதும் வாய்மை நித்தம்நிய மம்' எனப் போற்றும் நெறியில் நின்றார் என்று விளக்கிக் காட்டுகிறார்.

முடிவுரை:

சோமாசிமாறனார் சிவவழிபாடு, குருவழிபாடு, சங்கம வழிபாடு என்னும் மூன்றினையும் முறையாகச் செய்தவர் என்பதும், ஐந்தெழுத்தினை நியதியாக ஓதி உய்ந்தார் என்பதும் அவர் வரலாற்றால் உணரக் கிடைக்கும் செய்திகளாகும். அம்பர் சோமாசி மாறனார் திருவடி போற்றி உய்வோமாக!

திருவாரூர் திருக்குளத் திருப்பணித் தொண்டர் தண்டிநாயனார்

டாக்டர். ந. அமிர்தலிங்கம்
ஆசிரியர், திருக்கோயில்.

தொலைக்காட்சியில் அண்மையில் ஒரு செய்திப் படத்தைப் பார்த்தேன். ஜனநெரிசல் மிக்க ஒரு சாலையில் மக்கள் பலர் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறார்கள். சாலையின் மையப் பகுதியில் கிடக்கும் கல்லொன்று பலரைத் தடுக்கிவிழச் செய்கின்றது. கண்ணிருந்தும் பலர் அக்கல்லைப்பற்றிக் கவலைப் படாமல் போய்க் கொண்டு இருக்கும்போது கையில் கோலை ஊன்றி நடக்கும் குருடர் ஒருவர், தம்மைத் தடுப்பது எது என்று கீழே குனிந்து பார்த்து, மக்கள் நடமாட்டத்திற்குத் தடையாய் உள்ள அக்கல்லை, எடுத்துப்போய் யாருக்கும் இடையூறின்றி ஒரு ஓரத்தில் வீசி எறிவதைக் காட்டிய அச்செய்திப் படம், 'யார் குருடர்கள்?' என்ற ஒரு கேள்வியைக் கேட்டு, கண்ணிருந்தும் கடமை ஆற்றாதவர்களே குருடர்கள் என்ற உயர்ந்த உண்மையை நமக்கு எடுத்துக் காட்டியது.

இந்தச் செய்திப் படத்திற்கும், இப்போது நாம் காணப்போகும் தண்டியடிகள் நாயனார் வரலாற்றிற்கும் மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறது. தண்டி நாயனாரும் பிறவிலேயே குருடர். பிறக்க முத்திதரும் திருவாரூர்த் திருத்தலத்தில் பிறந்தவர் சிவபெருமானின் திருவடிகளையே எஞ்ஞான்றும் அகத்தே கண்டு உருகும் ஆர்வநெஞ்சினர் புறத்தே உள்ள மற்றைப் பொருட்களைக் காணும் பற்றினைத் துறந்தவர்போல் பிறக்கும் போதே கண்கள் இன்றிப் பிறந்தார் தண்டிநாயனார், என்று சேக்கிழார்,

> "தண்டியடிகள் திருவாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடையார்
> அண்டவாணர் மறைபாட ஆடும் செம்பொற் கழல்மனத்துக்
> கொண்ட கருத்தின் அகநோக்கும் குறிப்பேயன்றிப் புறநோக்கும்
> கண்ட உயர்வு துறந்தார்போற் பிறந்தபொழுதே கண்காணார்"

எனப் பாடுகிறார்.

சிவபெருமானைக் காணும் கண்களே கண்கள்; காணாதவை கண்கள் அல்ல; புண்கள் என்பது தண்டி நாயனார் எண்ணம். அகக்கண்களால் திருவாரூர் தியாகேசனை நாளும் பணிந்து தியாகேசர் திருத்தொண்டிலேயே தம்முடைய வாழ் நாட்களைப் போற்றி வந்தார் அவர்.

திருவாரூர்க் கோயிலும், குளமும், ஓடையும் முறையே ஐயைந்து வேலிப் பரப்புடையனவாகும். தம்முடைய நாமணக்க, நமச்சிவாய மந்திரத்தை நாளும் ஓதி இலக்குமி தவம் செய்த கமலாலயத் தீர்த்தக் குளத்தில் நீராடி, தியாகேசரை வழிபட்டுத் திருக்கோயிலை வலம் வந்து மாறாத பக்தி செய்து வந்தார் தண்டி நாயனார். அவ்வாறு

பக்தி செய்து வரும் நாளில் திருக்குளத்தின் பரப்பு நாளுக்கு நாள் சுருங்கிக்கொண்டு வருவதை உணர்ந்து கொண்ட தண்டிநாயனார் அதன் காரணத்தை அறிந்து உளம் பதைத்தார்.

கமலாலயத் திருக்குளத்தில் நீரைத் தூர்த்து, சமணர்கள் அங்கெல்லாம் தங்கள் மடங்களையும், பாழிகளையும் அமைத்து வரவே, திருக்குளத்தின் பரப்பு நாளுக்கு நாள் சுருங்கி வரலாயிற்று. சுயநலத்துக்காகச் சமணர்கள் இவ்வாறு திருக்குளத்தை ஆக்கிரமித்துத் தங்கள் சொந்த இடங்களாக அவற்றை அமைத்து வந்த செயலே தண்டி நாயனாரைத் துடிக்க வைத்தது. சைவ சமயத்திற்கும், சிவாலயத்திற்கும் பெருங் கேடு சூழும் சமணர்கள் செயலைக் கண்டும் காணாதவர்களாய் விழிபடைத்த மற்றவர்கள் எல்லாம் வாளா இருந்த போதுதான் விழி இழந்த தண்டி நாயனார் தாம் துடி துடித்து, திருக்குளத்தைச் சமணர்களிடம் இருந்து மீட்க என்ன வழி என்பதாகச் சிந்தித்தார்.

திருக்குளத்தில் தூர் வாரி, திருக்குளத்தை ஆழப்படுத்துவதன் மூலமே திருக்குளத்தின் நீரும் வற்றாமல் நிறைந்திருக்கும். அதனால் சமணர்கள் மேலும் மேலும் பாழிகளை அமைப்பதைத் தடுக்கலாம் என்று முடிவு செய்த தண்டி நாயனார் தமக்கு விழிகள் இல்லையே என்று கவலைப் படாமல், மற்றவர்களின் துணையையும் கூட வேண்டாமல் தாமொருவராகவே திருக்குளத்தில் இறங்கித் தூர் வார ஆரம்பித்தார்.

திருக்குளத்தில் இறங்கிய தண்டி நாயனார் தாம் தோண்ட வேண்டிய இடத்தில் ஒரு கோலை நட்டுக் கொண்டார். திருக்குளத்தின் கரையில் மற்றொரு கோலை நட்டு இரண்டு கோல்களையும் கயிறு கொண்டு இறுகப் பிடித்துக்கொண்டார். அஞ்செழுத்தை ஓதியவாறு மண்வெட்டி கொண்டு மண்ணைத் தோண்டினார். தோண்டிய மண்ணைக் கூடையில் வாரினார். இருகோல்களைப் பிணித்திருக்கும் கயிற்றினைத் தடவியவாறே கரைக்கு வந்து மண்ணைக் கொட்டினார். பிறகு மறுபடியும் குளத்தின் உட்பகுதிக்குச் சென்று தோண்டினார். இவ்வாறு ஒப்பற்ற திருக்குளத் திருப்பணித் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார் தண்டி நாயனார்.

> "குழிவாய் அதனிற் குறிநட்டுங் கட்டும் கயிறு குளக்கரையில்
> இழிவாய்ப்புறம் நடுதறியோ டிசையக் கட்டி இடைத்தடவி
> வழியால் வந்து மண்கல்லி யெடுத்து மிறைத்துத் தடவிப் போய்
> ஒழியா முயற்சி யாலுய்த்தார் ஓதுமெழுத் தஞ்சுடன் உய்ப்பார்"

தண்டியடிகள் நாயனார் புராணம் 15.

விழிகள் அற்ற நிலையிலும் தண்டி நாயனார் ஆற்றிய திருப்பணியைப் பாராட்டச் சைவ அடியார்கள் அப்பொழுது யாரும் முன்வரவில்லை. ஆனால் சமணர்கள் பலர் தண்டி நாயனாரின் திருப்பணியைத் தடுத்திடத் திரண்டு வந்தார்கள். அவர்கள் 'சிவனே' என்று சிவப்பணியில் ஈடுபட்டிருந்த தண்டி நாயனாரைச் சூழ்ந்து கொண்டவர்களாய் "மண்ணைத் தோண்டி ஏன் மண்ணுக்குள் வாழும் உயிர்களை வருத்துகின்றாய்" என்று கேட்டார்கள்.

சமணர்கள் ஆருயிர்கள் மேல் அன்பும் அருளும் காட்டுவதாக நடிப்பார்களே அன்றி, உண்மையில் இரக்க மனம் படைத்தவர்கள் அல்லர். திருஞானசம்பந்தரின் திருமடத்திற்குத் தீ வைத்த அரக்க மனத்துச் சமணர்கள்தாம் இப்பொழுதுதண்டி நாயனார்

ரையும் சூழ்ந்தவர்களாய், உயிர்களுக்காக வருந்துவதைப் போல் நடித்து அவர்தம் திருப்பணிக்கு இடையூறு செய்தார்கள். முதலையின் கண்ணீர் போன்றதே முன்நிற்கும் சமணர்களின் அன்பும் அருளும் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்த தண்டி நாயனாரும் சமணர்களுக்கு அஞ்சிடாமல் 'சிவபெருமானுக்குச் செய்யும் எப் பணியும் குறையில்லா அறமே ஆகும் என்பது ஏன் உங்களுக்குத் தெரியவில்லை?' என்று கேட்டு விட்டுத் திருக்குளத்தின் தூர்வாரும் பணியை நிறுத்தாமல் தொடர்ந்து செய்து கொண்டிருந்தார்.

சமணர்கள் பேசிய இரக்கம் பொய்யிரக்கமே ஆனதை அவர்களின் அடுத்த செயல் மெய்பித்துக் காட்டியது. மண்ணில் வாழும் புழு முதலிய உயிர்களுக்குப் பரிதாபப் படுவதைப் போல் நடித்த அவர்கள், உண்மையில் அன்பும் இரக்கமும் உள்ளவர்களாக இருந்தால் தண்டி நாயனாரிடத்திலும் அல்லவா அன்பு பாராட்டி இருக்கவேண்டும். அவர்கள் தண்டிநாயனார் பணியைச் செய்யாமல் தடுத்தவர்களாய் மேலும் அவரை நெருங்கி,'சொல்வதை கேட்க மாட்டாய்! உனக்கு கண்கள் தாம் இல்லை என்று எண்ணி னோம், காதும் அல்லவா கேட்கவில்லை' என்று வசைபாடினார்கள்.

சூழ்ந்து நிற்கும் சமணர்களின் சுடுசொல்லை ஆற்றாத தண்டி நாயனார் அப்பொழு தும் அஞ்சிடாமல் சமணர்களுக்குப் பதில் கொடுத்தார். 'மந்த உணர்வு, விழிக்குருடு, கேளாச் செவி எல்லாமும் உங்களுக்குத்தான். எனக்கொன்றும் இல்லை' என்று தண்டி துணிவாகப் பேசி, வில்லால் எயில் மூன்றும் எரிந்த சிவபெருமானின் விரையார் கமலச் சேவடிகளை எப்பொழுதும் மனக்கண்ணால் கண்டு கொண்டிருக்கும் தொண்டன் என்னையா நீங்கள் குருடன் என்று பழிக்கிறீர்கள்? என் தியாகேசன் என் கண்களைக் காண வைப்பான். அதே நேரம் உங்கள் கண்களை எல்லாம் குருடாக்கி விடுவான். அப்படி நடந்து விட்டால் நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?'என்று சமணர்களிடம் கேட்டார், சிவபெருமானின் திருவருள் திறத்தில் மிக உறுதியான நம்பிக்கை கொண்ட தண்டி நாயனார்.

தண்டி நாயனாரின் இவ்வார்த்தையைக் கேட்ட சமணர்கள் ''உன் தெய்வத்தின் அருளால் நீ கண்பெற்றால் நாங்கள் இந்த ஊரில் இல்லாமல் எங்காவது ஓடிப் போகிறோம்'' என்று தாங்களும் விடையிறுத்தார்கள். அவ்வளவோடு அமையாது அந்த அருகர்கள், தண்டி நாயனார் கையில் வைத்திருந்த மண்வெட்டியையும், கூடையையும் வாங்கித் தூர எறிந்துவிட்டனர். 'தருகைக் கயிறும், தறியும் உடன் பறித்தார்; தங்கள் தலைபறித்தார்' என்று சேக்கிழார் பெருமான் மொட்டைத் தலையர்களாகிய சமணர்கள் தண்டி நாயனாரிடம் நடந்து கொண்ட முறைகேட்டினைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சமணர்களால் தாக்கப்பட்டும் தெய்வத் திருப்பணி செய்ய இயலாமல் தடுக்கப்பட்டும் வாடிய தண்டி நாயனார் திருவாரூர் தியாகேசன் ஆலயம் சென்று அவர் திருமுன் நின்று தமக்குச் சமணர்கள் இழைத்த அவமானத்தைக் கூறி முறையிட்டு அழுது குறையிரந்தார் 'அழுதால் அவனைப் பெறலாமே' என்பது மணிவாசகர் திருவாக்கு. தண்டியடிகள் பகலில் அழுது வருந்தியதற்குச் சிவபெருமான் இரவில் கனவில் தோன்றி ஆறுதல் கூறினார்.

'நெஞ்சில் மருவும் கவலையினை ஒழிநீ நின்கண் விழித்தந்த
வஞ்ச அமணர் தம்கண்கள் மறையுமாறு காண்கின்றாய் அஞ்சவேண்டா'

என்று கூறித் தண்டிநாயனாரை மகிழ்வித்த இறைவர், அதே இரவில் திருவாரூரை ஆண்டிருந்த மன்னன் கனவிலும் தோன்றி அவனுக்குக் கட்டளையிட்டார்.

'தண்டி நமக்குக் குளங்கல்லக் கண்ட அமணர் தரியாராய்
மிண்டு செய்து பணிவிலக்க வெகுண்டான் அவன்பால் நீமேவிக்
கொண்ட குறிப்பால் அவன் கருத்தை முடிப்பாய்'

இது தியாகேசர் மன்னனிடம் கூறிய செய்தியாகும். 'தண்டியடிகளைப் போய்ப்பார். சமணர்கள் செய்த அநியாயத்தையும் அது தொடர்பாக எழுந்த வாதத்தையும் கேள். நீயே பக்கம் இருந்து தண்டியின் கருத்தை முடித்து வை' என்று இறைவனே கட்டளை இட்ட பிறகு, மன்னன் வாளா இருக்க முடியுமா?

அமைச்சர் கட்டளையிட்டால் அவர்தம் கட்டளையை நிறைவேற்ற, அதிகாரிகள் உடன் தலத்திற்கு விரைந்து வருவதை இன்றைக்குக் காண்கிறோம். அப்படித்தான் தியாகேசர் கட்டளையிட, மன்னன் தண்டிநாயனாரைத்தேடி வந்து, அவர்தம் குறையைக் கேட்டான் அவரும் நடந்ததெல்லாம் மன்னனிடம் கூறினார். மன்னன், உடனே சமணர்களையும் வரவழைத்து விசாரித்தான்.' இவருக்கு இவருடைய தெய்வத்தால் கண் கிடைத்தால், நாங்கள் இந்த ஊரை விட்டு ஒட, இப்பொழுதும் சம்மதிக்கிறோம்' என்று கூறினார்கள், சமணர்கள் திமிராக. 'தெய்வமாவது,தெய்வத்தின் அருளால் கண்கள் வருவதாவது? இந்தத் தண்டி ஒரு பைத்தியகாரன். சிவபெருமான் தனக்குக் கண்கொடுத்துவிடுவார் என்று ஏதோ குருட்டு நம்பிக்கையில் உளறுகிறான். அவனே குருடன், அவனுடைய நம்பிக்கையும் குருட்டு நம்பிக்கையாகத்தானே இருக்க முடியும்?' என்று சிந்தித்தவர்களாய், தெய்வத்தின் பெயரில் உறுதியான நம்பிக்கை இல்லாத சமணர்கள் 'எங்கே தண்டி? கண் வரக்காட்டு பார்ப்போம்' என்று துணிவாகச் கூறினார்கள்.

நம்பினோர் கெடுவதில்லை.இது நான்கு மறைத் தீர்ப்பு. தியாகேசரை உறுதியாக நம்பிய தண்டியடிகள் நமசிவாய மந்திரத்தைச் சிந்தித்தவராய், திருக்குளத்தில் மூழ்கினார்

''ஏய்ந்த அடிமை சிவனுக்குயான் என்னில் இன்றென் கண்பெற்று
வேந்தன் எதிரே திருவாரூர் விரவும் சமணர் கண்ணிழப்பார்
ஆய்ந்த பொருளும் சிவபதமே ஆவ தென்றே அஞ்செழுத்தை
வாய்ந்த தொண்டர் எடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினார்''

(தண்டியடிகள் நாயனார் புராணம் 19)

கண்ணின் மணிகள் அவையின்றிக் கயிறுதடவிக் குளந்தொட்ட, எண்ணில் பெருமைத் திருத்தொண்டராகிய தண்டி நாயனார் உடன் கண்களைப் பெற்று,திருக்குளத்திலிருந்து எழுந்த அதே நேரம் கண்களை இழந்து சமணர்கள் "ஐயோ கண் தெரியவில்லையே' என்பதாகக் கூறிக் கதறினார்கள். ஒருவர் மற்றவர்மேல் மோதிக்கொண்டு தடுமாறித் தவித்தார்கள். அவர்கள் கொண்ட துயர் நிலையை சேக்கிழார் பெருமானும்

''குழியில் விழுவார் நிலை தளர்வார் 'கோலு மில்லை' எனஉரைப்பார்
'வழியீ' தென்று தூ றடைவார் 'மாண்டோம்' என்பார் 'மதிகெட்டீர்
அழியும் பொருளை வட்டித்திங் கழிந்தோம்' என்பார் 'அரசனுக்கும்
பழியீ தாமே? என்றுரைப்பார் பாய்கள் இழப்பார், பறிதலையர்''

'பீலி தடவிக் காணாது பெயர்வார் நின்று பேதுறுவார்
காலி னோடு கைமுறியக் கல்மேல் இடறி வீழ்வார்கள்
சால நெருங்கி எதிரெதிரே தம்மிற் தாமே முட்டிடுவார்
மாலு மனமும் அழிந்தோடி வழிகள் அறியார் மயங்குவார்'

(தண்டியடிகள் நாயனார் புராணம் 22-23)

என இரண்டு பாடல்களில் வருணித்திருக்கிறார். கண்கள் இருந்தபோது அவர்கள் போட்ட ஆட்டத்திற்கு, இல்லாதபோது வாடும் இந்த வாட்டம் நியாயம்தானே.

திருவாரூர் மன்னனும், 'தண்டி கருத்தை முடிப்பாய்' என இறைவர் இட்ட கட்டளைக் கிணங்கவே சமணர்களைத் திருவாரூரை விட்டு விரட்டியடித்தான். சமணர்கள் திருக்குளத்தைத் தூர்த்து அமைத்த பள்ளிகளும் பாழிகளும் மறைந்தன. முன்பு கண்கள் இல்லாமல் தூர்வாரும் பணியில் தனியொருவராக ஈடுபட்ட தண்டி நாயனார், பிறகு இருகண்களுடன் மன்னவன் துணையோடும் கமலாலயத்திருக்குளத் திருப்பணியைச் செவ்வனவே செய்து முடித்து, சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார்.

"மன்னன் வணங்கிப் போயினபின் மாலும் அயனும் அறியாத
பொன்னங் கழல்கள் போற்றிசைது புரிந்த பணியும் குறைமுடித்தே
உன்னு மனத்தால் அஞ்செழுத்தும் ஓதி வழுவா தொழுகியே
மின்னும் சடையார் அடிநீழல் மிக்க சிறப்பின் மேவினார்.

தண்டியடிகள் நாயனார் புராணம் 25

தண்டியடிகள் நாயனாரின் வரலாற்றால் திருக்குளத்திருப்பணித் தொண்டின் மகத்துவத்தை அறிகிறோம். ஒவ்வொரு ஆலயமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றாலும் சிறப்புப் பெறுகிறது. புண்ணிய தீர்த்தங்கள் உள்ள திருக்குளங்களைத் தூய்மையுடன் பேணவேண்டுவது மக்களின் தலைசிறந்த கடமையாகும். இன்றைக்கு நம்முடைய அறநிலையத்துறையின் மூலம் ஆலயத் திருக்குளத் திருப்பணிகள் பல வேகப் படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எனினும், திருக்குளத் தூய்மையைப் பராமரிப்பதில் மக்களின் பங்கே மிகப் பெரியதாகும். கண்ணற்ற நிலையிலும் தண்டி அடிகள் திருக்குளத்தின் தூய்மையைப் பராமரிக்கக் காட்டிய ஆர்வத்தில் நூறில் ஒரு பங்காவது நாம் இன்றைக்குக் காட்டுகிறோமா? நாம் பிறரை தூற்றவும் குறைகூறவும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளை இனிக் கைவிட்டுத் திருக்குளத்தின் தூய்மையைக் காத்திடவும் அதற்கான நம் கடமையைத் தொண்டுள்ளத்துடன் ஆற்றவும் முன் வருவோமாக!

"திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்"

திருமதி. வெ. சாரதா தண்டபாணி,
ஆய்வாளர், மொழியியல் துறை, பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-46.

முன்னுரை

பெரியபுராணத்தில் சமுகத்தால் 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று தள்ளி வைக்கப்பட்ட சில பிரிவினரின் பக்தியும், இறைவன் இவர்களின் பக்தியை மெச்சி மூக விதிமுறைகளைமீறி கோவிலுக்குள் அழைத்து கொண்டமையும், அந்தணராக மாற்றிக் காட்டியமையும், தன் அன்புக் நரியவராக ஏற்றுக் கொள்ளும் சிறப்பு களையும் காணலாம். இச்சிறப்புக்களா லேயே இவர்கள் நாயன்மார்களில் ஒருவ ராகவும் வைத்துப் பாடிப் புகழப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளார்கள்.

திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கப் படாத பாணர் வகுப்பைச் சேர்ந்தவர். புலையர்' என்னும் தாழ்ந்த குலத்தைச் சார்ந்தவர் 'திருநாளைப்போவார்' என்னும் 'நந்தனார்'. காட்டிலும், மலையி லும் வேட்டையாடி விலங்கினங்களைச் சுட்டுத் தின்னும் வேட்டுவக் குலத்தவர் கண்ணப்ப நாயனார். இதுபோல் பல சமயத்தாரையும் பக்தியின் அளவுகோல் கொண்டு அளந்து தன் அடியார்களாய் ஏற்று, சாதிகளைக் கடந்து நிற்பது சிவ பெருமானின் அருளாகும்.

நடுவுரை:

நடுநாட்டில் 'திருவெருக்கத்தம் புலி யூரில்' பாணர் வகுப்பில் பிறந்தவர் 'நீல கண்டர்'. 'திரு' என்பது பெயரடைச் சிறப்பாக வந்தது. யாழ் வாசிப்பதில் சிறந்து விளங்கியமையால் 'யாழ்ப்பாணர்' என்று இசைக்கருவியோடு குலப்பெயரும் இணைந்தது. 'நீலகண்டர்' என்பது சிவ பெருமானின் மற்றோர் திருநாமம். 'விஷ' மாகிய கருமையைக் கண்டத்தில் உடைய வன் அவன். அவனின் திருநாமத்தை இவருக்குச் சூட்டியுள்ளதால் இவரின் பெற்றோரும் சிவப்பற்று மிக்கவர்களாக இருந்தமை புலப்படுகின்றது'. வழிவழி யாகச் சிவபக்தி நிறைந்த குடும்பமாக இவர் குடும்பம் திகழ்ந்திருக்க வேண்டும்.

நீலகண்டரின் பக்திக்கும், இசைக்கும் ஊறு விளைவிக்காமல் மேலும் மேலும் இசை ஆர்வத்தையும், பக்தியையும் வளர்க்கும் விதத்தில் இவருக்கு மனை யாட்டி அமைந்தது இறைவன் அரு ளென்றேகூறவேண்டும் வாய்ப்பாட்டால் கேட்டோரை உருகச் செய்யும் குரல்வள முடைய 'மதங்கசூளாமணி' என்னும் இசை யரசி நீலகண்டரின் இல்லத்தரசியானார். இவர்கள் இருவரும் இல்லமதில் வாழ்ந்து வீண்பொழுது போக்காமல் இறைவன் புகழ்பாடிக் கொண்டு எல்லாக் கோயில் களுக்கும் செல்வாராயினர்.

சோழ நாட்டுத் தலங்களைப் பாடிப் பரவியவர் மதுரையிலுள்ள 'திருவாலவாய்' என்னும் திருப்பதியிலுள்ள இறைவன் புகழ்களைப் பாடினார். பாட்டின் திறமும், இசையின் இனிமையும் ஒருசேரக் கவரப் பெற்ற இறைவன் அடியார்கள் கனவில் தோன்றி நீலகண்டரை' தன்முன் அழைத்து வரும்படிப் பணிக்கின்றார்.

இதுநாள் கோயிலுக்குள் செல்லாமல் கோயில் வாசலில் நின்றபடியே பாடிப் பரவிவந்த 'நீலகண்டர்' முதன் முதலாக இறைவன் கட்டளைப்படி கோயிலுக்குள் செல்கிறார். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்றபடி கோயிலுக்குள் சென்று பாட முடியா வருத்தத்தை வெளிக்காட்டாமல் பொறுமையுடன் இருந்த நீலகண்டரை இறைவனே 'தன் திருமுன்' அழைக்கும்படியான பெரும்பேறு நிகழ்ந்தது. இத்தோடு மட்டுமல்லாது இறைவன் நீலகண்டரின் யாழிசையிலேயே மயங்கி உள்ளம் கவரப் பட்டு அருகழைத்தான் என்பதையும் அடுத்த நிகழ்ச்சி தெரிவிக்கிறது.

இறைவன் திருமுன் தலரையில்நின்றபடி யாழ்வாசித்துப் பாடிக்கொண்டிருப்பதைக் காணும் இறைவன் 'தரையின் சீதோஷ்ண நிலையால் யாழின் இறுக்கம் அழியும்' என்பதை உணர்ந்து, நின்றுகொண்டு பாடபொற்பலகையொன்றினை வழங்கும்படி 'அசரீரி' மூலம் ஆணையிடுகின்றான். யாழ் இறுக்கம் கெட்டு அதனால் யாழின் இனிமையான இசை கெட்டு தான் கேட்டு மகிழும் இசைவெள்ளம் வற்றிவிட்டால் என்னாவதுஎன்ற இறைவனின் ஆதங்கம் இங்கு வெளிப்படுகின்றது.

மதுரையிலிருந்து பலபதிகளை வணங்கி 'திருவாரூர்' வந்து சேர்ந்தார் நீலகண்டர். திருவாலவாய்ப் பெருமான் யாழிசையில் உள்ளம் பறிகொடுத்து,கோயில் உள்ளே அழைத்து, யாழிசை கெடாமல் இருக்கப் பொற்பலகை அளித்ததைவிடவும் 'திருவாரூர் தியாகேசப்பெருமான்' மேலும் ஓர் சிறப்பினை செய்தார் யாழ்பாணருக்கு இங்கே அடியார்கள் கனவிலும் சென்று சொல்லாது, அசரீரி வழங்கி கட்டளையும் இடாது தாம யாழ்ப் பாணருக்கென ஒரு வாசல் அமைத்துத் தருகிறார்.குலவழக்கப்படி திருவாரூர் கோயிலுக்குள் வராமல் வாசலிலேயே நின்றுபாடும் நீலகண்டரை காணும் இறைவன் தம்மால் படைக்கப் பட்ட மக்கள் வகுத்த குலஏற்றத்தாழ்வு கண்டு வேதனையும் கோபமும் அடைந்துள்ளதை அவர் செயல் காட்டுகிறது எனலாம். தம்பக்தன், தன்னை யாழிசையால் மகிழ்ச்சியடையச் செய்பவன் வாசலில் நின்று தம்புகழ்பாட, தம்மை வேண்டி வரம்கேட்டு அன்புத்தொல்லைகள் தருவோர் உள்ளே வருவதையும் காணும் இறைவன் அப்படி உள்வரும் மக்களில் ஒருவராகத்தம் அன்பின் அடியாரையும் கருத மனமின்றி, தாம் தனிவழி ஏற்படுத்த முனைகின்றார். தென்திசை நோக்கிகுருவடிவாகநிஷ்டையில் இருக்கும் இறைவனைப் பாடி, யாழ் இசைத்து இன்புறுத்தவே வடதிசையில் பாணருக்கு வாயில் ஒன்றினை உருவாக்கித் தருகிறார் போலும்.

அரூரிலிருந்து பலதலங்களை வணங்கி ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தரைக் காணச் சீர்காழி நோக்கிச் செல்கிறார் நீலகண்டர். யாழ்ப்பாணர் வருவது அறிந்து. இறைவனால் அவர் பெற்றுள்ள சிறப்புக்களையும் அறிந்து நீலகண்டரை எதிர்கொண்டு அழைக்கச் செல்கிறார் ஞானசம்பந்தர்.

இறைவனின் அடியார்கள் சாதியோ, குலமோ பார்த்து பக்தி செலுத்துபவர்கள் அல்லர். இறைவன் மேல் பக்தியுடையோர் எவராயினும் எதிர் கொண்டு அழைத்து, இயன்றவரை உபசரித்து வழிபடும் பண்புடையவர்கள். உமாதேவியால் ஞானப்பால் ஊட்டப்பெற்ற ஞானசம்பந்தர் மட்டும் இதற்கு விதி விலக்கா என்ன? ஆனாலும்,சமூகத்தை எதிர்த்துப் புரட்சி செய்யும் துணிவு சம்பந்தருக்கு அதிகமில்லை எனலாம். காரணம், ஞானசம்பந்தர் கோயிலுக்குள் சென்று இறைவனைப் பாடிவர, நீலகண்டர் கோயில் வாசலிலேயே நிற்பார்.சம்பந்தர் உள்ளே பாடிய பாடல்களை மீண்டும் வெளியேயிருக்கும் நீலகண்டரிடம் பாட, அவர் அப்பாடல்களை யாழில் இட்டுப் பாடுவார்.கோயிலுக்குள் அழைத்துச்செல்லும்

துணிவு சம்பந்தருக்கு இல்லை அழைத்துச் செல்லும்படி கேட்டுத் தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும் நிலைநீல கண்டர் இடமும் இல்லை.

ஆனாலும் திருவேட் களத்தில் சம்பந் தருடன் தங்கியிருக்கும் பொழுது தில்லை கோயிலுக்குள் சென்று வழிபட விரும்பு வதைநீலகண்டர்கூறுகிறார். மறுப்பேதும் கூறாமல் உடனே அழைத்துச்செல்கிறார் சம்பந்தர். நீலகண்டர் கேட்காமலேயே கோயிலுக்குள் அழைத்தார் திருவாலவா யரும், தியாகேசரும். சம்பந்தர், பாணர் கேட்ட பின் அழைத்துச் செல்கிறார். மறுத்திருந்தால் தில்லைவாழ் அந்தணர் தம் கனவில்தோன்றி நந்தனாரை அழைத்துக் கொண்டதுபோல் நீலகண்டரையும் இறைவன் அழைத்திருப்பார்.

"சாதி உணர்வே, வெறியே தலை எடுத்துத்தாண்டவமாடிய அக்கால நிலை யில் சம்பந்தர் பாணரை உடனழைத்துச் சென்று கூத்தனை வழிபடச் செய்தது புரட்சியே. அக்காலச் சீர்திருத்தத்தின் முதல் புரட்சிக்காரர் சம்பந்தர்" என்கிறார் மறை திருநாவுக்கரசு.[1]

இவரே பிற கோயிலுக்குள் நீலகண்டரை அழைத்துச் செல்லாமைக் குரிய காரணங்களைக் கூறும்பொழுது, மக்கள் மனத்தை மெள்ள மெள்ள மாற்ற நினைத்ததாலும், சம்பந்தர் சிறுவராக இருப்பதாலும், தந்தை ஆதரவில் இருப்ப தாலும் கோயில் பொதுச்சொத்தாக இருப்பதாலும், பாணரை அழைத்துச் செல்வதால் கலகம்வரும். அதனால் சம்பந்தரின் சமயப்பணி தடைபடும் என்பதாலும்"[2] அழைத்துச் செல்ல வில்லை என்கிறார்.

குலக்கட்டுப்பாட்டுக்கு அடங்கி, எக்கோயில் உள்ளும் செல்லாமல் பாடிப் பரவி வரும் நீலகண்டர் தில்லைக் கோவி லுக்குள் மட்டும் செல்ல வேண்டும் என்று அவாவுறக் காரணம், தில்லை நடராசப் பெருமானின் சிறப்பே ஆகும்.

தில்லைப் பெருமானை ஓர்முறை தரிசித்தாலும் சிவகதி பெற்றுவிடலாம் என்ற நிலையில் தில்லைக்கு அருகிருந்தும் தரிசிக்க முடியாநிலை என்றால் மிகவும் வேதனைக்குரியது. எனவேதான், தம்குல வழக்கத்தையும் மீறி தம் அவாவினை வெளிப்படுத்துகின்றார். மேலும் புலையர் குலத்தானை (நந்தனாரை) இறைவன் அந்தணனாகமாற்றி அழைத்து கொண்ட திறத்தாலும் தில்லைப் பெருமானின் சிறப்பை உணரலாம். முன்பே இரு கோயிலுக்குள் இறைவன் மூலமே சென்றுள்ளதால்தான் தில்லைக்குள்ளும் செல்ல விரும்புகிறார். தமக்கிருக்கும் செல்வாக்கினால்தான் சம்பந்தர் கோயி லுக்குள் அழைத்துச் செல்கிறார் எனலாம் அளவிடற்கரிய பக்தியை சம்பந்தர் மேல் மக்கள் காட்டுகின்றனர். அவருடனேயே வசித்து, அவர் பாடல்களை யாழிலிட்டுப் பாடும் நீலகண்டர் மேலும் மக்கள் பக்தி செலுத்துவார்கள். எனவே, தம்முடன் கோயிலுக்குள் அழைத்துச் செல்வதால் கலகம் எதுவும் நேர்ந்து விடாது என்ற துணிவில்தான் தில்லைக் கோயிலுக்குள் மட்டும் சம்பந்தர் அழைத்துச் செல்கிறார்.

பாணரின் விருப்பப்படி பிறதலங்களைப் பார்க்க சம்பந்தர் பாணருடன் செல்வதும் பாணருக்குச் சிறப்புச் சேர்க்கிறது என லாம். தான்பிறந்த ஊரைச் சம்பந்தருக்குக் காட்டும்பொழுது,

"ஐயர்நீர் அவதரித்திட இப்பதி அளவில்
மாதவம் முன்பு செய்தவாறு"

என்று சம்பந்தர் பாராட்டுவது பாணரின் பெருமைக்குச் சான்றாகும்.

பாணரின் தாயார் பிறந்த தருமைக்குச் சென்றபோது ஓர் நிகழ்ச்சி. சம்பந்தர் பாடும் பாடல்களைத் தாம் யாழிலிட்டுப் பாடுவதை தம் சுற்றத்தார்களிடம் பாணர்

கூற,சுற்றமோ சம்பந்தர் புகழ் அறியாமல் பாணரைப் பாராட்ட எண்ணி ''பாணர் யாழில் இட்டுப் பாடும் சிறப்பாலேயே தேவாரப்பாடல்கள் பரவுவதாகக் கூறு கின்றனர். இதைக் கேட்டு பாணர் மிகவும் மனவேதனை யடைகிறார். தம் சுற்றத் தின் சொல்லை மாற்றிக் காட்டவும், தம் வேதனை தீரவும் யாழில் அடங்காப் பாடல் ஒன்று பாடும்படி சம்பந்தரை வேண்ட, அவரும் 'மாதர்மடப்பிடி' என்ற பாடலைப் பாடுகின்றார். பாணர் அப் பாடலை யாழில் இட்டுப்பாட முயல, யாழுக்கு அடங்கா இசையாக அப்பாடல் அமைந்துள்ள சிறப்பு கண்டு, அப்படிப் பாடச் சொன்ன பாணரே யாழில பாட முடியா நிலைக்காக யாழையே உடைக்க முயலுகின்றார். சம்பந்தர் பாடும் பாடல்கள் அனைத்தையும் தம்மால் யாழில் இட்டுப் பாடமுடியும் என்ற ஆணவம் அவர் அறியாமலேயே அவரிடம் இருந்ததை உணர்கிறார். தம் ஆணவத்தை முறியடித்த நிலைகண்டு, அதற்குப் பரிகாரமாக யாழையே உடைக்க முயலுகின்றார். சம்பந்தர் தடுத்து, 'இறைவன் பெருமைகளை யாழில் அடக்கிவிட முடியாது' என்று கூறி, இயன்றவரை இறைவன் புகழை யாழி லிட்டுப் பாடக் கூறுகின்றார்.

நீலகண்டர் 'யாழ்முறிப்பாடல்' கண்டு வருந்திக் கொண்டிருக்க அவர் வருத்தம் போக்கும் முகமாகத் திருநள்ளாறில் போக மார்த்த'என்ற பதிகத்தினை யாழில் அடங் குமாறு சம்பந்தர் பாடிப் பாணரின் வருத் தத்தைப் போக்கினார்.

சம்பந்தருக்கு 'தாம் செல்லும் கோயி லுக்குள் எல்லாம் பாணரை அழைத்துச் செல்ல முடிவில்லையே' என்ற குறை இருந்து கொண்டேயிருக்கிறது. இக்குறை நீங்குமாறு ஓர் நிகழ்ச்சி.

'திருநீல நக்கர்' என்னும் அந்தணர் குலத்தைச் சார்ந்த அடியார் இல்லத்துக்கு செல்கிறார்கள். திருநீல நக்கரிடம் பாணருக்கென்று தூய்மையான தனியிடம் ஒன்றுஅவர் இல்லத்திலேயே அமைத்துத் தரும்படி கோருகிறார் சம்பந்தர். திருநீல நக்கரும் மாளிகை நடுவில், வழிபாட்டு இடமான வேள்விச் சாலையில் இடம் தருகிறார். வேள்வித்தீ வலஞ்சுழிந்து விளங்கியதே நன்னிமித்தமாகவும், பாண ருக்கு அவ்விடத்தைக் கொடுத்ததாலுமே என்று நினைக்கின்றனர், 'இந்நிகழ்வு சாதி வேறுபாடு கூடாது என்று இறைவனே சொன்னதற்கு ஒப்பாகும்' என்பார் மறை திருநாவுக்கரசு.

முடிவில் 'திருநல்லூர்ப் பெருமணத் தில்' திருஞானசம்பந்தருடனே சிவ பெருமான் திருவடி நீழலை அடைகின்றார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்.

முடிவுரை:

கோயிலுக்குள் செல்லாக் குலத்தில் தோன்றினும் இறைவனை வழிபடும் குடும்பத்தில் பிறந்து யாழ் இசைக்கும் ஆற்றலால் இறைவனைப் பரவி, பாடும் ஆற்றல் கொண்டவளை மணந்து யாழ் இசையோடு கண்டத்து இசையும் கலந்து இறைவனைப் பாடி, மனமுருக்கி, இறைவன் மூலமே கோயிலுக்குள் செல்லும் பேறுபெற்று, திருஞான சம்பந் தரின் அன்பினைப் பெற்று, அவர் பாடல் களை யாழிலே இசைத்துப்பாடும் பேறும் பெற்று, அவர் மூலம் தில்லைநாதனைத் தரிசிக்கும் வாய்ப்பும் பெறுகிறார் நீல கண்டர்.

யாழிசையால், இறைவன்மேல் கொண்ட தீராத பக்தியால் எல்லாச் சிறப்பும் பெறும் யாழ்ப்பாணர் நம்மால் வழிபடுவதற்குரிய சிறப்புடையவர் என்றால் மிகையில்லை.

அடிக்குறிப்புகள் :

1, 2. பெரியபுராண ஆய்வுரை, தொகுதி III, மறைமலையடிகள் பதிப்பகம் சென்னை, 1975.

"யாதும் குறைவிலார்"

நடிப்பிசை நாவலர், முத்தமிழ் வித்தகர், அருட்கதை நம்பி,
புலவர். கோ. சாரங்கபாணி, M. A.,
புளியங்கொட்டைசாலை, காரைக்கால்-609 602.

பெரிய புராணத்தில் வரும் அடியவர், உலகில் வாழும் நம்போல்வாரினும் முற்றிலும் மாறுபட்டவர். அவர்கள் பாச பந்தங்கள் அனைத்தும் நீங்கி நம்மால் தொழத்தக்கவர்களாக விளங்குகின்றார்கள். ஆதலின் அவர்கள் வரலாற்றைக் கற்கிறவர்கள் தம் இயல்புகளை எல்லைக் கோடுகளாக வைத்துகொண்டு ஆராய்வது எவ்வகையினும் பொருந்தாது. இதனை எண்ணாது அறிஞர் பலர் ஆய்வதற்கு முற்படுவது பொருந்தாது. வள்ளல் பாரியின் முன் முல்லைக்கொடி பட்ட இடர் அவனைத் தேரையே தரச்செய்தது. நாம் அவ்விடத்து இருந்திருப்பின் வழியில் இடையூறாக உள்ளது என்று அதனை வெட்டி எறியவே செய்வோம். பாரியின் கருணை நாம் விளங்கி கொள்ள முடியாத ஒன்று. அவ்வாறுதான் பெரியபுராண அடியார்கள் - நாயன்மார்கள் நிலையும் நம்மால் எளிதிற் கணித்தாயமுடியாததாய் உள்ளது. சேக்கிழார் பெருந்தகை, நாயன்மார்கள் அனைவர்க்கும் ஒரு பொது இலக்கணம் தொடக்கத்திலேயே கூறி விடுகிறார். "ஈர அன்பினர் யாதும் குறைவிலார்." அவர்கள் தமக்குப் "பாரம் ஈசன் பணியல தொன்றிலார்" என்று உலகின் கண்களுக்குக் குறையாய்த் தெரிவது அடியார்கள் வாழ்வில் உயர்ந்ததாகி விடுகிறது. தந்தையின் பாதம் தடிந்தார் ஒருவர். அந்தப் பாதகம் செய்தார்க்கு ஈசன் பரிசே அளிக்கின்றான். இவ்வடிப்படை நாம் அறியவில்லையேல் பெரியபுராணத்தைப் பிழையற உணர முடியாது.

சிறுத்தொண்டர் பெருமை :

மனிதனால் விடமுடியாத பற்றுக்கள் மூன்று அவற்றை வடநூலார் மூவேடணை என்பர். தாரேஷணை, தனேஷணை புத்திரேஷணை என்பன அவை. இம் மூன்றில் மனிதனால் கடைசிவரை துறக்க முடியாத பாசம் புதல்வர்ப் பாசமாகும். இம்மூன்றில், கடந்த முனிவரும் கடக்க முடியாத பிள்ளைப் பாசத்தைக் கடந்தவர் சிறுத்தொண்டர் என்பதே அவர் தம் தனிச் சிறப்பாகும். இவ்வாறு பிள்ளைப் பாசம் துறக்கும் அருமைப் பாட்டை எல்லாச் சமயங்களும் வியந்து கூறுகின்றன. அவ்வுயர்வைச் சிறுத்தொண்டர் அடைந்தவர் என்பதே அவர் புராணம் கூறும் சிறப்பு. இதனை ஆழ்ந்து உள்ளுதலை விடுத்துச் சிலர் வேறு கூறி இடர்ப்படுகின்றனர்.

சிறுத்தொண்டர் குறிக்கோள் :

சிறுத்தொண்டர்,வாழ்வில் ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்தார். சிவனடியார் ஒருவரையாவது உணவூட்டிப் பின்னரே தாம் உண்பது என்பது அது.

"நறையிதழித் திருமுடியார்
அடியாரை நாடோறம்
முறைமையினில் திருவமுது
முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பால்"

நாளும் வாழ்ந்து வருகின்றார்.

எந்த ஒன்றை அடியார் தம் சிந்தையில் கொள்கையாகக் கொண்டனரோ அதனை

சோதிப்பதே இறைவன் திருவிளையாடல் ஆகும்.

"தீண்டுவீராயின் எம்மைத் திருநீல கண்டம்" எனப் பெற்றமையால் மனைவியைத் தீண்டாதே வாழ்ந்த பெரியார்க்குத் தீண்டும் சூழலையே சோதனையாக அமைத்தனன் இறைவன். தலந்தோறும் சென்று ஈசனைக் கண்டு வளந்தரும் பாடல் நல்குதல் சுந்தரர் குறிக்கோள். திருவொற்றியூர் எல்லையைக் கடக்காமையைச் சோதனையாக வைத்தான் இறைவன். அதுபோன்று சிவனடியார் ஒருவர்க்கு உணவு அளித்துப் பின்னரே தாம் உண்பது என்ற குறிக்கோள் கொண்டிருந்த சிறுத்தொண்டர்க்குச் சிவபெருமான் அதிலேயே சோதனையை அமைக்கின்றான்.

"இத்தன்மை நிகழுநாள்
இவர்திருத்தொண் டிருங்கயிலை
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச்
சென்றணைய அவருடைய
மெய்த்தன்மை அன்புநுகர்ந்
தருளுதற்கு விடையவர்தாம்
சித்தமகிழ் வயிரவராய்த்
திருமலைநின் றணைகின்றார்"

தனக்காக தன் அடியவர் சிறுத்தொண்டர் எதனையும் இழக்க அணியராய் உள்ளார் என்பதை நுகர்ந்தின்புறவே சிவபெருமான் இவ்வுலகிற்கு வருகிறான் என்கிறார் சேக்கிழார்.

கற்பவர் இதனைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

சோதனையில் வெற்றி:

சோதனை பரிபூரணமாக அமைய வேண்டும் என்பதற்குச் சிவபெருமான் படும்பாடு மற்றவர் படமாட்டார். இரவலர் எவரும் ஊரில் இல்லாதபடி ஆகிறது. அப்போது பெருமான் வருகை. முகவரி அறியாதார் போல் உசாவுதல். ஆத்தி மரத்தின் கீழ் காத்திருப்பு, பின் அடியவரிடம் பிள்ளைக்கறி கேட்கும் திருவிளையாடல். சிவபெருமான் சிறுத்தொண்டர் தம்மால் இயலாது என்றுகூறக் கூடிய வகையில் தமது உரையாடலை அமைத்துக் கொள்கிறான்.

முதலில், 'எம்மைப் பரிந்தூட்ட முடியாதுமக்குச் செய்கை அரிது; ஒண்ணாது" என்கிறான். சிறுத்தொண்டர், "ஒண்ணாதனவும் உளவாகும். அருமை இல்லை" என்றார்.

"ஆறு மாதத்துக்கொருமுறை உண்பேன்.
அந்த நாளும் இன்றே;
உண்பதுமனித உயிர்" -சிவபெருமான்.
"காலம் தப்பாமே வருவேன்"
– சிறுத்தொண்டர்.
"அஞ்சு பிராயத்துள் உண்பது" -ஈசன்.
"யாதும் அரியதில்லை"
– சிறுத்தொண்டர்

சிறுத் தொண்டரின் கொள்கைக் கருவின் வேர் ஒவ்வொன்றாக வெட்டி வீழ்த்த இறைவன் மேற்கொண்ட முயற்சி வெற்றி அளிக்கவில்லை. கடைசி ஆயுதத்தையும் இறைவன் " ஒருகுடிக்கு நல்ல சிறுவன் ஒருமகனைத் தாதை அரியத் தாய் பிடிக்கும்பொழுதில் தம்மில் மனமுவந்தே ஏதம் இன்றி இட்ட கறியாம் இட்டுண்பதென" மொழிந்திட "இதுவும் அரிதன்று; எம்பெருமான் அமுது செய்யப் பெறில்" என்கிறார் சிறுத்தொண்டர்.

எவ்வாறேனும் காபாலிகச் சிவனடியார் விருந்துண்டே ஆகவேண்டும் என்கிற பெருவேட்கை ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்படுகிறதேயன்றி, சிறுத்தொண்டர் தம்மை மாந்தக் கருதிப் பேசினார் என்பதற்குச் சற்றும் இடம் இல்லை. சிலர், சிறுத்தொண்டரிடமிருந்த ஆணவத்தைச் சோதித்தமை என்று இதனைப் பேதித்து உரைப்பர். அவ்வாறு கூறினால் 'யாதும் குறைவிலார்' என்கிற பொது விதிக்கே

அது புறம்பாதலை அறியலாம். யாது ஒன்று! என் பக்கல் உண்டோ? அது நுமக்கே என்கிற சிறுத்தொண்டர் அகப்பற்றுப் புறப்பற்றுக்களை முற்றும் கடிந்தவராக விளங்குகிறாரேயல்லால் வேறு கூறுதற்கில்லை.

இறைவன், கொள்கை காத்தது:

உண்ணத் தலைப்படுகையில் சிவபெருமான் சிவனடியார் இல்லாது நான் உண்பதில்லை என்ற உடன் சிறுத்தொண்டர். 'நானும் நீறிட்டே உண்பேன் சிவநேயனே' என்று கூறி, அடியாரை விரைவில் உண்பிக்க வேண்டும் என்ற ஆவலினால் தாம் உணவில் கை வைத்து உண்ணமுற்படுகையில் அடியார் வடிவில் உள்ள சிவன் தடுக்கிறான் சிறுத்தொண்டா? என்பொருட்டுப் பிள்ளையை இழந்தாய்! கொள்கையை இழக்கலாகாது என்றார். தம்பொருட்டு கொள்கையை இழக்கக்கூடாது என்பது அவன் குறிக்கோள்!

மகன்மீது பாசம்:

'மகனை அழை' என்றதும் சிறுத்தொண்டர், "மைந்தா வருவாய்" என்கிறார். திருவெண்காட்டு நங்கையார், "செய்ய மணியே சீராளா! வருவாய்" என்கிறார். தாய்ப்பாசம் குருதியொடும் உணர்வொடும் உடன் உறைவதாகலின், அது தோன்ற அன்பு கனிகிற மொழியால் அன்னையார் அழைப்பதை அறிகிறோம். சிறுத்தொண்டரோ, அடியார் மகனை அழைக்க என்றதும் "மைந்தா! வருவாய் என்றார். இதில் அடியார் பணி நிற்பது விளங்குகிறதேயல்லால் அவர் பாசம் அகலாதவராய் இருந்தார் என்பதற்கிடமில்லை என்று உணர்தல் வேண்டும். அதனால்தான் பட்டினத்தடிகள்,

'வாளால் மகவரிந்து ஊட்ட
வல்லேன் அல்லேன்' என்கிறார்.

ஆதலின் சிறுத்தொண்டர் செய்கையில் ஏதும் ஆணவம் இருந்ததென்றோ, பாசம் ததும்பியதென்றோ கூறுதற்கிடமில்லை என்பதை உணர்வதே சேக்கிழார் கருத்துக்கியையப் பொருள் உணர்வதாகும். 'இன்றேல் ஆழ்ந்திருக்கும் கவி உளம் தேர்கிலார்' ஆவோம்.

'திருவாரூர் நான்மணிமாலை-ஆய்வு நோக்கு'

'செந்தமிழ்ச் செல்வர்' டாக்டர், புலவர். ம. வே, ஜயராமன், எம். ஏ., டி. லிட்.,
பெங்களூர்.

முன்னுரை :

பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும் இயற்கை. இறைவன் திருவருள் கிடைக்கப் பெறின் பிறப்பும் இறப்பும் அகற்றி வீடு எய்தலாம்.

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார். (குறள். 10)

என்று வள்ளுவப் பெருந்தகையும் இயம்புகிறார். இறைவன் எங்கும் உளன். எனினும் குறிப்பிட்ட திருத்தலங்களில் தனித்தனிப் பெருமையுடன் இலங்குவது பற்றிச் செந்நெறி செல்வர்கள் கூறிப் போந்தனர். திருத்தலங்களின் பெருமைகளை எடுத்தோதும் நூல் களும் பல. சோழ நன்னாட்டிலுள்ள திருவாரூர் தனிச் சிறப்பு வாய்ந்தது. அவ்வூரில் பிறந்தார் அனைவரும் வீடு பேறெய்துவராம். 'திருவாரூர்ப் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி' என்ற முதுமொழியும் வழங்கி வருகின்றது. திருத்தொண்டர் புராணம் அருளிய தெய்வப் புலவர் சேக்கிழார் திருவாரூரின் சிறப்பை விதந்தோதுகிறார்.

'சொன்ன நாட்டிடைத் தொன்மையின் மிக்கது
மன்னு மாமல ராள்வழி பட்டது
வன்னி யாறு மதிபொதி செஞ்சடைச்
சென்னி யார்திரு வாரூர்த் திருநகர்.'
(திருத்தொண்டர் புராணம்—திருநகரச் சிறப்பு-1)

என்று அவர் அதன் புகழைத் தொடங்குகிறார்.

'தெள்ளும் ஓசைத் திருப்பதி கங்கள்பைங்
கிள்ளை பாடுவ; கேட்பன பூவைகள்!'
(திருத்தொண்டர் புராணம்—திருநகரச் சிறப்பு-8)

புள்ளினங்களும் இத்தகு சிறப்புப்பெற அமைந்தது அத்திருப்பதி. அது நிலமகளின் நெற்றித்திலகம் ஒப்பது என்றும் மலர்மகள் உறையும் தாமரை மலர் போல் விளங்குவது என்றும் அவர் கூறுகிறார். (ஷை-12) 'திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்' என்பது திருத்தொண்டத் தொகை. 'தில்லை வாழ் அந்தணர்' எனத் தொடங்கும் இத் திருத்தொண்டத் தொகைதானே பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணம் தோன்ற வழி வகுத்தது? ஐம்பெரும் பூதங்களில் நிலனாகிய மண் (பிருதிவி) இலிங்கமாக அமைந்ததெனப் போற்றப்படுவதும் இத்திருவாரூரே. ஆளுடைய பிள்ளை அருளிய ஐந்து திருப்பதிகங்களையும், ஆளுடைய அரசு அருளிய இருபத்தொன்பது திருப்பதிகங் களையும், ஆளுடையநம்பி அருளிய எட்டுத் திருப்பதிகங்களையும் கொண்ட பெருமை

இதற்குண்டு. மற்ற திருமுறைப் பாடல்களிலும் இத்தலம் இடம்பெற்று மிளிர்கின்றது. கழற்சிங்கர், செருத்துணையார், சோமாசிமாறர். தண்டியடிகள், திருநீலகண்ட யாழ்ப்பாணர், நமிநந்தியடிகள், விறன்மிண்டர் ஆகிய பெரியோர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற பெருமையும் கொண்டது இப்பெரும்பதி. மனுநீதி மன்னனின் தலைநகராய் விளங்கிய இப்பதியில்தான் இறைவன் வன்றொண்டருக்காகத் தூது நடந்தான். இப் பதியினைப் பற்றிச் சேரமான் பெருமாள் நாயனார் 'திருவாரூர் மும்மணிக் கோவை' என்ற நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார்.

திருவாரூர் நான்மணி மாலை :

இத்துணைப் புகழ்வாய்ந்த இத்திருவாரூரைப் பற்றி, நாமணக்கத் தமிழ்மணக்கும் நூல்கள் பல இயற்றிச் சைவ உலகிலும் தமிழ் உலகிலும் தனிப் புகழ்பெற்ற ஞானக் கடலாகிய குமரகுருபர அடிகள் இயற்றிய அரிய இலக்கியமே 'திருவாரூர் நான்மணி மாலை'. 'நான்மணி மாலை' என்பது, வகை வகையான நான்கு மணிகளைத் தொடுத்தமைத்த மாலை போல வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்ற நான்கும் முறையே அந்தாதியாக அமைய நாற்பது செய்யுட்களைக் கொண்டதோர் சிற்றிலக்கியம். பாட்டியல் நூல்களில் இதற்கு இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது. இவ்வகையில் முதலில் எழுந்த நூல் பட்டினத்தடிகளின் திருக்கோயில் நான்மணி மாலையாகும். திருவாரூர் நான்மணி மாலை நால்வர் நான்மணி மாலை, விநாயகர் நான்மணி மாலை போன்றன பின்னர்த் தோன்றியவை.

குமரகுருபரர்:

இற்றைக்கு முந்நூறு யாண்டுகட்கு முன் தோன்றிய பெரும்புலவர் குமரகுருபரர்: இவர் ஐந்து அகவை வரை ஊமையாயிருந்து, பின்னர்ச் செந்தில் முருகப்பெருமான் திருவருளால் பேசுந்திறன் பெற்றுக் கந்தர் கலிவெண்பா என்ற திருநூலை அருளியவர். தமிழ் இலக்கண இலக்கியக் கடல்களின் ஆழமும் அகலமும் கண்டவர். தருமபுர ஆதீனத்தின் நான்காம் பட்டத்தில் குருமூர்த்தியாய் விளங்கிய திருப்பெருந்திரு மாசிலாமணி தேசிகரை ஞானாசிரியராகப் பெற்றவர். கங்கைக் கரையில் காசி மடம் நிறுவித் தமிழும் சைவமும் வளர்த்த மேலோர். இவர் இந்துஸ்தானி மொழியில் நிகழ்த்திய கம்பராமாயணச் சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புற்று மகிழ்ந்த துளசிதாசர், தம் இராமாயணத்தில் கம்பர் கருத்துக்களைப் பொதிந்து வைத்துள்ளார் என்பர். குமரகுருபரரின் செய்யுட்கள் யாவும் இன்னோசை மிக்கவை. 'இவற்றைக் கேட்கும்போது நமக்குத் தென்பாண்டி நாட்டுப் பொருநை நதியின் ஓட்டம் ஞாபகத்துக்கு வருகின்றது' எனப்பாராட்டுவர் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள். தமிழின் பால் குமரகுருபர அடிகள் கொண்ட அன்பு எல்லையற்றது. தமிழை, அடிகள் தெய்வத் தமிழ் எனப்போற்றுவர். எவ்வகை யாப்பையும் திறம்பட இயற்றவல்ல இப்பெருந்தகையார்க்கு சொற்களும் தொடைகளும் சந்தங்களும் இயல்பாகவே விரைந்து வந்து அமைந்து விடுகின்றன. 'ஒருவர் என்பது உயர் இரு பாற்றாய்ப் பன்மை வினைகொளும் பாங்கிற்றென்ப' (நன்னூல் 289) என்ற நூற்பாவை, மங்கைபங்கர் வடிவினைச் சுட்டும்போது கற்பனை நயம் பொதுள எடுத்தாண்டுள்ள இவரது இலக்கணப்புலமை வியக்கத்தக்கது. கற்பனைக் களஞ்சியமாகிய இவரியற்றிய நூல்கள் கந்தர் கலி வெண்பா முதல் தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ஈறாகப் பதினான்காம். அவற்றுள் திருவாரூர் நான்மணிமாலையின் திறனைச்சற்று நோக்குவோம்.

தொடக்கம்:

குமரகுருபர அடிகள் தாம் பாடவிழைந்த திருவாரூர் நான்மணி மாலையைக் காப்புடன் தொடங்குகிறார். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர். அதுபோல் நூலின் சிறப்பு அதன் நுழைவாயிலாகிய காப்புச் செய்யுளிலேயே புலப்படுகின்றது. இறைவன் அருளையே நாடும் அதன் முதற்சொல்லிலேயே தெளிவாகிறது. 'நாடும் கமலேசர்' என்ற தொடர் நயம்மிக்கது. அன்பர்கள் நாடும் கமலேசர் என்றும் அன்பர்களை நாடும் கமலேசர் என்றும் இத்தொடரை இரட்டுறக் கொள்ளுதல் ஏற்புடைத்து. அன்பர்கள் இறைவனை நாடுதல் உண்டு. இறைவனும் அன்பர்களை நாடுவானோ? ஆம்; நாடுவான். இறைநம்பியாரூரரை நாடிச் சென்று தடுத்தாட்கொண்ட குறிப்பும், திருவாரூர்க்கே தனிச்சிறப்பு நல்கும் வண்ணம் இறைவன் பரவையார் பால் இருமுறை தூது நடந்த குறிப்பும் அவன் அடியாரை நாடிச் செல்பவன் என்பதற்குச் சான்று காட்டுவன அல்லவோ? பிறவிப்பிணியறுத்து வீடு பெறுவதே வாழ்வின் குறிக்கோள் என்பதை இச் செய்யுளின் வீடு ஒன்ற முப்போதகத்தின் முயல்வோர்' என்ற பகுதி சுட்டும். முப்போது என்பது மூன்று வேளையினை மட்டுமன்றி முக்காலத்தையும் உணர்த்தும் இறைவனை நாம் நாடினால் அவன் நமக்கும் நம் செயல்கட்கும் முன்னிற்பான் அல்லனோ? எனவேதான் 'முன்னிற்கும் கைப் போதகம் என்று பாடுகிறார் அடிகள்.கைப்போதகமாகிய மூத்த பிள்ளையார் முன்னின்று தடைநீக்கிக் கவிதை நலம் பாலிப்பர். முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ? காப்புச் செய்யுளாகிய இத்தொடக்கமே நூற்பாயிரமாய் நின்று இன்பூட்டுகின்றது.

நான்மணிமாலை நூல் 'நீரூர்ந்த முந்நீர்' என மங்கல மொழியாகிய நீருடன் தொடங்குகின்றது. அகத் தூய்மைக்கு அடிப்படையாகிய புறத்தூய்மையினைத் தருவது நீரேயாம்.

'புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்' (குறள்-298)

என்பது வள்ளுவர் வாய்மொழி. இந்நூலின் இம் முதற்பாடல் அகத் தூய்மை வாய்ந்த தலைவியின் அகத்தே எழுந்த தெய்வக் காதலையும் காதலன் பிரிவால் எழும் துன்பப் பெருக்கினையும் அதனை மிகுவிக்கும் பிறைத்திங்களாகிய நஞ்சின் கொடுமையினையும் அந் நஞ்சினின்றும் தன்னைக் காத்தருள வேண்டும் என்ற தலைவியின் வேண்டுகோளையும் விளக்கும் சீவான்மா தலைவியாகவும், பரமான்மா தலைவனாகவும் அமையக் 'கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயத்தல், என்ற துறையினை மேலோர் வகுத்துச் சென்றனர். அதனை நினைந்தே அடிகள் இப் பாவினை அருளியிருக்க வேண்டும். 'இறைவா! தண்மதியைக் காக்க நீ பிறை சூடிய பெம்மான் ஆயினை. அப் பிறை என்னை வருத்தினால், யான் உன்னையன்றி யாரை அணுகுவேன்?' என்று இறைவனையே சரணடைகின்ற சரணாகதித் தத்துவம் இவண் நினைக்கத் தகும்.

அடியாரை வழிபடுதலின் சிறப்பு:

'இறைவா! நான் நின் திருவடித் தொண்டில் நிலை பெறவில்லை. எனினும் என் துயர் தீர்ப்பது உன் பொறுப்பு. பிறவித் துயர் பெருந்துயர். அதனை நீ அறிந்திருக்க மாட்டாய். நீ தான் பிறப்பு இறப்பற்ற பெரியோன் ஆயினையே! என் பிறவிப் பெருந்

துன்பத்தை நீ நீக்கியருள வேண்டும் என்று கேட்க எனக்குத் தகுதியுண்டு. எவ்வாறெனின், நான் உன் அடியவர்களையெல்லாம் வழிபட்டுத் தொண்டு செய்பவன்.' என்று ஒரு பாடலில் (பாடல்-16) அடிகள் உணர்த்துகின்றார். அடியவர் தொண்டும் ஆண்டவன் தொண்டேயன்றோ? இவ்வுண்மையை வைத்து இங்ஙனம் வாதிடுகின்றார் அடிகள்.

'நடமாடுங் கோயில் நம்பர்க்கங் கீயின்
படமாடுங் கோயில் பரமற்கங் காமே' என்ற திருமூலர் கூற்றும் (திருமந்திரம்-மகேசுவரபூசை-1)

'அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட் டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே' என்ற தாயுமானவர் கூற்றும் (பராபரக்கண்ணி 155) இங்கு நோக்கற்குரியன.

மீனும், தூண்டிலும்:

கூற்றுவனாகிய வலைஞன் உயிராகிய மீனைப் பிடிக்கத் தூண்டில் வீசுகிறான். அது முத்தலைத் தூண்டில். அதன் முட்கள் மூன்று. அவை வாதம், பித்தம், சிலேத்துமம் என்பன. வாழ் நாள்தான் தூண்டிலின் மிதப்பாகிய தக்கை. தூண்டிற் காரனுக்கு மிதப்பின் மேல் கண் என்றபடி கூற்றுவன். வாழ்நாளின் மீதே கண் வைத்துக் கொண்டுளான். உண்ணும் அற்றம் நோக்கிக் கடித்த வாயுடன் காத்திருக்கின்றான். 'அவன் என் உயிராகிய மீனைப் பிடிக்க வருவான் ஆனால், அவன் பிடிக்க முடியாமல் வியப்புறும் வண்ணம் என் உயிர் உன் அருட்பெருங் கடலில் பேரின்ப அலைகளின் ஊடே உலவுமாறு நின் கடைக்கண் அருள்க!' இவ்வாறு இறைவனை இறைஞ்சுகின்றார் அடிகள். வலைவீசிய திருவிளையாடலை நிகழ்த்திய பரமன் பிறிதொரு வலைஞனாகிய கூற்றுவனை வீழ்த்துவது எளிது தானே என்ற நயத்தினைக் கொண்டு அமைந்துள்ளது இப்பாடல் (பாடல்-12). வளி முதலாகிய மூன்றும் நோய் செயும். அதனால் இறப்பு நிகழும் என்பதை உட்கொண்டு அம் மூன்றையும் தூண்டிலின் மூன்று முட்களாகக் கூறி மகிழ்விக்கின்றார் அடிகள். இறைவனின் அருட்கடலில் படியும் உயிர்கட்கு இறப்பச்சம் ஏது?

மூவரும் அவனே!

மும்மூர்த்திகளாகிய அயன், அரி, அரன் எனும் மூவருமாக விளங்குபவன் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான். இவ்வாறு சைவர் கொள்ளக் காரணம், சிவபெருமானே முழுமுதற் கடவுளாய் நின்று முத்தொழிலும் புரிகின்றான் என்பது. ஆனால் அடிகள் கூறும் பாங்கு வேறு. அதன் அழகே வேறு. பிரமன் ஒரு தாமரையில் வீற்றிருக்கின்றான், அது திருமாலின் உந்திக்கமலம். சிவன் வீற்றிருப்பதும் ஒரு கமலமே, அது நிலமகளின் இதய கமலாகிய திருவாரூர்! எனவே சிவனே பிரமன்! திருமால் திருமகள் வணங்க அரியணையில் வீற்றிக்கின்றான். சிவனும் திருவாரூரில் திருமகள் தவம் செய்து வணங்க அரியணையில் அமர்ந்துள்ளான். எனவே சிவனே திருமால்! மும்மூர்த்தியும் சிவனே! (பாடல்-11)

காரணம் காட்டும் சிறப்பு:

1. **கமலாலயம்:-** கமலாலயம் என்பது திருவாரூர்க்குரிய பெயர்களுள் ஒன்று. அதற்குக் காரணம் ஒரு புராண வரலாறு. திருமகள் (கமலை) இத்தலத்தில் தங்கி வழி பட்டதாக ஒரு வரலாறு உண்டு. ஆனால் அடிகள் இதற்குப் பிறிதொரு காரணம்

கற்பிப்பர். நிலமகளின் இதய கமலமாக விளங்குவது திருவாரூர் என்ற சிறப்பைக் காரணம் காட்டி, அதனால்தான் இவ்வூர் கமலாலயம்(இதய கமல ஆலயம்)எனப்பெயர் கொண்டது என்கிறார். (பாடல்-7)

2. முகமன் அன்று:- 'திருவாரூர்த் தியாகேசப் பெருமானுக்கு அப்பெயர் ஏன் வந்தது? அது இடுகுறி என மயங்க வேண்டா. தியாகேசர் என்பது வெறும் முகமனா? பொருள் அற்ற புகழுரையா? அன்றன்று! உண்மையுரையே. அவர் செய்த தியாகங்கள்-கொடைகள் பலப்பல வராக அவதாரம் எடுத்து இவ்வுலகை உழுத திருமாலுக்கு அதனை வழங்கினார் சிவபெருமான். அதாவது மண்மகளை அவனுக்கு மனைவியாக வழங்கினார். அது மட்டுமா? குபேரனுக்கு நவநிதியும் அளித்தனர் எனக்கும் வீடுபேறு அருளினார். உமாதேவி யார்க்குத் தம் உடலில் ஒரு பாதியை ஈந்தார். எனவே அவர் உண்மையில் தியாகரே-தியாகேசரே என்பதில் ஐயமில்லை'. இப்படி இறைவன் புகழ்பாடி மகிழ்வதும் மகிழ்விப்பதும் அடிகளின் தனி மாண்பாகும். (பாடல்-23.)

இரட்டுற மொழியும் நயம்:

1. பொன்மலை :- மேருமலையைப் பொன்மலை எனல் வழக்கு. அப்பொன்மலை இறைவனின் வில் ஆயிற்று. அதனை இங்ஙனம் அழகுறக் கூறுகின்றார் அடிகள். அப்பொன்மலை நாணால் வளைந்து சிலையாயிற்று என்கிறது ஒரு பாடல் (பாடல்-2). நாணாகிய கயிற்றால் அது வளைந்து சிலை (வில்) ஆயிற்று என்பது ஒருபொருள். இதற்கு வேறு ஒரு பொருளையும் காட்டுகின்றார் அவர். அப்பொன்மலை இறைவனது தோள் அழகில் ஈடுபட்டு நாணால் (நாணத்தால்) குனிந்து சிலை (கல்) ஆயிற்று; செயலற்றுக் கல்லாகி விட்டது. என்னே கற்பனை! இங்குத் தற்குறிப்பும் சிலேடையும் இணைந்து பிணைந்து நலம் பயக்கின்றன.

2. விடையே விடை : கல்லாதார், அறியாமையால் 'கமலை நாதனே நாதன்?' என ஐய வினா எழுப்புவர். அதற்கு விடையும் அதுவே. அதாவது 'கமலை நாதனே நாதன்!'என்பது. அதற்குச் சான்றுண்டோ? ஆம்!உண்டு.விடையே (காளை வாகனமாக உள்ள திருமாலே) அதற்குச் சான்று. 'விடையே விடை' என்பதைக் கல்லாதார் அறிவரோ? வினா எழுப்பி ஐயுற்றுழைவர்.ஆனால் கற்றார் அனைவரும் ஐயந்திரிபின்றி விடையையே விடையாகக் கொண்டு 'கமலை நாதனே நாதன்' என்ற உண்மையினை நன்கறிவர். இவ்வாறு சொற் சிலம்பம் ஆடி, இரட்டுற மொழிவதில் வல்லுநர் அடிகள் (பாடல் 21).

தற்புகழ்ச்சி தகுமா ?

தன்னையே தான் புகழ்ந்து கொள்வது தற்புகழ்ச்சி. இத்தற்புகழ்ச்சி குற்றமாகும். சிறப்பாகாது. சிவபெருமான் தற்புகழ்ச்சியுடையார் என்றொரு குற்றம் சாட்டிப் பின் அதற்கோர் அமைதியையும் அழகுறக் காட்டுவார் அடிகள் (பாடல்-28). வேதம் எழுதாக் கிளவி. அதனைத் திருவாய் மலர்ந்தவர் இறைவன். அவ்வேதம் இறைவன் புகழையே பாடுவது. எனவே, இறைவன் வேதத்தின் மூலம் தன்னையே தான் தற்புகழ்ச்சி செய்து கொள்கின்றான். இது பொருந்துமா? பெருங்குற்றமன்றோ? தற்புகழ்ச்சி குற்றமே. ஆனால் இறைவன் தன்னைப் புகழ்ந்து கூறுவது குற்றமன்று. ஏன்? இறைவன் யாவுங்கடந்த கடவுள். அப் பரம்பொருளின் பெருமை மற்றோர் நினைவுக்கும் சொல்லுக்கும் எட்டாதது. அங்ஙனமாயின் அவன் புகழை அறிந்து கொள்ளும் வழிதான்

யாது? இறைவன்தான் உணர்த்தற்குரியன். எனவே இறைவன், திருமறையின் வழித் தன்புகழைத் தானே எடுத்தோதும் நிலை ஏற்பட்டுவிட்டது. தன்னுடைய ஆற்றலை உணராதவர் இடையில், தானே தன்புகழைக் கூற வேண்டிய நிலைவரின் தற்புகழ்தலும் குற்றம் ஆகாது. இவ்வாறு இலக்கணம் கூறும்.

'மன்னுடை மன்றத்து ஓலைத் தாக்கினும்
தன்னுடை யாற்றல் உணரார் இடையினும்
.. ..
தான்தற் புகழ்தலும் தகும்புல வோர்க்கே.'

என்ற (நன்னூல்-53) இலக்கண நூற்பாவை உளங்கொண்டே அடிகள் இங்ஙனம் உரைத்துத் தம் புகழை நிலைநாட்டிக் கொள்கின்றனர்.

என்ன துணிச்சல் ?

இறைவனுக்குத் துணிச்சல் அதிகம் போலும்! அச்சமே கிடையாதோ? அவர், படையும் கலங்கும் பாம்புப் புற்றினில் உறைகின்றாரே! அது மட்டுமா? நச்சுப் பாம்பினையே அணிகலமாகப் பூண்டுள்ளனரே! கொல்லுந் தன்மை வாய்ந்த நஞ்சினையும் உண்டாரே! இத்துணிச்சல் அவருக்கு வந்தது எவ்வாறு? அவரது இடப்பாகத்தே நோக்குங்கள். அங்கே மலையரசன் பயந்த மலை மயில்தானே இருக்கின்றாள்? மயில் அருகில் இருக்கும்போது புற்றுக்கும் பாம்புக்கும் நஞ்சுக்கும் யாரும் அஞ்சுவரோ? மயிலைக் காணின் அரவு வாலாட்டுமா? நடுங்கி ஒடுங்கி விடு !ம! மற்றும், புற்றும் நஞ்சும் என் செயலாகும்? மயில் அருகே இருப்பதனால் இறைவனுக்குத் துணிச்சலுக்குப் பஞ்சமா? மனையாளின் ஆற்றலால் மணவாளன் உயர்வான் எனும் அரிய உண்மை இங்கே இங்கிதமாக உணர்த்தப்படுகின்றது (பாடல்-34). திருவாரூர் இறைவன் புற்றிடங்கொண்டவன் என்பதும் உமையம்மை மயில் போன்ற சாயலினாள் என்பதும் குறிப்பு.

பொற்கொல்லன் பட்டறை:

இறைவன் திருமுடி ஒரு பொற்கொல்லன் பட்டறையாகக் காட்சி தருகின்றது. இறைவனின் மின்னார் செஞ்சடையே பொற்கொல்லன் உலையின் தீயாம் அச்சடை மேல் மிளிரும் கொன்றையே பொன்னாம். அம்மலரைச் சூழும் வண்டுகளே உலை மூட்ட உதவும் கரியாம். கங்கை தான் பொன்னணி செய்துகொள்ள விழைந்து அருகே அமர்ந்துள்ள நங்கையாம். வெண்பிறையே நரைத்துக் கூன்விழுந்த முதிய பொற் கொல்லனாம். இப்படியொரு பட்டறைக் காட்சியினைப் படம் பிடித்துக் காட்டுகின்றார் அடிகள்! இப்பாடல் (பாடல்-38) ஒப்பற்றதோர் உவமைத் தொகுதி எனலாம்.

கங்கையின் போட்டி:

இறைவன் சடை முடியில் கங்கை இருப்பதாக நாம் அறிவோம். ஆனால் இறைவனின் இடப்பாகத்தைத் தனதாக்கிக் கொண்ட உமையன்னைக்குப் போட்டியாகக் கங்கை இறைவனின் வலப்பாகத்தைத் தனக்குரிமையாக்கிக் கொண்டாள் என்கிறார் அடிகள் (பாடல்-11). எப்படி? கங்கையின் நிறம் வெண்மை. அதன் நீரில் வெண்ணுரையுண்டு. கங்கை நீரில் மீன்கள் உலாவும். இம் மூன்றும் இறைவனின் வலப்பாகத்தில்

உளவாம். வலப்பாகத்தே பூசியுள்ள வெண்ணீறே கங்கையின் வெண்ணீர். தசைப் பற்றற்ற வெண்டலை மாலையே வெண்ணுரை. இறைவன் அழகில் ஈடுபட்ட மங்கையரின் கண்கள் அவன் வலது பாகத்தே உலவுகின்றனவாம். அவையே கங்கையில் உலாவும் கயல்களாம் கங்கையின் வெண்ணிறமும், வெண்ணுரையும், கயல்களும் இறைவனின் வலப்பாகத்தே இவ்வாறு காணப்படுவதால் அவன் வலது பாகமே கங்கையாகி விட்டதாம். இதனைத்தான் அடிகள் சாதுரியமாகக் கூறிக் கங்கையை வலங்கொண்ட நங்கையாகக் காட்டுகிறார். கற்பனை சிறகடித்துப் பறக்கின்றதன்றோ?

அகப்பொருள் நயம்:

எல்லாம் கரும்பு மயம்:

'நற்கரும்பு முக்கட் கரும்பென்னும் நங்கைமீர்!
விற்கரும்பன் கைக்கரும்பே வேம்பென்னும் சொற்கரும்பின்
வாமக் கரும்பு மனைக்கரும்பாம் ஆரூரர்
காமக் கரும்பும் கரும்பு.' (பாடல்-33)

இப்பாடல் ஒரே கரும்பு மயமாய்த் திகழ்கின்றது. கரும்பாகவே இனிக்கின்றது. இஃதோர் அக பொருட் பாடல். அகப் பொருளும் அடிகளின் கையகப்பட்டால் தனிப் பொலிவு பெறுகின்றது செவிலி, தலைவியின் காதல் நிலையினைக் கூறுகிறாள். சிவபெருமான் மீது காதல் கொண்ட அவளுக்கு இறைவன் ஒருவனே நல்ல கரும்பாம். அனங்கனின் வில்லாகிய கரும்போ வேம்பாம் அவன் வில் அவளைத் துன்புறுத்தி வெறுப்புக் குரியதாகி விட்டதாம் கருத்து அனைவரும் அறிந்த ஒன்றுதான். ஆசிரியர் அதனைக் கரும்பு என்னும் சொல்லை ஒன்பது முறை அடுக்கி வைத்துள்ள இப்பாடலில் கூறியுள்ள பாங்கு நயக்கத்தக்கது; வியக்கத்தக்கது. இப்பாடல் 'பின்வரு நிலையணி' என்னும் சொல்லணியாலும் 'உருவகம்' என்னும் பொருளணியாலும் பொலிவேறித் தமிழ்க் கரும் பாகவே இனிக்கின்றது. 'நங்கைமீர்! இனிக்கும் சொற்கரும்பினையுடைய உமை இடப் பாகத்தில் உள்ள கரும்பு. அவள் இறைவனின் மனைவியாகிய மனைக்கரும்பு. அம் மனைக் கரும்பினை மனைவியாகக் கொண்ட இறைவனாகிய முக்கட் கரும்பு ஒன்றே நம் தலைவிக்கு நற்கரும்பாம். அதனால், வில்லையே கரும்பாகக் கொண்டிருப்பினும் காமனின் விற்கரும்பு அவளுக்கு வேம்பாகக் கசக்கின்றதாம். 'ஆரூரர் காமக்கரும்பும்' என்பதைக் காமத்திற்கு அரும்பும் எனப்பிரித்துக் கொள்ளவேண்டும்.

தலைவி உண்ணவில்லை!

காதல் வயப்பட்ட தலைவிக்கு உணவு நஞ்சாகக் காணப்படுகிறது. உணவை வெறுக்கிறாள். ஆனால் தன் காதலன் இறைவன் உண்ணும் உணவு நஞ்சே என அறிந்து விருப்புடன் உண்ணத் தொடங்குகின்றாள். அதனை வாயிலிட்டவள் உமிழ்ந்து விடுகின்றாள். ஏன்? அவள் உள்ளத்தே காதலன் உள்ளான். அவள் உண்ணின் அவ்வுணவு எச்சில் உணவு. அவள் உள்ளத்தில் உள்ள காதலனை அடையும் தன் எச்சிலை அவனுக்குத் தருவது பிழையன்றோ? அதனால் அவள், தான் முதலில் வெறுத்து விரும்பி யுண்ட உணவைப் பிறகு உமிழ்ந்து விடுகின்றனளாம்! (பாடல் 35) என்ன கற்பனை! உயர்வு நவிற்சிதான்! எனினும் இயல்பு நவிற்சியாகவே அமைந்துள்ளது.

'நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்
அஞ்சுதும் வேபாக் கறிந்து' (குறள் 1128)

என்ற வள்ளுவர் வாய்மொழி ஈண்டு எண்ணி மகிழற்குரியது.

சோலைக்காட்சிகள்

1. **மானிட மடங்கல்:** திருவாரூர், சோலை வளம் மிக்கது. அங்கே ஒரு காட்சி! கருவிரல் மந்தியொன்று பொன்னிறம் பழுத்த பலாக்கனி யொன்றைக் கண்டு பற்களைக் காட்டிக் கொண்டு விரைந்து செல்கின்றது. அக் கனியைத் தன் மடியில் வைத்துக்கொண்டு தன் கூரிய நகங்களால் கிழித்துச் சுளைகளை எடுத்துத் தின்கின்றது. அக் காட்சியில் அடிகள் மானிட மடங்கலாகிய நரசிம்மத்தையே காண்கிறார். மந்தியே மானிட மடங்கல். டலாக் கனி பொன் பெயர் கொண்ட இரணியன். பலாக்கனியைக் கிழித்தல் அவன் மார்பினைப் பிளத்தல். பழத்தின் நார்ப்பகுதியே இரணியனின் குடல். சுளைகளே குடரின் நிணம். சோலைக் காட்சியில் திருமாலின் அவதாரத்தினைக் காண்பது அடிகளின் தனிச் சிறப்பு. மேலும் மானிட மடங்கல் என்ற தொடர் 'மானிடனையும், மடங்கலையும்' கொண்டு முரண் தொடையாக அமைந்திருக்கும் நயமும் உய்த்துணர்ந்து போற்றத் தக்கது (பாடல்-4).

2 **ஊஞ்சல் ஆடும் மகளிர்:** சோலைக்குச் சென்ற மகளிர் ஊஞ்சல் அட விழைகின்றனர். நெட்டிலைக் கமுக மரங்களில் கயிறு கட்டிப் பொன்னூசல் ஆடுகின்றனர். அப்போது கமுகின் காய்கள் - செங்காய்கள் - சிந்துகின்றன. கமுக மரத்தில் தோன்றிய முத்துக்களும் சிதறுகின்றன. கமுக மரங்கள் தங்கள் கழுத்தழகைக் கவர்ந்து கொண்டன என்று மகளிர் நைந்து வருந்துகின்றனர். அவர்களின் கழுத்துக்கள் உடைந்து குருதி சிந்துவது போல் கமுகின் காய்கள் சிந்துவதாகவும், கண்ணீர் சிதறுவதுபோல் முத்துக்கள் சிதறுவதாகவும் அடிகள் கற்பனை செய்கின்றார். மகளிர் கழுத்துக்குக் கமுகமரத்தை உவமை கூறுதலும், கமுகில் முத்துப்பிறக்கும் எனக் கூறுதலும் வழக்கு. இதே பாடலில் (பாடல்-20) அடிகள் கூறும் அரிய கருத்தொன்றும் நோக்கத் தக்கது. இறைவன் தேவன் ஆகான். இறைவன் பிறப்பும் இறப்பும் இல்லாதவன். எழுவகைப் பிறப்புக்களுள் ஒன்றே தேவர் பிறப்பு. எனவே, இறைவனைத் தேவருள் முதல்வன் எனக் கோடல் சற்றும், பொருந்தாது. 'விலங்கினுள் மிக்கது விண்ணவர்தரு' எனல் பொருந்துமா? விலங்கு வேறினம். தரு வேறினம் ஆகுமே? இரு வேறு இனங்களை ஒருங்கு வைத்து ஒப்பிடுதல் வழு என்று தெளிவு படுத்தும் அடிகளின் நுழைபுலம் பாராட்டுக்குரியது.

3. **கழைக்கூத்து:** திருவாரூர்ச் சோலையில் கழைக்கூத்து ஒன்றைக் காட்டுகின்றார் அடிகள் (பாடல்—40). கமுகமரம் ஒன்றும் கதலிமரம் ஒன்றும் அருகருகே யுள்ளன கமுகில் படர்ந்த முல்லைக்கொடி கதலியின்மீதும் சென்று படர்கின்றது. கமுகின்மீது தோகை மயில் ஒன்று நடனம் செய்கிறது. மந்திகள் பலாக்கனிகளை முழவாகக் கொண்டு முழவுகொட்டுகின்றன. வானரம் ஒன்று வருகின்றது. பலாக்கனி ஒன்றைத் தலைமீது சுமந்த வண்ணம்! மந்திகள் பின்தொடர்வதால், அது மருண்டு கமுகிலிருந்து வாழைக்குப் படரும் முல்லைக்கொடி மீது விரைந்து தலைச்சுமையுடன் நடந்து செல்கிறது. கமுகின்மேல் ஆடும்மயில் கழைக்கூத்தி போலவும், முழவு கொட்டும் மந்திகள் பறைமுழக்குவோர் போலவும், கொடிமீது நடக்கும் வானரம் வடத்தின்மேல் குடத்து

டன் நடந்து செல்லும் கழைக்கூத்தன் போலவும், அமைய, அஃதொரு கழைக்கூத்தாகவே காட்சி நல்குகின்றது!

இறுவாய்:

இவ்வாறு இந்நான்மணிமாலை தொட்ட தொட்ட இடமெல்லாம் இனிக்கும் நறுமண மாலையாக உள்ளது. இதன் சிறப்பை யெல்லாம் விரிப்பின் அகலும். தொகுப்பின் எஞ்சும். இது தமிழ்ச்சுவை நாடுவோர்க்கு அமிழ்து தரும் இன்பக்கடல்! இலக்கியம் தேர்வோர்க்கு இலக்கியச்சுரங்கம்! இறையன்பு தேடுவோர்க்கு அதனை எடுத்தூட்டும் பேரின்ப ஊற்று! இத்தகைய 'தமிழ்மணிமாலையினை' நமக்கு வழங்கியுள்ள குமரகுருபர அடிகட்கு நாம் செய்யவல்ல கைம்மாறும் உண்டோ? படிப்போம்! சொல்லுவோம்! பரப்புவோம் அவர்தம் மாண்பினை'!

ஆரூர் கொண்டிருக்கும் அழகு

[கலைமாமணி: டாக்டர், கவியரசு இளங்கம்பன், டி.லிட்.,]

காரூரும் சோலைகளும் கவினூறும் காட்சிகளும்
நீரூறும் குளமும் நிதமுயரும் புதுவாழ்வும்
ஆறூரும் பேரழகும் அகங்கவர — மிக்குயர்ந்த
தேரூரும் அகலத் தெருக்கள் நிறைந்திருக்கும்
ஆரூரின் பெருமைகளை ஆரறியார்? — அந்நாளில்
உறவை நினையாமல் உயர்நீதி பெரிதென்றே
கறவை முறைசெய்த காவலனாம் மனுநீதிச்
சோழன் ஆண்டபதி: சுந்தரர்க்காய் நம்மிறைவன்
ஆழன்பால் தூதுசென்ற ஆன்ற பெரும்பதியாம்;
தெய்வத் தமிழ்முழங்க தேசார்ந்த மழைமுழங்க
உய்வளிக்கும் தியாகேசர் உலாவரும்நல் லாரூரில்
எம்மருங்கும் சங்கீதம் எப்போதும் சங்கீதம்
விம்மிதமாய் அலைபாய வீதிஎலாம் கலைவிளக்கம்
கொண்டொளிரும் ஆன்றபதி; கொள்கை யுள்ளோர் பலர்தோன்றி
எண்டிசையும் புகழ்தேக்க ஏற்றமுடன் வென்றபதி.
என் ஆரூர் என்றே எழிலார்ந்த சுந்தரர்தாம்
பொன்னான பாடலிலே போற்றிப் புகழ்ந்த பதி;
தேரழகில், தெருவழகில் தெட்டாத கலையழகில்
பாரதனை ஈர்த்தபதி, பாங்கான ஆரூரே!

ஸ்ரீ பகவானுக்கு மூச்சுக்காற்று வேதம்

சேங்காலிபுரம் டாக்டர். பாபு தீக்ஷிதர், வடகுடி.

ஸ்ரிய: பதியான பகவானுடைய க்ருபையினுல் உண்டுபண்ணப்பட்ட இந்தப் பூலோகத்தில் வேதத்தை ப்ரமாணமாக உடைய ஹிந்து மதத்தில் மனுஷ்ய ஜன்மா கிடைக்க வேண்டுமானுல் பல ஜன்மாக்களில் செய்த புண்யத்தினுல்தான் கிடைக்கும். எல்லா ஜாதிக்காரர்களுக்கும் பொது, வேதம். முன்பு எல்லா வகுப்புக்காரர்களும் தெரிந்துகொண்டிருந்தனர். அந்தணர்கள் சொல்லும் வேதம் நமக்காகத்தான் என்பதைப் புரிந்துகொண்டிருந்தார்கள்.

எந்த புராணத்திலும் அந்தணனே அந்தணன் உயர்வாக எழுதிவைத்த புராணமே கிடையாது. அந்தணர் அல்லாதார்கள், அந்தணர்களை உயர்வாகப் பேசியிருக்கிருர்கள். ''வேதமோதிய வேதியர்க்கு ஒரு மழை'' வேதபாராயணம் செய்யும்பொழுது ப்ராம்மணர்கள் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி முன்னிலையில் ''ப்ராம்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர்களாகிய நாங்கள் (நாங்கள் கூடப்பிறந்த ஸஹோதரர்கள்) வ்யாதி இல்லாமல் ஸெளக்யமாய் இருக்கவேண்டும்'' என்று சொல்லுகிருர்கள். சில துஷ்ப்ரசாரத்தினுல் ''வேதம் அந்தணர்களுக்கு மட்டும்தான்'' என்று மற்ற வகுப்பினர் நினைக்க ஆரம்பித்தார்கள். இப்பொழுது — 1988ல் எப்படி இருக்கிறது என்ருல் ப்ராம்மணர்களில் சிலர், வேதம் என்பது வைதீகர்களைச் சார்ந்தது என்றும், தமக்கு ஸம்பந்தம் இல்லை என்றும் நினைக்கிருர்கள். இந்த அறியாமை மாறவேண்டும். இந்த உலகத்திற்கு மூலகாரணம் தெய்வம். தெய்வத்திற்கு மூலம் வேதம். வேதம் சொல்லித்தான் கும்பாபிஷேகம் பண்ணவேணும்.

ஒரே லாரியில் வந்து இறங்கும் இரண்டு கற்களில் ஒரு கல் ஸ்வாமியாக பாலாபிஷேகம் பண்ணிக்கொள்கிறது. மற்ருென்று அந்த ஸ்வாமிக்கு தேங்காய் உடைப்பதற்குப் பயன் படுகிறது.

வேதத்தைத் தமிழில் மறை என்று சொல்லுவார்கள். மறைந்து இருக்கிற ஆண்டவனின் உருவம்தான் வேதம். அதனுல்தான் வேத புஸ்தகத்தைத் தரையில் வைக்கக்கூடாது. ஆஸனத்தில்தான் வைக்கவேண்டும். அதனுல்தான் 'வேதமந்த்ர ஸ்வரூபா நமோ நமோ' என்று ஒரு பக்தர் பாடினுர். வேதம் சொல்லச் சொல்லதான் தெய்வத்திற்கே நிரம்ப சக்தி ஏற்படும்.

வேதம் இல்லையேல் தெய்வம் இல்லை. வேதத்தில் உலகம் பூராவும் சுபிக்ஷமாக இருப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லி இருக்கிறது. வேதத்தின் பொருளாய் விளங்கிவரும் ஸ்ரீ தியாகராஜரை வழிபடுபவர்களுக்கு இந்த உலகில் கிடைக்காதது ஒன்றுமே கிடையாது. ஆனுல் ஒன்று கிடையாது. அது என்னவென்ருல் தாயைத் துன்பப்படுத்தும் மறுபிறவி கிடைக்காது.

எல்லாம்வல்ல ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமியின் அருள் நம் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று நான் ப்ரார்த்திக்கிறேன்.

திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் மேல ராஜகோபுரத் திருப்பணி விபரம்

தேவகோட்டை. ராம. சோமசுந்தரம் செட்டியார்.

நிலமகளின் நெற்றித் திலகமாக விளங்கும் திருவாருரில் புனித கமலாலயத்தின் கீழ்க்கரையில் ஓங்கார நாதம் போல் ஓங்கி உயர்ந்து நிற்பதுதான் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் மேல ராஜ கோபுரமாகும்.

இந்த மேலராஜ கோபுரத்துக்கு எதிரே வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார், அருள்மிகு மாற்றுரைத்த விநாயகர்.

இக்கோபுரத்தைத் தாங்குவார் போலக் கீழே தென்புறக் கல்தூணில் இராம பக்த அநுமன் எழிலார்ந்த காட்சி நல்குகிறார். ஆம், இக்கோபுரத்துக்கு அவரே காவல் தெய்வம்.

மெய்யன்பர்கள் கமலாலயத்தில் புனித நீராடி,மாற்றுரைத்த கணபதியைமனமுருக வழிபட்டு மேலைக் கோபுர வாயிலின் வழியே உள்ளே வந்து அநுமனுக்கு வெண்ணெய் சாத்திபூமாலை அணிவித்து அகங்குழைய வணங்கி உண்டியலில் காணிக்கை செலுத்தித் திருக்கோவிலின் உள்ளே வருகின்றனர். உண்டியலில் சேரும் கணிசமான தொகையே இவ் வநுமனை உண்மையாகவணங்கி வழிபாடியற்றுவாரின் எண்ணிக்கையை உணர்த்துகிறது. இவ்வநுமன் வேண்டுவோர் வேண்டுவதை வழங்கும் வல்லமையோடு திகழ்கிறார்.

சுற்றுலாப் பேருந்துகள் இக்கோபுர வாயிலுக்கருகேதான் வந்து நிற்கின்றன. தேவஸ்தான அலுவலகம் சென்று வருவோர்க்கு வசதி நல்குவதும் இந்த வாயில் தான்.

இறைவன் திருவருளால் இந்த மேலைக் கோபுரத் திருப்பணியினைமேற்கொள்ளும் நல்வாய்ப்புப் பெற்ற நான் இக்கோபுரத்தின் பெருமையை ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன்;உள்ளமெல்லாம் ஆனந்த வெள்ளமாகி நிற்கின்றேன். மிக அழகான சிற்பங்கள் இக்கோபுரத்தில் ஏறத்தாழ 850 உள்ளன. அவை, சிவபுராணங்களையும், மனுநீதிச் சோழன் வரலாற்றையும் குறிப்பன. பழமை மாறாமல் இச்சிற்பங்கள் புதுமையாக்கப் பெற்றுள்ளன. கோபுரத்தின் உயரம்( ) அடி; அகலம்( ) அடி; நீளம் ( ) அடி; 7 நிலைகளையும் 11 செப்புக் கலசங்களையும் கொண்டு ராஜ கம்பீரத்துடன் விளங்குவது இந்த ராஜகோபுரம். செப்புக் கலசங்கள் சுமார் 6½ அடி உயரம் கொண்டவை. அவைகள் குடமுழுக்கை முன்னிட்டுக்கீழே கொண்டு வரப்பட்டுப் பழுக்கக் காய்ச்சிப் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கோபுரக் கலசங்கள் புதுப்பிக்கப்பட்டபின் நகர்வலம் கொண்டு வரப்பட்டன.

இந்தக் கோபுரமும் கீழைக் கோபுரமும் 18-ஆம் நூற்றாண்டில் என் முப்பாட்டனார் தேவகோட்டை சத்திரம் அருணாசலம் செட்டியார் அவர்களால் முழுதும் பழுதுபார்க்கப்பெற்றுக் குடமுழுக்கும் செய்விக்கப் பெற்றன. அச் சந்ததியில் வந்த நான் இக் கோபுரத்தைப் புதுப்பித்துத் திருப்பணி செய்து குடமுழுக்கும் செய்வித்துக் காணும் பெரும் பேறு

பெற்றமைக்காக இறையருளை எண்ணிப் போற்றி வணங்குகின்றேன்.

எங்கள் அரு. அரு. சோம குடும்பத்தாரும் சக்கந்தி உல. கக. குடும்பத்தாரும் சேர்ந்து 1921ல் இக்கோவில் திருப்பணி வேலையைத் துவங்கினார்கள். பல்வேறு காரணங்களால் அப்பணி முற்றுப்பெறவில்லை. அவர்கள் திருப்பணிக்காகக்கொண்டு வந்து சேர்த்திருந்த கருங்கற்கள் 65 ஆண்டுகளாக வெயிலிலும் மழையிலும் திறந்த வெளியில் கிடந்தமையால் திருப்பணிக்கு உபயோகப் படாது என்று தெரிய வந்தது. அவற்றை அறநிலையத் துணை ஆணையரவர்கள் உத்திரவு பெற்று விற்று வந்த ரூ. ஒரு லட்சத்துக்குச் சற்றுக் கூடுதலான தொகையைக் கொண்டும் சுற்றத்தார் நன்கொடையைக் கொண்டும், என் சொந்தப் பொருளைக் கொண்டும் இத்திருப்பணியை நிறைவேற்றினேன். அவர்களின் உள்ளத்து வேட்கையை அடியேன் செய்யும் பேறு பெற்றேன். முன்னோர் தம் கருத்தை முற்றுவிக்கும் நிலைக்கு எனையாக்கிய அருள்மிகு தியாகேசப் பெருமான் திருவருளைப் போற்றிப் பணிகின்றேன்.

ஸ்தபதி கோமல் திரு. பி.ஆர். சுந்தர ஸ்தபதி, பெயிண்டர்கள் திருவாளர்கள் எஸ். குருமூர்த்தி, எஸ். செல்வராஜ் என் மானேஜர் திரு சி.டி. சிதம்பரம், திருவாரூர் நகரத்தார் சங்கத் தலைவர் திரு சுந்தரம் செட்டியார் ஆகியோர் செய்த உதவிகள் நெஞ்சில் நிலைக்கும் தகையன

என் தந்தையார் சுந்தரேசன் செட்டியார் அவர்களும், நண்பர்களும் இத் திருப்பணியில் உதவியாக நின்று பல்வேறு பணிகளைச் செய்தார்கள், உதவிகளை வழங்கினார்கள். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பணிக் குழுத் தலைவர் திரு சு. தென்கோவன் அவர்களும் திருக்கோவில் நிர்வாக அதிகாரி சு. ஸ்ரீதரன் அவர்களும் மற்ற அதிகாரிகளும் சீரிய ஒத்துழைப்பைத் தந்தனர்.

காஞ்சிப் பெரியவரின் அருளாசியுடன் என் தந்தையார் அரு. அரு. சோம. சுந்தரேசன் செட்டியார் அவர்கள் 1984 ஏப்ரலில் திருப்பணியைத் தொடங்கினார்கள். 4 4—1988ல் திருப்பணி செம்மையாக நிறைவேறி திருக்குடமுழுக்கும் செய்விக்கப் பெற்றுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் மதிப்பிற்குரிய மா இராமு அவர்களும், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர்மதிப்பிற்குரிய இராச.கல்யாண சுந்தரம் அவர்களும், திருப்பெருந்திரு. தருமை குரு மகா சந்நிதானம் அவர்களும் செம்மையாக நிறைவேறியுள்ள இத்திருப்பணியைப் பெரிதும் பாராட்டி மகிழ்வித்தார்கள். நான்கு ஆண்டுகளாகப் பட்ட துன்பங்கள் சான்றோர்களின் பாராட்டினால் ஆதவன்முன் பனியாக மறைந்தோடின. தனிப்பட்ட ஒரு குடும்பத்தாரின் இப்பெரும் பணி பல்லோரின் வியப்புக்கும் மகிழ்வுக்கும் உரியதாக மலர்ந்து மணம் வீசுகிறது. எவ்வித இடையூறும் இன்றி ஆரூரன் அருளால் அகமகிழ நிறைவேறியுள்ளது. எல்லாம் தியாகேசன் திருவருள் என்றெண்ணி அவன் தாள் வணங்கிப் பெரு மகிழ்வெய்துகிறேன்.

ஆரூர் நம்பியும் அருட்பிரகாச வள்ளலும்

சோ. சத்தியசீலன்.

தட்டினால் திறப்பான்; கேட்டால் கொடுப்பான். இறைவனுக்கு இப்படி ஓர் இலக்கணம்!

மாற்றியமைத்தவர் பரவை மணாளர்! நம் தலைவாயிலுக்கு வந்து தட்டி அழைத்து தன்னையே தோழனாகத் தருவான் அந்தத் தனித் தலைமைப் பெருங்கடவுள் என்று ஆன்மாக்களுக்கு அறிமுகப் படுத்தியவர் ஆலால சுந்தரர்.

எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிராய் எண்ணி, உரிமையும், நேயமும் உடையவராய் யார் திகழ் கின்றாரோ அவர் உள்ளத்தில் எம்பெரு மான் சுத்த சித்துருவாய் நடம் புரிவான் என்ற உண்மையை உணர்த்தியவர் வள்ளலார்.

அத்தகைய ஆன்மநேய ஒருமைப் பாட்டாளரின் அருட்சொற்களே வேத மென்றும், அவர்களுடைய செயல்களே திருவருளின் செயல்கள் என்றும் புதிய தோர் ஆன்மீக இலக்கணத்தை அறிமுக படுத்தியவரும் அருட்பிரகாச வள்ளலார் தான்.

ஆளுடைய நம்பிகளாய் ஆரூரரை ஏற்று மகிழ்கின்றார்! ஏத்திப் போற்று கின்றார்!

வன்தொண்டப் பெருந்தகையே என்று வாழ்த்துகின்றார்.

அருள்தலைமை பெருந்தகையே என்று அழைத்து மகிழ்கின்றார்.

உயர்கருணைப் பெருந்தகையே என்று உரைத்து நெகிழ்கின்றார்.

நாவலூர்ப் பெருந்தகையே என்று மொழிந்து நயக்கின்றார்.

அருட்பாட்டுப் பெருந்தகையே என்று பேசி வியக்கின்றார்.

தனித்தலைமைப் பெருந்தகையே என்று கூறி மனங் கனிகின்றார்.

இப்படியெல்லாம் செந்தமிழால் இறைவனைச் சிறையிட்ட சுந்தரரையே அழைத்துப் பேசுகின்றார் இராமலிங்கர்.

"பெருமானே, முதலைவாய்ப் பிள்ளையை அழைத்த உன் கலைக்கும் வடகலைக்கும் உள்ள ஒப்புமை பொன் மலைக்கும் அணுவுக்கும் உள்ளதன்றோ!

காளையின் மேலிட்ட திருவடியைக் கருத்தில் எண்ணுவாய். எண்ணி, ஆற்றி லிட்ட பொன்னை ஆரூர்க் குளத்தில் எடுப்பாய்!

வேதமுதற் கலைகளெல்லாம் விரைந்து விரைந்து ஓதியும் அணுவளவும் உணர முடியாத பரமனின் பாதமலரை ஏதமின்றி உன் முடியிற் சூடி மகிழ்வாய்! அப்படி என்ன தவம் மேற்கொண்டாய்!

நான் ஏழிசையை அனுபவிக்க வில்லை. இசைப்பயனும் யானறியேன். இன்னமுதும் உண்டதில்லை. ஆனாலும் தலைவா, 'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்று நீ பாடிய பாடலை ஆழமாய்ச் சிந் தித்தேன். அதுமட்டுமே என்னால்

முடிந்தது. அதன் விளைவு, என் அந்தக் கரணங்கள் யாவும் கரைந்து உருகி எல்லையற்ற பேரின்பம் அனுபவிக்கின்றேன்! இது எப்படியோ!

வானவர்கள் காண, இந்திரனும் தேவர்களும் இன்புற்றுக் காண, தவ முனிவர்கள் தனித்தனி கண்டு மகிழப் பேரரசன் எனப் பெருமை மிகு யானையின் மேல் நீ எழுந்தருளிய அருட்கோலத்தை நான் காணும் பேறு பெற்றிலேனே!

உன் பாட்டைப் பயின்றதால் தான் தேனுக்கும் சுவை பிறந்தது. தினந்தோறும் உன் திருப்பாட்டை நான் படிக்கும் போது என் உள்ளமும், உடலும், உயிரும் ஒன்றாகி நின்று படிக்கும் அற்புத அனுபவத்தைப் பெற்று மகிழ்கின்றேன்!

பரம்பரமாம் துரியமெனும் பதத்தே வீற்றிருக்கும் பரம்பொருளைத் தோழனாய்க் கொண்ட உன் பெருமையை எண்ணித் தெய்வங்களெல்லாம் உன்னிடம் வரம் பெறத் தவம் செய்யுமன்றோ!

பரவையார் ஊடலைத் தீர்க்க பரமனையே தூது நடக்கச் செய்த உன் பெருமையை அயனும், மாலும் அளக்க முடியாதே''.

'ஆளுடைய நம்பிகள் அருண் மாலை'யில் வள்ளலார் இப்படி வாயினிக்கப் பேசுகின்றார். திருஞான சம்பந்தப் பெருமானை ஞான குருவாகவும் திருவாசகத்தை ஞான நூலாகவும் ஏற்று உயர்ந்தவர் அருட்பிரகாசர்.

அடியார்களிடத்தில் அளவில்லா பக்தி கொண்டு, அவர்களுடைய அருளனுபவத்தை உலகத்து உயிர்களெல்லாம் பெற்று உய்வு பெற வேண்டி நின்றவர் அந்த வடலூர்ப் பெருந்தகை.

ஆன்ம இயலும் உலகியலும் தனித்தனி என்றெண்ணாமல், உயிர் இரக்கத்தோடு கூடிய ஒழுக்கம் நிறைந்த உலகியலே ஆன்மாவுக்கு உய்தியைத் தரும் என்னும் உண்மையை உலகத்திற்குக் கூறிய வள்ளலார் அவ்வாறே வழிகாட்டிய சுந்தரர் பெருமானை வழிபடுவதில் வியப்பில்லை. அவருடைய பாடலைப் பாராட்டியதிலும் ஆச்சரியமில்லை.

பரமாத்மாவையும் பரவசப் படுத்துகிறது சுந்தரர் பாட்டு. அந்த வேதத்தினும் இனிய தமிழ்ப் பாட்டிற்காக அந்தப் பரமன் பிச்சையெடுக்கிறான்; தூது நடக்கிறான்; துரிசுகளுக்கு உடனாகிறான்; தோழனாகத் தன்னையே தருகிறான்.

அதே வேளையில் ஜீவாத்மாவையும் உருக்குகிறது அந்த உத்தமனின் முத்துத் தமிழ்ப்பாடல். இரண்டையும் அனுபவித்துணர்ந்த அருட்பிரகாசர்,

இன்பாட்டுத் தொழிற்பொதுவில்
இயற்றுகின்ற எம்பெருமான்
உன்பாட்டுக்கு உவப்புறல்போல்
ஊர்ப்பாட்டுக்கு உவந்திலர்என்று
என்பாட்டுக்கு இசைப்பினும்என்
இடும்பாட்டுக் கரணமெலாம்
அன்பாட்டுக்கு இசைவதுகாண்
அருட்பாட்டுப் பெருந்தகையே!

என்று போற்றி மகிழ்கிறார்.

திருவாரூர்க் கோவை

முனைவர். சோ. ந. கந்தசாமி,
பேராசிரியர் & தலைவர், இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக் கழகம்.

முன்னுரை:

தமிழ் மொழியில் தோன்றி வளர்ந்து உள்ள பல்வேறு இலக்கிய வகைகளில் 'கோவை' என்பது ஒன்றாகும். களவு, கற்பு ஆகிய இருவகைக் கைகோளுக் குரிய அன்பின் ஐந்திணைத்துறைகளைப் பொருள் தொடர்பு பொருந்தும்படி கோவைப்படுத்திப் பாடப்பெறும் பாக் களின் தொகுதியைக் கோவை என்று வழங்குதல் மரபாகும். தொல்காப்பியர் பொருளதிகாரத்தில் அகப்பொருள் மரபு களை விரிவாகவும் விளக்கமாகவும் வரை யறுத்துக் கூறியுள்ளார். அவற்றுள் பல அவர்காலத்தில் மக்களின் நடைமுறை வாழ்க்கையில் காணப்பெற்றவை என்ப தும் ஒருசில புலனெறிவழக்காகப் புனைய பெற்றவை என்பதும் ஆராய்ச்சியாளர்க் குப் புலனாகும். அவர் காலத்திற்குப் பின்னர், காதல் பொருளைப் பாடவந்த கடைச்சங்கத்துப் புலவர்கள். ஒரு குறிப் பிட்ட கூறினையே உலகியல் வழக் காகவும், புனைந்துரை வழக்காகவும்பாடி சென்றனர். காதல் வாழ்வினை முழுமை பெறப் பாடிக்காட்டும் முயற்சியை எந்த ஒருதனிப்புலவனும்மேற்கொள்ளவில்லை சங்கம் மருவிய களப்பிரர் காலத்தில் பழைய மரபுகள் பெரிதும்மறக்கப்பட்டன எனினும், கி பி. ஆறாம் நூற்றாண்டளவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியினால் இலக்கியத் துறையிலும் சமயத்துறையிலும் பழமை யைப் புதுமைப் பொலிவோடு பேணிக் காக்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது காதல் வாழ்வினை உதிரிக்காட்சிகளாகப் பாடாமல், ஒரு நாவலைப் படிப்பதுபோல் ஆதியோடு அந்தமாக மரபு கெடாமலும் கற்பனை வற்றாமலும், கவிச்சுவை குன்றாமலும் பாடிக்காட்டும்வீறுபடைத்த புலவர்கள் விளங்கினர். இவர்கள் படைத்தகோவைகள் குறிப்பிடத்தக்கவை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நின்ற சீர் நெடுமாறன் என்ற பாண்டிய வேந்தனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றபாண்டிக்கோவை இப்போது கிடைக்கும் கோவை இலக்கி யங்களில் பழைமை படைத்தது. அடுத்து மாணிக்கவாசகர் அருளிய திருச்சிற்றம் பலக் கோவையார் இலக்கியச் சிறப்பும், ஞானச்சிறப்பும் ஒருங்கே அமைந்த ஒப் பற்ற கோவையாகும். கி. பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் குலோத்துங்கன் கோவை பாடினார். எனினும், பிற்காலத்து எழுந்த கோவைகளில் தஞ்சைவாணன் கோவை யே பெருவழக்காகப் பயிலப்பெற்றது. அவ்வரிசையில் சுட்டுதற்குரிய கோவை திருவாரூர்க்கோவை எனலாம்.

ஆசிரியர்:

இதனைப் பாடியவர் எல்லப்ப நயினார் என்பவர். இவர் எல்லப்ப நாவலர் என்றும் சுட்டப்பெறுவார். இவர் காலம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு. இவர் பிறந்த ஊர் திருவெண்காட்டிற்கு அருகில் உள்ள தாழை நகராகும். இவர் கார்காத்தவேளாளர் மரபினர். இவர் இயற்றியஅருணாசல புராணம், அருணை யந்தாதி, அருணைக் கலம்பகம், திருவிரிஞ் சைப் புராணம் என்பன சிறந்த இலக் கியங்கள் ஆகும்.

முத்தித்தலம்:

சைவர்களுக்கு முத்தித் தலங்கள் நான்காகும். திருவாரூரில் பிறப்பதும் தில்லையைத் தரிசிப்பதும் திருவண்ணா மலையை நினைப்பதும் காசியில் இறப் பதும் முத்தி தரும் என்பர். இந்நான்கு தலங்களையும் இவர் பாடல்களில் போற்றிடக் காணலாம், எனினும், ஆரூரையும், அண்ணாமலையையும் ஆராக்காதலினால் அகமுருகிப் பாடி யிருக்கிறார். அருமையான ஊர் ஆரூர் என ஆயிற்று. சமயக் குரவர்கள் இத் தலத்தைப் போற்றிப் பரவினர். முசுகுந்தன், மனுநீதிச்சோழன் முதலியோர் இந்நகரிலிருந்து செங்கோல் செலுத்தினர். அடியார் பெருமையை விளக்கும் திருத்தொண்டத்தொகையினை இறைவனே அடியெடுத்துக் கொடுத்துச் சுந்தரர் பாடியதும் இத்தலத்தில்தான். புற்றிடம் கொண்ட பெருமான் இத் தலத்தின் மூலவர். தியாகராசராக அன்பர்க்கு அருள்புரிகிறார் ஈசன்.

கற்பனைப் படைப்பு:

எல்லப்ப நாவலர், தம் காலத்தில் வாழ்ந்தமக்களின் நடைமுறை வாழ்க் கையை இக்கோவையில் அப்படியே பாடிவிட்டார் என்று சொல்ல முடியாது. வேளாண்மைச் சமுதாயத்தில் பெரு நிலக்கிழாராகவும், செல்வராகவும், விளங்கியவர்களுக்குக் கற்பனை விருந் தாகவும், பக்திக்கு நிலைக்களனாகவும் அகப்பொருள் அமைத்து இறையுணர்வும் குழைத்து இக்கோவையை இயற்றி யுள்ளார் சைவ எல்லப்ப நாவலர். கட்டளைக் கலித்துறை என்னும் யாப் பினால் இவ்வகை இலக்கியம் பாடப்பெற வேண்டும் என்பது பாட்டியல் நூல்கள் காட்டும் வரையறையாகும். எனவேதான், கோவைக்கலித்துறை என்ற பெயர் இந்த யாப்புக்கு உண்டானது. பெரும்பாலும் 400 பாடல்களில் கோவையைப் பாடுவது ஒரு மரபு. எனினும், கற்பனைப் பெருக் கிற்கு ஏற்பக் கரைபுரண்டு கவி வெள்ளம் பெருகுதல் காணலாம். கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலியோர் பாடிய கோவைகளில் 500-க்குமேற்பட்ட பாடல்கள் அடங்கியிருத்தல் குறிப்பிடத் தக்கது. அவ்வகையில் திருவாரூர்க் கோயில் 513 பாடல்கள் பொதிந்துள்ளன

இறையன்பு:

ஆசிரியர் ஈசனிடத்திலும் ஆரூரிடத் திலும் எல்லையில்லா அன்புகொண்டவர். ஆதலின் அகப்பொருளைப் பாடும் இடங் களிலும் எல்லையற்ற பக்தியையும்சைவச் சார்பையும்சுட்டுதல் இவர்க்கு இயல்பாகும் ஒருசில சான்றுகளைக் காண்போம். தியா கேசரின் கொடைக்குணத்தை, ''அடிக்கு ஆயிரம் பொன் சின்னங்கள் கூற அளிப் பார்.''(59),'வரந்தரலே வேலையதாம் திரு வாரூரர்'' (308) எனப் போற்றினார். சுந்த ரர்க்காகப் பரவையாரிடம் தூதுநடந்ததும் அவர் ஆற்றிலிட்ட பொன்னினை ஆரூர் குளத்தே வரச்செய்ததும் ஆகிய அருட் செயல்களை நம் நாவலர் குறித்துள்ளார். திருவாசகத்தின் சிறப்பினை,

''மருவாத வூரன் றிருவாசகத்தமிழ்
மாலைகொள்ளக்
குருவா னவர்திரு வாரூர்த் தியாகர்''

என்ற பாடலில் குறித்தனர் (103). திரு ஞானசம்பந்தர் வீதிவிடங்கனின் அழ கினைப் பாதாதிகேசமாகப் பாடிய பாங் கினைச் சுட்டியுள்ளார் (481).

நகர்ச்சிறப்பு:

திருவாரூர்ச் சிறப்பினையும் பாடல் தொறும் பாராட்டுகிறார். ஒருசில இடங் களைக் காண்போம் ''சைவம் தழைத் திடும் ஆரூர்''(341), ''காவிரி நீர், பொய் யாதுலவும் தென்னாரூர்''(281),''படிக்கே புகழ்பெற்ற ஆரூர்''(401), ''தண் தரளம்

மள்ளர் கூலிக்கிடும் திருவாரூர்'' (404) என வருவன காண்க.

அணிநலம்

சொல்லணி, பொருளணி தோன்ற இவர் பாப்புனைவதில் வல்லவர். பால் வரை தெய்வம் ஆகிய நல்லூழினால் இணையும் தலைவன். தலைவி ஆகிய இருவரையும் இந் நிலத்தவரால் பிரிக்க முடியாது. இக்கருத்தினை, 'நீர் கூடும் பாலைப் பிரிப்பர்கொலோ இந்நிலத்த வரே' (26) என்ற பகுதி கூட்டுகிறது. இத் தொடரில் நீர், பால் என்பன சொல்லணி தோன்ற நின்றன. நீரிற் கூடிய பாலை அன்னம் பிரித்தல் உண்டு. ஆயினும் நீர் (நீங்கள்) என்னோடு சேர்வதற்கு ஏது வாகிய பாலை (ஊழை) யாராலும் பிரிக்க முடியாது என்பது கருத்து. இவ்வாறே, ''மேலோர் இரங்குவர். கீழோர் எந்நாளும் விரோதிப்பரே' (33) என்ற பகுதியும் காணத்தக்கது. இத்தொடரில் மேலோர், கீழோர் என்பன முறையே கண்களையும் பாதத்தையும் குறித்தன. தலைவி நடந்து செல்வது கண்டு கண்கள் இரங்குதலைக் குறித்துத் தலைவன் நெஞ்சை நோக்கிக் கூறுவதாக அமைந்தது. இவ்வாறே, 'எங்கள் மானைப் பிடிக்க வந்தார் கண்ணியோடு வலை பிடித்தே' (91) என்ற பாடற்பகுதி யும் சொல்லணி பொருந்தியது. கண்ணி யோடு உவலை (தழை) கையில் கொண்டு வந்து தலைவியாகிய மானைத் தலைவன் அடையவந்தான் என்பது ஒரு கருத்து. மற்றொன்று கண்ணியும் வலையும் கொண்டு மானைப் பிடிக்கும் மரபினைக் காட்டியது. பிறிதொரு பாடலில் 'துடி யிடைபோல் அங்கங்கிளைத்திடும் அங் கம் கிளைத்திடு' (297) என்று சொல்லணி தோன்றப் பாடினார். தலைமகன் வருகை யில் முன்பு இளைத்திருந்த அவள் அங்கங் கள் பூரிப்படையும் என்ற கருத்தினை இப் பகுதி புலப்படுத்துகின்றது. இத்தொட ரினை அங்குஅங்கு இளைத்திடும் அங்கம் கிளைத்திடும் என்று படித்தல் வேண்டும்.

இனிப் பொருள்வளம் தோன்ற எல் லப்ப நாவலர் பாடுவதில் வல்லவர் என்ப தற்கு ஒருசில சான்றுகளைக் காண்போம் பாங்கியற் கூட்டம் என்ற பகுதியில் பாங்கிப் பேதமையூட்டல் என்ற துறைக் கமைந்த பாடல் பொருள்வளம் பொதுளி யது. சந்தனக் கட்டைகளை எல்லாம் விறகாக எரிக்கும் வேடர் குலத்தில் பிறந்த தலைவியின் தன்மையைப் பாங்கி கூறுகிறாள். பொருள்களின் அருமையை அறியமாட்டாத வேடனைப் போலவே வேட்டுவப் பெண்ணும் தலைவனின் அருமையை அறியமாட்டாள். தலை மகனோ முருகனையும் கண்ணனையும் போன்ற கவினும் ஆற்றலும்படைத்தவன் என்கிறாள் தோழி.

'நந்தனஞ் சூழ்வயலாரூர் இறையவர்
நல்கியவேற்
கந்தனு மாலு நிகருமன் னாநின்
கருத்தறியாள்
சந்தனமான தருவையெல் லாஞ்செந்
தழல்பரப்பும்
இந்தனமாக வெறிந்துகொள்
வார்பெற்ற வேந்திழையே' (110)

எல்லப்ப நாவலர், முருகனிடத்தில் நிறைந்த பக்தி கொண்டவர். களவித் தலைவனைப் பல இடங்களில் முருகனா கவே போற்றுகின்றார்.

'முடிக்கும் பிறையவராரூர்த் தியாகர்
முருகனைப்போற்
பிடிக்கும்செவ் வேலண்ணலே
வரையாமை பிழையதன்றோ
வடிக்குஞ் செழுந்தமிழ் நாட்டுக்கு
மூவர்க்கும் வருணத்துக்கும்
குடிக்கும் புகழ்க்குமுன் வாய்மைக்குந்
தூய்மைக்குங் கொள்கைக்குமே'
(278)

'சேலோடை சுற்றிய வாரூரர்
செம்பொற் றியாகர்தந்த
வேலோனை வள்ளி புணர்ந்தது
போலவுன் மெல்லியலாள்
மாலோ டொருவனை யாதரித்
தாணம் மரபினுக்குப்
பாலோ வெனுமொழி யாய்நெறி
யாகப் பயின்றதுவே' (360)

மரபினை மதித்தல்:

இவர் பாடல்களில் முன்னோர் மொழிபொருள் பொன்னே போல் போற்றும் மரபு மதிப்பும் காணப்படுகிறது. வரைவு கடாதல் என்னும் பகுதியில் காவல் மிக உரைத்தல் என்ற துறைக் காயமைந்த பாடல் (282) அகநானூற்றில் இடம்பெறும் 'இரும்பிழி மகாஅர்' என்ற பாடலின் மறுவடிவமாக அமைந்தது. ஒருவழித்தணத்தல் என்ற பகுதியில் காணப்பெறும் அளியொடு புலம்பல், குருகொடு புலம்பல் முதலியன (294, 295) சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் இடம்பெறும், 'அம்மென் இணர அடும்பு காள்' என்ற பாடற்பகுதியின் விளக்கமாகும். 'முக்கோற்பகவரை' எனவரும் ஒரு பாடல் (402) பாலைக்கலியில் வரும் 'எறித்தரு கதிர்தாங்கி' என்ற பாடலை நினைவுபடுத்தும். 'அன்று நடந்த திருமாலும் சீதையும்' என்ற பாடல் (411) 'மீண்டார் என உவந்தேன்' என்ற திருக்கோவையார் பாடலை (244) அடியொற்றியது. இங்ஙனம் எல்லப்ப நாவலர் இலக்கியப் புலமையும் கற்பனைத்திறமும் கொண்டு திருவாரூர்க் கோவையினைத் திறம்படப் பாடியுள்ளார். திருவெம்பாவையில் இடம்பெறும் மரபுக் கற்பனை அமைந்த ஒரு பாடலை (16), மையமாகக் கொண்டு இக்கோவையின் இந்தப் பாடல் அமைந்துள்ளது.

'சேலேய் வயற்றிருவாரூரர் செம்
பொற் றியாகர் தண்டைக்
காலே யெனப்பொற் சிலம்பிடை
யார்த்துக் கரியகண்டம்
போலே விளங்கிச் சடைபோல
மின்னியப் பொற்சடையின்
மேலே யிருக்கு நதிபோல வாழியிம்
மேகங்களே' (513)

முடிவுரை

எல்லப்ப நாவலரின் கற்பனைத் திறமும் பக்திப் பெருக்கும் சமய ஞானமும் ஒருங்கு உணர்தற்குக் கருவியாகத் திகழ்வது திருவாரூர்க்கோவை. இப்பனுவலைப் பெற்று முழுமையாகக் கற்றுப் பயன் பெறுதல் சைவத்தமிழரின் பொறுப்பாகும்.

கமலாம்பிகை பிள்ளைத்தமிழ் ஒரு கண்ணோட்டம்

திருமதி. மீரா கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., எம். ஃபில்.,
பேராசிரியை, தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, மயிலாடுதுறை.

'கமலாம்பிகை பிள்ளைத் தமிழ்' என்னும் இத்தலைப்பு, நூலமைப்பு (பொது-சிறப்ப) ஆசிரியர், அம்மையின் சிறப்பு, தலச் சிறப்பு, வரலாறுகள் எனும் ஐந்து உள் தலைப்புகளாகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

நூலமைப்பு : பொது :

பிள்ளையைப் பற்றிப் பேசும் தமிழ், பிள்ளைத்தமிழ். இதனை நெடுவெண்பாட்டு பிள்ளைக்கவி, பிள்ளைப் பாட்டு என்றெல்லாம் அழைப்பர். ஆனால் வெண்பாட்டாய் அமைந்த நூல் ஒன்றும் வழக்கில் இல்லை. ஆசிரிய விருத்தம்,கட்டளைக்கலி, கலிவிருத்தம், சிறுபான்மை பஃறொடை வெண்பா,கொச்சகக்கலி, வகுப்பு, ஈரெண்கலை வண்ணம் என்னும் யாப்புகளில் பிள்ளைத்தமிழ் அமையும்;என்றாலும் அதிகம் பயின்று வருவது ஆசிரிய விருத்தமே. தெய்வம், மற்றும் அரசர் பெயரிலும், அவர்களின் ஊர்கள் பெயரிலும் பிள்ளைத்தமிழ் அமையும். ஆண்பால், பெண்பால் என்று இருநிலையிலும் பிள்ளைத்தமிழ் அமையும். பிள்ளைத்தமிழில் அமைந்துள்ள பகுப்புகள் பத்து. முதல் ஏழும் இரு பாலுக்கும் உரியவை. இறுதி மூன்றில்தான் வேறுபாடு உண்டு.

ஆண்பால் பிள்ளைத்தமிழாக இருப்பின் சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்று அமையும்,பெண்பால் பிள்ளைத்தமிழ் எனின் கழங்காடல் அல்லது நீராடல் அம்மானை ஊசல் என்று அமையும். காப்பு, தால், செங்கீரை, சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்ற முதல் ஏழும் பொதுவானவை. சில நூல்களில் பாவையாடல், பந்தாடல் மற்றும் சிற்றில் இழைத்தல், சிறு சோறாக்கல், குழமகன், காமவேள் நோன்பு முதலியனவும் பெண்பாலுக்குரியவை.

மூன்று முதல் இருபத்தொரு மாதங்கள் வரை ஒன்றித்த மாதமாகிய பத்து மாதங்களில் பத்துப் பருவங்களைப் பாடுவர். இறுதி மூன்று பருவங்களை 3, 5. 7 ஆம் ஆண்டுகளிலும் பாடுவர். அருகி 12, 16 ஆண்டுகள் வரையிலும் பாடலாம். பெண்ணுக்குப் பூப்புப் பருவம் எல்லை.

நூறு பாடல்களில் பிள்ளைத்தமிழ் அமையும். தேவருக்கு நூறு, அரசருக்குத் தொண்ணூறு, அந்தணருக்கு எண்பது, வணிகருக்கு எழுபது, வேளாளருக்கு அறுபது என்று ஓர் அளவு உண்டு. ஆனால் இவ்வரையறையைப் பின்பற்றிப் பாடல்கள் பாடப் படுவதில்லை.[1]

சிறப்பு : கமலாம்பிகை பிள்ளைத்தமிழில் விருத்தங்களே மிகுதி. இஃது அம்பிகையின் பெயரில் அமைந்த பெண்பால் பிள்ளைத்தமிழ், தெய்வத்தைப் பராவுதல் என்ற வகையைச் சார்ந்தது. பத்துப் பகுப்புகளில் நூறு பாடல்கள் அமைந்துள்ளன.

காப்புப் பருவம் : விநாயகப் பெருமான், திருமால் முதலிய கடவுளர் கமலாம்பிகையைக் காக்கவெனத் தாதியர் வேண்டிக் கொள்வதாக அமைந்துள்ளது.

செங்கீரைப் பருவம் : இனிய சொற்களைப் பேசும் வண்ணம் வேண்டிக் கொள்ளும் பருவம்.

தாலப் பருவம்: தாயர் நாவசைத்துஉரைக்கும் தாலாட்டுதலைக் கேட்பிக்கும் பருவம்.

சப்பாணிப் பருவம் : குழந்தையைக் 'கைகொட்டி விளையாடுக' எனத் தாயர் வேண்டிக் கொள்ளுவது.

முத்தப் பருவம் : குழந்தையை (கமலாம்பிகையை) 'முத்தந் தருக' என வேண்டிக் கொள்வது.

வாரானைப் பருவம் : அம்மையைத் 'தளர்நடை நடந்து வருக' என வேண்டிக் கொள்வது.

அம்புலிப் பருவம் : அம்மை, 'அம்புலியைச் சாம, பேத, தான, தண்டங்களால் அருளியும், சினந்தும் விளையாட அழைப்பது' போல் கூறுவது.

அம்மானைப் பருவம் : மகளிருடனிருந்து 'அம்மானையாட வருக' என அம்மையைத் தாயர் வேண்டுவது.

நீராடற் பருவம் : பிள்ளைப் பருவத்து அம்மையை நீராடும்படித் தாயர் வேண்டிக் கொள்வது.

பொன்னூசற் பருவம் : சத்தியை அனைவரும் 'பொன்னூசல் ஆடியருள்' என்று வேண்டுவது.

இவ்வாறு ஒவ்வொரு பகுப்புக்கும் பத்துப் பாடலாக, நூறு பாடல்கள் இந்நூலில் அமைந்துள்ளன.

ஆசிரியர் : இந்நூலாசிரியர் பெயர் நன்கு தெரியவில்லை. இதனை இயற்றியவர் "திருக்கைலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்து அடியார்களுள் ஒருவர் என்பதும், திருவாரூர்ப் புராண ஆசிரியர் என்பதும், யாவரும் அறிந்ததே. இவர்கள் இராசாங்கக் கட்டளை விசாரணையில் இருந்திருக்கக் கூடும். அப்போது நித்ய சேவையின் பயனாக இந்நூல்களை இயற்றியிருக்கக் கூடும்'' என்கிறார் திரு. ச. தண்டபாணி தேசிகர்.[2]

அம்மையின் சிறப்பு:

இப்பகுதி, அம்மையின் திருப்பெயர்கள், அழகு, அருள், ஆற்றல் என்று நான்காகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

திருப்பெயர்கள்

1 அதிரூபவல்லி
2 அயிராணி
3 அல்லியங்கோதை
4 ஆதி பரை உமை
5 ஆரியை
6 ஆரூர்ப் பராசக்தி
7 ஆரூர் மகிழ் பரை
8 ஆரூர் முதல்வி
9 இடங்கொண்டவல்லி
10 இடப வாகனத்தம்மை
11 ஈசுவரி
12 ஐமுகத்து இறையிடத்தமர்ந்த சக்தி
13 கமலாபுரித்தலைவி
14 கமலை உமை
15 கமலை நகர் புகுந்த பரை
16 கமலைப் பராசக்தி
17 கமலையின் இறைவி
18 கமலையின் செல்வி
19 கமலை வளர் பரை
20 கவுரி
21 கவுரி பராசக்தி
22 கவுரிமாதா
23 கன்னி
24 குடிலைவாழ் சாந்தி
25 கொற்றமாது
26 கொற்றவை
27 கோமளை
28 சதுவாணி
29 சத்திமாது
30 சாமளை
31 சிவகாமி
32 செல்வி
33 சொல்லம்பிகை
34 ஞானத்தவிசிருக்கும் வாழ்வு
35 தத்துவம் கடந்த சக்தி
36 துகிர்க்கொடி
37 தையல்
38 நாதாந்தவல்லி
39 நான்முகி
40 நீலகண்டி
41 பங்கயக்கண்ணி
42 பரமகல்யாணி
43 பராசக்தி
44 பரை
45 பான்முகி
46 பிரமாணி
47 பூங்கோதை
48 பூரணி
49 மலர்ச்சரணி
50 மனோன்மணி
51 மாதேவி
52 மாலினி
53 யாமளை
54 வாக்கி
55 வேதவிதி
56 வைணவி

அழகு :-

கமலாம்பிகை யம்மை அறக்கருணை வாய்ந்தவள். அதனால் அவளிடம் அழகும், அருளும் என்றும் குடிகொண்டு இருக்கும். சக்தி எனின் ஆற்றல். இறைவனின் அருட்பண்பே சக்தி. எங்கு ஆற்றலும், அருளும் உள்ளதோ அங்கு அழகும் நிலைத்திருக்கும். சக்தியற்றவர் அழகற்றவர். ஆகவே எல்லாம்வல்ல பரம்பொருளாகிய சக்தியே அழகு. எங்கு உண்மையும், நன்மையும் உளதோ அங்கு அழகும் உண்டு. எனவே உண்மை, நன்மை, அழகு மூன்றும் பிரிவற இயைந்து நிற்கும் இவற்றையே நாம் சத்தியம், சிவம், சுந்தரம் என்கிறோம். சிவம் வேறு, சக்தி வேறு அல்ல. எனவே அம்மைக்கும் இப்பெரும் பண்புகள் பொருந்தும். இப்பண்புகளையே இந்நூலில் கண்டு இன்புறலாம்.

"மின்பூத்த சிற்றிடைக்கருணாகரம் பெருகுவிழியுடையவள்"
அம்மை, "கமலைவளர் இழைமணிக் கொடியுமை"
"குயிலைப் பழிதரு கோமள மென்மொழி" கொட்டுக சப்பாணி[3]

என்றும்

"விரிகதிர் இதழொடு மிளிர் நகையெதிர் பொருவாக்கி"[4]

என்றும். 'ஆரூர் அம்மயில், மயிற்பேடு, பவளாசலத்தினிடம் பொருந்தும் பச்சைக்கொடி நின் முகங்கண்டு மதிநாண, புன்முறுவல்கண்டு, வெண்டரளம் கடல்புக, விழிக்கு நிகராகாமல் குவளை அனங்களை அடைய, உன் இனிய மொழிக்கு ஒவ்வாது யாழ், என்றும், 'சகத்தின் எவர்க்கும் எழில் மிக்காய்'! கல்லைக் குழைத்தார் உள்ளம் குழைத்த காரணியே! இறைவர் கண்டே மகிழும் பரையே! இமவானின் செல்வப் பச்சைக் கொடியே! தடம் பூங்கோயில் வாழ்வே! நன்னுதலார் வாழ்த்தக் களிக்கும் மானே! ஓவாக் கற்பகமே! அடியார்க்கு ஒளியாய், அல்லார்க்கு இருளாய் அமையும் தனிமுதலே! தெய்வத் திருவாரூர் உறைவாழ்வே! பெருகுஒளியே! பச்சைப்பசுங்கிளியே! ஆயும் மறையவன் தோயாத அரும் அன்னப்பேட்டரசே!' என்றும் பல்வேறு சிவராசதானியாங் கமலாபுரித் தலைவியை வருணனை செய்கிறார் ஆசிரியர்.

அருள் :

உலக உயிர்களுக்கெல்லாம் தாயும், தந்தையுமாக விளங்கி, அருள் நலங்கள் புரிந்து காத்து வருபவள் கமலாம்பிகை. "அருளது சத்தியாகும் அரன் தனக்கு; அருளையின்றித் தெருள்சிவம் இல்லை. அந்தச் சிவம் அன்றிச் சத்தி இல்லை"[5] என்பர். இவ்வாறு தியாகேசப் பெருமானும், கமலாம்பிகையும் சேர்ந்து திருவாரூரைச் சிறப்படையச் செய்கின்றனர். இவர்கள் இங்கு இருந்து அருள்பாலிப்பதனால்தான் ஆரூரில் பிறக்க முக்தி என்றனர். எல்லாரும் ஆரூரில் பிறக்க இயலாது. அதனால் ஒரு மண்டலமாகிலும் அங்கு தங்கியிருக்க வேண்டும் என்பது கருத்து. பத்து மாத காலம் பூமகள் இதயக் கமலமான இவ்வூரில் வாழ்ந்து கர்ப்பவாசம் பெறுவதைச் சிலர் கடனாகக் கொள்வர். "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"[6] என்பதற்கிணங்க அன்னையாய், பின்னையும் கன்னியாய்ப் பேசப்படும் அம்மை கமலாம்பிகை.

"அம்போருகத்தின் உறையணங்கு"[7] என்பதால், அனைவருடைய உள்ளக் கமலத்தில் வீற்றிருக்கின்ற கமலாம்பிகை எனப்படுகிறாள். "அற்றூர் தமக்கும் உற்றார் தமக்கும் அருளும் பொற்பாவை"[8] அவள். அறம் வளர்த்து அளித்திடும் கவுரி. கொண்ட பிழைக்கு அருள் வைத்த பராபரை அவள். 'வீடே நிலையாய் நினைபவர் நேசம் மேவப்புரியுமை' அவள்.

"தவராச யோகியர் திருவாணி
பூமாதுசானவி யமுனை பொன்னி
சயிலமன் விஞ்ஞையர்கள் மருத்துவர்
நவக்கோள் சாத்தனொடு துர்க்கைகாளி
நவகோடி மாசத்தி யெண்டிசைக்
காவலர் நான்முகன் வசுக்கள் எண்மர்
நாரணன் வாசவன் எண்ணிலாப்
புங்கவர் நாகர்கள் பூதசேனை

பவராசி கெடவருள் சைவாகமத்
தலைவர் பழமறை முனிக்குழாங்கள்
பகராறு சமயத்தர் சதகோடி
தவராசர் அடிமிசை நெருங்கிஏத்தும்
சிவராச தானியாம் கமலாபுரித்
தலைவி செங்கீரையாடி யருளே''[9]

என்ற பாடல் மூலம் அம்பிகையின் அருள்வேண்டிப் பலரும் போற்றித்துதிப்பதை உணரலாம்.

ஆற்றல் :- சிவம் என்றால் அமைதி (Static); சக்தி என்றால் ஆற்றல் (Dynamic). சக்தியும் சிவமும் ஆயதன்மை இவ்வுலகம் எல்லாம் என்பர் அருள்நந்திசிவம். 'கதிரும், அதன் ஒளியும் போல', 'மரமும், அதன் வயிரமும் போல', 'பொன்னும் அதன் நிறமும் போல' 'சிவமும், சக்தியும் பிரிவற இயைந்து நிற்கும்.

''விதியரி படையளி விமலனும் அழியெனும் வாக்கி''........

''விறல் அரியாசனத்தில் அரசு வீற்றிருக்கும் தாய்''.........

''அள்ளல் மலத்தை யழிப்பாய்! தள்ளிப் பவத்தைக் களைந்தாய்''........ என்ற பாடல் வரிகளும்[10]

''பைந்தளிர்க் காளிகை வெண்கவிகை
தாங்கவே பதுமைவெண் கவரிவீசப்
படிமாது சூழ்விசிறி சுற்றிடத்
துர்க்கைவாள் கணிச்சியுடன் அடைப்பை தாங்கச்
சுந்தரத் துருப்பசியை முதலினோர்
விரைமலர் தூவிடக் கருடர் கீதம்
துதிப்பவே மாலயன் புரந்தரன்
முனிவரர் தூயமறை சொல்ல மாந்தர்
புந்தியின் மகிழ்ந்தோத அரசிருந்து....''

என்ற பாடலும் அம்மையின் ஆற்றலுக்குச் சான்று.

கைலை நாகேச்சரம் வெண்காடு தில்லைநகர்
கந்தபுரி காஞ்சிகாழி
காருய லையாறு வேதிகுடி வலிவலம்
கற்குடி நாகை தெங்கூர்
மயிலையெழு மாகாளம் முதுகுன்று நெல்வேலி
வாஞ்சியம் குடந்தைவாய்மூர்

மதுரை வீரட்டம்எட்டு அம்பர்மா யூரநகர்
வண்டுதுறை சேதுநல்லூர்
இயமனூர் சாய்க்காடு கஞ்சனூர் நல்லாறு
இருக்கைநகர் துருத்திவிழி

யிடைமருது நாரையூர் விரிஞ்சனூர் தஞ்சைநகர்
ஏடகம் மறைசைகாசி
செயவந்தி யூர்கமலை யுறைபராசத்தியே
செங்கீரை யாடியருளே!" 12

என்ற இப்பாடல் கமலை பராசக்தியே சப்தவிடங்கத் தலங்களிலும், முக்தித் தலங்களிலும், ஐம்பூதத் தலங்களிலும், அட்ட வீரட்டத் தலங்களிலும் மற்றும் பிற தலங்களிலும் வீற்றிருக்கின்றாள். அங்கெல்லாம் சென்று அம்மையின் அருள் பெற இயலாவிடினும், ஆரூரில் வந்து அவளைக் கண் குளிரக் கண்டு வணங்கி அருள் பெறலாம் என்று கூறுகின்றது.

தலச் சிறப்பு:

'பொன்னார் கமலை, சமற்காரபுரம், பூஇதயப் பூங்கோயில், யாகபுரம், கந்தபுரி, வர நகரம், தேவாசிரியம், மூலாதார நகரம், கலியே புகா நகரம், தக்கேசுரம், பரையூர், ஆடகவூர், முசுகுந்தபுரம், தேவர், சிதலை வடிவெடுத்த வன்மீக புரம்' என்றெல்லாம் அழைக்கப்படுவது ஆரூர் 13 ஆர் + ஊர் — ஆர் - மண்மகள்(அல்லது)பூதேவி பூசித்ததால் ஆரூர் எனப்பட்டது. இலக்குமி தங்கித் தவம் செய்த இடம் கமலை. பூமிதேவியின் இதய கமலமாய்ச் சிவபெருமானுக்கு ஆலயம் எனவும் பொருள்படும் சிவபக்தனான முசுகுந்தன் இந்திரனால் அளிக்கப்பட்ட வீதிவிடங்கரை ஆரூரில் எழுந்தருளச் செய்து வழிபட்டதால் இவ்வூர் முசுகுந்தபுரம் என்று அழைக்கப்பட்டது. இத்திருக்கோவில், யோக நெறிக்குப்பெரிதும் துணை புரிவதால் இது மூலாதாரம் என்று அழைக்கப்பட்டுப் பிறகு ஊருக்கும் பெயராயிற்று. இக்கோயில் அப்புத்தலம் அல்லது ஆடகேஸ்வரம் எனப்படும். இதுவே ஊருக்கும் ஆயிற்று.வன்மீக நாதர் எனவும் புற்றிடம் கொண்டவர் எனவும் மூலட்டானர் என்றும் அழைக்கப்படுகிறார் தியாகேசர். இப்போது ஆயிரக் கால் மண்டபடாக உள்ளதுதான் தேவாசிரியம் எனப்படுகிறது. இங்கு அடியார்கள் தங்கி இருப்பர். இவர்களை வணங்காமல் சென்று விட்ட சுந்தரரையும், இவர் தோழர் இறைவனையும் தள்ளி வைத்தார் விறல் மிண்டர். பிறகு சுந்தரர் திருத்தொண்டத் தொகைபாடி அடியாரை வணங்கவே சீற்றம் தணிந்தார் விறல் மிண்டர். இவ்வாறு கோவிலின் திருப்பெயர்கள் பல ஊருக்கும் ஆகி வந்துள்ளன. சமத்காரன் என்ற அரசன் 400 ஆண்டுகள் தவம் செய்து, தியாகரின் அருள்பெற்ற தலமாகையால் சமத்காரபுரம் என்றாயிற்று. திருவாரூர் கோவிலினுள் பல கோவில்கள் அதாவது பல சன்னிதிகள் உள. அவற்றிற்குள்ள பெயர்களுள் ஒன்று ஆடகேசம். இது நீர்த்தலம். வன்மீகர் நிலத்தலம். அருணேசர் நெருப்புத்தலம், கமலாம்பாள் பிராணாயாமக் குறிப்புக் காட்டியதால் வாயுத்தலம். விநாயகர் – ஆகாசத்தலம் என்று பஞ்ச பூதத் தொடர்பு இக்கோவிலுக்குண்டு. தசரதன் தன் ஆற்றலால் சனியை நட்பாக்கிக் கொண்டதால், அவனுக்கு மட்டுமன்றி அந்த ஊரிலேயே கலிபுகவில்லை. அதனால் அது 'கலியே புகா நகரமா' யிற்று. கேட்பவர்களுக்கு எல்லாம் வரம் அளித்ததால் அவ்வூர் 'வர நகரம்' ஆயிற்று. பராசக்தியே தவக்கோலத்தில் இறைவனை வழிபட்டதால் 'பரையூர்' ஆயிற்று. சோமாஸ்கந்த தத்துவம் விளங்கும் ஊராகையால் 'கந்தபுரம்' ஆயிற்று. தேவேந்திரன் அமைத்த புற்றில் தானே தோன்றியவர் ஆகையால் 'புற்றிடம் கொண்டார்' என அழைக்கப்பட்டு 'வன்மீகபுரம்' என்றாயிற்று. தேவர்கள் யாகம் செய்ததால் 'யாகபுரம்' என்றாயிற்று. இவ்வாறு இவ்வூர் பல சிறப்புகளைக் கொண்டது. 14

வரலாறுகள்:

இந்நூல் மூலம் சிவபுராணச் செய்திகளையும், அம்மையின் சிறப்பு உணர்த்தும் செய்திகளையும் அறியலாம். ஏறக்குறைய 40 வரலாற்றுச் செய்திகளைத் தன்னுள் அடக்கியுள்ளது இந்நூல். **சீமந்தனிசகே பலமளித்த செல்வி** [15] என்று அம்மை பாராட்டப் படுகிறாள். சீமந்தனி என்பவள் வடநாட்டு அரசிளங்குமரி. இவள் தனது 14 ஆவது வயதில் மங்கலமிழப்பள் என நிமித்திகன் கூறக்கேட்டு இதனைப் போக்க இவ்வூர் வந்து இங்குள்ள அம்மையப்பனை வணங்கிச் சோமவார நோன்பு எடுத்து, நிடத நாட்டு மன்னனை மணந்து யமுனையில் கணவனைப் பறிகொடுத்து,பிறகு அம்மையின் அருளால் மீண்டும் அவனையே அடைந்தாள். [16]

மற்றும்,

அற்றிலிட்டுக் குளத்தில் பெற்றது
இராவணன் செருக்கடக்கியது
எலியரசானது
எலும்பு பெண்ணானது
கங்கை செருக்கடங்கியது
கருடா சவுக்கியமா என்றது
கல்மிதந்தது
செங்கல் பொன்னானது
சோமாஸ்கந்த செய்தி
ஞானப்பால உண்டது
தடுத்தாட் கொண்டது
தசரதன் ஊமை நீங்கியது
திரிபுரஅழிவு
திருமால் உலகளந்தது
திருமால் பூசித்தது
நமிநந்தி வரலாறு
நல்லூர்ப் பெருமணம்
பதஞ்சலிக்கு அருளியது
பரி நரியானது
பொன்னியின் வரலாறு
பாலனை முதலையிடமிருந்து மீட்டது
மனுவின் நீதி
மாலுக்கு அருளியது
முசுகுந்தன் வரலாறு
மேருவில்லானது
மேனை வரலாறு
யானைத் தோல் உரித்தது
வேள்வியை அழித்த வீரபத்திரன்
வெள்ளானை வரலாறு
விறகு விற்ற வரலாறு
வைகை வரலாறு

என்று பல வரலாற்றுக் கருத்துக்களை உய்த்துணர வைக்கின்றார் ஆசிரியர்

மேலும், இந்நூலில் இயற்கை வருணனைகள், அணிநலன்கள், கற்பனைகள் சொல்பொருள் சிறப்புகள் என்று நயமான பல கருத்துக்களும் புதைந்துள. விரிவஞ்சி அவற்றை இங்குக் கூறவில்லை. சமயக் கருத்துகள் மட்டும் ஓரளவு இங்கு ஆராயப் பட்டுள்ளன. சித்தாந்தக் கருத்துக்களும் இதில் மிகுதியாக உள்ளன. இவையும் விரி வஞ்சி நீக்கப்பட்டன. இவை குறித்து மேலும் ஆய்வு செய்ய வழியுண்டு இந்நூலில்.

சான்று எண் விளக்கம்:

1 செயராமன், ந.வீ., சிற்றிலக்கியச் செல்வம், ப. 141 மணிவாசகர் நூலகம்சிதம்பரம் 1979.

2 தண்டபாணி தேசிகர், ச. (உரை) கமலாம்பிகை பிரபந்தங்கள், ப. v. 1947. பதிப்பு மதராஸ் லாஜர்னல் பிராஞ்சு பிரஸ்.

3 ஷி — ஷி, கமலாம்பிகை பிள்ளைத் தமிழ் கா. பா. 1 ச. 1, 9.
4 ஷி — ஷி பா. கா. பா. 3.
5 அருள் நந்தி சிவம் — சிவஞானசித்தி, தருமையாதீனம் 1981.
6 ,, — ,,
7 தண்டபாணி தேசிகர், ச. (உரை) — கமலாம்பிகை பிள்ளைத் தமிழ். பா. தால 1.
8 ,, — ,, பா. 2.8.
9 ,, — ,, பா. 2.4.
10 ,, — ,, பா. 1-3, 3-1, 3-10.
11 ,, — ,, பா 10-4.
12 ,, — ,, பா. 2-5.
13 ,, — ,, பா வாரானை-1.
14 அறிவொளி, அ. — திருவாரூர் பக்கம் 18-2, மணிவாசகர் நூலகம் சிதம்பரம் 1983.
15 தண்டபாணிதேசிகர். ச. (உரை) — கமலாம்பிகை பிள்ளைத் தமிழ். பா. 4.
16 சிங்காரவேலு முதலியார் — அபிதான சிந்தாமணி. ப. 675, Asian Educational Services New Delhi, 1982.

பயன்பட்ட நூல்கள்.

1) கமலாம்பிகை பிரபந்தங்கள் 2) சிற்றிலக்கியச் செல்வம் 3) சிவஞானசித்தியார்
4) திருவாரூர் 5) தெய்வத் திருவுருவங்கள்.

'தனிப்பாடல் தாலாட்டும் திருவாரூர்'

பேராசிரியர். டாக்டர். தி. இராசகோபாலன், எம். ஏ.(வரலாறு)எம்.ஏ.,பிஎச். டி.

முன்னைப் பழமைக்குப் பழமை யாயும், பின்னைப் புதுமைக்குப் புதுமை யாயும் பொலிந்து நிற்பது தேசம் புகழும் திருவாரூர். யுகங்களின் சந்திப்புக்கும், சகாப்தங்களின் தொடர்ச்சிக்கும், தலைமுறைகளின் வளர்ச்சிக்கும் இடையே இடைவிடாது தளர்ச்சியின்றி நிற்பது தெய்வம் புகழும் திருவாரூர். இவ்வுலகத்தில் மண் தோன்றும் போதே, திருவாரூர்ப் புற்றும் தோன்றியிருக்கிறது. இத்தலத்தின் பெருமையைப் பாடவந்த அப்பரடிகள், "ஒருவனாய் உலகத்தே நின்ற நாளோ? நிலந்தரத்து நீண்டுருவம் ஆன நாளோ? திருவாரூர் கோயிலாக் கொண்ட நாள்? என அதன் பழமையை எண்ணி வியந்து நிற்கிறார். ஒருகாலத்தில் திருவாரூர்க் கரும்பாலைகள் கக்கிய புகை மண்டலம், மேகமண்டலத்தையே மறைத்த கதையைத் திருஞானசம்பந்தர் "ஆலையின் வெம்புகை போய் முகில் தோயும் ஆரூர்" எனப் பாடுவார். செல்வத் தியாகேசன் வான்பழித்துத் திருவாரூர் மண்புகுந்த வகையை அப்பரடிகள், "அமரர் நாடாளாதே ஆரூராண்ட அயிராவணமே" என்று பேசுவார். தேவருலகத்திலிருந்து திருவாரூர்ப் புகுந்த தியாகேசன், திருவாரூரை விட்டு வேறூருக்குப் போகலாம் அல்லவா? ஆனால், திருவாரூரில் குடிகொண்ட தியாகேசன் ஆரூரைவிட்டு வேறூருக்குப் புகாமையைத் திருநாவுக்கரசர், "தேங் காவி நாறுந் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயில் உள்மகிழ்ந்து போகாதிருந் தாரே" என்பதன் மூலம் புலப்படுத்து கின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திரு நாவலூரில் அவதரித்திருந்தாலும் புகுந்த வீடாகிய திருவாரூரையே பிறந்த வீடாக்கிக் கொண்டதிலிருந்து, ஆரூரின் அருமையும் பெருமையும் தெற்றெனத் தெளிவாகின்றன. மணிவாசகப் பெருந் தகை ஆரூரைப் புகழ்ந்த நாவால் வேறூரைப் புகழமாட்டேன் என்பதற்கு வாக்குமூலமாக, "ஒங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன் நின் பூங்கழல்கள் அவையல்லாது எவை யாதும் புகழேனே" என்னும் திருவாசகம் அமைந்து கிடைக்கின்றது. இவ்வாறாக, சைவசமயக் குரவர்கள் நால்வர் நாவிலும் நனிநடம் புரியும் திருத்தலமாகத் திருவாரூர் விளங்குகின்றது.

தேவர்க்கும் அரிய செயலைச் செய்த சேக்கிழார் சுவாமிகள் திருமகள் வீற் றிருக்கும் தாமரைதான் திருவாரூர் (மலர் மகட்கு வண்தாமரை போல் மலர்ந்தது அலகில்சீர்த் திருவாரூர்) என்றருளினார். உலகவின்பங்களின் கொள்கலமாகத் திரு வாரூர் திகழ்ந்ததைச் சேக்கிழார் பெரு மான். "இன்பத்துறையுள் விரவுவார் சூழ்ந்த பல்வேறிடத்தத் தொல்நகர்" என் பதன் வழியாகத்தெரிவிக்கின்றார். மேலும் தண்டியடிகளுடைய பெருமையைச் சொல்லும்போது, 'தண்டியடிகள் திரு வாரூர்ப் பிறக்கும் பெருமைத் தவமுடை யார்' என்று கூறுவர். திருவாரூரில் பிறந்த காரணத்தாலேயே தண்டியடிகள் பெருமையும் தவமும் உடையவராகத் திகழ்கின்றார் எனச் சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளுவதால் திருவாரூரின் பெருமை சேக்கிழார் சுவாமிகளின் நெஞ்சத்தில் பீடுநடை போடுவதை நம்மால் உணர முடிகிறது. திருவாரூர் மூர்த்தியின் கீர்த்தி

யையும் தலத்தில் நலத்தினையும் தீர்த்தத்தின் சீர்த்தியையும் பாடாத புலவரில்லை. இவற்றுக்கு மேலாகத் திருவாரூர்த் தேரழகும், ஊரழகைப் பேசுகின்றது சோழர் ஆட்சியில் திருவாரூர்த் தேர் ஓரடி ஊர்ந்தால், ஓராயிரம் பொன் வாரி இறைக்கப்படுமாம். இதனைக் குமரக்குருபரர் 'தேரூர்ந்த செல்வத் தியாகனே' எனக் குறிப்பிடுவார்.

திருவருளையும் குருவருளையும் ஒருசேரத் தந்தருளும் திருத்தலம் திருவாரூர். திருவருளைத் தந்தமைக்கு நாயன்மார்களுடைய வரலாறுகளே, சத்தியப் பிரமாணமாய் நிற்கின்றன. குருவருளைத் தந்தமைக்குத் தருமையாதீனமே நேத்திர சாட்சியாய் நிற்கின்றது. தருமையாதீனம் கயிலாயத்தின் வம்சம். கயிலை எனப்படும் தருமையைத் தந்ததே கமலை எனப்படும் திருவாரூரின் குருவருளே! திருத்தருமையாதீனத்தின் முதற்குரவராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தியாகேசனை வணங்கி, சித்தீச்சரமாகிய தட்சிணாமூர்த்தி சந்நிதியில் குருவருளைப் பெற்று 'நிற்க' வேண்டிய இடத்தில் நின்ற வரலாறு ஊரறியும்; உலகறியும். சைவத்தையும் தமிழையும் ஒருங்கே போற்றிவரும் திருத்தருமையாதீனம் வேரூன்றுவதற்கு வித்தாக அமைந்தது திருவாரூர் தந்த குருவருளே!

வரலாற்றாசிரியர்களாலும் சமயக்குரவர்களாலும் சீராட்டப்பெற்ற திருவாரூர், தனிப்பாடல்களாலும் தாலாட்டப்படுவது தனிரகமாகும். சைவசமயக் குரவர்கள் திருவாரூரைப் பாடுகிறார்கள் என்றால், அது அவர்கள் சார்ந்திருக்கும் சமயப் பற்றின் காரணமாகவென்று சிலர் வாதிடலாம். ஆனால், தனிப்பாடல் பாடிய புலவர்கள் மண்வாசனைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு நின்றவர்கள். அவர்கள் பாராட்டுவதென்பது, கட்சிகளுக்கு அப்பாற்பட்டு நிற்கும் நீதிபதிகளுடைய தீர்ப்புரையாகும். நையாண்டிப் புலவர் என்ற பெரியார் திருவாரூரின் பெருமையை மிகவும் நயமாகப் பாடுகிறார். புற்றிடங்கொண்ட வன்மீகநாதனைக் கொடிக்கம்பத்தின் கீழ்நின்று போற்றுபவர்களுக்குச் சொர்க்கம் பத்தடிக்கு அப்பால்;மோட்சம் பத்தடிக்குள்ளாகவே என்பதை நையாண்டிப் புலவர், "ஆரூர்நாதன் கோயில் கொற்கம்பத் தடியில்நின்று வன்மீகத்தானை யுன்னிப் போற்றினோர்க்குச் சொர்க்கம் பத்தடிக்கால், மோட்சம் பத்தடியாகத் தோற்றுந்தானே' எனப் பாடுகிறார். பிறக்க முக்திதரும் சொர்க்கத்தையும் மோட்சத்தையும் தனக்கு உள்ளேயே தாங்கிநிற்கும் விதத்தினை வெளிப்படுத்தும் திறன் வியந்து பாராட்டற்குரியது.

கவிராஜமேகம் – காளமேகம், திருவாரூர்த்தியாகேசனின் பெருமையைப் பாடும் பொழுது, கடவுளர்களுக்கே புத்தி சொல்லுகிறார். 'ஏ! நான்முகனே! திருமாலே! அன்னப்பறவையாகவும் பன்றியாகவும் வடிவெடுத்துப் போனீர்களே! உங்களால் எம்பெருமான் திருமுடியையும் திருவடியையும் பார்க்க முடிந்ததா? உங்களுக்குக் கொஞ்சம் சாதுர்யம் இருந்திருந்தால் எம்பெருமானைக் கண்டிருப்பீர்கள். திருவாரூரில் பரவைநாச்சியார் வீட்டு வாசற்படிக் கல்லாய் கிடந்திருந்தால், சுந்தரமூர்த்தி நாயனருக்காகத் தூது சொல்லவரும் சுந்தரனின் அடிமுடியைப் பார்த்திருக்கலாம்; தவறிவிட்டீர்களே', என்பதைக் காளமேகப் புலவர்,

"ஆனார் இலையே அயனும் திருமாலும்
காணார் அடிமுன் காண்பதற்கு மேனாள்
இரவுதிரு வாரூரில் எந்தைபிரான் சென்ற
பரவைதிரு வாயிற் படி!"

என்று பாடுகிறார். கவிமேகமாகிய காளமேகம் தியாகேசனின் எளிவந்த தன்மையைச் சொல்லும்போதே, திருவாரூரின் பெருமையையும் பாடுந்திறம் நினைந்து நினைந்து இன்புறத்தக்கது. தனிப்பாடற்

திரட்டில் காணப்படும் இராமசாமிக் கவிராயர் என்பாரின் பாடலொன்றும், தியாகேசனின் பெருமைக்குக் கட்டியம் கூறுகின்றது. இராமசாமிக் கவிராயர் தியாகேசனின் பெரும்புகழைப் போற்றிப் புகழ்வதோடு, வேறுவேறு தெய்வங்களையும் கிண்டலும் கேலியுக் செய்கிறார். "பலவகையான வாகனங்களில் ஏறித்திரியும் வேறுவேறு தெய்வங்களே! நீங்கள் ஏன் சும்மா அலட்டிக் கொள்கிறீர்கள்! குருமூர்த்தமாய் வந்து வினையொழிக்கும் திருவாரூர்த் தியாகேசனைப்போல் உங்களால் நற்கதியைக் காட்டமுடியுமா? நீங்கள் ஏன் வெறுமனே திரிகிறீர்கள்; நீங்கள் எல்லாம் சும்மா திரிகின்ற திரிமூர்த்திகளே தவிர, ஆரூரானைப்போல் திருமூர்த்தி ஆகமுடியுமா?'' என்று கேட்பதை,

''குருமூர்த்த மாய்வந்து வினையொழித்து
 முத்திதனைக் கொடுக்கத் தியாகர்
ஒருமூர்த்தி யல்லாமல் மற்றுமொரு
 மூர்த்திகளு முண்டோ? நெஞ்சமே!
திரிமூர்த்தி யென்பார்கள்; அவரவர் வா
 கனமேறிச் சேணிற் சும்மா
திரிமூர்த்தி யல்லாமல், ஒருமூர்த்தி
 யுங்கதியிற் சேர்த்தி டாரே''

எனும் பாடல்மூலம் அறியலாம். கவிராயர் தியாகேசனின் பேராற்றலைப் பாடினாலும் அதில் உள்ளீடாகத் திருவாரூரின் சிறப்பும் ஊடாடுவதை ஊன்றிப் பார்த்தால், உணரலாம்.

காளமேகப் புலவரின் மற்றொரு பாடல், தனிச்சுவை, தனியின்பம், தனியனுபவத்தைத் தரவல்லது. ஆரூரான் மேல் வஞ்சப் புகழ்ச்சியாக அவர் பாடும் பாடலில் விஞ்சிய புகழ்ச்சியே ஓங்கி நிற்கின்றது, "தியாகேசனே! தரையில் பாதம் பாவாது ஓயாது நீ ஆடிக்கொண்டிருப்பதன் இரகசியம் எனக்குப் புரிந்து விட்டது; மற்றவர்கள் அதனை அஜபா நடனம் என்று பார்த்து ரசிக்கிறார்கள்; பாடிக்களிக்கிறார்கள். எனக்கல்லவா அதன் உண்மை புரியும்! சுந்தரமூர்த்தி நாயனாருக்காக நீ ஒருமுறையா தூது போனாய்? இருமுறையல்லவா தூது போனாய்! இப்படி நீ ஓயாமல் தூது போய்க் கொண்டிருந்தால், உன்னால் எப்படி நிற்கமுடியும்? நீ ஆடிக்கொண்டு தானிருக்கவேண்டும்'' எனக் கேட்கிறார். அச்செய்தியைச் சுமந்த காளமேகத்தின் தனிப்பாடல்,

''திருந்தாடு அரவணையும்
 தென்கமலை ஈசர்
இருந்தாடா தென்செய்
 திடுவார் பொருந்த
ஒருகாலே அல்லவே
 ஒண்டொடிக்கா வன்று
இருகாலும் சந்துபோ னால்''
 என்பதாகும்.

இதே செய்தியை மற்றொரு புலவர் தனிப்பாடலில் பாடுகிறார். அவர் பெயர் தெரியாத புலவர், புலவரின் பெயர்தான் தெரியவில்லையே தவிர, பாடலைப் படித்தால் அவரது முகம் தெரியும்; அகம் தெரியும். அவரும் வஞ்சப் புகழ்ச்சியாகத் தான் பாடுகிறார். ஆனால், அதில் அடங்கியிருப்பது கொஞ்சப் புகழ்ச்சியல்ல. அப்பாடல் தரும் செய்தி; "தமிழ் கற்றதால் செருக்கேறிய சுந்தரமூர்த்தியே! சொல் நலம் கடந்த திருவாரூர்த் தியாகேசனின் பெருமை உனக்குத் தெரியுமா? பெண் பித்தேறிய நீ, சர்வ சாதாரணமாகப் பெருமானைப் பரவை நாச்சியாரிடம் தூது அனுப்பிவிட்டாயே! அப்பப்பா! இந்த உலகத்தில் எதற்கு இரக்கப்பட்டாலும் படலாம்; ஆனால் இந்தத் தமிழ்ப்பற்றுக்கு மட்டும் தமிழ்ப்புலமைக்கு மட்டும் இரக்கப்படக்கூடாதப்பா! அதனால் அல்லவா எம்பெருமான் மண்தோய நடந்தான்'' என்பதாகும்.

''தருக்காலும் மலர்தொழுதும் ஆரூரன்
 தமிழ்ப்புலமைத் தருக்கு தன்னால்
பெருக்காலும் இவரருமைப் பெம்மான்என்
 றெண்ணாமல் பெண்பித் தேறி

முருக்காலும் வெலற்கரிய விதழ்ப்பரவை
யிணங்குவகை மொழிந்து வாவென்
றிருக்காலும் நடத்தினான் ஒருக்காலும்
தமிழ்க்கிரங்கி யிருக்கொணாதே''

என்பது பெயர் தெரியாப் புலவன் பாடிய பாடலாகும். தனிப்பாடல்களுக்குள்ளே இதுவொரு தனிப்பாடலாகும்.

மேற்குறித்த செய்தியை எவ்வாறு பார்க்கிறார் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. மகாவித்துவானாயிற்றே! அவருடைய பார்வை மட்டும் சாதாரணமாகவா இருக்கும்! தியாகேசன் திருச்சந்நிதி முன்பு நந்தியம்பெருமான் வீற்றிருக்கிறார். நந்தியம் பெருமான் நின்ற கோலத்தை தற்குறிபேற்றமாகப் பாடுகிறார் மகாவித்துவான் "பெருமானே முன்பொருகால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய தூதுவனாக மண்தோய நடந்து சென்றாயே, அது போல் இனி செல்லக் கூடாது. அப்படிச் செல்வதென்றால், என்முதுகில் மேல் ஏறிக் கொண்டுதான் செல்ல வேண்டும்'' என்று சொல்வது போல் நந்தியம்பெருமான் நின்று கொண்டிருக்கிறாராம். மற்ற இடங்களில் இருந்த கோலத்தில் இருக்கும் நந்தியம்பெருமான் ஆரூரில் மட்டும் நின்ற கோலத்தில் இருப்பதன் மர்மத்தைப் பாட வந்த மகா வித்துவான் அவர்கள்,

'பிணைஅடியர் குறைக்கிரங்கிப்
பெருமான்நீ எழுந்தருளின்
துணையடிகள் கன்றமுனம் தூது
சென்றாற் போலடையா(து)
அணைகுதியென் வெரிநிவர்ந்தென் றருள்
நோக்கி நிற்பதுபோல்
இணையில்விடங் கப்பெருமான்
எதிர்நிற்கும் மால்விடையே'

என்றெழுதிப் போந்தார். ஆரூரான் பெருமையில் தான், ஆரூரின் பெருமையும் அடங்கியிருப்பதால் மகாவித்துவான் பாடலும் இடம்பெற வேண்டிய அவசியம் மேற்பட்டது.

தனிப்பாடல்கள் திருவாரூரைத் தமது ஏட்டுத் தொட்டிலிலிட்டு என்னதான் தாலாட்டினாலும், ஒருகுறை எல்லோருடைய உள்ளத்தையும் உறுத்தத்தான் செய்யும். என்ன குறை அது? பன்னிரண்டு ஆழ்வார்கள் இருக்கிறார்கள் அவர்களுக்குப் பின்னர் வந்த வைணவராதிகளும் இருக்கிறார்கள்; ஆனால் ஒருவகூடத் திருவாரூரைப் பாடவில்லையே! திருக்கண்ணமங்கையை-திருக்கண்ணபுரத்தைப் பாடியவர்கள் ஒருபாடலாவது திருவாரூரைப் பற்றிப் பாடவில்லையே என்ற ஏக்கம் எழுவது இயல்புதானே! 'அப்படிப் பாடியிருந்தால், திருவாரூரும் ஒருதிவ்விய தேசம் ஆகியிருக்குமே'என்று பலகால் ஏங்கியதுண்டு. இந்த ஏக்கம் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் எண்ணத்திலும் ஏற்பட்டிருக்கவேண்டும். அதனால், அவர் பெருமானையே திருமாலாகப் பாவித்துப் பாடுகிறார். திருவாரூர்ப் பதிகத்தில் அவர் 'மணியார் கண்டத்து எண்டோள் செவ்வண்ணப் பவளமாமலையே, அணியால் விளங்கும் திருவாரூர் ஆராவமுதே' என்று பாடுகிறார். ஆரூர்த் தியாகேசனை அவர் செவ்வண்ணப் பவள மாமலையே என்றும ஆராவமுதே என்றும் பாராட்டுகின்றார். பவளமலை என்ற சொல்லும் ஆராவமுது என்றசொல்லும் ஆழ்வார் பாசுரங்களில் பயின்று வரகூடிய சொற்கள் என்பதை வைணவத்தில் ஆழங்காற்பட்டவர்கள் அறிவார்கள். வள்ளலார், பெருமானையே திருமாலாகப் பார்ப்பதால், திருவாரூரும் திவ்விய தேசமாகிறது. வள்ளலார் பாடலால், ஆழ்வார்கள் பாடவில்லையே என்று ஆதங்கமும் அகன்றது.

சைவசமயக் குரவர்கள் திருவாரூரை பலபடப் பாராட்டுகிறார்கள். அதைப் போலவே தனிப்பாடல் புலவர்கள் திருவாரூரைத் தனித்தனியே தாலாட்டத் தவறவில்லை. தனிப்பாடல் புலவர்களும் நாமணக்கப் பாடிய பாடல்களால், நமது செவி மணக்கின்றது. எத்தனைப் புலவர்

கள் பாடினால் என்ன? எத்தனை வரலாற்றாசிரியர்கள் எழுதினால் என்ன? திருவாரூர்ப் பெருமையினையும் புகழையும் ஒட்டுமொத்தமாக எழுதிக் காட்டிவிடமுடியுமா என்ன! பக்திச்சுவை சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் சுவாமிகளே,

'திருவாரூர்ப் பிறந்தார்கள்
திருத்தொண்டு தெரிந்துணர
ஒருவாயால் சிறியேனால்
உரைக்கலாம் தகைமையதோ'

என்று பாடிவிட்ட பிறகு வேறு யாரால் உரைத்து முடிக்க முடியும்?

திருவாரூர் அருள்மிகு
தியாகராஜ சுவாமி திருக்கோயில்

130 ஆண்டுகளுக்குப் பிறகு ஆரம்பிக்கப்பட்ட **திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி** திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் இனிது நடைபெற எங்களுடன் இரவு பகலாகத் தோளோடு தோள் நின்று அரும்பாடுபட்ட நிர்வாக அதிகாரி உயர்திரு சு. ஸ்ரீதரன் அவர்களுக்கும், திருப்பணிக் குழுத்தலைவர் உயர்திரு, சு. தென்கோவன் அவர்களுக்கும், திருப்பணிக்குழு உறுப்பினர் அவர்களுக்கும் எங்களது இதயம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் திருப்பணி வேலைகள் நடக்க அனைத்து உத்திரவுகளும் வழங்கி எங்களுக்கு வழிகாட்டிய அறநிலையத்துறை அதிகாரிகள் அனைவருக்கும், பொறியியல் பிரிவினருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்திருக்கோயில் புதிய பொலிவுடன் திகழக் காரணமாயிருந்த ஸ்தபதிகள், கட்டிட வல்லுனர்கள், கட்டிடத் தொழிலாளர்கள் அனைவருக்கும், யாகசாலை சிறப்பாக அமைய ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் பணியாளர்கள் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இத்திருக்கோயில் திருப்பணியில் பங்குகொண்ட அனைவரும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டுவாழ எல்லாம்வல்ல கமல வசந்த தியாகேசப்பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

பணியாளர்கள்,

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்,

திருவாரூர்.

அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயில்

பண்டி, செம்மேடு (அஞ்சல்) கோவை மாவட்டம்

கொங்கு நாட்டின் மேற்கெல்லையில் இறைவன் சிவபெருமானின் திருவுருவமாக விளங்குவது தென்கைலாயமெனும் வெள்ளியங்கிரியாம். இறைவன் பஞ்சலிங்கமாக விளங்கும் இத்தலம் வெள்ளியங்கிரி, இரசதகிரி, வெள்ளிமலை, தட்சிணகயிலாயம், பூலோககயிலாயம் என வழங்கப்பெறும் புண்ணியத் தலமாகும்.

சிவபெருமானுக்கு மாறாக தக்கன் செய்த வேள்விக்கு தேவர் முனிவர்கள் சென்றதனால் இறைவன வேள்வியைச் சினந்து அழித்தனர். தேவர் முனிவர்களை சபித்தனர். தான் தன் முகங்களை ஐந்து கிரிகளாகக் கொண்டு கொங்கு நாட்டில் மறைந்தனர். சாபம் நீங்கப்பெற்ற தேவர் முனிவர்கள் சிவபெருமானைக் காண விழைந்தனர். நவகிரக பீடிதங்கள் நீங்க பழனி திருவாவினன்குடி கன்னிகா வனத்தில் புரட்டாசி மாதம் ஐந்து வாரமும் பவானி கூடுதுறையில் இருந்து கொண்டு துலாமுழுக்கு செய்தும், கார்த்திகை மாதம் ஐந்து வாரங்களில் மேற்கண்ட பஞ்சகிரிகளுக்கும் சென்று பஞ்ச முகங்களைத் தொழுதும் பேறு பெற்றனர். முடிவில் ஐந்தாம் வாரத்தில் மயேசுவரகிரியில் (வெள்ளியங்கிரியில்) இறைவனைக் கண்டு வணங்கிப் பேறு பெற்றனர். என்றும் தீராதநோய் தீர்க்கும் தீர்த்தமாம் ஆண்டிசுனை தீர்த்தத்தில் அர்ச்சுனன் பாசுபதம் பெற்றதும், அர்ச்சுனன் கடுந்தவம் புரிந்து முக்தி பெற்றதும் இத்தலமே.

வெள்ளியங்கிரி மலைக்கு வருவோர் மூங்கில் தடி ஒன்றை வாங்கிக் கொண்டு அதன் துணையால் மலையேறி இறங்கிப் பின் அதை வீட்டுக்கு எடுத்துச் செல்வர். மூங்கில் தடியுடன் வருவோர் வெள்ளியங்கிரி ஆண்டவன் பக்தர்களேயாவர். 50 ஆண்டுகளில் 50 தடிகளை ஒருவர் சேர்த்து வைத்துக்கொண்டு தன்னிடம் வரும் நோயாளிகளை அத்தடியினால் உடம்பில் படுமாறு "நமசிவாய" மந்திரம் சொல்லி நீவி நோயைக் குணப்படுத்திய சான்றோர் பலரை யாம் கண்டுள்ளோம். மற்ற மலைகளுக்குச் செல்வோர் மூங்கில் தடிகள் விரும்புவது வழக்கம் இல்லை. ஏன்? தக்கன் வேள்வியின் மூலம் சாபத்துக்குட்பட்ட தேவர் முனிவர்கள் புல் என்ற மூங்கில் வனமாக முளைத்துப் போயினர். பின்னர் சாபம் தெளிந்து வந்தபின் வரிசையாக எல்லோரும் மலையேறி இறைவனை வழிபட்டனர். 'அன்பர்கள் தாம் தவறு செய்தாலும் இப்போது மனம் தெளிந்து இறைவனை நாடிச் சென்று தேவர்க்கு ஒப்பாக செல்கின்றனர்' என்பதனை நினைவூட்டுகின்றது. மற்றும் அர்ச்சுனன் பாசுபதம் வேண்டிய நாளில் இறைவனை வேண்டி தவம் இருந்தனன். இறைவன் அவன் வலிமையைச் சோதிக்க வேடனாகி வந்து போரிட்டனர். முடிவில் காட்சி தந்து அவன் விரும்பிய பாசுபத அஸ்திரத்தைக் கொடுத்தனர். அர்ச்சுனன் செல்லும்போது பாசுபத அஸ்திரத்துடன் சென்றனன். அந்த பாசுபத அஸ்திரத்தை மூங்கில் தடிகள் நினைவூட்டுகின்றன.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலுக்கு தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருகை தந்து அடிவாரத்தில் அமையப்பெற்ற ஆலயத்தில் வழிபடுவதுடன், 6000 அடி உயரமும் சுமார் 6 கி.மீ.

தூரமும் கொண்ட மலைக்கு ஆண்டுதோறும் மாசி மாதம் முதல் வைகாசி மாதம் முடிய அடிவாரத்திலிருந்து 'அரஹரா' என்ற ஒசையுடன் இரவும், பகலும் கிரி மலைக்கு மூங்கில் தடிகளை ஊன்றிக் கொண்டு சென்று நோய்தீர்க்கும் ஆண்டி சுனை அருவியில் குளித்து கிரிமலை ஆண்டவனின் அருளுக்கு பாத்திரர்களாகி திரும்பிச் செல்வது மிகவும் கண்கொள்ளாக் காட்சியாகும். இந்த ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்கு பங்குனி உத்திரம், தமிழ் வருடப் பிறப்பு மற்றும் சித்திரா பௌர்ணமி ஆகிய நாட்களில் விழாக்கள் எடுக்கப்படுகின்றன.

புலவர் நா. திருநாவுக்கரசு, பி.ஏ.
செயல் அலுவலர்

ப கிருஷ்ணசாமி, எம்.ஏ.
தக்கார்/உதவி ஆணையர்

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை

பொள்ளாச்சி வட்டம் :: கோவை மாவட்டம்

1. ஆனைமலை அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் வரலாறு சுருக்கம்: கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆனை மலையில் உப்பாற்றின் வடகரையில் அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில் அமையப் பெற்றுள்ளது. நீண்ட நெடுங்காலமாக சிறந்ததொரு பிரார்த்தனை ஸ்தலமாக விளங்கும் இத்திருத் தலத்தில் அருள்மிகு மாசாணி அம்மன், ஸ்ரீ மகாசக்தி, ஆதிபராசக்தியாக 17 அடி நீளத்தில் படுத்த நிலையிலிருந்து வேண்டியவர்க்கு வேண்டியவாறு அருள்பாலித்து வருகிறாள். இத்திருக் கோயிலின் மூலவரான அருள்மிகு மாசாணி அம்மனே மயான மண்ணில் அமைந்திருப்பதாலும் மயான இடத்தில் கோயில் அமைந்திருப்பதாலும் இந்த ஆதிபராசக்தி கோயிலுக்கு அருள்மிகு மாசாணி அம்மன் கோயில் என பெயராகிறது. ஸ்ரீ ராமர் இலங்கை சென்றபொழுது ஆனைமலை உப்பாறு வடகரையில் மயானத்தில் மயான மண்கொண்டு மகுடாசுரனை அம்மன் தனது காலால் அழுத்தியபடி படுத்து இருக்கும் தோற்றத்தில் உருவம் செய்து ஆகம விதிகளின்படி சக்தி வழிபாடு செய்தார். ஆதிபராசக்தியும் மயான ருத்ரியாக தோன்றி ஸ்ரீ இராமர் அவதார நோக்கம் நிறைவேற வரமளித்தாள். இன்று நமக்கெல்லாம் அருள் பாலிக்கும் மாசாணியம்மன் அன்று ராமர் கையால் உருவாக்கி, வழிபட்டதாகும்.

2. முக்கியத் திருவிழா: இக்கோயிலில் தை அமாவாசையன்று கொடியேற்றம் செய்து 17ஆம் நாள் குண்டம் இறங்கும் விழா மிகபிரசித்தி பெற்றது இவ்விழாவிற்கு சுமார் லட்சம் மக்கள் கூடுவர்.

3. திருத்தல பெருமை: அம்மனை வழிபாடு செய்தால் பில்லி, சூன்யம், மாந்திரிகம் ஏவல்கட்டு இவற்றால் பாதிக்கப்பட்டவர்களும், பிறரால் வஞ்சிக்கப்பட்டவர், திருட்டு கொடுத்தவர் ஆகியோர் மிளகாய் அரைத்து நீதிக்கல்லில் பூசி முறையிட்டும் பரிகாரம் பெறுவதும் கண்கூடு. திருமணம் குழந்தை பேறு, உதிர சார்புநோய் நிவர்த்தி இவற்றிற்கு பிரார்த்தனை செய்து பயன்பெறுபவர் ஏராளம். ஆலயத்திற்கு வருகை தருவோர் அம்மன் அருள் நிறைந்த 'கருப்பு கயிறு' கங்கணமாக கட்டுவது வழக்கம்.

4. அமைவிடம்: இத்திருக்கோயில் பொள்ளாச்சியிலிருந்து தென் மேற்கே 15 கி.மீ. தொலைவில் ஆனைமலையில் சேத்துமடை மெயின் சாலையில் நுழைவு வாயில் கொண்டு உப்பாறு வடகரையில் அமைந்துள்ளது.

பொள்ளாச்சி பேருந்து நிலையத்திலிருந்து பேருந்து வழித்தடங்கள்:
10, 11, 11ஏ, 12, 12ஏ, 23, 34.

ப. கனகசபாபதி, பி.எஸ்ஸி., பி.ஜி,எல்., செயல் அலுவலர்

ஏ.கே. ராமசாமி கவுண்டர் அறங்காவலர் தலைவர்(பொறுப்பு)

வி. கே. பார்த்தசாரதி, அறங்காவலர்.

அருள்மிகு மகாமாரியம்மன் திருக்கோயில், வலங்கைமான

தஞ்சாவூர் மாவட்டம் - 612 804

அன்னை மாரியின் அருளால் அறம் பெருகி வளரும் திருநாடாக சோழ நாடு இருந்து வருகின்றது. இந்த நாட்டில் பாடல் சான்ற சிறப்புடைய பதிகள் பல உண்டு. வலங்கைமான் என்ற பெயருடைய இப் புண்ணியப்பதியும் அவற்றுள் ஒன்றாகும். குடந்தை நகருக்குத் தென்பால் 10 கல் தொலைவில் வலங்கைமான் உள்ளது. குடந்தை - மன்னார்குடி நெடுஞ்சாலையில் பேருந்தில் செல்வோர் இத்திருக்கோயிலை தரிசனம் செய்யலாம்.

இந்து சமயம், சௌரம், சாக்தம், சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம் என்ற ஆறு பிரிவுகளை உடையது. சக்திவழிபாடு நெடுங்கால மாக நிகழ்ந்து வரும் வழிபாடாகும். போக சக்தி, யோக சக்தி, வீரசக்தி என்று மூவகையாக நின்று அம்பாள் உலகைப் பரிபாலனம் செய்துவருகின்றாள். அருள்வடிவமான இந்த சக்தியையே மகாமாயி. மாரி என்று ஆன்றோர் வழங்குவார்கள். இந்த சக்தியிலிருந்தே இலக்குமி, பார்வதி, துர்க்கை, காளி, சரஸ்வதி முதலிய சக்திகள் பிரிந்துவந்தன. அருள்மிகு மாரியின் பேரருளே மழையாகப் பொழிகின்றது. உலகை வாழ்விக்கும் நதிகளின் ஓட்டத்திற்கும் அவள் அருளே காரணமாகும். மழைமுத்து இருந்தால்தான் மாநிலம் செழிக்கும் எனவே அன்னையை முத்துமாரி என்று அழைப்பார்கள், மழைவறம் கூர்ந்த காலத்தில் உண்டாகும் பிணிகளை நீக்கும் ஆற்றல் ஸ்ரீமாரியம்மனுக்கு உண்டு. இந்த நோயாலும் பிற நோயாலும் பாதிக்கப்படும் கண்களுக்கு ஒளி தருபவள் மாரியம்மன். இதற்காக கண்ணடக்கத்தைப் பக்தர்கள் காணிக்கையாக செலுத்துவதுண்டு. மேலும் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டாலும் ஸ்ரீ மாரியம்மனை வேண்டிக்கொண்டால் குணமாகும். குணம் பெற்றவர்கள் கை, கால் போன்றவற்றை வெள்ளியால் செய்து காணிக்கை செலுத்துவதுண்டு. மேலும் பிணிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டு உயிர்போகும் தருவாயில் உள்ளவர்கள் ஸ்ரீ மகாமாரியம்மன் அருளில் பிழைத்துக்கொள்வார்கள். அவ்வாறு பிழைத்துக் கொண்டவர்கள் பாடைக்காவடி மூலம் காணிக்கை செலுத்துவதுண்டு. பாடைக்காவடி எடுக்கும் காட்சியைப் பார்க்க, இந்தத் திருத்தலத்தில், விழாக் காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள். இவ்வாறு ஏழை மக்களுக்கும் மற்றவர்க்கும், கண் கண்ட தெய்வமாக விளங்குவது மஹாமாரியம்மன் ஆகும். அம்மை நோயுள்ளவர்களும், கண் சம்பந்தமான நோயுள்ளவர்களும், இந்த ஆலயத்தில் வந்து வாரக் கணக்கில் தங்கியிருந்து குணம் பெற்றார்கள் பெற்றும் வருகின்றார்கள்.

அருள்மிகு மாரியம்மன் கோயிலில் ஞாயிற்றுக்கிழமை இரவு தங்கியிருந்து வழிபாடு நிகழ்த்தும் பழக்கம் உண்டு. வெள்ளிக்கிழமைகளிலும், செவ்வாய்க் கிழமைகளிலும் விசேஷ வழிபாடுகளைச் செய்வது உண்டு.

அருள்மிகு மாரியம்மனை வழிபாடு செய்யும் மக்களிடையே நீண்ட காலமாக மாவிளக்குப் போடும் வழிபாடு செய்யும் பழக்கம் இருக்கிறது. பச்சை அரிசையைப் பரிசுத்தமாக வைத்து, மாவாக அறைத்து வெல்லம் கலந்து பிசைந்து, திரட்டி நடுவில் பள்ளம் செய்து நெய்வார்த்து திரிபோட்டுத்

தீபம் ஏற்றிவைத்து வழிபாடு செய்வார்கள். இதன் பொருள் என்னவென்றால் ஐம்பெரும் பூதங்களால் ஆகியது அண்டமும், பிண்டமும் ஆகும். பிண்டம் நமது உடலாகும் ஜீவனுடைய இந்த உடலில் ஸ்ரீ மஹா மாரி கோயில் கொள்ள வேண்டும் என்ற குறிப்பே மாவிளக்கு தத்துவம் ஆகும். பிசைந்து திரட்டிய மாவு ஜீவனுள்ள நமது உடலாகும். மத்தியிலுள்ள பள்ளம் நமது உள்ளமாகும் அதில் ஊற்றும் நெய் நமது பக்தியின் அறிகுறியாகும். அதில் போட்டிருக்கும் திரி நமது ஜீவனாகும். அதில் அம்பாளின் திருவருள் விளங்க வேண்டும். தீபம்போல் பிரகாசமாக விளங்கவேண்டும் என்பதே இதன் தத்துவம் ஆகும்.

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகவும், ஸ்ரீ சீதளா தேவி, மாரி என்றும், சிவமாரி என்றும் அழைக்கப்படும் வலங்கைமான் மாரியம்மனின் கருணையை யாவரும் பெறுவோமாக!

வயிற்றுவலி, இதயவலி உடற்பிணிகளை உடையவர்கள் ஆலயத்தில் படுத்து வயிற்றில் மாவிளக்கு அமைத்தும் வழிபாடு செய்வார்கள். அம்பாளுக்கு ஆன்ம அர்ப்பணமாக செய்யும் இந்த வழிபாடு தமிழர்க்கே உரியதாகும்.

அ. கோதண்டபாணி, பி.ஏ.,
தக்கார்.

தி. சுவாமிநாதன், பி.ஏ.பி.எல்.,
நிர்வாக அதிகாரி.

அருள்மிகு ஐநூற்றுப்பிள்ளையார் திருக்கோவில்,

விஜயபுரம், திருவாரூர்,

பிரபவ ஆண்டு, ஆவணித் திங்கள் 22ம் நாள் (7—9—1987) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் அருள்மிகு ஐநூற்றுப் பிள்ளையார் திருக்குடமுழுக்கு விழா திருவாரூரிலேயே மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஆரூர் தியாகேசப் பெருமான் குடமுழுக்குத் திருவிழாவிற்கு முன்னோடியாக அமைந்தது. யாராலும் செய்ய முடியாத தியாகேசன் திருப்பணியை வெற்றிகரமாக முடித்த திருப்பணிக்குழுத் தலைவர் திரு சு. தென்கோவன், தக்கார். திரு அ. ஜெயராமன், நிர்வாக அதிகாரி. திரு சு. ஸ்ரீதரன், ஆலய அர்ச்சகர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்,

G. தனசேகரன்B.A,
நிர்வாக அதிகாரி.

S. சிவகுமரர்
பரம்பரை அறங்காவலர்.

ஆதியும் ஆரூர் தியாகரும்

வி. வி. பி. துரைசாமி செட்டியார்,

தலைவர், ஸ்ரீ லக்ஷ்மிநாராயணா கோவாப்ரேட்டிவ் அர்பன் வங்கி, விஜயபுரம்-திருவாரூர்

(மூர்த்தி). தொன்மை:

ஒருவனாய் உலகேத்த நின்ற நாளோ ஓருருவே மூவுருவ மான நாளோ
கருவனாய்க் காலனைமுன் காய்ந்த நாளோ காமனையும் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரிந்த நாளோ மான்மறிக்கை ஏந்தியோர் மாதோர் பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!

— திருநாவுக்கரசர்.

கன்று இழந்த பசுவினுக்காகத் தன் மகனையே தேர்க்காலில் இட்டு நீதியை நிலைநாட்டிய மனுநீதிச் சோழன் ஆண்ட பெருமை உடையது ஆரூர். சுந்தர மூர்த்திக்காக, ஸ்ரீ தியாகேசப் பெருமான் திருப்பாதம் மண்பட நடந்த பெருமையை உடையதும் ஆரூர். பன்னிரு திருமுறைகளும் போற்றி வணங்கிய பெருமையை உடையதும் ஆரூரே.

மூர்த்தி:

வன்மீகநாதர், தியாகேசப்பெருமான், அசலேஸ்வரர்.

அம்பாள்:

கமலாம்பிகை, சோமகுலாம்பிகை, நீலோத்பலாம்பிகை, பாகம்பிரியாம்பிகை (கொண்டி).

தியாகேசப் பெருமான் முதன்மையும் சிறப்பும் பெற்றவர், வீதி விடங்கர், சோமாஸ்கந்தர் என்ற பெயரும் உடையவர். அந்திக்காப்பு என்னும் சாயரக்ஷை பூஜையின்போது தேவர்கள் யாவரும், அனைத்து தலங்களில் உள்ள மூர்த்தங்கள் யாவும் ஆரூர்த் தியாகேசப் பெருமானிடத்தில் ஒன்றி இருப்பதாகக் கூறுவது சைவ மரபு.

தியாகேசப் பெருமான் வீதி உலா வரும் தேர், ஆழித்தேர் என்றும், இவர் ஆடும் நடனம் அஜபா நடனமென்றும், உலாவரும்போது எடுத்து ஆட்டும் தண்டிற்குப் பிள்ளைத்தண்டு என்றும், நடனத்தின்போது வாசிக்கும்மத்தளத்தின் பெயர் சுத்தமத்தளம் என்றும், தனித்தனி சிறப்புப் பெயர் பெற்றுள்ளமை ஆரூர் தியாகருக்கு மட்டுமே உடையது. ஐயன் இருக்கையின் சபை, தேவசபை என்றும், ஐயன் எங்கு எல்லாம் காட்சி அளிக்கின்றாரோ அங்கெல்லாம் பக்தர்கள் நிரம்பி வழிவார்கள் என்றும், ஐயன் அருளாட்சி செய்யும் கோயிலுக்குப் பூங்கோயில் என்றும். ஐயன் சன்னிதியில் வாசிக்கும் நாயனத்திற்குப் பாரி நாயனம் என்றும், ஐயனுடன் உறையும் அம்பிகை (கொண்டி) பாகம்பிரியாம்பிகை என்றும் சிறப்புப்பெயர் பெற்றுள்ளன.

இலக்கியப் பெருமைமிக்க குடமுழா என்னும் பஞ்சமுக வாத்தியம் இசை நயத்துடன் ஒலிக்கும் பெருமையை உடையது. ஐயன் திருச்சபையில் மட்டுமேதான் நந்தியம் தேவர் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றார்.

மிகத் தொன்மையும் தவக்கோலம் பூண்டுள்ள காட்சியும் உடைய மகா சக்தி கமலாம்பிகை தனிக்கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். ஆரூரில் உள்ள பிரம்மதீர்த்தத் திருக்குளத்திற்கு அம்மையின் பெயரால் கமலாலயம் என்றும் வழங்குகின்றது. அம்மையின் அருள் ஆற்றலால் திருஆரூர் நவசக்தி பீடங்களில் முதன்மையைப் பெற்று உள்ளது. கமலாலயம்பதி என்றும், கமலாபுரி என்றும், அம்மையின் பெயரால் ஆரூர், இலக்கியத்தில் எடுத்தாளப் படுகிறது. பதினெண் சித்தர்களில் சிறந்த கமலமுனி அம்மையின் பெயரைப் பெற்றுள்ளது சிந்தனைக்குரியதேயாகும்.

கமலாலயத் திருக்குளம், முப்பத்து ஏக்கர் சதுரத்தையும் நான்கு புறமும் சுற்று மதில் சுவர்களும், சிறப்பான படிக் கட்டுகளும், ஒருபுறம். யக்ஞேஸ்வரக் கட்டமும் ஒருபுறம் மாற்றுரைத்த மகா கணபதி ஆலயமும், ஒருபுறம் சுவாமி காட்சி கொடுக்கும் பெரிய மண்டபமும், மற்றும் பல கோயில்களும் கட்டடங் களும் உள்ளன. கமலாலயம் மத்தியில் நடுவணாங்கோயில் என்னும் நாகநாதர் கோவில் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் மிக அழகான ராஜகோபுரத்துடன் அமைந் துள்ளது சுமார் ஆயிரம் பேர் அமரக் கூடிய பெரிய தெப்பம் திருவிழாக் காலத்தில் திருக்குளத்தில் சுற்றி வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். திருக் குளத்தைச் சுற்றி நான்கு வீதிகள் உள்ளன.

திருக்கோவில்:

தேவாலயம் 30 ஏக்கர் நிலப்பரப்பில், ஒன்பது இராஜகோபுரங்களுடன் 30அடி கல்மதகுடன் காட்சி அளிக்கின்றது. கோவிலில் மூன்று பிரகாரங்களை உடையதாகவும், ஒவ்வொரு பிரகாரத்திலும் பல கோவில்களும் அமையப்பெற்றுள்ளன. சைவ சமய சான்றோராகிய அறுபத்து மூவரின் வரலாறு கூறும் சுந்திரமூர்த்தி நாயனாரால் திருத்தொண்டத்தொகை தேவாசிரிய பெரிய மண்டபத்தில் அருளப்பெற்றது. தேவாசிரிய மண்டபத்தின் மேல் பக்கத்தில் சங்க தீர்த்தம் உடையது

அசலேச்சுரம் :- இது ஆரூர் அரநெறி என்று அப்பர் பெருமானால் பாடப் பெற்றுள்ளது. நமிநந்தியடிகள் நீரால் திருவிளக்கு எரித்த தலம். சோழப் பேரரசராகிய ராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சை பெருவுடையார் கோவில் இந்த அரநெறியார் கோயிலை பார்த்து கட்டப்பெற்றது என்பது செவி வழிச் செய்தி. இங்கு சிவராத்திரியில் வழிபாடு செய்வது மிகுந்த நன்மை பயக்கும்.

ஆடகேச்சுரம்:

இது அப்பு ஸ்தலமாக உள்ளது. இவ் ஆடகேச்சுரமூர்த்தம் மிகுந்த பழமை உடையது. இத்தலத்துக்கு வலது பக்கத் தில் தலவிருட்சம் ஆகிய பாதிரி விருட்சம் உள்ளது.

ஆனந்தேச்சுரம்:

இங்குதான் பதினெண் சித்தர்களுள் ஒருவராகிய கமலமுனி யோக சமாதியில் நிஷ்டையில் அமர்ந்துள்ளார் என்பது செவி வழிச்செய்தி. இங்கு வைகாசி விசா கத்தில் மலர் அருச்சனை செய்த வணிகன் மறுமையில் காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தான் என்று திருவாரூர் உலா தெரிவிக்கின்றது.

விஸ்வகர்மேச்சுரம்:

இது பெயருக்கு ஏற்றாற் போல மிகவும் அழகாகக் கலைத் திறனுடன் அமைந்த முழுக் கருங்கல் கோயிலாகும்.

சித்தீச்சுரம்:

இங்கு கோயில் கொண்டுள்ள இறை வனை வழிபட்டால் எல்லா சித்திகளும்

நிறைவேறும். இக்கோயில் தென்புறம் அமர்ந்துள்ள மேதா தெக்ஷணாமூர்த்தி சன்னிதானத்தில் தர்மபுர ஆதீன ஆதி பரமாச்சாரியராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞானசம் பந்தசுவாமிகள் கமலைஞானப்பிரகாசரை குருவாகக் கொண்டு உபதேசம் பெற்றார் கோயில் வலம் வந்த பக்தர்கள் கடைசி யில் இங்கு உட்கார்ந்து இறைவனை தியானம் செய்வது மரபு.

திருவாரூர் சப்தவிடங்க ஸ்தலங்களில் தலைமையானது; பஞ்சபூதத் தலங்களுள் பிருதீவி தலமாக உள்ளது. ஆறு ஆதாரத் திற்கும் ஆதார ஒளியாக உள்ள மூலாதார க்ஷேத்ரம் என்னும் சிறப்பும் பெற்றது. "ஆதாரத் தொளியோனே அரூரில் பெரு மானே" என்பது அருணகிரியார் வாக்கு. திருமகளால் பூசிக்கப்பெற்ற பெருமையால் திருவாரூர் என்ற காரணப் பெயர் பெற் றுள்ளது. தேரும், திருக்குளமும், திருக் கோவிலும், திருவிழாவும், தேவாரங் களில் பாடப்பெற்ற சிறப்பும் உடையது.

தியாகராஜர் முதலில் திருமாலால் திருப்பாற்கடலில் வழிபடப்பட்டு அவரால் தேவேந்திரனும் பிறகு அவரால் முசுகுந்த சக்ரவர்த்தியும் வழிபட்டு திருவா ரூரில் பிரதிஷ்டை செய்யப்பெற்றார் என்பது வரலாறு.

மிக உயர்ந்த ஸ்தானத்தில் பாற் கடலில் பரமபத நாயகனாகிய மகா விஷ்ணுவின் மார்பினைத் தியாகம் செய்து அதனினும் தாழ்ந்த தேவருலகம் வந்தார், அங்கு ஆயிரம் தந்தம் உடைய அயிராவத யானையையும் தேவருலகச் சிறப்பு வாழ்க்கையும் தியாகம் செய்து பூவுலகத்தில் திருவாரூர்ப் பூங்கோயிலை இடமாகக் கொண்டார். தமது அடியா ராகிய சுந்தரர் பொருட்டுப் பரவையின் ஊடலைத் தணிக்க இருமுறை தன் பெரு மதிப்பினைத் தியாகம் செய்து மண் பட நடந்தார்.

தியாகேசப்பெருமான், தன் இடது பாகத்தை கொண்டி அம்மையாகிய பாகம் பிரியாளுக்குத் தந்து அவளுடனேயே அஜபா நடனம் ஆடுகின்றார். அதனால் தான் வீதீவிடங்கப் பெருமான் தியாகராஜப் பெருமான் ஆனார்போலும்.

அயிராவணம் ஏறாது ஆன்ஏறு ஏறி
அமரர்நாடு ஆளாதே ஆரூர் ஆண்ட
அயிராவணமே

என்பது அப்பர்வாக்கு.

திருவாரூர் பிறக்க முத்தி தரும் தலமாகும்.
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கும்.
அடியேன்

என்பது சுந்தரர்வாக்கு.

நிறைவுரை:

இவ்வாறான பல்வேறு சிறப்பு களையும் உடைய திருவாரூர்த்தியாகராஜ சுவாமி திருக்கோவிலின் குடமுழுக்கு நிகழ்ந்தேறி ஆண்டுகள் பல கடந்தும், திருப்பணியும் திருக்குடமுழுக்கும் நடை பெறாமல் இருந்த நிலையில் திருப்பணிச் குழுவில் நானும் இடம்பெற இக்குழு மிகச் சிறப்பாக திருப்பணிகள் பலசெய்து திருக்குடமுழுக்கு விழாவினையும் நன் முறையில் செய்து முடித்திருப்பது எண்ணி மகிழ வேண்டிய பெருமையேயாகும். எனக்கும் இதில் ஒரு பங்கு கிடைத் திருப்பது தியாகேசனின் பெருங் கருணையே ஆகும். எல்லாம் வல்ல தியாகராஜப் பெருமான் நம் திருக் கோயிலில் இருந்து அருள் வழங்க நாம் அவன் திருவடிப் போதைப் புனைந்து பேரின்பம் பெறுவோமாக.

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி"

தனிப்பாடல்களில் திருவாரூர் தியாகராசர்

புலவர். மு. அரங்கராமானுசம், எம். ஏ., எம். எட்.,

முன்னுரை :

'சோலையில் வண்டினங்கள்
 சுரும்போ டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய்
 முகிறோயு மாரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும்
 பரமேட்டி பாதம்
காலையு மாலையும்போய்ப்
 பணிதல் கருமமே'[1]

—சம்பந்தர் (தேவாரம் 105-2)

இவ்வாறு தேவார திருவாசகம் ஏனைய நூல்களால் சிறப்புப்பெறும் திருவாரூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பக்தி மலர்தூவி பரவினால் பிறவியறும். துறவு நிலை அடைந்து முக்தி பெறுவர். இன்பம் பெருகும்; வினைகள் சாயும்; ஆணவம் அழியும். இத்தலத்தில் இருந்தாலும் பிறந்தாலும் இறந்தாலும் வீடடைவர் என்பதாம். இவ்வாறு சீரும் சிறப்புமுடைய ஆரூர் பெம்மான் சிறப்பினை அருந்தமிழால் எண்ணிறந்த புலவர்கள் பாடியுள்ளனர். அதன் மூலம் சிறப்பினை எடுத்தியம்பி உள்ளனர்.

திருவாரூர் !

ஆரூர் என்றவுடன் எல்லோர்க்கும் திருவாரூர் தியாகேசனை நினைவு கூர்வர். திருமகள் தங்கியிருக்கும் தன்மை உடைய பொருளை உடையது திரு-ஆர்-ஊர். அழகிய ஆறு சிற்றூர்களை தன்னகத்தே கொண்டது என்றும் கூறுவர். ஆத்தி மரங்கள் தழைத்த ஊர் (ஆர்-ஆத்தி) எனறும் பொருள் கொளளலாம். இப்போதும் அழகுபொருந்திய ஊர் என்பதில் ஐயமில்லை.

தஞ்சை மாவட்டத்தில் ஆலயங்கட்கு பஞ்சமில்லை. கோயில் இல்லாத ஊரே இல்லை எனலாம். கருங்கற்களே இல்லாத மாவட்டத்தில், ஊர்திகள் இயங்காத காலத்தில் எப்படித்தான் இந்த கற்களை கொண்டு வந்து சேர்த்தனரோ தெரியவில்லை. இன்னும் தெற்குக் கோபுர வளாகத்தின் பக்கம் பார்த்தால் ஐம்பது ஆண்டுகட்கு முன் கிடந்த கற்கள் அப்படியே உள்ளன. சிறு கட்டடங்கள் கூட கட்ட முடியாத இக்காலத்தில் கற்கோயில் அமைத்த தன்மையை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

நாகப்பட்டினம் தஞ்சாவூர்ப் புகை வண்டிகளும் மயிலாடுதுறை திருத்துறைப்பூண்டி புகைவண்டிகளும் சந்திக்கும் சந்திப்பில் உடையது. பனைமரத்துண்டுகள் பக்கத்தில் அரணாக அமைக்கப் பெற்று இருந்த புகைவண்டி நிலையம் இன்று நீண்ட தளத்தை இடமாகக் கொண்டு காணப்படுகிறது.

புகைவண்டி நிலையத்திலிருந்தும் பேருந்து நிலையத்திலிருந்தும் புறப்பட்டு நடந்து சென்றாலோ வண்டியில் சென்றாலோ 2 கி. மீ தொலைவில் உள்ள தியாகராசரைக் காணலாம். ஊருக்கு அப்பால் வரும்போதே வானைத்தொடும் உயர்ந்தோங்கிய கோபுரத்தைக் காணலாம்; கண்டு தொழலாம்.

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்"

என்பதுபோலச் சிற்றாறான ஓடம் போக்கி ஊர்நடுவே தென்புறம் ஓடுகிறது.

திருக்கோயில் :

ஏழு கோபுரங்களை அழகாக கொண்ட திருவாரூர்க் கோயிலைக் காணும் பேறு தான் என்னே! சரித்திரச் சான்று கொண்டது. கோபுரங்களில் காணப்படும் சுதை வேலைப்பாடுகள் கண்ணையும் கருத்தையும் கவரத் தக்கன. இதில் சிவபெருமான் செய்த அற்புதங்கள் வடிவமைக்கப் பெற்றுள்ளன. அதுமட்டுமன்று, வெளியுலகில் காணப்படும் புறத்தாசைகளை நீக்கி, சிற்றின்பம் விட்டு, மனர்தூயனாகி என்னை அடைந்தால் பேரின்பம் அடைவாய் என்பதனை நினைட்டுவன. கோயிலை நடுவணாகக் கொண்டு வீதிகள் விளங்கின.

புராண வரலாற்றின் அடிப்படையில் இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் புற்றிடங்கொண்டார். தானே தோன்றிய தனிமுதற்கடவுள், திருமாலின் செருக்கடக்கியவர் என்றும் காண்கிறோம். இந்திரனும் முசுகுந்தனும் வழிபட்டவர் தியாகேசர். காலம் 7ஆம் நூற்றாண்டிற்கும் பத்தாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதென்பர்,

பாமாலை :

இவ்வாறு சிறப்புற்ற தியாகராசப் பெருமானைப் பல இலக்கியங்கள் புகழ்கின்றன. அவை புராணமாக, கோவையாக நான்மணிமாலையாக, குறவஞ்சியாக, உலாவாக, பிள்ளைத்தமிழாக விளங்கிடக் காணலாம். பொதுவாக, தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் முந்நூறாகும். எண்ண முடியாத சோழநாட்டுத் தலங்கள் ஐநூறாகும். நாவலராகிய மாணிக்கவாசக சுவாமிகளால் பாடல் பெற்ற தலங்கள் நாற்பத்தெட்டாகும். நீங்காத சிறப்புள்ள சிவத்தலங்களை நூற்றறுபதும் சேர ஆயிரத்தெட்டு ஆலயங்கள் ஆகும்.[2]

அடியவர்கள் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கொண்டு தம் உள்ளக் கிடக்கையை அதன் மூலம் தெரிவிப்பர். ஆண்டவன் திருவடிகளை அடைய விரும்புவர்.

தியாகராசசர் ஊர் வலம் வருதல் :
(உயிர் மகிழ்தல்)

தமிழகத்தில் சித்திரை முழுநிலா[3], (பௌர்ணமி) வைகாசி விசாகம், ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூரம், ஆவணிமூலம், புரட்டாசி நவராத்திரி, ஐப்பசி (தீபாவளி) சூரனை அழித்தல், கார்த்திகைத்தீபம், மார்கழி திருவாதிரை, தைப்பூசம், மாசி சிவராத்திரி, பங்குனி உத்திரம் ஆகிய விழாக்கள் நடைபெறுவதை அறியலாம்.

ஆம்! அன்று பங்குனித் திங்கள் உத்திர விண்மீன் நாளில் ஆரூரில் அமர்ந்துள்ள எம்பெருமான் தியாகராசன் அழகுமிகுந்த தேரில் வலம் வருகிறார். படம் கொண்ட பாம்பினை அணிந்தவர், பொற்பாதத்தில் கிண்கிணி ஓசை கேட்க வருகிறார். அடியார்கள் உள்ள உந்துதலால், மெய் மயிர் சிலிர்க்கக் கண்கள் நீர் பொழியப் பேருவகை கொள்கின்றனர். (பா-83)

தலைவி வருந்திக் கிளியைத் தேடுதல் :
(உயிர் தேடுதல்)

வருகின்ற தியாகராசரைக் காண வீதி நெடுகிலும் மக்கள் வெள்ளம். ஐந்தெழுத்தை ஓதி ஐம்புலனும் ஒருங்கிணைந்து நின்று வணங்குகின்றனர். ஆனால் ஒருத்தி மட்டும் உள்ளம் நிலை கொள்ளாமல் இருக்கின்றாள். அவள் தியாகேசனைத் தனக்குத் தியாகம் செய்பவன் என எண்ணியவளாய் அவரை அடைய எண்ணுகிறாள். அக்கம் பக்கம் பார்க்கிறாள், யாரிடத்து சொல்வது என ஏங்குகிறாள். அவரை விரும்பியதாகச் சொன்னால் ஊர் அலர் தூற்றுமே என அஞ்சுகிறாள். அந்த நேரம் பிரிந்தவரைச்

சேர்க்கும் காதல் தலைவன் மன்மதன் தன் மலர் அம்புகளால் அவள் மனதைத் துளைக்கிறான். பாலைப்பொழியும் நிலவும் அவளுக்குத் தணலாய்த் தகிக்கிறது. தன் மேலாடை சரிவதையும் கவனிக்காமல்தான் ஆடாமல் நிற்கிறாள். யாரைத் தூது அனுப்பி அந்த தியாகராசர் மாலையைப் பெற்று வரச்செய்வது என ஏங்குகிறாள். மனிதரை அனுப்பினால் வழியில் மறித்து யாரும் உசாவவும் கூடும் தரையில் நடக்காது வானத்தில் பறந்து செல்லும் கிளியிடம்சொன்னால் அதுஎன் நிலையைச்சொல்லிமாலையைப்பெறவும் கூடும் என எண்ணினாள் ஊர்வலம் தன்னையும் கடந்தது.வந்த அடியார்கள் எல்லாம்அருள் பெற்றவர்களாக மகிழ்ந்து சென்றனர். ஆனால்கொடுத்த தியாகராசர் இந்த மானுக்கு இடம் கொடுக்கவில்லையே என ஏங்கினாள். (பா-130)

திருவடி வேண்டுதல் : (அலைதல்)

"காலைஅரும்பிப் பகலெல்லாம்போதாகி
மாலை மலரும்இந்நோய்" (குறள்)

ஆம்,இறைவன் திருமாலையை வேண்டியவள், பெறாத வருத்தமுடன் இல்லம் சென்றாள். திருவுருவத் தியாகேசன் வடிவினைக் கண்டாள், வணங்கினாள். திருவாரூரை இடமாகக் கொண்ட காரோகணத்து எழுந்தருளியுள்ள (நாகையில் உள்ள இறைவன் காயாரோகணம்) விமலனே! அழிவற்ற மெய்யை உடையவனே! அமலனே!பொன்சபையில் நடனமாடிய பெரன்போன்ற திருவடிகளை உடைய தியாகராயனே! திருமால் தேடின பொன்னடியை உடைய தியாகராசப் பெருமானே! என்னை ஆண்டருள வேண்டும் என்கிறாள். (பா-283)

இரவிலே நடந்துசெல்பவன் கண்கள் கால் செல்லும் தடத்தின் மீதிருக்க வேண்டும். அவ்வாறிருக்க அடியவன் சிவபெருமானது திருவடியில் கண்ணைத் தோண்டி சாத்தின திறத்தைப் பாருங்கள் என வியக்கிறாள். அருட்கண்களை உடைய ஆரூரன் கிண்கிணி அணிந்த திருவடிகள் சிவந்த கண்களை உடைய நெடுமாலுக்கு அன்றி வேறு யாருக்கும் தெரியாது என்பார்களே! அடியவளாகிய எனக்குத் தெரிந்ததே! என்னைப் பாராமல் சென்றுவிட்டாரே! கடைக்கண் அருள்கூடக் கிடைக்கவில்லையே! இவருக்குத் தியாகஈசன் எனப் பெயர் எவ்வாறு பொருந்தும்? என ஏங்கியவளாய் தன்னிலை இழந்தாள். (பா-198)

தியாகேசனைப் பழித்தல் : (அயர்தல்)

செங்கமலப் பொய்கை சூழ்ந்த திருவாரூர்ப்பதியில் வாழ்கின்ற தியாகரே! சீலரே! உன் மைத்துனனாகிய திருமாலோ ஒருமாடும் இல்லாமல் உலகம் முழுவதையும் தானே உண்டார். (கண்ணன் மண்ணை உண்ணல் – தாய் வாய்திறக்க வேண்டுதல் – வாயில் உலகம் உருண்டை வடிவில் இருத்தல்) நீரும் நரைத்த (வெண்மையான மயிர்கள்) மயிர்களை உடைய காளைமாடு ஒன்றிருக்க உழுது உண்ண மாட்டாமல் திருப்பாற்கடலில் உண்டான நஞ்சினை உண்டீர்! இரண்டுபடி நெல்லுமிருக்க, முருகன் கணபதி ஆகிய இரண்டு பிள்ளைகளைப் பெற்றிருந்தும் நீவிர் இரந்து (பிச்சையேற்று) உண்பீர்! இப்படிப்பட்ட உமக்கும் ஒருநாள் கொண்டாடப்படுகிறதே என அயர்ந்தாள். (பா. 484)

தலைவி புலம்பலும் ஆறுதலும்: (மயங்கல்)

தலைவி எண்ண இனிப்போடு ஏங்கி நிற்க, தியாகேசனே! விரகத்தை அடக்கமாட்டேன்! சமயத்தையும் அறியமாட்டேன்! அயர்ந்து சற்றும் படுக்கமாட்டேன்! உன்னையன்றி வேறு ஒருவரையும் பார்க்கமாட்டேன்! நின்னையன்றி வேறு யாரையும் மலர்தூவி வணங்கமாட்டேன்! அதனால் இரவு பகல் முழுமையும் மலரைப் பறித்து முக்காலமும்

வணங்க மறுப்பேன்! அதனை என் தலையிலும் சூட மாட்டேன்! உம்மையே நினைத்து வடக்கே வழியையும் பார்த்திருந்தேன்! நீர் வாராமையின் என் கண்கள் பூத்துப்போயின எனப் புலம்பினாள் (பா. 369).

அப்போது அவள் நினைவில் ஆரூர்ப் பெம்மான், ''மின்னற்கொடி மேகத்தை விட்டுப் பிரிந்தாலும், இரு சுடர்களாகிய கதிரவனும் மதியும் வானத்தை விட்டுப் பிரிந்தாலும், அன்னப்பறவை நீரைவிட்டுப் பிரிந்தாலும், கார்மேக வண்ணனாகிய திருமால் திருமகளை – தனத்தை விட்டுப் பிரிந்தாலும் திருவாரூர்த் தியாக ராசப் பெருமான் தம் அடியவரின் மனதை விட்டுப் பிரிந்தாலும், கங்கத் தலைவியே! உன்னை நான் பிரியேன்'' எனும் அமுத மொழி கேட்டாள். உள்ளம் மகிழ்வு பொங்க தன்னையே மறந்தாள். (பா. 360)

சோலையில் சந்தித்தல்: (கூடுதல்)

தலைவி தலைவனைச் சோலையிடத்துச் சந்திக்கிறாள்! ஆம், எப்படிப்பட்ட சோலையில்! சோற்றால் மடையடைக்கும் சோழ நன்னாட்டுச்சோலையல்லவா! தேரைக்கொண்ட மன்மதனது குடையையும் யானையும் போர்த்தொழில் கொண்ட அம்புகளையும் வில்லையும் குடங்களையும் பெற்று ஒரு புற்றினிடத்தில் இடங் கொண்டிருப்பவர் திருவாரூர்த் தியாக ராசர், வீதிவிடங்கர். அவரது மலையில் உள்ள மேகங்களைத் தன்மீது கொண்டிருக்கிற சோலையில் முழு மதிமுகமும், யானைபோன்ற இருண்ட கூந்தலும், வேழக் கரும்பு போன்ற தோளும், வில் போன்ற புருவமும், அம்பு போன்ற கண்களும் குடம் போன்ற தனங்களையும் கொண்ட ஒரு பசுமையான மயில் என் கண்களில் தென்பட்டதே என்றான் தலைவன். (பா; 366)

தலைவியிடத்துத் தலைவன் நெருங்க முடியுமா? முடியாதே! நெருங்கக் காரணம் வேண்டுமல்லவா? தலைவியைப் பார்க்கிறான். அவள் கார்மேகக் கூந்தல் தோகையை வென்றுவிடும். சோலை மலர்கள் அவள் கூந்தலில் காணப் பெறுகிறது. வண்டுகள் இவள் ஒரு மலர்க்காடு என்றெண்ணிக் கூந்தலில் அமர்கின்றன தேனை உண்ணும் வண்டுகளைக் காண்கிறான் தலைவன். வண்டுகளே! இத் தலைவியின் இடையோ சிறிது. காம்பு ஒடியாத மலரைச் சூடினாலும் அவள் இடை தாங்காது. அவ்வாறிருக்க நீங்கள் அந்தக் கூந்தல் மலரிலே அமர்ந்தால் இடை இற்று விடும். அந்தப் பெண் இறந்துபடுவாள் பெண் பாவம் பொல்லாதது. அதனால் உங்களுக்கு இந்த தியாக ராசன் மலையில் நிறைய சோலைகள் இருக்கின்றன. கற்றறிந்த நீங்களும் இவ்வாறு பழியை அடையலாமா? உடன் எழுந்திருங்கள் என வண்டுகளை ஒட்டுவது போல் (மெய் தொட்டுப்பயிறல்) தலைவியைத் தொடுகிறான். (இறைவன் ஆட்கொள்கிறான்) (பா: 362)

தலைவியின் நலம் பாராட்டல்: (புகழ்தல்)

ஏழைகளுக்கு இரக்கம் செய்து அருள்புரிகிற வன்மீக நாதரது அழகிய மலையில் யாழ்இசையை வெல்லுகின்ற பெண்ணே! நல்ல அன்னமும், வாழையும் பலாக்கனியும், இரண்டு பாற்குடங்களும் இவையானவையும் வைத்திருந்து எனக்குக் கூழைக் கொடுத்தது ஏனோ? (கூழை கூந்தல், கூழ் - கேழ்வரகுக் கூழ்) என்றியம்பினான் தலைவன். (பா. 363)

வெம்மையான யானையின் தோலைப் போர்வையாக உடைய திருவாரூர்த் தியாகர் வீதிவிடங்கர் மலையில் செந்தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளை ஒத்தவளே! உங்கள் சிவந்த கைகளினால் கடலை அடக்கிய நீவிர் (அகத்தியன் கடலைக்கையில் அடக்கிய

வாறு. தலைவி தன் கண்களைக் கையால் அடக்கி மறைத்துக் கொள்கிறாள். ஆனால் அவள் தன் தனங்களை மறைக்க வில்லை. அதனைக் கண்ட தலைவன் அதனால் துன்பம் அடைந்த நிலையைக் கூறல்) மலையையும் அடக்கினால் இந்த உலகம் உங்களையும் அகத்தியமுனி என்று வாழ்த்துமே! என்று பாராட்டு கிறான். (பா: 366)

தலைவியின் கண்கள் : (பாராட்டுதல்)

'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை' 'கண்ணிற் கனிகலம் கண்ணோட்டம்' எனப்பாராட்டப்படும் இந்தத்தலைவியின் கண்கள் தாம் எத்தன்மையன! இவை கண்கள் தாமோ? விடமும் மருந்தாமோ! அந்த நாளில் விடத்தையும் அமிர்தத் தையும் திருப்பாற்கடலில்தான் ஒருங்கே கண்டோம். அதற்குப் பிறகு பிரமனும் திருமாலும் போய்த் தரிசித்துத் துதிக்கின்ற தென் ஆரூர்த் தியாகரது திருக்கழுத்தில் நஞ்சைத் தனியே கண்டோம் (திருப்பாற் கடலைக் கடையும் போது எழுந்த ஆல கால விடத்தைச் சிவன் உண்டார்என்பது வரலாறு) அவ்விடத்துத் தோன்றிய இரண்டனுள் (நஞ்சு, அமுதம்) மற்றொன் றாகிய அமிர்தத்தைத் தேவலோகத்தில் கண்டோம். இந்நாளில் நஞ்சு அமிர்தம் இரண்டினையும் (நஞ்சு துன்பம் செய்தல், அமிர்தம் இன்பம் செய்தல் புறத்துன்பம் அக இன்பம்) இவள் கண்பார்வை யினிடத்து ஒருசேரக் கண்டோம் எனத் தனக்குள் கூறிக் கொண்டான்.

இரவுக் குறிஇடையீடு : (தடைபடுதல்)

பொழுது புலரும் நேரம், புன்மை இருட்கணம் போயின, சேவல் கூவுகிறது! செங்கதிர் எழும் நேரம் வந்துவிட்டதாக அறிவிக்கிறது! தலைவன் தலைவியைப் பார்க்கிறான். நலத்தைப் பாராட்டினான், கண்டான். கேட்டான். உண்டு உயிர்க்க வில்லை. எண்ணத்தை இனிமையாக்கி இருக்கின்ற நேரம். பெருமையுள்ள திரு மகளே! வாழ்க! குளிர்ந்த முத்துக்களை ஈனுகின்ற சங்குகளைக் கலப்பைகள் உடைத்திருக்கின்ற வயல் சூழ்ந்த திருவாரூர்த் தியாகராயரது பெரிய மலையில் நாம் சந்தித்த வேளையில் கோழி உரக்கக் கூவித் தடுத்து விட்டது. இச்செய்கை வெண்ணெய் திரண்டு வரும்பொழுது தாழி உடைந்த செய்கை போலல்லவா இருக்கின்றது என்று கவன்றனர் இருவரும் (பா: 36).

தலைவி தலைவனைக் காணாது வருந்துதல்: (ஏங்குதல்)

பிரியேன், பிரியினும் தரியேன்! என்று சொல்லிப்போனவர் இன்னும் வரவில்லை தியாகராயர் நன்னாட்டில் உள்ள அந்தக் குயில்கள் வாசனை பொருந்திய மாந் தளிரைச்செந்தீக்காடென்று, முருக்க மலர் களை அந்தத் தீயின் பொறியென்றும், தாம் வாழ்கின்ற மாமரங்கள் அழிந்து விடும் என்று நினைத்து வாடி மனந் தளர்ந்தன. (பா. 183)

அது மட்டுமன்று! மன்மதன் வீட்டில் திருடன் நுழைந்து விட்டானோ? சந்திர னைப் பாம்பு வளைத்துக் கொண்டதோ? மாமரம்தான் தீப் பற்றிக்கொண்டதோ? தெரியவில்லை. அதனால் குயில்கள் கூப்பிடுகின்றன. (பா. 184).

அந்தக் குயிலோசை எனக்கு க்காதை குடைவது போன்று இருக்கின்றது. என் மனத் துன்பத்தை அறிவார் யாரும் இல்லையா? தியாகராசரிடத்துச் சென்று அவர்மீது கொண்ட காதலைச் சொல்லி, என்னை மையலில் வைத்துச்சென்ற அவ ரிடத்து உள்ள மாலையை வாங்கி வர எனக்குத் துணையில்லையா? எனக் கவன்றாள்.

நாரைக் கூட்டத்தைப் பார்த்து நாரை களே! திருவாரூர்த் தியாகராசனிடத்து செல்லுங்கள். அன்று சந்தித்த நிலையில்

நான் கலையையும் இழந்ததையும் கலை மதியையும் இழந்ததையும் கூறுங்கள். இறைவன் வருகின்ற வழிமேலே மனம் வைத்ததைக் கூறுங்கள். மனத்தின் மேல் மையல் கொண்டதை இயம்புங்கள். மணலைக் கொட்டி சுழிகளின் மேல் விரலும் (பெண்கள் மணலைக் கொட்டி கண்ணை மூடிக் கொண்டு வளையம் இடுவர். இருமுனையும் கூடினால் தாம் நினைத்தது கூடும்என்ற ரம்பிக்கை) அவ் விரலின் மேல் கண்ணீர்த் துளியும் சிந்து வதைக் கண்டதாகக் கூறி என் சோகம் முழுவதும் எடுத்து மணங்கொள்ளச் சொல்லிக் காத்திருப்பதைச் சொல்லுங்கள் வாராராயின் பழியானது உன்மீது சுமக் கும் என்று. அந்தப் பாதகருக்குச் சொல் லுங்கள் என நாரையைத் தூதுவிடுத்தாள் (பா: 371, 486).

தலைவன் தலைவியைக் காண விரைதல் :
(ஆன்மா இறைவனை நாடல்)

தேர்ப்பாகனே! தேரை விரைவாகச் செலுத்து. ஆம்! என் தலைவி பொறாள். 'எழுதுங்கால் கோல்காணாக் கண்ணே போல்' நம்மைக் கண்டுவிட்டால் பழியை மறந்து விடுவாள். விரைவாகச் செலுத்து தேரை என்றான்.

மோகன வல்லாளனான சுந்தரனது நாட்டிலுள்ள பூவை போல் வாளுக்கு, போர்க்களத்தில் முந்திச்செல்கின்ற இந்த தேர் முந்திச் செல்லுமோ? அல்லது மன் மதனது தேர் முந்திச் செல்லுமோ? இவ் விரண்டு தேர்களும் முந்துவதற்கு முன் பாகவே மோகம் முந்துமோ? அது முந்து வதற்கு முன்பே இரு கண்களும் பொழி கின்ற நீர் முந்திவிடுமோ? தேர்ப்பாகனே! என் நாயகிக்கு அருகிலிலேன், என்றான். மன வேகமாகத் தேர் விரைந்தது. காதலன் ஏறிய தேரோ வந்தது? ஆனால் தலைவியின் முகம் வாடியது. குரல் இல்லை. குழையவில்லை, கண்டான் தலைவன் காரணம் வினவினான். (பா: 370)

தலைமகளிடத்து ஊடல்: (போலி)

கண்ட தலைவி கண்கலங்கினாள். காலம் தாழ்த்ததோ எனக் கவன்றான் தலைவன். காரணம் புரியவில்லை. தலை வனைக் காணாது தன் கால்விரல் கொண்டு நிலம் கீறினாள். மின்னற் சொற்கள் செம்பவள வாயில் வந்தன.

தியாகரே! சீலரே; உத்தமரே! வீதி விடங்கரே! அவின் துயர் துடைத்த அருமை வள்ளலே! பரவையின் ஊடல் தீர்க்க வழிகண்ட பெருமானே! தானம் வழங்கிய வள்ளலே! தயாளனே! என அடுக்கினாள்.

தியாகன் மனம் திக்கென்றது. ஆரூர் பெம்மானே! ஒரு பெண்ணானவள், உன் சாயலைக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்த நமது குழந்தையை வளையல்கள் ஒலிக்கின்ற செங்கை களால் எடுத்தாள். அவளை, மகாமேரு மலையை, பொன்மலையை வில்லாக உடைய தியாகரது மலையில் என் தங்கையென்றறிந்தேன். அவள் பேரென்ன சொல்லுவீராக! என்றாள்.

தலைவன் சிரித்தான். பொருள் புரிந் தான். இது மாயை என இயம்பினான்.

தலைவன் தலைவியோடு கூடல்:
(இணைதல் - ஒளியாதல்)

தலைவியின் கோபம் பொய்யானது என்பது உண்மை. ஊடலில் தோற்றவர் வென்றாரல்லவா? இறைவனிடத்து உயிர் தோற்றது. உண்மை உருவம் கண்டது. மனம் பொய்யை மாயை என்ற றிந்தது. புகழ் உலகம் கண்டது.

அர்ச்சுனனது வில்தண்டால் அடி யுண்டவன், தேவர்களை ஏவல் கொள் கின்ற நல்ல தலைகள் பத்தினை உடைய அன்பனாகிய இராவணன் தூக்கவேண்டு மென்று முயல அசையாதிருந்தவன் ஆரூர்

நாதன். அவன் கோயிலிலுள்ள பொன்கம்பத்து அடியில் நின்று வன்மீக நாதனை வணங்கினோர்க்குச் சொர்க்கம் பத்தடி தூரமாகவும் மோட்சம் பத்தடி தூரமாகவே தோன்றா நிற்கும். எனத் தலைவி தியாகராசனை வியந்தாள்.

முடிவுரை:

இவ்வாறு உயிர்களானது இறைவனிடத்து காதல் கொண்டு நல்லன பெறும் போது சிந்தியாமல் அல்லன வரும்போது அழுகின்ற தன்மையை உடையன. உலக இன்பத்தை மெய்யெனக் கொண்டு உழல்கின்ற உயிரினை இறைவன் தடுத்தாட் கொள்வது போல உடல்மீது துன்பம் விளைவித்து ('சுடச்சுட ஒளிவிடும் பொன்போல்') அத்துன்பமே தொடராது கடைசியில் இன்பம் விளைவிப்பவன். இவ்வுலகப் பாசங்களை அறுத்து, இடையில் வரும் இன்பங்கள் நிலையா என உணர்த்தி இறுதியில் இன்பத்தைத் தருபவன் வேண்டினார்க்கு அருள்பவன். விரும்பாதவரையும் விரும்புங்காலம் வரை வெறுக்காதவன். அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்து. மனத்தகத்து மாசற்றோர் உள்ளத்து ஒளியாகத் திகழ்பவன் திருவாரூர்த் தியாகராசன். தியாகேசன், வீதிவிடங்கன். வன்மீக நாதர். அவனருள் பெறுவோமாக.

துணை நூல்கள்:

1. திருவாரூர்த் தலவரலாறு – ஸ்ரீ தியாகராசசுவாமி தேவஸ்தானம்
2. திருக்குறள்
3. தனிப்பாடற்றிரட்டு 2 ஆம் பாகம் மகாவித்வான் கா. இராமசாமி நாயுடவர்கள் சென்னை வித்யாரத்நாகர அச்சுக்கூடம்.

1. பாடல் : 83 (பக் 37)
2. பாடல் : 130 (பக் 55)
3. பாடல் : 283 (பக் 112)
4. பாடல் : 193 (பக் 472)
5. பாடல் : 484 (பக் 204)
6. பாடல் : 367 (பக் 147)
7. பாடல் : 364 (பக் 146)
8. பாடல் : 183 (பக் 75)
9. பாடல் : 184 (பக் 75)
10. பாடல் : 369 (பக் 148)
11. பாடல் : 360 (பக் 144)
12. பாடல் : 366 (பக் 147)
13. பாடல் : 362 (பக் 145)
14. பாடல் : 363 (பக் 145)
15. பாடல் : 368 (பக் 148)
16. பாடல் : 371 (பக் 149)
17. பாடல் : 436 (பக் 180)
18. பாடல் : 370 (பக் 149)
19. பாடல் : 361 (பக் 144)
20. பாடல் : 591 (பக் 253)

வடமொழி இலக்கியங்களில்-திருவாரூர்

தஞ்சாவூர். N. சீனிவாசன்,

வடமொழிப் பண்டிதர், சரஸ்வதிமகால் நூலகம், தஞ்சாவூர்.

திருவாரூர்த் திருத்தலம் மிகவும் தொன்மைவாய்ந்த திருப்பதி. இப்பதியில் சிவத் தொண்டர்களும், நாயன்மார்களும் வாழ்ந்து, அவர்களுக்குத் தியாகேசன் திருவருள் பாலித்துள்ளார். ஆரூர்த் தியாகேசனைத் தமது நண்பனாகவும், தூதுவனாகவும் பெற்ற பெருமை சுந்தரருக்குண்டு. இங்குள்ள ஆலயம் பல்லவர் காலந்தொடங்கியே தமிழகத்தில் புகழ் பெற்றதாலும் ஐம்பூதத்தலமாக (நிலமாக) புற்றிடம்கொண்ட பெருமானாக இருந்து அருள்பாலித்து வருகிறான். இதனால் இங்கு பல புலவர் பெருமக்கள் சிவனருள் பெற ஆரூரிலேயே வாழலாயினர். இதனால் ஆரூர் பற்றிய பன்மொழி இலக்கியங்கள் தோன்றலாயின. அவ்வாறு தோன்றிய இலக்கியங்களில் ஆரூர் பற்றிய வடமொழி இலக்கியங்களைப் பற்றிச் சிறிது காண்போம்.

இத்தலம், ஸ்ரீபுரம், ஹாடகேஸ்வரம், கமலாலயம் முசுகுந்தபுரம் எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இப்பெயர்களாலேயே இத்தலத்திற்குத் தல புராணங்களும் உண்டு. 1. ஹாடகேஸ்வரமாஹாத்மியம், 2. கமலாலயமாஹாத்மியம் 3. தியாகராஜமாகாத்மியம், 4. தேவாஸ்ரய மாஹாத்மியம், 5 முசுகுந்தபுர மாஹாத்மியம் 6. ஸ்ரீபுர மாஹாத்மியம் என்ற பெயர்களில் இத்தலத்திற்குத் தலபுராணங்கள் உள்ளன. இவைகள் ஸ்காந்தபுராணம், பத்மபுராணம், பவிஷ்யோத்தர புராணம், சிவபுராணம் போன்ற மஹாபுராணங்களின் ஒருமிகுதியாகவும் விளங்குகின்றன. இவைகளில் கூறப் பட்டுள்ள கதைகளிலும் சொல்லப்பட்ட செய்திகளிலும் ஒன்றுக்கொன்று பெரிதும் மாறுபாடுகள் காணப்படுகின்றன.

இதனைத் தவிர, ஏனைய தல புராணங்கள் சிலவற்றிலும் திருவாரூர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. உதாரணமாகத் தஞ்சாவூரில் உள்ள பெருவுடையாருக்கு (பெரிய கோவிலுக்கு) தல புராணமில்லை. ஆயின் தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் 'பிருகதீஸ்வர மாஹாத்மியம்' என்ற பெயரில் ஒரு நூலிருக்கிறது. இதனை நோக்கும் போது மூர்த்தி தலம்-தீர்த்தம் என்ற மூன்று பெருமைகளையும் இப்புராணம் கூறுகிறது. இந்த நூலின் ஒன்பதாவது அத்தியாயத்தில் மனுநீதிச் சோழனுடைய முழு வரலாற்றையும் காணலாம். ஆனால் மனுநீதிச் சோழன் என்ற பெயருக்குப் பதில் 'சிவலிங்கசோழன்' என்றும், அவனது துணைவியின் பெயராக பத்மவல்லி என்றும் காணப்படுகிறது. இதில் இம் மன்னனே சப்தவிடங்க ஸ்கலங்களை நிர்மாணித்தான் என்றும் கூறுகிறது. இவனுடைய மகன் வீரசோழன் என்றும், இவன் தனது பெயரால் காவிரிக்குக் கிளை நதியாக வீரசோழனாறு எடுத்தான் என்றும் இப் புராணத்தில் காணப் படுகிறது. இதைப்போன்றே சோமயாஜி மாறநாயனார் வரலாற்றைத் திருக்கடவூர்த் தல புராணத்திலும், திரு மாகாள தலபுராணத்திலும் காணலாம்.

ஸ்ரீத்யாகராஜ முசுகுந்த ஸஹஸ்ர நாமாவளி: இது சரஸ்வதி மஹால் நூலகத்தில் (எண்: 22272) காணப்படும் சுவடி. இந்த சஹஸ்ரநாமம் 1959ல் அச்சாகியுள்ளது. இதில் இத்தலத்தின் தல புராணங்களில் காணப்படும் செய்திகளை வெகுசிறப்பாகக் கூறுகிறது தியாகராஜஸ்வாமி ஆரூர்வந்த ஐதிஹ்யத்தில் தொடர்புகொண்டவர் முசுகுந்த சக்ரவர்த்தியும், இந்திரனும். இந்திரனுக்குச் சண்டாளத் தன்மையைப் பற்றிய நாமாவாக 'புரந்தர மஹாகோர சண்டாளத்வ விமோசகாய நம: (676) என்று பேசப்படுகிறது. மேலும் தியாகேசருடைய விக்ரஹம் ஸோமாஸ்கந்த முஹூர்த்தமாகும். இதன் முன்பக்கம் ஹ்ருதய பாகத்தின் மேல் பட்டயம் அமைத்து அதில் 'ஸ்ரீவித்யா மஹா மந்திரத்தை' வைத்திருப்பதை, 'அஷ்டாவிம்ஸதி மந்த்ராத்ம பலகா கீலி தாஸநாய நம:' (120) என்று ஒரு நாமம் நமக்கு உணர்த்துகிறது. இதனால் தியாகப் பெருமானுடைய திருமேனியில் மறைந்து கிடக்கும் செய்தியை நாம் எளிதில் அறிய முடிகிறது. இந்த சஹஸ்ரநாமத்தில் சுந்தரமூர்த்தி ஸ்வாமிகள், சோமயாஜி மாறநாயனார், விறன்மிண்ட நாயனார் போன்ற அடியார்களின் பெருமைகளைப் பரக்கக் காணலாம். செங்கழுநீர் ஓடை, செங்கழுநீர் புஷ்பம், தியாகராஜ லீலை தியாக விநோதம் என்னும் வாஸனைத் திரவ்யம் ஆகியவைகளையும், குறிப்பாக ஆலயம் பற்றிய சின்னஞ்சிறு அம்சம் கூட இந்த நாமாவளியில் விடுபடவில்லை.

ஹம்ச நடனம், அசபா நடனம் என்று கூறப்படுகிறது. இது சிறந்ததோர் யோக வித்தையைக் குறிப்பதாகும். இது 'அஜபா கல்பம்' என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது இவ்வுடலில், 'ப்ராணன்' என்ற மூச்சுக்காற்று உட்சென்று வெளிவருவதான உச்வாஸ நிச்வாஸங்களில் ஏற்படும் லயத்தில் சாரீரகமான 'ஆத்மா' (தாளத்தில்) ஆடிக்கொண்டே இருக்கிறது. உள்ளே செல்லும் காற்று 'ஹம்' என்ற ஒலியின் மூலம் 'அஹம்' (நான்-ஜீவன்) என்ற தத்துவத்தை விளக்கும். வெளிச்செல்லும் காற்று 'ஸ' என்ற ஒலியின் வாயிலாய் 'ஸ:' (அது) என்ற பரப்ரம்ஹத்தைக் குறிக்கும். இப்படியாக நான்-அது (அஹம்-ஸ:) அல்லது 'ஹம்ஸ:' என்ற அத்வைத தத்துவமான ஹம்ஸ வித்யை இது குறிப்பதால் இந்த அஜபா நடனத்திற்கு 'ஹம்ஸ நடனம்' என்றும் பெயர் உண்டு. இதை விளக்கவே மஹாவிஷ்ணுவின் மார்பில் தியாகேசர் வீற்றிருப்பதாயும், புருஷோத்தமனாகிய புருஷனின் உஸ்வாஸ நிஸ்வாஸங்களின் எழுச்சி-வீழ்ச்சிகளால் அவர்மார்பின் மேல் அமர்ந்திருக்கும் தியாகேசமூர்த்தி ஆடுவதாயும் சித்தரித்துக்காட்டி வருகிறது. இந்த நடனம் பற்றிய செய்தியை 'ஷட்சதாதிக விம்ஸைக ஸஹஸ்ர அஜபயான் விதாய நம: (498) விடங்க விஷ்ணுஹ்ருதய நிவாஸோத் ஸுக மானஸாய நம:(125) என்னும் நாமாக்களால் இதனை அறியலாம்.

சிவபக்த விலாஸம் என்னும் நூல் 'சேக்கிழார் பெருமானால் இயற்றப்பட்ட பெரிய புராணத்தின் மொழியாக்கம். இந்த நூலில் ஆரூர் சிறப்பு, சுந்தரர் வரலாறு ஆகிய செய்திகளைக் காணலாம். உபமன்யு முனிவராலியற்றப்பட்டதாக இந்நூல் கூறப்படுகிறது.

தோத்திர நூல்கள்: இத்தலத்துறையும் இறைவன் தியாகராஜரைக் குறித்து பல தோத்திர நூல்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில அச்சில் வெளிவந்துள்ளன. அச்சில் வெளிவாராத நூல்கள் பல இருக்கின்றன. இத்தோத்திரங்களில் சில, மஹா புராணங்களிலிருந்து தொகுக்கப் பெற்றவைகளாகவும்; மற்றும் சில பிற்காலத்தில் வடமொழி புலவர்களால் இயற்றப்பட்டவைகளாகவும் கொள்ளலாம். உதாரணமாக **தியாக ராஜ ஸ்தவம்** என்னும் நூல் மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளாலியற்றப் பெற்றது. இவர் தியாகேசரின் தொண்டர். நீலகண்ட தீக்ஷிதரின் வழித் தோன்றல். இந்த நூற்றாண்டின்

முற்பகுதியில் வடமொழியில் பெரும் புலவராகத் திகழ்ந்தவர். இவரைப் போலப் பிற்காலப் புலவர்களால் இயற்றப்பெற்ற பல தோத்திர நூல்கள் காணப்படுகின்றன.

மஹா புராணங்களிலிருந்து தோன்றிய பல தோத்திரங்களைத் தொகுத்துமுள்ளனர். அத்தகைய தோத்திர நூல்களில் தியாகராஜாஷ்டகம், (இப்பெயரிலேயே ஆறு நூல்கள் வெவ்வேறு வகையான தோத்திரங்களாகக் காணப்படுகின்றன) தியாகேச ஸ்துதி, கமலாலய ஸ்துதி, தியாகராஜஸ்தவம், தியாகராஜ ஸ்தோத்திரம் ஆகியவைகள்.

மோஹினீவிலாசக் குறவஞ்சி : தமிழிலக்கியத்திற்கே உரிய குறவஞ்சி இலக்கியம் வடமொழிக்கு ஆக்கம் செய்யப்பெற்றுள்ளது. மேலும் இந்த நூலில் தமிழ் மொழியின் யாப்பிலக்கணப்படி வடமொழியில் ஸ்லோகங்கள் புனையப்பெற்றுள்ளன. இந்த நூல் தஞ்சையை அரசாண்ட மராட்டிய மன்னனான இரண்டாம் சகஜியின் (1684--1710) அரசவைப் புலவரால் இம்மன்னனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப் பட்டது. இந்த இசை, நாட்டிய நாடகத்தில் இம்மன்னனுடைய ஆன்மமூர்த்தியான தியாகராஜர் மீது துதியும், நாடகத்தின் ஆரம்பப் பாடலான 'தோடய தரு' வும் இயற்றி யுள்ளார் இதன் ஆசிரியர். இதில் தலைவன் மீது காதல்கொண்ட தலைவி தலைவனை காணாது வருந்தும்போது தியாகேசனிடம் முறையிடுவதைப்போல கவிஞர் பாடலை அமைத்திருக்கிறார். "இறைவா! எனது காதலன் உன்னுடைய அடியவன். அவன் வேறு ஒருவனிடம் கொண்ட காதலால் அவன் என்னை நாடி வரவில்லை. அவனைப் பிரிந்ததால் நான்படும் துன்பத்தை எங்ஙனம் உரைப்பேன்? உமது மனம் மகிழும் வண்ணம் தொழுது உம்மைச் சரணமடைந்தேன். ஆனால் பிறைசூடிய பெருமானாகிய நீர், நீதிதவறி என்னைக் காக்க மறுக்கிறீர். இதுமுறையோ?'' என்கிறாள். இதில் சந்திரன்செய்த பிழைக்காக தக்ஷன் கொடுத்த சாபத்தால் அவனது கலைகள் குறைந்தன தனது நிலையையுணர்ந்த சந்திரன் இறைவனின் திருவடியில் வீழ்ந்து சரணமடைய இறைவன் அவனுக்கு அருள்புரிந்து, தன் காலில் விழுந்தவனை எடுத்துத் தலையில் சூடிக் கொண்டான். அன்று முதல் பிறைசூடியாக சந்திரசேகரனாகக் காட்சியளித்தான். அவனைக் காத்த நீர் என்னைக் காவாதிருப்பது நீதியோ? நானும் உம்மைச் சரணடைய வில்லையா? நீதிகாக்கும் தாங்களே நீதிதவறலாமா? என்ற 'தொனி'யுடன் வேண்டு கின்றாள்.

இதைப் போலவே, உம்மை வழிபடும் அடியவர்களுக்கு அவர்களின் விருப் பத்தைப் பூர்த்திசெய்து சுகத்தைக் கொடுக்கிறீர். ஆயின், எனக்குமட்டும் கொடுக்க வில்லையே! நீர் ஸோமஸ்கந்த மூர்த்தியாக தேவி - முருகனுடன் சுகமாகத்தானே இருக்கிறீர்? நான்மட்டும் இன்னும் கன்னியாக இருக்கிறேனே. எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யாதிருக்கிறீர் என்பது தொனி. இப்படியாக ஆரூர் நாயகனைப்பற்றிய செய்தி கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. மற்றும் இம்மன்னனியற்றிய கீர்த்தனங்களிலும், நாடகங்களிலும் தியாகேசன் மீது இயற்றிய பல வடமொழிப் பாடல்கள் இடம்பெற்று உள்ளன.

கலிவிடம்பனம் என்னும் கமலாலய மாகாத்மியம்:

இத்தலைப்பு 'திருவாரூரின்' சிறப்பைக் கூறுவதாக இருக்கும்' என்ற கருத்தை இந்த நூலின் தலைப்பு உணர்த்தினாலும் நூலில் காணப்படும் செய்தி அங்ஙனமில்லை. மராட்டிய மன்னன் இரண்டாம் சகஜியின் ஆட்சிக் காலத்தில் திருவாரூரிலிருந்த யானை

வைத்திய சாலையில் நடைபெற்ற ஊழலைப் பற்றிக் கூறுகிறது. இது காவியம் போன்ற அமைப்புடன் யானை வைத்தியன், அதிகாரிகளின் அட்டூழியங்களை மன்னனுக்குத் தெரிவிக்கின்றான். இதனை ஒரு சீட்டுக்கவியென்றும் கூறலாம். ஊழலை அறிந்த மன்னன் உரிய நடவடிக்கை எடுத்து நீதிவழங்கியதாகவும் பின்னால் அறிய முடிகிறது. இக் காப்பியத்தின் மூலமாக வைத்திய சாலைக்கு வைத்தியத்திற்காக மட்டும் 40 யானைகளும், பல யானைக் கன்றுகளும் இருந்துள்ளன. மராட்டியர்களின் யானைப்படைகளுக்கும், குதிரைப் படைகளுக்கும் திருவாரூரிலேயே மிகப்பெரிய வைத்திய சாலையிருந்ததாக அறிய முடிகிறது. இந்த யானைகளுக்குத் தேவையான பால், நெய், தயிர், மோர் ஆகியவைகளுக்காக சுமார் 2000 பசுமாடுகள் வளர்க்கப்பட்டதாகவும் அறியலாம். இதனால் மக்களுடைய வளம் எத்தனை சிறப்பாக இருந்திருக்கும் என்பதை ஊகிக்க முடிகிறது. மேலும் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் எழுந்த அஸ்வசாஸ்திரம் – கஜசாஸ்திரம் என்னும் நூல்கள் ஆரூரிலிருந்த வைத்தியனொருவனால் வடமொழியிலுள்ள மூல நூலுக்கு மராட்டி மொழியில் உரை எழுதப் பெற்றுள்ளது

ஆக, சோழ மன்னர்களின் காலந்தொடங்கி மராட்டிய மன்னர்களின் காலம் வரை 'திருவாரூர்' தஞ்சையின் முக்கிய கேந்திரமாக இருந்திருக்கிறது. ஆரூர்பற்றிக் கூறும் வடமொழி நூல்கள் பல உள்ளன. ஆயின் இங்கு சில நூல்களே குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவாலய அமைப்பும் மகாகும்பாபிஷேக தத்துவமும்

திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தருமபுரம்.

1. சிவாலய அமைப்பு :

சிவபெருமானே முழுமுதற் பரம் பொருளாக விளங்கும் தெய்வம் ஆவார். 'சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லை' என்பது ஆன்றோர் மொழி. மகாதேவன், தேவாதிதேவன் என்பன சிவபெருமான் ஒருவரையே குறிக்கும் பெயர்கள் ஆகும். சிவாலயங்கள் அத்தெய்வத்தின் திருவருளைப் பெறுதற்குரிய இடங்கள். பூமியின் அடியில் தண்ணீர் எங்கும் பரவியிருந்தாலும் கிணற்றின் வழியாகவே அத்தண்ணீரை நாம் பெறுவது போல, சிவபரம்பொருள் எங்கும் வியாபித்திருந்தாலும் அவர் திருவருளைச் சிவாலயங்களிலுள்ள மூர்த்திகளின் வாயிலாகவே நாம் பெறமுடியும்.

ஆலயம் : அலயம் என்பதற்கு, கடவுளின் திருவடி இன்பத்தில் ஆன்மா லயப்படுதற்குரிய இடம் என்பது பொருள். ஆ-ஆன்மா. லயம் லயமாவதற்குரிய இடம். இதனைத் தமிழில் கோயில் எனக் கூறுவர். கோ-கடவுள். இல்-தங்குமிடம். ஆலயங்களை ஊர் நடுவே அமைத்து அதைச் சூழ வீடுகளைக் கட்டச்செய்து ஊர்களை அமைத்துள்ளனர் நம் முன்னோர். திருக்கோயில் வழிபாட்டை வற்புறுத்துவதையும், திருக்கோயில்கள் ஊர்கள்தோறும் அமைந்திருப்பதன் அவசியத்தையும் அறிவுறுத்துகின்றன திருமுறைகள்.

ஆலயங்கள் ஆகமங்களையொட்டி நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. எந்த ஆகமத்தை யொட்டி ஒரு ஆலயம் அமைக்கப்பட்டதோ அந்த ஆகம விதிகளைப் பின்பற்றி அக்கோயில்களில் நாள் வழிபாடு, சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெறும்.

ஆலய அமைப்பு : ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரண்டு வகைப்படும். ஒன்று நம் உடல் அமைப்பை யொட்டியது. மற்றொன்று நம் இதய அமைப்பை யொட்டியது. கோயில்கள் நம் உடம்புபோல அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை, 'க்ஷேத்திரம் சரீரப் பிரஸ்தாரம்' என்பர். இதனைத் திருமூலர்,

'' உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே ''

எனக் கூறுகிறார். ஆலயங்கள், காப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் முதலிய அமைப்புக்களுடனும், ஐந்து அல்லது மூன்று, இரண்டு, ஒன்று என்ற பிராகாரங்களுடனும், கோபுரம், யாக சாலை, நந்தி, பலிபீடம், கொடிமரம் முதலியவற்றுடனும் விளங்கும்.

அண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளும், பிண்டத்தில் காணப்படும் பாகுபாடுகளும், ஆலயங்களில் அமைந்துள்ளன எனக் கூறுவர். அண்டத்தில் சுத்தமாயை, சுத்தா

சுத்தமாயை, அசுத்தமாயை என மூன்றுபிரிவுகள் உண்டு சிவாலயத்தில் கர்ப்பக் கிருகம்-சுத்தமாயை. மகாமண்டபம்-சுத்தாசுத்தமாயை. வெளிப்பிராகாரம்-அசுத்தமாயை.

பிண்டமாகிய நம் உடலில் தலை, கழுத்து, மார்பு, நாபி பாதம் என ஐந்து பிரிவுகள் உண்டு. சிவாலயத்தைப் புருஷ வடிவாகக் கொண்டால் கர்ப்பக்கிருகம்-தலை. அர்த்தமண்டபம் - கழுத்து. மகாமண்டபம் - மார்பு. யாகசாலை - நாபி. கோபுரம்-பாதம்.

உடலில் வாய், நாக்கு, அண்ணாக்கு, பஞ்சேந்திரியங்கள், இருதயம், உயிர் என்பன உள்ளன. ஆலயம்-உடல் கோபுரம்-வாய் நந்தி-நாக்கு. த்வஜஸ்தம்பம்-அண்ணாக்கு. தீபங்கள்-பஞ்சேந்திரியங்கள். கர்ப்பக்கிருகம்- இதயம். சிவலிங்கம் உயிர்.

உடலில் அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் போலவும் தூலசரீரம் சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுக சரீரம், காரண சரீரங்கள் போலவும் ஐந்து பிராகாரங்களும் ஐந்து சபைகளும் உள்ளன உடலில் உள்ள மூலாதாரம் முதலான ஆறு ஆதாரங்கள் போல, கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் முதலானவை உள்ளன. சிவாலயம் செங்கல் முதலாகிய எழுவகைப் பொருள் களால் ஆனது. உடலும் தோல், இரத்தம் முதலிய எழுவகைத் தாதுக்களால் ஆகி யுள்ளது.

இதய அமைப்பில் கோயில் விளங்குவதைப் பின்வருமாறு விளக்குகின்றன நூல்கள். சிவபெருமானைப் புறத்தே பூசிப்பதைப்போல், அகத்தே பூசிப்பதற்கு முப்பத்தாறு தத்துவ வடிவாக இதயக்மலம் கற்பிக்கப்படுகிறது. அதில் பிருதுவி கிழங்கு. அப்பு முதல் காலம் ஈறாகிய-24தத்துவங்கள்-எண்விரல் அளவினதாகிய நாளம், மாயை-நாளத்துக்கும் பூவுக்குமிடையிட்டமொட்டு. சுத்தவித்தை-எட்டிதழ், ஈச்சரம் 64 கேசரம். சாதாக்கியம்-பொகுட்டு. விந்து-விதை. நாதம்-விதைமுளை. இவை கர்ப்பக்கிருகமும் தூபிகளுமாகக் கூறப்படும்.

ஆன்மா மூலாதாரத்தில் புருடனுடன் கூடியிருந்து, நாபியில் பிராணனுடன் கூடி யும், இதயத்தில் சித்தத்துடன் கூடியும், கண்டத்தில் 22 தத்துவங்களுடன் கூடியும் புருவ மையத்தில் அனைத்துத் தத்துவங்களுடன் கூடியும் விளங்கல்போல, பெருமான் ஆலயத் தில் கர்ப்பக் கிருகத்தில் சிற்சத்தியுடனிருந்து அடுத்தடுத்த மண்டபங்களில் வரும்போது முறையே பல தெய்வங்களும் புடைசூழ எழுந்தருளுகிறார். இவை போன்ற விளக்கங் களால் ஆலயம் நம் உடல் அமைப்பை ஒட்டி வகுக்கப் பெற்று உள்ளது என ஆக மங்கள் பலவும் கூறும்.

சிவாலயத்தில் பெருமான் அநுக்ரக நிக்ரக வடிவங்களாகிய சோமாஸ்கந்தர் காமதகனர் முதலான உருவத் திருமேனிகள் கொண்டும் சிவலிங்கமாகிய அருவுருவத் திருமேனி கொண்டும் விளங்குகிறார். எல்லாத் தெய்வங்களுக்கும் சிவாலயத்தில் இடமுண்டு ஆதலின் சிவாலயம் சர்வதேவதா சொருபம் எனக் கூறுகின்றன நம் சமய நூல்கள்.

சிவாலயத்தில் கோபுரம் - தூலலிங்கம். கருப்பக் கிருகம் - சூக்குமலிங்கம். சிவலிங் கம் - காரணலிங்கம் எனவும். தூபி - தூலலிங்கம், சிவலிங்கம் - சூக்குமலிங்கம், பலி பீடம் - பத்திரலிங்கம் எனவும் கூறப்பெறும். கோபுர தரிசனத்தை இறைவனது பாத

தரிசனம் எனக் கூறுவர். இதனை, அண்ட பிண்டங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் இறைவனது விராட்சொரூபம் (பேருருவம்) எனக் கூறுவர்.

விமானம் : கருப்பக்கிருக விமானங்கள் நாகரம், திராவிடம், வேசரம் என மூவகைப் படும். பீடம் முதல் அனைத்தும் சதுரமாயுள்ள விமானம் நாகரம் எனப்படும். கண்டம் முதல் வட்டமாக உள்ள விமானம் வேசரம் எனப்படும். கண்டம் முதல் எட்டுக் கோணமுள்ள விமானம் திராவிடம் எனப்படும். ஆண் விமானமாக நாகரத்தையும் பெண் விமானமாகத் திராவிடத்தையும் அலி விமானமாக வேசரத்தையும் கூறுவர்.

விமானத்தின் கீழ்ப்புறம் முருகனையும் தென்புறம் தக்ஷிணாமூர்த்தியையும் மேல் புறம் விஷ்ணுவையும் வடபுறம் பிரமனையும் சுதையால் அமைப்பர். விமான மேல் பாகத்தில் இடபம், பூதம் முதலிய சுதைகள் அமைக்கப்பெறும்.

சிவலிங்கம்:

லிங்கம் என்பதற்குக் குறி என்பது பொருள். குறி-அடையாளம். லிங்கம் என்ற சொல்லை லிம்+கம் எனப்பிரித்து லிம் என்பதற்குச் சராசரங்கள் அனைத்தும் ஒடுங்குமிடம் எனவும் கம் என்பதற்கு ஒடுங்கிய அப்பொருள்கள் மீளத் தோன்றுவதற்குரிய இடம் எனவும் பொருள் கூறுவர். காணமுடியாத இறைவனைக் காணுவதற்குரிய அடையாளமே சிவலிங்கமாகும். சிவலிங்கத்தின் அடிப்பாகம் பிரம பாகம் எனவும் ஆவுடையார் விஷ்ணு பாகம் எனவும், பாணம் ருத்ர பாகம் எனவும் கூறப்படும். லிங்கம்-நிஷ்களம், சகளநிஷ்களம், சகளம் எனவும், அவ்யக்தம், வயக்தா வ்யக்தம், வ்யக்தம் எனவும் அருபம் ரூபாருபம், ரூபம் எனவும் கூறப்படும். நிஷ்களம்-அருவநிலை. சகளநிஷ்களம-மூலத்தானச் சிவலிங்கம், சகளம்-நடராசர் முதலிய சிவமூர்த்தங்கள். சிவலிங்கங்கள் பல வகைப்படும். தானே தோன்றியதைச் சுயம்புலிங்கம் எனவும், விநாயகர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டதைக் கணலிங்கம் எனவும், இருடிகளால் தாபிக்கப்பட்டதை ஆரிடலிங்கம் எனவும், அசுரர் இராக்கதர்களால் தாபிக்கப்பட்டதை தைவிக லிங்கம் எனவும், மனிதர்களால் தாபிக்கப்பட்டதை மானுடலிங்கம் எனவும் கூறுவர். இவை கீழிருந்து முறையே ஒன்றின் ஒன்று உயர்ந்தாகக் கூறப்படும்.

ஐந்தொழில்:

சிவபெருமான் ஆன்மாக்களின் பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்தருளுவார். இப்பஞ்சகிருத்தியம் நித்யபஞ்சகிருத்தியம், மகாபஞ்சகிருத்தியம் என இருவகைப்படும். உயிர்கட்கு உடலை கொடுத்தல் பிராரத்தகன்மப் புசிப்பிற்கு உடலை நிறுத்தல் தூல உடம்பைச் சங்கரித்தல் ஆணவவலியை அடக்கல், திருவடி இன்பம் தருதல் ஆகியன நித்யபஞ்சகிருத்யம்.

மாயையிலிருந்து தனு கரண புவன போகங்களைத் தோற்றுவித்தலும், அவற்றை நிறுத்தலும். அவற்றைத் தத்தம் காரணத்தில் ஒடுக்கலும், பக்குவம் வரும் அளவும் கன்மங்களைப் புசிப்பித்தலும், ஆன்மாக்களைத் திருவடி நீழலில் சேர்த்தலும் ஆகியன மகா பஞ்ச கிருத்தியமாகும். இவ்விரு வகைப் பஞ்சகிருத்தியங்களையும் ஆலயங்களில் நடைபெறும் நித்திய பூசையும் உற்சவமும் உணர்த்தும்.

நித்யபூசையில் அபிடேகம்-சிருஷ்டி. அலங்காரம்-திதி. தூபம்-சங்காரம். கற்பூரதீபம்-திரோபவம். கற்பூரக்கிளை தீபம்-அனுக்கிரகம். இவற்றை அபிடேகம்,

நைவேத்யம், நீராஞ்சனம், பலி, பலிநாயகர் எழுந்தருளலோடு இணைத்துக் கூறுவது முண்டு. உற்சவத்தில் துவஜாரோகணம்-சிருஷ்டி. வாகனாதி உற்சவங்கள்-திதி. இரதோத்சவம்-சங்காரம், மௌனோத்சவம்-திரோபவம். தீர்த்தோத்சவம்-அனுக்ரகம்.

சிவாலய தரிசனம்:

சிவாலய தரிசனம் ஒவ்வொருவருக்கும் மிக அவசியமானது. அப்பர் சுவாமிகள் திருவங்கமாலையில் சிவவழிபாட்டின் சிறப்பை விரிவாக உணர்த்தியருளுவதைக் காணலாம். சிவாலய தரிசனம் செய்வோர் நீராடிப் புனிதமுடையவராய்ப் பிராகாரங்களை வலம் வந்து உள்ளே சென்று பலிபீடம், நந்தி, கொடிமரம் ஆகியவற்றைத் தரிசித்து வீழ்ந்து வணங்கி உள்ளே சந்நிதியை அடைந்து சிவதரிசனம் செய்தல்வேண்டும்.

ஆலயங்களுக்குச் செல்வோர் இயன்ற அளவு இறைபணி செய்யவேண்டும். விளக்கு, பூமாலை, பழம் முதலியன கொண்டு சென்று வழிபடல் வேண்டும். அறுகாலங்களில் செய்யப்படும் பூசைகளை வழிபடுவதால் விளையும் பயன்களைப் பின்வரும் வெண்பா தெரிவிப்பதைக் காணலாம்.

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்-மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்."

சைவசமய அடிப்படைத் தத்துவங்களை, ஆலயமும் அங்கு நடைபெறும் வழிபாடும் நமக்கு உணர்த்துகின்றன. சிவலாயத்தில் விளங்கும் சிவலிங்கம்-பதி, நந்தி-பசு, பலிபீடம்-பாசம். பசு, தம்மைப் பிணித்திருக்கும் பாசங்களின் நீங்கிப் பதியை அடைதலைப் பலவகைகளில் ஆலயம் நமக்குக் காட்டுகிறது.

ஞானிகளுக்கும் ஆலயவழிபாடு இன்றியமையாதது என்பதைச் சிவஞானபோதம்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே."

என்னும் நூற்பாவால் தெரிவித்தருளக் காணலாம்.

2. கும்பாபிஷேக தத்துவம்:

இறைவன் எழுந்தருளும் இடங்களைக் கும்பம், பிம்பம், தம்பம் என மூவகையாகக் கூறுவர். ஆலயங்களைப் புதுப்பித்தற்கு அங்குள்ள பிம்பம் தம்பம் ஆகியவற்றில் விளங்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து கோயிலைப் புதுப்பித்தபின் அங்குள்ள திருவுருவங்களில் அபிடேகத்தின் மூலம் மீண்டும் அம் மூர்த்திகளைச் சேர்ப்பித்தலைக் கும்பாபிஷேகம் எனக் கூறுவர். கும்பாபிஷேகம் குடமுழுக்கு, திருக்குட நன்னீராட்டு என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும். பிரதிஷ்டை எனவும் கூறப்பெறும்.

பிரதிட்டை வகை: ஆலயப் பிரதிஷ்டை நான்கு வகைப்படும். அவை 1. ஆவர்த்தம் 2. அநாவர்த்தம், 3. புனராவர்த்தம், 4. அந்தரிதம் என்பனவாம்.

ஆவர்த்தம்: ஓர் ஆலயத்தைப் புதிதாகக் கட்டி முடித்து, பலாலய மூர்த்தியைக் கும்பத்தில் ஆவாகனம் செய்து பூசித்து மூலத்தானத்தில் அம்மூர்த்தியை எழுந்தருளச் செய்து, அதற்கு அபிஷேகம் செய்தல் ஆவர்த்தம் எனப்படும்.

அநாவர்த்தம்: ஆற்றுப் பெருக்காலோ, பெருமழையாலோ, நில அதிர்வுகளாலோ,மணல் மூடியதாலோ பல ஆண்டுகள் பூசை இல்லாமல் இருந்த ஆலயத்தைக் கட்டி முடித்துவிக்ரகங்கள் முதலியவற்றைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்தல் அநாவர்த்தம் எனப்படும்.

புனராவர்த்தம் : கருப்பக்கிருகம், விமானம், பிராகாரம், கோபுரம், பலிபீடம் முதலியவைகளில் பழுது ஏற்பட்டாலும், அஷ்டபந்தனத்தில் பழுது உண்டானாலும், விமான விக்ரகங்களில் பழுது நிகழ்ந்தாலும், வர்ணம் அழிந்திருந்தாலும் சுவாமியைப் பாலாலயம் செய்து ஆலயத்தைப் புதுப்பித்து மூலத்தானத்தில் மீண்டும் சுவாமியைப் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் புரிதல் புனராவர்த்தம் எனப்பெறும். இது ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் எனவும் வழங்கப்பெறும்.

அந்தரிதம் :

ஆலயத்தில் திருட்டு நிகழ்ந்தாலோ, சண்டாளன், நாய் முதலியன உள்ளே புகுந்தாலோ, சுவாமியின் பிரத்தியங்கம், உபாங்கம் போன்றவைகளுள் பழுது ஏற்பட்டாலோ உடனே அவைகளைத்திருத்தி மாகும்பாபிஷேகம் செய்தல் அந்தரிதம் எனப் பெறும், இதற்கு நாள் நக்ஷத்திரம் பார்க்கவேண்டியதில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை செய்யவேண்டுமென்பது ஆகம விதி. இவ்வாறு செய்யப்படும் மூர்த்திகளிலேயே தெய்வசாந்நித்தியம் மிக்கிருக்கும்.

அஷ்டபந்தனம்:

எட்டு வகையான மருந்துகளை அந்தந்த அளவோடு கூட்டி மூர்த்திகள் பீடத்திலிருந்து அசையாதவண்ணம் சாத்தப்பெறும் மருந்து அஷ்டபந்தனம் எனப்பெறும். சுக்கான் 3 பங்கு, குங்குலியம் 2 பங்கு, கொம்பரக்கு 1 பங்கு, தேன்மெழுகு, காவிக்கல், செம்பஞ்சு இவை வகைக்கு $\frac{3}{4}$ பங்கு,சாதிலிங்கம் $\frac{1}{4}$ பங்கு இந்த அளவில் கூட்டி நன்றாக மர உரலில் இடித்துச் சேர்க்கப்பெறும் இம்மருந்தை, மூர்த்திகளுக்குச் சாத்துதல் வேண்டும். இது கும்பாபிஷேகத்தில் செய்யப்படும் முக்கிய கிரியையாகும். சிவசக்தியைச் சிவலிங்கத்தில் என்றும் இருக்குமாறு செய்ய இக்கிரியை உதவுகிறது.

இது பக்குவம் அபக்குவம் என இருவகைப்படும். பக்குவம் என்பது முற்கூறியவாறு இடித்துச் சேர்க்கப்பட்ட அஷ்டபந்தன மருந்தை அடுப்பில் வைத்து நன்றாகக் காய்ச்சிக் கைபொறுக்கும் சூட்டில் ஆறவைத்துப் பீடத்திற்கும் மூர்த்திக்கும் நடுவே உள்ள இடைவெளியில் நீர் முதலான அபிஷேகப் பொருள்கள் உள்ளே நுழையா வண்ணம் கையாலும் கரணை சலாகை ஆகியவற்றாலும் சார்த்துதலாம். மூர்த்திகளுக்கு ஏற்ப மருந்தை,கைபொறுக்கும் பதத்தில் உருக்கி ஊற்றவும் செய்யலாம். இது மானுட பந்தனம் எனப்படும்.

அபக்குவம் என்பது முற்கூறிய மருந்தை மரஉரலில் இட்டு நன்றாகக் கலந்து சூடாகி இளகிவரும்வரை இடித்துச் சார்த்துதலாம். இந்த முறையே அஷ்டபந்தன மருந்து சார்த்துதலில் சிறந்ததாகும். இது தெய்வீக பந்தனம் எனப் போற்றப்படும்.

கிரியைகள் : கும்பாபிஷேகத்திற்கு அங்கமாகச் செய்யப்படும் கிரியைகள் அறுபத்து நான்காகும். சில ஆகமங்கள் ஐம்பத்தைந்து என்றும் கூறும். அவற்றுள் அனுக்ஞை, கணபதி பூஜை, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கும்பஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகசாலை, பிம்பசுத்தி, ஸ்பர்சாகுதி முதலியன இன்றியமையாதன. 'அனுக்ஞை'-ஆசாரியனைத் தேர்ந்து எடுத்து அவரை இறைவன் அனுமதி பெற்றுக் கும்பாபிஷேகம் செய்வித்தற்கு நியமனம் செய்தலாம். 'கணபதி பூஜை'–காரியம் இடையூறின்றி நிகழ நிகழ்க்கும் வழிபாடு. வாஸ்து சாந்தி-பூமியைச் சுத்தம் செய்தல். மிருத்சங்கிரணம்–மண் எடுத்தல். அங்குரார்ப்பணம்-முளையிடுதல். ரக்ஷாபந்தனம்-காப்புக்கட்டுதல். பிம்பசுத்தி-மூர்த்திகளைத் தூய்மை செய்தல். ஸ்பர்சாகுதி மூர்த்திகளுக்குச் செய்யப்படும் யாகப்பயன்களை மூர்த்திகளிடம் சேர்த்தல் இவ்வாறே ஒவ்வொரு கிரியையும் யாகசாலையில் நிகழும்.

கும்பம் : யாகசாலையில் எழுந்தருளுவிக்கப்பெறும் கும்பங்கள் அந்தந்த மூர்த்திகளின் திருவுருவங்களாகும். கும்பத்திலமைந்த பொருள்கள் அனைத்தும் அம்மூர்த்திகளின் உடற்கூறுகளாகக் கருதப்படும். கும்பவஸ்திரம்-தோல். மேல்பூசிய செம்மண்–இரத்தம். கும்பத்துமண் - மாமிசம். நீர் – மேதை. சுற்றியநூல்–72 ஆயிரம்நாடிகள். உள்ளிடு ரத்தினம்-சுக்கிலம். கூர்ச்சம்–எலும்பு. மாந்தளிர்-மயிர். தேங்காய்-சிரம். கீழிடு நெல் முதலியன–ஆசனம். மந்திரம்-பிராணன். இவ்வாறு கும்பம் சிவசொருபமாகப் பாவிக்கப்பெறும். கோயில் திருவுருவங்களில் உள்ள தெய்வீக சக்தியைக் கும்பத்தில் ஆவாகித்து யாகசாலைக்கு எழுந்தருளச் செய்து உபசரித்து மகிழ்வித்தல் வேண்டும்.

கலாகர்ஷணம் : கலைகள் பதினாறு, அவை–அகாரம், உகாரம், மகரம், விந்து, பிறைமதி, நிரோதினி, நாதம், நாதாந்தம், சக்தி, வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உன்மனை என்பனவாம். நம் மூலாதாரத்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி, சமனை வரைகொண்டு சென்று, பாசங்களை நீக்கி, உன் மனையில் சுத்தமானதாகப் பாவித்து, அதன்மேல் இருக்கும் சிவத்தினிடம் சேர்த்துப் பிராசாத மந்திரத்துடன் கலந்த சிவத்தை ரேசகம் என்னும் பிராணாயாம வகையால் கையில் இருக்கும் பூவில் எழுந்தருளச்செய்து கும்பத்தில் இருக்கச் செய்யும் கிரியை கலாகர்ஷணம் எனப்படும்.

யாகசாலை : யாகசாலை 36 தத்துவ சொரூபமாகவும், சிவபெருமானது அட்டமூர்த்த வடிவமாகவும், ஆறு அத்துவாக்களின் வடிவாகவும் கூறப்படும். யாகமண்டபம்-சாந்தியதீதகலை. பந்தல்கால்கள்-பதம். மண்டபநடு–வர்ணம். கும்பம்–மந்திரம். ஓமப்பொருள்-தத்துவம் யாகசாலை அமைந்துள்ள இடம்–புவனம் நான்கு வாயில்கள்–நிவிர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி என்ற கலை. வேதிகை-ஆதாரசக்தியுடன் கூடியதாக அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்ற ஐந்து ஆசனங்களை உடையது.

கும்பாபிஷேகம் : யாகசாலையில் ஒன்பது குண்டங்களில் அக்னி வளர்க்கப்படும்; அவை நாற்கோணம், முக்கோணம், அர்த்தசந்திரம் முதலிய வடிவங்களில் காணப்படும்;

குண்டங்களைச் சுற்றிப் பசுந்தர்ப்பைகளைப் பரப்பி ஆல் அரசு முதலிய சமித்துக்களை குண்டத்தில் இட்டு, கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்னி கொண்டு அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி அதிதெய்வங்களை மனத்தில் தியானித்து, சுருக்கு சுருவம் என்னும் கருவிகளைக் கொண்டு நெய்சொரிந்து அவி வளர்க்கப்படும். மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றாலும் வழிபாடு நிகழும் ஓமகுண்டத்தில் எழும்புகையும், வேதம் சிவாகமம் திருமுறை ஒலிகளும் அன்பர்களின் நல்லெண்ணங்களும் எங்கும் வியாபித் திருக்கின்ற இறைவனது அருட்சத்தியைத் தூண்டிக் கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். அப்போது கும்பம் முழுமையான தெய்விக சக்தியோடு திகழும். இவ்வாறு யாகசாலையில் நடைபெறும் கிரியைகள் முற்றுப்பெற்றவுடன் அச்சக்தி ஆலயத்திலுள்ள மூர்த்திகளுக்கு தருப்பைக்கயிறு. பொன் வெள்ளிக் கம்பிகளால் சேர்ப்பிக்கப்படும். அதன்பின் கும்பத்தி லுள்ள நீர், சிகரங்களுக்கும் பிம்பங்களுக்கும் அபிடேகம் செய்யப்பெறும். விமான கலசம் மூல மூர்த்தியின் சக்தியை உலகெங்கும் பரவச்செய்து நன்மைகளை உலகிற்கு உண்டு பண்ணும்.

மகாபிஷேகம்: கும்பாபிஷேகம் செய்வித்தபின் இறைவன் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளுக்கு முறைப்படி விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்வித்தற்கு மகாபிஷேகம் என்று பெயர்.

மண்டலாபிஷேகம்: கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்களுக்கு மூர்த்தி களுக்கு விசேஷ அபிஷேகம் செய்வித்துப் பூர்த்தி செய்வதை மண்டலாபிஷேகம் என்று கூறுவர்.

கும்பாபிஷேகப் பலன்: கும்பாபிஷேகம் பெருஞ்சாந்தி எனப்பெயர்பெறும். திருஞான சம்பந்தர் சிறந்த ஆலய விழாக்களைக் குறித்து அருளிச்செய்த பூம்பாவைத் திருப்பதிகத் தில் பெருஞ்சாந்தி விழாவைக் கண்டுகளிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், கண்டுகளித்தல் ஆகியன மிக்க சிவபுண்ணியத்தை நமக்கு ஈட்டித்தரும் சிறப்புடையன. பெருஞ்சாந்தி விழாவைச் செய்பவர் செய்விப்பவர் காண்பவர்கள் இருமை இன்பங்களையும் எய்தி இன்புறுவர்.

அருள்மிகு கல்யாண ரெங்கநாதசுவாமி திருக்கோயில்
திருநகரி (அஞ்சல்), சீர்காழி வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

(திருமங்கை ஆழ்வார் அவதாரத் தலம்)

108 வைணவ ஆலயங்களில் சிறப்புடையதும் ஸ்ரீகுலசேகர ஆழ்வார், ஸ்ரீதிருமங்கை ஆழ்வார் இருவராலும் மங்கள சாசனம் பெற்ற தலமும், ஸ்ரீபெருமாளை திருமணக்கோலத்தில் எழுந்தருளி திருவேடுபறி செய்யப்பட்டு, திருமங்கை மன்னனுக்கு திருமந்திர உபதேசம் செய்தருளிய தலமும் இதுவே ஆகும். கிழக்கு முகமாக எழுந்தருளி யுள்ள ஸ்ரீயோக நரசிம்ம பெருமாள் பிரார்த்தனை மூர்த்தியாக அருள்பாலிக்கின்றார்.

சீர்காழிப் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 10 கிலோமீட்டர் தொலைவில் சீர்காழிப் பெருந்தோட்டம் பேருந்து மார்க்கத்தில் உள்ளது. திருப்பணி நடைபெற்று குட முழுக்கு செய்யப்பட உள்ளது. திருப்பணிக்குப் பொருள் உதவி செய்ய கேட்டுக் கொள்கிறோம்.

S. இராஜேந்திரன்,
செயல் அலுவலர்.

S. கோவிந்தசாமி பிள்ளை,
தக்கார்/திருப்பணிக்குழுத் தலைவர்.



வைணவம்

S. வாசுதேவன்,
கண்காணிப்பாளர், ஆணையாளர் அலுவலகம், சென்னை.

இந்து சமயத்தில் வைணவமும் சைவமும் இரு கண்களாகப் போற்றப்படுகின்றன. பண்டைக் காலத்தில் தோன்றிய பௌத்த ஜைன மதங்கள் மதமொழி இன்மையால் அழிந்து போயின. ஆனால் தமிழ் நாட்டில் இரண்டு மதங்கள் தமிழை அடிப்படையாகக் கொண்டதால் வைணவமும் சைவமும் வேரூன்றியிருக்கின்றன. வேதங்கள் தாம் தொன்மையான நூல்கள். இவற்றுள் 'ரிக் வேதம்' என்பது மிகவும் பழமையான நூல். இதனுடைய காலம் கி.மு. 2000 ஆண்டுகள் எனக் கொள்ளலாம் மேற்படி ரிக் வேதத்தில் புருஷஸூக்தத்தில் நாராயணனே பரம் பொருள் என ஸ்ரீவிஷ்ணு போற்றப் பட்டுள்ளார். விஷ்ணு என்பதற்குப் பொருள் எங்கும் நிறைந்தவர் (சர்வ வியாபி) என்பதாகும். ஸ்ரீ - மகாலட்சுமியைக் குறிக்கிறது. மகாலட்சுமியான திருமகளோடு கூடின மகாவிஷ்ணுவைக் கொண்டமதம் வைணவ மதம்.

மகாவிஷ்ணுவைப் பரம் பொருளாகக் கொண்டவர்கள் வைணவர்கள். மகாவிஷ்ணு காத்தல் தொழிலைச் செய்பவர் மேலும் மோட்சத்தைக் கொடுப்பவர். படைத்தல் தொழிலை செய்பவர் பிரம்மா. அழித்தல் தொழிலைச் செய்பவர் சிவ பெருமான். ஆனால் காத்தல் தொழிலைச் செய்து மோட்சத்தைக் கொடுப்பவர் மகாவிஷ்ணுவான நாராயணனே ஆகும். இதனைப் பின்வரும் கதை முலம் நாம் அறியலாம்.

ஒரு காலத்தில் கஜேந்திரன் என்னும் அரசன் சாபத்தினால் சபிக்கப்பட்டு யானை உருக்கொண்டு ஆஜ்மீர் என வழங்கும் நகருக்குப் பக்கத்தில் உள்ள புஷ்கரம் என்னும் ஊரில் இருந்து கொண்டு அங்குள்ள பெருமானுக்கு தினந்தோறும் ஏரியில் உள்ள தாமரை மலரை எடுத்து வந்து அர்ச்சித்து வந்தது. ஒருநாள் ஏரிக்குச் சென்று தாமரை மலரைப் பறிக்கையில் முதலை ஒன்று அதன் காலைக் கவ்விப்பிடித்துக் கொண்டது.

அப்பொழுது யானை தன்னுடைய காலை விடுவித்துக்கொள்ள முடியாமல் வலியினால் துடித்தது. அதற்கு எந்த தெய்வத்தைக் கூப்பிட்டு உதவிக்கு அழைப்பது எனத் தெரியவில்லை. எனவே உலகத்திற்கெல்லாம் முதல்வனும் ஆதியுமான 'ஓ ஆதிமுலமே' எனக் கதறியது. மேற்படி யானையினுடைய பெருங் கூக்குரலானது முதலில் பிரம்ம லோகத்தை எட்டியது. பிரம்மா தனது பக்கத்தில் உள்ள சரஸ்வதியான கலைமகளை நோக்கினார். யார் இந்த நேரத்தில் 'ஓ ஆதிமுலமே' எனக் கூக்குரலிடுவது எனக்கேட்டுச் செய்வதறியாது நாம் இல்லை. ஒருவேளை சிவபெருமான் அல்லது மகாவிஷ்ணுவாக இருக்கும் என நினைத்து யோகத்தில் ஆழ்ந்துவிட்டார்.

மேற்படி யானையினுடைய கூக்குரலானது கைலாயத்தை எட்டியது. அப்பொழுது சிவபெருமான் பார்வதி தேவியுடன் ஆனந்த தாண்டவமாடிக் கொண்டிருந்தார். மேற்படி யானையின் கூக்குரலைக் கேட்டதும் பார்வதியை நோக்கி

யார் இந்த நேரத்தில் 'ஓ ஆதிமூலமே' எனக் கூக்குரலிடுவது எனக் கேட்டு ஒரு வேளை மகாவிஷ்ணுவாக இருக்குமோ என எண்ணி மீண்டும் ஆனந்த தாண்டவ மாடத் தொடங்கிவிட்டார்.

கடைசியில் மேற்படி யானையின் கூக்குரல் வைகுண்டத்தை எட்டியது. வைகுண்டத்தில் மகாவிஷ்ணு மகா லட்சுமியுடன் சொக்கட்டான் விளை யாடிக் கொண்டிருந்தார். மேற்படி யானையின் கூக்குரல் கேட்டதும் மகா விஷ்ணுவின் முகத்தில் உடனடியாக ஒரு தயக்கமும் இரக்கமும் தோன்றின. இதைக் கவனித்த மகாலட்சுமி ஏன் தங்கள் முகம் வாடிவிட்டது. என்ன காரணம் எனக் கேட்டார். அதற்கு மகா விஷ்ணு என்னுடைய பக்தன் ஆபத்தில் இருந்துகொண்டு 'ஓ ஆதிமூலமே' என என்னை உடனடியாக உதவிக்கு அழைப்பதால் நான் உடனடியாகச் செல்லவேண்டும் எனக் கூறி, உடனடி யாக விளையாடிக் கொண்டிருந்த நிலை யில் வஸ்திரங்களைக் கூட சரி செய்து கொள்ளாமல் முதலில் தன்னுடைய சக்கராயுதத்தை அனுப்பி விட்டுக் கருட னின் மேல் ஏறி விரைந்தார். பின்னர் சக்கராயுதத்தால் முதலையை அழித்து கஜேந்திரனுக்கு மோட்சத்தைக் கொடுத் தார்.

மேற்படி நிகழ்ச்சியிலிருந்து மோட் சத்தைத் கொடுப்பவர் மகாவிஷ்ணுவே எனத் தெரியவருகிறது. மேற்படி நிகழ்ச்சி யானது தற்பொழுது சித்திரை மாதம் பௌர்ணமியன்று வைணவத் தலங்களில் கஜேந்திர மோட்சம் எனக் கொண்டாட பட்டு வருகின்றது. தமிழில் உள்ள பழமை யான முதல் நூல் தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் அகஸ்தியருடைய எட்டு சீடர்களில் ஒருவர். மேற்படி பழமையான முதல் நூலான தொல்காப்பியத்தில் மகா விஷ்ணுவை 'மாயோன்மேய' என வர்ணித்துள்ளது. திருவள்ளுவரும் திருக் குறளில் 'இறைமாட்சி' அதிகாரத்தில் 'திருவுடைமன்னரை காணின் திருமாலைத் கண்டேனே' எனக் கூறியுள்ளார். மனு சாஸ்திரத்திலும் அரசனாக வேண்டு மானால் திருமாலின் அம்சம் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. நம்மாழ்வாரும் 4ம் பத்து 4ம் திருவாய் மொழியில் மண், பாம்பு காணும் பொருட்கள் யாவற்றிலும் நாராயணனையே கண்டார். தொல்காப் பியர் சூத்திரத்திலும் பூவைநிலை என்பதில் அரசனையும் திருமாலையும் ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் ஆய்ச்சியர் குரவை யிலும் இளங்கோ அடிகள் திருமாலைப் பற்றி நிறையக் குறிப்புகளில் குறிப்பிட்டு உள்ளார். பரிபாடல் சங்கத் தொகையில் 7 பரிபாடல்கள் மகாவிஷ்ணுவான திரு மாலைத் குறிக்கிறது. மற்றும் கலித்தொ கை புறநானூறு போன்ற நூல்களும் திரு மாலைப் போற்றுகின்றன. சங்கத் தமிழ் காலத்தில் வைணவம் சிறந்தமதமாக இருந்தது. வைணவ சம்ப்ரதாயம் திருவடி யைத் தொழுவதாகும். அனைத்து தெய் வங்களுக்கு முகவேறுபாடுகள் இருப் பினும் (உதாரணமாக பிரம்மாவுக்கு நான்கு முகங்கள், சிவபெருமானுக்கு ஐந்து முகங்கள், திருமாலுக்கு நான்கு திருக்கைகள் முருகனுக்கு அறுமுகங்கள்) திருவடி பொதுவாக இரண்டுதான். எனவே திருவடியைத் தொழுவது சாலச் சிறந்தது என வைணவர்களின் முக்கிய கொள் கையாகும்.

ரிக்வேதத்தில், திருமால் திரிவிக்ரம அவதாரத்தில் மூன்றடி தம் திருவடியால் அளந்த பெருமை சிறப்பாகக் கூறப் பட்டுள்ளது. திருவள்ளுவரும் தமது 610, 1103வது குறள்களில் முறையே 'அடி யளந்தான் தாயஅது எல்லாம் ஒருங்கு, எனவும், தாமரைக்கண்ணான் உலகு' எனவும் திருவடியைப் பற்றிப் போற்றி யுள்ளார். வைணவர்கள் இன்றும் கருடனை, 'பெரிய திருவடி' என்றும்

அநுமனைச் சிறிய திருவடி என்றும் போற்றித் தொழுவதும் மரபாக உள்ளது.

ராமானுஜர் விசிஷ்டாத்வைதத்தில் வைணவ தத்துவங்களை மூன்று தத்துவங்களாகக் கூறியுள்ளார். அவை சித்து-உயிர் அசித்து-ஆத்மா (சடபொருள்) ஈஸ்வரன்-இறைவன், இறைவனான திருமாலுக்கு சித் அசித் இரண்டும் முழு அங்கங்கள். ஆத்மாவினுடைய வடிவம் மிகவும் சிறியது இறைவனான திருமாலின் பரமபதத்தை யடைய சம்சாரம் என்னும் ஐம்புலன்களை அடக்கித் திருவடியில் சரணடைய வேண்டும். இதுவே 'சரணாகதித் தத்துவம் எனப்படும். இறைவனான திருமால் புரியும் தொழில்கள்.

பரத்துவம்—வைகுண்டத்தில்,
வியூகம்—பாற்கடலில்,
அந்தர்யாமி—உள்ளத்திலும், பொருளிலும்.
அவதாரங்கள்—பத்து அவதாரங்கள்,
அர்ச்சாவதாரம்—திருக்கோயில்களில் உள்ள விக்ரங்கள்.

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய அனைத்து பாசுரங்களும் அர்ச்சாவதாரத்தைப் பற்றியது மட்டும் தான். திருக்கோயில்களில் உற்சவ காலங்களில் பெருமாள் எழுந்தருளும் பொழுது ஆழ்வாகள் பாடியுள்ள திராவிட வேதமான தமிழ்ப் பாசுரங்கள் பெருமாளுக்கு முன்னாலும் வடமொழி திவ்ய பிரபந்தங்கள் பின்னாலும் செல்வதை இன்றும் காணலாம். இதிலிருந்து திராவிட வேதமான தமிழ்பாசுரங்களுக்கு வைணவர்கள் தரும் ஏற்றத்தைக் காணலாம். வேதங்கள் மண்குடம் எனவும் திவ்வியப் பிரபந்தங்கள் பொன் குடம் எனவும் போற்றப்படுகின்றன.

'கோயில்' என்றாலே வைணவர்களுக்கு ஸ்ரீரங்கத்திலுள்ள அரங்கநாதர் திருக்கோயிலே முக்கியமான திருத்தலமாகும். ராமானுஜர் திருவரங்கத்தில் நடத்தப்படவேண்டிய பூஜைமுறைகள் உற்சவங்கள் முதலியவைகளை ஏற்படுத்தினார். பூஜை முறைகளைச் செய்வதற்கு வேதம் ஓதியவனாக இருக்கவேண்டும் என்ற நியதியை மாற்றி வைணவனாக இருக்க வேண்டும் என்ற நியதியாக மாற்றினார். திருக்கோஷ்டியூருக்கு இராமாநுஜர் பதினெட்டு முறை சென்றார். திருக்கோஷ்டியூர் நம்பியும் அவருக்கு கடைசியில் எட்டெழுத்து திருமந்திரமான 'ஓம் நமோ நாராயணா' என்ற மந்திரத்தை உபதேசித்துமேற்படி மந்திரத்தை சோதித்து தேர்ந்தவர்களுக்கு மட்டும் உபதேசிக்கும்படியும் அப்படியில்லையேல் நரகம் போவாய்எனவும் கூறினார். ராமானுஜர் அதற்கு, தாம் ஒருவன் நரகம் போனாலும் பரவயில்லை ஆனால் நான் உபதேசிக்கும் அனைவரும் உபதேசத்தை பெற்று வைகுண்டம் செல்லட்டும் என எண்ணித் திருக்கோயிலின் விமானத்தின் மேலே ஏறி அனைவரையும் நோக்கி பெரும் கூக்குரலில் எட்டெழுத்து திருமந்திரத்தை உபதேசம் செய்தார். இதற்காக ராமானுஜர் 'வரம்பு அறுத்தார்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

ராமானுஜர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு மூன்று விக்ரகங்கள் செய்யப்பட்டன. அவற்றுள் ஒன்று கர்நாடக மாநிலத்தில் உள்ள திருநாராயணபுரத்தில் குலோத்துங்கச் சோழன் காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ராமானுஜர் திருநாராயண புரத்திற்குச் சென்று 18 வருடங்கள் தங்கியிருந்தார். திருநாராயண புரத்தில் பிரதிஷ்டை செய்த விக்ரகம் "தமர்உகந்த திருமேனி" எனப் புகழ் பெற்றது. பிறகு ராமானுஜர் ஸ்ரீரங்கத்திற்கு திரும்பினார். ராமானுஜர் இறக்கும் தறுவாயில் சிற்பி ஒரு விக்ரகத்தை உருவாக்கினார். ராமானுஜரே மேற்படி விக்ரகத்தை தழுவிக்கொண்டு தம் சக்தி முழுமையையும் மேற்படி விக்ரகத்தில் பிரயோகம் செய்தார். மேற்படி விக்ரகம் தற்பொழுது ஸ்ரீபெரும்புதூரில் உள்ளது. இஃது "தாம் உகந்து தழுவிக்கொண்ட

திருமேனி'' எனப் புகழ்பெற்று விளங்குகிறது. பின்னர் ஸ்ரீரங்கத்தில் வசந்த மண்டபத்தில் இராமானுஜருடைய திருமேனி,விக்ரகத்துக்குள் அடக்கப்பட்டு "தானான திருமேனி''யாக தற்பொழுதும் பிரபலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மேற்படி நிலைதனையே வைணவர்கள் ' தானான திருமேனி'' ''தமர் உகந்த திருமேனி'' ''தாம் உகந்து தழுவிக் கொண்ட திருமேனி''எனமூன்று விக்ரகங்களையும் பெருமைப்படுத்திப் போற்றி ஏற்றம் கொள்வர்.

வேதாந்ததேசிகர் கி. பி. 1268 முதல் கி. பி. 1369 வரை தோன்றி வாழ்ந்தவர். இவர் ஸ்ரீரங்கத்தில் ரெங்கநாதர் பிரதிஷ்டை செய்யும் சமயம் இருந்தவர். மனிதர்கள் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்கள் யாவை என்று உலகிற்கு உபதேசித்த பிறகு அதன்படி தாமும் நடக்க முயற்சி செய்பவர்கள் பலர். ஆனால் தர்மங்களைத் தாம் முதலில் அனுஷ்டித்துக்காட்டிய பிறகே உலகுக்கு உபதேசித்தவர்கள் புருஷோத்தமனான ஸ்ரீராமனும், ஆசார்ய சார்வபௌமரான ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஆகிய இருவருமே தனிஅவதாரசிறப்பு பெற்றவர்கள் ஆவர். வேதாந்ததேசிகர் வாழ்நாள் முழுவதும் சற்றும் ஓய்வில்லாமல் வடமொழியிலும் தென்மொழியிலும் 112 கிரந்தங்களை இயற்றினார். ஓர் இரவின் ஒரு யாம காலத்திற்குள் (அதாவது 3 மணி காலத்திற்குள்) ஸ்ரீரங்கநாத பாதுகையைப் பற்றி ''பாதுகா சஹஸ்ரம்'' என்னும் ஆயிரம் சுலோகங்களை இயற்றினார். வேதாந்த தேசிகர் திவ்ய பிரபந்தங்களை ஒப்புக்கொண்டிருக்கிறார். ''ரஹஸ்ய கிரந்தாசாரம்'' என்ற நூலில் ஜாதியை ஒழிக்கமுடியாது என்ற கருத்தையும் வலியுறுத்தியதோடு ஐந்தாவது குலமான பாணர் குலத்தில் தோன்றிய திருப்பாணாழ்வார் பாடிய 'அமலனாதிபிரான்' என்று தொடங்கும் பத்து பாசுரத்திற்கு மட்டும் வியாக்கியானம் எழுதியுள்ளார். ஆனால் திவ்வியபிரபந்தங்கள் முழுமைக்கும் பிள்ளை லோகாச்சாரியார் தான் வியாக்கியானம் எழுதியுள்ளார்.

மணவாள மாமுனிகள் என்பவர் வேதாந்த தேசிகர் காலத்திற்குப் பின்னர் வாழ்ந்தவர். இவரும் பல கிரந்தங்களை இயற்றியுள்ளார். இவரைப் பற்றி ஒரு சிறிய நிகழ்ச்சி: இவர் ஸ்ரீரங்கத்தில் திருக்கோயிலில் உபன்னியாசம் செய்துகொண்டிருக்கையில் ரெங்கநாதருக்கு இவருடைய உபன்யாசத்தைக் கேட்க மிகவும் ஆவல் எழுந்ததாம். ஆனால் எப்படி இவருடைய உபன்யாசத்தைச் சென்று கேட்பது என யோசித்து ஒரு சிறிய குழந்தை வடிவம் எடுத்துக்கொண்டு தவழும் குழந்தை போல் வந்து உபன்யாசத்தைக் கேட்டு இன்புற்றதுடன் சிறுபிள்ளையாய் நின்று ஸ்ரீசைலேசதயாபாத்ரம் பக்யாதி-குணார்ணவம்| யதீந்தப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம்|| என்று மேற்படி ஸ்ரீ மணவாளமாமுனிகள் தனியனைதிருவாய் மலர்ந்தருளினார் என்பது வரலாறு. இன்றும் ஸ்ரீரங்க திருக்கோயிலில் சந்தனு மண்டபத்தில் வலப்புறத்தில் வாயிற்படியின் மேல் ஓரத்தில் ரெங்கநாதர் குழந்தை வடிவத்தில் வந்து உபன்யாசத்தைகேட்டு இன்புற்ற இடத்தைக் காணலாம்.

வைணவ ஆகமங்கள் 1) பாஞ்சராத்திரம் 2) வைகானசம் என இரு வகைப்படும். பாஞ்சராத்திர ஆகமமானது பகவானாலேயே உபதேசிக்கப்பட்டதாகும். இதில் பூஜை முறைகள் மிகவும் எளிதானதாக இருப்பதுடன் தந்திர முறைகள் அதிகம் உள்ளது. ஆனால் வைகானஸ ஆகமமானது ரிஷிகளின் மூலமாக (ரிஷிப்ரோக்தம் எனப்படுவது)உபதேசிக்கப்பட்டது இதில் பூஜை முறைகள் சற்று கடினமாக உள்ளதுடன் மந்திரங்களும் அதிகம். வைணவர்களுக்கு, முக்கியமான 'கோயில்','திருமலை', 'பெருமாள்கோயில் எனப்படும் மூன்று திவ்யதிருத்தலங்களில் 'கோயில்' எனப்படும் ஸ்ரீரங்கத்திலும்.'

'பெருமாள் கோயில்' எனப்படும் காஞ்சி புரத்திலும் பாஞ்சராத்ர ஆகமமுறை பின்பற்றி பூஜை முறைகள் நடைபெறு கின்றன. திருமலை எனப்படும் திருப் ப்தியில் வைகானஸ ஆகம முறைப்படி பூஜை முறைகள் நடைபெறுகின்றன.

வைணவர்களுக்கு 108 திவ்ய திருத் தலங்கள் முக்கியமாக அமைந்துள்ளன. மேற்படி திருத்தலங்களிலுள்ள மூர்த்தி களைப் பன்னிரு ஆழ்வார்களும் திவ்ய பிரபந்தங்கள் மூலம் பாடியுள்ளனர். பன்னிரு ஆழ்வார்களும் திராவிடத்தில் வைணவ பக்தியை வித்தியவர்கள் ஆவர். இவர்களுடைய பக்திப் பாடல்களில் பக்தி யோடு தமிழ் வளர்த்த ஆழ்வார்களின் இதயத்துடிப்பைத்தான் காண்கின்றோம். ஒரு கோதைக்கு அரங்கன் விஷயமாக முண்டவிரஹத்தை 'மீராவின் வீணை கிரி தாரி மீது தொடுக்கும் உருக்கிசை'யாக மாற்றுகிறது. தொண்டரடிப்பொடி ஆழ்வா நடைய திவ்யாநுபவமே துளஸிதாசருக் கும் ஏற்படுகிறது, ஆழ்வர்கள் வருணிக் கும் ஆயர்மடந்தை நப்பின்னையே சைதன்யரின் ராதையாக உருவெடுக் கிறாள். சைதந்ய பகவானும்தென்னாட்டு யாத்திரையின் கிருஷ்ண பக்தியைப்பற்றி நீரங்கத்தில் எவ்வளவோ விஷயங்களை சேகரித்துக்கொண்டு செல்கிறார்.

இவ்வாறு ஆழ்வார்கள் ஊன்றிய பக்திவிதை ராமானுஜர், நிகமாந்ததேசிகர் இவர்கள் வளர்த்த பெருமரமாகத் தழைத்து விட்டது. ராமானுஜர் காலத்தி லும், வேதாந்த தேசிகர் காலத்திலும் இந்த விசிஷ்டமான மதத்திற்குப் பேர திர்ச்சி ஏற்பட்டாலும் இந்த வைஷ்ணவ சித்தாந்தம் உறுதியாகவே நிற்கிறது. விஜய நகரத்து மன்னர்கள் அரண்போல் இதனைக் காத்தனர். கிருஷ்ணதேவராயர் பாடிய 'ஆமுக்தமால்யத' என்ற இணை யற்ற தெலுங்குப் பிரபந்தம் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி அரங்கன் மீது கொண்ட காதலைத் தான் கூறுகிறது.

வைணவமதத்தில் தற்பொழுது இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று வடகலை மற்றொன்று தென்கலை. இவ்விரு பிரிவு களான வடகலையாருக்கும் தென்கலை யாருக்கும் உள்ள முக்கிய வேற்றுமைகள்.

மொழி வேற்றுமை:

வடகலை—வடமொழிக்கு முதலிடம்
தென்கலை—தென்மொழிக்கு முதலிடம்

வேதக் கருத்து வேற்றுமை:

வடகலை— வேதத்துக்கு முதலிடம் இரண்டாவது தான் திவ்விய பிரபந்தங்கள்.
தென்கலை— திவ்ய பிரபந்தத்திற்கு முதலிடம் வேதத்திற்கு இரண்டாவது இடம்

கொள்கை வேற்றுமை:

வடகலை— பகவானை அடைவது பக்தனுக்கு லாபம்.
தென்கலை— பகவானை அடைவது பகவானுக்கு லாபம்.

பாத்திர வேற்றுமை: தனியன்

வடகலை— 'ராமானுஜதயா பாத்ரம் எனத் தொடங்கும்
தென்கலை— 'ஸ்ரீ சைலேசதயா பாத்ரம் எனத் தொடங்கும்

ஆசார்ய வேற்றுமை:

வடகலை— வேதாந்த தேசிகர்
தென்கலை— மணவாள மாமுனிகள்

வைணவத்தில் விஷ்ணுவின் ஆயிரம் நாமத்தைச் சொல்லும் விஷ்ணு சஹஸ்ர நாமம் எனப்படும் நூல் மிகவும் முக்கிய மானது. ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களும் மிக வும் முக்கியமானவை.

எனவே இத்துணை பெருமை வாய்ந்த விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்த நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் மற்றும் வேதங்கள் உபநிஷத்துக்கள் முதலான நூல்களை நாமும் தினசரி அநுசந்தித்து இம்மை மறுமைப் பயன்களை அடைவோமாக என ஸ்ரீமந்நாராயணனை இருகரம் கூப்பி சேவித்து விடை பெறுகிறேன் வணக்கம்.

சிற்பக் கலைச் சிறப்பு

டாக்டர், கலைமாமணி. திரு. எஸ். எம். கௌரிசங்கர் ஸ்தபதி,
25, மாடல் ஹவுஸ் ரோடு, சி. ஐ. டி. நகர், நந்தனம், சென்னை.

எங்கு பார்த்தாலும் தெய்வீகத் தென்றல் வீசும் தமிழ்த் திருநாட்டிலே அன்பு, அறம், அஹிம்சை எனும் சம தர்மத்தை வளர்த்து இல்லறத்தாரை ஆத்ம ஞானிகளாக்கவல்ல சக்தியைக் கொண்டு எழிலோங்கி நிற்பது ஆலயம்.

புண்ணிய நதிகளையும் புண்ணிய தீர்த்தங்களையும் அரும்பெரும் குளங் களையும் கொண்டு அன்பு வெள்ளத்தால் நீராட்டி தீய குணத்தை மாற்றி புனிதப் படுத்தி வருவித்துக் கொள்வது ஆலயம். இப்படிப்பட்ட ஆலயம் ஆதியில் ஏன் தோன்றியது என்பதை அறிந்து கொள் வது அவசியம். ஆதியில் சிற்பம் எப்படி தோன்றியது என்பதை அறிந்து கொண் டால் தான் இலக்கியத்தில் சிற்பகாட்சி களைக் காண முடியும் எனவே சுருக்கமாக கூறுகிறேன்.

கலைகளுக்கெல்லாம் ஆதி புருஷனாக விளங்கும் ஸ்ரீஸதாசிவமூர்த்தி பூலோகத் திலுள்ள மக்களோடுபிறந்த காம,குரோத லோப, மோக, மதம், மாச்சர்யாதிகளால் கட்டுண்டு மாய்ந்து போகா வண்ணம் ரக்ஷிக்கக் கருணை கொண்டார். எனவே சகல தேவாதி தேவர்களையும், மகரிஷி களையும்,தபோதனர்களையும் அழைத்து சிற்ப சாஸ்திரத்தைக் கூறுமாறு ஆக்ஞா பித்தார், ஸதாசிவத் தெய்வம்.

தேவர்கள் சர்வேஸ்வரனின் சிருஷ்டி யின் நியதியில் மயங்கி கூற இயலவில்லை உடனே பராசக்தி விஸ்வகர்மாவை நினைவுபடுத்த ஸதாசிவமூர்த்தி விராட் விஸ்வகர்மாவை அழைத்து சிற்ப சாஸ் திரத்தைக் கூற ஆக்ஞாபித்தார். சிற்பம் ஜகத் ஜீவனம் என்று உடனே சிற்ப சாஸ்திரம் இயற்றி அதில் இலக்கிய இலக்கணம் வகுத்துக் கூறினார்.

விஸ்வகர்மாவே மனம்கனிந்து இந்த சிற்ப சாஸ்திரத்தைப் பராசரர், பிருகு, காசிபர், மரீசி, மார்க்கண்டேயர் முதலிய மஹரிஷிகளுக்குச் சொல்ல இவர்களால் பல சிற்பசாஸ்திரம் இயற்றப்பட்ட பின் முடிவில் முப்பத்தி இரண்டு சிற்ப சாஸ் திரங்கள் இருந்ததாக ஆன்றோர் கூறு கின்றார்கள். அந்த சிற்ப சாஸ்திரங் களின் பெயர்கள் பின்வருமாறு :

1) சித்திரம் 2) விருத்தம் 3) விஸ்வபோதம் 4) விஸ்வகாசிபம் 5) விசாலம் 6) விஸ்வ தர்மம் 7) விஸ்வேசம் 8) விஸ்வசாரம் 9) வஜ்ரம் 10) வித்யாபதி 11) மான ஸாரம் 12) மனுமான் 13) மானபோதம் 14) மயிந்திரமால் 15) மயமானபோதம் 16) மயன்மதம் 17) மயநீதி 18) மிகுதா வட்டம் 19) காலயூபம் 20) கபிலம் 21) கற்பாரியம் 22) கலந்திரம் 23) நளம் 24) பானு 25) பராசரீயம் 26) சிருஷ்டம் 27) சைத்தியகம் 28) நாமஸம்ஹிதை 29) ஸாத்விகம் 30) ஆதிசாரம் 31) ஆரிடகம் 32) ஸௌம்யம்.

இப்படிப்பட்ட சிற்ப சாஸ்திரம் கேட்பாரற்று மறைந்து போகும் சமயம் ஸ்ரீகாஞ்சிகாமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமியவர்களும் 1962 ஆம்

ஆண்டில் இளையாத்தங்குடியில் உயிர் கொடுத்தருளி அன்று பல ஊர்களில் உள்ள ஸ்தபதிகளையும் அழைத்துப் பாராட்டி மகிழ்ந்தார்கள். ஆண்டுதோறும் ''வியாஸ பூஜா வித்வத் ஸதஸில்'' சிற்ப சாஸ்திரங்களையும் ஆகம சாஸ்திரங் களையும் ஆராய்ச்சி செய்து வருவதால் இனி சிற்பம் ஜீவிக்கும் என நினைக் கிறேன். அதோடு புராதனக் கலைகளை யும் கலைஞர்களையும் பாராட்டி வரு கிறார்கள்.

எனவே இலக்கியமும் சிற்பமும் சிவ சக்தி தத்துவம் கொண்டது. சிற்பத்தைப் பார்த்து இலக்கியமும், இலக்கியத்தில் சிற்பமும் இருந்து இந்தியாவின் பெருமை தெரிவதற்குக் காரணமாக இருந்தது தமிழகம். பண்டையத் தமிழகம் மிகப் பரந்திருந்தது; இன்றுஉள்ள குமரிமுனைக் குத் தெற்கே பெரிய நிலப்பகுதி விரிந் திருந்தது. அதில் செழிப்புற்றிருந்த பல நாடுகளும் அதில் அடங்கிய சிற்பக்கலை கோவில்களும் இரு நதிகளும் இந்துப் பெருங்கடல் பொங்கி அழிந்தனவென்று சிலப்பதிகாரமும் புறநானூறும்கூறியதால் புலனாகின்றன.

அதன்பின் கபாடபுரம் ஏற்படுத்தி பாண்டியர் தலைநகராகி அங்கு தொல் காப்பியம் இயற்றப்பட்டது. அந்நகரமும் கடல் விழுங்கி விட்டதால் மதுரை மாநகர் பாண்டிய மன்னர்களின் தலைநகரா யிற்று என்று இறையனார் களவியல் கூறுகிறது. இதே போல் மகாபலிபுரத்தின் சிற்பக்கலை கொழிக்கும் நகரங்களையும் கடல் விழுங்கி விட்டு எஞ்சி நின்ற ஒரு சில சிற்பக் கலைகளும் கற்கோவில்களும் காட்சி அளிக்கின்றன இப்படி எத்தனை எத்தனையோ சிற்பக்கலை பொக்கிஷங் கள் நிறைந்த நாடுகளைக் கடல் விழுங்கி எஞ்சி நின்றதை இன்றும் காண்கிறோம்.

இந்தச் சிற்பக்கலைகள் சங்க காலத் திற்கு முன்பே தோன்றியது என்பதை ஐம்பெரும் காவியங்களில் விவரம் காண லாம். நமது இதிகாசங்களில் சிறந்த இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் வால்மீகி, வியாசர் போன்ற மஹரிஷிகள் சிற்பக் காட்சி களைக் வர்ணித்திருக்கிறார்கள் என்றால் சிற்பம் தோன்றிய காலம் யாரால் அறிய இயலும்? மேலும் எல்லா இலக்கியங் களும் நாட்டின் சிறப்பைக் கூறும் போது சிற்பத்தைச் சித்தரித்து மனதாரக் கூறியிருக்கின்றது. இலக்கியத்தில் சிற்பக் காட்சிகளை நமது கண்முன் நிறுத்துகிறது இதற்குக் காரணம் யாதெனில் சிற்ப சாஸ்திரத்தில் சரியை, கிரியை, யோகம் ஞானம் என நான்கு பாதங்களாகப் பிரித்து ஆகமமும் பேசுகிறது.

மக்களுக்கு, ஞானத்தில் தத்துவத்திரயம் பசு, பதி,பாசம் முப்பொருள் விளக்கமும்; காதகாலட்சேபம்-இசை நிகழ்ச்சி, சொற் பொழிவுகளால் ஆண்டவனை நினை வுறுத்துகிறது. யோகத்தில் ப்ராணாயாமம் முதலிய ஆறு ஆதாரங்களான மூலாதாரம் ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனா கதம், விசுக்தி, ஆக்ஞை என ஆறுநிலை களையும் ஆத்மசுத்தி, அந்தர்யாகம் முதலிய விளக்கமும், கிரியையில் பூபரிக் ஷை நகர கிராம நிர்மாண முதல் ஆலய விக்ரஹ நிர்மாணமும் அதற்கு ஏற்பட்ட மந்திர யந்திர பிரும்மோத்ஸவ பிராய ஸித்த, நித்ய நைமித்திய பூஜாவிதிகளின் விளக்கமும், சரியையில் ஆண்டவன் சிருஷ்டியின் போக்கைச் சித்தரித்து அணுவில் தோன்றி அண்டம் ஈறாக விரிந்து தோன்றியது போல் ஒன்றினுள் ஒன்றி விடும் தன்மையை தீபஹாரத்தி. சோடசோப சரணையில் காணலாம். ஒலி ஓசை, நிறம், ருசி, தரிசனம் எனும் இதை யே தீபம். வாத்யம் அலங்காரம் நைவேத் தியம் மூர்த்தி என்றுவிவரித்துக் கூறுகிறது தீபஹாரத்தியின் தத்துவமானது ஒன்றுபல வாக விரிந்து நால்வகை யோனியில் எழு வகைத் தோற்றங்களாக பிரிந்து வளர்ந்து உணர்ந்து மறுபடி பஞ்ச பூதங்களில் ஒன்

றில் ஒன்று ஒடுங்கி கடைசியில் கற்பூரம் போல் எஞ்சாது எரிந்து இறைவனோடு ஒன்றிவிடும் ஜீவன் என்பதைத் தத்துவ விளக்கமாக ஆலயத்தில் அமைத்து மக்களுக்கு உணர்த்துவது சிற்பக் கலையின் ரகசியம். பிரம்மோத்ஸவம் முதல் கும்பாபிஷேகம் வரை பேசுகிறது. இந்த சிற்பத்தில் இருவகைக் கூறுயிருக்கிறது. ஒன்று மக்கள் வாழ நல்ல பூமியைத் தேர்தெடுத்து நகர கிராமத்தை அமைத்து, திருவீதிகள் வகுத்து அதில் வீடுகள் மாளிகைகள் கட்டி, கிணறு, குளங்கள் அமைத்து தறி, ஏர், தராசு, எழுத்தாணி முதல் பாத்திரம் நகை, ரதம், வண்டி வாகனாதிகள் வரை லக்ஷணம் கூறப்பட்டிருக்கின்றது. அரண்மனை அரசசிம்மாஸனம் முதல் போர்க் கருவிகள் வரை இன்னும் இதில் கூறமுடியாத எல்லாவிதமான உபயோக கருவிகளின் லக்ஷணங்களையும் சிற்ப சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது. இன்னும் ஏராளமான விஷயங்களைக் கூறாது விடுகிறேன். மேலும் கோவிலும் அதைச் சுற்றி மாட வீதிகளும் அதில் அழகிய மாளிகைகளும் வீடுகளும் வகுத்து இருப்பதை இன்றும் காண்கிறோம்.

உதாரணமாக திருவாரூர், சிதம்பரம். ஸ்ரீ ரங்கம், மதுரை, கும்பகோணம் சென்னையில் மயிலாப்பூர் போன்ற திருவீதிகளுடன் இன்றும் ஏராளமான கோவில்களும் குடிமக்களுமாக மாடவீதிகளுடன் திவ்யஸ்தலங்கள் எண்ணிறைந்து இருந்து வருகிறது. இவைகளைக் கண்ட புலவர்களும் கவிஞர்களும் இலக்கியத்தில் சிற்பக்காட்சிகளைப் புகுத்தி நமது மனக்கண் முன்நிறுத்தி ஏன்காட்ட மாட்டார்கள். தென்னாட்டின் ஆலய அமைப்பே அலாதியானது. அதில் அமைக்கும் படிவங்களே நம்மை ஈர்க்கும் சக்தி வாய்ந்தது என்றால் மிகையாகாது. சோடச கணபதி, சோடச சுப்ரமண்யம் சோடச சிவபேதம், அஷ்டாஷ்டா பஞ்சவிம்சதி போன்ற அழகிய த்யான சுலோகங்களில் உள்ள ஷண்மான லக்ஷணங்களோடு மூர்த்திகளைச் செய்து மக்களைப் பக்தியில் ஆழ்த்தி வருகிறார்கள்.

ஒவ்வொரு ஆலயமும் தனது ஜீவிய சரித்திரம் கூறும். ஒவ்வொரு ஊரிலும் சுற்றிலும் உள்ள சோலையும் திருமதிலும், கோபுரமும் கோயிலும், அழகிய விமானமும், நந்திபலிபீடமும் கொடி மரமும் அதன் மணிநாதமும், மண்டபமும் அதன் சாலாகாரமும், கூடசாலைகளும், வண்ண ஓவியமும், கல்லில் பொறித்த காவியமும் துவார பாலகர்களும், சிற்பக் கலை கொழிக்கும் யாளித் தூண்களும், ஏதோ சொல்ல விரும்புவது போன்ற சிலைப் பிரதிமைகளையும் அமைத்துள்ளார்கள். மேலும் பெரிய கோயில்களுக்குப் பெரும் உதவியாக ஆயிரம் கால் மண்டபங்களையும் ப்ரும்மோத்ஸவங்களுக்கு ஏற்ற மண்டபம், யாகசாலை, பாகசாலை, வேத பாடசாலை போன்ற முக்கிய அம்சங்களோடு, கூடியதாக நிர்மாணித்துள்ளார்கள். இசைக் கருவிகள் யாவும் ஆண்டவன் சொத்தாக நினைத்துக் காவியங்களிலே கூறும் தோல்கருவி, துளைக் கருவி, இசைக் கருவி யாழ் முதல் பஞ்சமுக வாத்யமும் கல்லிலும், செம்பிலும் மற்ற உலோகத் தகடுகளிலும் அபூர்வமான வாத்யக் கருவிகளைச் செய்து ஆலயத்தில் அமைத்து வைத்தது சிற்பம். ஆலயங்களின் அங்கமாக விளங்கும் சுவர்களில் சுற்றிலும் நாட்டியப் பிரதிமைகளை எல்லாவித அடைவு ஜதிகளையும் பாத பேதங்களோடு அமைத்து ஸம்யுத அஸம்யுத ஹஸ்தங்களை முத்திரைகளாக கல்லிலே சமைத்து வைத்தார்கள். நாட்டிய நாடகங்களை நடத்துவதற்காக ஆண்டவன் சன்னிதியில் நாட்டிய மண்டபமும் அமைத்துக் கொடுத்தது சிற்பம். மேலும் நாத ரூபமான இசையைத்தான் விட்டுக் கொடுத்ததா சிற்பம். இசைகள் சுதி பேதப்பட்டு விடுமோ! லயங்கள்கெதி மாறி விடுமோ! நாதங்களுக்கு நாணயக்குறை நேர்ந்து

விடுமோ! என்று தமிழ் நாட்டுச் சிற்பிகள் அஞ்சி பயந்து கற்றூண்களில் ஏழிசை யைப் புகுத்தி நிர்மாணித்திருக்கிறார்கள். இன்றும் தென்னாட்டுக் கோயில்களில் இருந்து வருவதை அறிந்து தான் ஔவை மூதாட்டியும் 'கல்லும் சொல்லாதோ கவி, என்று பாடியிருப்பதாக நினைக்கிறேன். அந்த காலத்தில் தென்மொழி, வடமொழி என்ற பேதம் அற்று சமரசமாயிருந்தது என்பதைத் தேவாரம் வலியுறுத்துகிறது அச்சிறுபாக்கம் ஒன்றாம் திருமுறையில் தமிழ்சொல்லும், வடசொல்லும் 'தாணி முற் சேர வம்மவர் கொன்றை அணிந்த வெம்மடிகள்' என்றும்,

திருமறைக்காடு 6 ஆம் திருமுறையில் "முத்தமிழும் நான் மறையுமானான் கண்டாய்" என்பது போல் யாவும் சிற்பக் கலைக் கோவிலில் ஆண்டவன் இடத்தே ஒடுங்குகிறது. மேலும் தென்மொழியும் வடமொழியும் பக்தியும் பண்பும், சைவ, வைஷ்ணவ கௌமார சமயமும் ஓர் கடல் போல் கூடும் கூடல் மாநகரம் தமிழ் இலக்கியமும்,சிற்பக்கலைகளும் சமயமும் ஒன்று சேர்ந்து ஒளிர்ந்து அலை வீசும் ஆலவாயாம் மதுரை. அந்நகரின் பெருமைக்குக் காரணம் திருவிளையாடற் புராணமே. அதில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ் வரர் ஆலயத்தில் கல்லினால் செதுக்கிய அஷ்டகஜங்களில் ஒன்றான கல்யானை கரும்பைத் தின்றது என சிற்பத்திற்கே பெருமை அளித்தான் சித்தர் பெருமான்.

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மணி வாசகர் யாவரும் ஆலயத்தில் வழிபாடு செய்து அவன் புகழை தலங்கள் தோறும் பாடி ஆண்டான் அடிமையானார்கள் தேவார, திருவாசக, திருவெண்பா பாடிய நால்வரின் இலக்கிய சரித்திரங்கள் ஸ்ரீ சேக்கிழார் ஸ்வாமிகள் எழுதிய பெரிய புராணங்களிலே வரும். ஒவ்வொரு அடியார்களும் சிற்பக்கலைக் கோவில் சென்று ஆண்டவனை வணங்கி வழிபாடு செய்து ஜீவன்முக்தர்களானார்கள். வைணவ ஆழ்வாராதிகளும் பாகவதப் பெரியோர்களும் பெருமாளைப் பாடி வணங்கிப் பரமபதம் அடைந்ததை இலக்கியத்தில் சிற்பக் காட்சிகளாகக் காணலாம். அக்கால மன்னர்களும்,பணம் படைத்த சீமான்களும் ஈடு இணையற்ற சிற்பக் கலையைப் பரப்பி தமிழகத்தின் மாண்பை உயர்த்தி இலக்கியம் கூறும் சிற்பக் காட்சிகளைப் புகுத்தித் தமிழ் மக்களுக்குப் பக்தியும் கௌரவமும் பெருமையும் தேடி வைத்தார்கள். எனவே சிற்பங்கள் கல்லில் உள்ள கவிதைகள் என மகிழ்ந்தார்கள் தமிழ் மன்னர்களும் மக்களும்.

இங்கே திருவாரூர் திருத்தலத்தை நினைவுபடுத்துகிறேன். திருநாவுக்கரசர் பாடியுள்ள திருத்தாண்டகத்தில்,

"புகையெட்டும் போக்கெட்டும்
புலன்களெட்டும்
பூதலங்களவை யெட்டும்
பொழில்களெட்டும்
கலையெட்டும், காப்புஎட்டும்
காட்சி யெட்டுங்
கழல் சேவடி அடைந்தார்
கலைகளெட்டும்
நகை யெட்டு நாள் யெட்டு
நன்மை யெட்டு
நலஞ்சிறந்தார் மனத்தகத்து
மலர்கள் எட்டும்
திகையெட்டுங் தெரிப்பதற்கு
முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாகக்
கொண்ட நாளே"

இந்த ஆலயம் நிர்மாணித்த காலத்தைக் கூற இயலாது என்று கூறி முடிக்கிறார் நாவுக்கரசர். இந்த ஆலயத்தில் நால்வரும் ஆண்டவனை பாடி மகிழ்ந்ததை நினைவு படுத்துகிறேன். "கூற்றாயினவாறு" என்று அப்பரும் "பித்தா பிறைசூடி" என்று சுந்தரரும், "தோடுடைய செவியன்" என்று சம்பந்தரும், "ஆதி அந்தமில்லா"

என்று மாணிக்கவாசகரும் பாடியுள்ளார்கள்.

ஆண்டவனைக் கருவறையில் கண்டதும் மெய் உருகிப் பக்திப் பரவசத்தில் ஈடுபட்டுக் கற்பனைக் கெட்டாதத் தேவாரப் பதிகமும் திருத் தாண்டகமும் பிறந்தது என்றால் சிற்பத்தின் சிறப்பை யாரால் கூற இயலும்.

இக்கட்டுரை சிற்பக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்கும் நாட்டியக் கலை ஆராய்ச்சியாளர்களுக்கும், நாடகக்கலை ஆசிரியர்களுக்கும் பேருதவியாக இருக்கும். இக் கலையில் இன்னும் அதிமுக்யமான அபூர்வக் கருத்துக்களைச் சொல்ல இயலாது இக் கட்டுரையை நன்றி வணக்கத்துடன் கூறி நிறைவு செய்கிறேன்.

இந்த திருக்கோவிலில் ஊழியம் பார்த்த நாயன்மார்கள்


திருவாரூர் திருக்கோவில் சைவ சமயத்தை புரந்து சிறந்து விளங்கிய நாயன்மார்களில் சிலரும் திருக்கோவில் ஊழியர்களாக வேலை பார்த்த பெருமையைப் பெற்றுள்ளது. நமி நந்தியடிகள், திருக்கோவிலில் தீபம் போடும் விளக்குகாரராகப் பணியாற்றினார். விறன் மிண்டர் இவ்வாலயத்தின் மெய்க் காவலராக பணிபுரிந்தார். செருத்துணை நாயனார் திருமாலை கட்டியாக வேலை பார்த்துள்ளார். தண்டி அடிகள் திருக்கோவிலின் நிர்வாக அலுவலராகப் பணியாற்றி உள்ளார். தண்டி அடிகள்தான் இத்திருக்கோவிலின் பூஜா திட்டங்களை வகுத்துக் கொடுத்தார் என்று கூறப்படுகிறது.

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அதிகாரி

துலாபார மண்டபம்

இத்திருக்கோவிலின் மூன்றாம் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் துலாபார மண்டபம் அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில்தான் முசுகுந்த சக்ரவர்த்தி ஸ்ரீ தியாகராஜ சுவாமியை பிரதிஷ்டை செய்வதற்காக எல்லா ஊர்களின் மண்ணையும் எடைபோட்டதாக புராணச் செய்தி பேசுகிறது. இந்தப்பகுதியை ஆண்ட மன்னர்கள் இந்த மண்டபத்தில் தன்னுடைய ஜென்ம நட்சத்திரத்தன்று ஆண்டு தோறும் துலாபாரம் ஏறி, திருக்கோவில் பராமரிப்பிற்காகத் தன் எடைக்கு எடை பொன் வழங்கியதாகவும் ஒரு செய்தி பேசப்படுகின்றது.

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அதிகாரி



தியாகேசன் குடமுழுக்கு

மு. செல்வராஜ்,
ஆய்வர்-1, திருவாரூர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.

திருவர்ரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருப்பணிக்காக, முதல் முதல் மேலக்கோபுரம் நவம்பர், 1984ல் சாரம் கட்டப்பட்டது முதலே, நான் இங்கு ஆய்வராக இருந்து வருகிறேன். அது முதல் எவ்வளவு விரைவாக ஒவ்வொரு பணியும் நடந்தேறுகிறது! நூற்றுக்கணக்கில் சன்னிதிகள் எண்பது விமானங்கள், ஒன்பது வானளாவிய கோபுரங்கள். அனைத்தும் முழுமையாக, நிறைவாகத்திருப்பணி செய்யப்பட்டுள்ளது. புதர் மண்டிக்கிடந்த இரண்டாம் பிரகாரம் தளவரிசை போடப்பட்டு புதுப்பொலிவுடன் விளங்குகிறது.

அது மட்டுமா? இத்திருக்கோயிலைச் சேர்ந்த உபகோவில்களான அருள்மிகு பிடாரியம்மன் கோயில், அருள்மிகு திரிநேத்திரநாதசுவாமி கோயில், அருள்மிகு சுந்தரமூர்த்திநாயனார் கோயில், அருள்மிகு விசுவநாதசுவாமி கோயில் மற்றும் குழுக்கோவிலான அருள்மிகு திருநீலகண்டேசுவரர் கோயில் ஆகிய கோயில்களும் செம்மையாகத் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்குகளும் இனிதே நடைபெற்றன. இவையனைத்தும் மிக நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போது நடைபெறுவதில் இந்தத் தலைமுறையினரனைவரும் பெருமைப்பட வேண்டும்.

130 ஆண்டுகளுக்குப் பிறகு 4—4—1988ல் நடைபெறும் இந்த குடமுழுக்கு என் காலத்தில் நான் ஆய்வராக இருக்கும் காலத்தில் நடைபெறுவது மட்டற்ற மகிழ்ச்சியையும் எல்லையில்லாப் பெருமையையும் எனக்களிக்கிறது. இவையனைத்திற்கும் காரணமான திருப்பணிக்குழுத்தலைவர் திரு சு. தென்கோவன், நிர்வாக அதிகாரி திரு சு. ஸ்ரீதரன், திருப்பணிக் குழுவினர் மற்றும் திருக்கோயில் ஊழியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகிறேன். இவ்வளவு மகத்தான காரியத்தை இவ்வளவு குறுகிய காலத்தில் சாதித்த, இவர்களின் சாதனையை 'பெரியோரை வியத்தலும் இலமே' என்ற சங்க இலக்கிய வரியையும் மீறி என்னையும் மறந்து மிகவியந்து பாராட்டிப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவதன்றி வேறென்ன செய்யக் கூடும்!

அருள்மிகு உத்திராபதீஸ்வரசுவாமி திருக்கோயில்

திருச்செங்காட்டன்குடி

நன்னிலம் வட்டம் **தஞ்சாவூர் மாவட்டம்**

சைவ சமய குரவர்களில் அப்பர், சம்பந்தர் ஆகிய இருவரா லும் பாடல்பெற்ற இத்தலம் நன்னிலம் புகை வண்டி நிலை யத்தில் இருந்து 9 கிலோ மீட்டர் தூரத்திலும் நன்னிலம் - நாகப்பட்டினம் பெருவழிப்பாதையில் திருப்புகலூரில் இருந்து 3 கிலோ மீட்டர். தூரத்திலும் உள்ளது.

ஸ்ரீ விநாயகர், கஜமுகாசுரனைக்கொன்ற இரத்தம் பெருகி ஓடியதால் செங்காடு என்றும், வழிபட்ட காரணத்தால் கணப தீஸ்வரம் என்றும் அழைக்கப்படுகிறது. சிறுத்தொண்டர் (பரஞ்சோதியார்) வாதாபி மன்னர் புலிக்கேசியை வென்று கணபதியை எடுத்து வந்து பிரதிஷ்டை செய்துள்ளார். பேரன்பை உலகம் அறிந்து உய்யும் வண்ணம் 'ஒரு குடிக்கு சிறுவனொரு மகனை தாதை அரியத்தாய் பிடிக்கும் பொழுதில் தம்மின் மனமுவந்தே பேதமின்றிச்சமைத்த கறியாம் இட்டு உண்பது' என சிவனார் வேண்ட அவ்வாறே அமுதுபடைத்த சிறுத்தொண்டருக்கு அருள்புரிந்த தலம். பல்லவ அரசன் ஐயடிகள் காடவர்கோன் மகாராசாவுக்கு செண்பகப்பூ மணத் துடன் காட்சியளித்த தலமும் இதுவே. சிறப்புமிக்க இத்திருக் கோயிலில் புதிதாக இராசகோபுரம் கட்டப்பட்டு 25-6-1975ல் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

சித்திரை பரணியன்று அமுதுபடையல் திருவிழாவும், திருவோணத்தில் செண்பகப்பூ திருவிழாவும் மிகசிறப்புடையன.

ஆர். இராஜாராம் பி.எஸ்ஸி.,
பொருளாளர்.

ஸ்ரீலஸ்ரீ அஜபாநடேஸ்வரபண்டாரசன்னதிகள்
வேளாக்குறிச்சி ஆதீனகர்த்தர்
பரம்பரை தர்மகர்த்தா

தியாகேசன் திருப்பணியிலும் குடமுழுக்குப் பெருவிழாவிலும் பங்குகொண்ட அன்பர்கள் திருப்பணிக்குழுத் தலைவர், நிர்வாக அலுவலர் ஊழியர்கள், திருப்பணிக் குழுவினர் அனைவருக்கும் பாராட்டுக்களும், நல்வாழ்த்துக்களும்.

இவண்

E. முத்துராமலிங்கம்

செயலர்,
காந்தி அமைதி நிலையம்,
திருவாரூர்.

அருள்மிகு கொல்லாபுரியம்மன் திருக்கோவில்

இருமத்தூர், —:— அரூர் வட்டம்

தர்மபுரி மாவட்டம்

சக்தி பீடங்களில் முதன்மையானவளான அருள்மிகு கமலாம்பாள் எழுந்தருளியிருக்கும் திருவாரூர் தியாகராஜ சுவாமி திருக்கோவில் திருப்பணியில் பங்குகொண்ட அனைவருக்கும் எனது உளமார்ந்த பாராட்டுகள்

மா. க. காவேரி கவுண்டர்

நிர்வாக அலுவர்

அருள்மிகு அட்சயலிங்கசுவாமி திருக்கோயில்,
கீழ்வேளூர்-611 104

திருவாரூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

திருவாரூர் நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் 12 கி. மீ தூரத்தில் இருக்கின்றது கீழ்வேளூர். புகைவண்டி நிலையமும் உண்டு.

இத் திருத்தல இறைவர் : அருள்மிகு அட்சயலிங்க சுவாமி (கேடிலியப்பர்)
அம்பாள் : அருள்மிகு வனமுலநாயகி (சுந்தரகுஜாம்பாள்)

தலப்பெருமைகள் :

சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் சமர்செய்து வீரஹத்தி தோஷம் போக கீழ்வேளூரில் முருகப்பெருமான் தவமியற்றினார். முருகன் தவத்தைக் காக்க அம்பாள் நான்கு திசையையும் ஆகாயத்தையும் வட்டமிட்டு காத்தார். எனவே அஞ்சுவட்டத்தம்மன் எனப் பெயர் பெற்றார். அஞ்சுவட்டத்தம்மன் பெயரில் மகளிர் உயர்நிலைப் பள்ளி நடத்தப் பெறுகிறது.

சந்நிதியை விட்டு விலகியுள்ள நந்தியம் பெருமான் வலது பாத நடராசர், குழலூதும் கண்ணன் குபேரன் ஆகிய மூர்த்திகள் சிறப்பு மிக்கவை.

வேண்டுவார்க்கு வேண்டுவன தரும் அஞ்சுவட்டத்தம்மனை தெரிசிப்பீர்! நலம் பெறுவீர் அனைவரும் வருக! அருள்வளம் பெருக!! திருப்பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப் பெற்றுள்ளது.

எஸ். ஜோதி, பி. ஏ.
நிர்வாக அதிகாரி

தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்
உதவி ஆணையர்/தக்கார்

அருள்மிகு பிரசன்ன மாரியம்மன் திருக்கோயில்,

வண்டிக்கார தெரு, மயிலாடுதுறை நகர் அஞ்சல்

சோழவள நாட்டின்கண் சிறப்புற்றோங்கிய பல புண்ணிய தலங்களுள் ஒன்றாகிய அருள்மிகு கௌரி மாயூரம் பொன்னி நதியின் தென்பால் மயிலாடுதுறையின் திலகமாய் தேஜோஸ்வரூபியாக அவதரித்து பக்தர்களுக்கு வேண்டியவைகளை அளித்து இஷ்டசித்திகளை பூர்த்தி செய்பவளும் அணிக்கு அழகு போலும், பிணிக்கு அருமருந்து போலும் விளங்கும் ஆயிரம் கண்ணுடையவளாகிய

"அருள்மிகு பிரசன்ன மாரியம்மன்"

பக்தர்கள் குறைகள் நீங்க அருள்பாலித்து வரும் அம்மனை வழிபட்டு எல்லா நலனும் பெற வேண்டுகிறோம்.

பி. மோகனசுந்தரம்
நிர்வாக அதிகாரி.

எம். ஏ. இராசரங்கம் MC
அறங்காவலர் குழு தலைவர்.

அறங்காவலர்கள்

ஆர். மோகன்
து. வெள்ளையன்

கே. பாலகிருஷ்ணன் MC
ஆர். வீரபாண்டியன்.

ஆரூர் அருள்மிகு தியாகேசப் பெருமான் திருக்கோவில் திருப்பணியில் என்னை ஈடுபடுத்தி தெற்கு ராஜகோபுரமும், சித்தீஸ்வரம், தெக்ஷிணா மூர்த்தி விமானங்களும் ஒப்பந்தம் மூலம் திருப்பணி வேலை செய்ய வாய்ப்பளித்த தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் கமலமலர் பாதங்களை பணிந்து வணங்குகிறேன். கமலாம்பாள் கோபுரம் மற்றும் யாகசாலை வேதிகை குண்டங்கள் அமைக்கும் பணியினைச் செய்ய எனக்கு வாய்ப்பளித்த திருப்பணிக் குழுத்தலைவர் உயர் திரு. சு. தென்கோவன் அவர்களையும், நிர்வாக அலுவலர் திரு. சு ஸ்ரீதரன் அவர்களையும், திருப்பணி குழுவினரையும் வணங்கி மகிழ்கிறேன்.

கோபுரங்கள், விமானங்கள் கட்டுமான வேலைகள், (பஞ்சாங்க வேலை, மற்றும் உத்திரமுட்டி வேலைகள்) சுதை வேலைகள், மற்றும் பஞ்சவர்ண வேலைகள் ஆகம சாஸ்திர விதிமுறைகளின் படியும், தியான சுலோக முறைப்படியும், சுத்தமாகவும், சிறந்த முறையிலும் செய்து தருவோம்.

No. 54, தெற்கு வீதி
சுவாமிமலை – 612 302
தஞ்சை மாவட்டம்

ஸ்தபதி T.K.S. பாரதிச்செல்வன்
த/பெ K. சுந்தரம் ஸ்தபதி
(அரசினர் அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி)

அருள்மிகு கமலவசந்தப்பெருமான் பூங்கோயில் திருப்பணியில் எங்களை ஈடுபட பணித்து கீழ இராஜ கோபுரம், விட்ட வாசல் கோபுரம் மேல இரண்டாம் கோபுரப்பணிகளை ஒப்பந்தம் மூலம் எனக்கு வழங்கியதற்கு நன்றியறிதலை திருப்பணிக் குழுத்தலைவர் திரு. சு. தென்கோவன் அவர்களுக்கும், நிர்வாக அதிகாரி திரு சு. ஸ்ரீதரன் அவர்களுக்கும் திருப்பணிக் குழுவினருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விமானங்கள், கோபுரங்கள் சுதை வேலைகள், கட்டுமானப்பணிகள் ஆகம, சிற்ப சாஸ்திர விதிகளின் படியும் தியான சுலோகங்கள் படியும் சுத்தமாக செய்து தருவோம்.

SRN. ராஜேந்திரன்
அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்தபதி
59 தெற்கு வீதி
சுவாமிமலை

அருள்மிகு நவநீதேசுவரர் ஆலயம்,

சிக்கல் தஞ்சை மாவட்டம்.

இறைவன் : திரு நவநீதேசுவரர் (பால் வெண்ணை நாதர்)
இறைவி : திரு சத்தியாதாட்சி (வேல் நெடுங்கண்ணி)
சிறப்புமிக்கவர் : திரு சிங்காரவேலவர்
தலவிருட்சம் : மல்லிகை
தீர்த்தம் : க்ஷீரபுஷ்கரணி (பாற்குளம்)

இத்திருக்கோயில் திருவாரூர் – நாகப்பட்டினம் பெருவழியில் உள்ளது. கோச்செங்கட்சோழனால் 4ம் நூற்றாண்டில் கட்டப் பெற்ற மாடக்கோயில். அருணகிரிநாதர், சம்பந்தர், சுந்தரர் இவர்களால் பாடல் பெற்றது இத்தலம்.

தில்லைத்தலம் போல் இக்கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. பெருமாளின் பெயர் திரு கோலவாமனப் பெருமாள். பிரகாரம் வலம் வருவோர் சிவன் விஷ்ணு இரு சந்நிதிகளையும் கண்டு தரிசித்து வர ஏதுவாய் அமைந்துள்ளது ஒரு சிறப்பு.

இத்தலத்தில் ஐப்பசி மாதத்தில் சிறப்பு உற்சவம் கந்தர் சஷ்டிவிழாவும், சித்திரையில் பிர்மோற்சவமும், வைகாசி விசாகத்தில் தெப்பத் திருவிழாவும், பெருமாளுக்கு மார்கழியில் ‘பகல் பத்து இராப் பத்து’, வைகுண்ட ஏகாதசி உற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

சஷ்டி விழாவில் வேல் வாங்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாம். இவ் விழாவில் வேலவருக்கு முகத்தில் வியர்வை அரும்பும் காட்சியைக் காண வருவோர் பல்லாயிரம்; அவரருள் பெறுவோர் பல்லாயிரம்.

குறிப்பு:- யாத்திரீகர்கள் தங்கி வழிபடுவதற்கு சகல வசதிகளுடன் கூடிய தங்கும் அறைகள் குறைந்த வாடகையில் உள்ளன.

G. பிரபாகரன்
நிர்வாக அறங்காவலர்
M. முருகப்பன்
M. தியாகராஜன்
P. வசந்தா
P.N. சுப்ரமணியன்
அறங்காவலர்கள்

P. இராமகிருட்டினன் B.A.
செயல் அலுவலர்

வீரசைவம்

'கயிலை முனிவர்', பேரூராதீனம். தவத்திரு.
சாந்தலிங்க இராமசாமி அடிகள்,
பேரூர், கோவை-10.

சிவவழிபாடு தொன்மையானது. காணாத அருவநிலையினையும் காட்சிக்குரிய உருவ நிலையினையும் மேற்கொண்டு போற்றும் வழிபாட்டு முறைமை உலகில் அமைந்துள்ளன. இவற்றிற்குக் குறியீடாக விளங்கிச் சிவமாம் செம்பொருளை வழிபடத் துணை புரிவது சிவலிங்கம். இதனைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்,

"காணாத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்."

என அருளியுள்ளார்.

சிவலிங்கவழிபாடு ஒருகாலத்தில் உலக முழுதும் பரவியிருந்ததற்குரிய அடையாளங்கள் அங்கங்கே உள்ளன. இவ்வழிபாட்டு முறை தனக்காக வழிபடுவது, பிறர்க்காக வழிபடுவது எனப் பகுக்கப்படுகிறது. எல்லோரும் ஒருமித்து வழிபடும் அமைப்புத் திருக்கோயில்களில் அமைந்துள்ளன. பூவொடு நீர்சுமந்தேத்திப் புகுந்து காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி பண்ணினிசையால் ஏத்திப்பாடி, தடங்கொண்டதோர் தாமரை பொன்முடி தன்மேல் குடங்கொண்டடியார் குளிர் நீராட்டி வழிபடு முறைமையை நமது சமய நூல்கள் கூறுகின்றன. இவ்வழிபாடு அனைவருக்கும் உரியது. ஆண், பெண், இளையோர், முதியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இன்றி எவரேனும் திருநீறு சாதனமும் அணிந்து அரும்பொடு மலர்கள் கொண்டு அன்பால் நெகிழ்ந்து பெருவிருப்புடன் விளக்கிட்டு, தூபமிட்டு வழிபடலாம். அவர்கட்கு கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியனாக நினைதொறும், காண்தொறும், பேசுந்தோறும் எப்போதும் அனைத்தெலும்பும் உள்நெக ஆனந்தத்தேனை இறைவன் அருளுவான் என்பது நமது சிவநெறியாகும்.

இந்நெறிக்குத் துணைபுரிவன மறைநெறியும், ஆகம நெறியும் ஆகும். நிறைமொழியாகிய மறைமொழியை, பொதுவெனவும், வண்ணந்தான் அது காட்டி வடிவு காட்டி இது அவன் திருவுரு இவன் அவன் என அருளும் ஆகமநெறியைச் சிறப்பெனவும் ச்சான்றோர் வகுத்தனர். சிலர் மறைநெறியை பெரிதெனக் கருதினர். சிலர் ஆகமநெறியை பெரிதெனக் கருதினார். நமது தொன்மை நெறியாகிய வீர சைவநெறி இருநெறிகளையும் ஒன்றெனக் காட்டும் நெறியாக அமைந்தது. இதுவே சிவநெறி. நீள் குறியாம் சிவலிங்கம் அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் விளங்குவதாதலின் இருநெறியும் இணையும் இணைப்புக்குரியது இவ்வழிபாட்டு முறையாகும். இத்தகைய சிவவழிபாடு ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. அத்தகைய வழிபாட்டுக்காக அமைந்ததே இம் மானுடப் பிறவி. ஆதலின் திருமூலர் ''மானிட யாக்கை வடிவு சிவலிங்கம்'' என அருளினார். மானிடப் பிறவிதானு வாய்த்தது மனம் வாக்கு காயம் ஆனிடத்தைந்தும் ஆடும் அரன் பணிக்காக அன்றோ? என்று பகர்ந்தது சமய இலக்கண நூலாகிய சிவஞானசித்தியார்.

இவ்வழிபாட்டு முறை அக வழிபாடாகவும், புற வழிபாடாகவும் திருக்கோயில் வழிபாடாகவும் அமைந்தது. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க எனப் போற்றினர். உள்ளம் பெருங்கோயில் எனக் கண்டு, தெள்ளத்தெளிந்து தித்திப்பதோர் உள்ளத் தேறலாக, அமுதமாக உலப்பில்லா ஆனந்தத்தைப் பெற முயன்றனர். உள்ளொளிக்கு உள்ளொளியைத் தொழுது வாழ்ந்தனர். இத்தகைய வாழ்வுக்குக் காரணமாக இருப்பது உடம்பு.ஆதலின் காயமே கோயிலாகக் கண்டனர்.'ஊனுடம்பு ஆலயம்' என்றார் திருமூலர்.

இந்த ஊனுடம்பாகிய திருக்கோயிலில் செம்பொருளாகிய சிவத்தை எழுந்தருளச் செய்து போற்றுவதே வீரசைவம் எனப்படும் நெறியாகும்.

தொழுவார்க்கிரங்கி இருந்தருள் செய்யும் திருவுருவாய் திருக்கோயிலுள்ளிருக்கும் அருள்வடிவைச் சிவனெனக் கண்டு வழிபடுதல் புண்ணியப் பயனாகக் கருதப்பட்டது. இத்தகைய நெறிகளை திருமந்திரம் அருளிய திருமூலதேவரும், திருவாசகம் அருளிய மாணிக்கவாசகரும் மேற்கொண்டனர் என்பர் சான்றோர்.

திருவாசகத்தில், திருத்தலத்தில் எழுந்தருளிய சிவனென்னும் நாமம் தமக்கேயுடைய செம்மேனியம்மானை சிந்தையிலும் உடம்பிலும் இடங் கொண்டமையை அருளி திருப்பெருந்துறையிலும் இருந்து அருள் புரிகிறான் என்பதை,

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலனொர்கைம் மாறே'',

என்று வியந்து போற்றுகிறார் மாணிக்கவாசகர்.

வீரசைவநெறி இமயம் முதல் குமரிமுனை வரை பரவிய திருநெறி. பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டதொன்மை இடங்களின் அகழ்வாய்வுகளில் அங்கலிங்கமாகக் கருதப்படும் சிறிய சிவலிங்கங்கள் கிடைக்கின்றன. மிகப்பழைய காலத்திலேயே உடலிடங்கொண்டவராக இறைவனை எழுந்தருளச் செய்யும் முறைமை அமைந்தது எனலாம். இனி நூல் வகையில் நோக்கினால் வீராகமம், வாதுளாகமம், சுவாயம்பு ஆகமம், சுப்ரபோத ஆகமம் முதலியவற்றில் வீரசைவ நெறியின் சிறப்பு எடுத்தோதப்படுவதை அறிஞர்கள் ஆய்ந்துரைத்துள்ளனர். மறை ஆகம விரிவுரைகளாக அருளாளர்களால் விரித்துக் கூறப்பெற்ற இரேணுகபாடியம், சோமநாதபாடியம், பண்டிதபாடியம், ஸ்ரீகரபாடியம் ஆகிய நூல்களும் வீரசைவ நெறியினது உயர்வும் சிறப்பும் இத்தகையதுஎன விளக்குகின்றன. இந்நெறிபற்றி தமிழ்நூலாகிய வீரசிங்காதன புராணத்தில்,

''வாதுளா கமத்தின் உத்தரத்துனு தந்திரோக்த
வண்பிரதிட்டை மருவும்
ஆதியாஞ் சிவசித்தாந்த தந்திரத்தும் அதர்வண
வேத மத்தியினும்

நீதியாம் அநாதிவீர சைவத்தின் நிலையினைத்
தொகுத்தான் நிகரின்றி
ஓதிடும்பரம ரகசியமாக உரைத்தனன்
உமையவள் தனக்கே''

எனக் கூறப்படுகிறது. வாதுளாகமத்திலும் வேதத்தின் நடுவிலும் நீதியாம் அநாதி வீர சைவத்தின் நிலையினைத் தொகுத்தான் எனக் கூறுவதால்,

மறைநெறி ஆகமநெறி ஒன்று எனக் காட்டும் மரபு வீரசைவத்திற்குரியது என அறியலாம்.

ஆற்றல்மிக்க சிவநெறியாளர் எப்பொழுதும் நீங்காமல் உடலிடங் கொண்டுள்ள சிவலிங்கம் அணிந்து பொலிவர் என முதன்மையாகக் கருதப்படும் காமிக ஆகமத்தில் கூறப்படுகிறது, என்பதை கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர் அருளிய சித்தாந்த சிகாமணியில்,

''சதுமறை யுள்ளும் மிக்க சாத்திரங்களினு மீரொன்
பதுவித புராணத் துள்ளும் பகர்தருங் காமிகந்தான்
முதல்வரு மாகமத்தும் மொழிந்திடப் பட்டி டுஞ்சந்
ததமுமெய் விடாது லிங்க தாரணம் விறற்சைவற்கே''.

என்று கூறுவதால் விளங்குகிறது.

காமிக ஆகமத்தின் பின்பகுதியாகிய உத்திரபாகம் முழுவதும் வீரசைவநெறி பற்றிக் கூறுகிறது என வடநூற்கடலில் திளைத்துத் தெளிந்த சிவப்பிரகாசர்,

'' ஏக னுற்றருள் காமிக மேமுதல்
ஆக மத்தின் அறைந்திடும் உத்திர
பாக முற்றும் பகர்வீர சைவமாம்
சோக மற்றுயர் தொன்மதந் தோன்றுமால்'';

என அருளியுள்ளார்.

இவற்றால் தொன்மைமிக்கநெறி என்பது பெறப்படும். இதனை, வெல்நெறி தேர்மறைநெறி ஆகமநெறி ஒன்றெனக் கூட்டும் வீரசைவத் தொல்நெறி, மாகேசன் எங்கள் சாந்தரியகதேசிகனாம் தூயோன், என்பர் ஆன்றோர்.

வீரசைவ நெறியில் மூன்றுநிலை, ஆறுபடிநிலைகள் எண்வகைக் காப்புக்கள் என்பன வழிபாட்டமைப்பில் சிறப்பிடம் பெறுவனவாகும். சிவலிங்க வழிபாடு மூன்றாக பகுக்கப்படும். இறைவன், வேறாய், உடனாய், ஒன்றாய் நின்று உயிர்களுக்கு அருள் வழங்குகிறான். சிவமாகிய செம்பொருள் இவ்வாறு விளங்கும் நிலையை மெய்ப் பொருளியல் விரித்துக்கூறும்.வீரசைவத்தில் இட்டலிங்கம், பாவலிங்கம், பிராணலிங்கம் என இந்நிலைகளை வகுத்துள்ளனர்.முதல் நிலையில் தொழுவார்க்கு இரங்கி இருந்தருள் புரியும் பொருளாக விளங்கி, தொழுது தூமலர் தூவித்துதித்து வழிபடவும் அன்பால் பணிந்து போற்றவும் தான் விரும்பும் இலிங்க வடிவத்தில் நின்று அருள் புரிகிறான் இதனைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர் இட்டலிங்கமாலையில் சிறப்பாக அருளி யுள்ளார். இறைவன் உயிர்கட்கு எளிவந்த பிரானாகத் திருவருள் புரிவான் என்பதைச் சிவப்பிரகாசர்,

பூவாய் நெடுங்கோட்)டு) உறுபசுந்தேன் கைகால் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற் றெனஉலகம் அளந்த மாலும் நான்முகனும்
காவாய் எனநின்(று) ஏத்தியிடத் தானே யுவந்தென் கரதலத்தில்
மேவா அமர்ந்த மாமணியை வணங்கி வினைக்கு விடைகொடுப்பாம்!

என அருளியுள்ளார்.

இதில் மலர் நிறைந்து மிகவுயர்ந்த நெடுமரத்தின் உயர் கொம்பில் கட்டியுள்ள தேன் கூட்டிலிருந்து வழியும் தேன், கைகால் உறுப்புக் குறைந்து செவிடாய், குருடாய் ஊமையாய் இருக்கும் ஒருவனுக்கு அவன் நாவினிடமாக ஒழுகியது போல, அயன் மால் இருவராலும் அறிதற்கு அரியதாகிய பொருள் தானாக வந்து எனது கைத்தலத்தில் பொருந்தியிருந்து அருள் புரிகிறான் என்பதாகும் காரிட்ட ஆணவக் கருவறையில் கிடந்து செயற்பாடற்றிருந்த உயிரை ஆளுந்திறம் இப்பாடலால் விளக்கப்படுகிறது. துறைசைச் சிவப்பிரகாசர் தாமருளிய அத்துவித வெண்பா என்னும் நூலில் அங்கலிங்க தீட்சைகளையும் அதற்குரிய முறைமைகளையும் விரித்து விளக்கியதையறியலாம்.

இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காப் பரம்பொருளை வீரசைவம் பாவலிங்கம் எனப் போற்றும். இது உடனாதல் என்னும் நிலையை விளக்குவது. புறப்பொருட்கட்கெல்லாம நுண்பொருளாய் விளங்கி இயக்கும் அப்பொருளைக் காதலாகிக் கசிந்துருகி நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புக்கு நிற்பன். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாகிய இன்பத்தைத் தருவான். மூன்றாவது நிலை பிராணலிங்கம். உயிர்க்குயிராய் நிற்கும் தன்மை ஒன்றாதல் என்ற நிலையில் பேதமை தீர்ந்து திருகலாகிய சிந்தை திருத்திப் பரமாயதோர் ஆனந்தம் பருகி அவனே தானாய் ஏகனாய்க் குறைவிலா நிறைவாய் கோதிலா அமுதாய், சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம் திருவடிப்பேறு எய்துவதாகும்.

இதற்குரிய படி நிலைகள் ஆறு; அவை பக்த தலம், மாகேச தலம், பிரசாதித் தலம், பிராணலிங்க தலம், சரணத் தலம் ஐக்கிய தலம் எனப்படும். மேற்குறித்த மூன்று நிலைகளில் முதலாவதாகிய வேறாதல் என்னும் நிலைக்கு பத்தன், மகேசன் என்பன அமையும். பத்திமையால் பணிந்து அரும்பொடு மலர்கள் கொண்டு, விரும்பி விளக்குத் தூபம் விதியினால் இடுபவன் பக்தன். அதிலுயர்ந்து சிவபரம் பொருளை அகத்தும் புறத்தும் ஏத்தித் தொழுது அடியார் நடுவுள் இருப்பவன் மகேசன். இவ்விரு நிலையும் இட்டலிங்க வழிபாட்டில் இணைவதால் நிகழ்வது. பிரசாதி, பிராணலிங்கி என்பன உடனாதல் என்ற படிநிலையில் பிரசாதி தான்பெற்ற உயர்நிலையைப் பிறர்க்கு எடுத்துணர்த்துதலாகிய உயர்வைப் பெறுகிறான். பிராணலிங்கி தன்னுள்ளே மெய்மையாம் உழவுசெய்து நல்லெண்ணத்தை விதைத்து பொய்மை போக்கி பொறுமை புடன் தன்னை நோக்கிக் கண்டு வாழ்கின்ற தன்மையைப் பெறுகிறான். இறுதி இரண்டு படி நிலைகள் ஒன்றாதலை விளக்குவன. காயமே சரணத்தலம். காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமையப் பூசனை செய்யும் நிலையைக் கூறுவது. ஆறாவது படிநிலை ஐக்கியத்தலம். அவனே தானே ஆகிய அந்நெறியாகும். இவை வடமொழியில் சடுதலம் என்பர்.

இத்தகைய நிலைகளுக்கு நற்றுணையாய், காப்பாய் இருப்பது திருநீறு, அக்கமணி, ஐந்தெழுத்து, குருலிங்கம், சங்கமம், தீர்த்தம், பிரசாதம் ஆகிய எட்டும் ஆகும். இவை சிவநெறியில் வாழ்வோர் அனைவருக்கும் உரியவை. வடநூலார் அட்டாவரணம் என்பர்.

தமிழகத்தில் வீரசைவநெறி சித்தாந்த நெறியுடன் இணைந்ததாக அமைந்துள்ளது. குருநமசிவாயர், குலகநமசிவாயர் போன்ற அருளாளர்கள் திருவண்ணாமலையில் தங்கித் தவமியற்றினார்கள். சித்தாந்தத் திருநெறியில் ஒழுகிய குமாரசாமி தேசிகர் திருவண்ணாமலையில் சிவநெறியை மேற்கொண்டார். அவரது தோன்றல்கள் கற்பனைக் களஞ்சியமாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசரும் அவரது தம்பிகளுமாவார். பஞ்சாக்கரதேசிகர் எனப் போற்றும் திருவாவடுதுறை ஆதீனக்குரு முதல்வர் நமசிவாய தேசிகரது மாணவராக விளங்கிய துறைசைச் சிவப்பிரகாசர், வீரசைவ நெறியை மேற்கொண்டார், அவருடைய மாணவராக விளங்கி மேலைச் சிதம்பரமாம் மிக்க புகழ்ப் பேரூரில் சீலத்தார் போற்றத் திருமடம் அமைத்த எமது ஆதின குருமுதல்வர் சாந்தலிங்க அடிகளார் கயிலைத் திருமரபு தழைக்க வழிகாட்டி முத்திப் பெரு வீட்டிற்கு நான்கு திருவாயில்கள் எனுமாறு கொலை மறுத்தல்,வைராக்கிய சதகம்,வைராக்கிய தீபம் அவிரோத உந்தியார் எனும் நான்கு அருள் நூல்களை வழங்கியவர்.

அவரது மாணவர் விருத்தாசலம் குமாரதேவர். குமாரதேவர் மகாராசத்துறவு சுத்த சாதகம் ஆதிய நூல்களியற்றியவர். திருவாரூர்த் தேர் விழாக்காலத்தில், அக்குமாரதேவர் திருவீதியில் சென்ற போது, அச் சான்றோரை செந்நெறிப்படாத அறிவிலிகள் 'வீரசைவ மருள் செல்கிறது' என நகையாடினர். தாம் மேற்கொண்ட சமயத்தை இழித்துக் கூறிய அச்சொல்லைக் கேட்டு வீரசைவம் மருளானால் தேர் செல்லட்டும். வீரசைவம் அருளானால் தேர் செல்லற்க எனத் தம் பிரம்பால் கோடு கிழித்துச் சென்றார். பலர் கூடி முயன்றும் தேர் அக்கோட்டிற்கு அப்பால் நகரவில்லை. உண்மையுணர்ந்த சான்றோர்கள் குமாரதேவரைப் பணிந்து அறிவின்மையால் சிலர் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டினர். குமாரதேவர் வீரசைவம் அருளானால் தேர்செல்லட்டும் என்று அருளினார். தேர் திருவீதிகளில் வலம்வந்து நிலை சேர்ந்தது என்பர்.

தமிழகத்தில் வீரசைவநெறி பற்றி வாழும் குடும்பங்கள் பல உள்ளன. கும்பகோணம் பெரியமடம் ஒட்டக் கூத்தர் காலத்திலேயே சிறப்புற்று விளங்கியது. தக்கயாகப்பரணியை அங்கு தான் பாடியதாகக் கருதுகின்றனர். திருமடத்தின் தலைவரைக் குலகுருவாகக் கொண்ட பல் வேறினத்தவர்கள் தமிழகம் முழுதும் பரவியுள்ளனர்.

மயிலம் பொம்மபுரத் திருமடம் பழைமை வாய்ந்தது. பல புலவர்களைப் பேணிய திருமடம். தமிழும் சைவமும் தழைக்க அரிய பணிகளைச் செய்து வருகிறது. திருப்பாதிரிப்புலியூர் ஞானியரடிகள் திருமடம். தில்லை மௌன சுவாமிகள் மடம், புதுச்சேரி அம்பலத்தாடியர் மடம் திருமுதுகுன்றம் குமரதேவர்மடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம் ஆகியவை வீரசைவத் திருமடங்களாக விளங்குகின்றன.

வீரசைவம் பற்றிய சிறப்புக்களைத் துறைசைச் சிவப்பிரகாசர், தமது அத்துவித வெண்பாவில் விரித்துரைத்துள்ளார்.

கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாசர், சித்தாந்த சிகாமணி, கைத்தலமாலை ஆதிய நூல்களில் விரிவாக அருளியுள்ளார். வீரசைவநெறி எளிய முறையில் சிவ வழிபாட்டை மேற்கொள்ள வழிகாட்டுகிறது. யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை என்று திருமந்திரம் கூறுகிறது. குடங்கைநீரும் பச்சிலையும் இடுவார்க்கருளும் பரமன் கருணைத் திறத்தை உணர்ந்து இந்நெறியில் வழிபடுவோர் அனைத்து நலங்களையும் பெறுவர் என்பது உறுதி.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரை, தமிழ்நாடு

மதுரை பல நூற்றாண்டு கால வழிபாட்டின் மைய தலமும், சமய வரலாற்றுச் சிறப்பும் பெற்ற திருத்தலமாகும். இத்திருக்கோயில் சுமார் 3600 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்போதுள்ள கோயிலில் மிகப்பெரும் பகுதிகள் கி. பி. 1200-1800-ல் கட்டப்பட்டவையாகும். இத்திருக்கோயில் நமது நாட்டின் தொன்றுதொட்டே கலைத் திறனையும் கட்டடக் கலையின் சிறப்பையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. பல மண்டபத்திலுள்ள தூண்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் இத் திருக்கோயிலின் சீரிய சிறப்பை உணர்த்துகின்றன.

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணக் கோல சிற்பக் காட்சியில், அருள்மிகு சுந்தரேசுவரர் பெருமானின் கம்பீரமும் அன்னை மீனாட்சியின் நாணமும், வலது புறத்தில் விஷ்ணு புனித நீரை தாரைவார்த்து மணமக்களின் கரங்களை இணைத்து வைக்கும் காட்சியும் ஈடிணையில்லாத காட்சியாகும். பிரசித்தி பெற்ற ஆயிரங்கால் மண்டபம் கலையின் கருவூலம் என்பதற் கேற்ப திருக்கோயிலின் கலைக்கூடம் பொருத்தமாக நிறுவப் பட்டு உள்ளது.

இத்திருக்கோயிலில் புகைப்படங்கள், முன் அனுமதியுடன் டிக்கட் பெற்று எடுக்க அனுமதிக்கப்படுகின்றன. இத்திருக் கோயிலுக்கு வருகைதந்து அன்னை மீனாட்சி தந்தை சுந்தரேசு வரர் பெருமானை வழிபட்டு அவர்களின் ஆசியும் கருணையும் பெற்றிட வேண்டுகிறோம்.

வழிபடும் நேரங்கள் :-

காலை 5 மணி முதல் மதியம் 12-30 மணி வரை.
மாலை 4 மணி முதல் இரவு 9-30 மணி வரை,

திருவிழா :-

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறும் புகழ் பெற்ற ''சித்திரைப் பெருவிழா'' இத்திருக்கோயிலின் முக்கிய திருவிழாவாகும்.

வழிபட வரும் அருளாளர்களுக்கு தங்குவதற்கென இத்திருக் கோயிலின் நிர்வாகத்தில் மேலக் கோபுரத்திற்கு அருகில் 'பிர்லா விஷ்ரம்' எனப்படும் தங்கும் விடுதியுள்ளது.

சிறப்பு வழிபாடுகள் :-

1.	வைரக்கிரீடம் சாத்த	ரூ. 500/-
2.	உபய கல்யாணம் செய்ய	ரூ. 501/-
3.	தங்க ரதம் இழுக்க	ரூ. 1001/-

தினசரி பூஜை நேரம்:

அம்மன் சன்னிதி

திருவனந்தால் சித்தி விநாயகர் சன்னிதி
தீபாரதனை காலை 5 மணி
திரைபோடும் நேரம் :-

		ம. நி.		ம. நி.
விளாபூஜை	காலை	6-30		7-00
காலசந்தி				
திருக்கால சந்தி	,,	10-30		11-00
உச்சிக்காலம்				
சாயரட்சை	மாலை	4-30	மாலை	5-15
அர்த்த ஜாமம்	இரவு	7-30	இரவு	7-45

பள்ளியறை தீபாராதனை முடிவு இரவு 10-00 மணி

சுவாமி சன்னிதி

சம்பந்தர் சன்னிதி
தீபாராதனை — காலை 6 மணி
திரைபோடும் நேரம் — பூஜை முடிய

	ம. நி.	ம நி.
காலை	6-45	7-30
காலை	11-00	11-30
மாலை	5-00	5-30
இரவு	7-45	8-30

இரவு 9-30 பல்லக்கு புறப்பாடு

கே. எஸ். சோமசுந்தரம், பி.ஏ., பி.எல்.
துணை ஆணையர் / நிர்வாக அதிகாரி.

வி. என். சிதம்பரம்,
தக்கார்.

சித்த மருத்துவம்

கி. ஆ. பெ. விசுவநாதன்.

சித்தர்கள் தமிழகத்து சான்றோர்கள். முத்தியடைந்தவர்கள் முக்தர்கள்; சித்தியடைந்தவர்கள் சித்தர்கள். சித்திகளில் மிகச் சிறந்தவை சில. அவை யானையை போல உடம்பை பெரிதாக்கிக் காட்டுவது எறும்பைப்போல உடம்பை சிறிதாக்கிக் காட்டுவது; இரும்பைப் போல உடம்பை கனத்துக் காட்டுவது; பஞ்சைப் போல உடம்பை எளிதாக்கிக் காட்டுவது; நெருப்பில் துயில்வது; நீரில் நடப்பது; வானில் பறப்பது; கூடுவிட்டுக் கூடு பாய்வது என்பன. இவற்றைச் செய்பவர்கள் சித்தர்கள். இவர்கள் கண்டதே சித்த மருத்துவம்.

காலம் :

சித்த மருத்துவம் என்பதும், தமிழ் மருத்துவம் என்பதும் ஒன்றே. தமிழ் மருத்துவம் தோன்றிய காலத்தை அறிந்து கூற இயலாது. கூற வேண்டுமானால் தமிழகத்து மண்ணில் செடி, கொடிகள் தோன்றிய காலமே தமிழ் மருத்துவம் தோன்றிய காலம் என்று துணிந்து கூறலாம்.

மொழி :

நாட்டு வைத்தியம் என்று பொதுவாக குறிப்பிடப்படுவது மூன்றை: ஒன்று சித்த மருத்துவம்; இரண்டு ஆயுர்வேதம்;மூன்று யுனானி. தமிழ் மருத்துவத்திற்கு மொழி தமிழ். ஆயுர்வேதத்திற்கு மொழி வடமொழி. யுனானிக்கு மொழி உருது. யுனானிக்குத் திசை மேற்கு; ஆயுர்வேதத்திற்கு திசைவடக்கு;சித்த வைத்தியத்திற்கு திசை தெற்கு.

மருந்து :

தமிழ் மருந்துகள் பெரும்பாலும் பொடியும் கியாழமுமாகஇருக்கும். இதனை பஸ்பம் என்றும், கசாயம் என்றும் சொல்வர். ஆயுர்வேத வைத்தியம் பெரும்பாலும் தைலமும், திராவகமுமாக இருக்கும். யுனானி மருந்துகள் பெரும்பாலும் அல்வாவும் லேகியமுமாக இருக்கும்.

பஸ்பம் :

இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு முதலிய உலோகங்கள் ஒன்பது. முத்து, மணி, பவழம் முதலிய இரத்தினங்கள் ஒன்பது. வீரம், பூரம் முதலிய பாசாணங்கள் ஒன்பது. இதனை முறையே நவலோகம், நவரத்தினம், நவபாசாணம், என்பர். இந்த மூவொன்பது இருபத்தேழையும் பஸ்பமாக்கும் முறை சித்த வைத்தியத்தில் மட்டுமே உண்டு. பிற மருத்துவ முறைகளில் இவற்றில் சில பஸ்பமாகச் செய்யப்படும். எனினும், அதன் அடிப்படை சித்த வைத்திய முறையாகவே இருக்கும்.

எளிது :

அலோபதி முறையில் ஆங்கிலேயர்கள் இவற்றில் சிலவற்றை பஸ்பமாக்குகிறார்கள். ஆனால், விலையுயர்ந்த இயந்திரத்தில், பெரும் பொருட்செலவில் அவை செய்யப்பெறுகின்றன. சித்த வைத்திய முறையிலோ இரண்டு மூன்று 'வரட்டி' களைக் கொண்டு, சில மூலிகைகளின் சாறுகளைத் தடவி எளிய முறையில்

குறைந்த செலவில் சுருங்கிய நேரத்தில் இவை அனைத்தும் பஸ்பமாக்கப் பெற்று வருகின்றன.

உணவே மருந்து; மருந்தே உணவு :

சித்த வைத்தியத்தில் உணவும் மருந்தும் ஒன்றாகவே அமைந்திருக்கும். அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு எல்லாம் மருந்து. உளுந்து, துவரை முதலிய பருப்பு வகை எல்லாம் மருந்து. காய்கறிகளெல்லாம் மருந்து. கீரை வகைகளெல்லாம் மருந்து. கடுகு, மிளகு, சீரகம், பூண்டு, மஞ்சள், சுக்கு, திப்பிலி, பெருங்காயம், முதலிய கடைச் சரக்குகளும் மருந்து, எள்ளு, கடலை, இலுப்பை, வேம்பு முதலிய எண்ணெய் வகைகளெல்லாம் மருந்து. பசுவின்பால், தயிர், மோர், வெண்ணெய்,நெய் அனைத்துமே மருந்து சுருக்கமாகச் சொல்வதானால் உணவே மருந்தாக அமைகின்ற இவையே சித்த வைத்திய முறையாகும்.

தமிழகத்தைத் தவிர, பிற நாடுகளில் உணவுப் பொருள்களே மருந்தாக அமைகின்ற முறையைக் காணமுடியாது. தமிழகத்துத் தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப தமிழ் மக்களுக்குத் தோன்றும் பிணிகளுக்குத் தமிழகத்து மண்ணில் முளைக்கின்ற செடி, கொடிகளை மருந்தாகத் தருவதே தமிழ் மருத்துவ முறையாகும்.

கை வைத்தியம் :

தாய் வழி மகள் காது வழி ()கட்டுக் கை வைத்தியமாக செய்யப்படுகின்ற ஒரு முறையும் தமிழகத்தில் உண்டு. இதையே சித்தவைத்தியம்என்றும்வீட்டுவைத்தியம் என்றும் கூறுவதுண்டு. இந்தத் தலைமுறையில் நகரங்களில் வாழ்கின்ற படித்த பெண்கள் இம்முறைகளை அடியோடு கைவிட்டு விட்டனர். எனினும் சிற்றூர்களிலுள்ள எளிய குடும்பங்களில் இம்முறை இன்னும் இருந்து வருகின்றது.

சிறப்பு :

சித்த வைத்தியம், காலத்தால் முந்தியதும், விலையால் குறைந்ததும், ஊயாள் வதில் சிறந்ததும், பலனால் மிகுந்ததும், தகுதியால் உயர்ந்ததுமாகும். இவ்விதமிருந்தும் மக்களின் உணர்ச்சிக் குறைவும் மருத்துவர்களின் முயற்சிக் குறைவும் அரசினர் கவனக்குறைவும் ஒன்று சேர்ந்ததினாலேயே இச்சித்த வைத்திய முறை முறை அழியத் தொடங்கிவிட்டது.

ஒத்தை மருந்து :

சித்த வைத்தியத்தில் ஒத்தை மருந்து என்றும் சிலவற்றைச் சொல்வது உண்டு. அது,பூண்டு ஒரு மருந்து. கடுகு ஒரு மருந்து வெங்காயம் ஒரு மருந்து. தேங்காய் ஒரு மருந்து. அந்த ஒன்றோடு எதையும் சேர்க்காமல், அரைக்காமல், காய்ச்சாமல், நிறுக்காமல், உருக்காமல், அப்படியே கொடுக்கச்சிற்சில நோய்கள் தீரும். இதை வடமொழியினர் 'ஏக மூலிகைப் பிரயோகம்' என்பர். அவற்றுள் சில:

1. பாம்பு கடித்தால் வாழைப்பட்டையில் உள்ள சாற்றைப் பிழிந்து கொடுக்க உடனே குணமாகும்.

2. பூரான் கடித்தால் பனைவெல்லத்தை உண்டால் அதன்தடிப்பு உடனே மாறும்.

3. பிறந்த குழந்தை தவறிப் போய், பெற்ற தாய்க்குப் பால்கட்டி முலைக் குத்தல் ஏற்பட்டால் மல்லிகைப்பூ வைத்து கட்ட உடனே குணமாகும். மல்லிகைப்பூ கிடைக்காத காலங்களில் வாழைப்பிஞ்சை அரைத்துத் தடவி குணம் காணலாம்.

4. நட்டுவக்காலி கடித்தால் கொப்பரை தேங்காயை மென்று தின்ன, உடனே குணங் காணலாம். இந்தஒத்தை மருந்தும் ஒரே வேளைதான். இரண்டாம் வேளை தேவையே இல்லை.

சாகாக் கலை :

நந்தவனத்தில் ஓர் ஆண்டி, நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, அதைக் கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி-என்பது ஒரு சித்தரின் பாடல். இது சித்த மருத்து வத்தின் ஒரு பகுதியாகிய சாகாக்கலை என்பதைப் பற்றிய பாடல்.

நந்தவனத்தில் ஓர் ஆண்டி - உலகத் தில் ஒரு ஆன்மா, நாலாறு மாதமாய் - 4ம், 6ம் சேர்ந்து 10 மாதமாய் தாய் வயிற்றிலிருந்து, குயவனை வேண்டி - பிரம்மாவை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி - இந்த உடம்பு, இதைக் கூத்தாடிக் கூத்தாடி - உலக இன்ப துன்பங்களில் உழன்று, போட்டுடைத் தாண்டி - சாகடித்தாண்டி என்பது இதன் பொருள். நாம் பெற்ற இந்த உடம்பு சாகடி பதற்கன்றி என்பது இதன் கருத்து

அழிவு:

தமிழ் மருத்துவ முறை அழிவதற்குத் தமிழ் மருத்துவர்களும் ஒரு வகையில் காரணமாயினர். வறுமை வாய்ப்பட்ட மக்களில் சிலர், தங்களை மருத்துவர் என்று சொல்லியும், தங்களிடமிருந்தது மருந்து என்று கூறியும், தவறு செய்தமை பால், பொதுமக்களின் நம்பிக்கை கெடத் தொடங்கியது. மருத்துவ நூல்களிலுள்ள கவிதைகளையும் அதில் மறைபொருளாக சொல்லப்பட்ட மருந்துகளின் பெயர் களையும் அறியாமலும், புரியாமலும் இளம் மருத்துவர்கள் சிலர் தவறு செய்யத் தொடங்கினர். இவையும் சித்த வைத்திய முறை அழிவுக்குக் காரணமாயின.

புதைந்து போனது:

சித்த வைத்திய முறையில் சிறந்து விளங்கிய மருத்துவ மேதைகளும் பண்டித மணிகளும் பலர் தங்களிடமுள்ள உயர்ந்த முறைகளை வெளியே காட்டாமலும், பிறருக்குச் சொல்லாமலும், தமக்கு பின் வாரிசாக ஒருவரைத் தேர்ந்தெடுத்து சொல்லி வைக்காமலும், அரசினருக்கு அறிவிக்காமலும், நூல்களாக எழுதி வைக்காமலும் மறைந்து போயினர். மறைய, மறைய ஒவ்வொரு சித்த வைத்தி யரையும் புதைக்கப் புதைக்க சில சித்த வைத்திய முறைகளும் புதைக்கப் பெற்றே போயின.

அழிந்த காரணம்:

இந்த தவறை நமக்கு முன்னே வாழ்ந்த பெரியோர்கள் செய்யவில்லை. அவர்கள் தாங்கள் கண்ட அருமையான முறைகளைச் சுவடிகளில் எழுதி வைத் தனர். ஆனால் பாவம் அச்சுப் பொறிகள் இன்மையாலும் ஒலைகளிலே எழுதிக் குவிக்க வேண்டியிருந்தமையாலும் விரிந்த சொற்களில் உள்ள பரந்த முறை களை, சொற்களை குறைத்துக் கவிதை களாய் அமைத்து சுவடிகளாக்கி வைத்து போயினர். அவை பல தமிழ் மன்னர் களின் ஆட்சி அழிந்தமையாலும் ஆங்கில ஆட்சியினரின் அக்கறைக் குறைவினா லும், காலத்தால் பாழ் பட்டும், கடற் கோள்களின் அழிவிற்குள்ளாகியும் கறை யான்களால் தின்னப்பட்டும் பலசுவடிகள் அழிந்து போயின. இவை அனைத்திற் கும் தப்பிச் சில நூல்கள் மட்டுமே எஞ்சி யிருந்தன. இவற்றையுங் கூட பழஞ்சுவடி களை ஆடிப் பதினெட்டாம் பெருக்கில் ஆற்றில் விட்டால் புண்ணியம் என்று ஒரு கொள்கை பரப்பப்பட்டதினால், அந்த புண்ணியத்திற்கு ஆசைப்பட்டு மீதமிருந்த பழஞ்சுவடிகளையும் சிலர் ஆற்றில் அள்ளிப்போட்டுவிட்டு அமைதி யடைந்தனர்.

அழிந்து போன நூல்கள்:

இவ்வாறு அழிந்து போன மருத்துவ நூல்கள் பல. அவையாவன.

1 அகத்தியர் பன்னிரு காண்டம்
2 போகர் எண்ணாயிரம்

3 கோரக்கர் மூலிகைப் பயன் ஆயிரம்
4 கொங்கணர் மூவாயிரத்து நூறு
5 கோரக்கர் வெண்பா ஏழாயிரம்
6 மச்சமுனி ஏழுகாண்டம்
7 சிவவாக்கியம் ஐந்து காண்டம்
8 காசிபர் வண்ணம்
9 உரோம முனி வடுகம்
10 இராம தேவர் சந்தப்பா
11 நந்தீசர் சந்தம்
12 சங்குமாமுனி கலித்துறை
13 திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம்
14 பதஞ்சலி ஏழுகாண்டம்
15 சட்டமுனி நிகண்டு
16 சட்டமுனி இரண்டாயிரத்து எழுநூறு
17 காலாங்கிநாதர் நாலு காண்டம்
18 போகர் எழுநூறு

முதலியன.

இரத்தக் கண்ணீர்:

இவை அனைத்தும் தமிழகத்துச் சான்றோர்களாகிய சித்தர் பெருமக்களால் தமிழ் மொழியில் தோற்றுவிக்கப் பெற்றவை. இவையனைத்தும் அழிந்து போயின என்பது சிற்சில பாடல்கள் கிடைத்திருப்பதனாலும், சிற்சில நூல்களில் மேற்கோள்களாக வந்திருப்பதாலும் அறியமுடிகிறது. இன்னும் என்னென்ன நூல்கள் இருந்தனவோ? என்னென்ன பெயரில் இருந்தனவோ? அவற்றுள் என்னென்ன புதையல்கள் இருந்தனவோ? அவற்றின் ஆசிரியர்கள் யார் யாரோ? அறிய முடியவில்லை. அவை அனைத்தும் இன்று இருந்தால்...? நினைத்தால் நெஞ்சம் புண்ணாகிறது. அழுதால் கண்களிலிருந்து இரத்தக் கண்ணீரே சொட்டுகிறது. என்னசெய்வது?

முடிவு:

இந்த அழிவு நிலை மாற வேண்டும். மக்கள் சித்தவைத்தியத்தின் அருமை பெருமைகளை உணரவேண்டும். தாய் வழிமகள் காது வழிகேட்டு கை வைத்தியமாகச் செய்யும் முறை தமிழகத்தில் மலர வேண்டும். மேலை நாட்டு மருத்துவத்திற்காகச் செலவழிக்கும் பெரும் பொருள் மிச்சப்பட வேண்டும். சிற்றூர்களிலெல்லாம் தமிழ் மருத்துவ மனைகள் திறக்கப் படவேண்டும். வருமானம் உள்ள திருக்கோவில்களில் இலவச சித்த மருத்துவ மனை செயல்பட வேண்டும். சித்த வைத்தியப் பள்ளிகளும், கல்லூரிகளும் தமிழகத்தில் பெரும்பான்மையாகத் திறக்கப்பட வேண்டும். பொதுமக்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் இது நம் நாட்டு மருத்துவம்.

விமானத்தில் போர்த்தப்பட்ட தங்கத்தகடுகள்

முதலாம் ராஜேந்திர சோழன் இத்திருக்கோவிலின் விமானம் கர்ப்பக்கிரக சுவர் ஆகியவற்றை தங்கத்தகட்டால் மூடி திருப்பணி செய்து குடமுழுக்கு செய்துள்ளார். தங்கத்தகடு போர்த்தப் பயன்படுத்திய தங்க எடை உட்பட இந்த செய்தி அருள்மிகு தியாகராஜ சுவாமி கர்ப்பக்கிரக சுவரில் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இந்தத் தங்கத்தகடு பிற்காலத்தில் அன்னியர் படையெடுப்பால் அகற்றப்பற்றிருக்க வேண்டும். இவ்வாறு தங்கத்தகடு போர்த்தி குடமுழக்கு செய்ததும், தற்போது நடைபெற்ற குடமுழுக்கினை போன்று, ஒரு பிரபவ ஆண்டு தைத்திங்களில் தான் நடைபெற்றுள்ளது.

சு. ஸ்ரீதரன்
நிர்வாக அதிகாரி

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,

பழநி. அண்ணா மாவட்டம்,

தமிழ் நாடு.

இத்திருக்கோயில் மிகப் பழமை வாய்ந்ததும், புராதானமானதுமாகும். 450 அடி உயரமுள்ள மலையின் மூலவர் உருவச்சிலை சித்த முனிவர் போகரால் நவ பாஷாணங்களின் கலவையால் உருவாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. திருக்கோயில் மூலம் ஆறுகால அபிஷேகம், ஆராதனை நடக்கிறது. அருள்மிகு தண்டபாணி சுவாமி வழிபடும் பக்தர் களுக்கு மென்மேலும் நலம்பெற அருள்புரிந்துகொண்டு இருக்கிறார்.

பக்தர்கள் சென்று வழிபட படிப்பாதை யானைப்பாதை உள்ளன. தவிர மின் இழுவை ரயில்கள் இரண்டு ஓடிக்கொண்டு இருக்கின்றன. மலையில் தர்ம தரிசனத்திற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி ஒரு வழிப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அபிஷேகம் செய்பவர்களுக்கு சிறப்பு அனுமதி கட்டணம் சீட்டு வாங்குபவர்களுக்கு தனித்தனி பாதைபள் அமைக்கப்பட்டு உள்ளன. மலையில் வழிபாடு செய்யவும், தங்கி ஓய்வு எடுக்கவும் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மலையில் திருக்கோயிலின் அபிஷேகத்திற்கு பஞ்சாமிர்தம், பன்னீர் மற்றும் ஆண்டவர் பிரசாதங்கள் லட்டு,முறுக்கு விற்கப்படுகின்றன. கூட்டுறவு பண்டகசாலை மூலம் தேங்காய், பழம் விபூதி முதலியன விற்கப்படுகின்றன.

மலைக்கோயில் சன்னிதி காலை 6-00 மணி முதல் இரவு 8-30 மணி வரை திறந்து இருக்கும். திருவிழாக் காலங்களில் காலை 4-00 மணி முதல் இரவு இராக்கால பூஜை முடிய திறந்து இருக்கும்.

விஸ்வருப தரிசனம் காலை 6 மணி.

விசேஷ நாட்களில் காலை 4 மணி.

கால பூஜை நேரங்கள் :-

1. விழா பூஜை காலை 6-45 மணி
2. சிறு கால சந்தி காலை 8-00 மணி
3. காலை சந்தி காலை 9-00 மணி
4. உச்சிக்காலம் பிற்பகல் 12 மணி
5. சாயரட்சை மாலை 5-30 மணி.
6. இராக்காலம் இரவு 8 மணி.

முக்கிய திருவிழாக்கள் :-

1. வைகாசி விசாகம்.
2. ஸ்கந்த சஷ்டி.
3. பெரிய கார்த்திகை
4. தைப்பூசம்.
5. பங்குனி உத்திரம்,

புறப்பாடு கட்டணம் :-

1.	தங்கமயில் வாகனம்	— ரூ. 200-00
2.	தங்க ரதம்	— ரூ. 900-00

கட்டளைகள் :-

1.	கால பூஜை	— ரூ. 3000-00.
2.	தங்க ரதம்	— ரூ. 10000-00.

மேற்கண்ட தொகையைக் கட்டளையாக கட்டினால் ஒவ்வொரு ஆண்டிலும் குறிப்பிட்ட ஒரு நாளில் கால பூஜை, தங்கரதப் புறப்பாடு நடத்தி பிரசாதங்கள் வழங்கப்படுகின்றன,

பக்தர்கள் தங்குவதற்கு ரயில்வே பீடர் ரோடில் தங்கும் விடுதியும், அடிவாரத்தில் தண்டபாணி நிலையம், கார்த்திகேயன் விடுதி, சிறுகுடில்கள் சகல வசதிகளுடன் கூடிய தட்பவெப்ப அறைகள், சிறப்பு முதல் வகுப்பு, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு அறைகள் உள்ளன.

பழனி வந்து அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியின் அருள்பெற வேண்டுகிறோம்.

ஆ. மலையாண்டி பி. ஏ., பி. எல்.,
துணை ஆணையர்/நிர்வாக அதிகாரி.

க. பொன்னுசாமி, பி. எஸ்ஸி.,
தக்கார்.

முக்தித்தலங்கள்

டாக்டர். சி. பாலசுப்ரமணியன், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
பேராசிரியர்-தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்,
பல்கலைக் கழக இணைவகம், சென்னை-600 005.

உலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவம் வீட்டிற்கும் சுற்றத்திற்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செவ்வனே ஆற்றி, அறநெறி போற்றும் அருளாளர் துணையுடன் இறையருளுள் கலத்தல் இன்றியமையாத வாழ்வுப் பயனாகப் போற்றப் பெறுகின்றது. இவ்வுலகச் சமயங்கள் யாவும் இக் கருத்தை வலியுறுத்தக் காணலாம். அவற்றுள் சைவ சமயம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் வாழ்வியல் நெறியைச் சிறப்புறச் சித்திரிக்கின்றது.

ஈதல் அறம் தீவினைவிட்(டு)
ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல்இருவர்
கருத்தொருமித்து — ஆதரவு
பட்டதே இன்பம்
பரனைநினைந்(து)இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

என்னும் பழம்பாடல் இதற்குச் சான்றாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் இந் நான்கும் 'உறுதிப் பொருள்கள்' என உரைக்கப் பெறுகின்றன. வடமொழி அறிஞர்கள் இவற்றைப் 'புருஷார்த்தம்' என்று கூறுவர். உறுதிப் பொருள் நான்கனுள் வீடு என்பது உலகக் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்று முத்தியடைதலாம். முத்தியடைதலையும், முத்தியளிக்கும் கடவுள் ஆற்றலையும் முத்தியடையத்தக்க தலங்களையும் நம்முடைய முன்னோர்கள் நம்பி வந்தனர். அவர்கள் தம் நம்பிக்கையை நூல்களின் வழி வெளிப்படுத்தியும் உள்ளனர். அச் சான்றோரின் நம்பிக்கைகளுள் ஒன்றாகிய முத்தியளிக்கும் தலங்கள் குறித்து இவண் நோக்கலாம்.

முத்தித் தலங்கள்:

தமிழ்ச் சான்றோர் முத்தியளிக்கும் தலங்களாக நான்கு ஊரைக் குறிப்பிடுவர். திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, காசி என்பன அவ்வூர்கள். இவற்றுள் திருவாரூர் பிறக்க முத்தி தருவது; சிதம்பரம் தரிசிக்க முத்தி தருவது; திருவண்ணாமலை நினைக்க முத்தி தருவது; காசி இறக்க முத்தி தருவது. இக் கருத்துக்களை,

தெரிசனம்செயத் தில்லையிற்
கமலையிற் செனிக்க
மரணமாய்விடக் கங்கைசூழ்
வாரணா சியிலே
அருணைமாநகர் நினைத்திட
முத்தியஞ் செழுத்தும்
சிரணவத்தொடெப் பேர்களு
முரைக்கினும் பெறலாம்.

என்னும் அழகிய பாடலில் காணமுடிகின்றது. நல்ல எண்ணம், நல்ல செயல், நல்ல பண்பு முதலியவற்றால் நற்கதி பெற்றோர் வாழும் திருத்தலங்களாக இவை போற்றிக் கூறப் பெறுகின்றன. கட்டறுத்து வீடுபெற என்னும் ஒவ்வோர் உயிரும் இத்தலங்களை நாடுதல் இயல்புதானே! இனி இத்தலங்களின் சிறப்புகளை நுணுகி நோக்குதல் நல்லது.

திருவாரூர் :

இன்றையத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சைவத் திருப்பதி திருவாரூர். தேவார மும்மூர்த்திகளாகிய ஆளுடைய பிள்ளை, அப்பர், ஆரூரர் ஆகிய மூவரின்

பாடல்பெற்ற தலமாக இவ்வூர்த் திகழ்கின்றது. வன்மீகநாதர் என்னும் திருப்பெயருடன் இக்கோயிலின் மூர்த்தி எழுந்தருளியுள்ளார். அவர் இருக்கும் இடத்தைத் திருமூலட்டானம் என்றும் பூங்கோயில் என்றும் வழங்குவர். வன்மீகநாதர் என்பதைப் புற்றிடங்கொண்டார் என அழகுத் தமிழில் உரைப்பர். இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் உற்சவமூர்த்தி தியாகராசர். இவருக்கென்று தனிச் சந்நிதி உள்ளது அதனைத் தேவசபை என்பர். அல்லியங்கோதை, கமலாம்பிகை என்னும் இருஅம்பிகைகள் இக்கோயிலின் கண் எழுந்தருளியுள்ளனர்.

திருவிழாக் காலங்களில் தியாகராச பெருமானுடைய நடனம் சிறப்புடையதாகப் போற்றப்பட்டு, பக்தர்கள் பலராலும் கண்டு களிக்கப் பெறுகின்றது. ஆடல்வல்லாரின் அந் நடனத்தை 'அசபா நடனம்' எனக் குறிப்பர். அழகும், பொலிவும், தூய்மையும், அருளும் நிறைந்த இடமாக இக்கோயில் விளங்குகின்றது. இக்கோயிலுக்கென்றுள்ளதடாகம் கமலாலயம் என்னும் பெயருடையது. இதனடிப்படையில் இவ்வூருக்குக் 'கமலை' என்ற பெயரும் உள்ளது. இத்தடாகம் 18 ஏக்கர் பரப்புடையது. 'திருவாரூர்த் தேரழகு' என்பது இவ்வூர்த் தேரின் சிறப்பு நோக்கித் தோன்றிய பழமொழியாகும். வழிபாட்டு ஒலியும், வேத மந்திரங்களின் ஒலியும், பல்லியப் பாடல்களின் ஒலியும் இவ்வூரில் ஒலித்த வண்ணம் இருந்தமையை,

வேத ஓசையும் வீணையின் ஓசையும்
சோதி வானவர் தோத்திர ஓசையும்
மாதர் ஆடல் மணிமுழ வோசையும்
கீத ஓசையு மாய்க்கிளர் வுற்றவே.

என்னும் சேக்கிழார் பெருமானின் திருத்தொண்டர் புராணப் பாடல் சுட்டுகின்றது. அறியாமல் பசுவின் கன்றைக் கொன்ற தன் ஒரே மகனைத் தேர்க்காலில் இட்டுக் கொன்று பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் இவ்வூரில் செங்கோலோச்சியதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

இத்தகு சிறப்புகள் வாய்ந்த இவ்வூரில்தான் நமிநந்தியடிகள் நாயனார் பூசை செய்து வழிபட்டார்; மேலை ஞானப்பிரகாசர் இங்கே வழிபாடு செய்தார்; விறன்மிண்ட நாயனார் இத்தலத்தில் நெடுங்காலம் தங்கியிருந்தார். சுந்தரமூர்த்தி நாயனார் இவ்வூருக்கு வந்து பரவை நாச்சியாரை மணந்துகொண்டு வாழ்ந்தார்; இவ்வூரிலேதான் திருத்தொண்டத் தொகையைப் பாடினார். சுந்தரர், பரவையார் இருவரும் எழுந்தருளியுள்ள பரவை நாச்சியார் கோவில் இவ்வூரில் உள்ளது. சங்கீத மும்மூர்த்திகள் என அழைக்கப்பெறும் முத்துசாமி தீட்சிதர், தியாகராஜ சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரும் இவ்வூரில் தோன்றியவர்கள்.

இத்தலத்தைப் பற்றிக் கூறும் இலக்கியங்கள் பல எழுந்துள்ளன. கமலாலய சிறப்பு, திருவாரூர்ப் புராணம், தேரூர்ந்த சோழபுராணம், தியாகராச லீலை, திருவாரூர் நான்மணிமாலை, தியாகராசர் பள்ளு, குறவஞ்சி, திருவாரூர்ப் பன்மணிமாலை, கமலாம்பிகை பிள்ளைத் தமிழ், திருவாரூர்மாலை, கமலாம்பிகை மாலை, திருவாரூர் ஒருதுறைக்கோவை, தியாகராசர் கழிநெடில், திருவாரூர் உலா, திருவாரூர்க்கோவை என்னும் நூல்கள் அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும். இத்தகைய சிறப்புகள் பலவாய்ந்த ஊரில் பிறப்பது முத்தி அளிக்கும் என்னும் மரபு ஏற்புடையதே.

சிதம்பரம் :

கோயில் என்றாலே சிதம்பரத்தைக் குறிப்பதாக உரைப்பர். வேடன் பிள்ளையார் கோயில், செங்கழுநீர்ப் பிள்ளையார் கோயில், சேக்கிழார் கோயில், கமலீசுரன் கோயில், தேரடிப்

பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோவில், காளியம்மன் கோவில், வீரபத்திரசாமி கோவில், செல்லியம்மன் கோவில், நந்தனார் கோவில், கூத்தாடும் பிள்ளையார் கோயில், இளமையாக்கினார் கோயில், அனந்தீசுவரர் கோயில், தில்லைக் காளியம்மன் கோயில், நரமுகப் பிள்ளையார் கோயில், மத்தியந்த னேசுவரர் கோயில் என்னும் கோயில்கள் இவ்வூரின்கண் அமைந்துள்ளன. இவ்வாறு கோயில்கள் நிறைந்த ஊர் என்பதால் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். சிற்றம்பலம், புலியூர், தில்லை, சித்திர கூடம் என்பன இவ்வூருக்கு வழங்கப் பெறும் வேறு பெயர்கள். ஐம்பூதத் தலங்களுள் இஃது ஆகாயத்தலம். இங்குள்ள இலிங்கம் 'ஆகாயலிங்கம்' எனக் குறிக்கப் பெறுகின்றது. தேவார மும்மூர்த்திகள் பாடல்பெற்ற தலங்களுள் இதுவும் ஒன்று. சேக்கிழார் பெருமான் தம்முடைய திருத்தொண்டர் புராணத்தை இத்தில்லையம்பலத்திலேதான் அரங் கேற்றம் செய்தார். பொன்னம்பலத்தே நடராசப் பெருமான் திருவடி தூக்கி ஆடுகின்ற நடனக்காட்சி கண்ணாரக் கண்டு களிக்கத் தக்கது. அந்நடனத்தை 'நாதாந்த நடனம்' எனக் குறிப்பர்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், கல்லாடர்' திருமாளிகைத்தேவர், சேந்தனார், கண்ட ராதித்தர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி' பட்டினத்தார், அருணகிரியார், சேரமான் பெருமாள், உமாபதிசிவம் முதலிய பலர் சிதம்பரத்தைப் பாடியுள்ளனர். இவ்வூரில் 63 நாயன்மார்களின் சிலைகளும் வழி பாட்டுக்குரிய வகையில் கோயிலின் உள்ளே அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகு சிறப்புகள் நிறைந்த இவ் வூரில் மாணிக்கவாசகர், திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவநாயனார், கோச்செங்கட்சோழ நாயனார், கணம் புல்ல நாயனார், மறைஞான சம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் முதலிய பெருமக்கள் முத்தியடைந்தனர். இதன் காரணமாகவும் இத்தலத்தின் மாட்சிமை புலனாகும்.

சிதம்பரத்தின் பெருமைகளைப் பெரியபுராணம், கோயிற்புராணம், சிதம்பர புராணம், புலியூர்ப் புராணம் தில்லைக் கலம்பகம், சிதம்பரச் செய்யுட் கோவை, சிதம்பரநாதர் பதிகம், புலியூர் வெண்பா, சோலமண்டல சதகம், கந்த புராணம் போன்ற நூல்கள் விதந்தோதி யுள்ளன. கண்ணுதற் கடவுளின் தண்ணருள் வேண்டுவோர் இத்தலம் நாடி வந்து ஆடுகின்ற அவ் அண்ணலைத் தரிசித்துப் பிறவிப் பயன் பெறுகின்றனர்.

திருவண்ணாமலை:

ஐம்பூதத் தலங்களுள் அக்கினித் தலமாகக் கருதப்பெறுவது திருவண்ணா மலை என்னும் திருப்பதி இங்குள்ள மலை, இறைவன் உருவமாக - சோதி வடிவாகப் புகழப் பெறுகின்றது. இம் மலையை வலம்வர வேண்டுமெனில் 8½ மைல் தூராம் நடக்க வேண்டும். அந்த அளவிற்குப் பெரிய மலையாக இஃது உள்ளது. இத்தலத்தை நினைத்தாலே முத்திகிட்டும் என்னும் நம்பிக்கை காலங் காலமாகத் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது.

இயற்கையழகும், சீரான தட்ப வெப்ப நிலையும் இவ்வூரில் இயல்பாக அமைந்திருத்தல் காணலாம். இங்கே உள்ள கோயில் அண்ணாமலையார் கோயில் என வழங்கப் பெறுகின்றது. இங்குள்ள அம்மன் உண்ணாமுலை யம்மை என்னும் பெயரினள். அப்த குசாம்பாள் எனவும் அம்மனைக் குறிப்பர். நான்கு பெரிய மதில் வாய் களிலும் உயரிய கோபுரங்கள். கோயிலின் உள்ளே ஐந்து நடுத்தரக் கோபுரங்கள் பெற்று அமைதியான அழகுடன் இக் கோயில் திகழ்கின்றது. இவ்வூரில் பல

குளங்கள், ஆயிரக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம் ஆகியன அமைந்து அழகுக்கு அழகு சேர்க்கின்றன

தேவார மூர்த்திகளின் பாடல் பெற்ற தலமாகவும், திருப்புகழ் பாடல்பெற்ற தலமாகவும் விளங்குதல் இவ்வூரின் சிறப்புகளுள் குறிப்பிடத்தக்கது. இங்கு நடைபெறும் திருவிழாக்களில் கார்த்திகை தீபவிழா தலைசிறந்த விழாவாகும் இவ் விழா அடிமுடி தேடிய ஐதிகத்தைப் பின் பற்றியது. அரியும் அயனும் தம்மில் யார் உயர்ந்தவர்கள் எனப் போட்டி கொண்டனர். இறைவன் அவர்களுக்குத் தம் உண்மையான ஆற்றலை உணர்த்த திருவிளையாடல் ஒன்றை மேற் கொண்டார். அதன்படி தம்மைச் சோதிமலையாக நிறுத்திக் கொண்டார். அரியும் அயனும் முறையே வராக அவ தாரமும் அன்னப்பறவை அவதாரமும் எடுத்து இறைவனின் அடிமுடியைத் தேடினர். இறைவனின் திருவிளை யாடலை உணராத அவ்விருவரும் பெரு முயற்சி மேற்கொண்டு இறுதியில் அடி முடி காணாது அயர்ந்தனர். அந்தக் கதையை நினைவூட்டுவது போன்று இம்மலையில் கார்த்திகைத் திருவிழா நடைபெற்று வருகின்றது.

காசி :

கங்கையைச் சார்ந்த திருப்பதிகளில் காசியே முதன்மை பெற்றது; பாரத நாட்டின் கணக்கற்ற திருப்பதிகளிலும் தலைசிறந்தது. இதற்கு அவிமுக்த க்ஷேத் திரம், ஆநந்தவனம், பெருமயானம் என் னும் பெயர். இங்கே வந்து வசித்தாலே நற்கதி அடையலாம்; இங்கு உடலை நீத்தலே முத்திக்கு வழியாகும். சிவபிரான் இங்கே தெருத்தெருவாக அலைந்து கொண்டு மடியும் மக்கள் காதில் தாரக மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருக் கிறார் என்பர்.

காசி இந்து சமயங்களின் வளர்ச்சிக்கு நிலைக்களனான இடமாகும். வியாச முனிவர், மகாவீரர், புத்தர், சங்கரர், துளசிதாசர் முதலிய சமய ஆசாரியர்கள் இப்புண்ணியத் தலத்தில் வாழ்ந்தனர். இங்கே நூற்றுக்கணக்கான கோயில்கள் உள்ளன. அவற்றுள் விசுவநாதர், அன்னபூரணி, விசாலாட்சி, துர்க்கை, பிந்துமாதவர், கேதாரேசுவரர் கோயில்கள் முக்கியமானவை.

தென்னாட்டு மக்கள் காசிக்கும், வட நாட்டு மக்கள் இராமேசுவரத்திற்கும் சென்று வருதல் இன்றும் நாம் காணக் கூடிய நிகழ்ச்சியாகும். காசியிலிருந்து கொண்டு வந்த கங்கை நீரைக் கொண்டு இராமேசுவரக் கோயிலில் அபிடேகம் செய்தலை யாவரும் அறிவர். அவ்வகை இவ்விருதலங்கள் இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டிற்கு - வடக் கிருந்து தெற்குவரை யாவரும் உடன்பிறந் தவர்களே என்னும் கருத்து வலுப்பெறு தற்கு மிக அடிப்படையான தொண்டினை ஆற்றிவருதல் கண்கூடு. ஆகவே, காசி முத்தியளிக்கும் தலமாக இருப்பதுடன் ஒருமையுணர்வை ஊட்டும் தலமாக இருப்பதையும் உணரலாம்.

பாரதத் திருநாட்டில் இடம் பெற் றுள்ள மேற்சுட்டிய திருத்தலங்கள் மக்க ளுக்கு முத்தியளிக்கக்கூடிய தலங்களாக இருப்பதுடன், மக்களிடையே நேய உணர்வை வளர்க்கவும், அதன் வாயி லாக ஒருவரை ஒருவர் மதித்துப் போற்றி வாழவும், குறுகிய மனப்பான்மையிலி ருந்து விடுபட்டு உலகந்தழுவிய மனித நேய உணர்வைப் போற்றுமாறு விரிந்து பரந்த விசாலமான உளப்பாங்கைப் பெறவும் பெரும் பங்களிக்கின்றன. இவை நம் நாட்டின் அருள் நலத்தை உலகோர்க்கு எடுத்துக்காட்டும் வளம் கெழுமிய திருத்தலங்கள். இத்தலங் களைப் போற்றுதல் நம் தலையாய கடமையாகும்.

தமிழ்நாட்டில் சக்தி வழிபாடு

அம்பிகை ஆண்டவனோடு இணைந்து இருத்தலையே சைவ மரபோடு ஒன்றிய சாத்திரங்களாலும், இலக்கியங்களாலும் ஒப்புக் கொள்ளப் பெறுகின்றது.

தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊதாய் கோத்தும்பீ [1]

எனும் திருவாசகப் பாடலில் இறைவனையும் இறைவியையும் அம்மையப்பராக ஒன்றிய கோலத்தில் கொணர்ந்துணர்த்துகின்றார் மணிவாசகர்.

'இறைவனும் இறைவியும் அம்மையப்பராக விளங்கி உலகத்து உயிர்களுக்கு அருள் வழங்குகின்றனர். இயங்குதல்; இயக்குதல் என்னும் இருவகை ஆற்றல்களை அம்மையப்பராகக் காணலாம். அம்மை இயங்கும் ஆற்றல். அப்பன் இயக்கும் ஆற்றல். இவ்விரண்டும் ஒன்றையொன்று பிரியாத நிலையில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது' என்கின்றார் வணக்கத்திற்குரிய தருமைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.[2] இறைவனும் இறைவியும் மலரும் மணமும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், அக்கினியும் சூடும் போலவும் பிரிப்பு இன்றி இருப்பர். இதனை வலியுறுத்துவதே மணிவாசகர் பாடிய, நாம் கோவில்களில் காணும் அர்த்தநாரீசுவரர் கோலம். இயற்கையோடு இயைந்த பெருஞ் சிறப்புடையதால் ஒப்புயர்வற்றுத் திகழும் இத்திருவுருவையே 'தனக்குவமையில்லாதான் தாள்' என்று திருக்குறள் குறிக்கின்றது எனக் கொள்வதில் இழுக்கில்லை எனும் அறிஞர் கூற்று சிறப்புமிக்க ஒன்று. [3]

அம்மையப்பரான சிவபெருமானின் கருணையையே. அருள்தனையே சக்தியாக ஆன்றோர் குறித்துள்ளனர். 'ஒன்றவன்தானே; இரண்டு அவன் இன்னருள்' எனும் திருமூலர் பாடலும், 'அருளது சக்தியாகும் அரன்தனக்கு' என்ற சிவஞான சித்தியார் வாக்கும் இதனை மேலும் வலியுறுத்தும். இவ்வருளையே, சக்தியினையே அம்பிகையாகப் பின்னர் வணங்கும் வழக்கம் தோன்றியது சிவபெருமான் கதிரவன் என்றால் சிவபெருமானின் இயக்கும் சக்தி கதிரவனின் ஒளிக்கதிர்களுக்கு இணையாகும் 'சிவம் செயலைச் செய்பவனாகச் சக்தி அவனுக்குத் துணையாதல் பற்றி சிவத்தை ஆண்மகனாகவும் சக்தியைப் பெண்மகளாகவும் அமைத்தனர்' [4] எனும் அறிஞர் கூற்று சிந்திக்கத் தக்கது. அதனால் அவர்களிருவரையும் கணவன் மனைவியாக வைத்து உயிர்களுக்குத் தாயும் தந்தையுமாக நம் முன்னோர் காட்டியுள்ளனர்.

தாவரம் முதல், மானிடர் வரை இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் ஆணும் பெண்ணுமாகிய கூறுகள் பிரிவற்று இயைந்தே நிற்கின்றன. மனித உடற் கூறிலும் வலம், வன்மை பொருந்தியும், இடம், மென்மை பொருந்தியும் உள்ளமை

காணலாம். கருணை, அன்பு எனும் பண்புகளின் இருப்பிடமான இதயத்தை மென்மை பொருந்திய இடப்பக்கம் அமைத்திருத்தலால் இறைவனே பெண்மைக்குத் தரும் பெருமை உணர்ந்து போற்றத்தக்கதாகும். மேலும் தாய் தந்தையரில் தாயே மிகவும் தயை உடையவள் எனும் காரணத்தால் பிள்ளைகள் தாயைப் பார்த்துத் தமக்கு வேண்டியவற்றைக் கூறித் தாய்வழியாகத் தந்தையிடம் பயனைப் பெறுகின்றனர். உயிர்கள் அனைத்தும் அம்மையை நோக்கியே பயனைப் பெறுகின்றன. அம்மையோ தனக்கு வேண்டும் வரங்களை இறைவனை நோக்கித் தவம் புரிந்து வழிபட்டுப் பெறுகின்றாள்.

பழந்தமிழ் நாட்டில் இறைவலிமையை பெண்வடிவில் வழிபடும் போக்கு பற்றி சிறிது சிந்திப்போம். பண்டைக்காலத்தில் தமிழ் மக்களிடையே இருந்து வந்த சக்தி வழிபாட்டைப் பற்றிய செய்திகள் ஆர்வமூட்டும் செய்திகளாக அமைந்துள்ளன. மிகப் பழங்காலத்தில் தாய்த் தெய்வ வழிபாடு-சக்தி வழிபாடு இனக்குழு மக்களிடையில் Tribes பரவலாக இருந்து வந்த வழிபாடாகும். ஆரியருடைய வேதகாலத்திற்கு முற்பட்ட இவ் வழிபாடு பின்பு இந்து மதத்தில் இணைக்கப்பட்டு தேவி வணக்கமாகவும் அம்மன் வணக்கமாகவும் பரவலாக இன்று வழங்குகின்றது. கிராமங்களில் உள்ள பாமர மக்கள் இன்றும் தாய்த் தெய்வத்தையே பல பெயர்களில் பல உருவங்களில் வழிபட்டு வருகின்றனர். சக்தியைத் தாயாகவும், கன்னியாகவும் கருதுவது நம் நாட்டு மரபு என்பதோடு காவிரி, கங்கை, சரஸ்வதி, யமுனை ஆகிய வளம் தரும் ஆறுகளையும் பெண் தெய்வங்களாகக் கருதுவதும் பண்டை இந்தியப் பண்பாட்டு மரபாகும்.[5] ஆறுகள் மட்டுமல்ல, நமது நாட்டையே ''தாய்த்திருநாடு'' என்று கூறுவதினின்று தாய்க்கும் பெண்மைக்கும் நமது மரபு அளித்திருந்த பெருமை உணரத்தக்கதொன்றாகும்.

தொல்காப்பியர் குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்கு மாயோனையும், மருதத்திற்கு வேந்தனாம் இந்திரனையும், நெய்தலுக்கு வருணனையும் தெய்வங்களாகக் குறிப்பிட்டு தனக்கென நிலமில்லாத பாலை நிலத்திற்கு கொற்றவையைச் சிறப்புத் தெய்வம் என்று கூறுவது காணலாம். ஆதிசங்கரர் அறுவகைச் சமயங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், சைவம் - சிவத்தைப் போற்றுவது; வைணவம் -விஷ்ணு-திருமாலைப் போற்றுவது; சௌரம்-சூரியனைப் போற்றுவது, காணாபத்யம்-கணபதியைப் போற்றுவது கௌமாரம்-குமரனைப் போற்றுவது என்றுகூறி, சாக்தம்-சக்தி வழிபாட்டினைப் போற்றுவது என்றும் குறிப்பிட்டுள்ளார். இச்சமயங்களும் மக்கள் தமக்குள் பிணக்குறுவதற்கன்று பாதைகள் வேறு வேறாக இருப்பினும் மனிதன் சென்றடைய விரும்பும் இடம் ஒரு இறைமையையே எனும் கருத்து வலியுறுத்தப் பெறுகின்றது, தெளிவு.

சக்திவழிபாட்டினை இன்றும் தமிழ்மககள் போற்றி,உணர்தல் காண்கின்றோம். உலக வாழ்க்கைக்கு வீரம், கல்வி செல்வம் ஆகிய மூன்றும் இன்றியமையாதன. இம் மூன்றையும் அருளும் தெய்வங்களாக மலைமகளையும் (துர்க்கை). கலைமகளையும் (சரஸ்வதி) திருமகளையும் (இலக்குமி) வணங்குதல் மரபு. இவ்வழிப்பாட்டிற்கென்றே நவராத்திரி எனும் விழா எடுக்கப் பெறுகின்றது முதல் மூன்று இரவுகள் மலைமகள் வழிபாட்டிற்கும், மறு மூன்று இரவுகள் திருமகள் வழிபாட்டிற்கும், கடை மூன்று இரவுகள் கலைமகள் வழிபாட்டிற்கென்றும் கொள்ளப் பெறுகின்றன. பத்தாம் நாளான விஜயதசமி மகிடாசுரனை வெற்றிகொண்ட விழாவினைக் குறிக்கின்றது. இதன்கண் அறியப்பெறுவது யாதெனில், சக்தி என்ற தாய், பாவத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுபவள் என்பதே.

ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ[6]

எனும் மணிவாசகர் பாடற்பொருட்கேற்ப பல நாமங்களும் பல உருவங்களும் கொண்டு வணங்கப் பெறினும் அம்பிகை என்பவள் தாய்மையின் வடிவே, தண்ணருளின் வடிவே, பெண்மையின் வடிவே என்பது உறுதி.

மேலும் பல நேரங்களில் பல வழிபாடுகளில் சக்தியை அச்சுறுத்தும் வடிவில் அலங்கரித்திருப்பதையும் காண நேரிடுகின்றது. இறைவனின் அருள்சக்தியான இறைவியின் தோற்றத்தைக் குமரகுருபரர்,

எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்துநின்ற ஒருவன் திருவுள்ளத்தில்
அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே [7]

என்று கூறுகின்றார். அம்பிகை அவருக்குப் பேரழகுச் சித்திரமாகவே தோன்றுகின்றாள் இறைவி இறைவனின் கருத்தில் எப்போதும் மகிழ்ச்சி தரக்கூடியவள். பெருமானது கண்ணில் களிநடனம் புரியக்கூடிய அழகுடையவள். தாய்மையின் சின்னமாக, தண் அருள் சுரக்கும் கனிவுடன் எழில் உருவங்கொண்டு மென்மையின் உறைவிடமாகவே தோன்றுகின்றாள்.எழில் ஓவியத்தோற்றமிருக்க அம்பிகையை அச்சுறுத்தும் கோலத்தில் தாய்மையின் தண்ணருள் இருக்க பலிகொள்ளும் பாவையாகக் காணுதல் கனியிருக்கக் காய்கவர்தல் போலன்றோ தோன்றுகின்றது?

பழமை வாய்ந்த திருக்கோவில்களின் அர்த்த மண்டபத்தின் இடப்புறத்தில் அம்மையின் திருவுரு ஒன்று இருக்கக் காணலாம். இவ்வம்மை போகசக்தி எனப்பெறுவள் அம்மை எழுந்தருளியிருக்கும் அர்த்தமண்டபத்தில் நின்றே சிவாசாரியார் சோடசோபசாரங்களைக் காட்டுதல் மரபு. இதன் தத்துவம் யாதெனில் உலகநாயகியாகிய அம்மை உலகில் வாழும் உயிர்களின் நலன்கருதி உயிர்கள் அளிக்கும் கொடைகளைப் பெற்று அதனைச் சிவபெருமானுக்குச் சேர்ப்பிக்கும் உபசாரமேயாகும் என்பது தருமைக்குரு மணியின் கருத்து.[8]

சிவபெருமான் தேவர்களையும் அசுரர்களையும் காக்கும் பொருட்டு பாற்கடலில் தோன்றிய ஆலகால விடத்தைத் தாமே உண்ண, ஐயன் ஆலகால விடத்தை உண்டால் அவனுள் இருக்கும் அத்தனை கோடி உயிர்களும் அழிந்துபடுமே என்று கருணை கொண்ட அம்பிகை சிவபெருமானின் திருமிடற்றைப் பற்றியதாகக் கூறுவது புராணம். உலகியலிலும் கணவன் தேவையை உணரவும், தீமை புகாமல் காக்கவும் வல்லவள் மனைவியேயாவாள் எனும் கருத்தும் இதனின்று சிந்திக்கத்தக்கது.

'ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெலாம் உய்ய', [9]

அறம் செய்தமையால் 'அறம் வளர்த்த நாயகி' எனும் பெயர்கொண்டு அம்பிகையை அழைப்பது வழக்கு. சிறிதளவே பெற்ற பொருள் கொண்டு முப்பத்திரண்டறமும் செய்திருந்த சங்கரனாரின் மனைமங்கலமான அம்பிகையை ஐயன் திருமனையாளைக் கருத்திற்கொண்டு உலகியலிலும் பெண்மை உய்யவேண்டும் என்பதே பக்திப்பாடல்கள் பாடிய அருளாளர்களின் பேரவா.

திருவெண்காட்டு நங்கை பற்றிக் கூற வரும் சேக்கிழார்,

நீராரும் சடைமுடியார் அருளினால் நிறைவைத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு மனையறத்தின்

வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபால்
சீராள தேவரெனுந் திருமைந்தர் அவதரித்தார்[10]

என்று கூறிப் பெண்ணின் பெருமையை விளங்க வைக்கின்றார். தமிழகத்தின் பண்பையும், அழியாத உண்மைத் தத்துவத்தையும் இப்பாடல்வழி சேக்கிழார் இனிதே விளக்குகின்றார். பெண்குலம் ஒரு விருட்சத்தின் ஆணிவேர் போல் மறைவில் நின்றே மாண்புமிக்க செயல்களைச் செய்யவல்லது எனும் அரிய தத்துவத்தைக் கூறுவதிப் பாடல். ஒரு மரத்தின் தளிரைப் பறித்தாலோ இலையைப் பறித்தாலோ, கிளையை வெட்டினாலோ, மரத்தையே வெட்டினாலோ மரம் அழிந்து விடாது. மீண்டும் மீண்டும் துளிர்க்கவும், தளிர்க்கவும் இடமுண்டு சிறிய செடியாய் இருப்பினும் பெரிய விருட்சமாக இருப்பினும் அதன் வேரில் பழுதுண்டானால் சாய்ந்துவிடும் மனித குலத்தின் அடித்தளமாக அடிநிலையாக இருப்பவர்கள் பெண்கள் என்பதை விளக்கும் இக்கருத்து ஒப்புயர்வற்றது[11] உலகியலில் பெண்கள் குடும்பத்தின் ஆணிவேராக, அஸ்திவாரமாக, சிறிதளவே பொருள்பெறினும் அறம் வளர்ப்பவர்களாக கணவனின் தேவையுணர்ந்து தீமை புகாமல் காக்க அம்பிகையை முன்னோடியாகக் கொளல் பெரிதும் நன்மை பயக்கும்.

அம்பிகையை, சக்தியை, இறைவனின் அருளை வழிபடுவதோடு நின்றுவிடாமல் உலகியலில் பெண்கள் சமய இலக்கியங்களிலும், சாத்திரங்களிலும் கூறியுள்ள மரபு பிறழாமல் வழிநடப்பின் பெண் இனத்தின் பெருமையும் உயரும். நாட்டின் தரமும் மேலோங்கும் என்பதே இக்கட்டுரை வழி இனிதே புலப்படும் முடிபு.

அடிக்குறிப்புகள்:

1 திருவாசகம், திருக்கோத்தும்பி பா. 18

2 ஞானசம்பந்தம், தருமை ஆதீன வெளியீடு, இதழ் 12, மலர் 42

3 ந. ரா. முருகவேள், சைவசித்தாந்தம் ப. 132

4 மு சிவச்சந்திரன், சிவமும் சக்தியும், ஞானசம்பந்தம், தருமை ஆதீன வெளியீடு இதழ் 3, மலர் 46.

5 பி. எல். சாமி, முகவுரை, தமிழ் இலக்கியத்தின் தாய்த் தெய்வ வழிபாடு–3 சென்னை 1980

6 திருவாசகம் திருத்தெள்ளேணம்–1

7 மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-வருகைப்பருவம் 9

8 திருவருட்செய்தி–ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் அருளாசித் தொகுப்பு–இரண்டாம் பகுதி பக்கம் 55.

9 அபிராமி அந்தாதி 57.

10 பெரியபுராணம், சிறுத்தொண்டர் நாயனார் புராணம் பா. 17.

11 திருவருட்செய்தி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளாசித் தொகுப்பு–இரண்டாம்பகுதி ப. 29.

சைவம் வளர்த்த மகளிர்

(செல்வி) டாக்டர். சிவ. பார்வதி, எம். ஏ., பிஎச். டி.,
இணை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநரகம், சென்னை.

உலகம் உய்யவும், சைவ சமயம் தழைக்கவும் இம்மண்ணுலகில் அவதரித்த நாயன்மார்களில் மங்கை நல்லாரும் இடம் பெறுகின்றனர்; அன்னவருள் சைவம் வளர்த்தார் சிலர்; சைவம் வளரத்துணை புரிந்தார் பலர்; புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் ஆகிய மும்மணிகளையும் சைவம் வளர்த்த மகளிர் எனலாம்.

இவர்களுள் காலத்தாலும் சீலத்தாலும் முதன்மை பெற்றவர் புனிதவதியார் என்ற இயற்பெயர் பெற்ற காரைக்கால் அம்மையாராகும். காரைக்காலில் தனதத்தன் என்ற பெரும் வணிகர்க்கு அருமை மகளாய்ப் பிறந்த புனிதவதியார் "பிறந்து மொழி பயின்ற பின்னரெல்லாம் காதற் சிறந்து" இறைவனடியே சிந்தித்து ஒழுகியவர். "இம்மையே சோறும் கூறையும் தருவான்" இறைவனே என வாழ்ந்து காட்டிய தம்பிரான் தோழருக்கு முன்னோடியாக விளங்கியவர்; இறைவனடியாரைக் காணின், கசிந்துருகி வேண்டுவன தந்து உபசரித்தல் அம்மையாரின் பண்பு கடல் நாகைப் பெருவணிகன் பரமதத்தனை மணந்து மனையறத்தின் பண்பு வாழாமல் வாழ்ந்து வருங்கால், நம்பரடியார் அணைந்தால் நல்லதிரு அமுதளித்தும் செம்பொன்னும், நவமணியும், செழுந்துகிலும் முதலான கொடுத்தளிப்பது அவர் வழக்கம்.

அங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் கணவர் இரு மாங்கனியை இல்லத்திற்குக் கொடுத்தனுப்ப, பசியினால் மனைக்கு வந்த திருத்தொண்டர்க்கு (சமையல் முற்றுப் பெறாத நிலையில்) சோறும், மாங்கனிகளில் ஒன்றும் படைத்து அடியாரை அமுது செய்வித்தார். நண்பகல் மனைக்குவந்த கணவனுக்கு உணவோடு எஞ்சிய ஒரு மாங்கனியையும் படைக்க, மதுரம்மிகுந்த மாங்கனி மற்றொன்றையும் கொணர்ந்திடுக என கூறிய கணவனுக்கு, உண்மையைக் கூறின் கணவன் ஐயுறுவானோ என அஞ்சி உள்ளே சென்று "மெய்மறந்து நினைந்துற்ற விடத்துதவும் விடையவர்தான் மனங்கொண்டு வணங்குதலும்" அம்மையாருக்கு மாங்கனி ஒன்று கிடைக்கின்றது. அதனை ருசித்த பரமதத்தன் ஞானக்கனியின் சுவை உணர்ந்து, முவுலகில் பெறற்கரிய கனி இது ஏது என வினவ, உண்மை சொல்ல வேண்டும் என்ற சீலத்தால் நடந்ததைக் கூறக் கணவன் தெளியானாய் 'அங்ஙன மேல் மீண்டுமொரு கனி அவனருளால் அழைத்தளிப்பாய்' எனமொழிய, அடியார்க்கெளியனான இறைவன் அம்மையாருக்கு மீண்டுமொரு கனி கொடுக்க கண்ட கணவன் விதிர்த்து அஞ்சி, அம்மையின் தெய்வத் தன்மையை அறிந்து அவளை விட்டு நீங்கினான். கடல் வாணிபம் செய்யச்சென்ற பரமதத்தன் மதுரையம்பதியில் தங்கி, ஆங்கு மங்கையொருத்தியை மணந்து, பிறந்த தன் பெண்மகவுக்குப் புனிதவதி என்ற பெயருமிட்டு வாழலானான். இச்செய்தியறிந்த புனிதவதியாரின் பெற்றோர் அம்மையை உரிய இடத்தில் சேர்த்தலே

முறையென்று எண்ணி மதுரைக்கு அழைத்துச் செல்ல அதனை அறிந்த பரமதத்தன் மனைவி, மகளுடன் விரைந்து வந்து அம்மையாரின் காலில் வீழ்ந்து வணங்கி, ''மானுடமிவர்தா மல்லர்; நற்பெருந் தெய்வமாதல் நானறிந்தே அகன்றேன்'' எனக் கூறவும் அன்றே அம்மையாரின் பவச்சார்பு நீங்கியது. ஈசன் அருளால் கணவர்க்காகத் தாங்கிய ஊன்பொதி தசையுடலை உதறி என்பு உடல் தாங்கிப் பேய் வடிவம் பெற்றார். கண்டார் அனைவரும் தொழு தஞ்சி அகன்று போக அன்றுமுதல் இறை வனையே என்புருகப்பாடி வணங்கித் துதிக்கும் ஓர் அரிய வரலாறு படைத்தார்.

கயிலைக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டி, காலால் நடக்க அஞ்சி, தலையால் நடந்து கயிலை மலை ஏறிச் செல்ல, இவ்வற்புதத்தைக் கண்டு உமை அதிசயிக்க, அனைத்துயிர்க்கும் தாயுமான இறைவன் தன் வாயால் ''அம்மையே'' என்று அழைக்கும் பேறு பெற்றார். இறைவனை நோக்கிப் ''பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி அறவா நீ ஆடும்போது அடியின் கீழ் இருக்க வேண்டும்'' என விண்ணப்பம் செய்து, அவராணைப்படி திருவாலங்காடு சென்று இறைவனின் ஆனந்தத் தாண்டவம் கண்டு அவரடியின் கீழ் என்றும் இருக்கும் அமரநிலை அடைந்தார்.

சைவசமயக் குரவர்களும், தாயுமானார், இராமலிங்க வள்ளலார் உள்ளிட்ட அனைவரும் இறைவனை வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கும் நெறியினை மேற்கொண்டமைக்கு இவரே வித்திட்டவர் ஆகின்றார். அற்புத திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் ஆகிய மூன்று நூல்களைக் காரைக்கால் அம்மையார் இறற்றியுள்ளார். இசைத் தமிழும், இயற்றமிழும் வல்ல பெருமை அம்மையாருக்கே உரியது. இவரது பாடல்கள் எளிய இனிய நடையும் ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்துக்களும் கொண்டவை.

அம்மையார் இறைவனிடத்துக் கொண்ட அன்பு அளவிடற்கரியது. 'பிறந்து மொழி பயின்ற பின்னரெல்லாம் காதற்சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் என்றும், 'அவர்க்கே எழுபிறப்பும் ஆளா வோம்' என்றும் அவர் கூறியுள்ளவை அவரது உண்மை நிலையை அறிவிக்கும் பாடல்கள் ஆகும்.

'இறைவனே எவ்வுயிரும் தோற்று விப்பான்' என்றும் 'அவனே இருசுடர்தீ ஆகாசமாவான்' என்றும் இறைவனது தத்துவத்தை அறிவிக்கின்றார். சிவபெரு மானுக்கு ஆளாகிப் பணி செய்திருப்பதும் அவரது அடியார்களுக்கு அடிமைத் தொண்டு செய்திருப்பதுவுமே தம் பிறவி பயன்; அவையே உயிர்கள் அனைத்திற் கும் உறுதிபயப்பது என்று அம்மையார் துணிவாக அறிந்து உலகிற்கும் உணர்த்து கின்றார். 'யானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்' என மணி வாசகப் பெருமான் கூறிமகிழ்ந்ததைப் போன்று 'யானே தவமுடையேன்; என் னெஞ்சே நன்னெஞ்சம்; யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்; யானேயக்கைமாவுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்று அம்மானுக் காளாயினேன்' எனப் பெருமிதத்தோடு கூறும் பாடல் அம்மையார் கண்ட சைவ நெறியின் முடிவாகும்.

இனி, திலகவதியாரின் மாண்பினையும் அவர் சைவ நெறியினை வளர்த்த பாங் கினையும் காண்போம். இராமகிருஷ்ண பரம அம்சர் மட்டும் தமக்குக் குருவாகக் கிடைத்திராவிட்டால், உலகம் எங்ஙனம்

விவேகானந்தரை அறிந்திருக்க முடியாதோ அங்ஙனமே திலகவதியார் தமக்கையாகக் கிடைத்திருக்கவில்லை எனில், நாவுக்கரசரை உலகம் அறிந்திருக்க வழியில்லாமல் போயிருக்கும்.

திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரின் கண் வேளாண் குலத்தில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகளாய்ப் பிறந்த திலகவதியாருக்கு உரிய பருவத்தே மணமுடிக்க எண்ணிப் படைத்தலைமை பூண்டொழுகும் கலிப்பகையார் என்ற ஆண்டகைக்கு மணம் பேசுகின்றனர். அந்நிலையில் போர் மேற்சென்ற வீரர் கலிப்பகையார் போரில் உயிர் கொடுத்துப் புகழ் கொள்ள, செய்திகேட்டுத் திலகவதியார் தாமும் உடனே உயிர்துறக்க எண்ணுகின்றார். பெற்றோரும் இறந்த நிலையில் தனித்து நின்ற தம்பி மருள் நீக்கியாரின் வேண்டுதலுக்கிணங்க மனம் மாறி 'தம்பியர் உளர் ஆகவேண்டும்' என வைத்த தயவினால் 'அம்பொன் மணிநூல் தாங்கும் பருவத்தே' அதனை நீத்து 'அனைத்துயிர்க்கும் அருள்தாங்கி' வாழத்தலைப்பட்டார். அனைத்தும் விழலுக்கிறைத்த நீர் ஆயின. உலக நிலையாமை கண்ட தம்பி மருள் நீக்கியார், கொல்லாமையே உயிர் நாடியாகக் கொண்ட சமண சமயத்தை விரும்பியவராய்ப் பாடலிபுத்திரம் சேர்ந்து அச்சமய அருங்கலை நூல்கள் எல்லாம் கற்றுத் தருமசேனர் என்ற பட்டத்துடன் வாழலாயினார். இதனை அறிந்த திலகவதியார் மனம் துடித்துச் சுற்றத் தொடர்பொழியத் தூயசிவ நன்னெறியே சேர்வதற்குக் திருவதிகை சென்று வீரட்டானேஸ்வரர் ஆலயமடத்தில் தங்கி இறைவனுக்குச் சரியைப்பணிகள் புரிந்து வருவராயினார்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல்
நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில்
புக்கும்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு
மிட்டும்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி"

எனத் திருநாவுக்கரசர் சரியை நிலையைப் பின்னர் எடுத்துக் காட்டியமைக்கு இலக்கணமாய் வாழ்ந்து வரும் நாளில், "பரசமயக் குழியில் வீழ்ந்து உழலும் தம்பியைத் தடுத்தாள வேண்டும் என இறைவனிடம் முறையிட, செவிசாய்த்த இறைவன் மருள்நீக்கியாருக்குத் தீராத சூலைநோயை அளிக்கின்றார். மந்திரமும் மருத்துவமும் குணப்படுத்தாத நிலையில், தமக்கையை நினைந்து திருவதிகை மடத்திற்கு ஓடிவந்து தமக்கையாரிடத்துச் சரண் அடைகின்றார். தம்பியை எதிர்கொண்ட தமக்கையார் அவரைத் திருவதிகைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லுமுன், பரசமயத் தொடர்பு தீரச் சிவதீட்சையருளும் வகையில் அஞ்செழுத்தோதித் திருநீற்றை இடுகின்றார். கோயிலுக்குச் சென்ற தம்பியார் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என நெஞ்சுருகப்பாடி இறைவனிடம் தன் சூலைக்கொடுமையை நீக்குமாறு வேண்ட, உடல்நலம் பெற்றதோடு, செந்தமிழின் சொல்வளம் பெருகப் பதிகத்தொடை பாடிய பான்மையினால் "நாவுக்கரசன்" என்ற நாமத்தை இறைவனால் அளிக்கப்பெறுகின்றார்.

இங்ஙனம் பரசமயக்குழியினின்றும் கரையேறி நாவுக்கரசனெனும் நன்னாமம் பெற்று உலகம் உய்ய உழவாரப் பணி செய்து தாசமார்க்கத்திற்கு ஒரு வழிகாட்டியாய் நின்றமைக்குத் திலகவதியாரின் சமயத்தொண்டு வாழ்வே காரணம் எனில் மிகையன்று.

வளவன் மகளாய்ப் பிறந்து பாண்டிய நெடுமாறனின்பட்டத்தரசியாய் விளங்கி ஆலவாயில் சைவம் அருகாமல் காப்பாற்றிய மங்கையர்க்கரசியாரின் தொண்டையடுத்துக் காண்போம். களப்பிரர்கள் ஆட்சியில் அரசர்

களின் ஆதரவைப் பெற்றுத் தமிழ் நாட்டில் பரவிய சமண சமயம் பாண்டி நாட்டில் நெடுமாறனின் ஆதரவைப் பெற்றுப் பெருகி வளரலாயிற்று. அப் பொழுது அப்பகுதியின்கண் அருகர் பள்ளியும், பாழியும் நிறைய எங்கும் சமணர்கள் பறிமயிர்த்தலையும் பாயும், பீலியும், தடுக்கும் கொண்டு திரிய லாயினர். இந்நிலையைக் கண்டு பாண்டியன் நெடுமாறனின் இன்னுயிர் மனைவியார் மங்கையர்க்கரசியாரும், மதியமைச்சர் குலச்சிறையாரும், மதுரையில் சைவம் தேய்ந்து நலிவுற்று அழிவதினின்றும் தடுத்துக்காக்கும் அரண் களாக நின்றனர். மங்கையர்கரசியார் தம் ஆருயிர்க் கணவன் மனம் மாறி சமணத்தினின்றும் சைவம் சேரவும், நாடெல்லாம் சைவம் தழைக்கவும், ஆலவாய் அமர்ந்தபிரானை வணங்கி நித்தமும் வேண்டிவரும் நாளில் புகலிக் காவலராம் ஞானசம்பந்தர் திருமறைக் காட்டில் தங்கியுள்ளார் என்ற செய்தி கேட்கின்றார். தம் பரிசனங்களைத் திருமறைக் காட்டிற்கு அனுப்பி, 'ஞான சம்பந்தர் பாண்டி நாட்டிற்கு வந்து, சமணர்களின் பிடியினின்று மன்னரையும் மக்களையும் காத்துச் சைவநீதி உல கெலாம் நிலவ அருள்புரிய வேண்டும்' என விண்ணப்பம் செய்கின்றார். சண்பையர் கோனும் அம்மொழியை ஏற்றுப் பாண்டி நாடு அடைந்து ஒரு மடத்தில் அடியார்களுடன் தங்க, சைவ அடியார்களைக் கண்டஞ்சிய சமணர்கள் அவர்கள் தங்கிய மடத்திற்குத் தீக்கொளுவுகின்றனர்; இப்பாதகச் செயலை அறிந்த ஞானபோனகர் "சைவர் வாழ் மடத்து அமணர்கள் இட்ட தழல் போய்ப்பையவே சென்று பாண்டியற்காகென" ஆலவாய் அண்ணலை நினைந்து பதிகம் பாட' பாண்டியன் நெடுமாறன் வெப்புநோயால் பெருந்துன்பம் அடைகின்றான். கண்டார் அனைவரும் விதிர்ப்படைகின்றனர். சமணர்கள் மந்திரங்களைச் செபித்தும், குண்டிகை நீர் தெளித்தும், பீலியால் தடவியும் நோய் மென்மேல் வளர நெடுமாறன் தாங்காது தளர்கின்றான். அந்நிலையில் மங்கையர்க்கரசியார், காழிப்பிள்ளையாரை ஈண்டு அழைப்பின் அவரருளாலே இது நீங்கும் என்று கூற ஆறுதல் அடைகின்றான் அரசன்" "பாறுற்ற பிணியைத் தீர்ப்பின் வென்ற வர்ப் பக்கம் சேர்வேன்" என உரைக்க மங்கையர்க்கரசியார் பெருமகிழ்ச்சி அடை கின்றார். அவர்தம் விண்ணப்பத்திற் கிரங்கிய ஞானசம்பந்தர் தென்னனைக் கண்டு "மந்திரமாவது நீறு" என்ற திருப் பதிகம்பாடி வெண்ணீறுகொண்டு தன் திருக்கையால் தடவ அக்கணமே வெப்பு நோய் நீங்கப் பொய்கை போல் குளிர்ச்சி பெற்றான் மன்னன்; வன்பிணி நீக்க வந்த ஞானசம்பந்தர் பாதம் நண்ணி நான் உய்ந்தேன் என்று அன்புமிகக் கூற மொழிந்து அன்று முதல் சிவநெறியே சேர்ந்து உயர்ந்தான்; மதுரையம்பதியில் சைவ நெறியே பரவி நிறைந்தது.

இங்ஙனம் தம் கணவனும் நாடும் உய்யத் தனியே நின்று சைவநெறியைக் காத்தமை மங்கையர்க்கரசியாரின் ஒப் பற்ற தனித் தொண்டாகும்.

மேற்கண்ட மகளிர் மூவரேயன்றிச் சைவம் தழைக்க உறுதுணையாக இருந்த எண்ணற்ற மகளிரைத் தெய்வத் தமிழ்ச் சேக்கிழார் நமக்குக் காட்டுகின்றார். ஒவ்வொரு ஆண்மகனின் சிறப்புக்கும் காரணமாக ஒரு பெண் இருக்கிறாள் என்ற உண்மைக்கு ஏற்ப ஒவ்வொரு நாயன்மாரின் தொண்டுக்கும், செம் மைக்கும், சிறப்புக்கும் அடித்தளமாக ஒரு பெண் வாழ்ந்திருப்பதை அறிகிறோம்.

செயற்கரிய செய்த பெரியார்களில் சிறுத்தொண்டருக்கு முதலிடம் அளிக் கின்றார் பட்டினத்தடிகள். பெற்றமகவை வாளால் அரிந்து கரிசமைத்து அடியார்க் குச் சிறுத்தொண்டர் படைத்தார்என்றால்

அச்சிறப்புக்கெல்லாம் காரணம் சிறுத்தொண்டரின் மனைவியாகிய திருவெண்காட்டு நங்கையேயாகும். தந்தை தன் குழந்தையை வாளால் அரிந்தமை பெரிய காரியம் அன்று; ஐயிரு திங்கள் சுமந்து அங்கமெல்லாம் நொந்து பெற்று சீராட்டி வளர்த்த ஒரே மகனைத் தாய் தன்மடியில் இட்டுக்கொன்றமை உலகில் வேறெங்கும் காணாத செயல் ஆகும். நேரில் காணாமலே திருநாவுக்கரசரிடத்து பெருங்காதல் பூண்டு விளங்கிய அப்பூதியடிகளின் மனைவியாரும் அங்ஙனமே செயற்கரிய செயல் புரிந்தவர் ஆவார். பாம்பு கடித்து மாண்ட தம் மூத்த மகனைப் பாயில் இட்டு முடிவைத்து அடியார்க்கு விருந்து படைத்த பாங்கை அப்பூதியாரின் மனைவியாரிடத்தே காண்கிறோம். இவர்கள் இருவரும் உலகில் சிறந்த தாயன்பையும் சமயத் தொண்டின் காரணமாகத் துறந்த மங்கை நல்லார் எனலாம். ஏயர்கோன் கலிக்காம நாயனாரின் மனைவியாரோ, இன்னுமொருபடி உயர்ந்து நிற்கிறார், சுந்தரமூர்த்திநாயனார் தம் இல்லத்திற்கு எழுந்தருளுகிறார் என்பதைஅறிந்தும், தம் ஆருயிர்க்கணவன் இறந்ததை மறைத்து அவரைப் பூரண கும்பம் வைத்து எதிர்கொண்டு அழைக்கிறார்.

திருநீலகண்டர் உலகிற்கு அறிமுகமானதற்கே அவர் தம் மனைவியாரின் செம்மையே காரணம் எனலாம். பரத்தையர் ஒழுக்கம் பூண்டொழுகிய கணவரைத் தம் கற்பின் திண்மையால் வென்று அவரையும் நன்னெறிப்படுத்திய கதை நாடறியும். இல்லையே என்னாத இயற்பகையாரின் தவமெல்லாம் — அவர் தம் மனைவியாரின் சொல்திறம்பாத சால்பேயாகும். இளையான்குடி மாறர் நள்ளிரவில் அடியுூர்க்கு விருந்து படைக்க ஆலோசனை கூறியதும், வறுமையிலும் தளராது விருந்து படைத்ததும் அவர்தம் மாண்புறு மனைவியார் அன்றோ?

ஞானசம்பந்தக் கன்றினைப் பயந்த பகவதி அம்மையாரும், திருநாவுக்கரசரின் அன்னையார் மாதினியாரும் சுந்தரரை ஈன்ற இசை ஞானியாரும், இன்னும் ஒவ்வொரு நாயன்மாரையும் தம் மணி வயிற்றில் தாங்கிய சைவ மங்கையர் அனைவரும் சைவம் வளர்த்த மகளிரே என்பதில் ஐயமில்லை.

பரவையார் மாளிகை

திருவாரூர் திருத்தலத்தில் தான் ஒரு நாயன்மார் வாழ்ந்த வீடு கோவிலாக மாறி இன்றளவும் வழிபாடு இயற்றப்பெறும் பெருமைப்பெற்று விளங்குகிறது. தெற்கு கோபுரத்தின் அருகில் திருமஞ்சன வீதியில் பரவையாருடன் சுந்தரர் சேர்ந்து வாழ்ந்த இல்லம் பரவையார் திருமாளிகை என்று இன்றளவும் அழைக்கப்படுகின்ற அருள்மிகு பரவைநாச்சியார் உடன் உறையும் அருள்மிகு சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கோவில், பெரிய கோயிலின் உபகோவிலாகஅமைந்து விளங்குகின்றது. மிகவும் இத்தலம் அடைந்து போயிருந்த இக்கோவில் முழுமையான திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. இவ்வாலயம் சுந்தரர் கைலாசத்திற்குச் சென்ற இருநூறு ஆண்டுகளுக்குப்பின், முதலாம் இராஜராஜ சோழனால் இத்திருமாளிகை வழிபடும் கோவிலாக மாற்றப்பட்டதற்கு கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.

சு. ஸ்ரீதரன்,
நிர்வாக அதிகாரி.

ஆலயமும் இசை வழிபாடும்

நா. விசுவநாதன்
தெலுங்குப் பண்டிட், சரசுவதி மகால் நூலகச் சங்கம், தஞ்சை.

ப்ராத; ஸ்மராமி கிரிஜானன பத்மஹம்ஸம்
பஞ்சாக்ஷரீ ஸரஸிஜாகர ராஜஹம்ஸம்
வீதாமயம் துஹினபானு சிரோவதம்ஸம்
வீதிவிடங்க முரகாங்கத பாஸ்வதம்ஸம்

சோழநாட்டில் மிகப்பழமையான ஆலயங்கள் நிறைந்துள்ளன. சைவம் வைணவம் இருவகை வழிபாடுகளும் சிறப்புற்று விளங்கி வருகின்றன. சோழ நாட்டின் பெருமைக்கு காரணமான காவிரியின் கரைப்பகுதிகளிலும் மற்ற நதிதீரங்களையொட்டியும் ஆலயங்கள் விளங்குவதை வேறெங்கும் காண முடியாத ஒரு சிறப்பம்சமாகக் கூறலாம். சோழ நாட்டின் முடிமன்னர்களாக விளங்கிய சோழர்கள் கட்டிய கோயில்களே பெரும்பாலன அப்பர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய சைவசமயாசாரியார்களும், பெரியாழ்வார், திருமங்கை மன்னன், ஆண்டாள் போன்ற வைணவ சமயாசாரியர்களும் கோயில்களை வழிபட்டு மூர்த்திகளைப் பாடிப் போற்றியுள்ளார்கள். மன்னர்களும் இவ்வழியினைப் பின்பற்றிப் பாடல்களைப்பாடி வழிபட்டிருக்கின்றார்கள். சைவ வழிபாட்டுக்குரிய இசைப்பாடல்கள் தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தங்களுமாகும்.

திருமுறைகளைத்தேடிப் பாதுகாத்த பெருமை இராஜராஜ சோழனையே சாரும். தேவாரத் திருமுறைகள் யாவும் இசைப்பாடல்களேயாகும். தஞ்சையை ஆண்ட கண்டராதித்த சோழன் திருவிசைப்பா பாடியவர். இசைப் பாடல்களால் ஆலயவழிபாட்டினையும் இறைவனைப் போற்றும் வழிமுறைகளையும் சிறப்புடன் நம்நாட்டு மக்களுக்கு நல்கியவர்கள் தஞ்சை மாமன்னர்கள் என்றால் மிகையாகாது. பக்திமார்க்கத்துக்காக இலக்கிய ரசனையுடன் உலா, தூது, கோவை, பரணி, பிள்ளைத்தமிழ் ஆகிய இலக்கியங்களில் இசையைப் புகுத்திப் படைக்கப் பெற்ற இசைப்பாக்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. மாணிக்கவாசகர் பாடல்களில் அம்மானை ஊசல், கும்மி, பள்ளி எழுச்சி, விண்ணப்பம், மடல், முதலிய உறுப்புகள் உள்ளன. அவற்றில் இலக்கிய நயமும் இசை நயமும் நிறைந்து காணப்படுகின்றன.

சிறப்பாக தஞ்சையிலே சோழர்கள் தாம் முதன்முதலாக இசைக்கலைக்கு புத்துயிர் அளித்தவர்கள். அவர்கள் வழியைப் பின்பற்றி தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள் ஆகிய இருவகையினரும் இசைக்கலையை வளமாக பாதுகாத்தனர் சோழர்கள் கட்டிய கோயில்கள் எவ்வளவு பெருமை கொண்டு விளங்குகின்றதோ அதன் அடிப்படையிலேயே இசைக்கலையும் தஞ்சை வளநாட்டில் சிறப்புற்று விளங்குகின்றது. சோழ மன்னர்களில் இராஜராஜனை அடுத்துப் பெரும் புகழ் கொண்ட மாமன்னன் குலோத்துங்க சோழன். இம்மன்னனும் இசைக்கலைக்காக பெரும்பணி

செய்தவன். இவனது மனைவியின் பெயர் 'ஏழிசைவல்லபி' என்பதிலிருந்து உண்மையை உணரலாம். வரலாற்றுக் கண்கொண்டு பார்த்தால் ஆலய வழிபாட்டு மரபுகளில் இசையையும் உட்படுத்தி இணைத்து வளர்த்த பெருமை சோழர்களுக்கே உரியதாகும். இக்கூற்றின் பொருட்டுத்தான் தஞ்சை வளநாட்டில், பல இசை மேதைகள் தோன்றி இருப்பதையும், அவர்கள் இயற்றிய இசைப் பாடல்கள் பக்தி மார்க்கத்தையும் கோயில் வழிபாட்டையும் அடிப்படையாகக் கொண்டவையே என்பதையும் நாம் அறிகிறோம்.

முத்துத்தாண்டவர், அருணாசலக் கவி, கோபாலகிருஷ்ண பாரதி ஊத்துக்காடு வெங்கட சுப்பய்யர் போன்றவர்களின் தமிழ்ப் பாடல்களும், தியாகபிரம்மம், முத்து சுவாமி தீட்சதர், சியாமா சாஸ்திரி முதலானவர்களின் தெலுங்கு, சம்ஸ்கிருத இசைப் பாடல்களும் தஞ்சை வளநாட்டிலேயே தோன்றிய கர்நாடக சங்கீதப் பாடல்களாகும் என்பதும் இங்கு நினைவு கூறவேண்டும்.

சோழ மன்னர்கள் நாய்க்க மன்னர்களுக்கு பின் தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னர்களில் மிகப் புகழ் பெற்றவரும், இசையால் பக்தி மார்க்கத்தை பரப்புவதற்குப் பெரும்பணி புரிந்தவருமாகிய சகஜி என்னும் சாஹேந்திர மன்னரைப்பற்றி இங்கே குறிப்பிடுதல் மிகவும் இன்றியமையாததாகும். இம்மன்னர் நூற்றுக்கணக்கான கர்நாடக சங்கீதப் பாடல்களை இயற்றியும் பல தெய்வங்களின் சந்நிதியில் நின்று இராகம் தாளங்கள் அமைத்து பாடி மகிழ்ந்தும், இசை உலகிற்கு ஒரு கதிரவன் போல் காட்சியளிக்கின்றார், முன்னோர்களின் வழியை பின்பற்றியும் வடமொழி, தெலுங்கு, மராட்டி முதலிய மொழிகளிலே ஆற்றல்மிக்க இசைப்பாக்களைப் படைத்து பாடி இருக்கிறார் மன்னர். ஆங்காங்கே புராண இதிகாசப் பெருமையுள்ள தலங்களுக்குச் சென்று மூர்த்திகளை தரிசித்து அவ்வப்போது பக்தி, சிருங்காரம் நீதி, வைராக்கியம் சமூகநலம் முதலிய கருத்துள்ள பாடல்களையும் பாடியுள்ளார். புராணங்களில் கூறப்படும் சரித்திரச் சிறப்புக்களையும் அவதாரச் சிறப்புக்களையும் சகஜி மன்னர் தம்பாடல்களில் விவரிப்பதுடன் தல விசேடங்களையும் மூர்த்தி விசேடங்களையும் விளக்கமாக தம் பாடல்களிலே கூறியுள்ளார். மூர்த்திகளுடைய குணசிறப்புகளையும் வழிபாட்டின் மூலம் இறையருள் பெறும் நெறிகளையும் தம் இசைப்பாக்களிலே விளக்கியுள்ளார். பக்தி மார்க்கத்துக்கு இன்றியமையாததான பகவன் நாமஸ்மரணையை எவ்வாறெல்லாம் அமைக்க வேண்டுமென்பதையும் இம்மன்னருடைய பாடல்களிலே தெளிவாகக் காணலாம். இம்மன்னருடைய தெலுங்குப் பாடலைக் கவனிப்போமாக.

இராகம் : மோகனம் அனுபல்லவி தாளம் :

பாமர புத்தி ஜூடரோயி, பரமஹம்ஸலாரா
ஸீம ஸீம திரிகே மனஸூ, சிவுனிபை நிலுபலேரோ

சரணம்

பாலுமாலி பலிமினி, ஆலுபிட்டலனெடி
காலி சங்கிள்ளு தமகாலினி, கட்டு கொனேரு (1)
விந்தகா நொகருகா வச்சி. வெனககொந்தரு கூடிதே
ஸந்தகூடமனி தெலியக, ஸொந்தஜனுலனி ப்ரமஸேரு (2)
முருகி கொம்பனு சால ஸ்திரமனி நெர நம்மேரு
பரப்ரஹ்மமைன த்யாகேசு பாதமுலனு நம்மலேரு (3)

சகஜி மன்னர் காலத்தில் பரமசிவேந்திர சரஸ்வதி, சதாசிவபிரம்மேந்திராள், திருவிசைநல்லூர் ஐயாவாள், (ஸ்ரீதர வெங்கடேந்திரர்) பாஸ்கரராயர், பூர்ணாநந்த சரஸ்வதி, கிருஷ்ணானந்த சரஸ்வதி போன்ற மகான்கள் மற்றும் பரமஹம்ஸர்கள் வாழ்ந்த காலமாதலால் சகஜி மன்னர் பரமஹம்ஸர்களுடனும், மகான்களுடனும் எப்பொழுதும் ஆச்ரயம் கொண்டு பல நல்ல காரியங்கள் செய்தவராவர். சகஜி மன்னர் தமது இறுதிக் கால கட்டத்தில் சன்யாசம் ஏற்று ஒரு மகான் போல வாழ்ந்து காட்டியவரும் ஆவர்.

இம்மன்னர், ஆலயங்களில் அவ்வப்போது நிகழும் முக்கிய உற்சவங்களில் பங்கேற்று கிருதிகள் இயற்றியுள்ளார். வசந்த தியாகேசன் வீதியில் உலாவரும் பொழுது சகஜி மன்னர் பாடிய பாடலைக் காண்போமாக.

இராகம்: வசந்தபைரவி. உலாப்பிரபந்தம். தாளம்: ஆதி

வீதிலோ வச்செனு, வசந்த தியாகுடு
வீதிலோ வச்செனு வேடுக, ஜூதாமு ராரே
மோதமு மீரனு முத்து, தேருபை நெக்கி (அனுபல்லவி)

சரணம்

ஸகல தேவதுலு - ஸன்னுதி ஸாயக
ஸகலங்க ஜனமுலகு, அபயமுலிச்சு (1)
அகலங்க நிஜரூபுடம்பா ஸ்தந்தஸஹிதுடு
மகராங்கபிருத சாஹமஹீராஜ குலதெய்வமு (2)

மகரவிருதுடைய சகஜிமன்னரின் குலதெய்வமான வசந்த தியாகேசன் பவனி வருகிறான். இந்த இரதோற்சவ வைபவத்தினைக் காண வாருங்கள் பெண்களே (பக்திமான்களே) எனத் தோழிகளைப் பார்த்து நாயகி கூறும் விதமாக அமைந்துள்ளது இப்பாடல். இதே கருத்தமைந்த் ஒரு கீர்த்தனத்தை சத்குரு தியாகய்யரும் பாடியிருக்கிறார். ,ஜூதாமுராரே ஸுததுலாரா ரங்கபதினி' என்னும் ஆரபி ராகத்தில் அமைந்த கீர்த்தனத்தை ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளிய இரங்கநாதன் பவனி வரும் காட்சியை உளமாரக் கண்டு உள்ளம் உருகிப் பாடியுள்ளார். தியாகபிரம்மம் வாழ்ந்த காலத்திற்கு சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் சகஜி மன்னர். ஆதலால் இம்மன்னருடைய பக்தி மார்க்கப் பாடல்களின் இசைமரபை பின்பற்றியும் அடியொற்றியும் பல கீர்த்தனங்களை மகான் திருவையாறு தியாகராஜ சுவாமிகளும் பாடி இருப்பதை ஒப்பிட்டு பார்க்கும் போது பல மகான்களுக்கு வழிகாட்டியாக சகஜி மன்னரின் பாடல்கள் விளங்குகின்றன என அறிய முடிகிறது.

சைவத் தலங்களான திருவாரூர், திருவிடைமருதூர், திருவையாறு, தஞ்சை, வைத்திநாதசுவாமிகோவில் முதலிய முக்கியத் தலங்களுள் கோயில் கொண்டுள்ள மூர்த்திகளுக்கெல்லாம் சகஜி மன்னர் கிருதிகள் இயற்றி இருக்கிறார். இம்மன்னரின் கிருதிகளை க்ஷேத்ரக்ருதிகளாகவும் கருத வேண்டும். சைவத் தலங்களில் நிகழும் வீதி தரிசனம், இரதோற்சவக் காட்சி, ஆதிரைநட்சத்திர விழா, சிவராத்திரி விழா, கார்த்திகை விழா, ஆடிப்பூர உற்சவம் முதலிய விழாக்களில் சகஜி மன்னர் ஆலயங்களுக்குச்

சென்று க்ஷேத்ரக் கிருதிகள் இயற்றியிருக்கிறார். அப்பாடல்களில் சகஜி மன்னரின் பக்திச் சிறப்பு மிக எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. சகஜி மன்னர் இசைக்கலைக்கு மட்டும் சேவை புரிந்ததோடல்லாமல் நாட்டியக் கலைக்கும் பல தொண்டுகள் புரிந்துள்ளார்.

சகஜி மன்னர் காலத்தில் தமிழ் நாட்டிய நாடகமாக வெளிவந்த தியாகேச குறவஞ்சி பிரபந்தம் மிகச் சிறப்புவாய்ந்த படைப்பாகும். காவேரி கல்யாணம் எனும் தமிழ் நாட்டிய நாடகம் திருவையாறு உற்சவ காலத்தில் சகஜி மன்னர் முன்பாக நடிக்கப்பட்ட நாட்டிய நாடகமாகும். வடமொழியில் சகஜி மன்னர் இயற்றிய நாட்டிய நாடகம் சந்திரசேகர விலாசமாகும். தெலுங்கு மொழியில் மன்னர் இயற்றிய நாடகங்கள் பின்வருமாறு: கங்கா பார்வதீ சம்வாதம், பல்லகிஸேவா பிரபந்தம், கிராத விலாசம், பார்வதி கல்யாணம், இரதீ கல்யாணம், சசீ புரந்தர நாடகம் (இந்திரன் பொருட்டு இயற்றிய நாடகம்) முதலிய தெலுங்கு மொழி நாட்டிய நாடகங்களை சகஜி மன்னர் இயற்றியுள்ளார். இந்தி மொழி நாடகமான விசுவாதீத விலாசம் எனும் சிவபெருமானின் மகிமையை கூறும் நாட்டிய நாட கம் இயற்றிருப்பது நம் பாரத தேச ஒருமைப்பாட்டினை காட்டுவதாகும். தஞ்சையில் முதன் முதலாக மராட்டி மொழியிலும் சகஜி மன்னர் நாட்டிய நாடகங்கள் இயற்றியிருக்கிறார். கங்கா காவேரி சம்வாதம், தியாகராஜ விலாசம், தியாகராஜவிநோத சித்ரபிரபந்தம்,மார்கண்டேய சரித்திரம், ஹரிஹர விலாசம் எனும் இவை சிவபக்தியை உணர்த்தும் நாட்டிய நாடகங்களாகும். இவ்வாறு சகஜிமன்னர் நாட்டியக் கலைக்கும் இசைக் கலைக்கும் தென்னக கலாச்சார மரபுக்கும் தொண்டு செய்துள்ளதை என்றென்றும் நினைவு கூர்தல் வேண்டும்.

சகஜி ராஜன் தம் காலத்தில் அவ்வப்போது நிகழ்ந்த ஆலய விழா காலங்களில் பக்தி நாடகங்களை நடத்திக் காட்டச் செய்தும், தாம் இயற்றிய இசைப் பாடல்களை நாட்டியாபிநயம் செய்து காட்டச் செய்தும் ஒருங்கே ஆலய வழிபாட்டையும் இசைக் கலை வளர்ச்சியையும் பேணிக் காத்தப் பெருமன்னர் என்பதையும் நன்கு அறியலாம். மன்னர் இயற்றிய பக்திச் சுவையான தெலுங்கு பாடல் ஒன்றைக் காண்க.

இராகம்: கண்டா தாளம்: ஆதி

பல்லவி

அதடே நா தேவுடு - அன்ய தெய்வமு
கலனைனா எருகனு

சரணம்

அங்கஜ தர்ப பங்குடு - அதுல தவளாங்குடு
கங்கோத்த மாங்குடு - கரத்ருத குரங்குடு 1

பொங்காரு தீ நிஷங்குடு - பூமி சதாங்குடு
துங்க திரிபுர பங்குடு - தூர்ஜடி வேத துரங்குடு 2

கௌரீ அர்தாங்குடு - கருணாஜல தரங்குடு
பூரி அந்தகாந்தகுடு-பூஷிதநாக விஹங்குடு 3

வாரண சர்மாம்பருடு - வககா கால கந்தருடு
வருஸ அந்தக ஸம்ஹாருடு - வாரிஜாக்ஷ பூஜிதுடு 4

கமலாஸன ஸன்னுதுடு - கமலாரிமித்ர நேத்ருடு
அமருரந்த்ர வரதுடு - ஆதிதேவ சாஹநுதுடு 5
அமல சித்தாப்ஜ ப்ருங்குடு - அகில பிரமாண்ட நாயகுடு
கமலாபுர நிவாஸுடு - கனகவசந்த தியாகேசுடு 6

திருவாரூர் தியாகராஜ பெருமானை சகஜி மன்னர் தம் பாடல்களில், கனகவசந்தா, வீதிவிடங்கா, தியாகேசா, தியாகாதிராஜா, சோமாஸ்கந்தா, போகமூர்த்தியே, யோக மூர்த்தியே, தியாகவிநோதனே என்றெல்லாம் பெயர்ச்சூட்டி அழைத்தவிதம் போற்று தற்குரியதாகும். தியாகேசனை தவிர்த்து அன்னிய தெய்வங்களுக்கு பாட்டு இயற்றும் போது தியாக ராமலிங்கா, தியாகவன்மீகேசா, தியாக அசலேசா, தியாக ஜம்புலிங்கா, தியாக மாத்ருபூதேசா, தியாகமார்க்க சகாயா, தியாக காளஹஸ்தீசா, தியாகநடேசா, தியாகமல்லிகார்ஜுனலிங்கா, தியாக ஏகாம்பர நாதா, தியாகேசுராணி, தியாகேசுமித்ரா, தியாகேசசோதரீ, தியாகமுத்துகுமாரா தியாகேசஸுத என்றெல்லாம் முத்திரை அமைத்த விதமும் சகஜி மன்னரின் பாடல்களில் காணும் பொழுது தியாகேசப் பெருமானின் மீது அவர் ஏக தெய்வ உபாசனா மூர்த்தியின் பக்தி எடுத்துக் காட்டுகிறது. ஏழிசையாய் இசைப்பயனாய் என்று தேவாரத்தில் குறிப்பது போல, இறைவனை இசையால் தொழுது அப்பெருமானுக்கு தம் பாடல்களை பாமாலைகளாக சூட்டிய பெருமை சகஜி மன்னருக்கு உண்டு எனக்கூறி தியாகேசப் பெருமானுக்கு இக்கட்டுரையை அர்ப்பணம் செய்கிறேன்.

வரலாற்று நாயகர்களின் சிலைகள்

இந்தத் திருக்கோவிலில் பல தமிழக வரலாற்று நாயகர்களின் சிலைகள் காணப்படுகின்றன. இரண்டாம் பிரகாரம் மேற்குப்புறம் ஆனந்தீஸ்வரத்தில், முதலாம் ராஜேந்திரன் தன்னுடைய அணுக்கியர் (காதற்கிழத்தி) பரவை நங்கையாருடன் உள்ள சிலை காணப்படுகிறது. இத்திருக்கோவிலின் குட முழுக்கினை தான் நடத்தியபோது இதனை ஸ்தாபித்திருக்கலாம் எனத் தெரிகிறது. வடக்கு கோபுரத்தில் மதுரை நாயக்கமன்னர்களில் ஒருவரான செவ்வப்ப நாயக்கர் சிலையும் அவருக்கு பக்கத்திலேயே, அவர் காலத்தில் இத்திருக் கோவிலை நிர்வகித்த கமலை ஞானப் பிரகாசர் சிலையும் காணப்படுகின்றன. கீழ கோபுரத்தில் மாமன்னர் மூன்றாம் குலோத்துங்கன் சிலையும் அவன் குரு நாதர் ஈசான சிவன் சிலையும் காணப்படுகின்றன. பள்ளியறை மஞ்சத்தில் தருமையாதீனம் 10வது குருமகா சந்நிதானம் உருவம் வெள்ளியில் பொறிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு பல வரலாற்று நாயகர்களின் நிலையும் இத் திருக் கோவிலுக்குள் அமைந்து சிறப்பு செய்கின்றன.

சு. ஸ்ரீதரன்,
நிர்வாக அதிகாரி.

பூலோக கைலாசமும் பூலோக வைகுண்டமும்

சுவாமி சுத்தராமானந்த சரஸ்வதி ரத்னம்

நமது இந்து மதம் மிகப் பழமையானது பரப்பிரம்மத்தை எப்படி நாம் நிர்ணயம் செய்ய இயலவில்லையோ, அது போன்று நமது மதமும் நிர்ணயத்திற்கு அப்பாற் பட்டது; பிரபஞ்சத்தைப் போன்று அதுவும் அதன் தத்துவங்களும் அகன்று விரிந்து கிடக்கின்றது.

ஆயினும், நமது மதம் சுட்டிக்காட்டு கின்ற அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த சிவம், மனிதபக்குவத்திற்கேற்ப ஆறாக வடிவமைக்கப்பட்டன. அதுவே, காணா பத்யம், ஆதித்யம், சாக்தம், சைவம், வைஷ்ணவம், கௌமாரம் எனப்பட்டன. அதனையும் குறுக்கி மக்கள் உய்வுபெறும் வண்ணம், மற்ற நான்கையும் உள்ள டக்கி, சைவமும், வைஷ்ணவமும் இந்து மத ஆல விருக்ஷத்தின் விதையாகவும் அதனூடே பரவும் கிளை, பழம், காய், விழுது, ஆயின.

தாயும் தந்தையும் போன்றவை வைஷ்ணவமும் சைவமும். உடலின்கண் அமைந்தது போன்று நமது மதமாகிய ஊனுடம்பு ஆலயத்தின் இருகண்கள் இவை இரண்டும். ஆயினும் இவ்விரண்டும் ஒன்றே. நமது வேதமும் இறைவனும் ஒன்றேயாகும். ஆகவே அநாதிப்பரம் பொருளாகிய இறையைப்பற்றிய வியாக் கியானமே, அத்வைத, த்வைத, விசிஷ்டாத்வைத சித்தாந்தங்கள்.

''ஏகம் தைவ வா, பிரஜா: பஹுதா வதந்தி' என்கிறது உபநிஷதம். ஒன்றே தெய்வம். அதை பலபடி யாகப்பேசுகிறார் கள் என்பதே உண்மை.

ஆகவே நமது இந்துமதம் உலகம் தோன்றிய நாள் முதல் எவ்விடத்தும் பரவி இருந்தது. தர்ம பூமியென பேசப் படும் நமது பாரதமும், அதனூடே வானளாவி நிற்கும் இமயமும், கங்கை யும், நைமிசாரண்யமும் விரிவாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இந்த தியாக பூமி யிலே உள்ள மண் அனைத்தும் ஒருங்கே சிவலிங்கமாகவும், அதனூடே பரவும் சக்தியாகவும் உள்ளது. சக்தியே ஆலிலை துயின்ற மஹா விஷ்ணுவாம்.

பாரத பூமியில் ஒவ்வொரு நதியும்' மலையும், காடும், ஊரும் மிகப்புனிதமாக உள்ளது. அறுமுகச்சிவனின் பதினெட்டு கண்கள் போன்று, வியாசமுனிவரால் 18 புராணங்கள் இயற்றப் பெற்றன. இப் புராணங்களும், இதிகாசங்களாகின்ற ராமாயணமும், பாரதமும் வேதத்தின் அடக்கமேயாகும். இவைகள் சுட்டிக் காட்டுகின்ற பரம் பொருள் எதுவென வினவி ஆன்மாக்கள் பிறவிக்கடல் கடந்து பரமபதமாகின்ற வைகுண்டத்தை யும், கைலாயத்தையும் அடைய நமஸ் காரம், அர்ச்சனம், தாஸ்யம் ஆகிய ஒன்பது வழிகளைப் பின்பற்றுகின்றன.

பசிக்கு அன்னம் மட்டும் போதாது. அதற்கு உபகரணங்களாகிய வியஞ்சன மும், மோரும் குழம்பும் வேண்டுவன போன்று நாம் யாவற்றையும் உபாசித் தல் வேண்டும். கைலாசமும் வைகுண்ட மும் ஒன்றே. கண்ணன், பார்த்தனுக்கு உபதேசித்தான் பகவத்கீதை. அகஸ்தியர் ராமனுக்கு உபதேசித்தார் சிவகீதை.

சிவபிரான் சதா ராம நாமத்தை உச்சரித்து காசியில் உயிர்களை மோக்ஷத்தில் சேர்ப்பிப்பதாகவும், நாராயணன் சதா லிங்க பூஜை செய்வதாகவும் அறியக் கிடக்கின்றன.

திருவரங்கத்தை பரம வைஷ்ணவர்கள் பூலோக வைகுண்டமாகவும், சைவர்களுள் வீர சைவர்கள் முக்கியமாக ஆயிரத்தெட்டு சிவ தலங்களில், சிதம்பரத்தையே பூலோக கைலாஸமாகவும் வந்தித்து வழிபாடு செய்கின்றனர். நாயன்மார்களும், ஆழ்வார்களும் அவ்விதம்தான்.

அரங்கத்தில் பள்ளிகொண்ட ரங்கராஜன் தன் இருதயத்தில் வைத்து பூசிக்கப்படுகின்ற பொருள் தியாகராஜலிங்கம் ஆகும். அவ்விதமே போன்று, சித்ர கூடமெனப்படுகின்ற தில்லை அம்பலத்திலே நடராஜ சிவம் தென்பால் இருக்கின்ற கோவிந்தராஜனைத்தம் இருதய பீடத்திலே அமர்த்தியுள்ளார். அதற்கேற்ப கோவிந்தராஜன் சந்நிதி சிதம்பரத்திலே இருதய ஸ்தானத்தில் உள்ளது. ஆகவே சித்+அம்பரம் எனப்படும் சிதம்பரமும், திரு அரங்கம் எனப்படும் திருவரங்கமும் ஒன்றென அறிகிறோம். மற்றும் அதிமூலமே எனக்கதறிய யானை அரசனை (கஜேந்திரன்) முதலையிடமிருந்து காப்பாற்றியபொழுது ஏன் பரமசிவன் வரவில்லை என்ற வினாவுக்கு, அப்பரமசிவம் தான் நாராயணின் இருதயத்திலே அமர்ந்து அக் காரியத்தை செய்தான் என்பது விடையாகின்றது. இந்த சச்சிதானந்தம், திருச்செங்கோட்டிலே அர்த்த நாரீஸ்வரனாகவும், திருநெல்வேலிச் சீமையிலுள்ள சங்கர நாராயணர் கோவிலிலே சங்கர நாராயணனாகவும், இந்த பரிபூரணமே, அறுமுகச் சிவமாகவும் எங்கும் உள்ளது வெள்ளிடைமலை.

மேற்கண்ட எல்லாவிதப் பாங்கும், பான்மையும் ஒருங்கே கொண்டது மூலாதார க்ஷேத்திரமாகிய திருவாரூர். எல்லா வித சிவகலைகள் இங்கே மாலைப் பிரதோஷ சமயம் கூடுவதும், அதற்கு நாராயணனாம், முகுந்தன் வந்து நிற்பதும் இதுவே பூலோக கைலாஸமும், பூலோக வைகுண்டமும் ஆகும் என உணரப்படுகிறது.

பஞ்ச பூதங்களிலே பிருதிவி தலமாகிய இம்மூலாதார க்ஷேத்திரத்தின்பால்ஐந்நூறு விநாயகர் கோயில்கள் இருந்ததாலும் கந்தபுரம் என்பதால் முருகவேள் இங்கே உறைந்திருப்பதாலும், எல்லா தீர்த்தங்களும் கமலாலயத்தின்பால் உள்ளதாலும் செங்கழுநீர் பூக்கள் வளத்தை சுட்டிக் காட்டுவதாலும், இங்கே கபிலநதி காவிரியிலிருந்து பிரிந்து பாய்வதாலும் வன்மீக லிங்க உருவம் கைலாஸ மலையாய் இருத்தலாலும் ஆடல்கிண்கிணி தியாக விநோதர் நடராஜ சிவமாக பாற்கடலில் பள்ளி கொண்ட பரமனாம் அரங்கனின் இருதய கமலத்தில் எழுந்தருளுவதால் ஸ்ரீரங்கராஜனும் திரு தியாகராஜனும் ஒன்றென அறிந்து, இம்மூலாதாரா க்ஷேத்திரமே பூலோக கைலாஸமும் வைகுண்டமும் ஆகும் என வேண்டக் கிடக்கின்றது ஆகவே இது மூர்த்தி, தலம், தீர்த்தம், நதி காடு, மலை ஆகிய அனைத்தும் பொருந்திய வண்ணம் சிந்திக்கவொண்ணாச் சிறப்பு மிக்கது.

எனது இனிய நண்பர் கல்யாண சுந்தர தேசிகர் கேட்டுக் கொண்டதற்கிணங்க இத்திருவம்பதியிலே பாடப்பெற்ற திருப்புகழ் மாலைகளையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

பக்தகோடிகள் அனைவரும் வந்து தங்கி பூசனை செய்து இகபரசுகம் அனைத்தையும் பெறுமாறும் கைவல்யம் பெற்று உய்யுமாறும் வேண்டுகிறேன். இறைவன் மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே.

The Temple At TIRUVARUR

By N.Ramakrishna

The temple at Tiruvarur in Tanjavur District of Tamil Nadu is one of the biggest in the country and is of ancient origin. The lofty towers of the temple greet one even from a distance of ten or fifteen kilometers. The place can be reached easily from all directions in the district by road and it is also on the Railway line between Tanjavur and Nagaipattinam and also (Mayuram)- Mayiladuturai and Karaikudy.

Tiruvarur has been a centre of Saivite culture for over a thousand years. The temple has four towers each for one direction and the western one has some fine specimens of brick and mortar figures. The eastern tower has fine images cut in stone. The temple which is 846 feet long and 666 feet broad is an ancient one and has been patronised by the Chola kings in the early days. The tank which goes by the name Kamalalayam is probably the biggest one in South India with the unique feature of an island in the middle with a temple on it which goes by the name Naduvana Nathar Koil. The temple is said to have been built between the 7th and 10th century A.D.

There are a number of small temples in the compound,the chief among them being the temples of Kamalambal, Neelothpalambal and Achaleswarar. The Achaleswarar temple has some figures on its walls. There is another temple dedicated to Siddeswaram Dakshinamurthy belonging to Dharmapuram Adhinam, where the founder of the Mutt Gurugnana Sambandar had his preachings from his Guru Kamalai Gnanaprakasar.

There is an excellent and unique Musical Instrument called Pancha Mukha Vadyam with five faces. Each face is ornamented, one with a snake, another with lotus and one is plain without decorations. One has a Swastika sign. Over each face leather is spread and over the central one deer skin is spread. It is said that Nandi Deva played on this instrument when Siva danced.(Tiruvaruris one among the SAPTHAVIDANGA KSHETRAS.) The circumference of the musical instrument is 4 feet 8 inches.

Inside the temple there is the figure of Sri Tyagaraja Swamy with lovely decorations and ornaments. Tiruvarur temple is noted for the MARAGATHA LINGAM - Emerald one. Ever day Abhishegam and Aradhana are performed to it. It goes by the name VEEDI VIDANGAR. Tiruvarur is famous for the Car Festival - THER TIRUVIZHA. The best

painting found in the temple is that of Maha Vishnu in sleeping posture with Sri Tyagaraja over His chest. In recent years renovations had been carried out and the last Kumbhabishegam ws performed in 1942 if I remember correct. The members of the Nagarathar community have helped in the renovations. There are 65 inscriptions relating to this temple in various places and most of them are in Tamil. Tiruvarur is also included as one of the PANCHA BOOTHA STHALAS.

Unlike other temples, the Navagrahams, are in a row. They do not look in different directions. There is a huge iron urn in front of these and during festivals it will be filled with oil by devotees and burnt and lighted.

It was by a rare coincidence that the great composers of Carnatcic music Sri Tyagaraja Swamigal,Sri Muthuswamy Dikshitar and Sri Shyama Sastrigal were born at Tiruvarur during the same period. The lovers of music have built memorials for them.

The life of Saint Sundaramurthy Swamigal is associated with Tiruvarur where he is said to have lived with Parvai Nachiar and sung many songs in praise of the Lord. We shall go deep into the architecture, sculpture, historical records and inscription, later in this article. There are many proverbs connected with this place such as "Tiruvarur THER azhaghu" - Tiruvarur Car is beautiful, " Tiruvarur pirantharkku Mutkthi nichayam" - people born at Tiruvarur are assured of salvation.

Architecture and sculpture in the temple

Tiruvarur temple is noted for the early Chola architecture. The details are characteristic of Chola art. The early Chola monuments have great charm and harmonious combinations. Their components and bas-reliefs are wonderful. The most noted one in this temple is the one dedicated to ACHALESWARAR. It is a small temple in the huge Tiruvarur temple complex. It consists of a square sanctum with a Mahamandapam. The Vimana is unique with two storeys with a globular sikara. It has many pavilions which are the features of the Chola art. There are many niches. In them there are fine carvings of Ardhanari, Durgai, and Bikshadanar which the niches in the southern side carry two Natarajas, Ganga and Agasthia. These images are small and slender. The Chola sculptors have shown their art in these pieces and especially in the jewellery and drapery. The sculptures of Brahma, Lingothbava and Dakshinamurthy are finely styled.

The notable structure in the Tiruvarur temple complex, apart from the Achaleswarar shrine is the large and huge temple tower-Gopuram said to have been built by the Vijayanagar kings. It is said in earlier temples built by the Cholas the towers were small, but for the first time the towers of Tiruvarur temple assumed huge size and propor-

ions. The basement of the tower is a /ealth of architecture. The sculptures elate to lions with warriors seated on heir backs. Female figures are seen lancing in various KARANAS. There re some humourous figures also. Of he storeys that rise over the gateway, he first two are of equal size and the rest re in diminishing order. That is why he tower presents a stunted ap- earance, instead of being tall, gigantic, nd majestic. Anyway its breadth at- racts very much the visitor. For a stu- lent of history and archaeology this emple has many specimens of early Chola art worth studying.

The temple of Sri Thiagarajas- /amy at Tiruvarur is situated in the entre of the growing town. The area of he temple is said to be Five Velis' - bout 30 acres. Correspondingly the rea of the Brahma Theertham popular- y known as KAMALALAYAM has lso an area of Five Velis No other emple in India has such a feature. In he middle of the tank is a temple dedi- ated to Lord Siva who goes by the name Jaduvana - Nathar. It is said that one aint Dhandi who was born blind got his ye- sight by immersing himself in this ank. On the eastern side of the temple s the SENKAZHUNEER OODAI - a ivulet and the Flowers grown here are nown as Senkazhuneer POO, said to e sacred to Lord Thiagaraja.

Getting into the temple, on the in- de next to the eastern entrance is the DEVASIRIYA MANDAPAM - robably a 1000 pillared hall which was not completed. One sees only the lofty pillars now. Saint Sundaramurthy Swamiga, one among the four Saiva Samayachariars lived here with Paravai Nachiar after marrying her. He is said to have sat in this Mandapam and sang the THIRU THODA THOGAI in praise of the Adiyars - devotees of Lord Siva. There is a separate temple for Sundarar and Paravai Naachiar in the South sannidhi street. In the 10th century one NAMBI ANDAR NAMBI, keeping Thiruthonda Thogai as the base sang the TIRU THONDAR THIRUVANTHATHI. In the 12th century SEIKKIZAR, the great minister and adviser to the Chola King, took both these compositions as the base and composed the PERIA PURANAM, without which we would not have got the life history of the 63 Nayanmars. So Tiruvarur has the unique reputation of having provided the basic materials for composing the Peria Puranam.

After crossing the Ariyam Gopuram in the second circle we see the RAJA NARAYANA MANDAPAM. In this mandapam there is a temple facing west on the southern side. It is known as ARANNERI in Tamil saint Tirunavukkarasar has sung in praise of this Lord. In this temple on NAMI NANDI ADIGAL burnt a lamp with the help of water and not oil! One SERUN- THUNAI NAYANAR, here, cut away the nose of the Queen boldly, because she smelt the flower intended for the Lord.

Next we see the Adi Murthy of this temple known as VANMIKANATHAR in the form of an Ant Hill. Tiruvarur is one among the Pancha Bootha Sthalas and is known as PRITHIVI STHALAM and this Ant Hill vouchsafes to this. This temple goes by the name POONKOIL.

South of Vanmikanathar is the temple of SRI THIAGARAJA SWAMY. He is a Somaskanda Murthy with Uma Devi to his left and Sri Skandar in the middle. This is the Ardha Mandapam. It is said that Sri Thiagaraja Swamy is seated on the heart of Maha Vishnu. Vishnu here is seen in the Sayana posture. It is explained in scriptures that the sanctum is the head of Vishnu, Ardha Mandapam represents the chest, Mahamandapam represents the stomach, legs and other limbs. Near Thiagarajaswamy is the MARAGATHA LINGAM enclosed in a Silver container. He is known as Maragatha Vidangar.

According to the Sthalapurana, the Thiagaraja worshipped by Maha Vishnu was taken away by Indra. During the period of one Muchukunda Chakravarthy, a war arose between Indra and the Asuras. Muchukunda Chakravarthy helped Indra to defeat the Asuras, and as a present got from Indra, Thigarajaswamy, and consecrated Him at Tiruvarur. Along with this he brought 6 murthys and installed them at Nagaipattinam, Tirunallaru, Vedaranyam, Tirukkarayal, Tiruvaimoor and Tirukkovalai. Indra did not want to give the Moola Murthy to Indra first, and so prepare duplicate ones. But Muchukund found out the truth, and Indra finall parted with the Moola Murthy as well a the duplicates.

On the western side of S Thiagaraja, is the temple for Vathap Vinayakar. Sri Muthuswamy Dikshida one among the three great composer has sung in praise of this deity, th famous keerthana " Vathap Ganapathim Bajeham"

The Navagrahas are found in a ro here, as mentioned earlier and for thos who worship them, there will not be an trouble from the grahas astrologically.

Next to the Kodi Maram - Fla Staff - there is the temple of Goddes Alliankothai. Near her stands her mai carrying Kandan.

In the second Prakaram, we see number of Siva Lingas. Famous amon them are Achaleswarar, Aadakeswarar Annamalieswarar, Anandaeswarar an Siddeswarar representing the Pancha Boothas.

The Sacred Tree - Sthala Vrikshan is PADIRI - Mango Tree

To the south of Siddeswaram is the temple of Dakshinamurthy. One Kamalai Gnanaprakasar initiated the founder of Dharmapuram Adhinam Sr Guru Gnana Sambandar, who later came to Dharmapuram and established Dharmapuram Adhinam. This temple

s managed by His Holiness of Dharnapuram Adhinam, and there is a Kattalai at Tiruvarur known as RAJANGA KATTALAI, donated by one of the Kings of Vijayanagar dynasty.

In the temple of Kamalambal the Goddess is seen in a state of meditation. Adi Poora Vizha is celebrated in her honour. The evening Pujas and rituals to Sri Thiagaraja are important. In the month of Panguni a festival will be celebrated for a month. There will be a Floating Festival also. The Tiruvarur THER - Car is very big and beautiful and the Car festival attracts a large crowd. Mechanical contrivances are provided to draw this huge car, now. MANU NEEDHI CHOLAN- Tiruvarur is famous for the story of Manuneedi Cholan, who in order to establish justice, ran his chariot over his son, who earlier had killed a calf under the wheels of his Chariot while going to the temple. The Cow came to the palace and rang the Arayichi Mani - Bell and demanded justice. The king administered justice, and God granted him Dharshan and brought back to life the prince as well as the calf.

There are stone monuments to vouchsafe this incident. The huge stone car is attractive with intricate worskmanship on the wheels, the cow, and the calf are also seen.

There are some fine musical instruments here apart from the Panchamukha Vadyam like the Pari Nayanam etc.

The painting of Lord Thigaraja is excellent. The Sayana posture of Maha Vishnu is fine. It was said to have been pained in 1943 or so. It will require many pages to write in detail about Tiruvarur and so in this article only some of the important features are included.

There is a Sthalapuranam sung by one Sambanda Munivar. The Musical Trio have sung in praise of Thiagaraja. Thiagaraja Chettiar has sung in praise of the Lord. Kumaraguruparar has composed many hymns.

The Natanam - Dance performed by Sri Thiagaraja here is known as AJABHA NATANAM. It resembles the heaveness of the heart, going up and down as He is said to sit over the heart of Vishnu. During the festival time, this Dance is demonstrated.

Books have been published relating to the history and Sthalapuranam of this temple like "Kamalalaya Shektra Thathuvam, Sri Thiagaraja Leelaigal sponsored by Bikshandarkoil Panniar G.Rajagopal Pillai Avl and others. The Devasthanam has published a Sthala Varalaru.

In writing this article I had to refer to many books and pamphlets and I thank their authors for the information provided.

We see some excellent sculptures of Durvasa Muniva, ViranMinda Nayanar, SiddeswaraDakshinamurthy,

Mattru Uraiyatha Vinayakar Thoovaayar temple sung by Sundarar and many more.

Inscriptions: There are more than 65 inscriptions in this temple from the days of Raja Raja Chola 1, relating to various episodes with which this temple has been associated. They have been copied by the Epigraphical Department and printed in the Sthalapuranam of the temple.

There are about 13 Kattalais to carry out the different rituals every day.

Very recently The Archaelog- Department of Tamil Nadu has disc overed Sanscrit Compositions on the northern wall of the Valmikanatha Swamy shrine in the Tiruvarur Thiagaraja Swamy temple according to Dr. R. Nagaswamy, Director of Archaeology. Dr. Nagaswamy said the compositions belonging to the 14th century were discovered when the temple was being cleaned. The first two compositions were in the Nagabhanda style written in the shape of serpents. The third composition was in the Chakra style written in the shape of a wheel. The last two compositions were in the rare Maalai Matru style, which could be read from right to left, or from left to right and the meaning would be the same - (The Hindu dated 16/3/88)

திருத்தொண்டர்தொகை அருளிய திருவாளர்

அ. தனபாலன், பி. ஏ., செயல் அலுவலர், மன்னார்குடி.

''தேன்படிக்கும் அமுதாம் உன்
திருப்பாட்டைத் தினந்தோறும்
நான் படிக்கும் போதென்னை
நானறியேன் நாநன்றோ
ஊன் படிக்கும் உளம்படிக்கும்
உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான் படிக்கும் அநுபலங்காண்
தனிக்கருணைப் பெருந்தகையே!

என ஆளுடைய நம்பிகள் சீர்புகழ் குறித்து திருவருட் பிரகாச வள்ளலார் பாடித் துதிப்பார். ஆளுடைய நம்பிகள் என வழங்கும் சுந்தரர்தம் பெருமை ஈடு இணையற்றது என்றும் ஏற்றி போற்றி யுள்ளார். அத்தகைய மெத்தபுகழ் கொண்ட சுந்தரர் ஆரூரன் சந்நிதியில் அனுதினமும் பாடி மகிழ்வது வழக்கம் அப்படிப் பாடி பரவும்போது பரவையின் பளிச்சிடும் தோற்றம் ஒளி வெள்ளமாக உள்ளத்தை கவர்ந்தது. தனது உளப் பாங்கை ஆரூர் தியாகேசனிடம் தெரிவித் தார். தொண்டர்தம் குறிப்பை உணர்ந்த தலைவர் வேண்டிய வண்ணம் மனம்புரிய அருள்பாலித்தார். கைலையில் தோன்றிய காதல் திருவாரூரில் மலர்ந்தது. மணங் கமழ்ந்தது. விண்ணகத்தில் முளைத்த காதல் மண்ணகத்தில் பயன்தர முற் பட்டது. பார்வைக்குரிய பாவையை பரிசாக பரவையாக சுந்தரர்க்கு கிடைக்க செய்தார். இனிக்கும் இல்லறம் தொடர் வழி அமைத்தார். திருவாரூர்க்கு பல பெருமைகள் உண்டு. அதில் ஒன்று சுந்தரரை மாப்பிள்ளையாகப் பெற்ற தாகும். சிவபெருமானுக்குப் பல பெருமைகள் உண்டு. அதில் ஒன்று சுந்தரர்க்காக தூது சென்றது. அடிய வனின் ஊடலை நீக்க ஆரூரன் செய்த அற்புதச்செயலாகும். சுந்தரர் மாப்பிள்ளை யான பின்னர் சிவபெருமான் தூது செல் வதற்கு முன்னர் ஒரு முக்கியமான நிகழ்ச்சி திருத்தொண்டர் தொகை வரலாறு.

நாளும் திருப்பாட்டால் சிவபெருமானை வணங்கி மகிழும் சுந்தரர் பரவையாருடன் ஆரூரன் சந்நிதிக்கு வழிபடச் சென்றார். தேவாசிரிய மண்டபத்தில் நின்று தொழுது தியாகராஜ சுவாமியை வலம் வர உட் புகுந்தருணம் இறைவன் அசரீரியாக ''திருத்தொண்டர் தொகை பாடுக'' எனப் பணித்தார். எப்படித் தொடங்குவது என்று திகைத்து வினவிய சுந்தரர்க்கு 'தில்லை'' என அடி எடுத்து கொடுத் தருளினார். உடன் திருத்தொண்டர் தொகையைத் தொடங்கி முழங்கினார்.

''தில்லைவாழ் அந்தணர்தம்
அடியார்க்கும் அடியேன்''
''திருநீலக்கண்டத்துக்குயவனார்க்கும்
அடியேன்''

எனத் தொடர்ந்து அறுபத்து ஒன்று நாயன்மார்களை பாடி தனது தந்தை யையும் தாயையும் பாடி அறுபத்து மூவராக சேர்த்து போற்றியுள்ளார்.

'திருத்தொண்டர் தொகை' இல்லை யெனில் 'பெரியபுராணம்' தோன்யிருக்க மாட்டாது.

'பெரியபுராணம்' இல்லையெனில் சிவனடியார்களின் வரலாற்றுக் காப்பியம் தோன்றியிருக்கமாட்டாது.

எனவே கைலையில் மலர்ந்த காதல் செந்தமிழ் சேக்கிழாரின் பெரியபுராணம் கிடைக்க வழிவகுத்துவிட்டது.

மகாபாரதத்தில் கிடைத்தது கீதையும், விஷ்ணுசஹஸ்ரநாமமும் போல

பைந்தமிழ்நாட்டில் சுந்தரர் வரலாற் றால் திருத்தொண்டர் தொகையும், பெரிய புராணமும் கிடைத்தது எனலாம்.

வாழ்க சுந்தரரின செந்தமிழ்!
வாழ்க ஆரூரன் தம்புகழ்!



சிவம் சர்வசாதகம் சாக்ஷாத் சர்வானுக்ரக காரணம் சதகோடி ருத்ரசம்ஹிதை

கண்டமங்கலம் சுந்தரகுருக்கள் (என்கிற)
சத்தியோஜாத சிவாச்சாரியார்

இறைவன் சர்வசாக்ஷியாய் அனாதி மலரகிதனாய் உள்ளும் புறமும்வ்யாபித்து ஆத்மா, அந்தராத்மா, தத்வாத்மா, பரமாத்மா பூதாத்மா என ஐந்து ஆத்ம ஸ்வருபமாய் விளங்கும் இறைவன் சிச்சக்தியின் ப்ரேரணையால் உலகத்தை உண்டு பண்ண எண்ணம் கொண்டார்.

முதன் முதலில் ஸ்ருஷ்டிக்கப்பட்டது திருவாரூரே. இவ்வாலயம் ஐந்து வேலியின் நிலப்பரப்பில் உள்ளது. இதன் காரணமாக இறைவன் ஐந்து முகத்துடன் தோன்றுகிறார். இம்முகங்களில் ஒன்று காற்றின் வடிவம் ஒன்று அக்னி வடிவம் ஒன்று ஜலவடிவம், ஒன்று பூமி வடிவம். அதாவது ஈசானம் தத்புருஷம் அகோரம் சத்யோஜாதம் வாமதேவம் என ஐந்தும் சேர்ந்தது திருவாரூர். ஆகையால் இந்த தலம் உலக ஆரம்பத்திலேயே இவ்விடத்தில் பஞ்சபூதங்களை உண்டாக்கிய பெருமை இத்தலத்தையே சாரும்.

அதனால் ஐந்து எண்ணிக்கையைக் கொண்ட நில விஸ்தாரத்தை உடையது. ஆகையால் இக்கோயிலே உலகத்திற்கு ஆதியாக உள்ளது. பிறகு ஐந்து வேலி அகலமுள்ள கமலாலயம் என்று தடாக வடிவத்தை சேர்த்துப்பார்க்கும்போது பத்து ப்ராணனை (அதாவது) ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற பத்தையும் இவ்வாலயமும், தடாகமும் சேர்த்து உண்டு பண்ணினதாக தெரிகிறது. பிறகு செங்கழுனீர் ஓடை ஐந்து வேலிஉள்ளது இதையும் சேர்த்து பார்க்கும்போது ஒரு பக்ஷம் அதாவது 15 நாள் இது மாதத்தில் பாதிவடிவமாக தோன்றுகிறது. பக்ஷம் இரண்டு கொண்டது மாதமாகவும் பன்னிரெண்டு மாதங்கள் கொண்டது வருடமாகவும், உண்டாகியதற்கு காரணம் திருவாரூரே. இந்த மாதங்களுக்கு அதிபதிகளானவர்களை தன் நெற்றிக்கண்ணிலிருந்து தோற்றி வைத்தார். அவர்கள் பெயர் வைகர்த்தனன், விவஸ்வான், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, லோகப்பிரகாசன், லோகாக்ஷி, த்ருவிக்ரமன், ஆதித்யன், சூர்யன், அம்சமாலி, திவாகரன் என அமையும். இவர்களை உண்டாக்கிய பெருமை திருவாரூரையே சாரும். இந்த பன்னிரெண்டு மாதங்களில் 6 மாதம் தக்ஷிணாயனம், 6 மாதம் உத்தராயணம் எனவும், மேலும் 1 நாளில் இரவாகவும், பகலாகவும் அமையப்பெற்றது சக்தி

யாலும் சிவனாலும் ஆகும். இந்த பெருமையைக்கொண்டது ஆரூர்.

அதனால் இவ்வாலயத்தில் உள்ள சூரியன் உத்தம லக்ஷணத்துடன், உத்தம அளவுடன் கூடியதாக உள்ளது, இறைவன் கடாக்ஷத்தின் லேசத்தைக் கொண்டு ஹடயோகத்தில் ஸ்ரீகமலாம்பிகை அமர்ந்து முதன்முதலில் உலகத்தை சிருஷ்டிக்கச்செய்தாள் என்பது தத்துவம்.

மேலும் திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லோரும் முக்தான்மாக்களே த்யாகேசனை ஒருதரம் சேவித்தால் சகல பாக்யங்களையும் அடைவார்கள். மேலும் இறைவனை வழிபட்டால் கிடைக்காதது அன்பர்களுக்கு ஒன்றுதான். அது மறுபடியும் தாயின் கர்பாசயத்தை அடையாமலிருப்பது அதாவது முக்தி அடைவார்கள்

இவ்வாலயத்தில் தானாக தோன்றிய சிவலிங்கத்தை வைகுண்ட வாசியான நாராயணன் தனக்கு ஏற்பட்ட துரிதங்கள் நீங்கப்பெற நீண்டகாலமாக ஆராதித்து, லிங்கத்தில் தோன்றிய சிவவடிவத்தை தன் இருதய கமலத்தில் வைத்து இன்றும் பூஜை செய்து கொண்டு வருகிறார் என்ற உண்மை விளங்கும் வண்ணம் ருத்ர பாகத்தில் இருக்க வேண்டிய லிங்கத்தை விஷ்ணுபாகத்தில் வைத்து ஆலயம் ராஜாக்களால் உருவாக்கப்பட்டது. சகல ஜீவராசிகள் இருதயத்தில் பரமாத்ம ஸ்வருபமாக சர்வேஸ்வரன் விளங்குகிறார் என்ற தத்துவத்தை ஆரூரில் இருக்கப்பெற்ற இவ்வாலயம் உணர்த்துகிறது. ஆலயஜீர்ணோத்தாரணத்தை சிவாகமங்கள் 10 விதமாக சொல்லி அதில் ஈடுபட்டவர்களுக்கு உண்டாகும் புண்ணியம் அளவிட முடியாதது.

திருவாரூரில் நடந்த யாகசாலையின் நிலப்பரப்பு $5\frac{1}{2}$ ஏக்கர் உள்ளது. இதில் 199 குண்டங்கள் அமையப்பெற்றது. இதில் நவகுண்டபக்ஷ யாகசாலை $5\frac{1}{2}$ பஞ்சகுண்டபக்ஷமாக நடந்தது நமது தமிழ் நாட்டிலோ வேறெங்குமே காணாத யாக பூஜை மிக சிறப்பாகவும் நடக்க ஆசார்யரித்விக்குகள் தான் இவர்களுக்கும் இதில் ஈடுபட்டு சிறப்பாக நடத்திய நிர்வாக அதிகாரி திரு சு. ஸ்ரீதரன், சு. தென்கோவன் அவர்களுக்கும் சரீர உபாதி இல்லாமல் இக்கும்பாபிஷேகம் நடைபெற்ற பெருமையே பெருமை. இறைவனின் பரிபூரண அருளே காரணமாகச் சொல்லவேண்டும். இப்பெருமை குடமுழுக்கை பிரதிகாலமும் தரிசனம் செய்து அறிவுரை வழங்கி நடத்தி கொடுத்த தி. இராச. கல்யாணசுந்தரம், ஐ.ஏ.எஸ். அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும் இதர ஆணையர்கள் ம. சூரியராஜ், பி.ஏ.பி.எல். அவர்களுக்கும் இரா. தண்டபாணி, பி. எஸ்ஸி. பி. எல். அவர்களுக்கும் சு. ஸ்ரீதரன், பி. ஏ. நிர்வாக அதிகாரி அவர்களுக்கும் இத்திருப்பணியில் மனசு வாக்கு சரீரம் காணாத தனங்களாலும் ஈடுபட்டு செய்த அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீவசந்த கமலத்தியாகேசப்பெருமான் திருவருளால் சகல செளபாக்யங்களும் பெற்று நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவன் சர்வேசவரனை ப்ராத்தித்து ஆசீர்வாதம் செய்கிறேன்.

இவ்வாலயத்தில் உள்ள தியாகேசன் ஸ்வயமாக மகாலிங்கத்தில் தோன்றி வைகுண்டத்தை அடைந்து தேவலோகம் வந்து முசுகுந்தனால் பூலோகத்தில் ஸ்தாபித்தபடியால் இறைவனுடைய வடிவத்தை பார்க்கக்கூடாத காரணத்தை உணர்த்துவதாக சிவதத்துவ வடிவமான முகத்தை மட்டும் தரிசிக்க செய்திருக்கும் உண்மை மறுபிறவியை அடையாமல் இருக்கச் செய்வதுதான்.

ஜீவகோடிகள் சகல நன்மைகளையும் இவ்வுலகில் அடைந்து சிவானந்த வைபவத்தை அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



வரகு கொடுக்க வாய்ப்பளித்த வள்ளல்

திரு. பி. ஆர். சிக்குராஜ்
பெரியபுத்தூர் அஞ்சல், கோவை மாவட்டம்

நான் ஒருநாள் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது ஒரு கனவு, ஒரு கோயிலும் குளமும் கனவில் தோன்றியது. கோயிலின் கோபுரத்தில் கலசம் ஒன்று இல்லை. அந்த கலசத்தை உடன் வாங்கிப் பொருத்துமாறு என்னிடம் யாரோ கூறுகின்றார்கள். கனவு கலைந்து விழித்துக் கொண்டேன். இது என்ன விநோதமான கனவு என்று வியந்தேன். பின்னர் அதனை மறந்து விட்டேன்.

பிறகு சிலகாலம் சென்று உல்லாசப்பயணம் சென்றோம். நான் இதுவரை சென்றிராத திருவாரூருக்கும் சென்றேன். ஊருக்குள் எங்கள் உல்லாசப் பயண பேருந்து நுழைந்து வந்து கொண்டிருக்கும் பொழுதே பேருந்து ஜன்னல் வழியாகப் பார்த்த எனக்கு அதிர்ச்சி, வியப்பு, மகிழ்ச்சி. என்கனவில் தோன்றிய கோவிலும் குளமும் அல்லவா இது. உண்மையிலே அப்படி ஒரு கோவிலும் குளமும் இருப்பது பெரிய ஆச்சர்யத்தையும் மகிழ்ச்சியையும் உண்டுபண்ணியது. பேருந்து கோவில் வாசலில் நின்றதும் அவசரமாக முண்டியடித்துக் கொண்டு இறங்கி உள்ளே ஓடினேன்.

கோயிலுக்குள் நான் சந்தித்த முதல் நபர் திருக்கோயில் அர்ச்சகர் திரு சந்திர சேகர நாயனார் அவரிடம் அவசர அவசரமாக என்னுடைய கனவையும் நடந்தவை களையும் கூறினேன். அவர் நிதானமாக கலசங்கள் செய்து வைத்தாயிற்றே என்று கூறினார். நீங்கள் கலசங்களுக்கு கொட்ட வரகுநிறைய தேவைப்படுகிறது. அதை வாங்கித் தாருங்கள் என்று கூறினார் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன். திருக்கோயில் நிர்வாக அதிகாரி திரு ஸ்ரீதரனை சந்தித்த பொழுது 25 குவிண்டாலுக்கு மேல் தேவைப்படும். அந்த அளவு வாங்கித் தரமுடியுமா என்று ஐயத்துடன் கேட்டார் நான் தியாகேசன் கட்டளையிட்ட பிறகு 25 குவிண்டால் என்ன எத்தனை ஆனாலும் வாங்கித்தருகிறேன் என்று கூறிச்சென்றேன். அதன்படி அவ்வப்பொழுது வரகு வாங்கி அனுப்பினேன். இவ்வாறு எங்கோ பிறந்து திருவாரூர்த் திருக்கோயிலைப் பற்றித் தெரியாதிருந்த என்னையும் ஆண்டு கொண்டு திருவாரூர் திருக்கோயில் குடமுழுக்கில் ஈடுபடுத்திய தியாக வள்ளலின் கருணையை என்னவென்று கூறிப் போற்றுவது.



திருவாரூர்த் தீர்த்தங்கள்

S S. முத்துவேலப்பன்,
இயக்குநர், சக்தி சர்க்கரை ஆலை' சவண்டப்பூர்.

தேராரும் வீதி திருவாரூர் திருத்தலம். மூர்த்திதலம், தீர்த்தம், மூன்றாலும் சிறந்து விளங்குவது. ஒரு திருத்தலத்துக்குப் முக்கிய அம்சமான மூர்த்தி, தலம், தீர்த்தம் இவற்றுள் திருவாரூர் தீர்த்தங்களைப் பற்றி இங்கு சற்றே சிந்திப்போம்.

திருவாரூர்த் தீர்த்தங்கள் திருக்கோயிலின் உள்ளேயும், புறத்தேயும் அமைந்துள்ளன. திருக்கோயிலின் உள்ளே தெற்கு கோபுர வாயில் வழியாக நுழைந்தவுடன் சங்க தீர்த்தம் அமைந்துள்ளது. சங்கமுனிவர் இதில் நீராடி அறுபட்ட தம் கையை மீண்டும் பெற்றார். சித்ரா பௌர்ணமி அன்று இதில் நீராடினால் தொழுநோயும் நீங்கும். சமர்க்காரன் என்னும் அரசன் தான்பெற்ற சாபத்தால் ஏற்பட்ட குஷ்டநோயை இங்கு நீராடி போக்கிக்கொண்டார் என திருவாரூர்ப் புராணத்தில் சம்பந்த முனிவர் கூறுகின்றார்.

வடக்குப்புறம் தோட்டத்திற்குள் இருக்கும் தீர்த்தம் கௌமாரி தீர்த்தம் என அழைக்கப்படுகிறது. சப்த மாதரில் கௌமாரியும் ஒருவர். திருக்கோவில் சபாபதி மண்டபத்திற்கு எதிரில் மேற்கு புற நந்தவனத்திற்கு அருகில் அமைந்து உள்ள பெரியகிணற்றுக்கு வாணிதீர்த்தம் என்று பெயர். நவராத்திரியின் ஒன்பது நாட்களும் இதில் நீராடுவது சிறப்புடைத்து. இதை சரஸ்வதி தீர்த்தமென்றும் அழைப்பார்கள். இதில் நீராடி வழி பட்டால் நல்ல அறிவினைப் பெறலாம் என்று நம்பிக்கை.

அருள்மிகு கமலாம்பிகை கோயிலுக்குள் விஸ்வாமித்ர தீர்த்தம், கமலாம்பிகை தீர்த்தம் என இரண்டு கிணறுகள் உள்ளன.

கமலாம்பாள் சன்னதி தாண்டி சிறிது தூரம் சென்றதும் வடக்கு கோபுரத்திற்கு அருகில் முக்தி கிணறு எனப்படும் முக்தியளிக்கும் புண்யதீர்த்தம் உள்ளது. இது தற்பொழுது மருவி மூக்குத்திக்கிணறு என்று அழைக்கப்படுகிறது அம்பாளின் மூக்குத்தியை இதில் போட்டு எடுப்பதனால் மூக்குத்திக் கிணறு என்று கூறுபவரும் உண்டு. இந்த தீர்த்தங்கள் அனைத்தும் ஊர்மக்களுக்கு இப்பொழுது குடிநீர் வழங்கும் கிணறுகளாக பயன் படுகின்றன.

இரண்டாம் பிரகாரத்தில் சப்தமாதர் தீர்த்தம் பாதிரி மரத்திற்கு அருகாமையில் உள்ளது. நீலோத்பலாம்பாள் சன்னதிக் கருகில் அகத்திய தீர்த்தம் உள்ளது.

கமலாலயம் தீர்த்தம்: கமலாலயம் திருக்குளம் நகருக்கே அழகு செய்வது தமிழ்நாட்டிலேயே பெரிய குளங்களில்

ஒன்று. இதில் நடைபெறும் தெப்பத் திருவிழா மிக்க புகழ் வாய்ந்தது இத்திருக் கோயிலின் நடுவே உள்ள நாகநாத சுவாமி கோயிலுக்கு தினசரி படகில் சென்று பூஜை செய்கின்றனர். இத்திருக் குளம் தேவாரம் பெரியபுராணம் ஆகிய வற்றில் பாடல்பெற்ற பெருமையுடையது. சுந்தரர் மணிமுத்தாற்றில் இட்ட பொன்னை இத்திருக்குளத்தில் மூழ்கி எடுத்தார் என்பது பெரியபுராண வரலாறு

இத்திருக் குளத்தை வெட்டியவர் தண்டியடிகள் என்பது பெரியபுராண வர லாறு. இவர் கண்கள் இரண்டும் தெரியாத வர். குளத்தை வெட்ட முயற்சி எடுத்த போது மற்றையோரும், புறசமயத்தவரும் கண்தெரியாமல் எப்படி குளம் வெட்டப் போகிறார் என்றும் இந்தக்குளம் தேவை தானா என்றும் இவரை கேலி செய்தனர். இந்தக்குளத்தை எப்படியாகிலும் வெட்டி முடித்து இதில் மூழ்கி என் கண்களைப் பெறுவேன் என்று அவர்களிடம் அவ் வாறே சூளுரைத்தார். மனம் தளராமல் உறுதியுடன் வெட்டும் இடத்திலிருந்து கரைக்கு கயிற்றைக் கட்டிக்கொண்டு அதைப் பிடித்துக்கொண்டே வந்து குளத்தை வெட்டிமுடித்தார். பிறகு அதில் மூழ்கி கண்பார்வையும் பெற்றார். கங்கை காவிரி இவ்விரண்டையும் விட இது புனி தமான தீர்த்தம் என சம்பந்த முனிவர் ஸ்தல புராணத்தில் கூறுகிறார்.

கடைசியில் கங்கைக்கரையில் இருப் பது போன்று கமலாலயத்தைச் சுற்றி 64 தீர்த்தக்கட்டங்களும், கமலாலயத் தின் நடுவில் உள்ள நாகநாதசுவாமி கோயிலைச் சுற்றி ராமேஸ்வரம் சேதுக் கரையில் இருப்பது போன்று 16 தீர்த்தகங் களும் எனவே கமலாலயத்தில் நீராடினால் காசி ராமேஸ்வரம் சென்று நீராடிய பலன் கிடைக்கும் என்பது உறுதி.

சூர்யதேவன் கோயிலும் சூர்யபுஷ் கரணியும் கமலாலயம் தென்கரையிலும் சந்திரன் கோயிலும் சந்த்ரபுஷ்கரணியும் வடபுறத்திலும் அமைந்துள்ளன. எல்லை யம்மன் கோயிலில் அமைந்துள்ளது பரசு ராமர் தீர்த்தம் ரேணுகாதேவியின் புதல் வரல்லவா பரசுராமர். இவ்வூரில் ஓடும் ஓடம்போக்கி ஆறு கபிலதீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. இன்னும் மிருக தீர்த்தம் கயா தீர்த்தம் ஆகியவையும் இன்னும் பல தீர்த்தங்களும் இவ்வூரில் அமைந்து சிறப்பு செய்கின்றன.

தியாகேசர் வழிபாட்டிற்கு செங்கழு நீர் பூக்கள் பயிரிடுவதற்கென்று செங்கழு நீர் ஓடை என்ற குளம் அமைந்துள்ளது. கோவில் 5 வேலி குளம் 5 வேலி ஓடை 5 வேலி என அமைந்துள்ளதால் இந்த ஓடையின் பரப்பு 30 ஏக்கர் என அறிய லாம்.

தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத அதி சயமாக இக்குளத்தில் மட்டும் ஆண்டு முழுவதும் கிடைக்கும் செங்கழுநீர் பூக்கள் தியாகேசர் வழிபாட்டிற்கு பயன் படுகின்றது.

குமுத மலரைப்போன்று (அல்லி) ஊதா வண்ணத்தில் நெருக்கமாக இதழ் களைக் கொண்டது. செங்கழுநீர்ப் பூ மிகவும் அழகாக இருக்கும் பழங்காலத் தில் செங்கழுநீர்ப் பூ பயிர்செய்ய குவளைக் கானம் என்ற வரிவிதிக்கப் பட்டிருந்தது. எனில் இதன் பெருமையை நாம் அறியலாம்.

இந்த மலரை நிறைச்செல்வர் தியாகேசர் விரும்பி அணிவதில் வியப் பில்லை.

இவ்வாறு புனித தீர்த்தங்கள் பலவற்றைக்கொண்டு விளங்குவது அணி ஆரூர் நகரமாகும்.

முகத்தை காட்டிய ஒரு தேகம் முழுமையும் காட்டாத காரணம் என்ன?

ஆர். கோவிந்தபிச்சை

சைவ சமயத்தின் தலைமை பீடமாகியதும், பஞ்சபூதக்ஷேத்திரங்களுக்குள் பழமை யானதும். மூலாதார க்ஷேத்திரமாய் உள்ள தஞ்சை ஜில்லாவில் உள்ள திரு ஆரூர் என்கிற சோமாஸ்கந்த க்ஷேத்திரம், கமல வசந்த சோமாஸ்கந்த தியாகேசப்பெருமானும் அம்மையும் முகம் மட்டும் தெரிசனம் காட்டச் செய்யும் மூர்த்தமாக ரெத்தின சிம்மாசனத்தில் செங்கோலுடன் வீற்றிருக்கிறார்கள். இடையில் ஸ்கந்தர் (முருகன்) இருக்கிறார்கள்.

அபிஷேக காலத்தில் மட்டும் முருகனைப் பார்க்கலாம்:

சத்து, சித்து, ஆனந்தத்தை அள்ளி வீசும் திவ்ய மங்கள விக்ரகமாக அருளாசி செய்கிறார்கள். உலகத்தில் உள்ள உயிர் வர்க்கம், சுவாசத்தில் வெளியாகி, ஈர்க்கும் சுவாசத்தில் உள்ளாகி நம்மை கண்காணிக்கும் பெருமான் அவரே. உலகத்தில் உள்ள உயிர் வர்க்கம் உஸ்வாச நிஸ்வாசத்தால் மனம், புத்தி, முதலிய கரணங்களை செயல் படுத்தல் ஆகிய இத்தனையும் நிகழ்த்துகிறார்கள். இப்பெருமான் தன் ஆக்க சக்தியை ஐம்புலன்களுக்கும் தருவதால் இவர் ''தியாகர்'' எனப்படுகிறார்.

ஆன்ம குடிகளை இப்படி எல்லாம் ஆட்கொள்வதால் இவர் 'ராஜா' என அறியப் படுகிறார்—''தியாகராஜா''. ஸ்ரீ தியாகராஜாவின் நடனம் அஜபா நடனம், கும்பகரேசக வடிவில் நடனமிருக்கும். தியாகராஜா அசைந்து ஆடுகிற தத்துவம் சர்வ ஆன்ம கோடிகளும் தம் தம் தரத்திற்கு தக்கவாறு அசைந்து செயல்படுகிறது என்பதுதான். வாயால் ஜபிப்பது ஜபம், உணர்வால் ஜபிப்பது அஜபா.

ஸ்ரீ தியாகராஜா-சத்து, கமலாம்பிகை-சித்து, முருகன்-ஆனந்தம்.

சத்து-மெய், சித்து–அறிவு, ஆனந்தம் - இன்பம். நமக்கு மெய் உண்டு, அறிவு உண்டு, அனுபவிக்கும் இன்பம் உண்டு இம்மூன்றையும் அஜபா தாண்டவத்தின் மூலம் அனுகிரகம் செய்கிறவர் ஸ்ரீ தியாகராஜப் பெருமான். சிவ தத்துவம் மிக்க பகுதி திருவாரூர் அம்பலம். அஷ்டலக்ஷ்மிகளும் நிறைவு கண்ட தலம் திருவாரூர். ஸ்ரீபுரம்–சிவ சக்தி பெருமை பொருந்தியவர் ஸ்ரீ தியாகேச பெருமான். தனது மார்பை ரகசிய மந்திர தகட்டால் மறைத்து முகத்தை மட்டும் காட்டி அதன் மூலம் அனுக்கிரகத்தை அள்ளி வீசுகின்றார் ஸ்ரீ தியாகேச பெருமான்.

இப்பெருமான் சாயரக்ஷை, அபிஷேக காலம், ஆடுகின்ற நடன காலம் என்று எக்காலத்திலும் முகம் மட்டும் காட்டி சிவசக்தியாக முருகனுடன் அனுக்கிரகம் செய்யும் மூர்த்தி.

ஆன்ம கோடிகளின் ஜீவரகஸ்ய தத்துவத்தை விளக்கும் திவ்ய திருமேனி. சிதம்பர ரகசியம் பார்க்கலாம். ஸ்ரீ தியாகராஜ ரகசியம் அனுபவிப்பதால்தான் தெரியும்.

திருவாரூர் தியாகராஜா ஆடி தன்னையே ஆன்மாக்களுக்கு தருகிற அத்தர் (பரம பிதா) பாக்கி மூர்த்தங்களை மந்திரங்களால் ஜபிக்க வேண்டும். ஸ்ரீ தியாகேசரை ஸ்ரீ தியாகேசா, ஸ்ரீ தியாகேசா என்று மனதால் ஜபிக்கலாம். சதாசுவாசத்தில் சிந்தனை வைப்பதால் மூக்கு நுனியில் முறுவலித்து அவர் அசைந்தாடும் அற்புதம் என்றுகிலும் ஒருநாள் தெரிசனம் ஆகியே தீரும். அன்று முதல் ஆன்மா அவர் நாமத்தை உறு வேற்றும்.

''ஸ்ரீ தியாகராஜா மஹாராஜா ஸேவயா கிம் ந லப்யதே
ஏகம் ந லப்யதே ஜனனி ஜன்ம க்லேசகாரணை''

ஸ்ரீ தியாகராஜாவை வழிபட்டால் என்ன கிடைக்காது, எல்லாம் கிடைக்கும்; ஆனால் ஒன்று மட்டும் கிடைக்காது அதுதான் மறுபிறவி என்பது கிடையாது. இவ்வளவு ரகசியத்தை வெளிப்படுத்தும் ஸ்ரீ தியாகராஜ திருமேனிதான்

முகத்தை காட்டிய ஒருதேகம்
முழுமையும் காட்டாத முடுமந்திர முகூர்த்தம்

இவ்வளவு புகழ்பெற்ற இப்பெரும்பதியை, வெகுகாலமாக முழுத்திருப்பணி செய்யப் படாத இத்திருக்கோயிலை அரசு, அன்பர்கள் உதவியுடன் மிகப்பெரிய முழுத்திருப்பணி செய்து, 4-4-88 அன்று 300க்கு மேற்பட்ட மூர்த்தங்களுக்கு 12 கால யாக பூஜையுடன் மிகவும் ஆன்மீக சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. இத்திருப்பணிக்கு தலைமை பொறுப்பேற்று மிகவும் ஊக்கமுடன் விதிப்படி செய்ய செயலாற்றிய திருப்பணிக்குழுத் தலைவர் திரு சு. தென்கோவன் அவர்களுக்கும் அவருக்கு வலக்கரமாக செயல் ஆற்றி ஆரூர் பெருமைபடக்கூடிய பல உண்மைகளை தெளிவாக்கவும் செயல்பட்ட நிர்வாக அதிகாரி சு. ஸ்ரீதரன் பி.ஏ. அவர்களுக்கும் ஆரூர் மக்கள் என்றென்றும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளார்கள்.

''ஆரூர் அமர்ந்த அரசே போற்றி''

நித்ய பிரதோஷம்

இதர திருக்கோவில்களில் நடைபெறும் பிரதோஷ காலம் மாலை $4\frac{1}{2}$ மணிக்கு மேல் $5\frac{1}{2}$ மணிக்குள் நடைபெறுகின்றன. ஆனால் தியாகேசன் திருக்கோயில், தியாகேசன் சாயரக்ஷை 6.30 மணிக்கு முடிவுற்ற பின்னரே பிரதோஷ காலம் நடைபெறுகின்றது. ஏன் எனில் நாள் தோறும் நடைபெறும் சாயரக்ஷை பூஜையே நித்ய பிரதோஷ பூஜை என்று சிறப்பாகக் கருதுகின்றனர்.

உதித்தவர் உதித்திடா ஆரூர்

இளையபாரதி, திருப்புகழ்ச் செல்வர்,
கவிமாமணி மதிவண்ணன்,
பெருங்களத்தூர், சென்னை-600 063.

1. இறந்திட்டால் முக்திவரும் காசிதன்னில்!
இருந்திட்டால் முக்திவரும் சிதம்பரத்தில்!
நிறைமனதாய் திருவருணை நினைத்தால் போதும்
நிச்சயமாய் முக்திஎன்பர் சைவச் சான்றோர்!
அறிகின்ற இவையெல்லாம் கிடைக்கக் கூடும்!
அவனியிலே பிறத்தல்நம் கையில் இல்லை!
பிறந்திடவே முக்திநல்கும் ஆரூர்! அந்தப்
பெருமையினை பெற்றவன்நான் பாடுகின்றேன்!

2. ஆடும் இளம் காற்றுக்கோ காள ஹஸ்தி!
அழலுக்கோ திருவருணை! படர்ந்தே எங்கும்
நீடும் வான் தலமென்றால் சிதம்பரம் தான்!
நீருக்கோ ஆனைக்கா! இந்த நான்கும்
நாடுவது பூமித்தாய் வளத்தைத் தானே!
நல்லதிரு வாரூரோ மண் தலமாம்!
கூடுகின்ற இக்குறிப்பு ஒன்றே ஆரூர்
கோபுரத்தை விண்வெளிக்கும் அப்பால் வைக்கும்!

3. சேதாம்பல் நிறம்பெற்ற செவ்வேள் தன்னை
திருவாரூர் சந்நிதியில் நின்று கொண்டு
ஆதாரத் தொளியானே என்று சந்த
அருணகிரி பாடுகிறார்! திருவாரூரில்
நாதத்தின் ஆதார சுருதியாய் இன்று
நல்லிசையைக் கேட்பதற்கு அடிக்க விட்ட
நாதயோகி மூவருமே பிறக்கா விட்டால்
நாமிரண்டு செவிபெற்ற நியாயம் என்ன?

4. கண்ணாடி நீர்நிறைந்த பொய்கை மீதில்
கதிரவனின் காதலியாம் கமலம் யாவும்
தன்முகத்தில் சிவப்பேற செந்தீ போன்றே
தணல் மலராய் சிரிப்பதனை கச்சியப்பர்
முன் னொருநாள் ஆரூரின் ஆலயத்தில்
முதிர் பக்தி நமிநந்தி அடிகள் தீபம்
தண்ணீரில் வார்த்தாற்போல் உள்ளதென்றார்.
சரித்திரத்தை உவமித்து கவியில் வென்றார்!

5. பழங்களினைக் கிள்ளுவதால் கிள்ளை என்றும்
பலரறியக் கிளத்துவதால் கிள்ளை என்றும்
பழந்தமிழின் புலவரெலாம் கிளிகள் பற்றி
பலசொன்னார்! சேக்கிழாரோ திருவா ரூரின்
நிழல் மரத்தின் கிளைகளிலே கிளி அமர்ந்து
நிறைபண்ணில் தேவாரம் ஓதும்! பாட்டை
அழகாகக் கேட்டபடி நாகணவாய்
அரும்புட்கள் அமர்ந்திருக்கும் என்று சொல்வார்!

6. கண்களிலே தீஎரிய, உயர்ந்த ஒற்றைக்
கரத்தினிலே சிலம்பிருக்க அன்று கற்புக்
கண்ணகியாள் பாண்டியனைப் பார்த்துச்சொன்ன
கனல்வார்த்தை அறிமுகத்தை நினைத்துப் பார்ப்பீர்!
தன்னூரைச் சொல்வதற்கு முன்பு ஆரூர்
தலம்தந்த மனுநீதி சோழன் பற்றி
முன்மொழிந்தாள் கண்ணகியாள்! நீதிதேவன்
முகம்மலர்ந்த திரு ஊரே திருவாரூராம்!

7. மன்னையிலே மதிலழகு! தெற்கில் கன்னி
வாழுகின்ற குமரியிலே கடல் அழகு!
சென்னையிலே எது அழகு? தெரிய வில்லை!
சிறந்திட்ட தெரு அழகு மதுரை தன்னில்!
தன்னினைவே இல்லாமல் இறைவ னோடு
தான் கலந்த பலர்வாழும் திருவா ரூராம்
என்னூரில் தேரழகு! வடம் பிடிப்போம்!
இங்கிருந்தே சொர்க்கத்தில் இடம் பிடிப்போம்!

அர்ச்சகர்

இதர திருக்கோவில்களில் உள்ளது போன்று சிவாச்சாரியார்கள் தியாகராஜசுவாமிக்கும், கமலாம்பிகைக்கும் பூஜை செய்வது இல்லை. இந்த சன்னதிகளில் நாயனார் எனக் கூறப்படும் மரபினர் தான் பூஜை செய்கின்றனர். பரமாயர் எனக்கூறப்படும் சிவாச்சாரியார்கள் நாயனார்களுக்கு ஒத்தாசையாக எடுபிடி வேலைகள் செய்து கொடுக்கின்றனர். நாயனார்கள் பூஜை செய்யும் போது, மார்பில் குறுக்காகப் போடப்படும் யோகவஸ்திரம் அணிந்தே பூஜை செய்கின்றனர்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மௌனமடம் கட்டளை.

இத்திருக்கோயிலில் சுவாமி பெயர் - திருமலைக் கொழுந்தர்-தாயுமானவர் ஸ்ரீமாத்ருபூதேஸ்வரர் - ஸ்ரீஅம்பாள் பெயர் - மட்டுவார் குழலம்மை - உச்சிப் பிள்ளையார், மாணிக்கவிநாயகர், மௌனமடம் ஸ்ரீசகஸ்ரலிங்கம் கோவில், ஸ்ரீமுத்துக்குமரன் கோவில் முக்கியமான சந்நிதிகள்.

இத்திருக்கோயில் தருமபுரம் ஆதீனம் மௌனமடம் கட்டளையில் உச்சிக்காலம், சாயரட்சை நித்தியபூஜைகளும், மற்றும் உத்சவங்களில் பூஜைகளும் முக்கியமாக சித்திரை உத்சவத்தில் 6ம் திருநாள் திருக்கல்யாண உத்சவமும். கார்த்திகை கடைசி சோமவாரத்தில் 1008 சங்குகள் வைத்து பூஜை செய்து அபிஷேகம் செய்யும் உத்சவம் மௌனமடம் கட்டளையில் நடத்தப்படுகிறது. இதற்குத் தனியாக சொத்துக்கள் கட்டிடங்கள் இருக்கின்றன. தனித் திட்டம் இருக்கிறது. மௌனமடம் கட்டளையில் திருவாபாரணங்கள் தனியாக இருக்கிறது. தருமபுரம் ஆதீனம் நிர்வாகத்தில் உள்ளது. சமீபத்தில் இத்திருக்கோயில் திருப்பணிகள் செய்து அஷ்டபந்தன மருந்து சாத்தி 26–1–83ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அப்பொழுது சித்திரை மண்டபம் சித்திரங்கள் புதுப்பித்து வேலை செய்து வரலாறு எழுதி மௌன மடம் கட்டளை பரம்பரை தருமகர்த்தா தருமபுரம் ஆதீனம் 26 வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளால் செய்யப்பட்டது.

பிறக்க முத்திதரும் பேரூர்

சி. பாண்டி

அழகிய ஊரதற்கே ஆரூர் அரும்பொருள்
இளகிய நாதனுக்கே தியாகனும் பட்டமது
பழகிய தமிழாலே பாமாலை சூட்டவே
உளமொடு தருவாயே உதிரா பூமணியே

ஆரெனுஞ் சொல்லுக்கே அழகாம் பொருளொன்று
ஊராளனுஞ் சொல்லுக்கே மருதநிலத் தலைவனும்
காரண காரணவன் கணிச்சி வானவனும்
தேரூரும் தேவனவன் தியாக ராசனவன்

பிறக்க முத்திதரும் பேரூர் திருவாரூர்
மறக்க இயலுமோ மறையுணர் மாந்தரே
சிறக்க வாழ்வரே சீராளன் ஊரிலே
திறக்க மனக்கதவுந் திருத்தொண்டு புரிவரே

எரியும் விளக்கிற் கெண்ணையிலை நீரூற்று
அரிசிவ மொன்றென் றறியாத பதரெள்ள
விரிசடைத் தொண்டனும் நமிநந்தி நீரூற்றி
எரிநல் விளக்கெரித்த எம்மான் ஆரூரே

பாரூரும் பரம்பொருளைத் தேரூரும் பெருமானாய்
ஊருதோ ருலகெங்கும் உணர்த்தவே தேரமைத்து
ஆருரில் அம்மானை அமரவைத் தடியார்கள்
தேரிவருந் திருநாளைத் தேர்ந்ததே திருவாரூர்

அரிவைத்து வழிபட்ட ஆத்தும லிங்கமதை
பரிவுடன் யாசிக்க தேவர்கோன் கையிட
விரிசடை மூர்த்தியை முசுகுந்தன் பெற்றிட
விரிகதிர் வலவரும் தேவிநடு வைத்திட்டான்

முசுகுந்தன் வைத்தபதி பசுபதி ஆரூரே
விசுவாசம் செய்யுமிடம் நம்பிக்கை தும்பிக்கை
பசும்பால் தன்மையவன் பாலூட்டுந் தெய்வமவன்
விசும்பர்கள் வந்துதொழும் வியப்புறு ஆரூரே!

சுந்தரனை சுந்தரனே சுந்தரனு யாக்கியவூர்
தம்பிரானை சுந்தரனின் தோழனெனச் சொன்னவூர்
எம்பிரானே மாதுவிடம் தூதுவனாய் சென்றவூர்
நம்பிரானே ஏதுவாகிச் சாட்சிசொன்ன ஆரூரே!

மாதுபங்க னேசனவன் மாறனவன் சோமசிவன்
ஓதுமூர்த்தி சுந்தரனை ஏதுவான குருவாயாக்க
தூதுவனும் தியாகனூரில் தூதுவளைப் பயிர்செய்து
தாதுவளர் சற்குருவை தன்குருவா யாக்கியவூர்

பிறவிக் குருடரா யிறைதொண்டு புரிவராய்
துறவிக் கோலராய் தண்டுடை யடிகளாய்
உறமிக்க நெஞ்சனாய் ஊர்ந்தவூர் திருவாரூர்
அறம்வளர் ஆரூரில் அவதாரம் பெருமானூர்

ஆணவ மலநிறை அவுணர்கள் இடர்தர
வானவர் நிலைநிறை எம்மான் ஆரூரில்
காணக் கொடுத்துக் கண்ணைக் காணாது கெடுத்தவூர்
ஞானக்கண் தியாகனை ஞாலமே போற்றுமூர்.

திருமுறை ஓதும் முறை

பிற திருக்கோவில்களில் போல் அன்றி திருக்கோயிலில் இரண்டு பேர் திருமுறை இசைக்க வேண்டியது மரபாக இருந்தது, இன்றளவும் நடைமுறையில் இருந்து வருகிறது, ஒருவர் பாடுவார்; மற்றவர் அலறிப் பாடுவார். திருமுறை இசைக்கும் போது ஆரம்பத்தில் மற்ற ஆலயங்களில் கூறப்படுவது போன்று 'திருச்சிற்றம்பலம்' எனக் கூறப்படுவது இல்லை. காரணம் கோவிலாகிய'தில்லை' க் கோவிலுக்கும் மூத்த'பெரிய கோவில்' இத்திருக்கோவில் என்பதால், 'ஆரூரா தியாகேசா' என்று கூறியே திருமுறை இசைக்க ஆரம்பித்தல் இங்கு நடைமுறையில் உள்ளது. தவிரவும் திருவாரூர்க் கோவிலில் திருமுறை ஓதுதலை கேட்க நேர்ந்த செம்பியன் மாதேவியார் இதைப்பற்றி தனது பேரன் ராஜராஜ சோழனுக்கு கூறவும், அவர் நாடெங்கும் பறையறைந்து, திருமுறைப் பாடல்களை தொகுக்க முயன்றதாகவும், பின்னர் கருவூர் தேவர் அறிவுரை பெற்று, தில்லையிலிருந்து திருமுறையைப் பெற்று வந்து, 'திருமுறை கண்ட சோழன்' எனப்பெயர் பெற்றதாகவும் கூறுவர்.

வானளந்த மண்

இலக்கியச்சுடர், இன்கவித்தென்றல், இன்தமிழ்ச் சொல்லேந்தல்
இரா. இராமமூர்த்தி, எம். ஏ., பி. எட்.,
பெரியார் நகர், திருச்சிராப்பள்ளி-620 005.

நான் மண்தான்,
ஆனால், ஆரூர்மண்!
ஆர் ஊர் மண் என்னைவிடச்
சீர் ஊர் மண்?-நான்
அண்ட சராசரத் தலைவனின்
அடிமண்!
அடியார் அனைவர்க்குமோ,
முடிமண்,
இந்த மண் புரிந்த
சாதனைகளால், பலரின்
வேதனைகள் நீங்கி
விந்தைகளல்லவா, விளைந்தன?
மாவலியிடம், மூவடி கேட்ட
மாலவன் பாதமோ,
வானத்தையும் நிலத்தையும் அளந்து
'மூவுலகும் ஈரடி' என்றது!
நானோ-
பரத்தையும் இகத்தையும்
ஒரு சேர அளந்த
பரமனின் திருப் பாதத்தையே
அளந்து-
'ஈரடி தான் சேரடி' என்றேன்!
இந்த ஈரடி, நசியிருளில்
புழுதியளைந்த சேறடியாகி
இருமனங்களைச்
சேரடியாகிய சீரடியானது
என்னால் தான்!
சொற்றமிழ்ப் பாட்டுச் சொன்ன
சுந்தரனின் சுவடுகள் ஒருபக்கம்!
அற்புதச் சிவனருளாய்ப்
பஞ்செனச் சிவந்து பதிந்த
பரவையின் பாதங்கள், மறுபக்கம்!
இந்த
இருபக்கங்களையும் இணைக்க-
இருமுறை இருளில்
அவன் நடந்தான்!-ஆம்
சிவன் நடந்தான்!
ஆஹா..
என் மேனியெங்கும்
அமர ஸ்பரிசம்!
மனுநீதிச் சோழனைச் சோதிக்க
என்னையே நோக்கி இறங்கிய
எமக்கன்றின்
கால்கள் படப்பட, நான்-
மரணமடைந்தேன்!
ஆனால், பதியாகிய
சிவப் பசுவின்
பாதம் பதியப் பதிய-
மறுபடியும் நான்
ஜனனமடைந்தேன்!
எமக்கன்றை
வீதிவிடங்கன் கொன்றதால்
நீதிமடந்தை இறந்தாள்!
வீதி விடங்கனையே
மன்னன் கொன்றதால்
மறுபடியும் பிறந்தாள்!
அன்று
என்மேல் நடந்ததைப்புகார்
மண்மேல் நடந்ததாக
இளங்கோவே பாடியபின்தான்,
புகார் என்றதும் அனைவரும்
ஆரூரையே பார்க்கத் தொடங்கினர்!
தில்லையில் ஒருகாலும்
மதுரையில் மறுகாலும்
மட்டுமே ஊன்றி ஆடியமகேசன்
என்மேல் மட்டும் தான்

இருகால்களையும் ஊன்றிப்
பதித்துப் பதித்துப் பரவசமூட்டினான்!
அன்று தான்
மலைமகள் கணவனும்
மண்மகள் மணாளனானான்!
பசுவாகி வந்த இறைவனின்
நான்கு பாதங்கள்—
என்மேல் பதிந்து தானே
நான்கு வேதங்களாயின?
தவம் செய்பவரைச்
சுற்றித்தான் புற்று எழும் என்பர்!
பற்றுக்களை விட்டுப்
பரமனையே பற்றத்
தவங்கிடந்தநானே—ஒருநாள்
புற்றானேன்! அவனோ,
புற்றிடங்கொண்டவனானான்!
சிவனை அடையப்
புற்றான என்மேல்—
சிவகாமியாகிய் பராசக்தியின்
பாத கமலம்பட்டதால்
பாதக மலம் நீங்கிப்
பைந்தடமுமாகிக்
கமலாலயக் குளமானேன்!
குளமாகிக் குழிந்தும்
புற்றாகிப் புடைத்தும் கிடந்த
என்னைச் சுற்றிலும்
அன்னம் வைகும் வயல்கள்!
குண்டையூர் நென்மலை
ஒருநாள், என்மேல்
கொட்டிய போதோ,
வீதியெங்கும் அன்னம் வைகிய
வியப்பை விளைவித்தேன்!
தேவாரமூவர் நடந்ததால்தான்
என்மேல்
மூவாத முதல்வனும்நடந்தான்!
இங்கிதக் கீர்த்தனைகளை
வாயாரப் பாடிய
சங்கீத மூர்த்திகளில்
தியாகையர் இசைகேட்க
மூவா முகுந்தனும்
ஆரூருக்கே வந்தான்!
தென்றலை நோக்கி
வாடை வந்ததுபோல்
மலையினின்றும் வந்தசுந்தரன்
பாட்டுத்தமிழில் பரவையைக்
கேட்டுக்கல்யாண சுந்தரனானான்!
பின்வந்த ஒருசுந்தரரின்
பேச்சுத்தமிழில் தென்றலைக் குழைத்து
நாட்டு மக்களைக்
கூட்டி வைத்ததால்
செந்தமிழ்க் கல்யாணசுந்தரனானான்!
சிவப்பசு
கூற்றுவக்கன்று
முசுகுந்தமன்னன்
விடங்கத் திருமேனி
தேவார மூவர்
அற்புதப் பரவை
ஆண்டவன்,
அடியார் கூட்டம்
சங்கீத மும்மணி
தமிழ்த் தென்றல்—
ஆகிய அனைவரும் என்மேல்
பாதம் பதித்து வழங்கிய
பரிச தீட்சையால், என்
வயிற்றிற் பிறந்தார்க்கெல்லாம்
வானவீடு நிச்சயம் என்ற
வரம் பெற்றேன்!
மண்ணில்
ஸ்திரம் பெற்றேன்!
இந்த அடியார்களோடு—இங்கு
வந்த அடியார்களையும்
பெற்ற மகிழ்ச்சியால்
இன்று என் இதயம்
பூரித்துப் பெருத்துப்
புதுக்கோபுரமாய் உயர்கிறது!
அன்று—
வானமே மண்ணை அளக்க
வந்தது
இன்றோ—
இந்த ஆரூர் மண்ணே
குடமுழுக்காடும் கோபுரமாகி
வானை அளக்க,
வளர்கிறது
அளக்க வளர!

———

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான இராஜன் கட்டளை ஸ்ரீதியாகராஜசுவாமி தேவஸ்தானம், திருவாரூர்.

திருவாரூர் பஞ்சபூதத் தலங்களில் பிருதுவித்தலமாக விளங்குவது சப்தவிடங்கத்தலங்களில் முதன்மையானது.

திருமால் இந்திரன் ஆகியோரால் வழிபடப்பெற்று முசுகுந்த சோழ மன்னரால் கொண்டுவந்து தாபிக்கப்பெற்ற ஸ்ரீதியாகேசப்பெருமான் இத்தலத்திற்குத் தனிச்சிறப்புத்தரும் மூர்த்தியாக விளங்கி வருகிறார்.

திருவாரூர்ப் பூங்கோயிலினுள் அரநெறி சித்தீச்சரம் எனத் தனியே இரு ஆலயங்களும் உள்ளன.

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீகுருஞானசம்பந்தருக்கு கமலை ஸ்ரீஞானப்பிரகாசதேசிகர் அருளுபதேசம் செய்த கோயில் இவற்றுள் ஒன்றாகிய சித்தீச்சரம்.

திருவாரூர்த் திருக்கோயிலின் வழிபாடுகளுக்கு 13 கட்டளைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமான கட்டளைகள் இராஜன் கட்டளை யும், அபிடேகக் கட்டளையுமாகும்.

இராஜன் கட்டளை கமலை ஸ்ரீஞானப்பிரகாசரால் நிர்வகிக்கப் பெற்று வந்தது எனக் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. இராஜன் கட்டளை தருமையாதீன நிர்வாகத்தில் இயங்கி வருகிறது.

இக்கட்டளையை 17வது மகாசந்நிதானத்தின் அருளாட்சிக் காலத் தில் ஆதீனம் சார்பில் மேற்பார்த்துவந்த கட்டளை விசாரணை ஸ்ரீ அருணாசலத்தம்பிரான் சுவாமிகள் தெற்கு இராஜகோபுரத்தைத் திருப்பணி செய்துள்ளார்கள்.

தருமையாதீனம் 26வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இப்போது தெற்கு இராஜ கோபுரம், சித்தீச்சரம் திருக்கோயில் திருப்பணிகளைச் செய்வித்து மகா கும்பாபிஷேகம் நன்கு நடைபெற உதவியுள்ளார்கள்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான வேளூர் அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில்.

வைத்தீசுவரன் கோயில் தஞ்சை மாவட்டம்

——*——

உயிர் நோயாகிய பிறவியும், உடல் நோயாகிய பிணிகளும் நீங்க, இறைவனே வைத்திய நாதனாக - இறைவி தையல்நாயகியாக - குமரன் - முத்துக்குமாரனாக எழுந்தருளியுள்ள தலம் புள்ளிருக்கு வேளூர். புள் (சடாயு) இருக்கு (வேதம்) வேள் (முருகன்) மூவரும் வழிபட்ட தலம். தற்காலத்தே வைத்தீசுவரன்கோயில் என்ற பெயருடன் விளங்கி வரும் இத் தலம் தருமை யாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில்களுள் முதன்மையாக விளங்குவது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம் மூன்றாலும் சிறப்புடையது இத் தலம். பாரத நாட்டின் பழம் பெரும் பிரார்த்தனைத் தலங்களுள் ஒன்றாக உள்ளது.

நவக்கிரகத் தலங்களுள் இது அங்காரகன் எனப்படும் செவ்வாய்த் தலம். இங்கு வந்து வழிபடுவோர் நவக்கிரக தோஷம் நீங்கப்பெற்று, தீராப்பிணிகள் எல்லாம் தீரப்பெறுவது கண்கூடு,

மாதக் கிருத்திகைதோறும் ஸ்ரீ செல்வ முத்துக்குமரர் புறப்பாடும், சந்தனா பிஷேகமும் தலத்திற்குச் சிறப்பு.

பாடல் பெற்ற தலம்; குமரகுருபரர் அருணகிரிநாதர் பாமாலைகள் பெற்ற தலம். 'தீரா நோய் தீர்த்தருள வல்லான்' என்று அப்பரடிகள் பெருமானைப் போற்றியுள்ளார்.

வாரீர்; வாரீர்; வைத்தியநாதப் பெருமான் திருவருள் பெறுவதற்குச் சேர வாரீர்:

குறிப்பு: சிதம்பரம் - தஞ்சை புகைவண்டிப் பாதையில் உள்ளது இத்திருத் தலம்.

‘ஆரூர்த் தியாகேசரின் அளப்பரிய பெருமைகள்

சௌந்தரா கைலாசம்.

திருவாரூர்ப் பெருமைகளைச் செப்புதற்கு வையகத்தில்
ஒருமொழியால் கூடுவதா? ஒருநூறு வேண்டாமா?
முத்திமட்டும் என்பதில்லை! மூவுலகில் உள்ளநலம்
அத்தனையும் தரும்தலமே ஆரூர்த் திருத்தலமாம்!
எத்தனையோ ஆண்டுகள்முன் இறைவன் அருள்கனிய
இத்தலத்தில் கோயில் கொண்டே இருப்பதற்கு வந்தானாம்!
பழைமைக்குப் பழைமையெனப் பாரில் திகழ்ந்திருக்கும்
அழகுத் திருக்கோயில் ஆரூர்த் தலக்கோயில்!
ஆதியிலே புற்றிடத்தில் அமர்ந்த பெருமானை
ஓதுகிற நாவரசர் உரைப்பதனை எண்ணுங்கள்.

காலத்தால் ஏதும் கணக்கறியக் கூடாமல்
கோலத்தை அவன்கொண்ட குறிப்புப் புலனாகும்.
உமையவட்குத் தன்னுடலில் ஒருபாதி தரும்முன்னோ,
அமையுமெழில் தில்லைநடம் ஆடுதற்கும் முன்னேயோ,
திருவாரூர்க் கோயிலதைச் சிவபெருமான் கொண்டகதை
அருளாளர் திருப்பாட்டில் அறியக் கிடக்கிறது.
பூங்கோயில் கொண்டிருக்கும் புற்றிடத்து நாயகனே
தீங்ககல மாலவனின் செருக்கடக்கி அருள்புரிந்தான்.

மாலவனை மணம்புரிய மனம்விழைந்த இலக்குமியாள்
சீலமுடன் இத்தலத்துச் சிவனை நினைந்துதவம்
ஆற்றிநின்ற காரணத்தால் ஆவல் நிறைவேறிப்
போற்றும் திருமாலின் புகழ்க்கரங்கள் பற்றினளாம்!
தன்பேரால் திருவாரூர்த் தலம் விளங்கப் பெறுகின்ற
அன்புப் பரிசொன்றும் அதனிடத்தே பெற்றாளாம்’.
கமலாலயம் என்னும் கவினார்ந்த திருநாமம்
அமைந்தாரூர் விளங்கிடுதல் அதனாலே தானன்றோ?
தனித்தனியே ஒருகோடி தவமுனிவர் தரிசிக்க
இனிப்பாகப் புற்றீசர் எழிற்காட்சி தந்தாராம்!

நான்குவகைச் சேனையின்றி நன்றாய் அரசாள
வேண்டிவந்த அரசன்என்னும் வேந்தற் குதவினராம்!
பத்துத் திசையினிலும் பாங்காய் ரதம்செலுத்தி
மெத்தப் புகழ்படைத்த மேன்மைத் தசரதனும்

புற்றீசர் திருப்பாதம் போற்றித்தான் இராகவனைப்
பெற்றெடுத்தான் என்றுசொன்னால் பெருமைக் களவுண்டோ!
சித்திசன், குலிகேசன், சிலைக்காமன், கோகருணன்,
உத்தமனாம் திருராமன், உயர்வுடைய குசலவர்கள்,
சமற்காரன், நற்கசேம சருமன் முதலானோர்
தமக்குற்ற துயர்நீங்கித் தழைத்தோங்கும் பெரும்பேற்றை
அன்புருவாய் அருளுருவாய் ஆரூரில் வீற்றிருக்கும்
வன்மீகநாதர்தாம் வாழ்த்தி வழங்கினராம்!

உள்ளமெனும் கோயிலிலே உத்தமனை உட்கார்த்திக்
கள்ளமிலாப் பக்திசெய்த கருந்திருமால் மார்பசைவும்
போதில்அஜ பாநடனம் புண்ணியனார் ஆடியது,
மேதினியில் மிகஉயர்வாய் மிளிர்ந்திடுமிப் பதியன்றோ!
உள்ளதெலாம் எல்லார்க்கும் உவந்தளிக்கும் தியாகேசர்
வெள்ளமென அருள்பொழிந்து விளங்குவதும் இங்கன்றோ?
வையத்தை உழுதுண்ண வல்லாற் களித்தாராம்!
கையில் நவநிதியம் கனிந்தொருவற் களித்தாராம்!
விரும்பித் துதிப்போர்க்கு வீடளித்து நின்றாராம்!
உருவில் ஒருபாதி உமைக்களித்து மகிழ்ந்தாராம்!
என்பதனால் தியாகேசர் என்னும் ஒருநாமம்
மண்ணுலகில் இவ்விறைக்கு வழங்குவது மிகப்பொருத்தம்.

விண்ணுலக இந்திரனை வேண்டி முசுகுந்தன்
அண்ணலவர் தியாகரையே ஆரூர்த்தலம் கொணர்ந்து
புற்றீசர் வீற்றிருக்கும் பூங்கோயில் தென்புறத்தே
பற்றுயரக் கோயில்கட்டிப் பாங்காய் அமர்த்தினனாம்.
தினந்தோறும் பூசனைகள் சிறப்பாகச் செய்திருந்து
தனங்கோடி செலவிட்டுத் தக்கவிழாக் கண்டனனாம்.
வீதி விடங்கரென விளங்குகிற அவ்விறைவன்
நாதியென எல்லார்க்கும் நல்லருளைப் புரிகின்றார்.

செங்கரத்தில் மணித்தண்டும் தியாகத் திருக்கொடியும்
மங்காத நன்மணிகள் வனப்பொளிரும் ஆசனமும்
திகழ்ந்திலங்கும் மார்பகத்தில் செங்கழுநீர் மாலையதும்
புகழ்வீர கண்டயமும் போற்றுமஜ பாநடமும்
வேழம்ஐ ராவணமும் வேதக் குதிரையதும்
தாழ்வறியா துள்ளஅர தனசிருங்க மாமலையும்
அஞ்சு முகமுரசும் அழகுடைய சோணாடும்
மிஞ்சுமெழில் ஆரூரும் மேலான காவிரியும்

பொலிவுதரும் அங்கப் பொருட்கள்பத் தெனக்கொண்டு
நிலவுகிற தியாகேசர் நீளுலகைக் காக்கின்றார்!

நாவார மனமார நாதன் புகழ்பாடித்
தேவாரம் சூட்டிநின்ற சிவனடியார் மூவரிலே
வன்றொண்டர் சுந்தரரை வழக்காடித் தடுத்தாண்டு
நன்றென்று கதிகாட்டி நாளும் துணையிருந்தார்!
அவர் செய்த பிழைமுற்றும் அன்பாய்ப் பொறுத்தருளி
உவகையுடன் பொன்தந்தார்! ஓங்கிடுமெய்ப் பொருள்தந்தார்.
பரவையிடம் தூதுசெலப் பரமனவர் இந்நகரின்
தெருவினிலே இரண்டுமுறை திருக்கால் எடுத்துவைத்தார்!
தொண்டருக்குத் தொண்டரெனச் சொல்லிநின்ற சுந்தரர்க்குத்
தொண்டுசெய்யும் எளியவராய்த் தோன்றி அருள்புரிந்தார்!

ஆராய்ச்சி மணியதனை அடித்த ஒருபசுவின்
தீராத் துயரத்தைத் தெரிந்துகொண்ட மனுநீதிச்
சோழனவன் தேர்க்காலால் சொந்தத் திருமகனின்
வாழ்வெடுத்து நன்னீதி வழங்கிநின்ற வேளையிலே
ஆவேறித் தியாகேசர் அங்குவந்து காட்சிதந்து
தாவேதும் இல்லாமல் தளிர்மகவை உயிர்ப்பித்தார்!
இன்னும் பலஅடியார் இத்தலத்தின் ஈசர்தமை
முன்னித் தொழுதிருந்து மோட்சம் அடைந்தார்கள்.
புற்றீசர் தியாகேசர் புகழ்விரிக்க நாம்முயன்றால்
பற்றாது வாணாளும் படிப்பறிவும் தமிழ்மொழியும்!
இறையவனின் இணையடியை எண்ணத்தில் நாம்சுமந்தால்
குறையகலும்! வாழ்வின்ஒளிக் கோபுரமே கைக்குவரும்!

ஐந்துபெரும் பூதங்களால் அமைந்த பலஅண்டங்கள்
எந்தக் கணத்தினிலும் இயங்கிச் சுழலுவன
சுழலாமல் ஒருகணம்தான் சும்மா இருந்துவிடில்
அழிவுற்றுத் துகள்கோடி யாகிச் சிதறிவிடும்!
வானப் பெருவெளியில் வட்டமிடும் அண்டமெலாம்
ஊனமின்றிச் சுற்றிவர ஒருவன் இயக்குகிறான்!
அந்த ஒருவன்தான் அருளிறைவன்! நம்தலைவன்!
சிந்தையதற் கெட்டாத புதிராய்த் திகழுபவன்!
அனைத்துலக உயிர்களையும் ஆக்கி அழிக்குமவன்
தனைப்படைக்க யாருமின்றித் தானாய் விளங்குவதால்
இருவினையும் மும்மலமும் இறையவனைத் தொடர்வதிலை!

கருவினிலே அவன்தங்கிக் கவலைப் படுவதிலை!
பேருலகில் அவன்வந்து பிறப்பதிலை! இறப்பதிலை!
காரணமும் காரியமும் கருத்தை நிறைப்பதிலை!
மிகப்பழையன் என்றாலும் மிகப்புதியன் என்றிருப்பான்!

சகத்தினுள் எவ்வுயிர்க்கும் தலைவனென நின்றிருப்பான்!
ஆதியொன்றும் இல்லாதான்! அந்தமொன்றும் இல்லாதான்!
சோதிமய மாயிருப்பான்! துலங்குமறி வாயிருப்பான்!
இன்பதுன்ப மறியாதான்! எப்பிழையும் புரியாதான்!
மன்பதைக்கு நல்லதொரு வழிகாட்டி ஆட்கொள்வான்!
காலனையும் தன்காலால் காய்ந்த பெருந்திறலான்!
வேலவனை விழிவழியே வியனுலகுக் கருளியவன்!
மாலோ டயன்காண மலையாய் விளங்கிய வன்!
சேலோடும் கண்ணிதனைத் திருவுருவில் தாங்கியவன்!
அன்பிலார் எவரெனினும் அவன்காட்சி தரமாட்டான்!
துன்பங்கள் அவர்க்குற்றால் துடைத்தெறிய வரமாட்டான்!

ஒப்பறிய ஒண்ணுதை ஒருதலைவன் சிவபெருமான்!
எப்பொழுதும் எதுவெனினும் எவரிடமும் வேண்டாதான்!
தேமதுரத் தமிழ்என்றால் சிந்தை பறிகொடுப்பான்!
மாமதுரைச் சங்கத்தில் மதுத்தமிழை உண்டிருப்பான்!
பக்தி வலைக்குள்ளே பாய்ந்தோடிச் சிக்கிடுவான்!
சக்தி விழிக்குள்ளே சதிராடித் துய்த்திடுவான்!
ஊனளித்த வேடனுக்கும் உயரன்பின் காரணமாய்
வானளித்து நல்லகதி வழங்கிநின்ற அருள்கொடையான்!
எப்பெயரைச் சூட்டிடினும் எவ்வுருவம் காட்டிடினும்
செப்புமுயர் அன்பிருந்தால் தேடிவந்து தாங்கிடுவான்!
இல்லா இடமில்லை! ஈசன் அருட்பார்வை,
செல்லாத இடமில்லை! சிவமயமே அண்டமெலாம்!
ஊரூர்கள் அத்தனையும் உத்தமனின் ஊர்களெனின்
ஆரூரும் அவனூர்தான்! ஆனாலும் தனியூர்தான்!
பிறதலங்கள் காணாத பெருமை இதற்குண்டு!
திறல்வேந்தர் கோயில்கண்ட சிறப்பும் இதற்குண்டு!
இத்தலத்தில் பிறந்தவர்கள் எல்லாம் சிவகணத்தார்!

தத்துவங்கள் ஆடிவரச் சக்திசிவம் ஆடுமிடம்!
வித்தகர்கள் கூடிவர விடங்கரவர் நாடுமிடம்!
புத்தகம்போல் யாவருக்கும் புதியஒளி நல்குமிடம்!
தேரோடும் வீதியிலே திருஆடி நிற்குமிடம்!

ஏரோடு நிலமங்கை இணைந்துவளம் சேர்க்குமிடம்!
புவியரசி ஆயிரமாய்ப் பூச்சொரிந்து பார்க்குமிடம்!
கவியரசர்க் காயிரமாய்க் கற்பனைகள் பூக்குமிடம்!
இத்தகைய ஆரூரில் இருந்தருளும் ஈசருக்கு
மெத்தச் சிறப்போடு விளங்கும் குடமுழுக்கு!
அந்தக் குடமுழுக்கு அழகொளிர நிகழ்கிறது!
எந்தப் புறத்தினிலும் இன்பம் திகழ்கிறது!
ஆரூரில் வாழிறைவன் அருள்மழையின் வெள்ளத்தில்
பேருலகம் அத்தனையும் பெரிதாய்த் திளைக்கிறது!

நீதி நிலைத்த தலம்

கவிஞர். பெரி. சிவனடியான்

திருக்கோயில் ஒருபாதி குளமாய்த் தேங்கத்
தியாகேசன் ஆட்சிபுரி திருவா ரூரின்
பெருமைகளை ஆயிரமாயப் பேசு கின்றோம்!
பேராளன் சுந்தரர்க்கோ இறைவன் தோன்றி
உரிமையுடன் காதல்தூ துரைத்து வந்தான்!
உளம்நொந்து கலிக்காமன் உயிர்து றந்தான்!
அரியசெயல் அறிந்தீசன் காட்சி தந்தான்!
அடியார்கள் இருவருமே முத்தி பெற்றார்!

மனுநீதி உரைத்தவொரு பசுவைக் கண்டோம்!
மணிவொலிக்கே அஞ்சியவோர் மன்னன் கண்டோம்!
தன்மகனால் கன்றங்கே உயிர்து றக்கத்
தாய்ப்பசுவோ ஆராய்ச்சி மணியொலிக்க
மன்னனவன் கன்றிறந்த வழியை ஆய்ந்தான்!
மாடென்று கருதாமல் நீதி காக்கத்
தன்தேரின் முன்காலில் மகனைச் சாய்த்தான்!
தன்கண்கள் நீர்சோரப் பசுமுன் நின்றான்!

கண்ணீரின் சங்கமத்தால் கவலை தீர்த்தான்!
கடவுள்நெறி ஈதென்ற கருத்து ரைத்தான்!
புண்பட்ட நெஞ்சத்தைத் தேற்று தற்குப்
போதனைகள் மட்டுமே போதா வென்று
கண்ணெதிரே மகனிழந்து கலங்கி நின்றான்!
காசினியில் மனுநீதி நிலைக்கச் செய்தான்!
மண்ணிதிலே சோழர்குலம் ஆட்சி செய்த
மாண்பிற்கு மன்னனிவன் சாட்சி யானான்!

ஆயிரம் நா போதாது

கவிதாமணி டாக்டர். அ. வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார். டி. லிட்.,

ஆரூரை நினைக்கின்ற போதெல் லாமும்
ஆனந்தப் பரவசமே, துள்ளும் நெஞ்சில்!
தேரூர்ந்து எழுந்தருளும் தியாகேசர் தாமும்
தெருவிலே கால்தோய நடந்து சென்று
தீராத பிணக்கதனைத் தீர்த்து வைத்த
செய்தியெலாம் நெஞ்சக் கனவில் தோன்ற
ஆரூரின் பூங்கோயில் அமர்ந்த ஈசன்
அடிவருடிக் கால்பிடிக்க அலையும் நெஞ்சம்.

திருத்தொண்டர் தொகைபாடும் சுந்த ரற்கே
செந்தமிழில் துதிபாடி நெஞ்சம் கொஞ்சும்
கருத்தெல்லாம் குவிந்துவந்து கவிதை பாட
கைகட்டி வரிசையாய் என்முன் நிற்கும்!
பெருந்தவத்தார் ஆரூரில் பிறந்த பேர்கள்
பேரின்பப் பெருநிலையைப் பெறுவார் என்பார்!
திருக்கோயில் புற்றமர்ந்த புனிதர் பாதம்
சேவிக்கச் சிந்தையது வேட்கை கொள்ளும்!

மணிகட்டி அரசாண்ட மனுநீதிச் சோழன்
மகவுக்காய் மணியடித்த ஆவின் தாபம்
துணிவோடு தன்மகன்மேல் தேர்க்கால் ஏற்றித்
துயர்தீர்த்துக் கன்றின்பழி துடைத்த மன்னன்!
பணிவோடு தமைப்பணிந்த தம்தோ ழர்க்குப்
பரவையரை மணமுடிக்கப் பரமன் அன்று
பணித்திட்ட கட்டளையை நினைக்கும் தோறும்
பரசிவத்தின் தொண்டுள்ளம் நம்முன் நிற்கும்.

தோடுடைய தேவனவன் தனக்குத் தோழன்
சுந்தரரைத் தேர்வுசெய்த செய்கை கண்டும்
நாடுமெனத் தேவாசிரிய மண்டபமே யேகி
நற்றொண்டர் பெருமையெலாம் நயந்து பாட

ஏடெடுத்து இறையவனே கொடுத்த செய்கை
இனியவராம் சிவனடியார் பெருமை காட்டும்
பாடுகின்ற கவியுளத்தில் பதியும் போது
பரவசத்தில் ஆரூரைப் பணியும் நெஞ்சம்.

திருமூலட்டான திருக்கோயில் திருச்சுற் றுக்குள்
திருக்கோயில் பற்பலவும் திகழக் காண்போம்!
இருகரம் கூப்பித்தொழ நினைத்துக் குவிந்தகைகள்
இணைபிரியாது இருக்கும்நிலை தோன்றும் அங்கே
திருக்கோயில் திருக்குளமும் ஐயைந்து வேலி
செங்கழுநீர் ஓடையதும் ஐந்து வேலி
திருக்கோயில் தேர்அழகு தெருவும் நேர்த்தி!
தேவியரின் பீடமதில் ஆரூரும் ஒன்று.

நம்பியாரூரர், சேரமான் பெருமாள் தாமும்
நமிநந்தி, கலிக்காமர், கழற்சிங்க ரோடு
செம்மார்ந்த விறன்மிண்டர், தண்டியடிக ளாரும்
செருத்துணைவர் சோமாசி மாறற், பரவையாரும்
நம்பெருமாள் அனபாயன் அபயகுல சேகரன்
நல்ஞானி கமலை ஞானப் பிரகாசர்
செம்பொருளை விளக்கும்குரு 'ஞானசம் பந்தர்
திருவாரூர் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் ஆவார்.

தீராத காதலுடன் ஸ்ரீராமனைத் தன்இசையால்
சேவித்துப் புகழ்பெற்ற தியாகையர் தேன்கவியும்
ஆராஅமுதமென சியாமா சாஸ்திரியார் இசையும்
ஆனந்தக் கொடுமுடியாம் தீக்ஷிதரின் இசையும்
நேராக ஆரூரின் நிலைத்தபுகழ் பேசும்
நெஞ்சமது கனிந்துஇசை வெள்ளமதைப் பருகும்
ஆரூரின் பெருமையெலாம் எடுத்திங்கே இயம்ப
ஆயிரநா போதாது ஆதிசேடன் நானல்லேன்.

ஆரூரை வணங்கிடுவோம்!

கவிஞர். பெ. வேலு, தாரமங்கலம், சேலம்.

நீரோட்டப் பூமியான சோழ நாட்டு
நெல்நகராம் திருவாரூர் மேவும் ஈசர்
தேரோட்டப் பவனிவரும் தியாக ராசர்
திருக்கோவில் புனிதவிழா செய்யும் மாட்சி
பாராட்டத் தக்கதையா! குடமு ழுக்கைப்
பார்ப்பதற்குப் புண்ணியங்கள் செய்தல் வேண்டும்!
போராட்டப் பேருலகில் இன்னும் தெய்வப்
புனிதநினை விருப்பதால்தான் நிலைக்கின் றோம்நாம்! (1

தினம்புரியும் பூசைகளால் தெய்வத் தின்மேல்
தினம் சொரியும் பால்நெய்யால், உருகிநின்று
மனம்புரியும் வேண்டுதலால் நமது வாழ்வு
மகிழ்வடைய வேண்டும்! நாம் நம்மைப் பற்றித்
தினம் சொரியும் தினவுகளில் மகிழ்ச்சி கொண்டால்
சிந்தனைக்குள் உலகத்தை எவர்நி னைப்பர்?
தனம்புரியும் வாழ்க்கையிலே நாளும் நாளும்
தகராறும் சச்சரவும் மீதி யாகும்! (2

சாதலுக்குக் கொண்டுசெல்லும் மனித வாழ்வைச்
சாதனைக்குள் நிறுத்துவதே கடவுள் சிந்தை!
மோதலுக்குள் சிக்கவைக்கும் நெஞ்சத் திற்குள்
முள்நீக்கிக் களையெடுத்தல் இறைவன் வேலை!
தீதகற்றல் திருவார்ந்த பணிக்குள் சேர்த்தல்
தெய்வத்தைச் சிந்தித்தல் இவைதாம் தொண்டு!
ஆதலினால் திருக்கோவில் சமுதாயத்தின்
அலுவலகம்! அறிவியலோ புறவளர்ச்சி! (3

அண்டங்கள் புரண்டபடி இருக்கும்! இந்த
அகிலத்தில் அணுவுக்குள் உலகம் தோன்றும்!
கண்டங்கள் பலவிருந்தும் கண்க ளுக்கும்
காணாத பலகோள்கள் நெளிந்தி ருக்கும்!

பண்டங்கள் பார்க்கின்றோம், பார்த்தி ருந்தும்
பண்டத்திற் குள்ளாகப் பலவி ருக்கும்
துண்டங்கள் துரும்பாகும்! தூணாய் மாறும்,
தோற்றமெலாம் மாறுபடும் வெவ்வே றாகும்! (4)

இத்தனைக்கும் எங்கிருந்து ஆற்றல்? பெற்ற
இதயத்திற் குள்ளாக இன்னு மொன்று
சத்தமிட்டுக் கொண்டிருக்கக் கேட்கின் றோமே!
சத்தத்தின் தத்துவத்தை அறிவார் யாரோ?
கொத்துமலர்க் குள்ளாக குளிர்ச்சி வாசம்
கொடுத்தவர் யார்?தேடு கின்றோம்! தமிழகத்தில்
சித்தர்களும் முத்தர்களும் சொன்ன செய்தி
சித்தாந்த வேதாந்த தத்து வங்கள்! (5)

எந்த இடம், விஞ்ஞானம் நின்று மேலும்
எடுத்துவைக்கத் தெரியாமல் ஏங்கி நிற்கும்
அந்த இடம் தெய்வீகத் தொடக்க மாகும்!
அடிமனத்துக் குள்ளிருக்கும் உணர்வே மீண்டும்
சொந்த இடம் இதுவென்று கோவில் தேடும்!
சுற்றுமதில், கோபுரங்கள் தூப தீபச்
சந்த இசைப் பாடல்களின் மேலாய் நிற்கும்
சுந்தரனே தெய்வமெனும் உறவாய் நிற்கும்! (6)

முக்கோணத் தமிழகத்தில் மனதிற் குள்ளே
முடிச்சுவரா திருப்பதற்கு நாவுக் கீசர்,
தெக்கணத்து ஞானதீபம் காழி வள்ளல்,
திருவாரூர் மாப்பிள்ளை ஆலா லத்தார்
பக்குவமாய்ப் பிசைந்தெடுத்துக் கனிய வைக்கும்
பாடல் தந்த மாணிக்க வாசகத்தார்!
எக்காலம் நாம்செய்தோம் புண்ணி யங்கள்
இத்தனையும் நம்மருகே நம்மைக் காக்க. (7)

சிந்துகவிச் சுந்தரர்க்குப் பொன்கொ டுத்தும்
சிறப்புக்குப் பொருள்தந்தும், பரவை என்னும்
சந்தனத்து மேனியாளைச் சேர்த்தும், மேலும்
சமாதானம் செய்வதற்குத் தூது சென்றும்
வந்தவரே தியாகேசர்! அயனும் மாலும்
வடிவெடுத்துக் காணாத திருப்பா தத்தை
இந்தவூரின் தெருகண்டு களித்த தென்றால்
இதற்குப்பின் எச்சிறப்பை யாமு ரைப்போம்! (8)

சங்கீதக் கடல் பெருகித் திருவா ரூரில்
சலசலென ஒலிகொடுத்துத் திருவை யாற்றில்
சங்கமித்த சரித்திரத்தை, அறியார் யாரே!
திருத்தருமைப் பதிகளுக்குள் தெய்வம் வந்து
சிங்காரக் காட்சிதரத் தினம் விரும்பும்!
தெய்வீகத் திருநகரின் கோபு ரத்தைக்
கங்கையொடு காவிரியும் நனைக்கும் நாளில்
கண்குளிரத் தரிசிப்போம் வருவீர்! வாழ்க. (9.

தேரூரின் தலைமகன்

மக்கள் கவிஞர். அரு. நாகப்பன், காரைக்குடி.

பிட்டுக்கு மண்சுமந்த பெருமானை, மனையாட்டி
கட்டுக்குள் கைகட்டி நின்றானை, கணக்கின்றிப்
பிரம்படிகள் பெற்றானை, பேசும்திரு வாசகத்தில்
தரம்காத்து வாழ்வானை, தமிழ்காத்து ஆள்வானை,
இடுகாட்டில் கூத்தாடி இரவெல்லாம் அலைவானை,
இடும்பா வனத்தில் இறையாகிக் காப்பானை,
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பானைத்
தில்லைப் பெருமன்றில் திருநடனம் செய்வானை,
கங்கைத் தலையானைக் கருநீலம் உண்டானை,
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தானை,
பற்றெல்லாம் விட்டுப் பரதேசி ஆனானை,
கற்றைச் சடையானைக் கைலாய மலையானை,
சுடலைப் பொடியானைச் சுடுகாட்டில் கிடப்பானை,
கடலை நிகர்த்த கருணை மனத்தானை,
காளைக் கொடியானை கயற்கண்ணி அம்மையை
ஆளும் நாயகனை, ஆடலிலே வல்லானை,
ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தானை,
வானை அளந்தானை, வண்டமிழைக் காப்பானை,
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் விருப்பமுடன்
நல்லடியாய்ப் பெற்றானை, நச்சரவம் பூண்டானை,
நிலவுத் தலையானை, நீள்முடிகள் கலையானை,
கலைகள் வளர்ப்பானைக் கவிஞர்களை மதிப்பானை,
ஆரூரின் நாயகனை, அருள்மணக்கும் தயாபரனை,
தேரூரின் தலைமகனைத் தென்னவரின் இறையவனை,
சோம சுந்தரனைச் சுகமூட்டும் தூயவனைப்
பாமணக்கும் தமிழாலே பாடித் தொழுகின்றேன்

திருவாரூரில் சிவதரிசனம்

டாக்டர், உளுந்தூர்ப்பேட்டை, சண்முகம்.

வருவார் வளர்வார் ஒருநாள் மறைவார்
புரிவார் பலபோரே
இருக்கின்ற சிலநாள் எதற்கெனத் தெரியார்
உண்மை அறியாரே
திருவா ரூரில் தியாக ராசனார்
சென்றால் சொல்வாரே
குறுவிரல் பெருவிரல் குவித்து நீளனை
நினைத்திடு என்பாரே

கமலா லயம் சொல் லும்கதை இதுவே:
'மனிதா கடவுளை நினை' எனவே!

மலர்வது எல்லாம் உலர்வது ஆயினும்
மணந்திடல் வேண்டும் என்பார்!
மனிதனின் செயல்களே விளைவுகள்; பிறவிகள்
சுழலினை நீங்கு என்பார்!
அசபா நடனம் ஆடத் தெரிந்தால்
கவலைகள் இல்லை என்பார்!
இரத்தினசிம் மாசனம் இராச ராசனாய்
அமர்ந்தே அருள் புரிவார்!

பூங்கோயில் போடும் புதிர் இதுவே;
'நீங்காது கடவுளை நினை' எனவே!

வன்மீகன் சொல்வதும் ஆன்மீகம்!
மனுநீதி காட்டும் தெய்வீகம்
கமலாம் பிகைத்தாய் தவக்கோலம்!
காண்பது நமக்குப் பெரும் யோகம்!
முருகன் தொடரும் நீலோத்பலா!
பெரிய தேரின் அழகு உலா;
நிலையாமை காட்டும் ஞான நிலம்!
புவியின் பெருமை நாட்டும் தலம்!

ஆரூர்த் தேவன் வாழ்க என்போம்!
அம்மைஅப் பன் நமைக் காக்க என்போம்!

நடந்த மேன்மை

பொற்கிழிக் கவிஞர், டாக்டர்.ச. சவகர்லால், எம். ஏ. பிடி., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர், ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்-623 211

தேடுவார் சிந்தை யுள்ளும்
தினந்தொறும் தமைம றந்தே
நாடுவார் கருத்தி னுள்ளும்
நடந்திடும் பெம்மான், நெஞ்சுங்
கூடிடப் பரவைக் காகக்
கால்மலர் தெருவிற் பாவ
ஓடிய விந்தை யென்னே?
ஒருத்தியின் தவம்தான் என்னே?

சுந்தரர் நண்ப ரானார்!
சொன்னதைச் சிவனும் கேட்டார்!
தந்திர மொன்று மில்லை!
சாற்றியே குழைவித் தோதும்
மந்திர மொன்று மில்லை!
மயக்கமே யின்றித் தோழர்
சொந்தமே அனைய அண்ணல்
தூதனா யானா ரன்றோ?

தெருவது செய்த பேறு
செகத்தினில் யாரே செய்தார்?
பெரியவன் மாய னந்தப்
பிரமனுந் தேடி நைந்தும்
அறிந்திட வொண்ணாப் பாதம்
அழகுற நடந்த தென்றால்
சிறந்திடும் ஆரூர் வீதி
செய்தவம் என்னே! என்னே!!

ஒருவரை யொருவ ரோடும்
ஒன்றெனச் சேர்க்க மண்ணில்
தெரிந்தவர் முயல்வ துண்டு;
தரையினி லறிந்த உண்மை!

ஒருவரு மறியொ ணாத
　　ஒப்பிலி தெருவில் வந்தே
இருமுறை நடந்தா னென்றால்
　　இருவரின் தவம்தா னென்னே!

சுந்தரர் நட்புக் கண்டா?
　　தூய்மையில் விளைந்து பூத்த
சுந்தரி பரவை யார்தம்
　　தொழுகுல மேன்மை கண்டா?
எந்தவோர் மயக்கத் தாலே
　　இறைவனார் தெருந டந்தார்?
அந்தவோர் மயக்கம் கண்டால்
　　அடியவர் பதம்பெ றாரா?

அன்பினை அறிவி னோடே
　　அணைந்திடச் செய்தற் காக
என்பினைப் பூண்ட மேலோன்
　　இருமுறை நடந்தான் மண்ணில்!
அன்பெனுந் கொடிதான் தாவி
　　அறிவினைப் படர வாங்கே
இன்பமே மலரக் கண்டோம்!
　　இஃதவன் நடந்த மேன்மை!

—※—

பரவையார்

செல்வி. வீ.ச. திலகவதி, எம். ஏ., எம். ஃபில்., குற்றாலம்.

கயிலையில் இருந்த
கமலினியே!
ஆரூரில்
அவதரித்த அம்மையே!
அன்று
கயிலையிலே
பார்வதிக்காகப்
பூக்கொய்யும்
தொண்டு செய்தாய்!
ஆம்!
பூ உலகில்
பணி செய்தாய்
என்பதற்காகப்
பூ உலகில்
[பூமியிலே]
அவதரித்தாய்!
ஆரூர் ஆலயத்தில்
சுந்தரரைக் கண்டாய்
சொந்தமாகக் கொண்டாய்!
அன்று
மலர் பறிக்கும்
நேரத்திலே
உன்
மனம் பறித்துக்
கொண்டவரை
மனம் பதித்துக்
கொண்டவரை
இன்று
மணம் பதித்துக்
கொண்டவளே!
சித்திரைக்கு
முதல்மாதம்
(பங்குனி)
உத்திரத் திருநாளில்
அடியார்க்கு
உணவு மட்டுமா
அளித்தாய்!
பொன்னென்றும்
பொருளென்றும்
இன்னும் பல
கொடுத்தாயே!
கொடுத்த தாயே!
உன் கணவர்
இறைவனிடம்
பொன்கேட்டார்
என்பதெல்லாம்
உந்தன்
பூமேனியைப்
பொன்மேனியாக்கிடவா?
இல்லை! இல்லை!
உன் பூக்கரங்கள்
மட்டும்
கொடுத்துக் கொடுத்துப்
பொன்கரங்கள்
ஆயிற்று!
பதமாக
நீயிருந்த
காரணத்தால்
பரவையே நீ
பகாப் பதமாய்
வாழ்ந்திருந்தாய்!
ஆம்;
உன் கணவரை விட்டுப்
பிரியாமல் வாழ்ந்திருந்தாய்.
அவரோ
சங்கிலியின்

பதம் (சொல்) கேட்டு
அங்கேயே தங்கியதால்
பகுபதமாய் ஆகிவிட்டாய்!
ஆம்;
பிரிந்துவிட்டாய்!
சங்கிலியெனும்
காரிகையை
'இடைநிலை' யாய்ச்
'சந்தித்த'த்த
காரணத்தால்
'பகுதி' யான
உனைவிட்டு
'விகுதி' யாக
அவளை
நாடிச்சென்றார்.
இது
'வி (வ) காரமன்றோ?
இறைவன்
உன் கணவர்க்கு
இரண்டு தாரம்
கொடுத்ததனால்
தூதுவந்த
இறைவனை நீ
இரண்டு தரம்
அலையவிட்டாயோ?
திருவடி தோயுமாறு
தெரு 'அடி' யெடுத்து வைத்த
வீதிவிடங்கனையே
வினாத்தொடுத்த
வித்தகியே!
உத்தமியே!

தோழனுக்காக
வந்தவனுக்கு
தோல்வியையா
தந்திடுவாய்?
இரவிலே வந்து
இரந்து நின்றவன்
இறைவன் என்பதால்
இரங்கி விட்டாய்!
உன் புலவிதனைக்
கைவிட்டாய்!
உன்கணவனின்
கை சேர்ந்தாய்!
இதயத்தேர்
பிரிந்ததனால்
உன்
இல்லறத்தேர்
அன்று
இழுக்காமல்
கிடந்தது.
அதனால் தானோ
என்னவோ
திருவாரூர்த் தேர்கூட
அன்று
அசைவதற்கு
மறுத்தது?
பார் புகழும்
பரவையே!
உன் பெருமை
பரவையினும்
(கடலினும்)
பெரிதம்மா!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான அருள்மிகு கம்பகரேசுவரசுவாமி திருக்கோயில் - திருபுவனம்.

கும்பகோணத்திற்குக் கிழக்கே, சிதம்பரம் - கும்பகோணம் சாலையில், சோழர் திருப்பணிச் சிறப்புடன் விளங்குவது இத்திருக்கோயில். தஞ்சை, தாராசுரம், கங்கைகொண்ட சோழபுரம் முதலிய சோழர் கற்றளிகளை ஒட்டிய பாங்கில் விளங்கும் வரலாற்றுப் புகழ் மிக்கது திருபுவனம் திருக்கோயில். தருமையாதீன 27 திருக்கோயில்களுள் ஒன்றாக விளங்குவது.

இறைவன் கம்பகரேசுவரனாக நடுக்கம் தீர்த்த நாயகனாக; இறைவி - அறம் வளர்த்த நாயகியாக விளங்கும் திருத்தலம். இரணியனுடைய உதிரத்தை உண்ட நரசிம்மரது மதிமயக்கத்தை சரபப் பறவை வடிவம் கொண்டு இறைவன் மாற்றிய கோலமே ஸ்ரீசரபமூர்த்தி. இவரை வழிபட்டு இருமைப் பயன்களையும் எய்துவோர் பலராவர்.

முதலாம் இராசராசனின் வழிவந்த மூன்றாம் குலோத்துங்கன் கட்டிய திருக்கோயில் இது. ஏழு கல்வெட்டுக்களும் எண்ணற்ற சிற்பங்களும் உள்ளன. கந்தர்வ கன்னியர் பரதநாட்டியக் கோலங்கள், இராமாயணச் சிற்பங்கள் முதலியன குறிப்பிடத்தக்க சிற்பங்களாக விளங்குகின்றன.

வரலாற்றுப் பெருமையும், மூர்த்தி தலப் பெருமையும் உடைய திருபுவனம் திருத்தலத்திற்கு வருக! இதன் கலையழகிலும், சிற்ப எழிலிலும் ஈடுபட்டு இன்புறுக! என்று அருள் மணக்கும் இத்திருத்தலம் அன்பர்களை அழைக்கின்றது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான அருள்மிகு அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயில் - திருக்கடவூர்.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள திருக்கடவூர் மயிலாடுதுறை - தரங்கம்பாடி புகைவண்டிப் பாதையில் உள்ளது. தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோயில்களுள் சிறப்பு மிக்க ஒன்று.

இறைவன் அமிர்தகடேசுவரனாக, இறைவி அபிராமியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்கள். அபிராமி பட்டர், அபிராமி அந்தாதி பாடித் தொழுத சிறப்புடையது. மூவர் பாடல் பெற்ற முதன்மை உடையது. மார்க்கண்டேயர் வழிபட்டு, இயமனை வென்ற தலம். பெருமானின் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாக விளங்குவது. கால சங்காரக் கடவுளாக - கால காலனாகப் பெருமான் விளங்கித் தன்னை இங்கே வந்து வழிபடுவோர்க்கு நீடிய வாழ் நாளும், செல்வமும் வழங்குகின்றான். ஆண்டில் பதினொருமுறை திருமஞ்சனம் இந்தப் பெருமானுக்கு. ஆண்டிற்கு ஒருமுறை தான் திருவீதிக்கு எழுந்தருள்வார். சித்திரைப் பெருவிழாவில் ஆறாம் நாளில் நடக்கும் காலசங்காரம் புகழ் பெற்ற திருவிழா. நாடெங்கிலுமிருந்து திரளான மக்கள் கண்டு இருமைப் பயன்களும் எய்துவர்.

ஐம்பத்துநான்கு கல்வெட்டுக்கள் பிரகாரம், கருப்பக் கிரகச் சுவர்களில் உள்ளன. சோழர் கால ஆட்சி பற்றி பல்வேறு செய்திகள் இக்கல்வெட்டுகளினின்று விளக்கம் அடைகின்றன. இவ்வகையில் வரலாற்று முக்கியத்துவமும் பெற்றுள்ளது. இன்றும் அபிராமி அந்தாதி ஓதி இருமைப்பயன்கள் எய்துவோர் பலர். இங்கு வந்து சஷ்டியப்த பூர்த்தி செய்து கொண்டு மரண பயம் நீங்கப் பெறுதல் கண்கூடான உண்மை.

காலகாலன் கழலடி பரவிட வாரீர்,

அபிராமியம்மை அருள்மணம் பெற வாரீர்!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்கு சொந்தமான

அருள்மிகு சட்டைநாதசுவாமி திருக்கோயில்-சீர்காழி

தஞ்சை மாவட்ட சீர்காழி வட்டத் தலைநகராக விளங்கும் இத்திருத் தலம் தருமையாதீனத்தின் இருபத்தேழு திருக்கோவில்களுள் ஒன்று.

சமயாசாரியர்களில் முதல்வராகிய திருஞானசம்பந்தர் அவதாரத்தலம் இது. இங்குள்ள பிரமதீர்த்தக் கரையில் தான் திருஞானசம்பந்தர் 'தோடுடைய செவியன்' என்று உலகம் உய்யத் திருப்பதிகம் பாடத் தொடங்கினார்.

இறைவன் பிரமபுரீசனாக இறைவி திருநிலை நாயகியாக எழுந்தருளி யுள்ள இத்தலம் மூர்த்திதலத் தீர்த்தச் சிறப்பு மிக்க முதன்மையும் உடையது.

தோணிபுரத்தில் உமாமகேசுவரனாக பெரியநாயகர் பெரிய நாயகியுடன் வீற்றிருக்கின்றார். மகாவிஷ்ணுவின் தோலைச் சட்டையாகப் போர்த்திய சட்டை நாதர் திருமேனி சிறப்புடையது.

கோயில் வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்தது. திருமுலைப்பால் உற்சவம் முதலிய சிறப்பு விழாக்களும் உண்டு.

சேரவாரீர்! சீகாழியை வழிபட்டு சட்டைநாதர் திருவடி பரவுவீர்! நலம் பல பெறுவீர்!!!

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்துக்குச் சொந்தமான

அருள்மிகு பஞ்சநதீசுவரசுவாமி திருக்கோவில் திருவையாறு

தென் கயிலாயக் காட்சியைத் திருநாவுக்கரசு சுவாமிகட்குக் காட்டி யருளிய திருத்தலம். இவ்வருட் பெருந்தலம். பழமையும், திருவருள் நலமும் உடைய உயர் தலம். மூர்த்தி தலத் தீர்த்தச் சிறப்புடைய தலம். தட்சிண கைலாயம், உத்தர கைலாயம், தண்டபாணிக் கோயில் முதலிய சுற்றுக் கோயில்களாக விளங்குகின்றன.

இறைவன் ஐயாறப்பனாக, பஞ்சநதீசுவரனாக, இறைவி அறம் வளர்த்த நாயகியாக எழுந்தருளியுள்ளார்கள். தெற்குக் கோபுரத்தையடுத்து வடபால் ஆட்கொண்டார் சந்நதியில் எப்போதும் குங்குலியம் புகைந்து கொண்டே யிருக்கும்; வீரவடிவம்; எமனை சங்காரம் செய்த இவர் வழிபடுவோர் துன்பம் துடைத்து நல்லருள் வழங்குகின்றார்.

சித்திரை மாதப் பெருவிழாவில் சப்தஸ்தானம் எனப்படும் 'ஏழூர்த் திரு விழா' மிகச் சிறப்புடையதாகும். மாதந்தோறும் அமாவாசை விஷு புண்ணிய காலங்களில் ஐயாரறப்பர் திருவீதிக்கெழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருள்வார்.

தருமையாதீனத்தின் 27 திருக்கோயில்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது இது. எழுபதிற்கு மேற்பட்ட சோழர்காலக் கல்வெட்டுக்கள் உள்ள இத்திருக் கோயில் வரலாற்றுக் கருவூலம். தெய்வீகப் பாசுறை. நால்வர் பாடலும் பெற்ற நற்றமிழ்த் தலம். வழிபட வாரீர்; இருமை பயனும் எய்துவீர்.

அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பரங்குன்றம்

முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் ஆறுபடை வீடுகளில் இது முதலாம் படைவீடு. தண்ணார் தமிழளிக்கும் தன் பாண்டி நாட்டின் பாடல் பெற்ற சிவத்தலங்கள் பதினான்கில் இதுவும் ஒன்றாகும். மதுரை மாநகரி லிருந்து தென்மேற்கில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இக்கோயில்நகர் சென்னை, கன்யாகுமரி நெடுஞ்சாலையில் செல்வோரைக் கவர்ந்தீர்க்கும் எழிலார்ந்த திருநகர். புகைவண்டி நிலையம் உள்ளது. மதுரையிலிருந்து நகர் பேருந்துகளும் உண்டு.

குகைக்கோயிலாம் இக்கோயிலின் கருவறையில் வடக்கு நோக்கி மத்தி யில் துர்கையும் கீழ்ப்பகுதியில் முருகப்பெருமான் தெய்வயானைத் திருமணக் கோலத்துடனும், மேல் பகுதியில் கற்பக விநாயகரும், பவளக்கனிவாய்ப் பெருமாள் கிழக்கு நோக்கியும், சத்யகிரீசுவரர் சிவலிங்கமாய் மேற்கு நோக்கி காட்சிதருவதும் கண்கொள்ளா காட்சியாகும். இங்கு வீற்றிருக்கும் பெருமாளே மதுரை மீனாட்சி அம்மனுக்கு திருமணத்தின் போது தாரைவார்த்து தருவதற்காக முருகப்பெருமானுடன் மீனாட்சி திருமணத்திற்கு உலாவாக செல்வது தனிச் சிறப்பு.

சமயக்குரவர்களாம் திருஞானசம்பந்தராலும், சுந்தரராலும் பாடப்பெற்ற திருத்தலம். அருணகிரிநாதரும் நக்கீரரும் முருகப்பெருமானைப் பாடியுள்ளனர்.

தீர்த்தங்கள் :- இலக்குமி தீர்த்தம், சரவணப் பொய்கை, சத்திய கூபம், பிரமகூபம், மலையின் மீது சரவண தீர்த்தம் மற்றும் காசிச் சுனை ஆகியவை களாகும்.

1050 அடி உயரம் கொண்ட மலையில் காசிவிசுவநாதர் திருக்கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயில் அமைந்துள்ள சூழல் எழிலார்ந்த அற்புத மான காட்சியாகும்.

இத்திருக்கோயிலில் அன்றாடம் காலை 5-30 மணி முதல் இரவு 9-30 மணி வரை ஆறுகால பூஜை நடைபெறுகின்றது.

விழாக்கள் :- பங்குனிப் பெருந்திருவிழாவுடன் கந்த சஷ்டி, கார்த்திகை தீபம், வைகாசி விசாகம் ஆகிய விழாக்கள் விமரிசையாக நிகழ்கின்றன.

சமூகப் பணி :- மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், சித்த மருத்துவ மனையும் ஆதரவற்ற வயோதிக தாய்க்குலங்களைக் காக்கும் முதியோர் இல்லமும், திருமண மண்டபம், தங்கும் விடுதி ஆகியவைகள் திருக்கோயிலால் நிர்வகிக்கப்படுகின்றன.

வேண்டுவோர்க்கு வேண்டுவன நல்கும் முருகப்பெருமானை அனை வரும் தரிசித்து பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

ப. கிருஷ்ணசாமி
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

துரை. இராமச்சந்திரன், B.A. B.L.
துணை ஆணையர்/தக்கார்

நன்கொடைத் திருப்பணி செய்தோர் விவரம்

	நன்கொடையாளர் பெயர் முகவரி	வேலை	மதிப்பு
1	திரு V.R.N. செல்வமணி வகையரு, திருவாரூர்	கமலாலய திருக்குளத்தின் நடுவில் அமைந்துள்ள அருள்மிகு நாகநாத சுவாமி ஆலய திருப்பணி	75,000
2	1) V.K.M. எண்டர்பிரைசஸ், திருவாரூர் 2) முத்து சைக்கிள் மார்ட், விஜயபுரம், திருவாரூர் 3) நடராஜா மெஸ், விஜயபுரம், திருவாரூர் 4) திரு அருணாசலம், உர வியாபாரம், திருவாரூர் 5) திரு ராஜன், உடற்கல்வி ஆசிரியர், ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவாரூர் 6) திரு ராஜ்குமார், வழக்கறிஞர், திருவாரூர் 7) திரு குஞ்சுபிள்ளை, மிராசுதாரர், புலிவலம் 8) துரை. திருஞானம், உரிமையாளர் திருவேணி ஒயின்ஸ், தஞ்சாவூர்	இரண்டாம் பிரகாரத்தில் உள்ள ஏழு விமானங்களுக்கு வண்ணம் தீட்டுதல் மற்றும் அருள்மிகு பார்வதீஸ்வர சுவாமி ஆலய விமானம் வண்ணம் தீட்டுதல்	18,500
3	அறுபத்துமூவர் வழிபாட்டு குழுவினர், திருவாரூர்	அறுபத்தி மூவர் சன்னதி வேலைகள்	8,000
4	திரு கோபால் முதலியார், தைலா சில்க்ஸ், கரூர்	அறுபத்து மூவர் பெயர், நட்சத்திரம் ஆகியவற்றினை கல்வெட்டில் பதித்தல்	12,000
5		கமலாலய கீழ்புறம் 13 விமானங்கள் வண்ணம் தீட்டுதல்	16,000
6	திரு N. தியாகராசய்யர், முன்னாள் காசாளர், அருள்மிகு தியாகராச சுவாமி திருக்கோயில், திருவாரூர்	சகஸ்ரலிங்க விமானம் பழுது பார்த்தல்	1,000

நன்கொடைத் திருப்பணி செய்தோர் விவரம்

	நன்கொடையாளர் பெயர் முகவரி		வேலை	மதிப்பு
1	திருப்பெருந்திரு சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தருமையாதீனம் 26வது குருமகா சன்னிதானம்	1)	தெற்கு ராஜகோபுரம்	1,45,000
		2)	சித்தீஸ்வரம் மற்றும் மேதாதெட்சிணாமூர்த்தி	15,000
		3)	ராஜன் கட்டளை மண்டபம்	10,000
		4)	தெற்கு கோபுரத்தில் புதிய செப்பு கலசங்கள் புதியது செய்து பொருத்தியது	40,000
		5)	ஸ்ரீபரவை நாச்சியார் உற்சவ விக்ரகம் செய்து வழங்குதல்	3,000
2	திரு ராம. சோமசுந்தரம் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் கருங்கல் விற்ற பணம்		மேலராஜ கோபுரம்	3,75,000
3	திரு R.M.P.R. சிங்காரவேலு முதலியார் & திரு பி. ஆர். எம். நாகராஜன்		அருள்மிகு அசலேஸ்வரர் சன்னதி	45,000
4	திரு மு. ரா. ரகுபதி, மு ரா. சன்ஸ், ஜவுளி வியாபாரம், திருவாரூர்	1)	அருள்மிகு தியாகராஜ சுவாமி சன்னதி	16,000
		2)	அருள்மிகு மகாலெட்சுமி சன்னதி	5,000
		3)	கீழ இரண்டாம் கோபுரம் வெளியில் உள்ள ஸ்ரீவினாயகர் சன்னதி	4,000
5	திரு ஏ. டி. ஜெயவீரபாண்டிய நாடார், நாகை		அருள்மிகு வன்மீக நாதர் சன்னதி	35,000
6	திரு ஏ. கோவிந்தராசன் வகையறா	1)	அருள்மிகு நீலோத்பலாம்பாள் சன்னதி	22,000
		2)	கீழக் கோபுரம் வெளியில் உள்ள அருள்மிகு வினாயகர் மற்றும் அருள்மிகு சுப்பிரமணியர் சன்னதி	8,000
7	திரு எம். ராமசாமி முதலியார், மடப்புரம்	1)	முதல் பிரகாரம் சுற்றுச்சுவர் மீது உள்ள பொம்மைகளுக்கு வர்ணம் தீட்டுதல்	
		2)	இரண்டாம் பிரகாரத்தில் உள்ள ஏழு விமானங்களுக்கு வர்ணம் தீட்டுதல்	30,000
		3)	அருள்மிகு நீலோத்பலாம்பாள் சன்னதியில் உள்ள ஓவியங்களுக்கு வர்ணம் தீட்டுதல்	
8	ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், பொன் விழா அறக்கட்டளை, ஸ்ரீமடம் காஞ்சீபுரம்		அருள்மிகு கமலாம்பாள் விமானம்	10,000

9	திரு வி. ஆர். கோபாலன், வழக்கறிஞர் சென்னை & திருமதி அனுராதா கோபாலன் சென்னை	1) அருள்மிகு கமலாம்பாள் சன்னதியில் நவாவரண கீர்த்தனைகள் சலவைக் கல்லில் எழுதப்பட்டு பொருத்தியது 2) அருள்மிகு கமலாம்பாள் சன்னதி வேலைகள் 3) அருள்மிகு கமலாம்பாள் சன்னதியில் மின்சார பணிகள் செய்தது 4) அருள்மிகு தியாகராஜ சன்னதி மகாமண்டபம் வர்ணம் தீட்டுதல் 5) அருள்மிகு தியாகராஜ சுவாமி சன்னதி அர்த்த மண்டபம் சுத்தம் செய்தல் 6) அருள்மிகு கமலாம்பாள் கோபுரம் வர்ணம் தீட்டுதல் சுமார் ரூ	75,000
10	திரு ஜி ராமகிருஷ்ணன், சிங்கப்பூர்	அருள்மிகு எரிசனக் கொற்றவை சன்னதி	8,000
11	திரு அய்யாக்கண்ணு பத்தர் வகையறா	அருள்மிகு விஸ்கர்மேஸ்வரர் சன்னதி	10,000
12	திரு க, சுப்பிரமணியன், திருப்புங்கூர்	1) முதல் பிரகாரத்தில் உள்ள அருள்மிகு வாதாபி விநாயகர் விமானம் முதல் பிரகாரத்தில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியர் விமானம் ஆகியவைகள் புதிதாகக் கட்டுதல்	10,000
13	திருமதி உமா தென்கோவன், திருவாரூர்	சேக்கிழார் உற்சவர் விக்கிரகம் மற்றும் பிலா விக்ரகம் புதிதாக பிரதிஷ்டை செய்தது	5,000
14	திரு பி.கே. ஈஸ்வர கவுண்டர் குடும்பத்தினர்	சந்தானச்சாரியார் நால்வர் சிலைகளை புதிதாக பிரதிஷ்டை செய்தது	7,5000
15	வி. ஆர் & சன்ஸ், விஜயபுரம்	வடக்கு கோபுரம் ஸ்னோசெம் வைத்தல்	15,000
16	திரு பொன் குமரேசன், திருவாரூர்	வீதிவிடங்கர் வினாயகர் சன்னதி	5,000
17	திரு ஏ. கோவிந்தராஜ பிள்ளை, சிங்கப்பூர்	சப்த மாதர் சன்னதி	3,500
18	பெயர் விரும்பாப் பெருந்தகை ஒருவர்	சண்டிகேஸ்வரர் சன்னதி	4,000
19	திரு டி.எஸ்.எம். கங்காதர முதலியார் மடப்புறம்	அருள்மிகு வல்லபை கணபதி	3,000
20	திரு கோபால் முதலியார், தைலா சில்க்ஸ் திருச்சி	அறுபத்துமூவர் சன்னதி	20,000
21	திரு ராஜ்குமார், திருவாரூர்	மகிஷாசுரமர்த்தனி	2,500
22	நிர்வாக இயக்குனர் ராம்ராஜ், அக்ரோ இண்டஸ்ட்ரீஸ், திருவாரூர்	கல்தேரடி வினாயகர் சன்னதி	2,000
23	திரு ஆரூரான் நற்பணி மன்றம், திருவாரூர்	ஒட்டு தியாகேசர் சன்னதி	2,000
24	வெங்கடேஸ்வரா ரேடியோ & எலக்டிரிக்ஸ்	அருள்மிகு சுப்ரமணியசுவாமி சந்நிதி உள்வேலைகள்	1,500

திருப்பணிக்கு ரொக்கமாக நன்கொடை வழங்கியோர் பட்டியல்

(ரூ. 250/-ம், அதற்கு மேலும் வழங்கியோர் மட்டும்)

1	திருவாரூர் திருக்கோயில் திருப்பணிக்கு அரசு மான்யம் பெற்றது	8 50,000
2	கமலாலயத்திருக்குளத்திற்கு அரசு மான்யம் பெற்றது	3,70,000
3	ஸ்ரீஸ்ரீ ஜகத்குரு பாரதிதீர்த்த சங்கராச்சாரியார் சுவாமிகள், சாரதா பீடம், சிருங்கேரி	11,115
4	திரு சிங்காரம் அய்யர் & திருமதி கமலாம்பாள் 5, நடவாகனத்தெரு, திருவாரூர்	11,000
5	வி. ஆர். & சன்ஸ், மரவாடி, திருவாரூர்	5,000
6	திரு கே. எஸ். குமாரசாமி முதலியார் & சன்ஸ், ஜவுளி வியாபாரம், திருவாரூர்	5,000
7	திரு ஆர். ரெங்கநாதன் & சன்ஸ், திருவாரூர்	5,000
8	திரு கல்யாணராமய்யர், கமலாலய வடகரை, திருவாரூர்	5,000
9	டி. வி. ஆர். ராமலிங்கம் பிள்ளை & சன்ஸ், திருவாரூர்	4,000
10	திரு கணேச முதலியார், ஆரூரான் டெக்ஸ்டைல்ஸ், திருவாரூர்	3,000
11	திரு கோவிந்தசாமி பிள்ளை, மலேசியா	2,000
12	திரு சிவராஜ், ஜெனரல் மார்ச்சன்ட், திருவாரூர்	2,000
13	கருணாநிதி & கோ, திருவாரூர்	2,000
14	என். எஸ். அண்ணாமலை செட்டியார் & கோ, திருவாரூர்	2,000
15	வி. எஸ். கே. கணபதி செட்டியார் & சன்ஸ், திருவாரூர்	2,000
16	திருமதி எஸ். அலமேலு அம்மாள், நாகை ரோடு, திருவாரூர்	2,000
17	சக்தி டிம்பர் டெப்போ, திருவாரூர்	2,000
18	திரு கோவிந்தசாமி செட்டியார், இரும்பு வியாபாரம், திருவாரூர்	2,000
19	திரு ஜெகநாத உடையார் நெல், அரிசி, வியாபாரம், திருவாரூர்	2,000
20	முருகன் & பிரதர்ஸ், மார்க்கட் தெரு, திருவாரூர்	2,000
21	திரு வி. வி. பி. துரைசாமி செட்டியார், திருவாரூர்	2,000
22	திரு ஜி. ஆர். தியாகராசன், திருவாரூர்	1,500
23	திரு என். ராமமூர்த்தி, பம்பாய்	1,250
24	திரு வீரேந்திரகுமார், ஆக்ரா	1,000
25	திரு பி. பி. பட்வாரி, முன்னாள் தமிழக ஆளுநர், அகமதாபாத்	1,000
26	திரு ஜெயராமன், யுனைடெட் இந்தியா காபி ஒர்க்ஸ் திருவாரூர்	1,000
27	திரு பி. வி. வஹாப், ராஜா தெரு, திருவாரூர்	1,000
28	திரு நடேச செட்டியார், விஜயபுரம், திருவாரூர்	1,000
29	என். எஸ். அண்ணாமலை செட்டியார் & சன்ஸ் இரும்பு & பெயிண்ட் வியாபாரம், திருவாரூர்	1,000
30	சக்தி டிம்பர் டெப்போ, பனகல் ரோடு திருவாரூர்	1,000
31	திரு எஸ். எஸ். சதாசிவம் & பிரதர்ஸ், சரண்டப்பூர்	1,000

32	திரு வி.கே.எஸ். கணபதி செட்டியார், மளிகை, திருவாரூர்	1,000
33	திரு பி. குழந்தைவேலு செட்டியார், விஜயபுரம், திருவாரூர்	1,000
34	திரு ஆர்எம்.வி.ஆர்.ஆர்.எம். ராமனுத செட்டியார் குமரக்கோயில் தெரு, திருவாரூர்	1,000
35	திரு ஜி. ராமகிருஷ்ணன், வழக்கறிஞர், திருவாரூர்	1,000
36	திருமதி ஜெகதாம்பாள், நீலா வடக்கு தெரு, நாகப்பட்டினம் (1000+500+250)	1,750
37	திரு ஜி. சுப்பிரமணியன், இரும்பு வியாபரம். திருவாரூர்	1,000
38	திரு பி. கோவிந்தராஜ் உடையார், விஜயபுரம், திருவாரூர்	1,000
39	திரு டி.ஆர். கனகரெத்தனம் பிள்ளை, அரசர்குளம் தெரு, திருவாரூர்	1,000
40	திரு எஸ். சலீம்,அதிரை டிரேடிங் கம்பெனி, திருவாரூர்	1,000
41	திரு சி. சந்திரன், அரசன்குளம் தெரு. திருவாரூர்	1,000
42	திரு டி. தெட்சிணாமூர்த்தி சீ கோ, விஜயபுரம், திருவாரூர்	1,000
43	திரு பி. சோமசுந்தரம் செட்டியார், நெல், அரிசி வியாபாரம், திருவாரூர்	1,000
44	திரு ஆர். கணேசன், நெல், அரிசி, வியாபாரம், திருவாரூர்	1,000
45	ஸ்ரீ லெட்சுமி சீ கோ, நெல், அரிசி, வியாபாரம், திருவாரூர்	1,000
46	வி.கே.எம். ஜெயராமன் சீ வி.கே.எம். ராதாகிருஷ்ணன், 44,45 வி.ஆர்.எம் ரோடு, திருவாரூர்	1,000
47	திரு எம்.பி. ஜனார்த்தனன், நெல், அரிசி, வியாபாரம், வி.ஆர்.எம். ரோடு, திருவாரூர்	1,250
48	பி.எம்ஏ. அகமத்காதர் சீ கோ, திருவாரூர்	1,000
49	தலைவர், தெப்ப உற்சவ வழிபாட்டு கமிட்டி மாரியம்மன் கோயில், தஞ்சாவூர் (1000, 250)	1,250
50	முருக பெருமான்	1,001
51	திரு ரெத்தினம், கோயம்புத்தூர்	1095-95
52	திருமதி இ.எஸ். ஹனிபாபீவி, விஜயபுரம்	1,000
53	திரு சக்திவேல்	1,000
54	திரு கே.எஸ். ராமசாமி, பி.ஏ.பி.எல்., கூகலூர்	1,000
55	திரு முருகப்பா சீ கோ, ஈஸ்வரன் கோயில், தெரு, ஈரோடு - 1	500
56	ஸ்ரீகைலாசம், தமிழ்வித்வான், அரசு உயர்நிலைப்பள்ளி முத்தூர், ஈரோடு	500
57	ஸ்ரீ கோபால்சாமி, திருவாரூர்	500
58	திரு வி. ராகவன் 35 நீலா வடக்கு தெரு, நாகப்பட்டினம்	500
59	திரு எஸ்.எம். சீனிவாசன், கவுண்டப்பர், கோபிவட்டம், பெரியார்மாவட்டம்	500
60	திரு சாம்பசிவம் நகர்மன்றத் தலைவர் திருவாரூர்	500
61	டாக்டர் திருநாவுக்கரசு, தெற்கு வீதி, திருவாரூர்	500
62	டாக்டர் திருமதி சந்திராசக்ரபாணி, தெற்கு வீதி திருவாரூர்	500
63	டாக்டர் திரு வி. ஆறுமுகம், தெற்கு வீதி திருவாரூர்	500
64	திரு எஸ். தெட்சிணாமூர்த்தி, திருவாரூர்	500

65	திரு தனக்கண்ணு, மேலாளர், தமிழ்நாடு சிவில் சப்ளை கார்ப்பரேசன், திருவாரூர்	500
66	திரு எஸ். பாபுராவ், 9 ஏ, சாரதாம்பாள் காலனி, ராஜா தெரு, திருவாரூர்	500
67	திரு ஆர். ஜெயராமன், நெல்வியாபாரம், 25சி, வி.ஆர்.எம். ரோடு, திருவாரூர்	500
68	திரு ஆர். ராமநாதன், பாரத்காபி ஒர்க்ஸ், திருவாரூர்	1,500
69	டாக்டர் திருமதி சரோஜினி, குமரக்கோயில் தெரு, திருவாரூர்	500
70	ஸ்ரீவெங்கடேஸ்வரா நர்சிங் ஹோம், சுவாமி மடத்தெரு, திருவாரூர்	500
71	திரு எஸ். வைத்யநாதன், வடக்கு கோபுர வாசல், திருவாரூர்	500
72	திரு ஆர். ராமதாஸ், பாரத் காபி ஒர்க்ஸ், திருவாரூர்	500
73	திரு பாலகணேசன், பார்வதிபுரம். நாகர்கோயில்,	500
74	டாக்டர் திருமதி பத்மா நம்மாழ்வார், நன்னிலம்	500
75	திரு வி. வெங்கட்ராமய்யர், ஆதமங்கலம்	500
76	திரு ஏ. தியாகராசன், ஆதமங்கலம்	500
77	திரு வி.எஸ். கோபாலய்யர், திருவாரூர்	500
78	திரு டி. பாலசுப்பிரமணியன், வழக்கறிஞர், துர்க்காலயா ரோடு, திருவாரூர்	500
79	திரு பொன். குமரேசன், திருவாரூர்	501
80	திருமதி உமா சங்கரி, ஹைதராபாத்	501
81	திரு முருகையன் சகோதரர்கள், தண்டலை	500
82	ஆணையர், திருவாரூர் ஊராட்சி ஒன்றியம், திருவாரூர்	750
83	திருமதி கே. சுலோச்சனா, க/பெ. கண்ணய்யா, சுவாமி மடத்தெரு, திருவாரூர்	750
84	ஏ.ஆர்.ஆர்.எம்.ஆர்.எஸ்.எம். சுந்தரேச செட்டியார் & சுப்பிரமணிய செட்டியார், கீரக்கொல்லை	250
85	திரு கருணை ஜமால், கருணாநிதி பிரஸ், திருவாரூர்	250
86	திரு கே ஆர். கந்தசாமி, கூகலூர், கோபி வட்டம், ஈரோடு	250
87	ஊழியர்கள், ஸ்ரீ லெட்சுமி நாராயணா கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்க். திருவாரூர்	250
88	திரு எம். ராமதாஸ் முதலியார், வழக்கறிஞர் கமலாலயம் தெற்குகரை, திருவாரூர்	250
89	திரு வைத்யநாதன், அலங்கார் ஹோட்டல், திருவாரூர்	250
90	திரு எம்.எஸ். வாசன், கமலாலயம், வடகரை, திருவாரூர்	250
91	திரு பி. ஆர் சிக்கராஜ், மளிகை, பெரியபுத்தூர் அஞ்சல்	250
92	எஸ்.என்.ஜே. ஸ்டோர்ஸ், திருவாரூர்	250
93	திரு எம். ராதாகிருஷ்ணன், எர்த்துக்காரத்தெரு, திருவாரூர்	250
94	திரு கே. சந்திரசேகரன், வழக்கறிஞர், கமலாலயம் மேல்கரை, திருவாரூர்	250
95	திரு அசன்முகமது, வழக்கறிஞர், திருவாரூர்	250
96	திரு பி. சின்னையன், வடக்கு வடம் போக்கித்தெரு, திருவாரூர்	250
97	திரு வி. ஜானகிராமன், புதுத்தெரு, திருவாரூர்	250
98	திரு சி. சண்முகம், ஜூப்ளி மார்க்கட், திருவாரூர்	250

99	திரு கே. ஜெகநாதன், திருவாரூர்	250
100	திரு டி.வி. மாரியப்பன், வியாபாரம், அலிவலம்	250
101	திரு பி. சிவசுப்பிரமணியன், நெல் & அரிசி வியாபாரம், அலிவலம்	250
102	திரு பி, ராஜசேகரன், 21 சுவாமிமடத் தெரு, திருவாரூர்	250
103	திரு பி. கந்தசாமி உடையார், 94, லெட்சுமி நகர், திருவாரூர்	250
104	புனிதவதி அம்மாள், 14 சன்னதி தெரு, திருவாரூர்	250
105	ஸ்ரீ எஸ். விஸ்வநாதன், 4 மேலவடம் போக்கி தெரு, திருவாரூர்	250
106	திரு திருவேங்கடநாயுடு, கிரிதரன் மில்ஸ் ஸ்டோர், திருவாரூர்	350
107	திரு ஆர். பழனிவேலு. அரசன்குளம் தெரு, திருவாரூர்	250
108	திரு சு. தென்கோவன், காரக்காட்டுத்தெரு,	250
109	உரிமையாளர், ரோஸ்லேண்ட் ஹோட்டல், திருவாரூர்	350
110	திரு பிச்சைக்கண்ணு, லோடுமேன், திருவாரூர்	400
111	திருமதி சபிதாபீவி, விஜயபுரம்	350
112	திரு டி.எஸ்.எம். கங்காதர முதலியார், மடப்புரம்	300
113	திரு ஆர். ராஜசேகரன், த/பெ. ராமானுஜம்	250
114	பரவைநாச்சியார்	400
	ரு 250க்கும் கீழே நன்கொடை வழங்கியவர்களின் கூடுதல் தொகை	34,349-25
	திருப்பணிக்கு மொத்தமாக நன்கொடை வழங்கியவர் கூடுதல் தொகை	13,84,963-20
	பழைய திருப்பணி குழுவினர் மூலம் வந்த தொகை	2,25,680-00
	உண்டியல் மூலம் வசூலானது	36,435-72

குடமுழுக்கிற்கு நன்கொடை வழங்கியவர்கள்
(ரூ. 250/-ம் அதற்கு மேலும் வழங்கியவர்கள்)

1	திருப்பெருந்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தருமையாதீன குருமகா சன்னிதானம்	10,001
2	ஸ்ரீஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் சுவாமிகள், ஸ்ரீ மடம், காஞ்சிபுரம்	10,000
3	நிர்வாக இயக்குனர், திருஆரூரான் சர்க்கரை ஆலை வடபாதிமங்கலம். (குருக்கள் சம்பாவனைக்கு)	50,000
4	நிர்வாக இயக்குனர், திருச்சி டிஸ்டிலர்ஸ் & கெமிக்கல்ஸ், திருச்சி. (குருக்கள் சம்பாவனைக்கு)	50,000
5	திரு வி. டி. சோமசுந்தரம், சென்னை (குருக்கள் சம்பாவனைக்கு)	10,000
6	திருமதி வி. கல்யாணி அம்மாள், 34, 28ம் கிராஸ் ரோடு, இந்திரா நகர், அடையார், சென்னை-20	17,000
7	திரு கே. சுப்பிரமணியன், பிளாட் நெ. 36, 28வது கிராஸ் ரோடு, இந்திரா நகர், சென்னை-20	3,000
8	அருட்செல்வர் திரு நா. மகாலிங்கம், பொள்ளாச்சி	5,000
9	திரு எஸ். வெங்கட்ராமன், 34 பிங்கால சுப்பிரமணியம் தெரு, தில்லை நகர், சென்னை-17	3,000
10	திரு ஆர். தெட்சிணாமூர்த்தி செட்டியார், 124 ராசப்ப செட்டி தெரு, பூங்காநகர், சென்னை-3	5,00
11	திரு என். ராமமூர்த்தி, கோகுலம், 27/219 சின்கோ, பம்பாய்-22	10,000
12	திருமதி மீனாட்சி அம்மாள், திருச்சி	20,000
13	திரு விஸ்வநாதன், 122 நெல்சன் மாணிக்க முதலியார் தெரு, சென்னை (5000, 1000, சாஸ்திரிகள் சாப்பாட்டிற்காக)	6,000
14	திரு எம். ராமசாமி முதலியார், மடப்புரம் பெருமாள் வடக்கு தெரு, திருவாரூர்	10,000
15	திரு வி. எஸ். கோபால்ராமன், சென்னை	5,000
16	வி. கந்தவேலு & அசோஸியேட்ஸ், இன்ஜியனியரிங் & காண்டிராக்டர்ஸ், சிக்கவலம், சிக்கல்	2,000
17	திருமதி பெரியநாயகம் கோபால்ராமன், சென்னை	2,000
18	விஸ்வகர்மா மகாஜனத்தார்கள், திருவாரூர்	2,000
19	திரு ஞானசேகரன், தைலம்மை தியேட்டர், திருவாரூர்	2,000
20	திருமதி வி. எஸ். கமலாம்பாள் அண்ணி, சென்னை	1,000
21	திரு ஆர். குப்புசாமி	1,000
22	திருமதி ராதா குப்புசாமி	1,000
23	டாக்டர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி	1,000
24	திருமதி கௌசல்யா கிருஷ்ணமூர்த்தி	1,000

25	திரு காளிதாஸ்	1,000
26	திரு கல்யாணசுந்தர பத்தர் & பிரதர்ஸ், திருவாரூர்	1,000
27	திரு குமரேசன், மதுரை	2,000
28	திரு வி.எம்.ஏ.தாந்தீன், 77 வடக்கு தெரு, கொடிக்கால்பாளையம் திருவாரூர்	1,000
29	திரு ஆர். பாலசுப்பிரமணியன், நடராஜா ஜுவல்லரி, சிதம்பரம்	1,000
30	திரு குமரேசன் & வித்யா குமரேசன்	1,000
31	திரு ஜி. சுப்பையா, சென்னை	1,000
32	திரு நாகராசன், த/பெ. ராமனாத அய்யர், பூசலாங்குடி	1,000
33	திரு செல்வகணபதி, வால்டர்ஸ் ரோடு, சென்னை	1,000
34	திரு ராமசாமி செட்டியார், குமரக்கோயில் தெரு, திருவாரூர்	1,000
35	திரு வைத்திலிங்கம், வடபாதி	1,000
36	மெஸர்ஸ் மாக்ஸ்வல் ப்ரமோசன், சென்னை	1,000
37	திரு ஏ. பிச்சைகனி, இரும்பு வியாபாரம், திருவாரூர்	500
38	திரு சிவசுப்பிரமணியன், கோயம்புத்தூர்	500
39	திரு எஸ். கல்யாணராமய்யர், தப்பளம்புலியூர்	1,000
40	திரு பி. எஸ். குஞ்சிதபாதம் பிள்ளை, மிராசு, புதுப்பத்தூர்	1,000
41	திரு கே. நடராஜன், மிராசு, புதுப்பத்தூர்	500
42	திரு கே. ஜெயபால், மிராசு, புதுப்பத்தூர்	500
43	திரு என். கல்யாணராமய்யர், ஒப்பந்தக்காரர், திருவாரூர்	2,000
44	திரு எஸ். தியாகராசன், சுபாஸ் நகர், பம்பாய்-71	1,000
45	எம். ஆர். எஸ். ராஜகோபால் முதலியார் & சன்ஸ், காரைக்கால்	500
46	திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி, மகேந்திர நகர், பம்பாய்-34	1,000
47	திரு வி. நாகராசன், அபிராமபுரம், சென்னை	1,000
48	திரு வி. ரெங்கன், சென்னை-10	1,000
49	திரு ஆர். சுந்தரேசன், தில்லை நகர், சென்னை-17	1,000
50	திரு என். ஜெயராமன், செருவமணி அஞ்சல், (வழி) திருநெல்லிக்காவல்	500
51	திரு டி.சபாரெத்தினதேசிகர், 71/7, காந்திதெரு, மேற்கு மாம்பலம், சென்னை	500
52	திரு கோவிந்தராஜ முதலியார், பெருமாள் வடக்கு தெரு, திருவாரூர்	500
53	திரு கே. சுப்பிரமணிய அய்யர், வடக்கு கோபுர வாசல், திருவாரூர்	500
54	திரு ஏ. விஸ்வநாத தேவர், உக்கடை எஸ்டேட், உக்கடை	1,000
55	திரு கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, அன்னவாசல்	500
56	திரு பி. சங்கர், பாடரி தியேட்டர், கடலூர்	500
57	பாம்பன் மெர்க்கண்டைல்ஸ், 33 காமராஜ் சாலை, மதுரை-9	500
58	திரு எம். ஜி. நாராயணமூர்த்தி, மைலாப்பூர், சென்னை	500
59	திரு ஏ. எஸ். சரன்சந்திரன், 24 மெயின் ரோடு, சன்னாநல்லூர்	500
60	திரு பாலசந்திர அய்யர், கர்ணான்குடி	500
61	திரு ஆர். குருமூர்த்தி, பூசலான்குடி	500

62 திரு வி. ராமசந்திர முதலியார் 500
63 திரு கல்யாணசுந்தரம், வழக்கறிஞர், நாகப்பட்டினம் 500
64 திரு டி. பி. பக்கிரிசாமி, திருத்துரைப்பூண்டி 500
65 திரு என். தியாகராச அய்யர், திருவாரூர் 1,000
66 திரு அமாவாசை உடையார் & பழனியம்மாள்
திருநீலகண்டர் வெல்டிங் வொர்க்ஸ், திருப்பூர் 1,000
67 திரு முத்துசாமி உடையார் & ராசப்பா உடையார், தாராபுரம் ரோடு,திருப்பூர் 500
68 திரு வி. ராமச்சந்திர அய்யர், மிராசுதார், தப்பளாம்புலியூர் 250
69 திரு என். பக்கிரிசாமி, மிராசுதார், தப்பளாம்புலியூர் 250
70 திரு டி. என். கிருஷ்ணமூர்த்தி அய்யர், மிராசுதார், தப்பளாம்புலியூர் 250
71 திரு டி. வி. சீனிவாச அய்யர், மிராசுதார், தப்பளாம்புலியூர் 1,000
72 திரு எஸ். ராகவன், மிராசுதார், தப்பளாம்புலியூர் 750
73 திரு ராகவன், காட்டுக்காரத்தெரு, திருவாரூர் 250
74 திரு ஏ. ராமனுஜ முதலியார், மடப்புரம், திருவாரூர் 250
75 திரு வெங்கடேஸ்வரா மில், திருவாரூர் 250
76 திரு என். எஸ். சி. நடராஜா நாடார், எவர்சில்வர் கடை, திருவாரூர் 250
77 திரு எம். கண்ணன், நாகப்பட்டினம் 250
78 மெஸ்ஸர்ஸ், அண்ணாமலை & கோ., இரும்பு வியாபாரம், மதுரை 250
79 கந்தன் நாடார் கம்பெனி, கமிஷன் மளிகை, மதுரை 250
80 திரு ரெத்தினசபாநாதன், தேவர் பாடசாலை,
அய்யனார் கோயில் தெரு, விருத்தாசலம் 250
81 திரு எம். அகர்சந்த், ஜெயின் ஜுவல்லரி மார்ட்,
பஜார் தெரு, விருத்தாச்சலம் 250
82 திரு எஸ். சுப்பையா முதலியார், அத்திபுலியூர் 250
83 உரிமையாளர், பூம்புகார் துணியகம், திருத்துறைப்பூண்டி 250
84 பி. பி. சி. பார்ட்னர், திருத்துறைப்பூண்டி 250
85 டாக்டர் திரு ரெங்கநாதன், திருத்துறைப்பூண்டி 250
ரூ. 250/-க்கும் கீழ் வசூலானது 33,303-00
ஒரே ஒரு உண்டியல் மூலம் 5,866-90
ஆகக் கூடுதல் நன்கொடை 2,96,554-00

குடமுழுக்கில் நேரடியாக உபயமாகச் செய்த அன்பர்கள் விபரம்

யாகசாலை சாமான்கள், சென்னை, வழக்கறிஞர் திரு. வி. ஆர். கோபாலன் அவர்கள் மூலமாக பல அன்பர்களால் வாங்கி அளிக்கப்பட்டது.

யாகசாலை பரிவட்டங்கள் திரு. ராய. கோவிந்தராசன், கும்பகோணம் அவர்களால் வழங்கப்பட்டது.

யாகசாலைக்கு சந்தனம், பச்சை கற்பூரம் மைசூர் தவத்திரு கணபதி சச்சிதானந்தம் அவர்களால் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேகத்திற்கு ஒலி, ஒளி அமைப்பு சுமார் 1,50,000 செலவில், திண்டுக்கல், அங்குவிலாஸ் புகையிலை அதிபர் திரு. எம். வி. எம். அங்கமுத்துபிள்ளை அவர்களால் நன்கொடையாக செய்து தரப்பட்டது.

குடமுழுக்கிற்கு திருமுறை பாராயணம் ஓதுவார்கள் சம்பாவனை, வேட்டி, துண்டு, சாப்பாடு ஆகியவை ரூ. 40,000 செலவில் மதுரை, திரு. முத்துபழனியப்ப செட்டியார் அவர்களால் செய்யப்பட்டது.

குடமுழுக்கிற்கு வேதபாராயணம், மாயூரம், திரு. ஜெயராமன் அவர்களால் சுமார் ரூ. 15,000 செலவில் செய்து தரப்பட்டது.

குடமுழுக்கிற்கு காஞ்சிபுரம், ஸ்ரீ சங்கரமடத்திலிருந்து ஜடபாராயணம் செய்யப் பட்டது.

யாகசாலைக்கு நேரிடையான பால், தயிர் ஆகியவற்றினை காருகுடி, திரு. சோ. தியாகராஜ பிள்ளை அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

யாகசாலைக்கு வேண்டிய தீப எண்ணை, கும்பகோணம், திரு. காளிதாஸ் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

யாகசாலைக்கு தேவையான புஷ்பம் ஒரு பகுதி சென்னை வி. வி. எஸ். எஸ். மணி அவர்களாலும் மற்றும் திருமதி வி. கல்யாணி அம்மாள், இந்திரா நகர், சென்னை அவர்களாலும் வழங்கப்பட்டது.

கும்பாபிஷேகத்திற்கு தேவையான பழங்கள், ஒருபகுதி சென்னை, திரு மகாதேவ அய்யர், அவர்களாலும் நன்கொடையாக வழங்கப்பட்டது. யாகசாலை பழங்கள் திருக்கோயிலால் வாங்கப்பட்டன.

யாகசாலைக்கு தேவையான நெய் ஒரு பாகம், சென்னை குமரன் சில்க் அதிபர் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

விபூதி பிரசாத கவர்கள் மற்றும் பூர்ணகுதி பட்டு துண்டுகள் ஆகியவற்றினை திரு எஸ். கே. தன்ராஜ் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

யாகசாலைக்கு வேண்டிய இதர மளிகை சாமான்களில் ஒருபகுதி கும்பகோணம் திரு எஸ். கே. ஆர். பாலு செட்டியார் அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

யாகசாலைக்கு வேண்டிய இதர மளிகை சாமான்கள், அஷ்டபந்தன காப்புகள் நாட்டு மருந்து சாமான்கள் யாகசாலை நிவேத்ய சாமான்கள் பட்சணங்கள் கும்பாபிஷேக பிரசாத பைகள் ஒரு பாகம், மற்றும் நெய் ஒரு பாகம் முதலியன சென்னை வழக்கறிஞர் திரு வி. ஆர். கோபாலன் அவர்களால் உபயமாக வழங்கப்பட்டது.

மேலும் கும்பாபிஷேக பிரசாத பைகள் ஒரு பாகம் திருவாரூர் மு. ரா சில்க்ஸ் உரிமையாளர் மு. ரா. ரகுபதி அவர்களால் நன்கொடையாக வழங்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தில் இன்னிசை, கலை நிகழ்ச்சிகள் ரூ 28,000 செலவில் திருப்பணிக் குழு தலைவர் திரு சு. தென்கோவன் அவர்களால் நன்கொடையாக செய்யப்பட்டது.

சர்வசாதகத்திற்கு பவுன் தோடு ரூ 1500 பொறுமானத்தில் மாயூரம் ஏ. ஆர். சி. விஸ்வநாதன் அவர்களால் செய்து வழங்கப்பட்டது.

அருள்மிகு தியாகராஜர் யாகசாலை குண்டங்களுக்கு யாகசாலை சாமான்கள் திரு. மு. ரா. ரகுபதி (மு. ரா. சன்ஸ்) அவர்களாலும் அருள்மிகு அசலேஸ்வரர் யாக சாலையில் குண்டங்களுக்கு யாகசாலை சாமான்கள் திரு. ஆர். எம். பி. ஆர். சிங்காரவேலு முதலியார் மற்றும் திரு. பி. ஆர். எம். நாகராஜன் ஆகியோர்களாலும் உபயமாக வழங்கப்பட்டது.

மாராச்சேரி மணி முதலியார் மேளக்கச்சேரிகாரர்கள் சாப்பாட்டுச் சிலவுக்கு ரூ. 500 சிலவில் செய்து வைத்தார்.

வடபாதிமங்கலம், திருஆரூரான் சர்க்கரை ஆலை மற்றும் திருச்சி டிஸ்டிலர்ஸ் சி கெமிக்கல்ஸ், ஆகிய இரண்டு நிருவனங்களும் சிவாச்சாரியார்களுக்கு வேட்டி, துண்டு, சாப்பாடு ஆகியவற்றிற்கு உள்ள செலவுகளை நேரிடையாக செய்தனர். அதன் மதிப்பு சுமார் ரூ. 50,000 ஆகும்.

திருச்சாந்து

தியாகராஜ சுவாமிக்கு தினமும் சாற்றப்படும் பணிமாலையில் காது தோடு இரண்டு சாற்றப்படும். அதில் திருச்சாந்து வைத்து சாற்றப்படும். இவ்வாலயத்தில் வழங்கப்படும் திருநீறு 'திருமந்திரம்' என்று அழைக்கப்படுகின்றது. அந்த திருநீற்றிலும் திருச்சாந்து கலந்தே வழங்கப்படுகின்றது. இது வேறு எந்த ஆலயத்திலும் நடைமுறையில் இல்லாத தனிச்சிறப்பாகும். தியாகராஜரை தேவேந்திரனிடமிருந்து பெற்று வரும் போது முசுகுந்த சோழன் திருச்சாந்து மற்றும் செங்கழுநீர் மலர் இவற்றைக் கொண்டே அடையாளம் கண்டுகொண்டதாக புராணக்கதை கூறுகிறது. இந்த திருச்சாந்தை தயாரிக்க 'திருச்சாந்து கட்டளை' எனும் ஓர் கட்டளை இத்திருக்கோவிலுடன் இணைந்து இன்றளவும் செயல்பட்டு வருகின்றது.

சு. ஸ்ரீதரன், நிர்வாக அதிகாரி.

அருள்மிகு இரேணுகாதேவி அம்மன் திருக்கோவில்,

விஜயபுரம், -:- திருவாரூர்-610001.

அருள்மிகு எல்லையம்மன் என பக்தர்களால் பெரிதும் போற்றி வணங்கப் பெறும் இத்திருக்கோவில் திருவாரூர் நகரின் விஜயபுரம் கடைத்தெரு பகுதியில் அமைந்துள்ளது. ஆடி மாதத்தில் நடைபெறும் இத்திருக்கோவிலின் ஆடிப்பூர பெருவிழா மிகவும் சிறப்பானதாகும். வேண்டுபவருக்கு வேண்டுவனவற்றை குறைவின்றி அள்ளி வழங்கும் அன்னை எல்லையம்மனை தரிசித்து அருள்பெற வேண்டுகிறோம்.

கோ. தனசேகரன் B.A.,
செயல் அலுவலர்.

மு. செல்வராசு
ஆய்வாளர்/தக்கார்

அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோவில்,

திருக்காரவாசல், ( ) திருவாரூர் வட்டம்.

சப்த விடங்கர் ஸ்தலங்களில் ஒன்று தியாகேசப்பெருமானின் குக்குட நடனம் பிரசித்தமானது. இறைவன் பெயர் அருள்மிகு கண்ணாயிரநாதர். இறைவி பெயர் அருள்மிகு கைலாச நாயகி. சமீபத்தில் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கும் நடத்தப் பட்ட இத்திருக்கோவில் திருவாரூர்—திருத்துறைப்பூண்டி சாலையில் அமைந்துள்ள பாடல் பெற்ற ஸ்தலமாகும். ஆண்டு தோறும் வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் சிறப்பாக நடை பெறும்.

கோ. தனசேகரன் B.A.,
செயல் அலுவலர்.

தி. ஜெயராமன் B.A., B.L.,
உதவி ஆணையர்/தக்கார்.

''ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளாய்,
மனுநீதி மன்னன் மரபினைக்காத்து
மன்னு புகழ் பெற்றுச் சிறக்கும் வகை,
அண்ணலாரூரர் ஆலயத் திருப்பணிகள்
வண்ண வண்ணமாய்க் கோபுரங்கள் பொலிய
பண்ணிய பண்பாளர் தென்கோவன்
பாங்காயதற்குழைத்த ஸ்ரீதரன்
மற்ற ஊழியர் கூட்டங்கள்
உத்தமர்கள், உதவியோர், செல்வர்
அத்தனைபேரையும் வாழ்த்தினேன்
வணங்கினேன், வணங்கிச் சிறந்தேன்.

இவண்,

V.K.S.M. சேட்

நகர தி.மு.க. செயலாளர்,

திருவாரூர்


உ

முசக்குளம் அ/மி சக்தி மாரியம்மன்
கோயில் குடமுழுக்கு 12-2-86






சுந்தரமூர்த்தி நாயனார் கோயில்
குடமுழுக்கு மேடை: திருவாளர்கள்
சு. தென்கோவன், சு. சுகவனேஸ்வர்
இ. ஆ. ப., சோமசுந்தரம் செட்டியார்
புதுவை மாநில அமைச்சர்
ப. கோவிந்தராஜன், சு. ஸ்ரீதரன்




கலசங்கள் ஊர்வலம்

திரு. வி.க. அரசினர் கலைக் கல்லூரி
N.S.S. மாணவர்கள் திருப்பணி





அ/மி பிடாரியம்மன் கோயில்
குடமுழுக்கு 12-2-86




அ/மி பிடாரியம்மன் கோயில் குட
முழுக்கு விழாமேடையில் திருப்பணி
குழுத் தலைவர், நிர்வாக அதிகாரி



அ/மி த்ரீதேத்ர சுவாமி கோயில்
குடமுழுக்கு 2-6-86 தருமபுரம்,
வேளாக்குறிச்சி மகாசந்நிதானங்கள்


அ/மி சுந்தரமுர்த்தி நாயனார்
கோயில் குடமுழுக்கு 8-2-87





ஆணையர் அவர்கள்
நிர்வாக அதிகாரி திரு.
சு. ஸ்ரீதரனுக்குப் பொன்னாடை
போர்த்தி சிறப்பிக்க திரு. சு.
தென்கோவன் கைதட்டி
மகிழ்கின்றார்.

குடமுழுக்கு காணும்
மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி



குடமுழுக்கிற்கு எழுந்தருளிய குருமகா
சன்னிதானங்களின் ஒருபகுதி






குட முழுக்கிற்கு வருகைதந்த உயர் அதிகாரிகள்



← குடமுழுக்கிற்கு மட்டுமே புறப்பாடாகும் அருள்மிகு சோமகுல நாயகி 130 ஆண்டு கட்குப்பின் புறப்படும் அரிய காட்சி



↑ அருள்மிகு தியாகராஜர் யாகசாலை வழிபாடு



இரவு மகாபிஷேகத்துக்குப்பின் சுவாமி புறப்பாடு ↓



← கடங்கள் புறப்பாட்டில் ஆணையர் தம் துணைவியாருடன்



திரு K. J. ஜேசுதாஸ்
இன்னிசைக் கச்சேரி



திருமதியர் மணிமேகலை கார்த்திக் &
பத்மா நாரயணசாமி குழுவினர்
இன்னிசை



இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்குபெறும்
மக்கள் கூட்டம்



சேக்கிழார் சிலையை திரு
சு. தென்கோவன் திருமதி
உமா தென்கோவன் கொடை
யாய் வழங்க நிர்வாக அதிகாரி
திரு சு. ஸ்ரீதரன் பெறுதல்





கடங்கள் வருதல்

↑
கடங்கள் புறப்படு முன்
யாத்ராதானம் திருவாளர்கள்
ஆணையர், இணை ஆணையர்
திருப்பணிக்குழு தலைவர்
நிர்வாக அதிகாரி வழக்கறிஞர்
கோபாலய்யர்



தஞ்சை துணை ஆணையர்
திரு அழகப்பன் திரு சு. ஸ்ரீதரன்
இருவரும் மருந்திடித்தல்
↓



↑
சென்னை வழக்கறிஞர்
திரு. கோபாலய்யர்
திருப்புங்கூர் சுப்ரமணியன்
கலசங்களுக்கு சாமரம் வீசும்
காட்சி

நூலாசிரியர் குடவாயில்
பாலசுப்ரமணியனுக்கு D. I. G.
திரு குமார சாமி அவர்கள்
பொன்னாடை போர்த்துதல்





↑
தவத்திரு குன்றக்குடி அடிகள்
தலைமையில் வழக்காடு
மன்றம்



திருமுருக கிருபானந்தவாரியார்
சுவாமிகள் விரிவுரையாற்றல்
திரு சு. தென்கோவன்
உடனிருக்கிறார்
↓



↑
திருவாரூர் திருக்கோயில்
நூலினை ஆணையர் வெளியிட
மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு ராமு பெறுதல்

நூல்வெளியீட்டு விழா மேடை சு. தென்கோவன்
மாவட்ட ஆட்சித்தலைவர் நிலநிர்வாக ஆணையர் அற
நிலையத்துறை ஆணையர்




பரவைத் திருமண நாட்டிய நாடகம் :
செல்விகள்: நீலாயதாட்சி, சாந்தி, சங்கீதா






திருமதி. சௌந்தரா கைலாசம் தலைமையில்
கவியரங்கம்




திருவாரூர் திருக்கோயில் நூல் வெளியீடு அறநிலையத்துறை
ஆணையர் திரு இராச. கல்யாணசுந்தரம் உரையாற்றுதல்



↑

குன்னக்குடி வைத்தியநாதன்
வ்யலின் கச்சேரி



↑

ஸ்ரீலஸ்ரீ தருமை ஆதீன குருமகா
சன்னிதானம் ப்ன்னிரு திருமுறைக்
கருத்தரங்கை தொடங்கி வைத்தல்.




பரிவாரங்கள் குடமுழுக்கிற்கு
யாத்ரா தானம் செய்தல் 1-4-88

↓




சகஜி மன்னரின் கீர்த்தனைகள்
← நூலை நில நிர்வாக ஆணையர்
வெளியிட அறநிலையத்துறை
ஆணையர் பெறுதல்.

48



இரண்டாம் பிரகாரம் தளம் போடுவதற்கு முந்தைய நிலை



இரண்டாம் பிரகாரம் தளவரிசை போடுதல்



திருவாரூர் காகிதத்தெரு அருள்மிகு விசுவநாதசுவாமி கோயில் குடமுழுக்கு 1-5-88



யாகசாலைக்கு புனித நீர் யானை மேல் ஊர்வலமாக எடுத்துவரப்படல்

நன்றி! நன்றி!! நன்றி!!!

அருள்மிகு தியாகராஜப் பெருமானின் திருவருளால் 4-4-88 அன்று திருக்குடமுழுக்கு சிறப்புற நடைபெற்றது. அதனையொட்டி தருமையாதீனம் குருமகா சந்நிதானம், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் சுவாமிகளின் அருளாசியினாலும் வள்ளிமலை ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சுவாமிகளின் அருட்சீடர் மயிலை மாமுனிவர் குருஜி சுந்தரராம சுவாமிகளின் அருட்கடாட்சத்தாலும் 5-4-88 முதல் தொடர்ந்து தினசரி அருள்மிகு தியாகராஜப் பெருமானுக்கு முசுகுந்த அர்ச்சனைகள் நடைபெற்றன. மொத்தம் நாற்பத்தெட்டு நாட்களில் ஐம்பத்து நான்கு முசுகுந்த அர்ச்சனைகள் நடைபெற்றன. இது, இதுவரை வரலாறு காணாத ஒரு சிறப்பு. அருள்மிகு கமலாம்பாளுக்கு ஒன்பது நாட்களுக்கு நவசக்தி அர்ச்சனைகள் நடைபெற்றன. 19-5-88 அன்று அருள்மிகு வன்மீகநாதருக்கும், 20-5-88 அன்று அருள்மிகு நீலோத்பலாம்பாளுக்கும், 21-5-88 அன்று அருள்மிகு கமலாம்பாளுக்கும் ஏகதின லெட்சார்ச்சனைகள் நடைபெற்றன. இவையனைத்தும் சிறப்புற நடந்தேற உதவிய உபயதாரர்களையும் நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற திருத்தொண்டு ஆற்றிய;

திரு. வி. டி. நாராயணன்	திரு. கே. வெங்கடராமன்
திரு. கே. அய்யாசாமி	திரு. எம். எஸ். தியாகராஜன்
திரு. சுந்தரம் செட்டியார்	திரு. வைத்தியநாதன்

ஆகிய தியாகேசனின் திருத்தொண்டர்களுக்கும் நன்றியுடன் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மண்டலாபிஷேக நிறைவான 22-5-88 அன்று இந்த குடமுழுக்கு மலர் வெளியிடப்படுகின்றது.

சு. ஸ்ரீதரன், பி. ஏ.,
செயல் அலுவலர்.


மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

—தேவாரம்

'ஆரூரன் அருளால் அவன் தாள் வணங்கும்'

அருள்மிகு ரெங்கநாதப்பெருமாள் திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், :-: திருச்சி மாவட்டம்.

தமிழகத்தில் பக்தர்களால் அன்புடன் அழைக்கப்படும் மஹாராஜாக்கள் தில்லை நடராஜா, திருவரங்கம் ரங்கராஜா, திருவாரூர் தியாகராஜா என மூவர். தில்லை நடராஜாவும் திருவரங்கம் ரங்கராஜாவும் குடமுழுக்கு கண்டுவிட்டனர். திருவாரூர் தியாகராஜாவும் குடமுழுக்கு கண்டது பக்தர்களுக்கு பெருமகிழ்ச்சியாகும்.



*"பச்சை மாமலை போல்மேனி பவள வாய்க் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர் தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோக மாளும்
அச்சுவை பெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே".*

குடமுழுக்கில் பங்கு பெற்ற அனைவர்க்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்.

**திரு. பராசர ரெங்கராஜ
பட்டர் ஸ்வாமிகள்**
தலத்தார், அறங்காவலர்

**வே. முனியசாமி.
M.A.,B.L.**
தக்கார், துணை ஆணையர் &
நிர்வாக அதிகாரி



'ஆழித்தேர்வித் தகனையான் கண்ட தாரூரே''

— திருநாவுக்கரசர்



Sarma's Sanatorium Pres